

விதியை மாற்றிய விதி

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
விதி 110-ன் கீழ்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
08.06.2011 முதல் 29.09.2015 வரை
ஆற்றிய உரைகள்



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
விதி 110–ன் கீழ்
08.06.2011 முதல் 29.09.2015 வரை
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
அறிவித்த சீரிய திட்டங்கள்

வெளியீடு : இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, சென்னை.

சிறப்பு வெளியீடு எண். 58

தமிழரசு

இலவச வெளியீடு

நவம்பர் 2015

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்
110, அண்ணா சாலை
சென்னை – 600 002.



பதிப்புரை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கடந்த 2011 மே திங்களில் தமிழ்நாடு முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல், இன்னல்படும் ஏழை மக்களின் தலைவிதியை மாற்றும் வகையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110ன் கீழ் எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களை அடுக்கடுக்காக வழங்கி வருகிறார்கள்.

அதன்படி கடந்த 2011ஆம் ஆண்டு முதல் 2014–2015ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை கூட்டத்தொடர் வரை 183 அறிக்கைகள் விதி 110ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த அறிக்கைகளின் வாயிலாக வெளியிட்டுள்ள பல்வேறு நலத்திட்டங்கள் குறித்த விவரங்களை மக்கள் அறிந்து பயன்பெறும் வகையில் விதி 110ன் கீழ் வெளியிடப்பட்ட அனைத்து அறிக்கைகளையும் தொகுத்து **"விதியை மாற்றிய விதி"** என்ற தலைப்பில் செய்தி–மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அழகிய நூலாக வெளியிடப்படுகிறது.

இந்நூலை தயாரித்து வழங்கிய செய்தி–மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. **ஜெ. குமரகுருபரன்** இ.ஆ.ப., அவர்களையும் இப்பணிக்கு உறுதுணைப் புரிந்த செய்தித்துறை அலுவலர்களையும் மனமாரப் பாராட்டுகிறேன். தமிழக மக்கள் அனைவரும் இந்நூலை படித்துப் பயன்பெற வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முனைவர் **மூ. இராசாராம்** இஆப
அரசுச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

பொருளடக்கம்

வ. எண்	நாள்	பொருள்	பக்கம்
		2011	
1.	08.06.2011	மீனவர்களின் நலனைக் காக்கும் அரசு	1
2.	08.06.2011	பேருந்து விபத்தில் இறந்தோர் குடும்பங்களுக்கு தலா ரூ.1 இலட்சம் நிவாரண நிதி	4
3.	08.08.2011	சிறப்பு தூய்மைப்படுத்தும் திட்டம்	6
4.	08.08.2011	காற்றாலை மூலம் உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் வழங்கும் திட்டம்	8
5.	11.08.2011	பாசனத்திற்கான நீர்வள அமைப்புகளை மேம்படுத்தும் திட்டம்	11
6.	12.08.2011	100 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல்	15
7.	12.08.2011	உகந்த பயிர் மேலாண்மை கடைபிடிக்கும் திட்டம்	17
8.	17.08.2011	வன விலங்குகளால் ஏற்படும் உயிரிழப்புகளுக்கு இழப்பீட்டுத் தொகை உயர்த்துதல்	19
9.	19.08.2011	ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் நவீன மருத்துவமனை உருவாக்குதல்	21
10.	25.08.2011	கூட்டுறவுத் துறையில் உள்ள கிடங்கு வசதியினை விரிவுபடுத்துதல்	24
11.	26.08.2011	உண்மையான, நிலையான சமச்சீர் கல்வி வழங்கிட முன்னுரிமை	26

வ. எண்	நாள்	பொருள்	பக்கம்
12.	29.08.2011	கைதிகள் மூவரின் தூக்கு தண்டனை ரத்து தொடர்பான அரசின் நிலை	31
13.	30.08.2011	குறைந்த செலவில் தமிழ்நாடு அரசின் கேபிள் டிவி சேவை	37
14.	06.09.2011	சென்னையில் உலகத் தரம் வாய்ந்த முதன்மைநிலை விளையாட்டு மையம்	40
15.	07.09.2011	இரயில்வே கடவுகளில் பாலங்கள் / சாலைகள் மேம்பாடு	44
16.	08.09.2011	திருமழிசை துணைக்கோள் நகரம் அமைக்கும் திட்டம்	47
17.	10.09.2011	மாண்புமிகு முதலமைச்சரின் ''உழவர் பாதுகாப்புத் திட்டம்''	50
18.	10.09.2011	மருத்துவர்கள், மருத்துவப் பணியாளர்களை தேர்வு செய்ய தனி வாரியம்	56
19.	12.09.2011	சத்துணவு, அங்கன்வாடி மையங்களில் பணியிடங்களை நிரப்புதல்	60
20.	12.09.2011	சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம் மணிமண்டபங்கள் மற்றும் மொழிப்போர்த் தியாகி சிதம்பரநாதன் சிலை அமைத்தல்	64
21.	13.09.2011	நாகப்பட்டினம் பகுதியில் மீன்வளப் பல்கலைக்கழகம்	67
		2012	
22.	29.03.2012	மின்வெட்டைக் குறைத்திட புதிய மின்திட்டங்கள்	70
23.	03.04.2012	தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ரூ.740 கோடி மானியம்	76

வ. எண்	நாள்	பொருள்	பக்கம்
24.	04.04.2012	சங்ககிரியில் மாவீரர் தீரன் சின்னமலைக்கு நினைவுச் சின்னம்	83
25.	09.04.2012	அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு	86
26.	10.04.2012	தமிழ்ப் புத்தாண்டில் உழவர் பெருவிழா	88
27.	12.04.2012	புதுக்கோட்டை நகராட்சி அடிப்படை வசதிகளுக்கு ரூ.50 கோடி	92
28.	19.04.2012	11 இடங்களில் புதிதாக இருபாலர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்	95
29.	19.04.2012	சித்திரை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு	97
30.	20.04.2012	தமிழ்நாடு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம்	103
31.	26.04.2012	கிராமங்களை சுகாதார மயமாக்க அரசின் நிதியுதவி	105
32.	02.05.2012	அரசுக் கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.100 கோடி	108
33.	03.05.2012	காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினருக்கு 36 ஆயிரம் குடியிருப்புகள்	111
34.	04.05.2012	சுசீந்திரத்தில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு சிலை	113
35.	04.05.2012	ரூ.15 கோடி மதிப்பீட்டில் சர்வதேசத் தரத்தில் ஓட்டுநர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம்	115
36.	07.05.2012	ரூ.35 கோடி மதிப்பீட்டில் பவானிசாகர் அரசுப் பயிற்சி நிலையம் புனரமைப்பு	117

வ. எண்	நாள்	பொருள்	பக்கம்
37.	07.05.2012	ரூ.1,560 கோடி மதிப்பீட்டில் காவேரி டெல்டா பகுதியின்வடிகால் வசதிகள் மேம்பாடு	119
38.	08.05.2012	வருவாய்த் துறையின் சேவைகளை விரைந்து வழங்கிட 9 புதிய வட்டங்கள்	122
39.	08.05.2012	கைத்தறி நெசவாளர்கள் மற்றும் பட்டு விவசாயிகளுக்குப் புதிய சலுகைகள்	125
40.	09.05.2012	ரூ.81 கோடி மதிப்பீட்டில் கொள்ளிட ஆற்றின் குறுக்கே திருச்சி–ஸ்ரீரங்கத்தை இணைக்கும் புதிய நான்கு வழிப் பாலம்	128
41.	09.05.2012	சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு!	131
42.	09.05.2012	அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரிப்பு	135
43.	10.05.2012	மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளுக்காக நாட்டிலேயே முதன்முறையாக மாநில ஆதார வள மையம்	138
44.	10.05.2012	விசைத்தறி நெசவாளர்களுக்கு மின் கட்டணத்தில் கூடுதல் சலுகை	141
45.	10.05.2012	மேட்டூர் அனல் மின் நிலையத்தைச் சீரமைக்க உடனடி நடவடிக்கை	144
46.	10.05.2012	ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் கிராம விளையாட்டுப் போட்டிகள்	146
47.	11.05.2012	ரூ.136 கோடி மதிப்பீட்டில் 20 சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் திட்டங்கள்	148
48.	11.05.2012	நீதிமன்றங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள்	150

வ. எண்	நாள்	பொருள்	பக்கம்
49.	11.05.2012	தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திட புதிய தயாரிப்பு மண்டலங்கள்	152
50.	14.05.2012	மீனவர்களின் நலன்காக்க மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறோம்	157
51.	14.05.2012	தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் வசதியற்ற மாணாக்கர்களுக்கு அரசே கட்டணம் செலுத்தும்	159
52.	14.05.2012	தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்த 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்	162
53.	14.05.2012	சத்துணவு உண்ணும் பள்ளிக் குழந்தைகளுக்கு இந்த ஆண்டு முதல் 4 இணை சீருடைகள்	166
54.	15.05.2012	மானசரோவர் – முக்திநாத் செல்லும் இந்துப் பயணிகளுக்கு அரசு மானியம்	169
55.	15.05.2012	அனைத்து அமைப்பு சாரா ஓட்டுநர்களையும் நலவாரியத்தில் சேர்க்க நடவடிக்கை	171
56.	15.05.2012	அரசின் இணையதளத்தில் சேவை விளக்கக் கோப்பகம்	173
57.	15.05.2012	19,075 எக்டேர் பரப்பளவில் தேக்கு மரங்கள் நடவு செய்யப்படும்	175
58.	15.05.2012	தமிழ்நாட்டிற்கென தனியாக ஒரு முத்திரைச் சட்டம் இயற்றப்படும்	178
59.	29.10.2012	தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை உருவாக்கப்படும்	181
60.	01.11.2012	தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வைர விழா	185
61.	01.11.2012	தமிழ்நாட்டில் 12 நிறுவனங்கள் ரூ.20,925 கோடி முதலீடு	187

வ. எண்	நாள்	பொருள்	பக்கம்
62.	01.11.2012	அரசு ஊழியர்களுக்கு பண்டிகை முன்பணம் ரூ.5,000 ஆக உயர்வு	192
63.	02.11.2012	மக்கள் நல்வாழ்வுக்கு மகத்தான பணிகள்!	194
64.	02.11.2012	சத்துணவுத் திட்டத்தில் புதிய உணவு வகைகள் அறிமுகம்	199
65.	02.11.2012	பாரம்பரிய வேளாண் பொருட்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த ரூ.10 கோடி ஒதுக்கீடு	202
		2013	
66.	01.04.2013	ரூ.1,348.30 கோடி மதிப்பில் 131 ஆற்றுப்பாலங்கள் 67 அரசுச் சாலைகள் 18 இரயில்வே மேம்பாலங்கள்	204
67.	04.04.2013	ரூ.258.73 கோடி மதிப்பில் 310 ஏரிகள் 63 அணைக்கட்டுகள் புனரமைப்பு	208
68.	04.04.2013	மதுரைக்கு அருகே 586.86 ஏக்கரில் துணைக்கோள் நகரம்! சோழிங்கநல்லூரில் 1,500 பன்னடுக்கு மாடிக் குடியிருப்புகள்	211
69.	05.04.2013	மீனவர்களுக்கு 75 சதவிகித மானியத்தில் தகவல் தொடர்புக் கருவிகள்	216
70.	08.04.2013	சென்னையில் ரூ.29 கோடி நிதி ஒதுக்கீட்டில் உலக சதுரங்க வாகையர் போட்டி	220
71.	08.04.2013	ரூ.150 கோடி ஒதுக்கீட்டில் அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் உள்ள 4 மண்டல மையங்களில் அடிப்படை வசதிகள்	222

வ. எண்	நாள்	பொருள்	பக்கம்
72.	09.04.2013	பசுமை வீடுகளுக்கான அலகுத் தொகை ரூ.1.80 இலட்சத்திலிருந்து ரூ.2.10 இலட்சமாக உயர்வு	226
73.	10.04.2013	நடப்பாண்டில் ரூ.797.69 கோடி மதிப்பில் கூட்டுக் குடிநீர் திட்டங்கள்	231
74.	15.04.2013	ரூ.400 கோடி மதிப்பில் "ஊரகச் சாலைகள் பராமரிப்புத் திட்டம்"	236
75.	16.04.2013	ரூ.1,000 கோடி மதிப்பில் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம்	240
76.	17.04.2013	தமிழகத்தில் இரண்டாவது வெண்மைப்புரட்சி விரைவில் நிறைவேறும்	243
77.	17.04.2013	திருமண நிதியுதவித் திட்ட குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு உயர்வு	246
78.	19.04.2013	டெல்டா அல்லாத மாவட்டங்களுக்கு 1,754 கோடியே 86 இலட்சம் ரூபாய்க்கான நிவாரண உதவிகள்	250
79.	22.04.2013	தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்க உறுப்பினர்களுக்கு வட்டிச் சலுகைத் திட்டம் மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிப்பு	258
80.	25.04.2013	தமிழகம் விரைவில் மின் மிகை மாநிலமாக மாறும்	262
81.	30.04.2013	வண்டலூரில் புதிய புறநகர் பேருந்து நிலையம்	270
82.	30.04.2013	ரூ.16,350 கோடி மதிப்பீட்டில் மின் திட்டங்கள்	272
83.	02.05.2013	தமிழ்நாடு அரசு ஊழியர்கள் அகவிலைப்படி உயர்வு	274

வ. எண்	நாள்	பொருள்	பக்கம்
84.	02.05.2013	1,000 வருவாய் கிராமங்களில் 97 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவில் 2 கோடி மரக் கன்றுகள்	276
85.	02.05.2013	ரூ.50 கோடியில் பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி சாலைகள் மறுசீரமைக்கும் திட்டம்	280
86.	06.05.2013	வேளாண் உற்பத்தியை அதிகரிக்கவும், விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கவும் ரூ.984 கோடியே 70 இலட்சம் மதிப்பில் திட்டங்கள்	283
87.	06.05.2013	இந்தியாவிலேயே முதன்முறையாக ரூ.6.48 கோடியில் ஆதார செல் ஆராய்ச்சி மையம்	287
88.	06.05.2013	நடப்பாண்டில் ரூ.500 கோடி மதிப்பீட்டில் 47 சேமிப்புக் கிடங்குகள்	291
89.	07.05.2013	தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் மூலம் ரூ.1,200 கோடி மதிப்பீட்டில் புதிய ஆலை	295
90.	07.05.2013	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு பல்வேறு சிறப்புச் சலுகைகள்	300
91.	08.05.2013	புகையிலையால் ஏற்படும் புற்றுநோய்களைத் தடுக்கும் வண்ணம் குட்கா, பான் மசாலா பொருட்களுக்குத் தடை	305
92.	08.05.2013	பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் கூடுதலாக நெசவாளர்களுக்கு 10,000 வீடுகள் கட்டப்படும்	315
93.	08.05.2013	அரசு அலுவலகங்கள் தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்புடன் இணைப்பு	322

வ. எண்	நாள்	பொருள்	பக்கம்
94.	09.05.2013	தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு ரூ.4.27 கோடி மதிப்பீட்டில் அலுவலகக் கட்டடம்	326
95.	09.05.2013	54 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நல விடுதிகளுக்கு ரூ. 52 கோடி மதிப்பில் சொந்தக் கட்டடங்கள்	330
96.	09.05.2013	மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கென 32 நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள்	333
97.	10.05.2013	25 புதிய அரசுப் பேருந்து பணிமனைகள் அமைப்பு மற்றும் மலைப்பிரதேசங்களில் 250 சிற்றுந்துகள் அறிமுகம்	336
98.	10.05.2013	ரூ.5 கோடி செலவில் மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவக தொழில் நுட்பவியல் நிறுவனம் சுற்றுலா விருந்தோம்பல் கல்விக்கான சிறப்பு மையமாக நிலை உயர்வு	341
99.	10.05.2013	பி.ஏ.பி.எல்., (ஹானர்ஸ்) பயிலும் தமிழகத்தைச் சார்ந்த முதல் தலைமுறை பட்டதாரி மாணவ–மாணவியருக்கு கல்வி கட்டணச் சலுகை	346
100.	10.05.2013	ரூ.30 கோடி செலவில் மதுரை மற்றும் கோவையில் பெண் சிறைவாசிகளுக்கென புதிய சிறைகள் அமைப்பு	350
101.	13.05.2013	வருவாய் மாவட்டத் தலைநகரங்களில் மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள் அமைக்கப்படும்	353
102.	13.05.2013	அனைத்து ஐ.டி.ஐ. மாணவர்களுக்கும் மடிக்கணினிகள் வழங்கப்படும்	358
103.	14.05.2013	மேலும் 100 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் விரிவாக்கம்	363

வ. எண்	நாள்	பொருள்	பக்கம்
104.	14.05.2013	‘‘முதலமைச்சரின் அனைவருக்கும் உடல் ஆரோக்கியம்’’ என்ற புதிய திட்டம் அறிமுகம்	368
105.	14.05.2013	மகளிர் கல்வி வளர்ச்சிக்காக ‘‘தமிழ்நாடு காமன்வெல்த் அன்னை தெரசா மகளிர் பன்னாட்டு மையம்’’	375
106.	14.05.2013	ரூ.100 கோடி மதிப்பீட்டில் மதுரையில் தமிழ்த்தாய் சிலை	380
107.	15.05.2013	ரூ.1,481 கோடி மதிப்பீட்டில் கடலோரப் பேரிடர் இன்னல்கள் குறைப்புத் திட்டம்	386
108.	15.05.2013	150 பள்ளிகள் நிலை உயர்வு! புதிதாக 54 தொடக்கப் பள்ளிகள் அமைப்பு	390
109.	15.05.2013	சென்னையைப் போன்றே இதர 9 மாநகராட்சிகளிலும் அம்மா உணவகங்கள்	394
110.	15.05.2013	விவசாயிகளுக்கு 80 விழுக்காடு மானியத்தில் 2,000 சூரியசக்தி பம்பு செட்டுகள்	396
111.	15.05.2013	வீரத்தாய் குயிலிக்கு நினைவுச் சின்னம் – ஹைதர் அலி, திப்புசுல்தான் மற்றும் சுவாமி சகஜானந்தா ஆகியோருக்கு மணிமண்டபங்கள்	399
		2014	
112.	19.02.2014	23 ஆண்டுகள் சிறைவாசம் செய்வோரை விடுவிக்க குற்ற விசாரணைச் சட்டம் 432ன் கீழ் மாநில அரசுக்கு அளிக்கப்பட்டுள்ளது அதிகாரம்	402

வ. எண்	நாள்	பொருள்	பக்கம்
113.	14.07.2014	திரைத்துறைக்கும் திரைப்படப் பயிற்சி மாணவர்களுக்கும் பயனளிக்கும் படப்பிடிப்புத் தளங்கள்	409
114.	14.07.2014	அரசு மைய அச்சகத்திற்கு ரூ.21.59 கோடி மதிப்பீட்டில் புதிய நிரந்தரக் கட்டடம்	411
115.	15.07.2014	வீட்டுவசதி, அலுவலக வசதி, போக்குவரத்து வசதிகளைப் பூர்த்தி செய்யும் புதிய திட்டங்கள்	413
116.	16.07.2014	தமிழ் கலாச்சாரத்திற்கு எதிராக செயல்படும் மன்றங்களின் அனுமதி ரத்து செய்யப்படும்	420
117.	18.07.2014	முல்லைப் பெரியாறு வெற்றி தமிழக மக்களுக்கு வழங்கப்பட்ட நீதி	426
118.	23.07.2014	தொழில் திறன் பெற்ற மனித வளத்தை உருவாக்கிட முனைப்புடன் செயல்படும் அரசு	430
119.	23.07.2014	தொழிலாளர்க்கு கூடுதல் மருத்துவ சேவை பாதுகாப்புக்கு தனி வலைதளம், வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கும் புதிய கட்டடங்கள்	432
120.	24.07.2014	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியில் உயர்ந்திடும் நாட்டின் பொருளாதாரம்	435
121.	24.07.2014	தொழில் வளர்ச்சியினை அதிகரிக்க, வேலைவாய்ப்புகளை உருவாக்க, மாசினைக் கட்டுப்படுத்த புதிய தொழில் வளர்ச்சித் திட்டங்கள்	440
122.	24.07.2014	தாய்மார்கள் குழந்தைகள் நலனுக்கு அங்கன்வாடி மையங்களில் புதிய சலுகைகள் – வசதிகள்	448

வ. எண்	நாள்	பொருள்	பக்கம்
123.	25.07.2014	ரூ.2,325.48 கோடியில் சாலை உட்கட்டமைப்பு மேம்பாடு தமிழ்நாடு முழுவதும் சாலைகள், பாலங்கள், சுரங்கப்பாதைகள்	453
124.	25.07.2014	மனநலம் குன்றியோர் மாற்றுத்திறனாளிகள் நலனுக்கு சீரிய திட்டங்கள்	457
125.	25.07.2014	இளங்கோவடிகள் பெயரில் புதிய விருது! தமிழ் வளர்ச்சி ஆர்வலர்களுக்கு ''தமிழ்ச் செம்மல்'' விருது	460
126.	30.07.2014	கல்லாதோர் இல்லாத மாநிலம் என்னும் இலக்கை எய்திட வழிவகுக்கும் சிறப்புத் திட்டங்கள்	463
127.	30.07.2014	உடல் நலமும் மனநலமும் உறுதி செய்யும் விளையாட்டை மேம்படுத்தும் சிறப்பான திட்டங்கள்	469
128.	31.07.2014	போக்குவரத்து சேவை மேம்பாடு காண புதிய திட்டங்கள்	472
129.	31.07.2014	மின் நிறுவுத் திறனை அதிகரிக்கும் புதிய மின் திட்டங்கள்	475
130.	31.07.2014	ஆதிதிராவிடர், பழங்குடியின மாணவ, மாணவியர் கல்வி வளர்ச்சி பெற்றிட எண்ணற்ற சலுகைகள்	481
131.	01.08.2014	பொதுமக்களுக்கும் விவசாயிகளுக்கும் குறைந்த விலையில் நிறைவான, தரமான சேவை	485
132.	01.08.2014	கூட்டுறவு பணியாளர் வாழ்வு சிறக்க கூட்டுறவு அமைப்புகளின் சேவைகள் எளிதாக மக்களுக்கு கிடைக்க இனிதான திட்டங்கள்	490

வ. எண்	நாள்	பொருள்	பக்கம்
133.	01.08.2014	உயர் கல்வி வளம் பெற, உயர்வான திட்டங்கள்	496
134.	04.08.2014	மீனவர்களின் வாழ்வாதாரத்தையும், மீன் உற்பத்தியையும் மேம்படுத்தும் சிறப்புத் திட்டங்கள்	501
135.	04.08.2014	பால் உற்பத்தி பெருக விவசாயிகள் கூடுதல் பயன் பெற முனைப்பான திட்டங்கள்	505
136.	04.08.2014	கூடுதல் பாசனவசதி ஏற்படுத்தி, வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் சீரிய திட்டங்கள்	507
137.	07.08.2014	காவேரி டெல்டா விவசாயிகள் சம்பா சாகுபடி மேற்கொள்ள மேட்டூர் அணை திறப்பு	514
138.	07.08.2014	அனைத்து துறைகளுக்கான ஒருங்கிணைந்த சோதனைச்சாவடி ! சார்நிலை பதிவாளர் அலுவலக புதிய கட்டடங்கள்	516
139.	07.08.2014	விவசாய உற்பத்தியில் இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக்க வேளாண் மேம்பாட்டுத் திட்டங்கள்	519
140.	08.08.2014	சிறந்த புத்தாக்க முயற்சிகளுக்கு ‘‘மாண்புமிகு முதலமைச்சரின் புத்தாக்க விருது ’’	526
141.	08.08.2014	பொதுமக்களுக்கு அரசின் சேவைகள் கால விரயமின்றி குறைந்த செலவில் கிடைத்திட அம்மா மக்கள் சேவை மையங்கள்	529
142.	08.08.2014	கிராமங்கள் மேம்படவும், கிராம மக்கள் வளம்பெறவும் தேவையான அடிப்படை வசதிகள் உட்கட்டமைப்பு மேம்பாடுகள்	535

வ. எண்	நாள்	பொருள்	பக்கம்
143.	11.08.2014	நெசவுத் தொழில் மேம்படவும் சாய / சலவைத் தொழில் காத்திடவும் ரூ.700 கோடியில் வளர்ச்சிக் குழுமம்	541
144.	11.08.2014	வனவிலங்குகள் பாதுகாப்புக்கு வளமான திட்டங்கள்	543
145.	11.08.2014	வருவாய்த்துறை சேவைகள் மக்களுக்கு விரைந்து கிடைத்திட 15 புதிய வட்டங்கள் உருவாக்கம்	546
146.	11.08.2014	ரூ.40 கோடியில் தமிழ்நாடு மாநில தரவு மையம் நிலை உயர்வு	548
147.	11.08.2014	சிறைவாசிகள் மற்றும் சிறைத்துறைப் பணியாளர்களுக்கு கூடுதல் வசதிகள்	551
148.	11.08.2014	நீதிமன்றப் புதிய கட்டடங்கள் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள்	553
149.	12.08.2014	16 வகை பொருட்களுடன் அம்மா குழந்தை நல பரிசுப் பெட்டகம்	555
150.	12.08.2014	இறையன்பர் நலம் பேணும் திருக்கோயில் அறப்பணிகள்	562
151.	12.08.2014	பொன்விழாக் காணும் பட்டுக்கோட்டை நகராட்சிக்கு ரூ.25 கோடி செலவில் அபிவிருத்திப் பணிகள்	568
152.	12.08.2014	கட்டுமானத் தொழிலாளர்கள் நலம் காத்து சமூகப் பாதுகாப்பை மேம்படுத்தும் சிறப்பான திட்டங்கள்	570
		2015	
153.	25.08.2015	ஏழை, எளிய மக்களுக்குத் தரமான உயர்ந்த மருத்துவ சேவை தங்கு தடையின்றி கிடைக்க வேண்டும்	575

வ. எண்	நாள்	பொருள்	பக்கம்
154.	26.08.2015	தமிழ்நாடு அரசு சார்பில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு மணிமண்டபம்!	586
155.	27.08.2015	வன உயிரிகளிடமிருந்தும், சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாட்டிலிருந்தும் மக்களைக் காக்க முனைப்புடன் செயல்படும் அரசு!	589
156.	27.08.2015	ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர் அதிக மதிப்பெண்கள் பெற வழிவகுக்கும் திட்டங்கள்!	592
157.	31.08.2015	வருவாய்த்துறை திறம்பட செயலாற்ற 16 வட்டங்கள், 5 வருவாய் கோட்டங்கள்!	595
158.	31.08.2015	ரூ.100 கோடி மதிப்பீட்டில் கிண்டி தொழிற்பேட்டையில் அடுக்குமாடி வளாகம்!	598
159.	01.09.2015	சிறைத்துறை மேம்படவும், சிறைப் பணியாளர்கள் செம்மையாகப் பணியாற்றவும் வழிவகுக்கும் திட்டங்கள்!	600
160.	01.09.2015	தமிழகம் மின் நிலைமையில் தன்னிறைவு பெறும் அளவுக்கு அளப்பரிய சாதனைகள்!	602
161.	01.09.2015	ஜவுளித் தொழில் உற்பத்தி பெருகும்! நெசவாளர்களின் வாழ்வு பொலிவுறும்!	606
162.	03.09.2015	கிராமங்கள் மேம்படவும், சுயஉதவிக் குழுக்கள் வளர்ச்சி அடையவும், இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறவும் நடவடிக்கை!	610
163.	14.09.2015	முதுகுத் தண்டுவட நோயால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு சக்கர நாற்காலி!	617

வ. எண்	நாள்	பொருள்	பக்கம்
164.	14.09.2015	குறைந்த செலவில் "இணைய வழி தொலைக்காட்சி" சேவை!	619
165.	15.09.2015	தமிழகத்தில் 8 மாவட்டங்களில் குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் பிரிவினருக்கு ரூ.674.96 கோடி செலவில் 2,800 குடியிருப்புகள்!	623
166.	15.09.2015	ரூ.45.97 கோடி செலவில் புதிய தொழிற்பயிற்சி நிலையங்கள்!	628
167.	23.09.2015	அழியாத கல்விச் செல்வத்தை தமிழகக் குழந்தைகள் அனைவரும் பெற வேண்டும்!	630
168.	23.09.2015	1,004 திருக்கோயில்களின் திருப்பணிகளுக்காக ரூ.5.2 கோடி நிதியுதவி!	636
169.	23.09.2015	கிராமப்புற பொருளாதாரம் மேம்பாடு அடையவும், பால் மற்றும் மீன்கள் உற்பத்தி பெருகவும் ரூ.306.55 கோடி மதிப்பிலான திட்டங்கள்!	640
170.	25.09.2015	ரூ.1,855.36 கோடி மதிப்பீட்டில் சாலைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வழிவகை!	646
171.	25.09.2015	தமிழ்நாட்டு இளைஞர்கள் சர்வதேச அளவில் போட்டியிட ஏதுவாக பல்வேறு திட்டங்கள்!	649
172.	25.09.2015	வேளாண், மீனவ மக்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெற ரூ.321.69 கோடி மதிப்பீட்டில் திட்டங்கள்!	653
173.	25.09.2015	நீதித்துறை செவ்வனே செயல்படுவதிலும், குடிமக்களுக்கு நீதி வழங்குவதிலும் முன்னோடியாக விளங்கும் அரசு!	660

வ. எண்	நாள்	பொருள்	பக்கம்
174.	25.09.2015	பொதுமக்கள் போக்குவரத்து சேவைகளை எளிதில் பெறுவதற்கு வழிவகை!	662
175.	25.09.2015	சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றலை வழங்கும் உயர்கல்வியைப் பெற நடவடிக்கைகள்!	664
176.	28.09.2015	கடந்த ஆண்டில் உணவு தானிய உற்பத்தியில் 127.95 இலட்சம் மெட்ரிக் டன் எய்தி சாதனை!	668
177.	28.09.2015	ரூ.15 கோடி மதிப்பீட்டில் 20,000 சுய உதவிக்குழு பயிற்றுநர்களுக்கு ''அம்மா கைபேசி''	675
178.	28.09.2015	அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றான குடிநீர் அனைத்து மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும்!	677
179.	29.09.2015	தமிழ் மொழியை வளர்க்கவும், தமிழ்த் தொண்டர்களை ஊக்குவிக்கவும் வழிவகுத்தல்!	688
180.	29.09.2015	பத்திரிகையாளர்களின் ஓய்வூதியம் ரூ.8,000 ஆகவும், அவர்தம் குடும்ப ஓய்வூதியம் ரூ.4,750 ஆகவும் உயர்வு!	691
181.	29.09.2015	தொழில்கள் வளரவும்; புதிய வேலைவாய்ப்புகள் உருவாகவும் வழிவகை!	693
182.	29.09.2015	தமிழ்நாட்டில் 4 மாவட்டங்களுக்கு தலா ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி!	700
183.	29.09.2015	ரூ.23.73 கோடி செலவில் 110 கூட்டுறவு வங்கிகளுக்கு சொந்தக் கட்டடங்கள்!	702

❖ ❖ ❖

மீனவர்களின் நலனைக் காக்கும் அரசு!

08.06.2011

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடந்த 1.6.2011 அன்று இராமேஸ்வரம் தங்கு தளத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்ற 707 மீன்பிடி விசைப் படகுகளில், இராமேஸ்வரம் பகுதியினைச் சேர்ந்த TN 10/MFB/581 என்ற விசைப்படகு மற்றும் அதில் மீன்பிடிக்கச் சென்ற 5 மீனவர்கள் மற்றும் TN 12/MFB/252 என்ற விசைப்படகு மற்றும் அதில் மீன்பிடிக்கச் சென்ற 4 மீனவர்களைத் தவிர இதர படகுகள் மற்றும் மீனவர்கள் கரை திரும்பிவிட்டனர். இந்த இரண்டு படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற 9 மீனவர்களும், மண்டபம் பகுதியில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற இன்னொரு மீன்பிடி விசைப் படகான TN 09/MFB/153 என்ற விசைப் படகும் அதில் மீன்பிடிக்கச் சென்ற 4 மீனவர்களும் கரை திரும்பவில்லை.

இராமேஸ்வரம் பகுதியினைச் சேர்ந்த 2 மீன்பிடி விசைப் படகுகள் மற்றும் அதில் மீன்பிடிக்கச் சென்ற 9 மீனவர்கள் மற்றும் மண்டபம் பகுதியினைச் சேர்ந்த ஒரு மீன்பிடி விசைப்படகு மற்றும் அதில் மீன் பிடிக்கச் சென்ற 4 மீனவர்கள், ஆக மொத்தம் 13 மீனவர்களையும், 3 விசைப்படகுகளையும் கடலோரக் காவல் படை மற்றும் இந்தியக் கப்பற்படை மூலம் கடல் மற்றும் ஆகாய மார்க்கமாகத் தேடிக் கண்டுபிடிக்க 2.6.2011 அன்று எனது அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கடலோரக் காவல் படையினரால் தேடுதல் பணிகள் நடைபெற்றுக் கொண்டு இருந்த தருணத்தில், காணாமல் போன மூன்று விசைப் படகுகளில் இராமேஸ்வரம் பகுதியினைச் சேர்ந்த TN 10/MFB/581 என்ற விசைப்படகும் அதில் மீன்பிடிப்பு மேற்கொள்ளச் சென்ற 5 மீனவர்களும் மற்றும் மண்டபம்

பகுதியினைச் சேர்ந்த TN 09/MFB/153 என்ற மீன்பிடி விசைப்படகும் அதிலிருந்த 4 மீனவர்களும், ஆக மொத்தம் 9 மீனவர்களும் மீட்புப் படகுகள் உதவியுடன் 3.6.2011 அன்று காலை பத்திரமாகக் கரை திரும்பிவிட்டனர்.

இராமேஸ்வரம் பகுதியினைச் சேர்ந்த TN 12/MFB/252 என்ற பதிவு எண் கொண்ட ஒரு படகு மட்டும் மோசமான பருவநிலைக் காரணமாகக் காற்றின் வேகத்தால் இலங்கையிலுள்ள நெடுந்தீவு அருகிலுள்ள பகுதிக்கு இழுத்துச் செல்லப்பட்டு, அங்கு அப்படகு மூழ்கியதாகவும், அப்படகில் சென்ற இராமேஸ்வரத்தைச் சேர்ந்த திரு. மூக்குத் துரையின் மகன் திரு. ஜெயகுமார், வயது 45, திரு. தேவக்குமார் மகன் திரு. பிரபாத், வயது 28, திரு. திவ்யநாதன் மகன் திரு. சுந்தர், வயது 50, திரு. கருப்பையா மகன் திரு. மாரிமுத்து, வயது 45, ஆகிய நான்கு மீனவர்களும் 8 மணிநேரம் நடுக்கடலில் தத்தளித்து நீந்தி, இலங்கையிலுள்ள நைனாத் தீவில் பத்திரமாகக் கரை சேர்ந்ததாகவும் தகவல் பெறப்பட்டது.

இந்த நான்கு மீனவர்களும் இலங்கை ஊர்க்காவல் படையினரால் காவல் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல் பெறப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்திற்குத் தெரிவித்து, இச்செய்தியை உறுதி செய்திடுமாறும், மேற்குறித்த மீனவர்களுக்கு உரிய அனைத்து உதவிகளையும் செய்திடுமாறும், அவர்களை விரைவில் விடுவித்துத் தமிழகத்திற்கு அனுப்பி வைத்திட உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அரசால் 3.6.2011 அன்று நிகரிச் செய்தி அனுப்பப்பட்டது. மேலும், தொலைபேசி மூலமும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இந்த 4 மீனவர்களும் காங்கேசன் துறை நீதிமன்றத்தால் 17.6.2011 வரை காவலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளதாக 6.6.2011 அன்று இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்திடமிருந்து தொலைபேசி மற்றும் நிகரி மூலம் தகவல் பெறப்பட்டதைத் தொடர்ந்து, நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு இது

பற்றிக் கடிதம் அனுப்பியுள்ளேன். நான்கு அப்பாவி மீனவர்களையும் உடனடியாக விடுவிக்க இலங்கை அரசை வற்புறுத்துமாறு அதில் நான் பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளேன்.

மீனவர்களின் நலனைப் பேணிக்காக்கவும், அவர்களின் வாழ்வு மேம்படவும் எனது தலைமையிலான அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

பேருந்து விபத்தில் இறந்தோர் குடும்பங்களுக்கு தலா ரூ.1 இலட்சம் நிவாரண நிதி

08.06.2011

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

KPN டிராவல்ஸ்–ஐச் சேர்ந்த, படுக்கை வசதி கொண்ட குளிர்சாதனப் பேருந்து நேற்றிரவு சுமார் 9 மணிக்கு, சென்னை கோயம்பேட்டில் இருந்து பொள்ளாச்சி நோக்கிப் புறப்பட்டது. இந்தப் பேருந்தில் 5 பெண்கள், 2 குழந்தைகள் உட்பட 23 பயணிகள் பயணம் செய்தனர். இந்தப் பேருந்தை திரு. நாகராஜன் என்ற ஓட்டுநர் ஓட்டிச் சென்றுள்ளார். இந்தப் பேருந்து PY 01–BH–9919 என்ற எண்ணில், புதுச்சேரியில் பதியப் பெற்றுள்ளது.

இந்தப் பேருந்து, சென்னை – பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில். சென்னையில் இருந்து சுமார் 100 கிலோ மீட்டர் தொலைவில், வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், அவலூர் என்னும் இடத்திற்கு அருகே சென்றபோது, அங்கு நின்றிருந்த லாரியைத் தவிர்க்கும் பொருட்டு, பேருந்தின் ஓட்டுநர் பேருந்தை திடீரென்றுத் திருப்பியபோது, கட்டுப்பாட்டை இழந்து, சிறு பாலத்தின் தடுப்புச் சுவற்றில் மோதி, 10 அடி ஆழ பள்ளத்தில் கவிழ்ந்தது. இதில் குளிர்சாதன இயந்திரம் வெடித்து, தீ பிடித்து, அதனால், இந்தப் பேருந்து முழுவதும் எரிந்து எலும்புக் கூடாகிவிட்டது.

பேருந்து கவிழ்ந்து தீ பிடித்த இந்த விபத்தில், அப்பேருந்தில் பயணம் செய்த 22 பேர் சம்பவ இடத்திலேயே, தீயில் கருகி உயிரிழந்தனர். திரு. கார்த்திகை ராஜன் என்ற ஒரே ஒரு பயணி மற்றும் பேருந்தின் ஓட்டுநர் இந்த விபத்தில் உயிர் பிழைத்துள்ளனர். பேருந்தின் ஓட்டுநர் திரு. நாகராஜன் வேலூர் வடக்குக் காவல் நிலையத்தில் சரண் அடைந்தார். வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. பயணி, திரு. கார்த்திகை ராஜன், காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தகவல் அறிந்ததும், சம்பவ இடத்திற்கு ராணிப்பேட்டை மற்றும் அருகில் இருந்த தீயணைப்பு நிலையங்களில் இருந்து தீயணைப்பு வாகனங்கள் சென்று, தீயை அணைத்தன. வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர், சட்டம் – ஒழுங்குக் காவல்துறை கூடுதல் இயக்குநர், வடக்கு மண்டலக் காவல் துறைத் தலைவர், வேலூர் மாவட்டக் காவல்துறைத் துணைத் தலைவர் மற்றும் காஞ்சிபுரம், வேலூர் ஆகிய மாவட்டங்களின் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து, தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இந்தச் சம்பவம் பற்றி நேற்று இரவு, அதாவது, 7.6.2011 இரவு, எனக்குத் தகவல் கிடைத்தவுடன், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. வி. செந்தில் பாலாஜி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் வி.எஸ். விஜய், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. டி.கே.எம். சின்னையா ஆகியோரை உடனடியாக சம்பவ இடத்திற்கு அனுப்பி வைத்தேன்.

இந்தக் கோர விபத்தில் மரணம் அடைந்த 22 நபர்களின் உடல்கள் கருகிய நிலையில் உள்ளதால், அடையாளம் காண இயலவில்லை. 22 நபர்களின் சடலங்கள் வாலாஜா அரசு மருத்துவமனைக்குப் பிரேத பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளன.

இப்பேருந்தில் பயணம் செய்தவர்களின் விவரம் KPN டிராவல்ஸ் நிறுவனத்தின் Ticket List–இல் இருந்து பெறப்பட்டுள்ளது. அதை வைத்துப் பயணம் செய்தவர்களைக் கண்டு அறியும் பணி நடைபெற்று வருகிறது.

இந்த விபத்தில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், இந்தப் பேரவை உறுப்பினர்களின் ஆழ்ந்த இரங்கலையும், இந்தப் பேரவையின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தப் பேருந்து விபத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 1இலட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50,000 ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

சிறப்பு தூய்மைப்படுத்தும் திட்டம்

08.08.2011

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழக மக்கள் அனைவரும் சுகாதாரமான சுற்றுச்சூழலில் வசிப்பதை உறுதி செய்வது எனது தலைமையிலான அரசின் முக்கிய நோக்கம் ஆகும். எனவேதான், மேதகு ஆளுநர் உரையில், சுற்றுச்சூழலைப் பாதுகாக்க அரசு சிறப்பு முயற்சிகளை மேற்கொள்ளும் என்றும், கிராமப்புறங்களையும், நகர்புறங்களையும் தூய்மைப்படுத்த ஒரு சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும், 4.8.2011 அன்று, இந்த மாமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட, 2011–2012 ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு–செலவு மதிப்பீட்டில், ''சென்னையிலும், அதன் புறநகர்ப் பகுதிகளிலும், திடக் கழிவு மேலாண்மைக்காக ஒரு விரிவான திட்டம் தயாரித்து, கரிம சேமிப்புக்காகக் கிடைக்கப் பெறும் நிதியையும் பயன்படுத்தி, இத்திட்டத்தைச் செயல்படுத்த இவ்வரசு திட்டமிட்டுள்ளது'' என்று குறிப்பிட்டிருந்தோம்.

தற்போது, சென்னை மாநகர் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் உள்ள சுற்றுச்சூழல் குறித்த ஒட்டுமொத்த நிலையை நேரடியாகத் தெரிந்து கொள்ளும் பொருட்டு, நான் 5.8.2011 அன்று ஹெலிகாப்டரில் சென்று வான் வழியாக ஆய்வு செய்தேன். அப்போது, பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் ஆகிய இடங்களில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களையும் பார்வையிட்டேன். இந்த ஆய்வின் போது, சென்னை மாநகர் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் ஏராளமான குப்பைகள் கொட்டிக் கிடந்தது தெரிய வந்தது. மேலும், சென்னை மாநகரைச் சுற்றியுள்ள சில பகுதிகளில், குடியிருப்புகளைச் சுற்றி மழைநீர் மற்றும் கழிவுநீர்

தேங்கியுள்ளதையும் கண்டறிந்தேன். மிகவும் அசுத்தமாக இருந்தது.

எனவே, சென்னை மாநகர் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் உள்ள மக்கள் சுகாதாரமான சூழலை உடனடியாகப் பெறுவதற்கு ஏதுவாக, முதற்கட்டமாக, தேங்கியுள்ள குப்பைகளை உடனடியாக அகற்றவும்; குடியிருப்புப் பகுதிகளில் தேங்கியுள்ள அசுத்தமான நீரை அகற்றுவதற்குமான சிறப்பு தூய்மைப்படுத்தும் திட்டம், அதாவது – Mass Cleaning Programme ஒன்று செயல்படுத்தப்படும். இந்தத் தூய்மைப்படுத்தும் பணிகள், மூன்றுமாத காலத்திற்குள் செய்து முடிக்கப்படும். இதனைத் தொடர்ந்து, இந்தப் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், 2011–12 ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு–செலவு மதிப்பீட்டில் குறிப்பிட்டவாறு, விரிவான திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

காற்றாலை மூலம் உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் வழங்கும் திட்டம்

08.08.2011

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழகத்தின் மின் நிலைமை, நாளுக்கு நாள் மோசமடைந்து, அனைத்துத் தரப்பு மின் நுகர்வோர்களுக்கும் பல மணி நேர மின்தடை அமலில் இருந்தது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். வீட்டுப் பயனீட்டாளர்களுக்கு, சென்னை மாநகரத்தில் ஒரு மணி நேர மின் தடையும்; மாநிலத்தின் பிற பகுதிகளில் மூன்று மணி நேர மின் தடையும் நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது இருந்தது என்பதையும் இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள்.

எனது தலைமையிலான, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றவுடன், மின் நிருவாகத்தில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்ததன் காரணமாக, சென்னை நீங்கலாக மாநிலத்தின் பிற இடங்களில் இருந்த மூன்று மணி நேர மின்தடை, 1.7.2011 முதல் இரண்டு மணி நேரமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

உயர் அழுத்தத் தொழிற்சாலை மற்றும் வணிகப் பயனீட்டாளர்களுக்குத் தேவை மற்றும் பயனீட்டு அளவில் 20 விழுக்காடு மின் தடை அமலில் இருந்து வந்தது. உச்சக்கட்ட நுகர்வு நேரமான மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரையான காலத்தில், அனைத்து உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கும் மின் வாரியக் கட்டமைப்பிலிருந்து 10 விழுக்காட்டிற்கு மிகாமல் விளக்கு மற்றும் பாதுகாப்புத் தேவைகளுக்காக மின்சாரம் கடந்த 20.8.2010 முதல் வழங்கப்படுகிறது. அதாவது, மாலை 6 மணி

முதல் இரவு 10 மணி வரையான உச்சக்கட்ட நுகர்வு நேரத்தில், உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு 90 விழுக்காடு மின் தடை அமல்படுத்தப்பட்டு வந்தது. தற்போதும், உயர் அழுத்தத் தொழிற்சாலைகள் மற்றும் வணிகப் பயனீட்டாளர்களுக்கு இந்த மின் கட்டுப்பாட்டு முறைகள் நடைமுறையில் உள்ளன.

காற்றாலை மூலம் பெறப்படும் மின்சாரத்தின் மொத்த உற்பத்தித் திறன் 6,007 மெகாவாட் ஆகும். ஆனால், காற்றாலை மூலம் பெறப்படும் மின்சாரம் எப்போதும் ஒரே அளவில் கிடைப்பதில்லை. காற்று அதிகமாக உள்ள ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில், அதிலும், காற்று அதிகமாக வீசக் கூடிய நேரங்களில், காற்றாலை மூலம் பெறப்படும் மின்சாரம் அதிக அளவில் இருக்கும். இவ்வாறு காற்றாலை மூலம் பெறப்படும் மின்சாரத்தின் அளவு, மின்சாரத் தேவை குறைவாக உள்ள இரவு நேரங்களில்தான் அதிகமாக கிடைக்கும். எனவே, பல நேரங்களில் இவ்வாறு கிடைக்கக்கூடிய மின்சாரத்தைப் பயன்படுத்த இயலாமல் போய் விடுவது உண்டு. இதன் காரணமாக, காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிப்போர், அந்த மின்சாரத்தை, விற்க இயலாத நிலை ஒரு பக்கமும்; மின்சாரத் தேவை உள்ளோர் அதனைப் பெற இயலாத சூழ்நிலை ஒரு பக்கமும், நிலவுவது உண்டு. உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை சேமித்து வைக்க இயலாது என்பதை அனைவரும் நன்கு அறிவார்கள். எனவே, மின்சாரத் தேவை குறைவாக உள்ள நேரங்களில் கிடைக்கப் பெறும் அதிக அளவு மின்சாரத்தை, தேவை உள்ளவர்களுக்கு வழங்குவதுதான் சிறந்த மின் நிருவாகம் ஆகும்.

ஆகஸ்டு மற்றும் செப்டம்பர் மாதங்களில் காற்றாலை மூலம் இரவு நேரங்களில் பெறப்படும் அதிக அளவு மின்சாரத்தை தற்போது பயன்படுத்த எனது தலைமையிலான அரசு ஒரு செயல் திட்டத்தை வகுத்துள்ளது. இதன்படி, காற்றாலை மூலம் இரவு நேரங்களில் பெறப்படும் சுமார் 100 மெகாவாட் மின்சாரம், உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு இரவு 10 மணி முதல் காலை 5 மணி வரை 20 விழுக்காடு மின் தடையை விலக்கிக் கொண்டு வழங்கப்படும். காற்றாலை மூலம் இவ்வாறு பெறப்படும் மின்சாரம் முழுவதும் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதால், தமிழ்நாடு

மின்சார வாரியத்திடம் இந்த மின்சாரத்தை பயன்படுத்திக் கொள்ள இசைவு தெரிவிப்பவர்களுக்கு இது வழங்கப்படும். இந்தச் செயல் திட்டம் இன்று, அதாவது, 8.8.2011 முதல் நடைமுறைப்படுத்தப்படும். இதன் மூலம், உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு சுமார் 100 மெகாவாட் அளவுக்கு நிவாரணம் கிடைப்பதுடன், காற்றாலை மூலம் மின் உற்பத்தி செய்பவர்கள் அந்த மின்சாரத்தை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விற்பதன் மூலம் பயன்பெறுவர். மேலும், தமிழ்நாடு மின்சார வாரியம் மின் தேவை மற்றும் மின் பயனீட்டு அளவுக் கட்டணமாக சுமார் 10 கோடி ரூபாய் வருவாய் ஈட்டும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

பாசனத்திற்கான நீர்வள அமைப்புகளை மேம்படுத்தும் திட்டம்

11.08.2011

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் பெரும்பாலான மக்கள் வேளாண்மைத் தொழிலையே நம்பி இருப்பதால், வேளாண் பெருமக்கள் வாழ்வில் வளம் பெறவும், அவர்களின் வாழ்வாதாரம் செழிக்கவும், வேளாண் உற்பத்தித்திறனையும், வேளாண் பெருமக்களின் வருமானத்தையும் அதிகப்படுத்துவதற்கான பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. நீடித்த வேளாண் வளர்ச்சியை அடைவதில் பாசனத்திற்கான நீர்வள அமைப்புகளை வலுப்படுத்துதல் இன்றியமையாதது ஆகிறது.

அந்த வகையில், மாநிலத்தில் பாசன நிலங்களுக்கு ஆதாரமாக உள்ள பாசன உள்கட்டமைப்புகளை நவீனப்படுத்தி, பாசனக் கால்வாய் அமைப்புகளைப் புனரமைத்து, அவைகளை பழைய நிலைக்குக் கொண்டு வரும் நோக்கத்துடன் உலக வங்கி உதவியுடன் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம் என்னுடைய முந்தைய ஆட்சிக் காலத்தில் செயல்படுத்தப்பட்டது.

இந்தத் திட்டத்தின் தொடர் திட்டமாக, தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம், உலக வங்கி நிதியுதவியுடன், 2,547 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 15 இலட்சத்து 24 ஆயிரத்து 607 ஏக்கர் பாசனப் பரப்பு பயனடையும் வகையில், நீர்வள ஆதாரத் துறை, வேளாண்மைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, மீன்வளத் துறை, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், தோட்டக்கலைத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை மற்றும் வேளாண்மை விற்பனைத் துறை ஆகிய துறைகளை ஒருங்கிணைத்து விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படும் வகையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டமாகும்.

தமிழகத்தில் உப வடிநில கட்டமைப்பு முறையில் ஒருங்கிணைந்த நீர்வள ஆதார மேலாண்மையின் மூலம் பாசன நீர் வழங்கும் சேவை மற்றும் பாசன நில வேளாண் உற்பத்தித் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தெரிவு செய்யப்பட்ட 60 உப வடிநிலங்களின் 15 இலட்சத்து 24 ஆயிரத்து 607 ஏக்கர் பாசனப் பரப்பு அடங்கிய பாசன அமைப்புகளை நவீனப்படுத்துவதன் மூலம் பெருமளவு நீர் விநியோகத்தினை மேம்படுத்த இத்திட்டம் முனைகிறது. மேலும், 4,848 ஏரிகள், 668 அணைக்கட்டுகள் மற்றும் 7,893 கிலோ மீட்டர் நீர்வழங்கு கால்வாய்களைப் புனரமைத்து சீர்படுத்துவதன் மூலம் ஏரிப் பாசன முறையை நவீன மயமாக்குதல் மற்றும் கால்வாய்ப் பாசன அமைப்பை மேம்படுத்துதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தில், நீர் மேலாண்மை மூலம் அதிக மகசூல் பெறத்தக்க வகையில் தேவையான நீரை மட்டுமே பயன்படுத்தி மீதமாகும் நீரை அதிக பாசனப் பகுதிகளுக்கு அளித்து வேளாண் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படுகிறது. மேலும், நீரைப் பயன்படுத்துவோர் மூலமாக நீர்ப்பாசனச் சங்கங்கள் அமைத்து அவர்களின் ஈடுபாட்டுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் ஓர் அங்கமாக, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள அடையாறு உப வடிநிலத்தின் கீழ் உள்ள முறைசார்ந்த மற்றும் முறைசாரா ஏரிகள், அதாவது – System and Non- System Tanks – மற்றும் நீர்வழங்கு கால்வாய்களை 31 கோடியே 19 இலட்சத்து 31 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைத்து நவீனப்படுத்திட நிருவாக ஒப்புதல் அளித்து நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடையாறு உப வடிநிலத்தின் கீழ் உள்ள ஆயக்கட்டு நிலங்களுக்கு நீர் வழங்கும் முறையை செம்மையாக்க, அதன் கட்டமைப்பை நவீனப்படுத்த பின்வரும் பணிகள் இத்திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படும்:–

- ஏரிகளின் கரைகளை இயந்திரங்களைக் கொண்டு பலப்படுத்துதல்
- பழுதுபட்ட மதகுகளை மறு கட்டமைப்பு செய்தல்
- பழுதுபட்ட சிற்றணைகளை மறு கட்டமைப்பு செய்தல்
- நீர்வழங்கு கால்வாய்களை இயந்திரங்கள் கொண்டு தூர்வாருதல்
- ஏரிகளின் எல்லைகளில் எல்லைக் கற்களை அமைத்தல்
- பாசனக் கால்வாய்களில் நீர் அளவீட்டு கட்டமைப்பு ஏற்படுத்துதல்
- இரண்டு ஏரிகளின் தெரிவு செய்யப்பட்ட வரத்துக் கால்வாய்களில் 600 மீட்டர் நீளத்திற்கு அக உறை அமைத்தல், அதாவது Lining அமைத்தல் மற்றும் மற்ற ஏரிகளின் கால்வாய்களில் 30 முதல் 50 மீட்டர் நீளத்திற்கு அக உறை அமைத்தல்

இதனால், காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள செங்கல்பட்டு, தாம்பரம் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் வட்டங்கள் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள திருவள்ளூர் மற்றும் பூந்தமல்லி வட்டங்களிலுள்ள முறைசார்ந்த மற்றும் முறைசாரா ஏரிகளின் கீழ் உள்ள 45,597.10 ஏக்கர் ஆயக்கட்டு நிலங்களின் பாசன வசதி மேம்பாடு அடையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் மற்றுமோர் அங்கமாக, காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் உள்ள கிளியாறு உப வடிநிலம் மற்றும் செய்யாறு உப வடிநிலத்தின் ஒரு பகுதியின் கீழ் உள்ள ஏரிகள், அணைக்கட்டுகள் மற்றும் நீர்வழங்கு கால்வாய்களை 84 கோடியே 88 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைத்து நவீனப்படுத்திட நிருவாக ஒப்புதல் அளித்து நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

செய்யாறு–கிளியாறு உப வடிநிலத்தின் கீழ் உள்ள ஆயக்கட்டு நிலங்களுக்கு நீர் வழங்கும் முறையை செம்மையாக்க, அதன்

கட்டமைப்பை நவீனப்படுத்த, பின்வரும் பணிகள் இத்திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படும்:–

- நீர்வழங்கு கால்வாய்களை இயந்திரங்கள் கொண்டு தூர்வாரி மேம்படுத்துதல் மற்றும் 200 மீட்டர் இடைவெளிகளில் மாதிரிக் கால்வாய் வடிவம், அதாவது Model Section அமைத்தல்
- பழுதுபட்ட சிற்றணைகளைப் புனரமைத்தல்
- பழுதுபட்ட மதகுகளை மறு கட்டமைப்பு செய்தல்
- பழுதுபட்ட மதகுகளைப் புனரமைத்தல்
- பாசன ஏரிகளின் மதகுகளுக்கு கீழ் உள்ள நீர்வழங்கு கால்வாய்களில் 35 மீட்டர் தூரத்திற்குத் தேவையான அக உறை அமைத்தல்
- எல்லா மதகுகளின் வெளிப்புறங்களிலும் நீர் அளவீட்டு அமைப்பு கட்டமைப்பை ஏற்படுத்துதல்
- தேவைப்படும் ஏரிகளின் மதகுகளின் இடது வலது புறங்களில் பாதுகாப்பு அமைப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் அதன் கரைகளில் 500 மீட்டர் இடைவெளிகளில் மாதிரிக் கால்வாய் வடிவம் அமைத்தல்
- மதகுகளுக்கு திருகு அமைப்பு கொண்ட கதவுகள் அமைத்தல்
- ஏரிகளின் நீர் பரப்புப் பகுதிகளில் எல்லைக் கற்களை நடுதல்

மேற்கண்ட இந்தப் பணிகளை மேற்கொள்வதன் மூலம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அச்சரப்பாக்கம், மதுராந்தகம், சித்தாமூர், உத்திரமேரூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய ஒன்றியங்கள் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள வெம்பாக்கம், செய்யாறு, அன்னக்காவூர், வந்தவாசி, பெரணமல்லூர், தெள்ளாறு மற்றும் மேற்கு ஆரணி ஆகிய ஒன்றியங்களில் உள்ள 453 ஏரிகள் மற்றும் இரண்டு அணைக்கட்டுகளின் கீழுள்ள 91,081.25 ஏக்கர் ஆயக்கட்டு நிலங்களின் பாசன வசதி மேம்பாடு அடையும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். ❋

100 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல்

12.08.2011

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைவது மனித வளம்தான். மனிதவள மேம்பாட்டில் முக்கியப் பங்காற்றுவது கல்வி. கல்வியில் மேம்பட்ட சமுதாயத்தால்தான் வளர்ச்சிக் குறியீடுகளை எளிதாக அடைய இயலும். அந்த வகையில்தான் எனது தலைமையிலான அரசு கல்வி வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது.

கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும் நடவடிக்கையின் ஓர் அங்கமாக, மாநிலத்தில் உள்ள 100 அரசு, மாநகராட்சி மற்றும் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்த நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் பள்ளிகளில் அறிவியல் பிரிவு மட்டும்தான் இதுவரை துவக்கப்பட்டு வந்தது. மேலும், உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் போது உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்கள்; மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களாகத் தரம் உயர்த்தப்படுவதுடன், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் ஆகிய 5 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் ஒப்பளிக்கப்பட்டு வந்தன.

தற்போது நிலை உயர்த்தப்படும் 100 பள்ளிகளிலும் அறிவியல் பிரிவுடன் கலைப் பிரிவும் துவக்க இந்த அரசு முடிவு

செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு நிலை உயர்த்தப்படும் 100 பள்ளிகளிலும் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்கள் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களாகத் தரம் உயர்த்தப்படும் என்பதையும்; ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வரலாறு, பொருளியல், வணிகவியல் மற்றும் தமிழ் ஆகிய பாடங்களுக்காக 9 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் மூலம் தற்போது நிலை உயர்த்தப்படும் 100 பள்ளிகளில், கூடுதலாக 900 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். மேலும், வரலாறு, பொருளியல், வணிகவியல் ஆகிய பாடங்களைப் படிக்கும் வாய்ப்பு மாணவர்களுக்குக் கிடைப்பதுடன், இந்தப் பிரிவுகளில் முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் வேலை வாய்ப்புப் பெறவும் இது வழி வகுக்கும். மேலும், கடந்த பல ஆண்டுகளாக உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் போது தமிழ் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஒப்பளிப்பு வழங்கப்படாத நிலை இருந்து வந்தது. இந்த நிலையும் தற்போது மாற்றப்பட்டு, தமிழ் மொழிப் பாட ஆசிரியர் பணியிடங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்படுவதால் தமிழ் மொழிப் பாடத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர்களுக்கு மேல்நிலைப் பள்ளிகளில் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் வேலைவாய்ப்புப் பெற இது ஒரு வாய்ப்பாக அமையும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படுவதால், ஆண்டு ஒன்றுக்கு தோராயமாக 44 கோடியே 91 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

உகந்த பயிர் மேலாண்மை கடைப்பிடிக்கும் திட்டம்

12.08.2011

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்தச் சட்டமன்றப் பேரவையில் 4.8.2011 அன்று தாக்கல் செய்யப்பட்ட 2011–2012 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்ட நிதிநிலை அறிக்கையில், ''முன்னோடி தொழில்நுட்பங்களான திருந்திய நெல் சாகுபடித் திட்டம்; நவீன முறையில் கரும்பு உற்பத்தித் திறனை உயர்த்தும் திட்டம்; துல்லியப் பண்ணையம்; பி.டி. பருத்தியைப் பரவலாக்குதல்; பயறு வகைகள்; எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றில் உகந்த பயிர் மேலாண்மையைக் கடைப்பிடித்தல்; பசுமைக் குடில்; துல்லியப் பண்ணையம் முறைகளில் காய்கறிகளைப் பயிரிடுதல்; தோட்டக்கலைப் பயிர்களுக்கான அடர் நடவுமுறை போன்றவை தீவிரமாகப் பரவலாக்கப்படும்'' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த மாமன்றத்தில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர், பி.டி. ரகப் பருத்தி பயிரிடுவதில் பல பிரச்சினைகள் இருப்பதால் இதனை அரசு ஊக்குவிக்கக் கூடாது என்ற கருத்தினைத் தெரிவித்திருந்தனர். விவசாயிகளும், அரசு அளவில் பி.டி. ரகப் பருத்தி பயிரிடுவதை ஊக்குவிக்கக் கூடாது என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

2002 ஆம் ஆண்டு மத்திய அரசு, பி.டி. ரகப் பருத்தியினை விவசாயிகள் சாகுபடி செய்வதற்காக Genetic Engineering Approval Committee மூலம் அனுமதி அளித்து, இன்று பல மாநிலங்களில் பரவலாகச் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. பி.டி. பருத்தியின் மூலம் அதிக லாபம் பெற முடியும் என்பதால், லாப நோக்கோடு தனியாரிடம் பி.டி. ரக விதைகளை வாங்கி தமிழக விவசாயிகளும் பயிரிட்டு வருகிறார்கள். எனவேதான், நிதிநிலை

அறிக்கையில் பி.டி. ரகப் பருத்திச் சாகுபடி பரவலாக்கப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும், மரபணு மாற்றம் செய்யப்பட்ட பருத்தி என்பதாலும்; விவசாயிகளுக்கு நிச்சயமான பலன் அளிக்கும் என்ற உறுதி இல்லாததாலும்; இதனை அரசளவில் பரவலாக்கக் கூடாது என்ற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் விவசாயிகள் கருத்தினை ஏற்று, பி.டி. பருத்திச் சாகுபடியைப் பரவலாக்கும் எந்த நடவடிக்கையையும் இந்த அரசு மேற்கொள்ளாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

வன விலங்குகளால் ஏற்படும் உயிரிழப்புகளுக்கு இழப்பீட்டுத் தொகை உயர்த்துதல்

17.08.2011

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மக்கள்தொகைப் பெருக்கத்தாலும், தொழில் மயமாக்கலாலும் வன விலங்குகளின் இயற்கை வாழ்விடங்கள் பாதிக்கப்படுகின்றன. எனவே, வன விலங்குகள் அடிக்கடி காடுகளை விட்டு வெளியேறி மனிதர்கள் வாழும் பகுதிகளுக்குள் நுழைவதால், மனிதர்கள், பயிர்ச் சேதம், உடமைகள் சேதம், கால்நடைகள் இழப்பு போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். சில நேரங்களில் வன விலங்குகளால் தாக்கப்படுவதால், மனித உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. எனவே, வன விலங்குகளின் வாழ்விடங்களை மேம்படுத்துதல்; அவை விரும்பி உண்ணும் பயிர்களை வனப் பகுதிகளில் வளர்ப்பது; வனங்களின் எல்லைப் பகுதிகளில் தடைகளை உருவாக்குவது; மனித உயிர்களுக்கும், விவசாயப் பயிர்களுக்கும், உடமைகளுக்கும் வன விலங்குகளால் ஏற்படும் பாதிப்பிற்கு உடனடியாக இழப்பீடு வழங்குவது போன்ற பல்முனை அம்சங்களை உள்ளடக்கிய செயல் திட்டத்தின் மூலம் இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காணப்படும் என்று, 4.8.2011 அன்று இந்த மாமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட, 2011–2012 ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டு அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருந்தது. வன விலங்குகளால் மனித உயிரிழப்பு ஏற்படும் போது வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை 1.50 இலட்சம் ரூபாயில் இருந்து, 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, வன விலங்குகளால் மனிதர்களுக்கு உயிர் இழப்போ அல்லது நிரந்தர ஊனமோ ஏற்படும் போது வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை 1.50 இலட்சம் ரூபாயில் இருந்து, 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். மேலும், பயிர்ச் சேதம், உடமைகள்

சேதம், கால்நடைகள் இழப்பு ஆகியவற்றிற்கான இழப்பீட்டுத் தொகையை உயர்த்தி வழங்கவும் எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது.

இதன் அடிப்படையில், வன விலங்குகளால் ஏற்படும் பயிர்ச் சேதத்திற்கான இழப்பீட்டுத் தொகை இதுவரை ஏக்கருக்கு 15,000 ரூபாய் என்ற அளவில் இருந்து, ஏக்கருக்கு 25,000 ரூபாய் என்ற அளவில் உயர்த்தி வழங்கப்படுவதுடன், சேதம் அடைந்த தென்னை மரங்களுக்கும், மரத்திற்கு 500 ரூபாய் என்ற அளவில் இழப்பீடு வழங்கப்படும்.

வன விலங்குகளால், ஓட்டு வீடுகள் / RCC வீடுகள் / கூரை வீடுகள், எந்த அளவுக்கு சேதம் அடைந்தாலும், இதுவரை 5,000 ரூபாய் மட்டும் இழப்பீடாக வழங்கப்பட்டு வந்தது. இந்தத் தொகை இனி, முழுவதும் சேதம் அடைந்த ஓட்டு வீடு / RCC வீடுகளுக்கு 35,000 ரூபாயாகவும், கூரை வீடுகளுக்கு 10,000 ரூபாயாகவும் இனி உயர்த்தி வழங்கப்படும். பெருமளவில் பாதிப்புக்கு உள்ளான ஓட்டு வீடு / RCC வீடுகளுக்கு 5,000 ரூபாயும், கூரை வீடுகளுக்கு 2,000 ரூபாயும், பகுதி சேதமடைந்த வீடுகளுக்கு 1,500 ரூபாயும் இனி வழங்கப்படும். மேலும், வன விலங்குகளால் ஆடு, செம்மறியாடு, பன்றி போன்ற கால்நடைகள் இழப்பு ஏற்பட்டால், இதுவரை அனைத்துக்கும் 1,000 ரூபாய் என்ற வீதத்தில் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு வந்தது. இனி, அந்தத் தொகை, ஆட்டுக்கு 2,000 ரூபாய் என்ற அளவிலும், செம்மறி ஆட்டுக்கு 1,500 ரூபாய் என்ற அளவிலும், பன்றிக்கு 1,000 ரூபாய் என்ற அளவிலும் வழங்கப்படும். கோழி போன்ற வீட்டில் வளர்க்கப்படும் பறவை இனங்கள் இழப்பு ஏற்பட்டால், இதுவரை பறவைக்கு 30 ரூபாய் என்ற அளவில் இருந்த இழப்பீட்டுத் தொகை, இனி பறவைக்கு 100 ரூபாய் என்ற அளவில் உயர்த்தி வழங்கப்படும். வன விலங்குகளால் உடைமைகளுக்கு இழப்பு ஏற்பட்டால், உண்மையான இழப்பின் அளவு அல்லது 100 ரூபாய், இவற்றில் எது அதிகமோ, அந்தத் தொகை இழப்பீட்டுத் தொகையாக இதுவரை வழங்கப்பட்டது. இனி, வன விலங்குகளால் உடைமைகள் இழப்பு ஏற்பட்டால், 2,000 ரூபாய் வரை இழப்பீடு வழங்கப்படும் என்பதை மன நிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் நவீன மருத்துவமனை உருவாக்குதல்

19.08.2011

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நோய் இன்னதெனக் கண்டறிந்து, பின் அது உண்டான காரணத்தை அறிந்து, அதன் பின் அந்நோயைத் தீர்ப்பதற்கான வழிமுறையைக் கையாண்டு, நோய் நீங்க மருத்துவம் செய்ய வேண்டும் என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப, அனைவருக்கும் சுகாதாரம் என்ற குறிக்கோளை எய்தும் நோக்குடன், ''தேசிய ஊரக சுகாதார நலத் திட்டம்''– National Rural Health Mission; ''தமிழ்நாடு சுகாதார நலத் திட்டம்'' – Tamil Nadu Health System Project என்னும் இரண்டு மாபெரும் திட்டங்கள் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தகுதி வாய்ந்த மருத்துவர்கள், செவிலியர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள், நவீன உபகரணங்கள் ஆகியவற்றுடன் சுகாதாரமான சுற்றுச்சூழலைக் கொண்ட தரமான மருத்துவச் சேவையை தாராளமாக அனைத்து மக்களுக்கும் வழங்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் எனது தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது. இந்தக் குறிக்கோளை நிறைவேற்றும் விதமாக, ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்துதல்; உயிர் காக்கும் உபகரணங்களைத் தமிழ்நாடு சுகாதார நலத் திட்டத்தின் கீழ் 55 கோடி ரூபாய் செலவில் மாவட்ட மருத்துவமனைகளுக்கு வழங்குதல்; உணவுப் பாதுகாப்பு–மருந்துக் கட்டுப்பாடு நிருவாகத்திற்கென தனியாக ஒரு ஆணையரகத்தை உருவாக்குதல்; திருச்சி அண்ணல் காந்தி அரசு மருத்துவமனையில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறப்பு சிகிச்சை மையம், அதாவது, Super Speciality Centre அமைத்தல்; மக்கள் வீட்டிற்கே சென்று

சுகாதார வசதிகள் அளிக்கக் கூடிய "நடமாடும் மருத்துவமனை" என்னும் புதிய திட்டம் உட்பட பல்வேறு சிறப்புத் திட்டங்கள் எனது தலைமையிலான அரசின், 2011–2012 ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றுள்ளதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் அறிவீர்கள்.

இவை மட்டும் அல்லாமல், அனைவருக்கும் மருத்துவச் சேவையை நல்கும் வகையில், "முதலமைச்சரின் விரிவான பொது மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்" தொடங்கப்படும் என்றும், இந்தத் திட்டத்தின் கீழ் அரசு மருத்துவமனைகளில் உள்ள மருத்துவ வசதிகளைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ள வழிவகை செய்யப்படும் என்றும் நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. இதன் அடிப்படையில், அரசு மருத்துவமனைகளில் உள்ள மருத்துவ வசதிகளைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது, இவற்றுக்கெல்லாம் முத்தாய்ப்பாக, தமிழ்நாட்டில் உள்ள அனைத்துத்தரப்பு மக்களும், குறிப்பாக, ஏழை, எளிய மக்கள், பல்வேறு நோய்களுக்கும், தரமான, உயரிய சிகிச்சையினை இலவசமாகப் பெறும் வகையில், பல துறை உயர் சிறப்பு மருத்துவமனை, அதாவது, Multi Super Speciality Hospital ஒன்றை அமைக்க எனது தலைமையிலான அரசு முடிவு எடுத்துள்ளது என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மருத்துவமனை, சென்னை மாநகரத்தின் மையப் பகுதியான அண்ணா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில், முந்தைய தி.மு.க அரசால், புதிய தலைமைச் செயலகம் அமைப்பதற்காகக் கட்டப்பட்ட, 97,829 சதுர மீட்டர் தளப் பரப்பு கொண்ட பிளாக் 'A' கட்டடத்தில் அமைக்கப்படும். இந்தக் கட்டடம், சட்டமன்றம் மற்றும் தலைமைச் செயலகத்தில் தற்போது உள்ள 36 துறைகளும் செயல்படுவதற்குப் போதுமானதல்ல என்பதாலும்; பயன்படுத்தக் கூடிய இடம் வெகு குறைவாக இருப்பதால், அலுவலகப் பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் இந்தக் கட்டடம்

இல்லை என்பதாலும்; இரு வேறு கட்டடங்களில் இருந்து தலைமைச் செயலகம் செயல்பட முடியாது என்பதாலும்; சட்டமன்றமும், தலைமைச் செயலகமும் புனித ஜார்ஜ் கோட்டையில் இயங்கி வருவதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள்.

தற்போது, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில், பயன்படுத்தப்படாமல் உள்ள கட்டடம், ஏழை, எளிய மக்களுக்கு பயனளிக்கும் வகையில் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தில், இந்தப் பலதுறை உயர் சிறப்பு மருத்துவமனையை அமைக்க எனது தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கட்டடத்தில் பல துறை உயர் சிறப்பு மருத்துவமனை அமையும் வகையில் தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டு, மருத்துவ வல்லுநர்கள், செவிலியர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் ஆகியோர் நியமிக்கப்பட்டு, உயர் தர மருத்துவ சிகிச்சைக்குத் தேவையான நவீன உபகரணங்கள் வாங்கப்பட்டு, இந்த மருத்துவமனை விரைவில் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மருத்துவமனை, புது டெல்லியிலுள்ள AIIMS (All India Institute of Medical Sciences) மருத்துவமனைக்கு இணையான வசதிகளுடன் விளங்கும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

மேலும், தற்போது கட்டப்பட்டு வரும் பிளாக் 'B' கட்டடங்களில் புதியதாக ஒரு அரசு மருத்துவக் கல்லூரியைத் தொடங்கவும் எனது தலைமையிலான அரசு முடிவு எடுத்துள்ளது என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

கூட்டுறவுத் துறையில் உள்ள கிடங்கு வசதியினை விரிவுபடுத்துதல்

25.08.2011

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நமது நாட்டின் முதன்மைத் தொழிலான வேளாண்மையே பொருளாதாரத்தின் உயிர்நாடி ஆகும். தமிழகத்தில் பெரும்பாலான கிராமப்புற மக்களுக்கு வேளாண்மைத் தொழிலே வாழ்வாதாரமாக உள்ளது. எனவே, வேளாண்மைத் தொழிலுக்கு புத்துயிர் ஊட்டி, உற்பத்தித் திறனை மேம்படுத்துவதன் மூலம் வேளாண்மை உற்பத்தியை அதிகரித்து, இரண்டாம் பசுமைப் புரட்சிக்கு வித்திட எனது அரசு உறுதி பூண்டுள்ளது. இதன் அடிப்படையில், இந்த ஆண்டு உணவு தானிய உற்பத்தியில் 115 இலட்சம் மெட்ரிக் டன் என்ற உயர் இலக்கினை எனது அரசு நிர்ணயித்துள்ளது. வேளாண் உற்பத்தியை அதிகரிப்பது மட்டுமல்லாது, வேளாண் பெருமக்கள் விளைவித்த பொருட்களுக்கு நியாயமான விலை கிடைத்து, அவர்களின் தனி நபர் வருமானம் உயரும் வகையிலும் எனது அரசு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. விவசாயிகள், தாங்கள் விளைவிக்கும் பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கும் வரையில் சேமித்து வைக்க வேண்டியதன் அவசியத்தை எனது அரசு நன்கு உணர்ந்துள்ளது.

மாநிலத்தில் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றில் மொத்தமாக 8 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவில் சேமிப்புக் கிடங்கு வசதி உள்ளது.

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்கள், உறுப்பினர்களின் விவசாய விளை பொருட்களுக்கு ஈடாகத் தானிய ஈட்டுக் கடன்களை வழங்கி வருகின்றன. அறுவடைக் காலங்களில் வேளாண் விளை பொருட்களின் விலை வீழ்ச்சி

அடையும் போது, விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை கிடங்கில் 1 முதல் 2 மாதங்கள் சேமித்து வைத்து, தானிய ஈட்டுக் கடன் பெற்றுக் கொள்வதுடன், விலை ஏற்றத்தின் போது விளை பொருட்களைக் கிடங்கில் இருந்து எடுத்து நல்ல விலைக்கு விற்பதால், விவசாயிகளுக்கு 10 முதல் 30 சதவீதம் அதிக விலை கிடைக்கிறது.

நடப்பு ஆண்டில், 185 கோடி ரூபாய் அளவிற்குத் தானிய ஈட்டுக் கடன் வழங்க திட்டமிடப்பட்டு உள்ளது. தமிழ்நாட்டில் தானிய ஈட்டுக் கடன் வழங்குவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளதாலும், கூட்டுறவுத் துறையில் தற்போது உள்ள கிடங்குகளின் பயன்பாடு அதிக அளவில் உள்ளதாலும், மாநிலத்தில் கிடங்கு வசதியினை விரிவுபடுத்துவது உடனடித் தேவையாக உள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு, NABARD வங்கியின் ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதித் திட்டத்தின் கீழ் கடன் உதவி பெற்று, மொத்தம் 105 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில், மாநிலம் முழுவதும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 1,118 கிடங்குகளும், 21 வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளும்; 21 வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளும்; 6 வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளும், ஆக மொத்தம் 1,166 கிடங்குகள் கட்ட எனது அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் மூலம், 1 இலட்சத்து 55 ஆயிரத்து 300 மெட்ரிக் டன் அளவுக்குக் கூடுதல் சேமிப்பு வசதி ஏற்படுத்தப்படும். இதன் மூலம் தானிய சேமிப்பு இழப்பு குறைக்கப்படுவதுடன், தானிய ஈட்டுக் கடன் வசதியும் அதிகரிக்கப்படுவதால், விவசாயிகளுக்கு ஆண்டுக்கு சுமார் 26 கோடியே 40 இலட்சம் ரூபாய் அளவுக்குக் கூடுதல் வருவாய் கிடைக்க வாய்ப்பு ஏற்படும் என்பதையும் மன நிறைவுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

உண்மையான, நிலையான சமச்சீர் கல்வி வழங்கிட முன்னுரிமை

26.08.2011

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கல்வி என்னும் வற்றாத செல்வம், தனி மனிதன் வாழ்க்கையை வளம் பெறச் செய்யவும், அவன் சார்ந்த சமுதாயத்தின் மேம்பாட்டிற்கும்; நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமைகிறது. பொருளாதார வளர்ச்சி அடைவது மட்டும் அன்றி, வாழ்க்கையில் பல்வேறு நலன்களையும் முழுமையாகப் பெறுவதற்குக் கல்வி இன்றியமையாதது ஆகிறது. இத்தகைய பயன் மிக்க கல்வியை மாநிலம் முழுவதும் உள்ள குழந்தைகளுக்குத் தரமாக அளிப்பதற்கும்; அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பாதுகாப்பான சூழ்நிலையில் குழந்தைகள் கல்வி கற்கும் வசதியை அளிப்பதற்கும்; இவை மூலம் உண்மையான, நிலையான சமச்சீர் கல்வி வழங்கிடவும் எனது தலைமையிலான அரசு முன்னுரிமை அளித்து வருகிறது.

அந்த வகையில், மாநிலத்தில் உள்ள பள்ளி மாணவ, மாணவியர்கள் தரமான கல்வியைப் பெறும் வகையில், எனது தலைமையிலான அரசால் செயல்படுத்தப்பட உள்ள சில புதிய திட்டங்கள் குறித்து நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அனைவருக்கும் தரமான கல்வியை வழங்குவது என்ற இவ்வரசின் நோக்கத்தின் ஓர் அங்கமாக, மேலும் 65 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும்; 710 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும்; ஆக மொத்தம் 775 பள்ளிகளை 419 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் நிலை உயர்த்த நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளிகளைத் தரம் உயர்த்துவதினால் மட்டும் தரமான கல்வியை மாணவர்களுக்கு அளிக்க முடியாது. தேவைக்கேற்ப ஆசிரியர்களும் இருக்க வேண்டும் என்பதை எனது அரசு உணர்ந்துள்ளது. எனவே, நிலை உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்கும், ஆசிரியர்–மாணவர் விகிதத்தின் அடிப்படையில் கூடுதல் ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்த எனது தலைமையிலான அரசு முடிவெடுத்து உள்ளது. அதன்படி, 9,735 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 3,565 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள், ஆக மொத்தம் 13,300 ஆசிரியர் பணியிடங்களை, 315 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் இந்த ஆண்டிலேயே ஏற்படுத்த ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

உண்மையான சீரான கல்வி என்பது பாடப் புத்தகத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்காமல் கல்வி இணைச் செயல்பாடுகளுக்கும் உரிய முக்கியத்துவம் அளிக்க வேண்டும். இதன் அடிப்படையில், உடற்கல்வி, ஓவியம், தொழிற்கல்வி ஆகியவற்றுக்காக ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 16,549 பகுதி நேர ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். இதனால் இப்பள்ளிகளில் 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியர் பயன் அடைவர். இதற்கு, அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 99 கோடியே 29 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

முனைவர் முத்துக்குமரன் குழு அளித்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு, சமச்சீர் கல்விக்கு மிகவும் இன்றியமையாதது அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் ஆகும். பொதுப் பாடத் திட்டம் மட்டும் சமச்சீர் கல்வி ஆகாது. இதனை நன்கு உணர்ந்த எனது அரசு, ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், இந்தக் கல்வி ஆண்டில், கூடுதல் வகுப்பறைகள், கழிப்பறைகள், சுகாதாரமான குடிநீர் வசதி, சுற்றுச்சுவர் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட உடனடி நடவடிக்கை எடுக்க உள்ளது என்பதை மிகவும் உவகையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கல்வி ஆண்டில் 1,082 கோடியே 71 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இவை ஏற்படுத்தப்படும்.

மேற்கண்ட திட்டங்கள் அனைத்தும், மத்திய அரசும், மாநில அரசும் இணைந்துச் செயல்படுத்தும் 'அனைவருக்கும் கல்வித் திட்டம்' மற்றும் 'அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம்' ஆகிய திட்டங்களின் கீழ் செயல்படுத்தப்படும்.

மேலும், நிலை உயர்த்தப்பட்ட மேல்நிலைப் பள்ளிகளுக்கு, 3,187 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள், முழுவதும் மாநில அரசின் நிதியில் இருந்து, 90 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில், இந்தக் கல்வி ஆண்டு முதல் இரண்டு கட்டங்களில் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1985 ஆம் ஆண்டிலிருந்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்கு இலவசமாக பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. மாணவர்களிடம் இருக்கும் ஏற்றத் தாழ்வுகளை நீக்கும் நல்லெண்ணத்துடன் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் ஒரே மாதிரியான புத்தகப் பைகள்; கற்றலுக்குத் தேவையான கணித உபகரணப் பெட்டி, அதாவது Geometry Box; கிராமப்புற மாணவ, மாணவியர்களுக்கு இதுவரை கிடைக்கப் பெறாத வண்ணப் பென்சில்கள் மற்றும் புவியியல் வரைபடங்கள் போன்றவை வரும் கல்வியாண்டு முதல் வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக ஆண்டு ஒன்றுக்குத் தோராயமாக 119 கோடியே 48 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

சுத்தம் மற்றும் சுகாதாரமான சுற்றுச்சூழல் பள்ளிக் கூடங்களில் அமையப் பெற வேண்டும் என்பது எனது திடமான எண்ணம் ஆகும். எனவே, அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் துப்புரவாளர் மற்றும் இதர பணிகளுக்கான 5,000 ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். இதன் காரணமாக, அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 60 கோடி ரூபாய் செலவு ஏற்படும்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில், குழந்தைகளின் புத்தகச் சுமை குறைக்கப்படும் என்ற வாக்குறுதி கொடுக்கப்பட்டுள்ளது. குழந்தைப் பருவத்தில் தேவைக்கு அதிகமாக புத்தகச் சுமையை தூக்குவதால் ஏற்படும் உடல்நலக் குறைபாடுகளைக் குறைக்கும் நோக்கத்துடன், வரும் கல்வியாண்டு முதல் இப்புத்தகச் சுமையைக் குறைக்கும் வகையில் தமிழ்நாட்டில் முப்பருவ முறை, அதாவது, Trimester pattern அறிமுகப்படுத்தப்படும். முழுக் கல்வியாண்டிற்குரிய பாடப் புத்தகங்கள் மூன்று பருவங்களுக்கு ஏற்றவாறு பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பருவ முடிவிலும் தொடர் மற்றும் கூட்டு மதிப்பீட்டுடன் கூடிய தேர்வுகள் நடத்தப்படும். இதன் மூலம் மாணவர்களின் கவலை, அச்சம், மன அழுத்தம் ஆகியவை பெரிதும் குறைக்கப்படுவதுடன், பள்ளி செல்லும் குழந்தைகளுக்குப் புத்தகச் சுமையினால் ஏற்படும் இன்னல்கள் நீக்கப்படும் என்பதை மன நிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் மதிப்பெண் சான்றிதழ்கள் தவறாகக் கையாளக் கூடிய வாய்ப்பு உள்ளதைத் தவிர்க்கும் பொருட்டு, அவர்களது புகைப்படம் மற்றும் ரகசிய குறியீட்டுடன் கூடிய மதிப்பெண் சான்றிதழை வழங்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது. எனவே, 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியருக்கு அவர்களின் புகைப்படத்துடன் கூடிய மறைமுகக் குறியீட்டுடன் மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவ, மாணவியர்களின் திறமையையும், ஆற்றலையும் வளப்படுத்துவதற்கு அவர்களின் சிந்திக்கும் ஆற்றலை மேம்படுத்துவது மிகவும் அவசியம். இதனைக் கருத்தில் கொண்டு, குழந்தைகளின் சிந்திக்கும் ஆற்றலை மேம்படுத்தும் நோக்கத்துடன், 7 முதல் 17 வயதுள்ள பள்ளி செல்லும் மாணவ, மாணவியருக்குச் சதுரங்க விளையாட்டு வரும் கல்வியாண்டு முதல் அறிமுகப்படுத்தப்படும். இந்த விளையாட்டினால் மாணவ, மாணவியரின் அறிவுத் திறன் வளர்வதுடன், கூர்மையாக சிந்திக்கும் ஆற்றலும் விரிவடையும்.

கணினி மூலம் கற்பது பள்ளிகளில் தற்போது இன்றியமையாததாக உள்ளது. மாணவ, மாணவியர்கள் தமது பாடப் புத்தகங்களுக்கு அப்பாற்பட்டு, பற்பல குறிப்புகளையும் பாடத்திற்கு ஏற்ற மேற்கோள்களையும் மற்றும் தேவையான தகவல்களையும் அறிந்து கொள்வதற்கு கணினி முக்கியமான ஒன்று என்பதனை உணர்ந்து, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் +1 மற்றும் +2 பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு இலவச மடிக்கணினி வழங்கும் திட்டத்தினை அறிவித்துள்ளேன். அதனைத் தொடர்ந்து, எல்லா வகுப்புகளிலும் படிக்கும் மாணவ, மாணவியர்கள் பயன் பெறும் விதத்திலும், தமிழகத்தில் உள்ள அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர் / ஆசிரியைகளின் வகுப்பறைக் கற்றல், கற்பித்தல் முறைகளை மேம்படுத்தும் வகையிலும் ICT@ Schools (Information and Communication Technology@ Schools), Tamil Nadu என்ற புதிய திட்டம் உருவாக்கப்படும். இத்திட்டத்தில் எல்லா வகுப்புகளுக்குமான பாடப் புத்தகங்களின் உட்பொருளைக் கணினிமயமாக மாற்றி மையக் கணினி மூலமாக வகுப்பறைகளில் வழங்க வழிவகை செய்யப்படும். எல்லா மாணவ, மாணவியர்களும் பயன் அடையும் பொருட்டு சிறந்த ஆசிரியர்களின் விரிவுரைகளின் தொகுப்புகள் கல்வி செயற்கை கோள் வாயிலாக வகுப்பறைகளுக்குச் சென்றடைய இத்திட்டத்தின் வாயிலாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை இந்த அவைக்கு பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளிக் கல்வித் துறை மூலம் எனது அரசு செயல்படுத்த இருக்கும் இந்தத் திட்டங்களால், மாநிலத்தில் உள்ள பள்ளி மாணவ, மாணவியர்கள் உரிய உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய பள்ளிகளில், மிகவும் உகந்த சூழலில், தரமான கல்வி கற்கும் நிலை உருவாகி, உண்மையான சமச்சீர் கல்வி கிடைக்க வழி வகுக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

கைதிகள் மூவரின் தூக்குத் தண்டனை ரத்து தொடர்பான அரசின் நிலை

29.08.2011

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1991 ஆம் ஆண்டு, மே மாதம் 21 ஆம் நாள், முன்னாள் பாரதப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் ஸ்ரீபெரும்புதூரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள வந்த போது படுகொலை செய்யப்பட்டார் என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். இது தொடர்பான வழக்கு பூந்தமல்லி தடா நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, குற்றம் சாட்டப்பட்ட 26 பேருக்கும் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. அதனை எதிர்த்து குற்றம் சாட்டப்பட்டவர்கள் உச்ச நீதிமன்றம் வரை சென்று மேல் முறையீடு செய்ததில், உச்ச நீதிமன்றம் நளினி, ஸ்ரீஹரன் என்கிற முருகன், சுதேந்திரராஜா என்கிற சாந்தன், பேரறிவாளன் என்கிற அறிவு, ஆகிய நான்கு பேருக்கும் தூக்கு தண்டனையை உறுதி செய்தது. மேலும் 3 பேருக்கு தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தது. எஞ்சிய 19 பேரை விடுதலை செய்தது. உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை எதிர்த்து, தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட 4 நபர்களும் மறு ஆய்வு மனு தாக்கல் செய்தனர். இதனை 8.10.1999 அன்று உச்ச நீதிமன்றம் நிராகரித்து உத்தரவிட்டது.

17.10.1999 அன்று மேற்கண்ட தூக்கு தண்டனைக் கைதிகள் மேதகு தமிழக ஆளுநர் அவர்களுக்குக் கருணை மனுக்களை சமர்ப்பித்தார்கள். 27.10.1999 அன்று மேதகு தமிழக ஆளுநர் இவர்களின் கருணை மனுக்களை நிராகரித்து ஆணையிட்டார்.

தூக்கு தண்டனைக் கைதிகள் சென்னை உயர் நீதிமன்றத்தில் இது தொடர்பாக வழக்குகள் தொடுத்தனர். இந்த வழக்குகளை

விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், 25.11.1999 அன்று வழங்கிய தீர்ப்பில், மனுதாரர்கள் தொடுத்த வழக்குகளை ஏற்று கருணை மனுக்களை நிராகரித்த மேதகு ஆளுநரின் ஆணையைத் தள்ளுபடி செய்து, அமைச்சரவையின் ஆலோசனையைப் பெற்று புதிய ஆணை வழங்குமாறு அறிவுறுத்தியது.

இந்தப் பொருள் குறித்து 19.4.2000 அன்று அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவு எடுக்கப்பட்டது:–

"தூக்கு தண்டனை வழங்கப்பட்ட நான்கு கைதிகளில் ஒருவரான நளினியின் பெண் குழந்தை அனாதை ஆகிவிடும் என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்திற்கிணங்க, நளினி ஒருவருக்கு மட்டும் கருணை காட்டி மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கலாம் என்றும், மற்றவர்களைப் பொறுத்த வரையில் அவர்களது கருணை மனுக்களை நிராகரிக்கலாம் என்றும் ஆளுநருக்கு ஆலோசனை வழங்க அமைச்சரவை முடிவெடுத்தது."

திரு. கருணாநிதி தலைமையிலான அமைச்சரவையின் முடிவினை ஏற்று மேதகு ஆளுநர் அவர்கள் 21.4.2000 அன்று ஒப்புதல் அளித்தார். அதன்படி தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட 4 நபர்களில் சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோரது தூக்கு தண்டனை உறுதி செய்யப்பட்டது. இந்த மூன்று நபர்களும் மேதகு குடியரசுத் தலைவருக்கு அளித்த கருணை மனுக்களை தமிழ்நாடு அரசு 28.4.2000 நாளிட்ட கடிதத்தின்படி மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தது. இதன் மீது மத்திய அரசின் உள்துறை, தனது 12.8.2011 நாளிட்ட கடிதத்தில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் இந்தக் கருணை மனுக்களை நிராகரித்து உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவித்து, இதனை மேற்கண்ட கைதிகளுக்குத் தெரியப்படுத்துமாறு தெரிவித்து உள்ளது. இந்தக் கடிதத்தின் விவரம் சம்பந்தப்பட்ட கைதிகளுக்குத் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இந்த நிலையில் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் தூக்கு தண்டனை விதிக்கப் பெற்ற மேற்படி பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரைத் தூக்கு தண்டனையில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்று எனக்குக் கோரிக்கைகள் விடுத்துள்ளதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்துள்ளன. மேலும் பேரறிவாளனின் தாய் திருமதி அற்புதம் அம்மாள், எனக்கு எழுதியுள்ள கடிதத்தில் தனது மகனை விடுவிக்குமாறு வேண்டி உள்ளார். தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கம் பேரறிவாளன் உள்ளிட்ட மூன்று நபர்களின் தூக்கு தண்டனையை ரத்து செய்ய என்னிடம் கோருவதாகத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றி உள்ளதாக தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கத்தின் தலைவர் திரு. பாரதிராஜா கடிதம் எழுதி உள்ளார். மேலும் சிலர் இது பற்றி கடிதங்கள் எழுதி உள்ளனர்.

இதில் எல்லோரும் கவனிக்க வேண்டிய உண்மை என்னவென்றால், பேரறிவாளன் உள்ளிட்ட மூவரை மரண தண்டனையிலிருந்து தமிழக முதலமைச்சராகிய நான் காப்பாற்ற வேண்டும் என்று முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். ஆனால் 2000ஆம் ஆண்டில் முதலமைச்சராக இருந்த இதே திரு. கருணாநிதிதான் தனது தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பேரறிவாளன் உள்ளிட்ட மூவரின் கருணை மனுக்களையும் நிராகரிக்கலாம் என்றும், மூவருக்கும் விதிக்கப்பட்ட மரண தண்டனையை உறுதி செய்யலாம் என்றும் தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பியுள்ளார். அன்றைய முதலமைச்சர் கருணாநிதியின் இந்தப் பரிந்துரையை அன்றைய ஆளுநரும் ஏற்றுக் கொண்டார்.

இவ்வாறு பேரறிவாளன் உள்ளிட்ட மூவருக்கும் அளிக்கப்பட்ட மரண தண்டனையை உறுதி செய்து விட்டு, செய்வதையெல்லாம் செய்து விட்டு, இன்று ஒன்றும் தெரியாதது போல், அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று திரு கருணாநிதி அறிக்கை வெளியிடுகிறார் என்றால், இது இரட்டை வேடம் அல்லாமல், பித்தலாட்டம் அல்லாமல், கபட நாடகம் அல்லாமல், வேறு என்ன என்பதை தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும்.

தமிழ்நாடு முதலமைச்சர் என்ற முறையில் பேரறிவாளன் உள்ளிட்ட மூவரின் தூக்கு தண்டனையை ரத்து செய்யும் அதிகாரம் எனக்கு இருப்பது போலவும், அந்த அதிகாரத்தை நான் பயன்படுத்தி அவர்களைக் காப்பாற்ற முடியும் என்பது போலவும் பேசப்படுவது சட்டத்தின்படி சரியானது அல்ல. பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் சட்டங்களைத் தெரிந்து கொண்டு வேண்டுமென்றே இவ்வாறு எனக்கு அதிகாரம் இருப்பது போல சொல்லி வருகிறார்களா ? அல்லது சட்டங்களைப் பற்றி எதுவுமே தெரியாமல் முதலமைச்சருக்கு இத்தகைய அதிகாரம் இருப்பதாகக் கூறுகிறார்களா ? என்பது தெரியவில்லை.

எனவே, சட்ட நிலைமை என்ன என்பதை இந்த மாமன்றத்தின் வாயிலாகப் பொதுமக்களுக்குத் தெரிவிப்பது எனது கடமை ஆகும் எனக் கருதுகிறேன்.

உச்ச நீதிமன்றத்தால் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு மேதகு ஆளுநரோ அல்லது மேதகு குடியரசுத் தலைவரோ தான் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் படி மன்னிப்பு அளிக்க முடியும். இவர்களுக்கு மேதகு ஆளுநர் அவர்கள் மன்னிப்பு அளிக்க வேண்டும் எனக் கருதப்பட்டிருந்தால் 2000 ஆம் ஆண்டு அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில்தான் அதற்கான முடிவு எடுத்திருக்க முடியும்; எடுத்திருக்க வேண்டும். அமைச்சரவையின் அறிவுரைப்படி மேதகு ஆளுநர் அவர்களால் பேரறிவாளன் உள்ளிட்ட மூவரின் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டு, பின்னர் மேதகு குடியரசுத் தலைவர் அவர்களாலும் மூவரின் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டு உள்ள இந்த நிலையில், தூக்கு தண்டனையை ரத்து செய்வதற்கோ, நிறுத்தி வைப்பதற்கோ எந்த வித அதிகாரமும் தமிழக முதலமைச்சராகிய எனக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேதகு குடியரசுத் தலைவர் அவர்களால் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில், மீண்டும் அதே பொருள் தொடர்பான கருணை மனுவை மாநில ஆளுநர் பரிசீலிக்க வேண்டும் என மாநில அரசு கோர முடியாது என 1991 ஆம் ஆண்டே மத்திய அரசு தெளிவுரை

வழங்கி உள்ளது. 5.3.1991 நாளிட்ட கடிதத்தில் மத்திய உள்துறை அமைச்சரகம் பின் வருமாறு தெரிவித்துள்ளது:–

"... ...

2. The Government of India, on an examination of the matter, and after taking all relevant constitutional aspects into view, direct in terms of article 257(1) of the Constitution of India that in cases of death sentences where a petition for grant of pardon, etc., has earlier been rejected by the President of India in exercise of his powers under article 72 of the Constitution of India, it would not be open for the Government of a State to seek to exercise similar powers under article 161 in respect of the same case. However, if there is a change of circumstances or if any new material is available, the condemned person himself or any one on his behalf may make a fresh application to the President for reconsideration of the earlier order. Once the President has rejected a mercy petition, all future applications in this behalf should be addressed to and would be dealt with by the President of India."

அதாவது, இப்பொருள் தொடர்பாக அரசமைப்புச் சட்டத்தின் பொருத்தமான தன்மைகளைக் கருத்தில் கொண்டு பரிசீலித்த மத்திய அரசு, மரண தண்டனை குறித்த நிகழ்வுகளில் அதன் தொடர்பான கருணை மனு இந்திய அரசமைப்புச் சட்டம் 72இன் கீழ் குடியரசுத் தலைவருக்கு உள்ள அதிகாரத்தின்படி குடியரசுத் தலைவரால் நிராகரிக்கப்பட்டிருந்தால், அது தொடர்பாக இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவுக்கூறு 161இன்படி உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்த மாநில அரசிற்கு அதிகாரம் இல்லை என்று அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு கூறு 257 (1)இன்படி கட்டளையிடுகிறது.

இருப்பினும் சூழ்நிலைகள் மாறுபட்டிருந்தாலோ அல்லது புதியதாக ஏதாவது ஆதாரம் இருந்தாலோ, மரண தண்டனை பெற்ற

நபரோ அல்லது அவர் சார்பாக வேறு ஒருவரோ, குடியரசுத் தலைவரின் முந்தைய உத்தரவை மறுபரிசீலனை செய்யுமாறு புதியதாக ஒரு மனுவினை குடியரசுத் தலைவருக்குச் சமர்ப்பிக்கலாம். குடியரசுத் தலைவரால் கருணை மனு நிராகரிக்கப்பட்ட பின்னர், அது தொடர்பாக பின்னர் தாக்கல் செய்யப்படும் அனைத்து மனுக்களும் குடியரசுத் தலைவருக்குதான் சமர்ப்பிக்கப்பட வேண்டும்; இது குறித்து நடவடிக்கையை குடியரசுத் தலைவர்தான் எடுப்பார்.

எனவே, பேரறிவாளன் உள்ளிட்ட மூன்று நபர்களின் கருணை மனு மேதகு குடியரசுத் தலைவர் அவர்களால் நிராகரிக்கப்பட்ட நிலையில், இதனை மாற்றுவதற்கு எந்தவித அதிகாரமும் மாநில முதலமைச்சர் என்ற முறையில் எனக்கு இல்லை என்பதை வலியுறுத்தித் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த நிலையில் எனக்கு இதற்கான அதிகாரம் இருக்கிறது என்ற பிரச்சாரத்தை அரசியல் கட்சித் தலைவர்கள் எவரும் மேற்கொள்ள வேண்டாம் என்று இந்தப் பேரவையின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

குடியரசுத் தலைவர் அவர்களால் கருணை மனு நிராகரிக்கப்பட்ட நிலையில், இந்த மூவரின் உயிரைக் காப்பாற்ற தற்கொலை செய்து கொள்வதாக ஒரு கடிதம் எழுதி வைத்து விட்டு, மக்கள் மன்றம் என்ற அமைப்பைச் சேர்ந்த செங்கொடி என்ற இளம்பெண் தற்கொலை செய்து கொண்டதாக வந்துள்ள செய்தி எனக்கு மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்தி உள்ளது. உணர்ச்சி வயப்பட்டு, இது போன்ற செயல்களில் யாரும் ஈடுபட வேண்டாம் என்றும் நான் கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

குறைந்த செலவில் தமிழ்நாடு அரசின் கேபிள் டிவி சேவை

30.08.2011

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கேபிள் டி.வி. இணைப்பின் மூலம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை வழங்குவதில் ஏகபோக நிலை ஏற்படுத்தப்பட்டு, அதன் மூலம் பொதுமக்களிடமிருந்து அதிக அளவில் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்பதையும்; இதன் காரணமாக, இந்தத் தொழிலில் ஏகபோக நிலையை ஏற்படுத்தியவர்கள் அதிக லாபம் பெற்று வருகின்றனர் என்பதையும்; இந்த மாமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் நன்கு அறிவீர்கள்.

முந்தைய அரசால், 2007ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அரசு கேபிள் டி.வி. நிறுவனம் 2008ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் தனது ஒளிபரப்பைத் தொடங்கியது. இந்த நிறுவனம் 50 ஆயிரத்திற்கும் அதிகமான இணைப்புகளை வழங்கியது. பின்னர், முந்தைய ஆட்சியாளர்களின் சுயநலம் காரணமாக, அரசு கேபிள் டி.வி. நிறுவன இணைப்புகளின் எண்ணிக்கை படிப்படியாக குறைந்து, 31.3.2011 அன்றைய நிலவரப்படி, 432 இணைப்புகளாகச் சுருங்கிவிட்டது. அதாவது, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசால் தொடங்கப்பட்ட அரசு கேபிள் டி.வி. நிறுவனம் அந்த அரசாலேயே முடக்கப்பட்டுவிட்டது.

எனவேதான், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில், கேபிள் டி.வி. தொழிலில் உள்ள ஏகபோகத்தைத் தடுத்து அனைவருக்கும் தொழில் செய்ய வாய்ப்பு அளிக்கும் வகையிலும்; அனைத்து மக்களுக்கும் குறைந்த கட்டணத்தில் அரசு கேபிள் டி.வி. இணைப்பு கொடுக்கும் வகையிலும்; நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தமிழக மக்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தோம்.

இந்தத் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் நடவடிக்கைகளைப் புனரமைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எனது அரசு தீவிரமாக மேற்கொண்டது. இந்நிறுவனத்திற்கு ஒரு முழு நேரத் தலைவர் மற்றும் இந்திய ஆட்சிப் பணியைச் சேர்ந்த ஒரு நிர்வாக இயக்குநர் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். ஏற்கெனவே தஞ்சாவூர், திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் வேலூர் ஆகிய நகரங்களில் அமைக்கப்பட்டிருந்த டிஜிட்டல் தலைமுனைகள் பராமரிப்பு செய்யப்பட்டன. மீதமுள்ள 27 மாவட்டங்களில் தனியார் வசம் உள்ள தலைமுனைகள் வாடகைக்கு பெறப்பட்டும்; புதிதாக அனலாக் தொழில்நுட்ப கேபிள் டி.வி. கட்டுப்பாட்டு அறைகள் நிறுவப்பட்டும்; அரசு கேபிள் டி.வி. புனரமைக்கப்பட்டது. மேலும், இந்த நிறுவனம் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

சென்னை நீங்கலாக, அனைத்து மாவட்டங்களிலும் கேபிள் டி.வி. சேவையைத் தொடங்கும் பொருட்டு, உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் மற்றும் எம்.எஸ்.ஓ.க்களை தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தில் சேர அழைப்பு விடுக்கப்பட்டதன் அடிப்படையில், தமிழகத்தில் உள்ள 34,344 கேபிள் ஆப்பரேட்டர்கள் மற்றும் எம்.எஸ்.ஓ.க்கள் மிகுந்த ஆர்வத்துடன் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். இவர்களிடம் 1கோடியே 45 இலட்சம் இணைப்புகள் உள்ளன. 31மாவட்டங்களிலும் நிறுவப்பட்டுள்ள ஒளிபரப்பு மையங்களை 24 மணி நேரமும் பராமரிக்கவும்; ஒளிபரப்பு சேவையை தங்கு தடையின்றி மக்களுக்கு வழங்கவும்; நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. ஒளிபரப்பின் மூலம் கட்டணச் சேனல்கள் உள்பட 90 சேனல்களை ஒளிபரப்பிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன. முதலில் இலவச சேனல்கள் ஒளிபரப்பு செய்யப்படும். கட்டணச் சேனல்களைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் கட்டணச் சேனல்களும் தமிழ் நாடு அரசு கேபிள் டி.வி. மூலம் வழங்கப்படும்.

2.9.2011 முதல் ஒளிபரப்புச் சேவைகள் தொடங்கப்பட்டு குறைந்த செலவில் நிறைவான சேவையைத் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம் தமிழக மக்களுக்கு வழங்கும் என்பதையும்; தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தில் சேர்ந்துள்ள கேபிள் ஆப்பரேட்டர்கள் மூலம் தொலைக்காட்சி சேவையை பெறும் சந்தாதாரர்களிடமிருந்து மாதச் சந்தாவாக 70 ரூபாய் மட்டுமே கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்களால் வசூலிக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஒளிபரப்பை வழங்கும் கேபிள் டி.வி.ஆப்பரேட்டர்களிடமிருந்து கட்டணமாக ஒரு இணைப்பிற்கு 20 ரூபாய் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தால் வசூலிக்கப்படும்.

எனது தலைமையிலான தமிழ்நாடு அரசின் இந்த நடவடிக்கைகளின் மூலம் மிகக் குறைந்த கட்டணத்தில் கேபிள் டி.வி. இணைப்பைத் தமிழக மக்கள் பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் கேபிள் இணைப்பு பெற்றுள்ள ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு சுமார் 70 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை சேமிப்பு ஏற்படும் என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

சென்னையில் உலகத் தரம் வாய்ந்த முதன்மை நிலை விளையாட்டு மையம்

06.09.2011

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இளைஞர்கள் ஒரு நாட்டின் மதிப்பு மிக்க செல்வம். கல்வியில் மேன்மை; விளையாட்டு மற்றும் போட்டிகளில் திறமை; சேவை மனப்பான்மைக்கு வித்திடும் வகையில் சமுதாயத் தேவைகள் குறித்த விழிப்புணர்வு, ஆகியவை ஒரு மாணவனை சிறந்த மனிதனாக உருவாக்க உதவுகின்றன. விளையாட்டுப் போட்டிகள்; தேசிய மாணவர் படை; நாட்டுநலப் பணித் திட்டம் மற்றும் சாரண சாரணியர் இயக்கம் ஆகியவை நற்பண்புகளை இளைஞர்களுக்குப் புகட்டி; அவர்களை நாளைய பொறுப்புள்ள குடிமக்களாக மலரச் செய்கிறது. குறிப்பாக, விளையாட்டு என்பது, ஒருங்கிணைந்து செயல்படுவதன் முக்கியத்துவத்தையும்; நேர்மையாகச் செயல்படும் பக்குவத்தையும் கற்றுத் தருவதுடன்; வெற்றியையும், தோல்வியையும் சமமாக ஏற்றுக் கொள்ளக் கூடிய மனத் திண்மையையும் அளிக்கிறது.

இதனைக் கருத்தில் கொண்டு, விளையாட்டை மேம்படுத்தும் நோக்கத்துடனும்; இளைஞர்களிடையே விளையாட்டு ஆர்வத்தினை வளர்க்கும் நோக்கத்துடனும்; எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது, 1992 ஆம் ஆண்டு, இளைஞர் மற்றும் விளையாட்டுப் பயிற்சித் துறை மற்றும் தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சி வாரியம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, இந்திய விளையாட்டு ஆணையத்திற்கு இணையான, ''தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்'', Sports Development Authority of Tamil Nadu என்ற ஒரு ஆணையம் உருவாக்கப்பட்டது.

உலகத் தரம் வாய்ந்த ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம்; ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கம்; மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டு அரங்கம்; நுங்கம்பாக்கம்

டென்னிஸ் விளையாட்டு அரங்கம்; வேளச்சேரி நீச்சல் வளாகம் ஆகிய விளையாட்டு அரங்குகள் எனது முந்தைய ஆட்சிக் காலத்தில்தான் உருவாக்கப்பட்டன என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். மேலும், விளையாட்டு மேம்பாட்டிற்காக எனது ஆட்சிக் காலத்தில்தான் அதிக நிதி ஒதுக்கப்படுகிறது என்பதையும் இந்த மாமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் நன்கு அறிவீர்கள்.

அந்த வகையில், தற்போது, விளையாட்டு மேம்பாட்டிற்காக எனது தலைமையிலான அரசு செயல்படுத்த இருக்கும் புதிய திட்டங்கள் குறித்து நான் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்ள விழைகிறேன்.

10 வயது முதல் 14 வயதிற்குட்பட்ட, விளையாட்டில் ஆர்வமும், திறமையும் உள்ள 25 மாணவர்கள் மற்றும் 25 மாணவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு; அவர்களுக்கு விளையாட்டில் உயர்தர நுணுக்கங்களுடன் கூடிய விஞ்ஞான ரீதியான பயிற்சி அளிப்பதற்கென சென்னையில் உலகத் தரம் வாய்ந்த முதன்மை நிலை விளையாட்டு மையம், அதாவது, Centre of Excellence in Sports ஒன்று அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தேர்ந்தெடுக்கப்படும் மாணவ, மாணவியர்கள் இந்த மையத்தில் தங்கி சிறப்புப் பயிற்சி பெறுவர். இந்த மையத்தில் தங்கும் மாணவ, மாணவியர்களுக்கு விளையாட்டுச் சீருடை; விளையாட்டு உபகரணங்கள்; நவீன உடற்பயிற்சிக் கூடம்; விஞ்ஞான ரீதியிலான பயிற்சி; வெளிநாடுகளில் போட்டிகளில் கலந்து கொள்ள உதவி மற்றும் பயிற்சி ஆகிய வசதிகள் செய்து தரப்படும். சென்னையில் உள்ள சிறந்த பள்ளிகளில் கல்வி பயிலவும், இந்த மாணவ, மாணவியர்களுக்கு அரசால் உதவி செய்யப்படும். இந்த மையம் அமைப்பதற்காக, அரசுக்கு, 1 கோடி ரூபாய் தொடராச் செலவினமும்; ஆண்டு ஒன்றுக்கு, 70 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் தொடர் செலவினமும் ஏற்படும்.

ஒலிம்பிக் போட்டிகள் மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கம் பெற வாய்ப்புள்ள, திறன் வாய்ந்த சிறந்த விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகளைத் தயார் செய்வதற்கான ஒரு சிறப்புத் திட்டம் எனது அரசால் செயல்படுத்தப்படும். இதன்படி

ஐந்து விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இவர்களை சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கம் பெற தயார் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகள் வெளிநாடுகளில் போட்டிகளில் பங்கேற்கவும்; விஞ்ஞான ரீதியில் சிறப்புப் பயிற்சி பெறவும்; உயர்தர விளையாட்டுக் கருவிகள் மற்றும் பயிற்சிக் கருவிகள் வாங்கிடவும்; சத்தான உணவு பெற்றிடவும்; விளையாட்டு வீரர்களின் பயிற்றுநர்களின் திறனை மேம்படுத்தவும் இந்தத் திட்டம் வகை செய்யும். ஆண்டு ஒன்றுக்கு 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வெல்லும் வீரர்கள் / வீராங்கனைகளை ஊக்கப்படுத்தும் பொருட்டு, அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் 2002 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அவ்வாறு வழங்கப்படும் ஊக்கத் தொகையை மேலும் உயர்த்தி வழங்க தற்போது எனது அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி, ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்லும் தமிழக விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகளுக்கான ஊக்கத் தொகை 1 கோடி ரூபாயில் இருந்து 2 கோடி ரூபாய் ஆகவும்; வெள்ளிப் பதக்கம் வெல்பவர்களுக்கு 50 இலட்சம் ரூபாயில் இருந்து 1 கோடி ரூபாய் ஆகவும்; வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு 25 இலட்சம் ரூபாயில் இருந்து 50 இலட்சம் ரூபாய் ஆகவும் உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல், ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்பவர்களுக்கான ஊக்கத் தொகை 20 இலட்சம் ரூபாயில் இருந்து 50 இலட்சம் ரூபாய் ஆகவும்; வெள்ளிப் பதக்கம் வெல்பவர்களுக்கு 15 இலட்சம் ரூபாயில் இருந்து 30 இலட்சம் ரூபாய் ஆகவும்; வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு 10 இலட்சம் ரூபாயில் இருந்து 20 இலட்சம் ரூபாய் ஆகவும் உயர்த்தி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்பவர்களுக்கான ஊக்கத் தொகை 1 இலட்சம் ரூபாயில் இருந்து 5 இலட்சம் ரூபாய் ஆகவும்; வெள்ளிப் பதக்கம்

வெல்பவர்களுக்கு 50,000 ரூபாயில் இருந்து 3 இலட்சம் ரூபாய் ஆகவும்; வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு 10,000 ரூபாயில் இருந்து 2 இலட்சம் ரூபாய் ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.

தமிழ்நாட்டில், 9 விளையாட்டு விடுதிகளும்; விடுதிகளுடன் கூடிய 3 விளையாட்டுப் பள்ளிகளும் செயல்பட்டு வருகின்றன. இவற்றில், 860 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் தங்கி பயிற்சி பெற்று வருகின்றனர். மேலும் அதிக எண்ணிக்கையிலான விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகளை உருவாக்கும் வகையில், இந்த விளையாட்டு விடுதி மற்றும் பள்ளிகளில் சேர்க்கப்படும் வீரர்கள் / வீராங்கனைகளின் எண்ணிக்கை 860 லிருந்து 1,100 ஆக உயர்த்தப்படும். இதற்காக, அரசுக்கு, 1 கோடி ரூபாய் தொடராச் செலவினமும்; 1 கோடியே 16 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாய் தொடர் செலவினமும் ஏற்படும்.

தமிழ்நாட்டில் தற்போது 9 மாவட்டங்களில் விளையாட்டு விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த விளையாட்டு விடுதிகள் மூலம் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள திறமை மிக்க விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்குத் தீவிர பயிற்சி அளிக்க இயலாத சூழ்நிலை உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு விளையாட்டு விடுதி வீதம், 23 மாவட்டங்களில் விளையாட்டு விடுதிகளை அமைக்க எனது அரசு முடிவு செய்துள்ளது. ஒவ்வொரு விளையாட்டு விடுதியிலும் 60 மாணவ, மாணவியருக்கு உயர்தரப் பயிற்சி அளிக்கப்படும். இவர்களுக்கு உணவு, உறைவிடம் மற்றும் இதர வசதிகள் அனைத்தும் வழங்கப்படும். முதற்கட்டமாக, 5 மாவட்டங்களில் விளையாட்டு விடுதிகள் அமைக்கப்படும். இதற்காக, அரசுக்கு, 3 கோடி ரூபாய் தொடராச் செலவினமும்; 1 கோடியே 15 இலட்சம் ரூபாய் தொடர் செலவினமும் ஏற்படும்.

தமிழ்நாட்டில், விளையாட்டு மேம்பாட்டிற்காக எனது தலைமையிலான அரசு எடுத்து வரும் சீரிய முயற்சிகளால், சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வெல்லும் வகையில், தமிழக விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகளின் திறன் மேம்படும் என்ற நம்பிக்கையை தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். ❋

இரயில்வே கடவுகளில் பாலங்கள், சாலைகள் மேம்பாடு

07.09.2011

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவைப்படும் பல்வேறு உள்கட்டமைப்புகளில் சாலை உள்கட்டமைப்பு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. தொழில், சாலைப் போக்குவரத்து போன்ற முக்கியத் துறைகளின் வேகமான வளர்ச்சிக்கு சாலைக் கட்டமைப்பின் வளர்ச்சி அடிப்படையாக உள்ளது. ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதிலும் சாலை இணைப்பு வசதி முக்கியமான ஒன்றாக அமைகிறது. ஒரு மாநிலத்தில் உள்ள ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பினைக் கொண்டே அம்மாநிலத்தின் வளர்ச்சியைக் கணிக்க இயலும். மாநிலத்தின் தற்போதைய சாலைக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும், வலுப்படுத்துவதற்குமான அவசியம் மற்றும் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ள எனது தலைமையிலான அரசு, சாலை கட்டமைப்பின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

இதன் அடிப்படையில், சென்னை முதல் தூத்துக்குடி வரை உள்ள கிழக்குக் கடற்கரை சாலை, பல்வேறு கட்டங்களில், ஆசிய வங்கி மற்றும் உலக வங்கி நிதியுதவியுடன் அகலப்படுத்தப்பட்டு மேம்பாடு செய்யப்பட்டது. தென் மாவட்டங்களில், குறிப்பாக தூத்துக்குடி, திருச்செந்தூர் மற்றும் கன்னியாகுமரியில் வசிக்கும் மக்கள் நீண்ட நாட்களாக இந்தச் சாலையை கன்னியாகுமரி வரை நீட்டிக்க வேண்டும் என்று கோரிக்கைகள் விடுத்து வருகின்றனர். இந்தச் சாலையினால் ஏற்படும் பயன்களைக் கருத்தில் கொண்டு, தூத்துக்குடி முதல் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அஞ்சுகிராமம் வரையில் உள்ள 113 கிலோமீட்டர் சாலைப் பகுதி 257

கோடி ரூபாய் மதிப்பீட்டில் இருவழித் தடமாக அகலப்படுத்தப்பட்டு மேம்பாடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சாலைப் பணியின் கீழ், 9 புறவழிச் சாலைகள், 3 பெரிய பாலங்கள் மற்றும் 1 ரயில்வே மேம்பாலம் ஆகியவை அமைக்கப்படும்.

இதேபோன்று, சிவகங்கை மற்றும் எடப்பாடி நகரங்களில் போக்குவரத்து நெரிசலால் ஏற்படக் கூடிய பாதிப்பை பெருமளவில் குறைக்கும் வகையில், 10.60 கிலோ மீட்டர் நீளத்தில் சிவகங்கை புறவழிச் சாலையும்; 8.60 கிலோ மீட்டர் நீளத்தில் எடப்பாடி புறவழிச் சாலையும் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக, நடப்பாண்டில், சிவகங்கை நகரத்தில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; எடப்பாடி நகரத்தில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

ரயில்வே கடவுகளில் சாலை மேம்பாலங்கள் / கீழ் பாலங்கள் கட்டுவதால் தடையில்லாப் போக்குவரத்து உறுதி செய்யப்படுவதுடன், விபத்துகளும் தவிர்க்கப்படும். இதனால் பயண நேரமும் வெகுவாகக் குறையும். இதற்காக சாலைகளில் இருப்புப் பாதை குறுக்கிடும் சாலைகளில் ரயில்வே பணித் திட்டம் 2011–12 இன் கீழ், செலவு பகிர்வு அடிப்படையில், 740 கோடி ரூபாய் மதிப்பில், 23 புதிய ரயில்வே மேம்பாலங்கள் மற்றும் கீழ்ப்பாலங்கள் கட்டும் பணிகள் 9 மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும். காஞ்சிபுரம் மாவட்டத்தில் 4 பணிகளும்; திருவள்ளூர் மாவட்டத்தில் 2 பணிகளும்; வேலூர் மாவட்டத்தில் 4 பணிகளும்; விழுப்புரம் மாவட்டத்தில் 3 பணிகளும்; கோயம்புத்தூர் மாவட்டத்தில் 4 பணிகளும்; சேலம் மாவட்டத்தில் 3 பணிகளும்; ராமநாதபுரம், திண்டுக்கல், திருநெல்வேலி மாவட்டங்களில் தலா 1 பணியும் மேற்கொள்ளப்படும்.

பயண நேரத்தையும், தூரத்தையும் வெகுவாகக் குறைக்கும் நோக்குடன், இணைக்கப்படாத ஊர்களை இணைக்கும் வகையில், நபார்டு வங்கி நிதியுதவியுடன், 18 மாவட்டங்களில், 151 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 65 பாலங்கள், நடப்பாண்டில் கட்டப்படும். இந்தத்

திட்டத்தின் கீழ், 8 புதிய பாலங்களும், 57 குறுகிய, பழுதடைந்த பாலங்களுக்குப் பதிலாக புதிய பாலங்களும் கட்டப்படும்.

7 நகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்படும் சாலைகள், பல்வேறு வகையான போக்குவரத்திற்கு உட்படுவதால், விபத்துகள் அதிகரிப்பதுடன், நெரிசலும் கூடுகிறது. ஆகவே, இந்தச் சாலைகளின் பராமரிப்பிற்குத் தனி கவனம் செலுத்த வேண்டி உள்ளது. இதன் முதற்கட்டமாக, சோதனை முறையில், சென்னையில் உள்ள அண்ணா சாலை, ஈ.வெ.ரா. பெரியார் சாலை மற்றும் உள்வட்டச் சாலைகளை முழுமையாக, ஒருங்கிணைந்த முறையில் சர்வதேசத் தரத்திற்கு மேம்படுத்தத் திட்டமிடும் பணி மேற்கொள்ளப்படும்.

பாதசாரிகள், இரு சக்கர வாகனங்கள், சிறு வாகனங்கள், பெரு வாகனங்கள் போன்ற அனைத்துவிதமான போக்குவரத்து, பல்வேறு போக்குவரத்துகளுக்கு இடையிலான மாறுதல்கள், வாகன நிறுத்த வசதிகள், பாதுகாப்பு அம்சங்கள், சாலைக் குறியீடு மற்றும் சமிக்ஞைகள்; பிற துறை சார்ந்த சேவைக் குழாய் வசதிகள்; மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகள்; சுற்றுப் புறத்தைப் பசுமையாக்குதலுக்கான வழிமுறைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இது திட்டமிடப்படும். இந்தத் திட்டம் விரைவில் தயாரிக்கப்பட்டு, இச்சாலைகள் மேம்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

திருமழிசை துணைக்கோள் நகரம் அமைக்கும் திட்டம்

08.09.2011

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை மாநகரம் வெகு வேகமாக விரிவடைந்து வருகிறது. சென்னையில் வீட்டு மனை மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்புகளின் விலை பெருமளவில் உயர்ந்து உள்ளது. எனவே, ஏழை, எளிய, நடுத்தர மக்கள் தங்களுக்குச் சொந்தமாக வீடு ஒன்றை வாங்குவது என்பது கடினமானதாக உள்ளது. இந்த நிலையைக் கருத்தில் கொண்டு, எல்லா தரப்பு மக்களுக்கும் வீடுகள் கிடைக்கும் வகையில் பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்த உள்ளது.

அந்த வகையில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் செயல்படுத்தப்பட உள்ள புதிய வீட்டு வசதித் திட்டங்கள் குறித்து இந்த மாமன்றத்தில் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

சென்னை–பெங்களூரு நெடுஞ்சாலையில் உள்ள திருமழிசை அருகே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் 311.05 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த நிலத்திற்கு முறையான அணுகு சாலை அமைப்பதற்குத் தேவைப்படும் 12.87 ஏக்கர் நிலம், நிலத்தின் உரிமையாளர்களிடம் உரிய கலந்தாலோசனை செய்து பெறப்பட உள்ளது. மேற்கண்ட நிலம் பெறப்பட்ட பின், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் சார்பில் 2,160 கோடி ரூபாய் செலவில், 311.05 ஏக்கர் பரப்பளவில், செம்பரம்பாக்கம், குத்தாம்பாக்கம், பர்வதராஜபுரம், நரசிங்கபுரம் மற்றும் வெள்ளவேடு கிராமங்களை உள்ளடக்கிய "திருமழிசை துணைக்கோள் நகரம்", அதாவது Thirumazhisai Satellite Township அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் துணைக்கோள் நகரம், குடிநீர் வசதி, கழிவுநீர் அகற்றும் வசதி, சாலைகள், மழைநீர் வடிகால், தெரு

விளக்குகள், சமுதாயக் கூடம், பள்ளி, மருத்துவமனை, பேருந்து நிலையம், பூங்கா, விளையாட்டுத் திடல் போன்ற அனைத்து அடிப்படை வசதிகளும் கொண்டு அமைக்கப்படும்.

இந்த நகரத்தில் 12,000 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு, பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர், குறைந்த மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினர் ஆகியோர் எளிதில் வாங்கக் கூடிய விலையில் வழங்கப்படும்.

சென்னை அசோக் பில்லர் அருகில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான 3.73 ஏக்கர் நிலப்பரப்பில், வாரியத்திற்குத் தேவையான மர உற்பத்தித் தொழிற்சாலை அமைக்கப் பெற்று, பின்னாளில் அந்தத் தொழிற்சாலை பயன்பாடு இன்றி போனதால், இந்த இடம் கடந்த சுமார் 15 ஆண்டுகளாக எவ்வித பயன்பாட்டிற்கும் உட்படாமல் இருந்து வந்தது.

சென்னை மாநகரத்தில் வீட்டுத் தேவையைக் கருத்தில் கொண்டு, காலியாக உள்ள இந்த 3.73 ஏக்கர் நிலப் பரப்பில், 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 554 குடியிருப்புகள் கொண்ட பன்னடுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை கோயம்பேடு தெற்காசிய விளையாட்டுக் கூட்டமைப்பு கிராமத்தில் 5.6 ஏக்கர் காலி நிலம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் வசம் உள்ளது. இந்த நிலம், சென்னைப் புறநகர் பேருந்து நிலையத்தை ஒட்டியும்; உள்வட்டச் சாலை முகப்பிலும் உள்ளது. தற்போது, இந்தக் காலி இடத்தில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் 116 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 4.66 இலட்சம் சதுர அடி பரப்பளவில், பன்னடுக்கு வணிக வளாகம் ஒன்று கட்டப்படும். மேலும், 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 1.44 இலட்சம் சதுர அடி பரப்பளவில் 120 குடியிருப்புகள் கட்டப்படும்.

2011ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் பொன்விழா ஆண்டு ஆகும். பொன்விழா ஆண்டை முன்னிட்டு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் திட்டங்களின், மனை / வீடு /

அடுக்குமாடிக் குடியிருப்பு ஒதுக்கீட்டில், மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் 1 விழுக்காடு இட ஒதுக்கீட்டை 3 விழுக்காடாக உயர்த்தி வழங்க எனது தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் வசம் சென்னை, நந்தனத்தில் 15.78 மனை நிலம் உள்ளது. நந்தனத்தில் அலுவலகக் கட்டடங்களுக்கான தேவை உள்ளது. எனவே, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் வசம் தற்போது காலியாக உள்ள இடத்தில், சுமார் 100 கோடி ரூபாய் செலவில், பசுமைத் திட்ட அம்சங்களுடன், 2 இலட்சம் சதுர அடி பரப்பளவில், 17 மாடிகள் கொண்ட அலுவலக வளாகம் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கட்டடத்தை அலுவலகப் பயன்பாட்டிற்காக வாடகைக்கு விடுவதன் மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட குடியிருப்புகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மன நிறைவுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

மாண்புமிகு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்

10.09.2011

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உண்டி கொடுத்து, உயிர் கொடுக்கும் உழவுத் தொழிலே உலகத்தின் உன்னதத் தொழில் என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

கடவுள் என்னும் முதலாளி
கண்டெடுத்த தொழிலாளி விவசாயி !
முன்னேற்றப் பாதையிலே மனதை வைத்து
முழு மூச்சாய் அதற்காகத் தினம் உழைத்து
மண்ணிலே முத்தெடுத்துப் பிறர் வாழ
வழங்கும் குணமுடையோன் விவசாயி

என்று இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம் ஜி ஆர் அவர்கள் பாடியபடி, நீரிலே முத்தெடுக்காமல் நிலத்திலே முத்தெடுத்து ஊருக்கு உணவூட்டும் உன்னதத் தொழிலாளிதான் விவசாயி.

பயிர் வளர்த்து, உயிர் வளர்க்கும் விவசாயப் பெருமக்களின் வாழ்வு வளம் பெற எனது தலைமையிலான அரசு பல முன்னோடித் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், தமிழகத்தில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கும், சிறு / குறு விவசாயிகளுக்கும், வாழ்க்கை முழுவதும் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு, கருவறை முதல் கல்லறை வரை பயன் அளிக்கக் கூடிய "தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்" என்ற சமூகப் பாதுகாப்புத் திட்டம், எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், 15.8.2005 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால், அதன் பின்னர், 2006 ஆம் ஆண்டு, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு, இந்தத் திட்டத்திற்கு

மாற்றாக, தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டம் என்ற ஒரு சட்டத்தை இயற்றியது.

இந்த நிலையில், இந்தத் திட்டத்தின் கீழ், ஏதாவது ஒரு இனத்தின் கீழ் உதவித்தொகையின் அளவு மாற்றம் செய்யப்பட வேண்டும் என்றால் கூட, சட்டமன்றத்தைக் கூட்டி, இந்தச் சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வந்தாக வேண்டும். இவ்வாறு, 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டம் நடைமுறைச் சிக்கல்கள் நிறைந்ததாக இருந்ததால், அந்தச் சட்டத்தை ரத்து செய்வதற்காக, 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) நீக்கச் சட்டம் இந்த மாமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. ஆளுநரின் ஒப்புதல் பெறப்பட்டு, இதற்கான அரசு அறிவிக்கை 27.8.2011 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.

தமிழ்நாட்டில், விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு வாழ்நாள் முழுவதும் உறுதுணையாக இருக்கும் வகையில், புதிய, விரிவுபடுத்தப்பட்ட, சமூகப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றை எனது தலைமையிலான அரசு செயல்படுத்த முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் புதிய திட்டம் ''முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்'' என்று அழைக்கப்படும். இந்தத் திட்டத்தின் கீழ்,

(அ) 2.5 ஏக்கருக்கு மேற்படாத நன்செய் நிலம் அல்லது 5 ஏக்கருக்கு மேற்படாத புன்செய் நிலம் முதலியவற்றை உடைமையாகக் கொண்டு, அந்த நிலத்தில் நேரடியாகப் பயிர் செய்யும், 18 வயது முதல் 65 வயதிற்கு உட்பட்ட குறு மற்றும் சிறு விவசாயிகள்; மற்றும்

(ஆ) விவசாயம் சார்ந்த தொழிலில் ஊதியத்திற்காகவோ அல்லது குத்தகை அடிப்படையிலோ ஈடுபட்டுள்ள 18 முதல் 65 வயது

வரை உள்ள அனைத்து விவசாய குத்தகைதாரர்கள் / தொழிலாளர்கள்; மற்றும்

(இ) இவர்களைச் சார்ந்து வாழும் குடும்ப உறுப்பினர்கள் ஆகியோர் பயன் அடைவர்.

திட்ட வழிமுறைகள்

இத்திட்டத்தின் கீழ், ஒரு குடும்பத்தில், விவசாயத் தொழிலில் ஈடுபடும் கணவன் மற்றும் மனைவி இருவருக்கும் பண்பேறிய சிவப்பு வண்ணத்திலும், அதாவது Maroon வண்ணத்திலும், அவர்களைச் சார்ந்து வாழும் பிற குடும்ப உறுப்பினர்களுக்கு சாம்பல் நிறத்திலும் அடையாள அட்டைகள் வழங்கப்படும். இவ்வாறு அடையாள அட்டை பெறுபவர்கள் அனைவரும் அரசின் திட்ட உதவிகளைப் பெறத் தகுதி உடையவர்கள் ஆவர். இதுவரை குடும்பத் தலைவருக்கு மட்டுமே அடையாள அட்டை வழங்கப்பட்டு வந்த நிலை மாறி இந்தப் புதிய உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் அடையாள அட்டை வழங்கப்படுவதால், எவ்வித விடுபடுதலும் இன்றி, குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் திட்ட உதவிகளைப் பெற வழிவகை ஏற்படும்.

கல்வி உதவி

விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் குடும்ப உறுப்பினர்கள் கல்லூரிக் கல்வி உள்ளிட்ட உயர்கல்வி கற்பதை ஊக்குவிக்கும் வகையில், இவர்கள் வேறு எந்தக் கல்வி உதவித் திட்டத்தின் கீழ் உதவி பெற்றாலும், இந்தத் திட்டத்தின் கீழும் கல்வி உதவித்தொகை பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. பல்வேறு உயர்கல்வி படிப்புகளுக்கு கீழ்க்கண்டவாறு உதவித் தொகைகள் வழங்கப்படும்:–

- தொழிற்பயிற்சி நிறுவனம் (ITI), பல்தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம் (Polytechnic) மற்றும் இதர பட்டயப் படிப்புகளுக்கு 1,250 ரூபாய் முதல் 1,950 ரூபாய் வரை ஆண்டு ஒன்றுக்குக் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும்.

- இளங்கலை பட்டப் படிப்புகளுக்கு 1,750 ரூபாய் முதல் 2,500 ரூபாய் வரை ஆண்டு ஒன்றுக்குக் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும்.

- முதுகலை பட்டப் படிப்புகளுக்கு 2,250 ரூபாய் முதல் 3,750 ரூபாய் வரை ஆண்டு ஒன்றுக்குக் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும்.

- சட்டம், பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை அறிவியல் போன்ற தொழிற்கல்வி படிப்புகளுக்கு இளங்கலையில் 2,250 ரூபாய் முதல் 4,750 ரூபாய் வரையிலும், முதுகலையில் 4,250 ரூபாய் முதல் 6,750 ரூபாய் வரையிலும் ஆண்டு ஒன்றுக்குக் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும்.

2006 ஆம் ஆண்டு, முந்தைய தி.மு.க. அரசால் கொண்டு வரப்பட்ட சட்டத்தில், வேறு ஏதேனும் மத்திய அல்லது மாநில அரசு திட்டங்களின் கீழ் கல்வி உதவித் தொகை பெறப்பட்டால், இந்தத் திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகை பெற முடியாது என்ற நிலைமை தற்போது மாற்றப்பட்டு, வேறு திட்டங்களின் கீழ் கல்வி உதவித் தொகை பெற்றாலும், இந்தத் திட்டத்திலும் கல்வி உதவித்தொகை பெற இயலும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமண உதவி

சமூகநலத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திருமண உதவித் திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெறத் தகுதி உள்ளவர்கள் அத்திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெறுவர். அவ்வாறு திருமண உதவித் திட்டங்களின் கீழ் உதவித் தொகை பெற இயலாதவர்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் உதவித்தொகை வழங்கப்படும். இந்தத் திட்டத்தின் கீழ் திருமண உதவித்தொகையாக, ஆணுக்கு 8,000 ரூபாயும், பெண்ணுக்கு 10,000 ரூபாயும் வழங்கப்படும்.

மகப்பேறு உதவித்தொகை

இத்திட்டத்தில் பதிவு பெற்ற உறுப்பினருக்குச் சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறையால் மகப்பேறு உதவிக்கென செயல்படுத்தப்படும் திட்டத்தின் மூலம் இந்த உதவித்தொகை வழங்கப்படும். மகப்பேறு உதவித்தொகையினை எளிதாகப் பெறும் வகையில் தனி வட்டாட்சியர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) மூலம் தேவையான சான்றிதழ்களை ஒருமுகப்படுத்தி வழங்க இத்திட்டத்தின் கீழ் வசதிகள் செய்து தரப்படும்.

முதியோர் ஓய்வூதியம்

60 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் மாதம் ஒன்றுக்கு 1,000 ரூபாய் ஓய்வூதியமாகப் பெறுவர்.

இயற்கை மரணம் மற்றும் விபத்து

முந்தைய தி.மு.க. அரசால் இயற்றப்பட்ட சட்டத்தின் கீழ், இயற்கை மரணம் மற்றும் விபத்து போன்ற நிகழ்வுகளில் குடும்பத் தலைவருக்குப் பாதிப்பு ஏற்பட்டால் மட்டுமே நிவாரணம் வழங்கப்பட்டது. அது தற்போது மாற்றப்பட்டு, ஒரு குடும்பத்தில் கணவன் மற்றும் மனைவி இருவரும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள நிலையில், இவர்கள் இருவருக்கும் தனித் தனியே அடையாள அட்டைகள் வழங்கப்படுவதால், இந்த இருவரில் யாருக்கு பாதிப்பு ஏற்பட்டாலும் நிவாரணம் வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தின் உறுப்பினரோ அல்லது அவரைச் சார்ந்தவரோ இறக்க நேரிட்டால், அந்தக் குடும்பத்திற்கு ஈமச் சடங்கிற்கான உதவித்தொகை உடனடியாக வழங்கப்படும். ஈமச் சடங்கு நிவாரணம் பெற இறப்புச் சான்றிதழ் பெற வேண்டும் என்ற நிபந்தனை நீக்கப்படுவதுடன், குடும்பத் தலைவர் இறந்தால் மட்டுமே ஈமச் சடங்கு நிவாரணம் வழங்கப்படும் என்ற நிபந்தனையும் தற்போது மாற்றப்பட்டுள்ளது என்பதை மன நிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திட்டச் செயலாக்கம்

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள ''முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்'' மாவட்ட அளவில் ஆட்சித் தலைவர்கள் மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகள் மூலமாகச் செயல்படுத்தப்படும். திட்டச் செயல்பாட்டினை மேற்பார்வை இடுவதற்கு அரசு அளவில் ஒரு உயர்நிலைக் குழு அமைக்கப்படும்.

''முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்'' என்ற இந்த விரிவுபடுத்தப்பட்ட புதிய திட்டம், தமிழக விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு மிகுந்த பயன் அளிக்கக்கூடிய திட்டமாக இருக்கும் என்பதை மன நிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

மருத்துவர்கள், மருத்துவப் பணியாளர்களை தேர்வு செய்ய தனிவாரியம்

10.09.2011

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற பழமொழியைக் கருத்தில் கொண்டு, இயன்ற வரை நோய் இல்லா வாழ்வை மக்கள் பெறுவதை உறுதி செய்யும் வகையில் பல்வேறு முன்னோடித் திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகிறது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். நோயை முற்றிலுமாகத் தவிர்ப்பது என்பது இயலாத ஒன்று ஆகும். எனவேதான், நோய் ஏற்படும்போது, அந்த நோயை நீக்குவதற்கான மருத்துவ வசதிகளை மக்களுக்கு அளித்து, அனைவருக்கும் நோயற்ற நல்வாழ்வு என்ற உயரிய இலக்குடன், சுகாதாரச் சேவைகளை அளிக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், மக்கள் நல்வாழ்வுத் துறையால் செயல்படுத்தப்பட இருக்கும் சில புதிய திட்டங்கள் குறித்து இந்த மாமன்றத்தில் நான் தற்போது எடுத்துரைக்க விழைகிறேன்.

தற்போது மாநிலத்தில் உள்ள 1,589 ஆரம்ப சுகாதார நிலையங்களில், 1,539 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 24 மணி நேரமும் சுகாதாரச் சேவை அளிக்கக் கூடிய வகையில் செயல்பட்டு வருகின்றன. எஞ்சியுள்ள 50 ஆரம்ப சுகாதாரச் நிலையங்களும் 24 மணி நேரமும் செயல்படும் வகையில், விரைவில் மாற்றி அமைக்கப்படும். தரம் உயர்த்தப்பட்ட 283 ஆரம்ப சுகாதார நிலையங்களில், முன்பே நிர்ணயம் செய்யப்பட்ட சிசேரியன் அறுவை சிகிச்சை, அதாவது, Elective Cesarean செய்வதற்கான வசதிகள் உள்ளன. திடீரென்று, அவசரமாக

சிசேரியன் அறுவை சிகிச்சை செய்யும் வசதி கிராமப்புரங்களில் இல்லை. இதனை நீக்கும் வகையில், முதற்கட்டமாக 42 தாய்–சேய் நல மையங்கள் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவசரகால சிசேரியன் அறுவை சிகிச்சை மற்றும் ரத்தம் செலுத்தும் வசதியுடன் 24 மணி நேரமும் இந்தத் தாய்–சேய் நல மையங்கள் செயல்படும். சுகாதார மாவட்டம் ஒவ்வொன்றுக்கும் ஒரு மையம் வீதம் இந்த 42 மையங்கள் அமைக்கப்படும்.

மேலும், தொலை தூரத்தில், எளிதில் சென்றடைய முடியாத நிலையில் உள்ள 31 துணை சுகாதார மையங்கள், முதல்நிலை தாய்–சேய் நல மையங்களாகத் தரம் உயர்த்தப்படும். முழு நேர சேவை அளிக்கும் வகையில், இந்த மையங்கள் ஒவ்வொன்றிலும், 3 செவிலியர்கள் பணி அமர்த்தப்படுவர். இவ்வாறு, 42 தாய்–சேய் நல மையங்களை அமைப்பதற்கும், 31 துணை சுகாதார மையங்களை தரம் உயர்த்துவதற்கும், 19 கோடி ரூபாய் செலவு ஏற்படும்.

கிராமப்புரப் பெண்கள் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை கொண்ட எனது அரசு, கிராமப்புரப் பெண்களின் நலனுக்காக புதிய திட்டம் ஒன்றைச் செயல்படுத்த முடிவெடுத்துள்ளது. கிராமப்புரப் பெண்கள் இடையே ஆரோக்கியமான நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தவும், புற்று நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் வகையில் பரிசோதனை மேற்கொள்ளவும், இந்தத் திட்டம் வழி வகுக்கும். 2 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

மலைப் பகுதிகளில் 20,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் எனவும், சமவெளிப் பகுதிகளில் 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் எனவும் மத்திய அரசால் வரன்முறை செய்யப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில், இந்த ஆண்டு, 12 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் 20 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்படும். மேலும், மருத்துவ வசதி குறைவாக உள்ள 38 வட்டாரங்களில் உள்ள

38 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 30 படுக்கை வசதி, ஸ்கேன் வசதி மற்றும் அறுவை அரங்குகள் ஆகிய வசதிகளுடன், 39 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

இன்றைய நவீன யுகத்தில் அனைத்துத் துறைகளிலும் கணினியின் பயன்பாடு நீக்கமற நிறைந்துள்ளது. மருத்துவத் துறையிலும் கணினிப் பயன்பாடு மிகவும் இன்றியமையாதது ஆகும். நோயாளிகள் பல்வேறு துறைகளைச் சார்ந்த மருத்துவ வல்லுநர்களுடன் கணினி மூலம் நேரடியாகத் தொடர்பு கொண்டு, நோய்கள் குறித்த சந்தேகங்களைத் தீர்த்துக் கொண்டு சிகிச்சை பெறும் வகையில், கணினி வழி உரையாடும் வசதியை நான் எனது முந்தைய ஆட்சி காலத்திலேயே ஏற்படுத்தினேன். தொலைதூர கிராமங்களில் வசிக்கும் ஏழை, எளிய மக்களுக்கு உயர் மருத்துவ ஆலோசனை கிடைக்கும் வகையில், 5 கோடி ரூபாய் செலவில், ஆரம்ப சுகாதார நிலையங்களில் Tele Medicine வசதிகள் ஏற்படுத்தப்படும்.

தமிழக மக்கள் அனைவரும் நோயற்ற நல்வாழ்வு வாழ, நல்ல பல திட்டங்களை நிறைவேற்றி வரும் அதே நேரத்தில், இந்தத் திட்டங்களின் பயன்கள் மக்களை முழுமையாகச் சென்றடைய வேண்டும் எனில், துணை சுகாதார மையங்கள் முதல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் வரை தேவையான மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் இருக்க வேண்டியது அவசியம் ஆகும்.

மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் ஓய்வு பெறுவதாலோ அல்லது பணியை விட்டு நீங்குவதாலோ ஏற்படும் காலி இடங்கள் மற்றும் புதியதாக தோற்றுவிக்கப்படும் பணி இடங்கள் ஆகியவை உடனுக்குடன் நிரப்பப்பட வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். மக்கள் நல்வாழ்வுத் துறையில், மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவம் சார்ந்த பணியாளர்கள், மருத்துவமனை அடிப்படைப் பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் போன்ற பல்வேறு நிலைகளில் சுமார் 91,600 பணியிடங்கள் உள்ளன. இவற்றில், தற்போது 15,600–க்கும் மேற்பட்ட பணியிடங்கள் காலியாக உள்ளன. இத்தகைய காலிப்

பணியிடங்களுக்கு பல்வேறு காரணங்கள் இருந்தாலும், ஏற்படப் போகும் காலிப் பணியிடங்களை முன் கூட்டியே கணக்கிட்டு, பணியாளர்களை விரைந்து தேர்ந்தெடுப்பதற்கான வழிமுறை இல்லாததுதான் அதற்கு முக்கியமான காரணம் ஆகும்.

இந்தக் குறைபாட்டை நீக்கும் வகையில், இந்தியாவிலேயே முதல் முறையாக, மருத்துவத் துறைப் பணியாளர்களைத் தேர்வு செய்வதற்கு என்று, "மருத்துவத் துறைப் பணியாளர் தேர்வு வாரியம்", அதாவது, Medical Services Recruitment Board என்ற ஒரு அமைப்பு ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையில் இந்திய ஆட்சிப் பணியில் உள்ள கூடுதல் செயலாளர் இந்தத் தேர்வு வாரியத்தின் தலைவராக இருப்பார். மருத்துவத் துறை இணை இயக்குநர் நிலையில் உள்ள ஒரு அலுவலர் உறுப்பினராகவும்; மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் உள்ள ஒரு அலுவலர் உறுப்பினர்–செயலாளராகவும் இருப்பர். வாரியத்திற்குத் தேவையான இதரப் பணியாளர்களும் நியமிக்கப்படுவர். தேவைப்படும் பணியாளர்களைத் தற்போது நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி இந்த மருத்துவத் துறைப் பணியாளர் வாரியம் தேர்வு செய்யும். தற்காலிகமாகத் தேர்ந்தெடுக்கப்படும் மருத்துவர்களையும் இந்த வாரியம் தேர்வு செய்யும். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய விதிமுறைகளில் தக்க திருத்தம் மேற்கொண்ட பின், மருத்துவர்களுக்கான நிரந்தரப் பணியிடங்களும், இந்தத் தேர்வு வாரியத்தின் மூலமே நிரப்பப்படும்.

மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களைத் தேர்வு செய்ய இது போன்ற தனி வாரியம் அமைக்கப்படுவதால், துணைச் சுகாதார மையங்கள் முதல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் வரை உள்ள மருத்துவமனைகளில் ஏற்படும் காலியிடங்கள் உடனுக்குடன் நிரப்பப்படும் என்பதை மன நிறைவுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

சத்துணவு, அங்கன்வாடி மையங்களில் பணியிடங்களை நிரப்புதல்

12.09.2011

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நம் நாடு எனும் தோட்டத்திலே
நாளை மலரும் முல்லைகளே

- என்று குழந்தைகளைப் பற்றி பாடினார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். இன்றைய குழந்தைகளே நாளைய சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரங்கள் ஆவர். சுகாதாரம், பாதுகாப்பு, கல்வி ஆகியவற்றை எவ்வித இடர்ப்பாடும் இன்றிப் பெற்று மகிழ்ச்சி நிறைந்த சூழ்நிலையில் வளரும் குழந்தைகளே வளமான மற்றும் வலிமையான தலைமுறையினராக உருவாகின்றனர்.

தமிழகத்தில் உள்ள, 6 மாதம் முதல் 6 வயது வரையிலான குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், மற்றும் வளர் இளம் பெண்கள் ஆகியோர் இடையே காணப்படும் ஊட்டச்சத்துக் குறைபாட்டைக் கண்டறிந்து, அதனை அகற்றி, ஊட்டச்சத்து குறைபாடு அற்ற மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றும் வகையில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் உள்ள அங்கன்வாடி மையங்கள் மூலம் பல்வேறு பணிகளை மேற்கொள்ள 2002 ஆம் ஆண்டு எனது அரசால் செயல் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 2003 ஆம் ஆண்டு, ஊட்டச்சத்துக் குறைபாடு அற்ற தமிழகத்தை உருவாக்கும் வகையில், ஒரு புதிய கொள்கை வெளியிடப்பட்டது.

இதன் அடிப்படையில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் பல உதவிகள் வழங்கப்படுகின்றன.

- 6 மாதம் முதல் 36 மாதம் முடிய உள்ள குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளர் இளம் பெண்களுக்கு இணை உணவு வழங்குதல்
- 2 வயது முதல் 6 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு சத்துணவு அளித்தல்
- முதியோர் உதவித் தொகை பெறுபவர்களுக்கு மதிய உணவு அளித்தல்
- சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளுதல்
- உயர் மருத்துவ சிகிச்சைக்காகப் பரிந்துரைத்தல்
- பள்ளிசாரா முன்பருவக் கல்வி அளித்தல்
- ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி அளித்தல்
- வளரிளம் பெண்களுக்கு ஊட்டச்சத்து மற்றும் வாழ்க்கைக் கல்வி வழங்குதல்

ஆகியவை இந்தத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ், 6 மாதம் முதல் 6 வயது வரையிலான குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு வருடத்தில் 300 நாட்களுக்கு செரிமானத் தன்மை - Amylase நிறைந்த இணை உணவு வழங்கப்படுகிறது. நடப்பாண்டில், பல்வேறு நிலையில் உள்ள பயனாளிகளுக்கு இணை உணவு வழங்க 190 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், 2 முதல் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும், முதியோர் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும், புரதச் சத்து மிக்க, சத்தான, சூடான, மதிய உணவு அனைத்து மையங்களிலும் வருடத்தில் 365 நாட்களுக்கும் வழங்கப்படுகிறது. இந்தியாவிலேயே,

தமிழகத்தில் மட்டும் தான், ஓய்வூதியம் பெறும் முதியோர்களுக்கு சமைக்கப்பட்ட சூடான, மதிய உணவு குழந்தைகள் மையத்தில் வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

பிறந்தது முதல் 6 வயது வரையுள்ள குழந்தைகள், வளர் இளம் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் ஓய்வூதியம் பெறும் முதியோர் உள்ளிட்ட 28 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயன்பெறும் குழந்தைகள் மையங்களின் பாதுகாப்பினை உறுதி செய்யவும்; மையங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும்;பராமரிப்புப்பணிகளை மேற்கொள்ளவும்; எனது அரசு முடிவு செய்துள்ளது. அந்த வகையில், சொந்தக் கட்டடங்களில் செயல்படும் சிறிய பழுதுகளுடன் உள்ள 10,372 மையங்கள் மற்றும் பெரிய பழுதுகளுடன் உள்ள 7,449 மையங்கள், ஆக, பழுதுபட்டுள்ள மொத்தம் 17,821 மையங்களும் இந்த ஆண்டே 47 கோடியே, 61 இலட்சம் ரூபாய் செலவில் பழுது நீக்கி சீரமைக்கப்படும்.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் இயங்கும் குழந்தைகள் மையங்களுக்கு, ஆர்வமுடன் குழந்தைகள் வருவதற்கும்; விளையாட்டு சாதனங்கள் வாயிலாக முன்பருவக் கல்வி பயில்வதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன. இம்மையங்களில் கோடைக் காலத்தில் வெப்பத்தினாலும்; மழை மற்றும் குளிர் காலங்களில் போதிய வெளிச்சம் இன்மையாலும் குழந்தைகள் அவதியுறாமல் இருக்கும் வகையில், மின்விசிறி மற்றும் மின் விளக்கு வசதி ஏற்படுத்தித் தர எனது அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி, மின்வசதி இல்லாத 45,345 குழந்தைகள் மையங்களில், 27 கோடியே, 21 இலட்சம் ரூபாய் செலவில், உட்புற மின் கட்டமைப்பு வசதி ஏற்படுத்தப்படுவதுடன் மின் விசிறி மற்றும் மின் விளக்கு ஆகியவை பொருத்தப்படும்.

சுற்றுச்சூழல் மாசு காரணமாக குழந்தைகளுக்கு நோய் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில், சுற்றுப்புற சுகாதாரத்தைப் பேணவும்; குழந்தைகளிடம் இளம் வயதிலேயே கழிப்பறையைப் பயன்படுத்தும் பழக்கத்தை ஊக்குவிக்கவும்; குழந்தைகள்

மையங்களில் குழந்தை நேயக் கழிப்பிடங்கள் அமைக்கப்படும். இக்கழிப்பிடங்கள், குழந்தைகள் பயன்படுத்துவதற்கு ஏதுவான வகையில் வடிவமைக்கப்படும். இதற்காக, இந்த ஆண்டு 23 கோடியே 78 இலட்சம் ரூபாய் செலவில் 29,727 குழந்தைகள் மையங்களில் குழந்தைகள் நேயக் கழிப்பிடங்கள் அமைக்கப்படும்.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் கீழ் இயங்கும் சத்துணவு மையங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் 28,596 பணியிடங்கள் காலியாக உள்ளன. இந்தக் காலிப் பணியிடங்கள் அனைத்தும் விரைவில் நிரப்பப்படும்.

இவ்வாறு, எனது அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளாலும்; செயல்படுத்தி வரும் திட்டங்களாலும்; தாய், சேய் நலம் காப்பதில் தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம் மணிமண்டபங்கள் மற்றும் மொழிப்போர்த் தியாகி சிதம்பரநாதன் சிலை அமைத்தல்

12.09.2011

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய தியாகிகளையும்; சமுதாய மேம்பாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களையும் போற்றிப் பெருமைப்படுத்த வேண்டியதும்; அவர்களது பெருமைகளை எதிர்கால தலைமுறையினர் அறிந்து பின்பற்றும் வகையில் நினைவுச் சின்னங்களை எழுப்பி மரியாதை செய்ய வேண்டியதும் ஒரு நல்லரசின் கடமையாகும்.

தமிழ்ச் சமுதாயத்திற்கு வாழ்வளிக்க தங்கள் வாழ்க்கையை தியாகம் செய்த பெருமக்களுக்குப் பெருமை சேர்ப்பதில் எனது அரசு மிகுந்த முன்னுரிமை கொடுத்து செயல்படுகிறது.

சிந்தனைச் சிற்பி என்று மக்களால் போற்றப்படும் திரு. சிங்காரவேலர் அவர்கள், மயிலாப்பூர் மீனவர் கிராமத்தில் 18.2.1860இல் பிறந்து, கல்வி பல கற்று சிறந்த வழக்குரைஞராகத் திகழ்ந்தவர். அந்நியருக்கு எதிராக அண்ணல் காந்தியடிகள் ஒத்துழையாமைப் போராட்டத்தைத் தொடங்கியபோது தனது வழக்குரைஞர் அங்கியைத் தீயிட்டுக் கொளுத்தி விட்டுத் தீவிரமான விடுதலைப் போராட்ட வீரராக மாறியவர். கான்பூரில் நடைபெற்ற பொதுவுடைமைக் கட்சியின் முதல் மாநாட்டிற்கு தலைமையேற்று, தன்னைப் பெற்றெடுத்த தமிழகத்திற்கும், தான் பிறந்த மீனவ இனத்திற்கும் தனிப் பெருமை சேர்த்தவர். சிந்தனையாலும் செயலாலும் அல்லும் பகலும் ஏழைத் தொழிலாளர் வர்க்கத்திற்குப் பாடுபட்ட உழைப்பாளர் சிந்தனைச் சிற்பி திரு. சிங்காரவேலர் அவர்கள்.

சுயமரியாதைச் சுடரொளி திரு. ஜீவரத்தினம் அவர்கள் 11.11.1911இல் ஏழை மீனவர் குடும்பத்தில் பிறந்து, தமிழையும் ஆங்கிலத்தையும் சிறப்பாகக் கற்று சொற்பொழிவு ஆற்றுவதில் வல்லவராகத் திகழ்ந்தவர். திராவிட இயக்கத்தின் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்த திரு. ஜீவரத்தினம், தமிழர் நலனிலும், மீனவர் நலனிலும் மிகுந்த அக்கறை கொண்டு சமுதாய மாற்றத்தைக் காண கடுமையாக உழைத்தவர். பேரறிஞர் அண்ணாவின் அன்பையும், புரட்சித் தலைவர் எம் ஜி ஆர் அவர்களின் நம்பிக்கையையும் பெற்றுத் திகழ்ந்தவர். பழைமையை விடுத்துப் புதுமையை ஏற்று சமுதாய மாற்றத்தைக் காண உழைத்தவர்.

ஏழைத் தொழிலாளர்களுக்காகப் பாடுபட்ட ஓய்வறியாத் தொண்டரும், சிந்தனைச் சிற்பியுமான திரு. சிங்காரவேலர் அவர்களுக்கும்; திராவிட இயக்கத்தின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட ஆற்றல்மிகு பேச்சாளராகவும், மீனவ இனத்தின் தலைவராகவும் விளங்கிய சுயமரியாதைச் சுடரொளி திரு. ஜீவரத்தினம் அவர்களுக்கும்; அவர்தம் நினைவைப் போற்றி மணிமண்டபங்கள் அமைக்க வேண்டுமென பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

இந்தக் கோரிக்கைகளை மிகுந்த உவகையுடன் ஏற்று, தமிழகத்திற்குப் பெருமை சேர்க்கும் தலைவர்களான சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் அவர்களுக்கும்; சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம் அவர்களுக்கும்; சென்னை, பட்டினப்பாக்கத்தில் மணி மண்டபங்கள் கட்ட எனது அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் மொழியின் மீது தணியாத பற்று கொண்டு, பல தலைவர்கள் தமிழ்நாட்டிற்காகத் தியாகங்கள் பல செய்துள்ளனர். அதில் குமரி மாவட்டத்தை தமிழ்நாட்டோடு இணைத்திட போராட்டம் நடத்திய மொழிப்போர் தியாகி திரு. சிதம்பரநாதன் அவர்கள் முக்கியமானவர் ஆவார்.

தியாகி திரு. சிதம்பரநாதன் அவர்கள், 5.1.1948இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் திருவிதாங்கூர்–கொச்சி

சட்டமன்ற உறுப்பினர் ஆனார். திருவிதாங்கூர்–கொச்சி அரசில் வனம் மற்றும் வருவாய்த் துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்த திரு. சிதம்பரநாதன், திருவிதாங்கூர்–கொச்சி அரசில் அமைச்சர் பொறுப்பு வகித்த ஒரே தமிழர் ஆவார். அக்காலத்தில் திருவிதாங்கூர் தமிழ் மக்கள் மேல் விதிக்கப்பட்டிருந்த மானிய வரியை இவர் நீக்கினார்.

தாய்த் தமிழகத்துடன் தமிழ்ப் பகுதிகளை இணைப்பது ஒன்றே திருவிதாங்கூர் தமிழர்களின் சிக்கல்களுக்கு ஒரே தீர்வு என்ற நிலையில், தன் அமைச்சர் பதவியைத் துச்சமெனத் துறந்தார்.

தாய்த் தமிழகத்துடன் தமிழ்ப் பகுதிகளை இணைக்கக் கோரி 4.7.1954இல் கண்டன நாளாக அறிவிக்கப்பட்டு, பொதுமக்களைச் சந்திக்க மூணாறு சென்றபோது, திரு. சிதம்பரநாதன் அவர்கள் கைது செய்யப்பட்டு 6.7.1954இல் திருவனந்தபுரம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டு பல இன்னல்களுக்கு ஆளானார். திரு. சிதம்பரநாதன் அவர்கள், 1956 முதல் 1969 வரை தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தார்.

பல தியாகங்களைச் செய்த மொழிப்போர் தியாகி திரு. சிதம்பரநாதன் அவர்களுக்குக் கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளையில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என கன்னியாகுமரி மாவட்ட மக்களிடம் தேர்தல் வாக்குறுதி அளித்திருந்தேன்.

அந்த வாக்குறுதியினை நிறைவேற்றும் வகையில், மொழிப்போர் தியாகி திரு. சிதம்பரநாதன் அவர்களின் திருவுருவச் சிலையை, கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளையில் அமைக்க எனது அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

நாகப்பட்டினம் பகுதியில் மீன்வளப் பல்கலைக்கழகம்

13.09.2011

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு 1,076 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையினைக் கொண்டுள்ளது. 591 கடல் மீனவ கிராமங்களில், சுமார் 9 இலட்சம் மீனவ மக்கள் உள்ளனர். 6,200 மீன்பிடி விசைப் படகுகளும், 50,000 பாரம்பரியக் கலன்களும் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளன. தமிழ்நாட்டில் கடல் மீன் உற்பத்தி 4 இலட்சம் டன் ஆகும். தமிழ்நாட்டிலிருந்து 2,000 கோடி ரூபாய் மதிப்புள்ள கடல் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

மீன்வளத் துறையினை நவீனப்படுத்துவதற்கும்; கடல்பொருள் ஏற்றுமதியில் தமிழ்நாட்டினை முதன்மை மாநிலமாக ஆக்கிடவும்; எனது தலைமையிலான அரசு அதிக முக்கியத்துவம் அளித்துவருகிறது. மீன்பதன அலகுகள் அமைத்தல்; மீன்பிடி விசைப் படகுகள் வாங்குதல்; ஆழ்கடல் மீன்பிடிப்பினை மேற்கொள்ள ஊக்குவிப்பு உதவிகள் அளித்தல்; உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்; மீனவர்களுக்குத் தேவையான உதவிகள் அளித்தல் போன்ற பல முன்னோடி நடவடிக்கைகள் எனது அரசால் எடுக்கப்பட்டு வருகின்றன. குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல்; சிப்பம் கட்டுதல்; விற்பனை மற்றும் போக்குவரத்து வசதிகளை அதிகரித்தல் ஆகியவற்றிற்கான கொள்கைகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளும் துவங்கப்பட்டுள்ளன.

மீனவ நண்பன், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம் ஜி ஆர் அவர்கள், 1977 ஆம் ஆண்டு, இந்தியாவின் இரண்டாவது மீன்வளக் கல்லூரியைத் தூத்துக்குடியில் நிறுவினார்.

தமிழகத்தில் மீன்வளத்தை மேம்படுத்தவும்; மீன்வளத்தைப் பெருக்குவதில் நவீனத் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி

அதன் மூலம் மீனவர்களின் வருவாய் மேம்பாடு அடையச் செய்வதற்கும்; மீன்வளக் கல்வியை மேலும் ஊக்குவிப்பது அவசியம் ஆகிறது. மீன்வள மேம்பாட்டில் முன்னோடியாக உள்ள நாடுகளில், மீன்வளக் கல்விக்கென பல்கலைக்கழகம் நிறுவப்பட்டுள்ளது. இந்தியாவிலும், நமது அண்டை மாநிலமான கேரள மாநிலத்தில், கடந்த ஏப்ரல் மாதத்தில் மீன்வளம் மற்றும் பெருங்கடல் அறிவியல் பல்கலைக்கழகம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மீன்வளத்தைப் பெருக்குவதில் பல்வேறு முன்னோடி நடவடிக்கைகளை எடுத்து வரும் அதே வேளையில், அதற்குத் தேவையான கல்வி அறிவைப் பெருக்குவதற்கும் உரிய முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என எனது தலைமையிலான அரசு முடிவு எடுத்துள்ளது.

இந்த அடிப்படையில், மீன்வளத்திற்கென, ''மீன்வளப் பல்கலைக்கழகம்'' ஒன்றை நிறுவ எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாகப்பட்டினம் மாவட்டம் 188 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையைக் கொண்டுள்ளது. மீன்பிடித்தல், உலர் மீன் உற்பத்தி மற்றும் இறால் வளர்ப்பு ஆகியவை இம்மாவட்டத்தின் முக்கியமான பொருளாதார நடவடிக்கைகள் ஆகும். இம்மாவட்டத்தில் 9,000 மீன்பிடிக் கலன்கள் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளன. நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகம் நவீனப்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, மீன்வளப் பல்கலைக் கழகம் அமைப்பதற்கு நாகப்பட்டினம் மிகவும் உகந்த இடமாக உள்ளதால், இந்த மீன்வளப் பல்கலைக்கழகம் நாகப்பட்டினத்தில் நிறுவப்படும்.

நாகப்பட்டினம் தாலுகாவில் பனங்குடி மற்றும் நாகூர் கிராமங்களில் 85 ஏக்கர் நிலப்பரப்பில், சுமார் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில், இந்த மீன்வளப் பல்கலைக்கழகம் அமைக்கப்படும்.

முதற்கட்டமாக,

1. தூத்துக்குடியில் உள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்

2. மீன்வளத் துறையின் ஆராய்ச்சிப் பிரிவு

3. சென்னையில் உள்ள மீன்வளத் தொழில்நுட்பப் பயிற்சி நிலையம்

4. சென்னையில் உள்ள மீன்வளப் பணியாளர் பயிற்சி நிலையம்

5. தமிழ்நாடு கடல்சார் கழகம்

ஆகியவை இந்தப் புதிய பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படும்.

புதிதாக அமைக்கப்படவுள்ள இந்தப் பல்கலைக் கழகத்தில்,

1) இறால் வளர்ப்பு

2) கெண்டை மீன் வளர்ப்பு

3) வண்ண மீன் வளர்ப்பு

4) மீன் பதப்படுத்துதல் மற்றும் மீன் மதிப்பு கூட்டியப் பொருட்கள் உற்பத்தி

5) மீன்பிடி படகு மற்றும் இயந்திரப் பராமரிப்பு

6) கடலாள் பயிற்சி மற்றும் நீர்வழிப் பயிற்சி

ஆகிய பாடப்பிரிவுகளில் பட்டங்கள் மற்றும் பட்டயங்கள் வழங்கப்படும்.

தொழில்நுட்பப் பரிமாற்றம், விரிவாக்கக் கல்வி, மனித வளப் பயிற்சி மற்றும் மீன்வளப் பயன்பாடு ஆகியவற்றினை மேம்படுத்துவதில் இந்தப் பல்கலைக்கழகம் பெரும் பங்கு வகிக்கும். மேலும், இந்தப் பல்கலைக்கழகத்தில் பல்வேறு பிரிவுகளில் பயிற்சி பெறும் நபர்கள், உள்நாடு மற்றும் உலக அளவில் வேலை வாய்ப்புப் பெறவும் இது வழி வகுக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

மின்வெட்டைக் குறைத்திட புதிய மின் திட்டங்கள்

29.03.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2012–2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய உறுப்பினர்கள் மின் பற்றாக்குறையை நீக்குவதற்காக புதிய மின் திட்டங்கள் எதுவும் இந்த நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்படவில்லை என்றும், ஏற்கெனவே சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்ட திட்டங்களின் நிலை பற்றியும் தங்கள் கருத்துகளை இந்த மாமன்றத்திலே எடுத்துரைத்தார்கள். புதிய மின் திட்டங்களை அறிவிப்பது மட்டுமின்றி, அவற்றை காலத்தே செயல்படுத்தி அவற்றின் பயன் பொதுமக்களுக்குக் கிடைக்கச் செய்யும் வகையில் நடவடிக்கைகளை முன்னின்று எனது அரசு எப்போதும் எடுத்து வருகிறது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

2001 லிருந்து 2006 ஆம் ஆண்டு வரை எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் மின் வெட்டு நிலையே இல்லாமல் தமிழ்நாடு மின் மிகை மாநிலமாக இருந்தது என்பதைத் தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். 2001 லிருந்து 2006 ஆம் ஆண்டு வரையில் 2,518 மெகாவாட் அளவுக்குக் கூடுதல் மின் நிறுவு திறன் ஏற்படுத்தப்பட்டது. எனவேதான், அப்போது மின் பிரச்சினை ஏதும் இருந்ததில்லை. ஆனால், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் ஐந்தாண்டுக் காலத்தில் கூடுதலாக நிறுவப்பட்ட மின்நிறுவு திறன் வெறும் 206 மெகாவாட் மட்டுமே. அதன் காரணமாகத்தான் தமிழகம் இன்றைக்கும் மின் பற்றாக்குறையைச் சந்தித்து வருகிறது.

2011–2012ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 800 மெகாவாட் உடன்குடி விரிவுத் திட்டம், 1,600 மெகாவாட்

உப்பூர் அனல்மின் திட்டம், தற்போதுள்ள எண்ணூர் அனல்மின் நிலையத்திற்குப் பதிலாக 600 மெகாவாட் திறன் கொண்ட புதிய திட்டம், 800 மெகாவாட் தூத்துக்குடி நான்காம் நிலைத் திட்டம் என 3,800 மெகாவாட் அளவுக்குப் புதிய மின் திட்டங்களை அறிவித்திருந்தோம்.

660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் அனல்மின் விரிவாக்கத் திட்டம் என்னும் ஒரு புதிய திட்டத்தை செயல்படுத்த எனது தலைமையிலான அரசு தற்போது முடிவு செய்துள்ளது என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த அனல்மின் திட்டம் Super Critical என்னும் தொழில்நுட்பத்துடன் கூடியதாக இருக்கும். இந்தத் திட்டத்தின் மூலம், குறைந்த அளவு நிலக்கரியில் அதிக அளவு மின் உற்பத்தியைப் பெற இயலும். குறைந்த நிலக்கரியைப் பயன்படுத்துவதன் காரணமாக சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும். சுமார் 3,960 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துவக்கப்படும் இந்த அனல் மின் திட்டம், 2015 ஆம் ஆண்டு இறுதிக்குள் தனது உற்பத்தியைத் தொடங்கும்.

இதுவரை தமிழ்நாட்டில், புனல், அனல், அணு, எரிவாயு சுழலி ஆகியவை மூலம் மின்சாரம் தயாரிக்கப்படும் மின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புனல் மின்நிலையம் மூலம் இதற்கு மேல் புதிய மின் உற்பத்தி நிலையங்கள் அமைப்பது கடினம். அதைப் போன்று, அனல் மின் நிலையத்திற்கு மத்திய அரசால் போதுமான அளவு நிலக்கரி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். தற்போது நடைமுறையில் உள்ள அனல் மின் நிலையங்களுக்கே நிலக்கரி ஒதுக்கீட்டை மத்திய அரசு சரிவர செய்யவில்லை. எனவே, மாற்று எரிபொருள் மூலம் மின் உற்பத்தி செய்யப்பட வேண்டியது, தற்போது காலத்தின் கட்டாயம் ஆகும். மின் உற்பத்திக்கு Liquefied Natural Gas, அதாவது திரவ இயற்கை எரிவாயு ஒரு மாற்று எரிபொருளாக அமையும். மேலும், LNGI எரிபொருளாகக் கொண்ட மின்நிலையம் மிகக் குறைந்த கால அளவில் உருவாக்க இயலும். ஆனால், அதற்கு LNG Terminal, அதாவது எல்.என்.ஜி. முனையம் தேவை. எல்.என்.ஜி. முனையம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்

இந்தியன் ஆயில் நிறுவனத்துடன் எனது முன்னிலையில் 22.3.2012 அன்று ஏற்படுத்தப்பட்டது. எனவே, அந்த முனையம் அமைக்கப் பட்டவுடன் கிடைக்கப் பெறும் திரவ இயற்கை எரிவாயுவை பயன்படுத்தி, 500 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையத்தை அமைக்க எனது தலைமையிலான அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதேபோன்று, கோயம்புத்தூர், சேலம், தருமபுரி வழியாக கொச்சி முதல் பெங்களூருக்கு திரவ இயற்கை எரிவாயு எடுத்துச் செல்லும் குழாய் அமைக்கும் பணிகளை GAIL நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இதனைப் பயன்படுத்தி, 500 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையங்களை அமைக்க எனது தலைமையிலான அரசு ஆராயும்.

2011–2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட மின் திட்டங்களின் நிலைமை பற்றியும் இந்த மாமன்றத்திலே விவாதிக்கப்பட்டது. எனவே, அது பற்றியும் இங்கே எடுத்துக் கூறுவது எனது கடமை என கருதுகிறேன்.

800 மெகாவாட் திறன் கொண்ட உடன்குடி விரிவாக்க அனல்மின் திட்டம் துவங்கப்படுவதற்கான முதல் நடவடிக்கையாக, சாத்தியக்கூறு திட்ட அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2015–2016 நிதியாண்டில் செயல்பாட்டிற்கு வரும்.

1,600 மெகாவாட் திறன் கொண்ட உப்பூர் அனல்மின் திட்டத்திற்கான முன்சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் திட்ட வரைபடம் ஆகியவை இறுதி செய்யப்பட்டுவிட்டன. கடலோர பகுதி ஒழுங்குமுறை, அதாவது, Coastal Regulation Zone விதிகளின் அடிப்படையில் திட்ட எல்லைகளை வரையறுக்க 28.1.2012 அன்று அண்ணா பல்கலைக்கழகத்திடம் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டிற்கான அறிக்கை தயாரிப்பதற்கான ஒப்பந்தப் புள்ளி திறக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது. இதற்கான பணி ஆணைகள் விரைவில் வழங்கப்படும். மேலும் விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான ஆலோசகர் நியமிப்பதற்கான ஒப்பந்தப்

புள்ளி திறக்கப்பட்டு, மதிப்பாய்வில் உள்ளது. மத்திய சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டின் ஆய்வுக்கான குறிப்பு விதிமுறைகள், அதாவது Terms of Reference ஒப்புதலுக்காக மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தில் நிலுவையில் உள்ளது. இந்தத் திட்டம் 2015 ஆம் ஆண்டு இறுதிக்குள் செயல்பாட்டிற்கு வரும்.

40 ஆண்டு பழைமை வாய்ந்த எண்ணூர் அனல்மின் நிலையத்திற்குப் பதிலாக 600 மெகாவாட் திறன் கொண்ட புதிய அனல் மின் நிலையத்தை நிறுவ உத்தேசிக்கப்பட்டிருந்தது. எனினும், Super Critical தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தினால் குறைந்த அளவு நிலக்கரியில் அதிக அளவு மின் உற்பத்தியைப் பெற முடியும் என்றும், இதன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டது. எனவே, 600 மெகாவாட் திறன் கொண்ட இந்த அனல்மின் நிலையத்தை, Super Critical தொழில்நுட்பத்தை பயன்படுத்தி 660 மெகாவாட் திறன் கொண்ட அனல்மின் நிலையமாக மாற்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்திற்கான முன்சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த அனல்மின் திட்டமும் 2015ஆம் ஆண்டு இறுதிக்குள் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

800 மெகாவாட் தூத்துக்குடி நான்காம் நிலை அனல் மின் திட்டத்தைப் பொறுத்த வரை, கடலோரப் பகுதி ஒழுங்குமுறை ஆணைய விதிகளின்படி அனல்மின் திட்ட எல்லைகளை வரையறுப்பதற்கான பணி அண்ணா பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, அதற்கான அறிக்கையும் பெறப்பட்டுவிட்டது. மேலும், சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் திட்ட விவர அறிக்கையினைத் தயாரிப்பதற்கான ஆலோசகர் நியமிக்கப்பட்டுவிட்டார். இந்த அனல் மின் திட்டம் 2015ஆம் ஆண்டு இறுதிக்குள் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

வட சென்னை அருகில் வல்லூரில் 1,000 மெகாவாட் திறன் கொண்ட அனல்மின் நிலையத்தை தேசிய மின் கழகத்துடன் இணைந்து நிறுவ 12.7.2002 அன்று எனது முன்னிலையில்

புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப் பட்டது. அதற்கான ஆரம்பக் கட்டப் பணிகளும் எனது அரசால் துவங்கப்பட்டன. பின்னர் வந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு இதனை விரைந்து செயல்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்காத காரணத்தால், இன்னமும் வல்லூர் அனல் மின் திட்டம் செயல்பாட்டிற்கு வரவில்லை. எனது அரசு பொறுப்பேற்றபோது மந்த கதியில் நடைபெற்று வந்த பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக, இந்த ஆண்டு ஜூன் மாதம், முதல் அலகு உற்பத்தியைத் துவங்கும். இரண்டாம் அலகு இந்த ஆண்டு நவம்பர் மாதமும், மூன்றாம் அலகு அடுத்த ஆண்டு ஜூன் மாதமும் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

அதேபோன்று, தூத்துக்குடியில் 1,000 மெகாவாட் திறன் கொண்ட அனல்மின் நிலையத்தை நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தோடு கூட்டு முயற்சியில் நிறுவ 19.6.2003 அன்று எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்தத் திட்டத்திற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளும் முந்தைய எனது அரசாலேயே மேற்கொள்ளப்பட்டுவிட்டன. இந்த அனல்மின் திட்டத்தின் பணிகளை முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு சரியாக கண்காணிக்கத் தவறியதால், இத்திட்டம் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படுவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முதல் அலகு 2013ஆம் ஆண்டு ஜூன் மாதமும், இரண்டாம் அலகு 2013ஆம் ஆண்டு செப்டம்பர் மாதமும் செயல்பாட்டிற்கு வரும். எனது அரசால் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தப்படி தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய மின்சாரத்தின் அளவு 750 மெகாவாட் ஆகும். ஆனால், இத்திட்டம் பற்றி முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு, மத்திய அரசிடம் சரியாக எடுத்துக்கூறாத காரணத்தால், இது ஒரு மத்திய அரசின் திட்டம் என கருதப்பட்டு, காட்கில் ஃபார்முலா அடிப்படையில் 387 மெகாவாட் என குறைக்கப்பட்டுவிட்டது.

இவையன்றி, ஒவ்வொன்றும் 600 மெகாவாட் திறன் கொண்ட வடசென்னை நிலை – 2 மின் நிலையம், இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஒரு யூனிட்டும், டிசம்பர் மாதத்தில் மற்றொரு

யூனிட்டும் மின் உற்பத்தியை தொடங்கும். 600 மெகாவாட் திறன் கொண்ட மேட்டூர் மூன்றாம் நிலை அனல் மின் நிலையம் இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டு, அதன் முழுத் திறனும் செப்டம்பர் மாதத்திற்குள் கிடைக்கப்பெறும்.

கூடங்குளம் அணுமின் நிலையம் தனது உற்பத்தியை இன்னும் இரண்டு மாதங்களில் துவக்கிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நான் தற்போது விவரித்துள்ளவாறு எனது தலைமையிலான அரசு பல்வேறு புதிய மின் திட்டங்களை தொடங்கியுள்ளதுடன், தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மின் திட்டப் பணிகளையும் முடுக்கி விட்டுள்ளது. எனவே, வரும் ஜூன் மாதம் முதல் மின்வெட்டு படிப்படியாக குறைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அ.இ.அ.தி.மு.க. அரசு, 2011ஆம் ஆண்டு மே மாதம் தான் பொறுப்பேற்றது. அதன் பின்னர், இந்த அரசின் கொள்கைகள், திட்டங்கள் மற்றும் அறிவிப்புகள் ஆகியவை ஆளுநர் உரையிலும், நிதி நிலை அறிக்கையிலும், கொள்கை விளக்கக் குறிப்பிலும் தெரிவிக்கப்பட்டிருந்தன. கடந்த ஆண்டு பட்ஜெட் கூட்டத் தொடர் செப்டம்பர் மாதம் 14ஆம் தேதி தான் நிறைவடைந்தது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவர். எனவே, கடந்த பட்ஜெட் கூட்டத் தொடர் முடிவடைந்ததற்கும், நடப்பு ஆண்டு நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதற்கும் உள்ள இடைவெளி ஆறு மாத காலம்தான். சாதாரணமாக, ஒவ்வொரு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படுவதற்கும் இடையே ஓராண்டு இடைவெளி இருக்கும். எனவே, கடந்த நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட திட்டங்கள் அனைத்தும் முழுமையாக நிறைவேற்றப்பட்டு விட்டதா என்று எழுப்பப்படும் கேள்விகள் நியாயமானவை அல்ல என்பதை நியாய உணர்வு உள்ளவர்கள் அறிவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

❋ ❋ ❋

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ரூ.740 கோடி மானியம்

03.04.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

நாட்டின் பொருளாதாரம் சரியான பாதையில் பயணிக்கும் வகையில், பொது நலன் பாதுகாக்கப்படுவதையும்; சமூக நலன் உச்ச நிலைக்குக் கொண்டு செல்லப்படுவதையும்; லாபத்தை குறிக்கோளாகக் கொள்ளாமல், மக்களுக்கான சேவை நியாயமான விலையில் கிடைக்கச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டு செயலாற்றுபவைதான் பொதுத்துறை நிறுவனங்கள். இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, தமிழ்நாட்டு மக்களுக்குத் தேவையான மின்சாரத்தைத் தங்கு தடையின்றி அளிப்பதற்காக உருவாக்கப்பட்ட நிறுவனம்தான் தமிழ்நாடு மின்சார வாரியம்.

எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது 2001 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரையிலான ஆட்சிக் காலத்தில், மின் தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடமளிக்காத வகையில்; இன்னும் சொல்லப் போனால், உபரி மின்சாரத்தை வெளி மாநிலங்களுக்கு அளிக்கும் வகையில், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் செயல்பாடு நன்றாக இருந்தது. தமிழ்நாட்டில் உள்ள அனல்மின் நிலையங்களான தூத்துக்குடி, மேட்டூர் மற்றும் வட சென்னை அனல்மின் நிலையங்கள் அவற்றின் செம்மையான செயல்பாடுகளுக்காக 2001–2002 முதல் 2005–2006 வரை பல்வேறு விருதுகளைத் தொடர்ச்சியாகப் பெற்றுவந்தன. காற்றாலை மின் உற்பத்தியிலும் தமிழ்நாடு முன்னிலை வகித்து வந்தது. இது மட்டுமல்லாமல், 2,518 மெகாவாட் அளவுக்கு மின் நிறுவு திறன் அதிகரிக்கப்பட்டது. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதி நிருவாகமும் சீராக இருந்தது.

ஆனால், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், ஆண்டொன்றுக்கு சராசரியாக 8,000 கோடி ரூபாய்க்கு மேல்,

வருவாய்க்கும் செலவினங்களுக்கும் இடையே நிகர இடைவெளி ஏற்பட்டது. இதன் விளைவாக, 31.3.2012 நிலவரப்படி, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தொடர் இழப்பு 50,000 கோடி ரூபாயையும்; வங்கி மற்றும் இதர நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன் 45,000 கோடி ரூபாயையும் தாண்டியுள்ளது. இது தவிர, தனியார் மின் உற்பத்தியாளர் மற்றும் இதர ஒப்பந்ததாரர்களுக்கான நிலுவைத் தொகை 11,000 கோடி ரூபாய் அளவிற்கு உள்ளது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், தமிழ்நாடு மின்சார வாரியம் அளவுக்கு மீறிய கடன்சுமைக்கு ஆளாகி; வாங்கிய கடனையும் வட்டியையும் திரும்பச் செலுத்துவதற்கே கடன் வாங்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில், அதாவது debt-trap நிலையில் உள்ளது. இந்தச் சூழ்நிலையில், மதிப்பீட்டு நிறுவனங்கள் மின்சார வாரியத்தின் மதிப்பைக் குறைத்துவிட்டதால், வெளிச்சந்தையில் இருந்தும் கடன் பெற வழியில்லை. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கடன் அளிக்கக் கூடாது என பாரத ரிசர்வ் வங்கி, வங்கிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சூழ்நிலையில் கடந்த 2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்ட எனது தலைமையிலான அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, பல ஆண்டு இடைவெளிக்குப்பின் அனல்மின் நிலையங்கள் புதியசாதனைகளை ஏற்படுத்தும் விதமாக மிகச் செம்மையாக செயல்பட்டு வருகின்றன. இதேபோன்று தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மின் இழப்பு அதாவது Transmission and Distribution loss விகிதமும், குறைக்கப்பட்டுள்ளது. அகில இந்திய, சராசரி மின் இழப்பான, 27 விழுக்காட்டினை ஒப்பிடுகையில், தமிழ்நாட்டின் மின் இழப்பு, 18 விழுக்காடு, என்ற அளவிலேயே உள்ளது.

நிதி உதவியைப் பொறுத்த வரையில், 2011–2012 ஆம் ஆண்டுக்கான மானியத் தொகையாக 2,058.19 கோடி ரூபாயைத் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கியதுடன்; பங்கு மூலதனமாக 4,100 கோடி ரூபாயையும்; ways and means advance ஆக 1,455.16 கோடி ரூபாயையும்; ஆக மொத்தம் ஒரே ஆண்டில் இதுவரை வழங்கப்படாத அளவுக்கு 7,913.45

கோடி ரூபாயை எனது தலைமையிலான அரசு வழங்கியுள்ளது. 2012–2013ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மானியமாக 3,068.78 கோடி ரூபாயும்; புதிய மின் திட்டங்களுக்கான பங்கு மூலதன உதவியாக 1,500 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது தவிர, மின்சார சேமிப்பை ஊக்குவிக்கவும்; மின்சாரத்தைக் கொண்டு செல்வதிலும், விநியோகிப்பதிலும் ஏற்படும் இழப்புகளை மேலும் குறைக்கவும்; மின் பகிர்மானக் கட்டமைப்பை வலுப்படுத்தவும்; மின் திருட்டைக் கட்டுப்படுத்தவும்; சூரிய ஒளி மின்சக்தி திட்டங்கள்; காற்றாலை திட்டங்கள்; பயோமாஸ் மின் திட்டங்கள் ஆகியவற்றை ஊக்குவிக்கவும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களை விரைந்து செயல்பாட்டிற்கு கொண்டு வரவும்; புதிய திட்டங்களை மாநில அரசு மூலமாகவோ அல்லது கூட்டு முயற்சிகள் மூலமாகவோ தொடங்க துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பாரத மிகுமின் நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்துவதாக இருந்த 1,600 மெகாவாட் உடன்குடி உயர் அழுத்த நிலை அனல்மின் திட்டம் நான்கு ஆண்டுகளாகத் தொடங்கப்படாத நிலையில் இருந்ததால், அத்திட்டத்தை 8,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநில அரசின் திட்டமாகவே செயல்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கிடையில், உற்பத்திச் செலவு மற்றும் விநியோக வருவாய்க்கு இடையே உள்ள இடைவெளியை ஈடு செய்யும் வகையில், 9,741 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் ஏற்படும் வகையில், தற்போதுள்ள மின்சாரக் கட்டணத்தை மாற்றக் கோரி தமிழ்நாடு மின்சார வாரியம் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் விண்ணப்பித்திருந்தது. இந்த விண்ணப்பத்தின் மீது நுகர்வோரின் கருத்துகளைக் கோரி சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் ‘கருத்துக் கேட்பு’ கூட்டங்களையும்; மாநில ஆலோசனைக் குழு, அதாவது, ‘State Advisory Committee’

கூட்டத்தையும் நடத்தி, பல்வேறு தரப்பினரின் கருத்துகளையும், ஆலோசனைகளையும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் பெற்றது.

இதனையடுத்து, மின் கட்டண, விகித மாற்றம் குறித்த, தனது ஆணையை, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 30.3.2012 அன்று வெளியிட்டது. இதன்படி, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு, 7,874 கோடி ரூபாய், கூடுதல் வருவாய் கிடைக்கும்.

இருப்பினும், இந்தக் கட்டண உயர்வில், 1,118.44 கோடி ரூபாயை, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மானியமாக வழங்க எனது தலைமையிலான அரசு ஏற்கெனவே ஒப்புதல் அளித்துள்ளது. இதன் அடிப்படையில், தமிழக அரசு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்க வேண்டிய மொத்த மானியத் தொகை ஆண்டொன்றிற்கு 3,554.16 கோடி ரூபாய் ஆகும்.

தமிழக அரசின் இது போன்ற மக்கள் நலம் காக்கும் நடவடிக்கையின் மூலம், ஏழை, எளிய மக்கள் அடையும் பயன்களை நான் இங்கே எடுத்துக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

1. குடிசைகளுக்கான மின் கட்டணம் யூனிட் ஒன்றிற்கு 2 ரூபாய் 50 பைசா என்று கணக்கிடப்பட்டு, மாதம் ஒன்றுக்கு கட்டணம் 60 ரூபாய் என்றும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்துள்ளது. இதனை தமிழக அரசே முழுமையாக ஏற்றுக் கொள்கிறது. இதன் மூலம், 14 இலட்சம் நுகர்வோர் பயன் பெறுவர்.

2. விவசாயத்திற்கான மின் கட்டணத்தை குதிரைத் திறன் ஒன்றிற்கு ஆண்டொன்றுக்கு 250/– ரூபாயிலிருந்து 1,750/– ரூபாயாக மாற்றித் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இந்தக் கட்டணம் முழுவதையும் அரசே ஏற்றுக்கொள்ளும். இதன் மூலம் விவசாயிகள் மின் கட்டணம் ஏதும் செலுத்தாமலேயே மின்சாரத்தைத் தொடர்ந்து பெற்று வருவார்கள்.

3. இரு மாதங்களில் 100 யூனிட்டுகள் வரை உபயோகப்படுத்தும் வீட்டு மின் நுகர்வோர்களுக்குத் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்த விலையான யூனிட் ஒன்றிற்கு 2 ரூபாய் 60 பைசாவில், 1 ரூபாய் 50 பைசாவைத் தமிழக அரசு மானியமாக அளிக்கும் என ஏற்கெனவே ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே, பயனீட்டாளர்கள் செலுத்த வேண்டிய தொகை யூனிட் ஒன்றுக்கு 1 ரூபாய் 10 பைசா மட்டுமே.

4. இதே போன்று, இரு மாதங்களில் 200 யூனிட்டுகள் வரை பயன்படுத்தும் வீட்டு மின் நுகர்வோர்களுக்குத் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்த விலையான யூனிட் ஒன்றிற்கு 2 ரூபாய் 80 பைசாவில், 1 ரூபாயைத் தமிழக அரசு மானியமாக வழங்க ஒப்புக் கொண்டுள்ளதால்; பயனீட்டாளர்கள் செலுத்த வேண்டிய தொகை யூனிட் ஒன்றுக்கு 1 ரூபாய் 80 பைசா மட்டுமே.

5. இரு மாதங்களில் 500 யூனிட்டுகள் வரை பயன்படுத்தும் வீட்டு மின் பயனீட்டாளர்களுக்கு, 201 முதல் 500 யூனிட்டுகளுக்கான மின் கட்டணத்தில், யூனிட் ஒன்றுக்கு 50 காசு மானியத்தைத் தமிழக அரசு வழங்க ஒப்புக் கொண்டுள்ளது.

6. வழிபாட்டுத் தலங்கள், விசைத் தறிகள் ஆகியவற்றிற்கான மானியங்களும் தொடர்ந்து அளிக்கப்படும்.

7. இவையன்றி, 500 யூனிட்டுகளுக்கு மேல் பயன்படுத்தும் வீட்டு மின் நுகர்வோர்களுக்கு அரசு தனியே மானியம் வழங்கவில்லை என்றாலும், மின் உற்பத்திச் செலவை விடக் குறைவான கட்டணமே அவர்களுக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் அறிவிக்கப்பட்ட இந்தக் கட்டண உயர்விற்கு பின்னரும், வெளி மாநிலங்களை ஒப்பிடுகையில், தமிழ்நாட்டில் மின் கட்டணம் குறைவாகவே உள்ளது.

உதாரணமாக கர்நாடகாவில் இரண்டு மாதங்களில் 100 யூனிட் வரை உபயோகிப்பவர்கள் யூனிட் ஒன்றிற்கு சராசரியாக 2 ரூபாய் 59 காசும்; ஆந்திராவில் 2 ரூபாய் 3 காசும்; கேரளாவில் 1 ரூபாய் 30 காசும்; மேற்கு வங்காளத்தில் 3 ரூபாய் 55 காசும்; மகாராஷ்டிராவில் 2 ரூபாய் 47 காசும்; குஜராத்தில் 2 ரூபாய் 55 காசும்; உத்திரபிரதேசத்தில் 3 ரூபாய் 45 காசும் செலுத்தி வருகிறார்கள். ஆனால், இந்தக் கட்டண மாற்றத்திற்குப் பிறகும் தமிழ்நாட்டில் 100 யூனிட்டுகள் வரை பயன்படுத்துவோர் செலுத்த வேண்டிய கட்டணம் யூனிட் ஒன்றிற்கு 1 ரூபாய் 10 காசு மட்டுமே.

இதே போன்று, இரண்டு மாதங்களில் 200 யூனிட்கள் வரை உபயோகிப்பவர்களை ஒப்பிடும் போது; ஆந்திராவில் யூனிட் ஒன்றிற்கு சராசரியாக 2 ரூபாய் 81 காசும்; கர்நாடகாவில் 2 ரூபாய் 92 காசும்; மேற்கு வங்காளத்தில் 4 ரூபாய் 4 காசும்; மகாராஷ்டிராவில் 2 ரூபாய் 47 காசும்; குஜராத்தில் 2 ரூபாய் 85 காசும்; உத்திரபிரதேசத்தில் 3 ரூபாய் 45 காசும் செலுத்தி வருகிறார்கள். ஆனால் தமிழகத்தில் புதிய கட்டண விகிதப்படி, 200 யூனிட்டுகள் வரை பயன்படுத்துவோர் செலுத்த வேண்டிய கட்டணம் யூனிட் ஒன்றிற்கு 1 ரூபாய் 80 காசு மட்டுமே.

எனினும், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள மின் கட்டணங்கள் ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்குக் கூடுதல் சுமையை ஏற்படுத்துகிறது என்றும்; எனவே கட்டணங்களைக் குறைக்க வேண்டும் என்றும், பொது மக்களிடமிருந்து கோரிக்கைகள் வரப் பெற்றுள்ளன.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்துள்ள கட்டணங்களைக் குறைக்க தமிழக அரசுக்கு எந்தவித அதிகாரமும் இல்லை என்றாலும், ஏழை, எளிய மக்களின் சுமையை மேலும் குறைக்கும் வண்ணம், வீட்டு மின் பயனீட்டாளர்கள் செலுத்த வேண்டிய கட்டணங்களைக் குறைக்கவும்; அதற்காகத் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கூடுதல் மானியம் வழங்கி, அந்தச் சுமையை தமிழக அரசே ஏற்றுக் கொள்வது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி,

1. இரு மாதங்களில் 100 யூனிட்டுகள் வரை உபயோகப்படுத்தும் வீட்டு மின் பயனீட்டாளர்கள் செலுத்த வேண்டிய மின் கட்டணம் யூனிட் ஒன்றிற்கு 1 ரூபாய் 10 பைசாவில் இருந்து 1 ரூபாயாகக் குறைக்கப்படும்.

2. இரு மாதங்களில் 200 யூனிட்டுகள் வரை உபயோகப்படுத்தும் வீட்டு மின் பயனீட்டாளர்கள் செலுத்த வேண்டிய மின் கட்டணம் யூனிட் ஒன்றிற்கு 1 ரூபாய் 80 பைசாவில் இருந்து 1 ரூபாய் 50 பைசாவாகக் குறைக்கப்படும்.

3. இரு மாதங்களில் 500 யூனிட் வரை உபயோகப்படுத்தும் வீட்டு மின் பயனீட்டாளர்கள் செலுத்த வேண்டிய மின் கட்டணம், முதல் 200 யூனிட்டுகளுக்கு 3 ரூபாயிலிருந்து 2 ரூபாய் என்றும்; 201 யூனிட் முதல் 500 யூனிட் வரையிலான கட்டணம் 3 ரூபாய் 50 பைசாவிலிருந்து 3 ரூபாய் என்றும் குறைக்கப்படும்.

எனது தலைமையிலான அரசின் இந்த மக்கள் நலன் காக்கும் நடவடிக்கை மூலம், 740 கோடி ரூபாய் மானியத்தைத் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு எனது தலைமையிலான அரசு கூடுதலாக வழங்கும். இதனையடுத்து, இந்த ஆண்டு வழங்கப்பட வேண்டிய மானியத் தொகை மிக உயர் அளவான 4,294.16 கோடி ரூபாயாக இருக்கும் என்பதையும், இதன் மூலம் 1 கோடியே 50 இலட்சம் குடும்பங்கள் பயனடையும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

சங்ககிரியில் மாவீரர் தீரன் சின்னமலைக்கு நினைவுச் சின்னம்

04.04.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விடுதலைப் போராட்ட வீரர்களையும்; தன்னலமற்ற மக்கள் சேவை புரிந்தவர்களையும்; சமுதாயத்தில் மறுமலர்ச்சியை உருவாக்க பாடுபட்டவர்களையும்; மக்களின் உரிமைகளை மீட்க போராட்டங்களை நடத்தியவர்களையும் கௌரவிக்கும் விதத்தில் அவர்களுக்கு மணிமண்டபங்கள் அமைப்பதிலும்; திருவுருவச் சிலைகள் அமைப்பதிலும்; அரசு கட்டடங்களுக்கு அவர்களது பெயர்களை வைப்பதிலும்; முன்னோடியாக விளங்குவது எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்று சொன்னால் அது மிகையாகாது.

பரம்பரை பரம்பரையாய் அடிமைத் தளையில் சிக்குண்ட நம் இந்திய நாடு, தற்போது, உரிமை பெற்ற நாடாக விளங்குகிறது. இச்சுதந்திரத்தைப் பெற இந்திய விடுதலைப் போரில் எண்ணற்ற தியாக சீலர்கள், கிளர்ந்து எழுந்து; தங்கள் வாழ்வைத் துச்சமென மதித்து; அன்னை பாரதத்தின் அடிமைத் தளையைத் தகர்த்தெறியப் பாடுபட்டனர். இத்தகைய விடுதலைப் போரில், தமிழகத்திலும் பல தலைவர்கள் தோன்றி தங்கள் இன்னுயிரை ஈந்தனர். இந்த விடுதலைப் போராட்டத்தில், பிரிட்டிஷாரின் பிரித்தாளும் சூழ்ச்சியைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், ஆர்ப்பரித்து, ஆங்கிலேய ஆதிக்கத்தைத் தடுக்கும் பெருமலையாக விளங்கியவர் மாவீரர் தீரன் சின்னமலை அவர்கள்.

சென்னிமலைக்கும், சிவன்மலைக்கும் நடுவே வாழ்ந்து, தனக்கென ஒரு பாதை அமைத்து, ஆங்கிலேயருக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கிய மாவீரர் தீரன் சின்னமலை

அவர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில், தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது.

எனது ஆட்சிக் காலத்தில், சென்னை, அண்ணா சாலையில், தீரன் சின்னமலை அவர்களின் முழு உருவ வெண்கலச் சிலை அமைக்க அனுமதி அளிக்கப்பட்டதோடு; இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பணிக்கு 1 இலட்சம் ரூபாய் நன்கொடையையும் நான் அளித்தேன். 1995 ஆம் ஆண்டு தீரன் சின்னமலை அவர்களுக்கு, தமிழக அரசின் சார்பில், காங்கேயத்தில், நினைவு விழா நடத்தப்பட்டு; அவ்விழாவில் அவரது வாரிசுகள், கௌரவிக்கப்பட்டனர். எனது ஆட்சிக் காலத்தில்தான், கொங்கு நாட்டின் ஒரு பகுதியான கரூரைத் தலைநகராகக் கொண்டு தீரன் சின்னமலை மாவட்டம் உருவாக்கப்பட்டது. தீரன் சின்னமலை அவர்கள் பிறந்த இடமான ஈரோடு மாவட்டம், ஓடாநிலையில், அவரது நினைவு நாளான, ஆடி மாதம் 18ஆம் நாளினை அரசு விழாவாக அனுசரிக்க 2003 ஆம் ஆண்டு நான் உத்தரவிட்டேன். தியாகி தீரன் சின்னமலை அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், 30 இலட்சம் ரூபாய் செலவில், ஈரோடு மாவட்டம், அரச்சலூர் கிராமம், ஓடாநிலையில் மணிமண்டபம் என்னால் 2006 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது.

தியாகி தீரன் சின்னமலையை போரின் மூலம் வெல்ல முடியாது என்ற நிலைக்கு வந்த ஆங்கிலேயர், சூழ்ச்சி மூலம் அவரைக் கைது செய்து; சங்ககிரி கோட்டைக்கு அழைத்துச் சென்று தூக்கிலிட்டனர். மாவீரர் தீரன் சின்னமலையை தூக்கிலிட்ட இடமான, சங்ககிரியில், அவருக்கு நினைவுச் சின்னம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று, சங்ககிரி சட்டமன்ற உறுப்பினர், திருமதி விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள் 30 மார்ச், 2012, அன்று இந்த மாமன்றத்திலே கோரிக்கை வைத்தார்.

இந்திய நாட்டின் சுதந்திரத்திற்காக, விடுதலைக்காக, நன்மைக்காகப் பாடுபட்ட நல்லோர் அனைவருக்கும் தனது நன்றியறிதலைக் காட்டி வரும் அரசு எங்கள் அரசு. இந்த

உணர்வின் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயலட்சுமி பழனிசாமி அவர்களின் கோரிக்கையை ஏற்று, மாவீரர் தீரன் சின்னமலை அவர்களுக்கு, அவர் தூக்கிலிடப்பட்ட இடமான சங்ககிரியில், நினைவுச் சின்னம் விரைவில் அமைக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

எனது தலைமையிலான அரசின் இந்த முடிவை, இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மனதார வரவேற்பார்கள் என்ற நம்பிக்கையினைத் தெரிவித்து, இந்த நினைவுச் சின்னம் அமைப்பதற்கான பணிகள் விரைந்து மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு

09.04.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

அரசால் தீட்டப்படும் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும்; நலத்திட்ட உதவிகளை மக்களிடம் எடுத்துச் செல்வதிலும்; அரசின் வளர்ச்சி நோக்கங்களை எய்துவதில் முக்கியப் பங்கு வகிக்கும் பொதுச் சேவையை நடைமுறைப் படுத்துவதிலும் அடித்தளமாக விளங்குபவர்கள் அரசு ஊழியர்கள்.

இதேபோன்று, எதிர்காலத் தூண்களாக விளங்கும் மாணவ மாணவியரை நல்லவர்களாகவும்; வல்லவர்களாகவும்; சிந்தனையாளர்களாகவும்; செயல் வீரர்களாகவும்; புகழ் மிக்கவர்களாகவும் ஆக்கும் சிறந்த செல்வமாம் கல்விச் செல்வத்தை போதிக்கும் உன்னதமான, தன்னலமற்ற பணியை மேற்கொள்பவர்கள் ஆசிரியர்கள்.

இப்படிப்பட்ட இன்றியமையாப் பணியை ஆற்றும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் முக்கியப் பங்கை எனது தலைமையிலான அரசு நன்கு உணர்ந்துள்ளது. அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கான பல்வேறு நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

அந்த வகையில், 1.1.2012 முதல் மத்திய அரசு அலுவலர்களுக்கான அகவிலைப் படியை, அவர்களது அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் 7 சதவீதம் மத்திய அரசு உயர்த்தியது போல், தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோர்களுக்கும் 1.1.2012 முதல் அகவிலைப்படியை 7 சதவீதம் உயர்த்தி வழங்க

நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த உயர்த்தப்பட்ட அகவிலைப்படி 1.1.2012 முதல் கணக்கிடப்பட்டு ரொக்கமாக வழங்கப்படும்.

இந்த அகவிலைப்படி உயர்வு, உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்கள்; ஆசிரியர்கள்; வருவாய்த் துறையில் பணிபுரியும் கிராம உதவியாளர்கள்; அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்கள்; ஊராட்சி உதவியாளர்; எழுத்தர்; மற்றும் வழக்கமாக அகவிலைப்படி அளிக்கப்படும் அனைவருக்கும் பொருந்தும். இதனால் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் என சுமார் 18 இலட்சம் பேர் பயனடைவார்கள்.

இந்த அகவிலைப்படி உயர்வு மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 1,383.49 கோடி ரூபாய் செலவு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

தமிழ்ப் புத்தாண்டில் உழவர் பெருவிழா

10.04.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'வயிற்றுக்குச் சோறிட வேண்டும், இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்' என்ற மகாகவி பாரதியின் குறிக்கோள் நிறைவேற, பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதும், உணவுப் பாதுகாப்பில் நிலையான தன்மை அடைவதும் மிக மிக அவசியமாகும்.

இந்தக் குறிக்கோளை எய்தும் வகையில், தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்துவதற்கான பல்நோக்குத் திட்டங்களை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகின்றது.

தமிழகத்தின் தொழில் வளர்ச்சி பெரிய நகரங்கள் மட்டுமின்றி சிறிய நகரங்களிலும் வளர்ந்து வருவதால், பெரும்பாலான விவசாயத் தொழிலாளர்கள் வேறு வேலை தேடி நகரங்களுக்குக் குடிபெயர்ந்து செல்கின்றனர். இதன் விளைவாக ஏற்படும் தொழிலாளர்கள் தட்டுப்பாட்டை நீக்கும் வகையில், வேளாண் இயந்திரமயமாக்கலை எனது தலைமையிலான அரசு நிறைவேற்றி வருகிறது. இதன்படி, வேளாண் இயந்திரங்களை கொள்முதல் செய்வதற்காக ஒவ்வொரு தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்திற்கும் மானியமாக 20 இலட்சம் ரூபாய் வீதம் 400 தொடக்கக் கூட்டுறவு சங்கங்களுக்கு 80 கோடி ரூபாய் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் கொள்முதல் செய்யப்படும் வேளாண் இயந்திரங்கள் குறைந்த வாடகையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதன்மூலம், விவசாயிகள், குறைந்த வேலையாட்களைக் கொண்டு, இயந்திரங்கள் மூலம் அதிக சிரமமின்றி விவசாயப் பணிகளை விரைவாக செய்ய இயலும். மேலும் நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவதனால்

குறைந்த நிலப்பரப்பில் அதிக அளவு உணவு உற்பத்தி கிடைக்க வழிவகுக்கும்.

தமிழ்நாட்டில் நுண்ணீர்ப் பாசனம் அமைத்துப் பயிரிடும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 விழுக்காடு மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 விழுக்காடு மானியமும் எனது தலைமையிலான அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் உணவுப் பொருட்களை, விலை வீழ்ச்சியடையும் காலங்களில் சேமித்து வைத்து, நல்ல விலை கிடைக்கும் காலங்களில் விற்பனை செய்ய ஏதுவாக விவசாயக் கிடங்குகள் கட்ட உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் அதிக அளவு உணவு உற்பத்தி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, அவர்களுக்கு விருது வழங்குவதற்கும் நான் ஆணையிட்டுள்ளேன்.

இரண்டாம் பசுமைப் புரட்சிக்கு மேலும் வலு சேர்க்கும் விதமாக, வேளாண் விஞ்ஞானிகள் உருவாக்கும் புதுப்புது ரகங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் விவசாயிகளை சென்று அடைவதில் ஏற்படும் காலதாமதத்தை களையும் வண்ணம், பல்வேறு விவசாய உத்திகளை விவசாயிகளுக்கு வழங்குவதற்காக, தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பண்ணை சார் பயிர் மேலாண்மை மென்பொருளை வேளாண்மைத் துறை வடிவமைத்துள்ளது.

விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில் நுட்பங்களை விவசாயப் பெருமக்களிடம் எடுத்துச் செல்லும் வகையில், உழவர் பெருவிழா எனும் விழிப்புணர்வு முகாம்களை கிராம அளவில் நடத்த எனது அரசு முடிவு செய்துள்ளது. இந்த விழிப்புணர்வு முகாம்கள், வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் விற்பனை, வேளாண் பொறியியல், விதைச்சான்று, கால்நடைப் பராமரிப்புத் துறை, மீன்வளம் மற்றும் பால்வளம் போன்ற துறை அலுவலர்கள்; தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் வேளாண் அறிவியல் நிலையங்களைச் சார்ந்த விஞ்ஞானிகள்; தொடக்க வேளாண்மைக்

கூட்டுறவு வங்கிகள் மற்றும் அந்தந்தப் பகுதிகளைச் சார்ந்த சேவை வங்கியின் பிரதிநிதிகள் மூலம் ''நடமாடும் விரிவாக்க மையம்'' என்ற அணுகுமுறை மூலம் நடத்தப்படும்.

குறிப்பிட்ட கிராமச் சூழ்நிலைக்கு மிகவும் பொருந்தும் வகையில் தெரிவு செய்யப்பட்ட இலாபகரமான பயிர் ரகம், தொழில்நுட்பங்கள், கால்நடை வளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்பு, வேளாண் காடுகள் வளர்ப்பு, மீன்வளம் முதலான இனங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த பண்ணை முறையினைப் பின்பற்றி, பண்ணை உற்பத்தித் திறனை உயர்த்தும் வகையில் தகவல்கள் மற்றும் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடம் எடுத்துரைப்பதற்காக இவ்வலுவலர்கள் இதர இடுபொருட்கள் விநியோகிப்பாளர்களுடன் இணைந்து ஒவ்வொரு வருவாய் கிராமத்திற்கும் சென்று, ஒரு நாள் முழுவதும் விவசாயிகளுடன் கலந்துரையாடுவார்கள். அந்தந்தக் கிராமங்களில் ஏற்படும் பண்ணை அளவிலான களப் பிரச்சனைகளுக்கு இந்த முகாம்களில் தீர்வு காணப்படும்.

தெருக்கூத்துகள், நாடகங்கள், கிராமிய பாடல்கள் மற்றும் நடனம் மூலமாக விவசாயிகள் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில், தகவல்கள் இந்த முகாம்களில் அளிக்கப்படும். மேலும், பல்வேறு செயல் விளக்கங்கள், சிறு கண்காட்சிகள், வல்லுநர்கள் மற்றும் இடுபொருட்கள் விநியோகிப்பாளர்களுடனான கலந்துரையாடல்கள் ஆகியவையும் இந்த முகாம்களில் இடம் பெறும். இம்முகாம்களில், விவசாயிகள் ஒருங்கிணைந்த கையேடு, விவசாயிகள் தொழில்நுட்ப வழிகாட்டி, வேளாண் இடுபொருட்கள் ஆகியவை விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.

அனைத்துத் துறைகளின் பணிகள், திட்டப் பலன்கள் மற்றும் அலுவலர்களின் முயற்சிகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, விவசாயிகளுக்குத் தேவையான தொழில் நுட்பச் செய்திகள் மற்றும் திட்டப் பலன்கள் விவசாயிகளின் சொந்த கிராமத்திலேயே கிடைக்கச் செய்யும் வகையில் நடத்தப்படும் இந்த உழவர் பெருவிழா, எதிர் வரும் தமிழ்ப் புத்தாண்டு தினமான ஏப்ரல் 13, 2012 அன்று தொடங்கி, தமிழகத்தில் உள்ள 16,564 வருவாய்

கிராமங்களிலும் நடத்தப்படும். இந்த முகாம்களில் கலந்து கொள்ளும் விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவருக்கும் அறுசுவை விருந்து அளிக்கப்படும். நவீன வேளாண்மையில் உள்ள சவால்களை விவசாயிகள் எதிர்கொண்டு, அவர்களை வேளாண் வல்லுநர்களாக்கி, தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியை விரைவில் ஏற்படுத்த இந்த உழவர் பெருவிழா வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

புதுக்கோட்டை நகராட்சி அடிப்படை வசதிகளுக்கு ரூ.50 கோடி

12.04.2012

இந்தியாவிலேயே விரைந்து நகர்மயம் ஆகி வளர்ந்து வரும் மாநிலங்களில் ஒன்றாகத் தமிழகம் திகழ்ந்து வருகிறது. நகரங்கள் நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் வலு சேர்க்கும் இயந்திரங்கள் ஆகும். அதே நேரத்தில், நகர்ப்புரங்களில் மக்கள் தொகை பெருகிவருவதன் காரணமாக, அடிப்படை வசதிகளின் தேவைகள் அதிகரித்து வருகின்றன. இதனை நிறைவு செய்யும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

இந்த அடிப்படையில், சென்னை மற்றும் அதனைச் சார்ந்த புறநகர்ப் பகுதிகளுக்காகச் ''சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம்'' மற்றும் இதர மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளுக்குக் கூடுதல் நிதி வழங்கும் ''ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்'' என்ற இரண்டு மாபெரும் புதிய திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகின்றது.

இதன்படி 2011–2012ஆம் ஆண்டில் சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்திற்கு 500 கோடி ரூபாயும், ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்திற்கு 750 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவ்விரு திட்டங்களின் கீழ் சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர் வழங்கல், பாதாள சாக்கடை, மழைநீர் வடிகால், மற்றும் சுகாதாரப் பணிகள், திடக்கழிவு மேலாண்மை, பேருந்து நிலையங்களின் மேம்பாடு, வாகனங்கள் நிறுத்துமிடம் ஆகிய அடிப்படை கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட பணிகள் நடைமுறையில் உள்ள திட்டங்களுடன் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படுகின்றன. இதேபோல, 2012–2013ஆம் ஆண்டிற்கும், சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்திற்கு

500 கோடி ரூபாயும், ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்திற்கு 750 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை நகரம் தமிழ்நாட்டின் பழம்பெரும் நகரங்களில் ஒன்றாகும். இது வரலாற்றுப் பராம்பரியமும், சிறப்பும் கொண்ட ஒரு நகரம் ஆகும். புதுக்கோட்டை மாவட்டம் 1974ஆம் ஆண்டு புதிய மாவட்டமாக மலர்ந்தது. ஆனால், அதற்கு 62 ஆண்டுகளுக்கு முன்னரே புதுக்கோட்டை நகராட்சி உருவாக்கப்பட்டது. 1912ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட புதுக்கோட்டை நகராட்சி 100 ஆண்டுகளை இந்த ஆண்டு நிறைவு செய்திருக்கிறது.

10.82 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் தோற்றுவிக்கப் பட்ட இந்நகராட்சி தற்போது புதுக்கோட்டை ஊராட்சிப் பகுதி முழுவதுமாக இணைத்து எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டு 21.95 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாக உயர்ந்துள்ளது. எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதன் காரணமாக, 42 வார்டுகளாக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள புதுக்கோட்டை நகராட்சியில் தற்போது 180 கி.மீ. நீளமுள்ள சாலைகள், 6,355 தெரு விளக்குகள், 2 பூங்காக்கள், ஒரு பேருந்து நிலையம், 43 பள்ளிக் கட்டடங்கள் மற்றும் பிற அலுவலகக் கட்டடங்கள், 10 நீர்த் தேக்கத் தொட்டிகள் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளன.

இந்நகரத்திற்கான பாதாள சாக்கடைத் திட்டம் அமைத்திட எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் அதாவது 7.2.2006இல் ஆணையிடப்பட்டது. தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்–3இன்கீழ் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் 30.6.2012இல் நிறைவு பெற்று பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

புதுக்கோட்டை நகராட்சிப் பகுதிகளில் சாலை அமைத்தல், மழைநீர் வடிகால்கள் அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை மற்றும் குடிநீர்ப் பணிகள் முதலான பல்வேறு பணிகளை மேற்கொள்ள 2011–2012ஆம் ஆண்டில், ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் மற்றும் இதர திட்டங்களின் கீழ் கட்டமைப்பு வசதிகளுக்காக 16 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை நகராட்சி 100 ஆண்டுகள் நிறைவு செய்யும் இந்த ஆண்டில், நூற்றாண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட வேண்டும் என புதுக்கோட்டை நகர்மன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. மேலும், நூற்றாண்டு விழா காணும் இத்தருணத்தில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்பாடு செய்திட அரசிடம் நிதி உதவி கோரி, புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் கடிதம் அனுப்பியுள்ளார்.

புதுக்கோட்டை நகராட்சி நூறாண்டுகள் நிறைவு செய்துள்ளது என்பது பெருமைக்குரிய வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியாகும். இதனை நினைவுகூரும் வகையில், புதுக்கோட்டை நகராட்சியின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக சிறப்பு உதவித்தொகையாக 50 கோடி ரூபாய் வழங்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்கு மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும், நூறாண்டுகள் நிறைவு செய்துள்ளதையொட்டி, நூற்றாண்டு விழா நினைவுத் தூண் மற்றும் நூற்றாண்டு விழா வளைவுகள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

11 இடங்களில் புதிதாக இருபாலர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்

19.04.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகம் வீறு பெற்று, உலக அரங்கில் தனிச் சிறப்புடன் விளங்க வேண்டும் என்றால், உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி வளர்ச்சி பெறுதல் வேண்டும். ஒரு நாடு உயர் நிலையடைய, உயர் கல்வி, தொழிற் கல்வி இரண்டும் இன்றியமையாதவை.

மாநிலத்தில் உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி வளர்ச்சி அடைந்தால் மட்டுமே, புதிய புதிய கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சிகள் போன்றவை வளர்ச்சி பெறும். உயர்நிலைக் கல்வியால்தான் நாட்டின் வளர்ச்சியை உருவாக்க முடியும். அனைத்துத் துறைகளின் வளர்ச்சிக்கு ஆதாரமாக அமைவது உயர்கல்வியே. இத்தகைய உயர்கல்வியின் வளர்ச்சிக்கும், தொழிற்கல்வியின் வளர்ச்சிக்கும் எனது அரசு பல முன்னோடியான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

பள்ளி படிப்பிற்குப் பிறகு, குறிப்பாக, கிராமப்புற மாணவ, மாணவியர்கள், தங்கள் கல்வியினை நிறுத்திவிடாமல் தொடர்ந்து உயர்கல்வி கற்பதை ஊக்குவிக்கும் வகையில், எனது அரசு பொறியியல், மருத்துவம், கலை மற்றும் அறிவியல் கல்விகளுக்கான கல்லூரிகளைத் தமிழகத்தின் பல மாவட்டங்களில் துவக்கி வருகிறது. அந்த வகையில், 2011–2012 ஆம் ஆண்டில், 11 பல்கலைக்கழக உறுப்பு, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவக்கப்பட்டுள்ளன. இதுவன்றி, தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில் ஒரு அரசு பொறியியல் கல்லூரி துவங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, இந்த ஆண்டிலும் தமிழகத்தில் புதிதாக அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக உறுப்பு, கலை மற்றும்

அறிவியல் கல்லூரிகள் ஆகியவற்றைத் துவக்க எனது அரசு முடிவெடுத்துள்ளது.

இதன்படி, இந்த ஆண்டு, தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், செங்கிப்பட்டியில் ஒரு அரசு பொறியியல் கல்லூரி; மற்றும் தர்மபுரி மாவட்டம், தர்மபுரி வட்டம், செட்டிக்கரை ஊராட்சியில் ஒரு அரசு பொறியியல் கல்லூரி என இரண்டு அரசு பொறியியல் கல்லூரிகள் துவக்கப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கம்; புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை; விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம்; ஈரோடு மாவட்டம் பெருந்துறை; அரியலூர் மாவட்டம் அரியலூர்; கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை மற்றும் வேலூர் மாவட்டம் ஜோலார்பேட்டை ஆகிய 7 இடங்களில் புதிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், அதாவது Polytechnic Colleges துவக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், சேலம் மாவட்டம் எடப்பாடி; கன்னியாகுமரி மாவட்டம் கன்னியாகுமரி; திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர்; ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி; மதுரை மாவட்டம் திருமங்கலம்; திருவள்ளூர் மாவட்டம் திருவொற்றியூர்; ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி; திருநெல்வேலி மாவட்டம் கடையநல்லூர்; விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை; நாகப்பட்டினம் மாவட்டம் நாகப்பட்டினம் மற்றும் வேலூர் மாவட்டம் அரக்கோணம் ஆகிய 11 இடங்களில் புதிதாகப் பல்கலைக்கழக உறுப்பு, இருபாலர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இந்த ஆண்டு துவக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறிய நகரங்களில், அரசு கல்லூரிகள் துவக்கப்படுவதால் மாவட்டங்கள் மற்றும் கிராமப் பகுதிகளில் உள்ள மாணவ மாணவியரின் உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி கனவுகள் நிச்சயமாக நிறைவு பெறுவதோடு மட்டுமல்லாமல், இதன் மூலம் கிடைக்கும் உயர் வேலை வாய்ப்புகளினால் அவர்களது வாழ்க்கைத் தரமும், பொருளாதார நிலையும் உயரும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

சித்திரை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு!

19.04.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

13.4.2012 அன்று நடைபெற்ற சித்திரை தமிழ்ப் புத்தாண்டு விழாவில் கலந்து கொண்டு, சித்திரை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என்பதற்கான காரணங்கள் எவை என நான் எடுத்துக் கூறியது மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளதைக் கண்டு, பொறுத்துக் கொள்ள முடியாத திரு. கருணாநிதி, வீண் விதண்டா வாதங்களை தனது கட்டுரையில் எடுத்து வைத்துள்ளார்.

சித்திரை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டுக்கு உரிய பொருத்தமான நாள் ஆகும் என மதுரை ஆதீனம் அவர்கள் குறிப்பிட்டுள்ளதை நான் சுட்டிக் காட்டியதற்கு, "இது என்ன ஆதாரமா?" என்று வினவியிருக்கிறார் திரு. கருணாநிதி. நான் மதுரை ஆதீனம் என்பவரின் பெயரைக் குறிப்பிட்டுச் சொன்னது ஆதாரம் இல்லையென்றால், பெயர் குறிப்பிடப்படாமல், "ஒட்டுமொத்தமாக எல்லாத் தமிழ் அறிஞர்களும், ஒப்புக்கொண்டுள்ள உண்மை" என்று கூறி, ஒரு சட்டத்தை திரு. கருணாநிதி இயற்றியது ஆதாரத்தின் அடிப்படையிலா?

"தி.மு.க. ஆட்சியில் சென்னையிலும், கோவையிலும் நடந்த உலகத் தமிழ் மாநாடு, தமிழ் மொழியை உலகம் முழுவதும் பரப்புவதற்காக அல்லவா? என்று கேள்வி எழுப்பியிருக்கிறார் திரு. கருணாநிதி. 1968 ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, உலகத்தமிழ் மாநாடு சென்னையில் நடைபெற்றது. இது தமிழ்மொழியைப் பரப்புவதற்கு என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், 2010 ஆம் ஆண்டு, முந்தைய மைனாரிட்டி

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற மாநாடு உலகத் தமிழ் மாநாடுகளின் வரிசையில் இடம்பெறாத, கருணாநிதியின் சுய விளம்பரத்திற்காக நடத்தப்பட்ட, தன்னல, தம்பட்ட மாநாடு. திரு. கருணாநிதி குடும்பத்தினர் மற்றும் தி.மு.க.வைச் சேர்ந்த "தலைசிறந்த" தமிழ் அறிஞர்கள் முன்வரிசையில் அமர்ந்து அனைவரது கவனத்தையும் ஈர்த்தனர். உண்மையான தமிழ் அறிஞர்கள் பின் வரிசைக்குத் தள்ளப்பட்டனர்.

திரு. கருணாநிதி தன்னுடைய கட்டுரையிலே, சித்திரையில் தொடங்கி, பங்குனி வரையிலான தமிழ் மாதத்தில், அம்மாதத்தின் பௌர்ணமியன்று வரும், நட்சத்திரத்தின் பெயரே அம்மாதத்தின் பெயராகும் என்று நான் கூறியதைச் சுட்டிக்காட்டி, சித்திரை, கார்த்திகை தவிர மற்ற பெயர்களில் மாதப் பெயர்கள் இல்லையே என்று கேட்டிருக்கிறார்.

சித்திரை மாதம் பௌர்ணமியன்று சித்திரை நட்சத்திரம் வருகிறது என்றும்; கார்த்திகை மாதம் பௌர்ணமியன்று கார்த்திகை நட்சத்திரம் வருகிறது என்பதை திரு. கருணாநிதியே ஒப்புக் கொண்டுவிட்டதால், பிற மாதங்களை இங்கே விளக்கிக் கூற விரும்புகிறேன். வைகாசி மாதம் பௌர்ணமியன்று விசாகம் நட்சத்திரம் வருகிறது. அதாவது, வைசாகம் நட்சத்திரம் திரிந்து, விசாகம் என்று அழைக்கப்படுகிறது. ஆனி மாதம் பௌர்ணமியன்று, அனுஷம் நட்சத்திரம் வருகிறது. அதாவது, அனுஷம் நட்சத்திரம் மருவி, ஆனி என்றழைக்கப்படுகிறது. ஆடி மாதம் பௌர்ணமியன்று பூராடம் நட்சத்திரம் வருகிறது. பூராடம் – பூராடி என திரிந்து, ஆடி மாதம் என்றழைக்கப்படுகிறது. ஆவணி மாதம் பௌர்ணமியன்று திருவோணம் நட்சத்திரம் வருகிறது. அதாவது திருவோணம் அல்லது சிரவணம் நட்சத்திரம், சிராவணியாக திரிந்து, ஆவணி மாதம் என அழைக்கப்படுகிறது. புரட்டாசி மாதம் பௌர்ணமி தினத்தன்று பூரட்டாதி நட்சத்திரம் வருகிறது. பூரட்டாதி நட்சத்திரம் திரிந்து, புரட்டாசி என்றழைக்கப்படுகிறது. ஐப்பசி மாதம், அஸ்வினி நட்சத்திரம் வருகிறது. அஸ்வினி நட்சத்திரம், ஆஸ்விஜம் என்றழைக்கப்படுகிறது. அது திரிந்து ஐப்பசி என்றழைக்கப்படுகிறது. மார்கழி மாதத்தில், மிருகசீர்ஷம் நட்சத்திரம் வருகிறது. மிருகசீர்ஷம்

நட்சத்திரம், மார்கசீர்ஷம் என்றும் அழைக்கப்படுகிறது. இது திரிந்து மார்கழி என்றழைக்கப்படுகிறது. தை மாதம் பௌர்ணமி அன்று, பூசம் நட்சத்திரம் வருகிறது. இதற்கு தைஷ்யம் என்று மற்றொரு பெயரும் உண்டு. இதுவே தை ஆனது. மாசி மாதம் பௌர்ணமியன்று மகம் நட்சத்திரம் வருகிறது. மகம் நட்சத்திரத்தை மாக, அதாவது மாசி, என்றும் அழைப்பார்கள். இதுவே மாசி என்றழைக்கப்படுகிறது. பங்குனி மாதம் பௌர்ணமியன்று உத்திரம் நட்சத்திரம் வருகிறது. இதை உத்திரப் பல்குனி என்றும் அழைப்பார்கள். இதுவே பங்குனி மாதம் என்று அழைக்கப்படுகிறது. எப்படி சென்னப்பட்டினம் என்பது காலப்போக்கில் சென்னை என்று மருவியதோ, சைலம் என்பது சேலம் என்று எவ்வாறு மருவியதோ; அதுபோல்தான் இவையும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

தை முதல்நாளைத் தமிழ்ப் புத்தாண்டாக அறிவிக்க வேண்டும் என்று மறைமலை அடிகள் கூறவில்லை என்பதை எடுத்துக்காட்ட திரு. கருணாநிதியின் கருத்தை ஒட்டிய, சிறுவை நச்சினார்க்கினியன் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டினையொட்டி வெளியிடப்பட்ட மலரில், ''திருவள்ளுவனார் காலம் இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதென்பது எளிதிற் பெறப்படும். கிறித்துப் பிறப்பதற்கு 30 ஆண்டுகட்கு முன் திருவள்ளுவர் பிறந்தார் என்பது நான் ஆராய்ந்து கண்ட முடிவாகும்'' என்று 1935 ஆம் ஆண்டு, சென்னை பச்சையப்பன் மண்டபத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் தினத்தில் மறைமலையடிகளார் பேசியதாகக் கூறியிருப்பதை மேற்கோள் காட்டினேனே தவிர, அந்தப் பக்கத்திற்கு முன் பக்கத்தில் சிறுவை நச்சினார்க்கினியன் தெரிவித்துள்ள கருத்தைப் பற்றி நான் எதுவும் சொல்லவில்லை. தை முதல்நாள்தான் தமிழ்ப் புத்தாண்டு என்று மறைமலை அடிகளார் சொல்லவில்லை என்பதற்காகத்தான் மேற்படி கட்டுரையை நான் மேற்கோள் காட்டினேன்.

''வாழ்வியற் களஞ்சியம்'', என்ற நூலைக் குறிப்பிட்டு, ஆகம விதியின்படி தை முதல்நாள்தான் புத்தாண்டு என்று கூறியிருக்கிறார் திரு. கருணாநிதி. ''தை பிறந்தால் வழி பிறக்கும்'', என்று தான் குறிப்பிடப்பட்டு இருக்கிறதே தவிர, ''தை பிறந்தால் புத்தாண்டு பிறக்கும்'' என்று குறிப்பிடப்படவில்லை.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி என்ற நூலினை மேற்கோள் காட்டி, அந்த நூலில் தமிழாண்டின் தொடக்க மாதம் தை என்று குறிப்பிட்டிருப்பதாக கூறியிருக்கிறார் திரு. கருணாநிதி. அந்த நூலில் 113ஆவது பக்கத்தில் ''இச்செய்தி, தமிழ் ஆண்டு எனும் நூலிலிருந்து தொகுக்கப்பட்டது'' என்று இருப்பதை தனக்கு வசதியாகத் திரு.கருணாநிதி மறைத்துவிட்டார். அந்தச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலியில் தைமாதம்தான் தமிழ் ஆண்டின் தொடக்க மாதம் என்று ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தால் இதனை அடுத்து, தை – ஒரு திங்கள்; The tamil month, January – February என்று ஏன் குறிப்பிடப்பட்டுள்ளது?

தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என்று அறிவித்து, நடைமுறைப்படுத்திடக் கழக அரசு முடிவு செய்துள்ளது என்று 23.1.2008 அன்று ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டதாகத் திரு. கருணாநிதி கூறியிருக்கிறார். ஆளுநர் உரையில் அறிவிக்கப்படுவதற்கு முன்பாகவே, திரு. கருணாநிதியின் மகள் கனிமொழியால் நடத்தப்பட்ட சென்னை சங்கமம் விழாவில் திரு. கருணாநிதி, ''சங்கமம் போற்றுதும் என்று போற்றிப் பாடி, இது ஆண்டுதோறும் நடக்க வேண்டும்; பொங்கல் திருநாளை நினைவூட்டும் வகையில் தொடர்ந்து நடக்க வேண்டும். தமிழரின் புத்தாண்டு தை முதல்நாள் என்று 500 புலவர்கள் கூடிக் கண்டுபிடித்து அறிவித்து இருக்கிறார்கள். அதை அதிகாரப் பூர்வமாக அறிவிக்கும் நாள் விரைவில் வரும்'' என்று கூறியுள்ளார். எனவே, சென்னை சங்கமம் விழாவில் தான், இது முதன் முதலாக அறிவிக்கப்பட்டது. ஒரு வேளை, தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டால் தான் ஆண்டுதோறும் சென்னை சங்கமம் விழா நடத்தப்பட்டு, அதற்கு ஓர் அங்கீகாரம் கிடைக்கும் என்று திரு. கருணாநிதி எண்ணினார் போலும்!

''தமிழர் திருநாள்'' என்னும் தலைப்பில் திரு. மு.வ. அவர்களால் 1960 ஆம் ஆண்டு கலைமகள் பொங்கல் மலரில் எழுதப்பட்ட கட்டுரையில், தைத் திருநாளை இயற்கைக்கு நன்றி செலுத்தும் திருவிழா என்றுதான் குறிப்பிட்டு இருக்கிறாரே தவிர,

அதைத் தமிழ்ப் புத்தாண்டு என்று குறிப்பிடவில்லை என்பதை இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

2008 ஆம் ஆண்டு, ஆளுநர் உரையில், ''திருவள்ளுவர் ஆண்டு பிறக்கும் தைத் திங்கள் முதல் நாள் தான் தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என்பது ஒட்டுமொத்தமாக எல்லாத் தமிழ் அறிஞர்களும் ஒப்புக் கொண்டுள்ள உண்மை என்பதால் தைத் திங்கள் முதல் நாளையே, தமிழ்ப் புத்தாண்டு தொடக்கம் என அறிவித்து, நடைமுறைப்படுத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதே திரு. கருணாநிதி, திருவள்ளுவர் நாளை பொது விடுமுறை நாளாக அறிவிக்க வேண்டும் என்று 1963ஆம் ஆண்டு தி.மு.க. சார்பில் கொண்டு வரப்பட்ட தனி நபர் தீர்மானத்தின் மீது இந்தச் சட்டப் பேரவையில் உரையாற்றிய போது, ''... மாதந்தோறும் இரண்டாவது சனிக்கிழமை விடுமுறை தினமாக விட்டு வருகிறோம். ஒரு திங்களில் ஒரு இரண்டாம் சனிக்கிழமையைக் கூட, திருவள்ளுவருடைய நினைவு நாளாகக் கொண்டாட, விடுமுறை தினம் என்று அறிவிக்கலாம். இரண்டாம் சனிக்கிழமையன்று என அமையாது திங்கள் கிழமை அல்லது செவ்வாய்கிழமை என்று வருமானால், அந்தத் திங்களில் இரண்டாம் சனிக்கிழமையை வேலை நாளாகக் கொண்டுவிட்டு, திருவள்ளுவருடைய நினைவு நாள் என்று குறிக்கப்பட்ட தினம் என்று வருகிறதோ அன்றைக்கு விடுமுறை அளிக்க அரசாங்கம் முன் வரலாம். திருவள்ளுவருடைய தினத்தை நவம்பர் மாதம் கொண்டாடுவது என்றால் நவம்பர் மாதத்தில் இரண்டாவது சனிக்கிழமை விடுமுறை விடுவதற்குப் பதிலாக, அந்தத் திங்களில் திருவள்ளுவருடைய நினைவு நாளாகக் குறித்த தினத்திற்கு விடுமுறை அளிக்கும்படியாக இந்தத் தீர்மானத்தின் மூலம் அமைத்துக் கொள்ளலாம்'' என்று பேசியிருக்கிறார். ஏன் அப்போது இப்படிப் பேசினார் திரு. கருணாநிதி? அப்பொழுதே திருவள்ளுவர் தை மாதத்தில் தான் பிறந்தார் என்று கூறி, அந்த நாளை விடுமுறை நாளாக அறிவிக்குமாறு கேட்டுக் கொண்டிருக்கலாமே!

2008 ஆம் ஆண்டு, சென்னை சங்கமம் விழாவில் உரையாற்றும் போது, தைத்திங்கள் முதல்நாள் தமிழ்ப் புத்தாண்டு என விரைவில் அறிவிக்கப்படும் என திரு. கருணாநிதி அறிவித்ததைத் தொடர்ந்து, 17.1.2008 அன்று, அன்றைய தமிழ் வளர்ச்சி இயக்குநர், தமிழக அரசுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவ்வாறு அறிவிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ள கருத்துருவில், 2004 ஆம் ஆண்டு அரசுக்கு எழுதப்பட்ட கடிதத்தில், சித்திரை முதல் நாளுக்குப் பதிலாக, தைத் திங்கள் முதல் நாளைத் தமிழ்ப் புத்தாண்டு என்று அறிவிக்கக் கருதினால், இப்பொருண்மையைத் தமிழ் வளர்ச்சி மன்றத்தில் வைத்து, ஆய்வு செய்து முடிவு செய்வது ஏற்புடையதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருந்ததையும் சுட்டிக் காட்டியிருந்தார். இவ்வாறான கடிதம், இது ஆய்வு செய்து முடிவு செய்யப்பட வேண்டிய பொருள் என்று அமைந்துவிடும் என்பதால், அரசின் அறிவுரை காரணமாகவோ என்னவோ இந்த வாசகங்கள் அடிக்கப்பட்டு, திருத்திய கடிதம்தான் அரசுக்கு அனுப்பப்பட்டது. முறையாக ஆய்வு எதையும் செய்யாமல் தன்னிச்சையாக, தான்தோன்றித்தனமாக, அந்தச் சட்டத்தை இயற்றினார் திரு. கருணாநிதி. ஆனால், அந்தச் சட்டத்தினை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. மக்கள் தொடர்ந்து சித்திரை முதல் நாளையே தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடி வருகின்றனர் என்பது தான் உண்மை.

தை முதல்நாளை, தமிழ்ப் புத்தாண்டு என திரு. கருணாநிதி அறிவித்து சட்டம் இயற்றியது முறையற்ற, மரபு மீறிய, மக்கள் மனதைப் புண்படுத்துகின்ற செயல் என்பதையும் திரு. கருணாநிதியால் மக்கள் மீது திணிக்கப்பட்ட இந்தச் சட்டத்தை நான் ரத்து செய்தேனே தவிர எதையும் மக்கள் மீது திணிக்கவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

தமிழ்நாடு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம்

20.04.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நோயற்ற வாழ்வாகிய குறைவற்ற செல்வத்தை பெற்றால் தான் எச்செல்வத்தையும் பெற முடியும்" என்பதன் அடிப்படையில், மாநிலத்தின் ஒட்டுமொத்த மக்களின் ஆரோக்கியம் மற்றும் சுகாதார முன்னேற்றத்தை மேம்படுத்துவதில் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

நகர்ப்புற மக்களுக்கு இணையாக கிராமப்புற மக்களுக்கும் மருத்துவ வசதி கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன், கிராமப்புறங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு, அவசர மகப்பேறு, அறுவை சிகிச்சை போன்றவற்றிற்குத் தேவையான அனைத்து உபகரணங்களும் அளிக்கப்பட்டுள்ளன. இது மட்டுமல்லாமல், தமிழகத்தில் உள்ள பல்வேறு மருத்துவ நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுதல், பழுது பார்த்தல், புதிய மருத்துவ நிலையங்களை ஆரம்பித்தல் போன்ற நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

இது தவிர, அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட மருத்துவமனைகள், 150 வட்ட மருத்துவமனைகள் மற்றும் 15 வட்டம் சாரா மருத்துவமனைகளில் பல் மருத்துவப் பிரிவு நிறுவப்பட்டு பல் மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பல் பராமரிப்பின் அவசியத்தை கிராம மக்களுக்கு உணர்த்தும் வகையில், 22 வட்டம் சாரா மருத்துவமனைகள் மற்றும் 208 ஆரம்ப சுகாதார நிலையங்களில்

வாரத்திற்கு மூன்று நாட்கள் பல் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இது மட்டுமல்லாமல், 2,000க்கும் மேற்பட்ட புறநோயாளிகள் சிகிச்சை பெறும் மருத்துவமனையான சென்னையில் உள்ள அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையை விரிவாக்கம் செய்யும் பொருட்டு, எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சுமார் 14 கோடி ரூபாய் மதிப்பில் பல் மருத்துவக் கல்லூரிக்கான ஒரு புதிய அடுக்குமாடி கட்டடம் என்னால் கடந்த மாதம் 3ஆம் தேதி திறந்து வைக்கப்பட்டது.

இந்த பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு, தமிழ்நாடு மட்டுமல்லாமல் அண்டை மாநில மக்களும் சிகிச்சை பெற வருகின்றனர்.

இந்த மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளின் நலனைக் கருத்தில் கொண்டும், பல் மருத்துவக் கல்லூரியின் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்திலும், தமிழ்நாடு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம் கட்டுவதற்கும், புதிய பணியிடங்களைத் தோற்றுவிப்பதற்கும், இதனை ஒப்புயர்வு மையமாக, அதாவது Centre of Excellence in Dentistry ஆக தரம் உயர்த்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், அதற்காக 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

கிராமங்களை சுகாதார மயமாக்க அரசின் நிதியுதவி

26.04.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

தூய்மை என்பது உண்ணும் உணவு, உடுக்கும் உடை, இருக்கும் இடம் ஆகியவற்றில் மட்டுமல்லாமல் மாசுமறுவற்ற காற்றும், தூய்மையான குடிநீரும் கிடைக்கும் வண்ணம் சுற்றுப்புறமும் தூய்மையாக இருத்தல் வேண்டும். இந்த நிலையை அடைவதற்கான அடிப்படைத் தேவை, நாட்டில் நல்ல சுகாதாரமான சூழ்நிலையை உருவாக்குவதே ஆகும்.

இந்த சூழ்நிலையை உருவாக்கும் பொருட்டு, தமிழ்நாட்டில் சுகாதார புரட்சியின் மூலம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில், சுற்றுச்சூழல் சுகாதார மேம்பாட்டை உள்ளடக்கிய தூய்மையான கிராம இயக்கம் என்ற ஒரு திட்டம் எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது 2003ஆம் ஆண்டு துவக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின்படி, திறந்த வெளியில் மலம் கழித்தலை தடுத்தல், மழைநீர் சேகரிப்பு, திடக்கழிவு மேலாண்மை, மனிதக் கழிவுடன் இணைந்த எரிவாயு கலன் அமைத்தல், தனி நபர் இல்லங்கள் மற்றும் பள்ளிகளில் சுகாதார வசதி ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. திறந்த வெளி மலம் கழித்தலை அகற்றுதல், திடக்கழிவு மேலாண்மை ஆகியவற்றின் மூலம் நூறு விழுக்காடு சுகாதாரத்தை எய்துகின்ற ஊராட்சிகளுக்கு அரசின் சார்பில் ரொக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டு வந்தன. இந்தத் திட்டத்தின் மூலம் முழுமையான சுகாதார அமைப்புகள் பெற்ற கிராமங்கள் உருவாயின. ஆனால், பின்னர் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் காரணமாக, இந்தத் திட்டம் 2006–2007ஆம் ஆண்டு முதல் தி.மு.க. அரசால் செயல்படுத்தப்படவில்லை.

நான் மீண்டும் தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன், சுகாதார கிராமங்களை உருவாக்குகின்ற திட்டத்தை மீண்டும் செயல்படுத்துமாறு நான் உத்தரவிட்டேன்.

மேலும், எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட மகளிர் பொது சுகாதார வளாகங்கள், 2006ஆம் ஆண்டுக்கு பின்னர் சரிவர பராமரிக்கப்படாததால் அவை பயன்படுத்தப்படாமல் இருந்ததை கருத்தில் கொண்டு, நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, 170 கோடி ரூபாய் செலவில், 12,793 மகளிர் சுகாதார வளாகங்கள் சீரமைக்கப்பட்டன.

தற்போது இந்த மகளிர் வளாகங்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

சுகாதார கிராமங்களை உருவாக்கும் வண்ணம், ''முழு சுகாதாரத் திட்டத்தின்'' கீழ் தனி நபர் இல்லக் கழிப்பறைகள் கட்டப்படுகின்றன. தற்போது ஒரு இல்லத்திற்கான தனி நபர் கழிவறை கட்டும் பொருட்டு, மத்திய அரசின் சார்பில் 2,200 ரூபாயும், மாநில அரசின் சார்பில் 1,000 ரூபாயும் வழங்கப்படுகிறது. இதில் பயனாளியின் பங்குத் தொகை 300 ரூபாய் ஆகும். ஆக மொத்தம் 3,500 ரூபாய் செலவில் தனி நபர் இல்லக் கழிவறை கட்டப்படுகிறது.

தற்போது, தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்கு வரையறுக்கப்பட்டுள்ள 3,500 ரூபாய் என்பது போதுமானதாக இல்லையென்றும், இந்தத் தொகையை வைத்து, தனி நபர் இல்லக் கழிப்பறையை முழுமையாக அமைத்திட இயலாது என்றும், இந்தத் தொகையினை உயர்த்தி வழங்க வேண்டும் என்றும் அரசுக்கு கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன.

இந்தக் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையிலும், சுகாதார கிராமங்களை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தினை பூர்த்தி செய்யும் வகையிலும், ஒவ்வொரு தனி நபர் இல்லக் கழிப்பறை அமைப்பதற்காக, மாநில அரசின் சார்பில் வழங்கப்படும் அலகுத் தொகையினை 1,000 ரூபாயிலிருந்து 2,500 ரூபாயாக உயர்த்தி

வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்படி, மாநில அரசின் பங்கு 2,500 ரூபாய் எனவும், மத்திய அரசின் பங்கு 2,200 ரூபாய் எனவும், பயனாளியின் பங்கு 300 ரூபாய் எனவும் இருக்கும். இதன்படி, தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்காக வரையறுக்கப்பட்டுள்ள தொகை 5,000 ரூபாய் என உயர்த்தப்படுகிறது.

எனது அரசின் இந்த நடவடிக்கையின் மூலம், தமிழ்நாடு முழுவதும் சுகாதார கிராமங்கள் உருவாகும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

அரசுக் கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.100 கோடி

02.05.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு கல்வியில் முதன்மை மாநிலமாக விளங்க வேண்டும் என்ற நோக்கத்தில் கல்வித் துறையில் பல்வேறு முன்னோடி நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

அனைத்து மாணவ, மாணவியரும் இடை நிற்றல் இன்றி உயர் கல்வி கற்று, அதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்ற குறிக்கோளின் அடிப்படையில், இந்த ஆண்டு, தமிழ்நாட்டில் இரண்டு புதிய அரசுப் பொறியியல் கல்லூரிகள்; ஏழு புதிய அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள், Polytechnics; மற்றும் பதினொன்று புதிய பல்கலைக்கழக உறுப்பு இரு பாலர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும் என்று 19.4.2012 அன்று இந்த சட்டமன்றப் பேரவையில் நான் அறிவித்தேன்.

புதிய கல்லூரிகள் ஏற்படுத்துவதுடன், தற்போதுள்ள கல்லூரிகளில் மாணவ – மாணவியர் உற்சாகத்துடன் கல்வி பயிலும் வகையில் நல்லதொரு சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதே எனது விருப்பம் ஆகும்.

இதன் அடிப்படையில், தற்போது தமிழகத்தில் செயல்பட்டு வரும் 62 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 7 அரசு கல்வியியல் கல்லூரிகள் மற்றும் 24 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் என 93 அரசு மற்றும் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில், இக் கல்லூரிகளுக்குத் தேவையான அனைத்து

அடிப்படை வசதிகளையும் உடனடியாகச் செய்து தர எனது தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது. இதன்படி, ஏற்கெனவே குறிப்பிட்ட அரசுக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகள் 100 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டிலிருந்து, மாணவ – மாணவியர் மற்றும் ஆசிரியர்களுக்குத் தேவைப்படும் புதிய மேசைகள் மற்றும் நாற்காலிகள் வழங்குதல்; வகுப்பறைகளில் நவீன கரும்பலகைகள் மற்றும் அறிவிப்புப் பலகைகள் அமைத்தல்; மொழி ஆய்வகங்களுக்கு கணினி மேசைகள் மற்றும் கணினி நாற்காலிகள் வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

மேலும், கல்லூரிகளில் உள்ள துறை சம்பந்தப்பட்ட நூலகங்களுக்குத் தேவையான மேசைகள் மற்றும் நாற்காலிகள் வழங்குதல்; புத்தகங்கள் வைப்பதற்கான அலமாரிகள் அமைத்துத் தருதல்; நூலகங்களுக்குத் தேவையான புத்தகங்கள் வழங்குதல்; மற்றும் நூலகங்கள் கணினிமயம் ஆக்கப்படுதல் போன்ற பணிகளும் இந்த நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

மேலும், கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்கள், தங்கள் பாடங்கள் சம்பந்தமாக மேற்கொள்ளவிருக்கும் பரிசோதனைகளுக்காகக் கல்லூரிகளில் தரம் வாய்ந்த ஆய்வுக் கூடங்கள் ஏற்படுத்துதல்; அதற்குத் தேவையான உபகரணங்களை வழங்குதல்; மேசைகள், பணி மேசைகள் வழங்குதல், தண்ணீர்க் குழாய்கள் மற்றும் வாயுக் குழாய்கள் அமைத்துத் தருதல், அறிவியல் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு PROJECTOR வழங்குதல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படும்.

இவையன்றி, கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு சுகாதாரமான குடிநீர் வழங்க வசதிகள் ஏற்படுத்தித் தருதல்; மாணவ, மாணவியர் விடுதிகளில் சமையலறை மற்றும் உணவறைக் கூடங்களை மேம்படுத்துதல்; கழிப்பறை வசதிகள் செய்து கொடுத்தல்; குப்பை அகற்றும் கூடைகள் வைத்தல்;

மற்றும் வகுப்பறைகள், நூலகம், ஆசிரியர்களின் ஓய்வறைகள், உணவறைக் கூடங்கள் ஆகியவற்றில் மின் விளக்கு மற்றும் மின் விசிறி ஏற்படுத்தித் தருதல் மற்றும் மின் உபகரணங்களை வழங்குதல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படும்.

அரசுக் கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த இதுவரை இல்லாத அளவு உயர் ஒதுக்கீடாக 100 கோடி ரூபாய் வழங்கப்படுகிறது. இதன் மூலம், அரசுக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் அனைத்து வசதிகளையும் பெற வழிவகை ஏற்படுவதோடு மட்டுமல்லாமல், இந்தக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் அறிவுத் திறன் மேம்பட்டு, அவர்கள் அகில இந்திய அளவில் முன்னிலை இடத்தைப் பெறும் வாய்ப்புகள் ஏற்படும் என்பதைப் பெருமிதத்துடன் கூறி அமைகிறேன்.

❋ ❋ ❋

காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினருக்கு 36 ஆயிரம் குடியிருப்புகள்

03.05.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மெய் வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது", அல்லும் பகலும் அயராது மக்களின் உயிரையும், உடைமையையும் பாதுகாக்கும் உன்னதப் பணியை மேற்கொள்ளும் காவல் துறையினருக்கு தங்கள் சொந்த நலன்களைப் பற்றி சிந்திக்க நேரம் இருப்பதில்லை.

மக்கள் நலன் காக்கும் மகத்தான பணியில் ஈடுபட்டிருக்கும் காவலர்களின் நலன் காக்கும் வண்ணம், அவர்களுக்கென ஒரு சொந்த இல்லம் கட்டித் தரும் பொருட்டு, தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம் 1981ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த நிறுவனம் தொடங்கப்பட்டு 30 ஆண்டுகளுக்கு மேலாகியும், "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின் கீழ் இதுவரை 12 இடங்களில் 1,985 வீடுகள் மட்டுமே கட்டிக் கொடுக்கப்பட்டு உள்ளன.

"உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின் கீழ் காவலர்களுக்குப் போதுமான அளவு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை என்பதை அறிந்த நான், கடந்த 24.4.2012 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தின் போது, "காவலர்கள் ஓய்வு பெற்ற பின் அவர்களுக்கு சொந்த வீடு கிடைக்க ஆவன செய்ய இந்த அரசு ஒரு திட்டம் தீட்டி செயல்படுத்தும்" என அறிவித்து இருந்தேன்.

இதன்படி, "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின் கீழ், காவல் துறையில் காவலர்கள் முதல் துணைக் கண்காணிப்பாளர்கள் வரையிலான பதவிகளில் உள்ளவர்களுக்கும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் தீயணைப்போர் முதல் கோட்ட

அலுவலர்கள் வரையிலான பதவிகளில் உள்ளவர்களுக்கும் சொந்த வீடு கட்டித் தர தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் நடவடிக்கை எடுக்கும். ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் 10 ஏக்கர் நிலமும், காஞ்சிபுரம் மாவட்டம், மேலக்கோட்டையூர் கிராமத்தில் 100 ஏக்கர் நிலமும் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திற்கென ஒதுக்கீடு செய்து தரப்படும். கட்டுமானப் பணிகளை காவலர் வீட்டு வசதிக் கழகம் மேற்கொண்டு வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவலர்கள், தலைமைக் காவலர்கள், தீயணைப்போர், முன்னிலை தீயணைப்போர், மற்றும் உதவி நிலைய அலுவலர்கள் ஆகியோருக்கு 650 சதுர அடி கொண்ட வீடுகளும்; உதவி ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள், நிலைய அலுவலர்கள் மற்றும் உதவிக் கோட்ட அலுவலர்கள் ஆகியோருக்கு 850 சதுர அடி கொண்ட வீடுகளும்; காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் கோட்ட அலுவலர்களுக்கு 1,100 சதுர அடி கொண்ட வீடுகளும் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் லாப நோக்கமின்றிக் கட்டித் தரப்படும். இந்த வீடுகள் அடுக்குமாடிக் குடியிருப்புகளாகக் கட்டப்படும். இந்தத் திட்டத்தின் கீழ் சுமார் 36,000 குடியிருப்புகள் கட்டப்படும். காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களது இட விருப்பம் ஆகியவற்றின் அடிப்படையில் இத்திட்டம் இந்த ஆண்டு முதல் துவங்கப்பட்டு படிப்படியாகச் செயல்படுத்தப்படும். இந்த வீடுகளுக்கான விலையை காவல் துறையினர் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர் அவரவர் விருப்பத்திற்கேற்ப முழுவதும் ரொக்கமாகவோ அல்லது மாதத் தவணையிலோ செலுத்த வழிவகை செய்யப்படும்.

இதன் மூலம் காவல் துறையினர் தமக்கென சொந்த வீடு கட்ட இயலவில்லை என்ற குறை நிவர்த்தி செய்யப்படுவதோடு, மக்கள் சேவையில் காவல் துறையினர் முழு அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

சுசீந்திரத்தில்
கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை
அவர்களுக்கு சிலை

04.05.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இருபதாம் நூற்றாண்டில் புகழ் பெற்று விளங்கிய கவிஞர்களில் ஒருவராக விளங்கியவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள். கவிமணியின் பாடல்களில் உண்மையும், அழகும் கைகோர்த்துச் செல்வதை உணர முடியும். கவிமணி அவர்களை ''இனிமைக் கவிஞர்'', ''இளமைக் கவிஞர்'', ''உண்மைக் கவிஞர்'', ''உணர்ச்சிக் கவிஞர்'' எனக் கூறுவது சாலப் பொருத்தமாக அமையும்.

''தேசிக விநாயகத்தின் கவிப் பெருமை தினமும் கேட்பது எனது செவிப் பெருமை'' எனக் கூறியவர் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்கள்.

இவரது உண்மையுள்ளம், உண்மைப் பாடல்களின் மூலமாய், உண்மை வித்துக்களைக் கற்பவர் மனதில் விதைத்து, உண்மைப் பயிரை செழித்தோங்கச் செய்கிறது; இவர் பாடல்களில் காணும் தெளிவும், இனிமையும், இவரது உள்ளத்திலேயுள்ள தெளிவு, இனிமை முதலிய சிறந்த இயல்புகளின் நிழற்படமேயாகும் என்று புகழாரம் சூட்டியவர் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்கள்.

கவிமணி அவர்கள் வாழ்ந்த நாஞ்சில்நாடு மலையாள நாட்டின் ஒரு பகுதியாக இருந்தாலும், தமிழ் இலக்கிய இலக்கணங்களை நன்கு கற்று கவிபுனையும் ஆற்றலைப் பெற்றிருந்தார். பழந்தமிழ்ப் பண்பும், தமிழ் மணமும், புதுமைக் கருத்துகளும் நிறைந்த பல பாடல்களைக் கவிமணி அவர்கள்

எழுதியுள்ளார். இப்பாடல்களின் தொகுப்பான "மலரும் மாலையும்" நூலில் இருந்து, இவருடைய நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இறைவழிபாடு, சாதிபேதம் கடிதல் மற்றும் குழந்தைகளிடம் கொண்ட பற்று ஆகியவற்றை அறியலாம்.

"பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காப்பது நமது கடமை" என்றும், "உரிமை வாழ்வின் பயனை நினையாது வாதினை விளைவித்துச் சண்டை செய்வது தேவையற்றது" என்றும் வலியுறுத்தியவர் கவிமணி அவர்கள்.

குழந்தைகளுக்காகத் தாய்மார்கள் பாடும் தாலாட்டுப் பாடல்களையும், குழந்தைகள் தாமே பாடி மகிழத்தக்க எளிய அழகிய பாடல்களையும் பாடியுள்ளார். பறவைகளைப் பற்றி குழந்தைகள் விளித்துப் பாடும் இவரது பாடல்கள் சுவை மிக்கவை.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் தித்திக்கும் பாடல்கள் நமது செவிகளுக்கு என்றும் திகட்டாத இன்பம் தரக்கூடியவை.

இப்படிப்பட்ட தலை சிறந்த தமிழ்க் கவிஞரை, தமிழ்ப் பற்றாளரைப் போற்றும் வகையில், கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரத்தில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு தமிழக அரசின் சார்பில் சிலை வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

ரூ.15 கோடி மதிப்பீட்டில் சர்வதேசத் தரத்தில் ஓட்டுநர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம்

04.05.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாகன எண்ணிக்கை உயர்வினால் அதிகரித்து வரும் சாலை விபத்துகளைத் தவிர்க்கும் வகையில், ''வேகம் விவேகமன்று'' என்பதை உணர்ந்து, சாலை விதிகளை சரியாகக் கடைபிடித்து, வாகனங்களை இயக்கக்கூடிய திறமையான ஓட்டுநர்களை உருவாக்கக்கூடிய சர்வதேசத் தரம் வாய்ந்த ஓட்டுநர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் அமைப்பது மிகவும் அவசியமாகிறது.

தரமான ஓட்டுநர்களை உருவாக்கும் பொருட்டு, சாலைப் போக்குவரத்து நிறுவனத்தால் கும்மிடிப்பூண்டியில் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சிப் பிரிவு ஒன்று 1979 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 55 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்தப் பயிற்சிப் பிரிவு வளாகத்தில் அலுவலகம், வகுப்பறைகள், ஓட்டுநர் பயிற்சி ஆய்வுக் கூடம், பணிமனை, மாணவர் விடுதி மற்றும் பணியாளர்கள் குடியிருப்புகள் போன்ற வசதிகளுடன், ஓட்டுநர் பயிற்சித் திறன்களை மேம்படுத்தும் வகையில் ஓட்டுநர் பயிற்சி மைதானமும் 15 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது.

நவீனத் தொழில்நுட்பப் பயிற்சியின் மூலம் தரமான ஓட்டுநர்களை உருவாக்கும் வகையிலும், அறிவியல் ரீதியில் ஓட்டுநர் பயிற்சி அளிக்கும் வண்ணமும், அவர்களது பண்பாட்டினை உயர்த்தும் வகையிலும், விபத்துகளை தவிர்க்கும் வகையிலும், இந்த ஓட்டுநர் பயிற்சி மையம், பல்வேறு நவீனத் தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய சர்வதேசத் தரத்திற்கு இணையாக உறைவிடத்துடன் கூடிய ஓட்டுநர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையமாக 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்மூலம், ஓட்டுநரின் திறமையை விஞ்ஞான முறையில் காணொலியுடன் பதிவு செய்யப்பட்ட வசதிகளுடன் ஆராய்ந்து, திறனில்லாத ஓட்டுநர்களை எளிதில் கண்டறியவும், அவர்களுக்குத் தரமான பயிற்சி அளிக்கவும் வழிவகை ஏற்படும். இவ்வாறு பயிற்சி பெற்றவர்களுக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் உள்ளூர் மற்றும் சர்வதேச ஓட்டுநர் உரிமங்களை வழங்கும்.

மேலும், இங்குள்ள கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்தி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள், காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணிபுரியும் ஓட்டுநர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்களின் திறன்கள் மேம்படுத்தப்படும்.

சர்வதேசத் தரத்திலான பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமாக கும்மிடிபூண்டியிலுள்ள ஓட்டுநர் பயிற்சிப் பிரிவு தரம் உயர்த்தப்படுவதன் மூலம் தமிழகத்திலுள்ள போக்குவரத்து விதிகளை நன்கு அறிந்து, சாலைகளின் தன்மைக்கேற்ப வாகனங்களை இயக்கி, விபத்துகளைப் பெருமளவில் தவிர்க்கும் திறன் கொண்ட ஓட்டுநர்களை உருவாக்குவதில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

ரூ.35 கோடி மதிப்பீட்டில் பவானிசாகர் அரசுப் பயிற்சி நிலையம் புனரமைப்பு

07.05.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

அரசு நிருவாகம் திறம்படச் செயல்படும் வகையில், அரசு ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் தங்கள் செயல் திறனை மேம்படுத்திக் கொள்வதிலும்; அறிவுத் திறனை உயர்த்திக் கொள்வதிலும் இன்றியமையாப் பங்கினை வகிப்பவை பயிற்சி நிலையங்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

இந்த அடிப்படையில், அரசு ஊழியர்களின் பணித் திறனை உயர்த்தும் வகையிலும், அலுவலக நடைமுறைகளை அவர்கள் தெரிந்து கொள்ளும் வண்ணமும்; அவர்களிடையே புத்துணர்ச்சியையும், நட்புறவையும், சகோதரத்துவத்தையும், தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தும் வகையிலும்; அரசு ஊழியர்களுக்கான அடிப்படைப் பயிற்சி ஈரோடு மாவட்டத்தில் உள்ள பவானிசாகர் குடியுரிமை பயிற்சி நிலையத்தில், அதாவது Civil Service Training Instituteஇல் அளிக்கப்படுகிறது. இந்த நிலையத்தில் இளநிலை உதவியாளர்கள், உதவியாளர்கள் போன்ற அமைச்சுப் பணியாளர்களுக்குப் பல்வேறு வகையான நிருவாக செயல்முறைகளில் அடிப்படைப் பயிற்சியும்; துணை வட்டாட்சியர்களுக்குப் பணியிடைப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன.

இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பயிற்சி நிலையத்தில் உள்ள அரங்கம், வகுப்பறைகள், விடுதிக் கட்டடங்கள், உணவு அரங்கங்கள், பணியாளர் குடியிருப்புகள், பயிற்சியாளர் விடுதிகள், நூலகக் கட்டடம், துணை வட்டாட்சியர் தங்கும் விடுதிகள், அலுவலகக் கட்டடங்கள் ஆகிய அனைத்துமே

பழுதடைந்து பயிற்சி அளிப்பதற்கு ஏதுவாக இல்லாத சூழ்நிலை உள்ளது.

அரசு ஊழியர்களுக்கான அடிப்படைப் பயிற்சியின் அவசியத்தைக் கருத்தில் கொண்டும்; பவானிசாகரில் உள்ள குடியுரிமைப் பயிற்சி நிலையத்தை சிறந்த பயிற்சி நிலையமாக உருவாக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்தைக் கருத்தில் கொண்டும்; 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வகுப்பறைகள், நூலகம், உள் விளையாட்டு அரங்குகள், பதிவறைகள், ஆசிரியர்களுக்கான தனியறைகள், நிருவாக அலுவலகத்திற்கான கட்டடம், காணொலிக் கண்காட்சி அரங்கம், தங்கும் விடுதிகள், பணிபுரிபவர்களுக்கான குடியிருப்புகள், நவீன உணவுக் கூடம், மருத்துவ மையம், விளையாட்டு அரங்கம் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் கொண்ட பயிற்சி நிலையமாக பவானிசாகர் அரசுப் பயிற்சி நிலையம் மாற்றி அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

ரூ.1,560 கோடி மதிப்பீட்டில் காவேரி டெல்டா பகுதியின் வடிகால் வசதிகள் மேம்பாடு

07.05.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

இவ்வுலகம் இனிதே இயங்க மழை நீர் இன்றியமையாததாக விளங்குகிறது. எனவே தான் ''மாமழை போற்றுதும், மாமழை போற்றுதும்'' என இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் கூறியுள்ளார். நீரின் அவசியத்தைக் கருதி, எனது தலைமையிலான அரசு, மழை நீர் சேகரிப்புத் திட்டத்தினைத் திறம்படச் செயல்படுத்தி வருகிறது.

தற்போது, பருவ நிலை மாறுதல்களினால் கடல் நீர் மட்டம் உயரும் எனவும்; அதன் விளைவாகப் பாதிப்புகள் ஏற்படும் எனவும் அண்மைக் காலமாக உலகளவில் பல வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். இந்தப் பருவ நிலை மாறுதல்களின் விளைவாக, இன்னும் 40 ஆண்டுகளில் காவேரி டெல்டா கடலோர மாவட்டங்களில் கடல் நீர் மட்டம் உயரும் போது, அப்பகுதிகளில் உப்புநீர் உட்புகுந்து செழிப்பான விளை நிலங்கள் பாதிப்படையும்; அல்லது ஒரு சில பகுதிகளில் பாசனம் அறவே பாதிப்புக்கு உள்ளாகக் கூடும் என்றும்; நிலத்தடி நீரின் தன்மையும் மாறுபட்டு நீரின் உவர்ப்புத் தன்மை அதிகரித்து எதற்கும் பயன்படுத்தப்பட முடியாத நிலை ஏற்படக் கூடிய வாய்ப்புகள் உள்ளன என்றும்; மேலும், கடைமடைப் பகுதிகளில் உள்ள வடிகால்களின் வழியாகவும் கடல் நீர் உட்புகுந்து பருவமழைக் காலங்களில் வெள்ளநீர் வடிவதைத் தடுப்பதோடு மட்டுமின்றி விளை நிலங்களில் தேங்கி விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டு விவசாயிகளின் பொருளாதார நிலை பெருமளவில் பாதிப்படையும் என்றும் கூறப்படுகிறது. எனவே, இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பது அவசியம் ஆகும்.

காவேரி டெல்டா மாவட்டப் பகுதிகளில் கடலில் இருந்து உட்பகுதியில் சுமார் 25 கிலோ மீட்டர் தொலை தூரம் வரையிலுள்ள பகுதிகள் ஏறக்குறைய சம மட்டப் பகுதிகளாக அமைந்துள்ளதால், வட கிழக்குப் பருவமழைக் காலங்களில் சில நாட்களில் பெய்யும் அதிகப்படியான மழை நீரால் வடிகால்கள் பாதிப்புக்கு உள்ளாகின்றன. மழைக் கால நீரைத் தேக்கி வைப்பதற்கான போதிய வசதியின்மை காரணமாக, வெள்ள நீர் கடலுக்குள் வீணாகச் சென்று கலக்கும் நிலையும் ஏற்படுகிறது. மழைக் காலத்தில் அதிகப்படியாகக் கிடைக்கும் வெள்ள நீரை, மழை இல்லாத காலங்களில் குறிப்பாகக் கோடை காலங்களில் பெருமளவில் பயன்படுத்த இயலாத நிலையும் உள்ளது.

எனவே, காவேரி டெல்டா மாவட்டங்களில் கிடைக்கக் கூடிய வெள்ள நீரைத் தேக்கி வைத்துத் தேவைப்படும் காலங்களில் பாசனத்திற்காகப் பயன்படுத்துவதும்; உப்பு நீர் உட்புகுதலைத் தடுப்பதும் மிகவும் அத்தியாவசியமாகிறது.

இந்தச் சூழ்நிலையில், மேற்கண்ட பாதிப்புகளிலிருந்து விடுபட வழிவகை செய்யும் பொருட்டும்; பருவ நிலை மாற்றத்தினால் ஏற்படக்கூடிய தாக்கங்களைப் பெருமளவு எதிர் கொள்ளும் வகையிலும்;

- காவேரி டெல்டா பகுதிகளில் ஏற்கெனவே உள்ள பழைமையான கடைமடை மதகுகள் மற்றும் அதன் தொடர்புடைய கட்டமைப்புகளை மறுகட்டுமானம் செய்தல்;
- காவேரி கடைமடைப் பகுதிகளில் மேலும் மதகுகள் அமைத்து வெள்ள நீரைத் தேக்கி வைத்துப் பாசனத்திற்காகப் பயன்படுத்துதல்;
- இதன் மூலம் செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டப்பட்டு கிணறுகளின் நீர் மட்டத்தை உயர்த்த வழிவகை செய்தல்;
- கடல் நீர் உட்புகுதலைத் தவிர்த்தல்.

போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திட்டம் 1,560 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஐந்தாண்டுகளில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்த ஆசிய வளர்ச்சி வங்கி 1,092 கோடி ரூபாய் கடனுதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. திட்ட மதிப்பீட்டில் மீதமுள்ள தொகையான 468 கோடி ரூபாயைத் தமிழக அரசு வழங்கும்.

இத்திட்டத்தின் மூலம் திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள காவேரி, வெண்ணாறு, கல்லணை கால்வாய்ப் பாசன அமைப்புகளில் ஒரு பகுதியைச் சார்ந்த சுமார் 4.50 இலட்சம் ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

மேற்கண்ட பணிகளால் மாநிலத்தின் நெற்களஞ்சியமான காவேரி டெல்டா பகுதியின் வடிகால் வசதிகள் மேம்படுத்தப்படுவதோடு கடல் நீர் உட்புகுதல் தடுக்கப்படும். இத்திட்டம் முன்னுரிமை அடிப்படையில் விரைவில் செயல்பாட்டுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

வருவாய்த் துறையின் சேவைகளை விரைந்து வழங்கிட 9 புதிய வட்டங்கள்

08.05.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசின் நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும், கட்டுக்கோப்பான சமுதாய முன்னேற்றம் மற்றும் அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதிலும், இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும் போது, மக்களை நாடிச் சென்று உதவிக் கரம் நீட்டுவதிலும், பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு நிலைகளில் மக்களுடன் இணைந்து செயல்படுவதிலும் வருவாய்த் துறை முக்கியப் பங்காற்றுவதுடன், நிருவாகத்தின் முதுகெலும்பாகத் தொடர்ந்து விளங்கி வருகிறது.

இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த வருவாய்த் துறையின் சேவை, மக்களை விரைந்து அடைய வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், புதிய மாவட்டங்களை உருவாக்குதல், புதிய வட்டாட்சியர் அலுவலகங்களை உருவாக்குதல், ஒவ்வொரு கிராமத்திற்கும் தனியாக கிராம நிருவாக அலுவலர்களை நியமித்தல் போன்ற எண்ணற்ற மக்கள் நலம் பயக்கும் நடவடிக்கைகள் எனது ஆட்சிக் காலத்தில் எடுக்கப்படுகின்றன.

மக்களுக்குத் தேவையான இன்றியமையாப் பணியை மேற்கொள்ளும் வருவாய்த் துறையை மேலும் மேம்படுத்தும் வகையில், தற்போதைய மக்கள் தொகையின் எண்ணிக்கை, மக்களின் தேவைகள் மற்றும் வசதிகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, புதிய வருவாய் வட்டங்களை உருவாக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள வரையறைகளுக்கு உட்பட்டு, வருவாய் வட்டங்களைச் சீரமைக்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது.

இதன்படி, சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டத்தினைப் பிரித்து திருப்புவனத்தில் ஒரு புதிய வட்டமும்; திருவண்ணாமலை மாவட்டம் போளூர் வட்டத்தினைப் பிரித்து கலசப்பாக்கத்தில் ஒரு புதிய வட்டமும்; பெரம்பலூர் மாவட்டம் குன்னம் வட்டத்தினைப் பிரித்து ஆலத்தூரில் ஒரு புதிய வட்டமும்; கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி வட்டத்தினைப் பிரித்து கிணத்துக்கடவில் ஒரு புதிய வட்டமும்; காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டு வட்டத்தினைப் பிரித்து திருப்போரூரில் ஒரு புதிய வட்டமும்; கோயம்புத்தூர் மாவட்டம் கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தினைப் பிரித்து அன்னூரில் ஒரு புதிய வட்டமும்; விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டம் மற்றும் சங்கராபுரம் வட்டங்களைச் சீரமைத்து புதியதாக சின்னசேலத்தில் ஒரு வட்டமும்; ஈரோடு மாவட்டம் பவானி மற்றும் கோபிச்செட்டிபாளையம் வட்டங்களைச் சீரமைத்து அந்தியூரில் ஒரு புதிய வட்டமும்; நாமக்கல் மாவட்டம் நாமக்கல் மற்றும் ராசிபுரம் வட்டங்களைச் சீரமைத்து கொல்லிமலையில் ஒரு புதிய வட்டமும்; ஆக மொத்தம் 9 வட்டங்கள் புதியதாகத் தோற்றுவிக்கப்படும்.

இது தவிர, 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 62 வருவாய் வட்டங்களில் மக்கள் தொகை அதிகமாக இருப்பது தெரிய வந்துள்ளதை அடுத்து, காலவிரயம் இன்றி மக்கள் எளிதாக வட்டாட்சியர் அலுவலகங்களை அணுகி தங்களுக்குத் தேவையானவற்றை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்பதையும், வட்டாட்சியர் அலுவலகம் திறம்படச் செயல்பட வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டு, நான்கு லட்சத்திற்கு மேல் மக்கள் தொகையினைக் கொண்ட வருவாய் வட்டங்களைப் பிரிக்க நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனை நிறைவேற்றும் பொருட்டு, தமிழகத்திலுள்ள வருவாய் வட்டங்களின் மக்கள் தொகை, பரப்பளவு, வருவாய் கிராமங்கள் ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு அரசுக்குப் பரிந்துரை அளிக்க வருவாய் நிருவாக ஆணையர், நில நிருவாக ஆணையர் மற்றும் நிலச் சீர்திருத்தத் துறை ஆணையர் ஆகியோரைக்

கொண்ட ஒரு அலுவலர் குழு அமைக்கப்படும். இக்குழு இரண்டு மாத காலத்திற்குள் அரசுக்குத் தனது பரிந்துரைகளை அளிக்கும். இக்குழுவின் பரிந்துரைகளைப் பரிசீலித்து அரசு தக்க முடிவினை அறிவிக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், பள்ளி மாணவர்கள் பல்வேறு உதவித் தொகைகளைப் பெறுவதற்கும், அரசு விடுதிகளில் சேர்ந்து படிப்பதற்கும், உயர் கல்வி நிலையங்களில் சேர்க்கை பெறுவதற்கும் தேவைப்படும் சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் மற்றும் இருப்பிடச் சான்றிதழ் ஆகியவற்றைப் பெறுவதில் ஏற்படுகின்ற நடைமுறை கால தாமதத்தைக் கருத்தில் கொண்டு, வரும் கல்வி ஆண்டு முதல் தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் படிக்கும் மாணவ – மாணவியர்களுக்கு ஆறாம் வகுப்பிலேயே அவர்களுக்குத் தேவையான சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் ஆகியவை அளிக்கப்படும் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஆறாம் வகுப்பில் படிக்கும் சுமார் 12 இலட்சம் மாணவ, மாணவியர் பயன் பெறுவர்.

மேலும், இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும் போது உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவும், அதன் பின்னர் உரிய நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவும், வருவாய்த் துறை, வேளாண்மைத் துறை, நெடுஞ்சாலைத் துறை, ஊரக வளர்ச்சித் துறை போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலர்களுக்குத் தகுந்த பயிற்சி அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கும் பொருட்டு, 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாநில பேரிடர் மேலாண்மைப் பயிற்சி நிலையம் அமைக்கப்படும் என்பதையும், இந்த நிலையம் வருவாய்த் துறை அலுவலர்களுக்கான மாநில அளவிலான பயிற்சி நிலையமாகவும் செயல்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

கைத்தறி நெசவாளர்கள் மற்றும் பட்டு விவசாயிகளுக்குப் புதிய சலுகைகள்

08.05.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொழில் வளர்ச்சிக்கு முன்னோடியாக இருப்பதோடு, விவசாயத்திற்கு அடுத்தபடியாக கிராமப்புற மக்களுக்குப் பெருமளவு வேலை வாய்ப்பினை வழங்கி வரும் தொழிலாக நெசவுத் தொழில் விளங்கி வருகிறது.

நெசவுத் தொழிலாளர்களின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்கத்துடன் நெசவாளர்களின் குடும்பத்திற்கு ஓய்வூதியம், காப்பீட்டுத் திட்டம், நெசவாளர்களின் குழந்தைகளுக்குக் கல்வி உதவித் தொகை போன்ற அரிய பல திட்டங்களை எனது தலைமையிலான அரசு நிறைவேற்றி வருகிறது.

நெசவாளர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில், கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் உறுப்பினர்களாக உள்ள நெசவாளர்களிடமிருந்து, அவர்கள் ஈட்டும் ஊதியத்தில் ரூபாய்க்கு 8 பைசா சந்தாவாக வசூலிக்கப்படுகிறது. மாநில அரசு தனது பங்காக 4 பைசாவைச் செலுத்தி வருகிறது. மத்திய அரசு தனது பங்காக 4 பைசாவை 2007 ஆம் ஆண்டு வரை செலுத்தி வந்தது. ஆக மொத்தம், நெசவாளர்கள் பெறும் ஊதியத்தில் ஒரு ரூபாய்க்கு 16 பைசா சிக்கன நிதியாக அவர்களது சேமிப்புக் கணக்கில் செலுத்தப்பட்டு, அத்தொகைக்கு மாநில அரசு வட்டியும் வழங்கி வருகின்றது.

1.4.2007 முதல் மத்திய அரசு தனது பங்களிப்பினை நிறுத்தி விட்டதால், நெசவாளர்களுக்கு மத்திய அரசின் மூலம் கிடைத்து

வந்த சிக்கன நிதி மற்றும் அதற்குக் கிடைக்கும் வட்டித் தொகையும் குறைந்து விட்டது. பாதிக்கப்பட்ட நெசவாளர்கள், 2007 ஆம் ஆண்டு முதல் இக்கோரிக்கையினைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். நெசவாளர்களின் ஐந்தாண்டு காலக் கோரிக்கையினை நிறைவேற்றும் விதமாக, கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் செயலாக்கத்திற்கு நெசவாளர்கள் ஈட்டும் கூலியில் வழங்கப்பட்டு வரும் மாநில அரசின் பங்களிப்பான 1 ரூபாய்க்கு 4 பைசாவுடன், மைய அரசால் நிறுத்தப்பட்ட பங்களிப்பான 1 ரூபாய்க்கு 4 பைசாவையும் சேர்த்து, 8 பைசாவாக இனி உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால், தமிழக அரசுக்கு ஆண்டொன்றுக்கு 5 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும். இதன் மூலம் நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் சேர்ந்துள்ள 76,051 கைத்தறி நெசவாளர்கள் நேரடியாகப் பயனடைவர் என்பதை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இதே போன்று, கிராமப்புற மக்களுக்கு தொடர் வருவாய் மற்றும் வேலை வாய்ப்பினை வழங்கி, தேசிய அளவில் வெண்பட்டு உற்பத்தியிலும், பட்டுக் கூடு உற்பத்தித் திறனிலும், இளம் புழுக்களை வளர்த்து விநியோகிப்பதிலும், தொகுப்பு அபிவிருத்தித் திட்டத்திலும் தேசிய அளவில் முதல் நிலை எய்தி உள்ள பட்டு வளர்ச்சித் துறையின் சாதனைகள் மேலும் தொடரும் வகையிலும், இந்த சாதனைகளுக்குக் காரணமான தமிழகப் பட்டு விவசாயிகளை ஊக்குவிக்கும் வண்ணமும், இதுவரை, மல்பரி நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 4,125 ரூபாய் என வழங்கப்பட்டு வந்த மானியத் தொகை 6,750 ரூபாய் ஆக உயர்த்தி வழங்கப்படும் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் மூலம் ஒவ்வொரு விவசாயிக்கும் அதிகபட்சமாக ஒரு ஹெக்டேருக்கு 16,875 ரூபாய் வரை மானியம் கிடைக்கும். நடப்பாண்டில் 5,000 ஏக்கர் பரப்பில் மல்பரி நடவு செய்யும் விவசாயிகளுக்கு மானியமாக மொத்தம் 3 கோடியே 37 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

மேலும், பட்டு வளர்ப்பில் ஈடுபடும் விவசாயிகள் நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்களைப் பயன்படுத்தி அதிகளவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக, ஒவ்வொரு விவசாயிக்கும் தற்போது வழங்கப்பட்டு வரும் மானியத் தொகையான 30,000 ரூபாய் நடப்பு ஆண்டு முதல் 37,500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நடப்பாண்டில் 1,200 பட்டு விவசாயிகளுக்கு மொத்த மானியமாக 4.5 கோடி ரூபாய் வழங்கப்படும்.

இதன் மூலம் பட்டு விவசாயிகள், ஒரு ஹெக்டேருக்கு ஆண்டு ஒன்றுக்கு குறைந்த பட்ச நிகர வருமானமாக 1 இலட்சம் ரூபாய் வரை பெற இயலும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

ரூ.81 கோடி மதிப்பீட்டில் கொள்ளிட ஆற்றின் குறுக்கே திருச்சி-ஸ்ரீரங்கத்தை இணைக்கும் புதிய நான்கு வழிப் பாலம்

09.05.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேளாண்மைத் துறையின் வேகமான வளர்ச்சியிலும், தொழில் துறையின் துரிதமான முன்னேற்றத்திலும், ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதிலும் சாலைக் கட்டமைப்பு வசதி இன்றியமையாததாக விளங்குவதால்தான், ஒரு மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளில் சாலைக் கட்டமைப்பு வசதி முக்கியப் பங்கினை வகிக்கிறது.

சாலைக் கட்டமைப்பு வசதியின் முக்கியத்துவத்தை உணர்ந்த எனது தலைமையிலான அரசு, கிராமப்புரங்களுக்கு சிறந்த சாலை இணைப்பு வசதிகளை அளிப்பதிலும், மாநிலம் முழுவதும் உள்ள சாலைகள் மற்றும் பாலங்களைப் பராமரிப்பதிலும், ரயில்வே மேம்பாலங்கள் அமைப்பதிலும், புதிய சாலைகளை அமைப்பதிலும், ஏற்கெனவே உள்ள சாலைகளை அகலப்படுத்துவதிலும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

அந்த வகையில், போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் விதமாகவும், பயண நேரம் மற்றும் வாகன இயக்கச் செலவினைக் குறைக்கும் வண்ணமும், புதிய பாலங்கள் அமைத்தல், வட்டச் சாலைகள் அமைத்தல், புறவழிச் சாலைகள் அமைத்தல் உட்பட பல்வேறு சாலைப் பணிகள் நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

இதன்படி, கொள்ளிட ஆற்றின் குறுக்கே திருச்சி மாநகரத்தையும், ஸ்ரீரங்கத்தையும் இணைக்கும் வகையில்

கட்டப்பட்ட பழமை வாய்ந்த பாலம் தற்போது மிகவும் பழுதடைந்துள்ளதால், அங்கு புதிய நான்கு வழிப் பாலம் அமைக்கும் பணியும், அணுகு சாலையில் அய்யன் வாய்க்கால் குறுக்கே ஒரு சிறு பாலம் அமைக்கும் பணியும், மற்றும் சாலை சந்திப்பு மேம்பாடு போன்ற பணிகளும் 81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

இதே போன்று, கரூர் மாவட்டத்தில் பசுபதி பாளையம் அருகில் கரூர்–வாங்கல் சாலையையும், நாகப்பட்டினம்–கூடலூர்–மைசூர் சாலையையும் இணைக்கும் தரைவழிப்பாலம் பழுதடைந்துள்ளதால், அங்கு 12 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய உயர் மட்டப் பாலம் ஒன்று அமைக்கப்படும்.

மாமல்லபுரத்தையும், எண்ணூர் துறைமுகத்தையும் இணைக்கும் வகையில், 1,420 கோடி ரூபாய் மதிப்பீட்டில், சுமார் 162 கிலோ மீட்டர் நீளமுடைய புதிய வழித்தடம் சிங்கப்பெருமாள் கோவில், ஸ்ரீபெரும்புதூர், திருவள்ளூர், தாமரைப்பாக்கம், பெரிய பாளையம், புதுவாயல் ஆகிய ஊர்களின் வழியாக காட்டுப்பள்ளி வரை சென்னை எல்லை சாலை, அதாவது Chennai Peripheral Road பணிக்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும். இத் திட்டத்தின்படி 83.20 கிலோ மீட்டர் புதிய சாலைகள் அமைக்கப்படுவதுடன், ஏற்கெனவே உள்ள 78.60 கிலோ மீட்டர் சாலைகள் மேம்படுத்தப்படும்.

மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், திருப்பூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, ஈரோடு மற்றும் வேலூர் ஆகிய நகரங்களுக்கு முதற்கட்டமாக வட்ட மற்றும் ஆரச்சாலைகள் அமைப்பதற்காக விரிவான திட்டம் தயாரிக்கும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.

நகரங்களில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் விதமாக, நகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள மாநில நெடுஞ்சாலைகளுக்குப் புறவழிச்சாலைகள் அமைப்பதற்கு விரிவான திட்டம் தயாரிக்கப்படும்.

மேலும், புதிதாக சாலைகள் அமைகிறபோது அல்லது மேம்படுத்தத் திட்டமிடும் போது, அந்தச் சாலையைச் சுற்றி அமைந்துள்ள பகுதிகள் வளர்ச்சியடையும் வகையில் சாலைக் கட்டமைப்பு வளையம், அதாவது Road Grid அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்தத் திட்டம் சென்னை வெளிவட்டச் சாலை அமையும் பகுதியில் முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்படும்.

நெடுஞ்சாலைத் துறையில் என்னால் அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டங்களின் மூலம், தமிழகத்திலுள்ள சாலைப் போக்குவரத்து மேன்மை அடைவதுடன், நகர்ப்பகுதிகளில் ஏற்படும் வாகன நெரிசல்கள் தவிர்க்கப்பட்டு, பயணிகள் எந்தவித சிரமமுமின்றி தாங்கள் விரும்பிய இடத்திற்குக் குறைந்த நேரத்தில் சென்றடைய வழிவகை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு!

09.05.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேளாண் சார்ந்த தொழில்களில் முக்கியத் தொழிலாகத் திகழும் சர்க்கரைத் தொழில், கிராமப் பொருளாதாரத்தில் பெருமளவில் தாக்கத்தை ஏற்படுத்தி, லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் பெரிய அளவில் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்பினை வழங்கி வருகிறது.

இப்படிப்பட்ட பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த சர்க்கரை உற்பத்தியில், தமிழ்நாட்டில் 16 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும், 2 பொதுத் துறை சர்க்கரை ஆலைகளும் ஈடுபட்டு வருகின்றன. இந்த சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் வாழ்க்கையில் நலமும், வளமும் பெற வேண்டும் என்பதே எனது அரசின் நோக்கமாகும்.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கூட்டுறவு, பொதுத்துறை மற்றும் தனியார் சர்க்கரை ஆலைப் பணியாளர்கள் தென்னிந்திய சர்க்கரை ஆலைகள் சங்கத்தின், அதாவது South Indian Sugar Mills Association – SISMA ஒப்பந்தத்தின் படி ஊதியம் பெற்று வருகின்றனர். இதற்கு முன் இருந்த ஒப்பந்தக் காலம் 31.3.2008 உடன் முடிவடைந்தது.

1999–ஆம் ஆண்டு தொழிற் சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது பற்றி சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப் பேராணை மனுக்களை தொழிற்சங்கங்கள் தாக்கல் செய்தன. இந்த மனுக்களின் மீது சென்னை உயர் நீதிமன்றம் 4.8.2009 அன்று உத்தரவு பிறப்பித்தது. அந்த ஆணையில்,

தொழிற்சங்கங்களின் பிரதிநிதித்துவத்தைக் கண்டறியவும், அதன் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கப் பிரதிநிதிகளை வருங்காலங்களில் ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் சார்பாக ஊதிய உயர்வு உள்ளிட்ட பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள ஏதுவாகத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தினக்கூலிப் பணியாளர்களுக்கும், தேர்தலில் பங்கெடுக்கும் உரிமை உண்டு என அரசு விளக்கம் அளித்தது.

இதனை எதிர்த்து, கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் செயல்பட்டு வரும் இரண்டு தொழிற்சங்கங்கள் நீதிப் பேராணை மனுக்களை சென்னை உயர்நீதிமன்றத்திலும் மற்றும் சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளையிலும் தாக்கல் செய்து, தொழிற்சங்கத் தேர்தல் நடத்தப்படுவதற்கு இடைக்காலத் தடை பெற்றன. மேற்படி இரண்டு வழக்குகளிலும் விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையை விலக்கக் கோரி சர்க்கரைத் துறை ஆணையரால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் இன்னமும் நிலுவையில் உள்ளன.

இவ்வழக்குகளில் உள்ள இடைக்காலத் தடை விலக்கப்பட்ட பின்னர் தான் சர்க்கரை ஆலைகளில் தொழிற்சங்கத் தேர்தல் நடத்தப்பட்டு, ஆலைப் பணியாளர்களுக்கான புதிய ஊதிய ஒப்பந்தம் ஏற்படுத்த இயலும்.

எனவே, முந்தைய அரசு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு குந்தகம் இல்லாத வகையில் தொழிலாளர்களுக்கு ad hoc ஊதியம் வழங்க 2010 ஆம் ஆண்டு நடவடிக்கை எடுத்தது. அதன்படி, 2008 ஆம் ஆண்டு, சிஸ்மா ஒப்பந்தத்தில் வழங்கப்பட்ட ஊதிய உயர்வில் 90 விழுக்காடு adhoc ஆக கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரைத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது.

கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கேட்டு 4.4.2012 முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இது குறித்து சர்க்கரை ஆணையர் மற்றும் தொழிலாளர் துறை இணை ஆணையர் ஆகியோர் முன்பு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டும் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இந்தச் சூழ்நிலையில் தொழிலாளர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின் நிதி நிலை நலிவுற்று இருப்பினும், தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க எனது தலைமையிலான அரசு முடிவு எடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்படி, நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு எவ்வித குந்தகமுமின்றி, 1.4.2008 முதல் சிஸ்மா ஒப்பந்தப்படி இறுதி செய்யப்பட்ட சம்பள விகிதத்தில் வழங்கப்படாமல் நிலுவையிலுள்ள 10 விழுக்காடு தொகை உடனடியாக வழங்கப்படும்.

மேலும், சர்க்கரை ஆலை ஊழியர்களுக்கு தற்போது வழங்கப்பட உள்ள 10 விழுக்காடு ஊதியத்தையும் கணக்கில் கொண்டு, அந்த அடிப்படை ஊதியத்தில் Basic Payஇல் 25 விழுக்காடு சிறப்பு ஊதியம் என 1.4.2012 முதல் வழங்கப்படும். அதாவது, இனி வருங்காலங்களில் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் சிஸ்மா ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப்படும் ஊதிய விகிதத்தின் அடிப்படை ஊதியத்தில் 25 விழுக்காட்டை சிறப்பு ஊதியமாகப் பெறுவார்கள்.

இந்தச் சலுகைகள் மூலம் தொழிலாளர்களுக்கு மாதந்தோறும் 1,595 ரூபாய் முதல் 1,907 ரூபாய் வரை கூடுதல் ஊதியம் கிடைக்கும். 2008–ஆம் ஆண்டு முதல் நிலுவைத் தொகை ரொக்கமாக வழங்கப்படுவதால், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை

ஆலைகளுக்கு 2 கோடியே 80 இலட்சம் ரூபாயும், 1.4.2012 முதல் 25 விழுக்காடு சிறப்பு ஊதியம் வழங்கப்படுவதால், ஆண்டு ஒன்றுக்கு 12 கோடியே 46 இலட்சம் ரூபாயும் கூடுதல் செலவு ஏற்படும்.

நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில் முறையான ஊதிய உயர்வு ஒப்பந்தம் செய்ய இயலாது என்பதால், தொழிலாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையினைக் கனிவுடன் பரிசீலித்து தொழிலாளர்கள் மற்றும் விவசாயப் பெருமக்கள் பயன்பெறும் பொருட்டு எனது அரசு இந்த முடிவை எடுத்துள்ளது. நீதிமன்ற வழக்குகள் நிறைவு பெற்ற பின் முறையான ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும்.

இந்த ஊதிய உயர்வினை ஏற்று, தொழிலாளர்கள் போராட்டத்தைக் கைவிட்டு உடன் பணிக்குத் திரும்புவார்கள் என்ற எனது நம்பிக்கையினைத் தெரிவித்து அமைகிறேன்.

❋ ❋ ❋

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரிப்பு!

09.05.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மக்களை இணைப்பதிலும்; நாட்டை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்வதிலும்; நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதிலும் சாலைப் போக்குவரத்து முக்கியப் பங்கு வகிக்கிறது. இப்படி இன்றியமையாததாக விளங்கும் சாலைப் போக்குவரத்து சேவையைப் பொதுமக்களுக்கு, குறிப்பாக ஏழை, எளிய மக்களுக்கு அளித்து வரும் அரசுப் போக்குவரத்துக் கழகங்களை மேம்படுத்துவதும்; அதன் தொழிலாளர்கள் மற்றும் பயணிகளின் வசதிகளை அதிகரிப்பதும் அவசியமாகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு, அரசுப் பேருந்துகளை இயக்குகின்ற 45 வயதிற்கு மேற்பட்ட ஓட்டுநர்கள் உடல் தகுதியினை அறிந்து, உடல் நலக் குறைவு ஏதேனும் இருப்பின் அதற்கான மருத்துவ வசதி பெற்றுக் கொள்ளும் வகையில், சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் கீழ் இயங்கும் பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், ஆண்டுக்கு ஒரு முறை "முழு உடல் பரிசோதனை" செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் தற்போது கருணை அடிப்படையில் பணிபுரிந்து வரும் 338 வாரிசுதாரர்களின் பணி வரன்முறை செய்யப்பட்டு அவர்களது பணி நிரந்தரம் செய்யப்படும் என்பதையும்; பணியில் இருக்கும் போது இறந்து போன பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குப் பதிவு மூப்பின் அடிப்படையில், முதற்கட்டமாக ஒரு போக்குவரத்துக் கழகத்திற்கு 50 பணியிடங்கள் என்ற அடிப்படையில், 400 தொழில்நுட்ப காலிப்

பணியிடங்கள் தொழில்நுட்பப் பணி அல்லாத பழகுநர்களுக்கு மூன்று ஆண்டு பயிற்சி அளித்து நிரப்பப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஓய்வு பெற்றும், ஓய்வூதியப் பயன்களைப் பெறாத தொழிலாளர்களின் நிலையினைக் கருத்தில் கொண்டு, 2010 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை ஓய்வு பெற்ற 2,316 தொழிலாளர்களுக்கு ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகையான 47 கோடியே 71 இலட்சம் ரூபாய் இந்த மாதத்திலேயே வழங்கப்படும்.

இதே போன்று, 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2012 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை ஓய்வு பெற்ற மற்றும் ஓய்வு பெற உள்ள 4,688 தொழிலாளர்களுக்கு ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகையான 96 கோடியே 57 இலட்சம் ரூபாய் நடப்பு நிதியாண்டில் வழங்கப்படும்.

அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் வழித்தடப் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரித்து இருப்பதைக் கருத்தில் கொண்டு, 31.3.2013 வரை ஓய்வு பெறவுள்ள பணியாளர்களின் பணியிடங்களையும் உள்ளடக்கி, 6,910 ஓட்டுநர்கள், 7,402 நடத்துநர்கள் மற்றும் 2,349 தொழில்நுட்பப் பணியாளர்கள் என மொத்தம் 16,661 பணியிடங்கள் நிரப்பப்படும்.

இந்தப் பணியிடங்களில், 4,511 பதிலி ஓட்டுநர்கள், 4,558 பதிலி நடத்துநர்கள் மற்றும் 88 பதிலி தொழில்நுட்பப் பணியாளர்கள் என மொத்தம் 9,157 பதிலிப் பணியாளர்கள் நிரந்தரமாகப் பணியமர்த்தப்படுவார்கள்.

அரசுத் துறையின் அனைத்து வாகனங்களையும் பராமரித்து வரும் அரசு மத்திய தானியங்கிப் பணிமனை தனது பராமரிப்புப் பணிகளைத் தொய்வின்றி மேற்கொள்ளும் வகையில், மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையில் காலியாக உள்ள 398 தொழில்நுட்பப் பணியிடங்கள் மற்றும் 171 பிற பணியிடங்கள் என மொத்தம் 569 காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும்.

பயணிகள் எளிதாகப் பயணச் சீட்டினைப் பெறும் வகையில், புவி இருப்பிட முறைமை வசதி கொண்ட கையடக்க இயந்திரங்களைப் பயன்படுத்தி மின்னணுப் பயணச் சீட்டு வழங்கும் முறை அனைத்துப் பேருந்துகளிலும் அறிமுகப்படுத்தப்படும்.

அரசு போக்குவரத்துக் கழகங்களால் 300 கிலோ மீட்டருக்கு மேல் இயக்கப்படும் தொலைதூர வழித்தட இயக்கத்தினை சீரமைக்கும் சீரிய நோக்கத்தின் அடிப்படையில், தொலைதூர வழித் தடப் பேருந்துகள் இனி அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும். இதன் காரணமாக, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத் தடப் பேருந்துகளின் எண்ணிக்கை 905லிருந்து 1,761ஆக அதிகரிக்கப்படுவதை அடுத்து, ஸ்ரீரங்கம், திண்டுக்கல், தேனி, காரைக்குடி, கரூர், ஈரோடு மற்றும் ஓசூர் ஆகிய ஏழு இடங்களில் புதிய பணிமனைகள் அமைக்கப்படும் என்பதையும்; கூடுதல் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கத்தில் பொது மேலாளர் அலுவலகம் ஒன்று தோற்றுவிக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், கூடுதல் பேருந்துகள் இயக்கப்படுகின்ற அளவிற்குப் பணிமனைகள் இல்லாததைக் கருத்தில் கொண்டு, சென்னை, விழுப்புரம், சேலம், கோயம்புத்தூர், கும்பகோணம், மதுரை மற்றும் திருநெல்வேலி அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் தமிழ்நாடு முழுவதும் 25 புதிய பணிமனைகள் அமைக்கப்படும்.

எனது அரசின் இந்த நடவடிக்கைகள் காரணமாக, போக்குவரத்துக் கழகங்களின் சேவை மேலும் செம்மையுறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளுக்காக நாட்டிலேயே முதன்முறையாக மாநில ஆதார வள மையம்!

10.05.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சமுதாயத்தின் ஓர் அங்கமாக மாற்றுத் திறனாளிகள் விளங்கும் வகையிலும், நாட்டின் சமூக – பொருளாதார வளர்ச்சியில் மாற்றுத் திறனாளிகளும் பங்கேற்கும் வகையில் சம வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும் வகையிலும், மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையிலும், அவர்களிடையே தன்னம்பிக்கையை வளரச் செய்யும் வகையிலும், அவர்களுக்கென பல கொள்கைகளை வகுத்தும், திட்டங்களைத் தீட்டியும் எனது அரசு செயல்படுத்தி வருகிறது.

மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகள், அதாவது கண் பார்வையற்றவர்கள், காது கேளாதவர்கள், வாய் பேசமுடியாதவர்கள், உடல் ஊனமுற்றவர்கள், மனவளர்ச்சி குன்றியவர்கள், கற்றலில் குறைபாடு, அதாவது Dyslexia, தசைச் சிதைவு Musculo distrophy, மூளை முடக்குவாதம் Cerebral Palsy, டௌன் குறைபாடுகள் Down Syndrome மற்றும் தற்புணை ஆழ்வு, அதாவது Autism உள்ள குழந்தைகளுக்கும், அவர்களின் இயலாத்தன்மையின் வகை, மற்றும் பாதிப்பின் அளவு ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களை உள்ளடக்கிய கல்வி, அதாவது, Inclusive Education ஐ எனது அரசு வழங்கி வருகிறது.

மாற்றுத் திறனாளிகளின் வாழ்வில் விடியல் பிறந்திட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், இதற்காக, சுமார் 41 கோடி ரூபாய் செலவில் 4,010 சிறப்பு ஆசிரியர்கள், 17 வாழ்வியல் திறன் பயிற்சி நிபுணர்கள் மற்றும் 719 தன்னார்வலர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதே போன்று, பாதிக்கப்பட்ட குழந்தைகளைக் கண்டறிய மாநிலம் முழுவதும் 601 மருத்துவ முகாம்கள் வட்டார அளவில் நடத்தப்பட்டதன் பேரில், 15,888 குழந்தைகள் கண்டறியப்பட்டு அக்குழந்தைகளுக்கு தேவையான உதவி உபகரணங்களும், 27 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை மூலம் உதவிகளும், 3 கோடியே 49 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளன. இது மட்டுமல்லாமல், இக் குழந்தைகளுக்காக இந்த ஆண்டு விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை விழா நடத்தப்பட்டன. மேலும், இக் குழந்தைகளின் வசதியை மனதிற் கொண்டு சாய்தள நடைபாதை வசதியும், மாற்றியமைக்கப்பட்ட கழிவறை வசதியும் 714 பள்ளிகளில் அமைத்துக் கொடுக்கப்பட்டன. இது போன்ற எண்ணற்ற திட்டங்கள் மாற்றுத் திறனாளிகளுக்காக எனது அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக, மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்காக மட்டுமல்லாமல், இக்குழந்தைகளின் தேவைகளைப் பெற்றோர்கள் அறிந்து கொள்ளும் வகையில், நாட்டிலேயே முதன் முறையாக மாநில ஆதார வள மையம், State Resource Centre ஒன்று சென்னையில் அமைக்கப்படும் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மையத்தின் மூலம், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மற்றும் சுகாதாரத் துறையின் ஒருங்கிணைப்புடன் செயல்படும் சிறப்பு மருத்துவர்கள், வாழ்வியல் திறன் பயிற்சி வல்லுனர்கள், பேச்சுப் பயிற்சி வல்லுனர்கள் மற்றும் வெவ்வேறு குறைபாடுகளுக்கான ஆலோசகர்களின் தொழில் நுட்ப உதவிகளை மாற்றுத் திறன் கொண்டவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்படும்.

மேலும், அவர்களது குறைபாட்டின் தன்மையை முன்னதாகக் கண்டறிந்து சிகிச்சை அளிக்கவும், அதற்குத் தேவையான உபகரணங்களை மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கவும் இம்மையம் முன்னோடியாக விளங்கும். இது மட்டுமல்லாமல், அரசால் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் சான்றிதழ்கள், உதவித்

தொகைகள் மற்றும் தேவையான உதவிகளைப் பெறுவதற்கு இம்மையம் வழிவகை செய்யும்.

பல்வேறு குறைகளை அறியவும், அவற்றிற்கான சிகிச்சை மற்றும் ஆலோசனை பெறுவதற்குரிய மையங்களைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்வதற்காகவும், இம் மாநில ஆதார வள மையத்தில் ஒரு தனிப்பிரிவு ஏற்படுத்தப்படும். மேலும், இது குறித்து இந்தியாவில் இருக்கும் அனைத்து மையங்களின் விவரங்களைத் தொகுத்து ஒரு கையேடு வெளியிடப்படும். இச்சேவை பெற்றோர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும்.

எல்லாக் குழந்தைகளையும் போல இக்குழந்தைகளும் புத்தகங்களைப் படித்துத் தங்களது திறனை வளர்த்து கொள்ள வேண்டும் என்ற எனது நோக்கத்தின் அடிப்படையில், இம்மையத்தில் குழந்தைகளுக்கென பயன்படும் வகையில் தனியாக ஒரு நூலகப் பிரிவு துவங்கப்படும்.

மேலும் மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளிடையே படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, முதற்கட்டமாக கோயம்புத்தூர் மாவட்ட மைய நூலகத்தில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தனிப்பிரிவு தொடங்கப்படும். இது, பிற மாவட்ட நூலகங்களுக்குப் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

இந்தியாவிலேயே முன்னோடியாகத் தமிழகத்தில் தொடங்கப்பட இருக்கும் இம் மாநில ஆதார வள மையம் மற்றும் அரசால் வழங்கப்படும் மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளுக்கான உள்ளடக்கிய கல்வி, ஆகியவைகள் இக்குழந்தைகளின் வாழ்வில் ஒளியேற்றி அவர்களுடைய வாழ்க்கையை சிறப்புற அமைத்துக் கொள்ள வழிவகை செய்து கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

விசைத்தறி நெசவாளர்களுக்கு மின் கட்டணத்தில் கூடுதல் சலுகை!

10.05.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேளாண்மைக்கு அடுத்தபடியாக ஊரகப் பகுதி மக்களின் வாழ்வாதாரமாக விளங்குவதிலும், நாட்டின் ஏற்றுமதி வருவாயை பெருக்குவதிலும் முக்கியப் பங்கு வகிப்பது நெசவுத் தொழில். இப்படிப்பட்ட இன்றியமையாத் தொழிலான நெசவுத் தொழிலின் வளர்ச்சிக்கு எனது அரசு முன்னுரிமை அளித்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 30.3.2012 அன்று மின் கட்டண விகித மாற்றம் குறித்த தனது ஆணையை வெளியிட்ட போது, அதில் விவசாயிகள், விசைத்தறி நெசவாளர்கள், வீட்டு மின் பயனீட்டாளர்கள் உள்ளிட்டவர்களுக்கு 3,554 கோடியே 16 இலட்சம் ரூபாய் அளவுக்கு கட்டணச் சலுகையை எனது தலைமையிலான அரசு வழங்கியிருந்தது. மேலும், 740 கோடி ரூபாய்க்கான மானியத்தையும் இந்த மாமன்றத்திலே நான் அறிவித்தேன்.

இந்தக் கட்டணச் சலுகையின்படி, விசைத்தறி நெசவாளர்கள் தற்போது இரு மாதங்களுக்கு பயன்படுத்தும் முதல் 500 யூனிட்டுகளுக்கு கட்டணம் ஏதும் செலுத்த வேண்டியதில்லை. 500 யூனிட்களுக்கு மேல் மின்சாரம் பயன்படுத்தும் விசைத்தறி நெசவாளர்கள் 501 யூனிட்டுகளிலிருந்து, ஒரு யூனிட்டுக்கு 4 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும். அதாவது, முதல் 500 யூனிட் வரை விசைத்தறி நெசவாளர்களுக்கு ஒரு யூனிட்டிற்கு 4 ரூபாய் 50 காசு என்று தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் கட்டணம் நிர்ணயித்திருந்த போதிலும், அந்த கட்டணத்தை அரசே ஏற்று, அவர்களுக்கு கட்டணமில்லாச் சலுகை வழங்கப்பட்டது.

500 யூனிட்டுகளுக்கு மேல் மின்சாரத்தை பயன்படுத்தும் விசைத்தறி நெசவாளர்களுக்கு, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் ஒரு யூனிட்டிற்கு 5 ரூபாய் என்று கட்டணம் விதித்திருந்த போதிலும், ஒரு யூனிட்டிற்கு ஒரு ரூபாய் மானியத்தை அரசு வழங்கி வருகிறது. அதாவது, அவர்களிடமிருந்து 1 யூனிட்டிற்கு 4 ரூபாய் மட்டுமே கட்டணமாக வசூலிக்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக, இந்த ஆண்டு விசைத்தறி நெசவாளர்களுக்கு மானியம் வழங்கும் வகையில் 153 கோடியே 15 இலட்சம் ரூபாயை எனது அரசு ஒதுக்கீடு செய்தது.

எனினும், தற்போது செலுத்தப்பட வேண்டிய மின் கட்டணம் உயர் அளவாக உள்ளது என்றும், அது குறைக்கப்பட வேண்டும் என்றும் விசைத்தறி நெசவாளர்கள் கோரிக்கைகள் விடுத்துள்ளனர். இதனை வலியுறுத்தி கடந்த சில நாட்களாக வேலை நிறுத்தம் மேற்கொண்டுள்ளனர். விசைத்தறி நெசவாளர்களின் இந்த கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்த எனது அரசு, அவர்களுக்கு கூடுதல் சலுகைகளை வழங்க தற்போது முடிவு எடுத்துள்ளது.

1. இதன்படி, இரு மாதங்களுக்கு 500 யூனிட்டுகள் வரை பயன்படுத்தும் விசைத்தறி நெசவாளர்களுக்கான கட்டணமில்லாச் சலுகை தொடரும். இதனால் 69,476 விசைத்தறி மின் நுகர்வோர் பயனடைவர்.

2. இரு மாதங்களுக்கு 501 முதல் 1,000 யூனிட்டுகள் வரை பயன்படுத்தும் உபயோகிப்பாளர்கள் தற்போதுள்ள கட்டணமான 4 ரூபாய்க்கு பதிலாக யூனிட் ஒன்றிற்கு 2 ரூபாய் மட்டும் செலுத்தினால் போதும். அதாவது, அவர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் ஒரு ரூபாயுடன், கூடுதலாக யூனிட் ஒன்றிற்கு 2 ரூபாய் மானியம் வழங்கப்படும். இதன் மூலம் 24,171 விசைத்தறி மின்நுகர்வோர் பயனடைவார்கள்.

3. இரு மாதங்களுக்கு 1,001 முதல் 1,500 யூனிட்டுகள் வரை பயன்படுத்தும் உபயோகிப்பாளர்கள் தற்போதுள்ள கட்டணமான 4 ரூபாய்க்கு பதிலாக யூனிட் ஒன்றிற்கு

3 ரூபாய் மட்டுமே செலுத்தினால் போதும். அதாவது, அவர்களுக்கு ஏற்கெனவே யூனிட் ஒன்றிற்கு வழங்கப்பட்டு வரும் ஒரு ரூபாய் மானியத்துடன், கூடுதலாக ஒரு ரூபாய் மானியத்தை அரசு வழங்கும். இதன் மூலம் 9,297 விசைத்தறி மின்நுகர்வோர் பயனடைவார்கள்.

4. இரு மாதங்களில் 1,500 யூனிட்டுகளுக்கும் அதிகமாக மின்சாரத்தை பயன்படுத்தும் 28,056 நெசவாளர்கள், தற்போது அனுபவித்து வரும் ஒரு ரூபாய் மானியத்தை தொடர்ந்து பெறுவார்கள். மேலும், முதல் 500 யூனிட்டுகள் கட்டணம் ஏதுமின்றியும், 501 முதல் 1,500 யூனிட்டுகள் வரை உள்ள பயன்பாட்டிற்கான சலுகைகளையும் பெறுவார்கள்.

5. இந்த சலுகைகளின் காரணமாக, 47 கோடியே 5 இலட்சம் ரூபாயை கூடுதல் மானியமாக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தமிழக அரசு வழங்கும்.

6. இதுமட்டுமன்றி நிலையான கட்டணமாக மாதம் ஒன்றிக்கு கிலோ வாட் ஒன்றுக்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம் நிர்ணயித்த கட்டணமான 50 ரூபாய் என்பது 30 ரூபாயாக குறைக்கப்படும். இதற்காக அரசு 12 கோடியே 64 இலட்சம் ரூபாயை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மானியமாக வழங்கும்.

என்னால் தற்போது அறிவிக்கப்பட்ட இந்த சலுகைகளின் காரணமாக, விசைத்தறி பயனீட்டாளர்களுக்கான மானியத் தொகை ஆண்டொன்றுக்கு 153 கோடியே 15 இலட்சம் ரூபாயிலிருந்து 212 கோடியே 84 இலட்சம் ரூபாயாக அதிகரிக்கும். இந்த அதிகரிக்கப்பட்ட மானியத் தொகையான 59 கோடியே 69 இலட்சம் ரூபாயை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு எனது அரசு வழங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சலுகைகள் மூலம் இந்தத் தொழிலை நம்பியுள்ள நெசவாளர்கள் நலம் பெற்று வளமான வாழ்வு பெறுவார்கள் என்ற எனது நம்பிக்கையினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

மேட்டூர் அனல் மின் நிலையத்தைச் சீரமைக்க உடனடி நடவடிக்கை!

10.05.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இன்று, அதாவது 10.5.2012 அதிகாலை 00.30 மணியளவில் மேட்டூர் அனல் மின் நிலையத்தின் நிலக்கரி கையாளும் பகுதியில் தீ விபத்து ஏற்பட்டது. இதனையடுத்து, 9 தீயணைப்பு வண்டிகள் உடனடியாகத் தீயணைப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டதன் காரணமாக, சுமார் 4 மணி நேரத்திற்குள் தீ முழுவதும் அணைக்கப்பட்டுவிட்டது. இதன் மூலம் அனல் மின்நிலையத்திற்கு ஏற்படவிருந்த பெரும் பாதிப்பு தவிர்க்கப்பட்டது.

இந்தத் தீ விபத்தின் காரணமாக, இரண்டு சந்திப்பு கோபுரங்களுக்கு இடையே உள்ள நிலக்கரி கையாளும் பகுதி மற்றும் Conveyor System முற்றிலுமாக சேதம் அடைந்துள்ளதால், மேட்டூர் அனல் மின்நிலையத்தின் நான்கு யூனிட்டுகளுக்கும் நிலக்கரி எடுத்துச் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது Bunker–ல் உள்ள நிலக்கரி மூலம் இன்று மாலை வரை மட்டுமே மேட்டூர் அனல் மின் நிலையத்தை இயக்க இயலும்.

இந்தத் தீவிபத்தின் விளைவாக, மேட்டூர் அனல் மின் நிலையத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் 840 மெகாவாட் மின் உற்பத்திக்கு தடை ஏற்பட்டுள்ளது. இந்தத் தீ விபத்தினால் ஏற்பட்ட பாதிப்புகளை சீர்செய்து, மீண்டும் மின் உற்பத்தி பணிகளை துவக்க சுமார் ஒரு மாத காலம் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும், பொதுமக்களுக்கு பாதிப்பினை இயன்ற அளவு குறைக்கும் வகையில், தற்போது இயங்காமல் உள்ள தூத்துக்குடி அனல் மின்நிலையத்தின் ஒரு யூனிட்டையும், வடசென்னை அனல் மின் நிலையத்தில் இயங்காமல் உள்ள ஒரு யூனிட்டையும் இன்று முதல் இயக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை

எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 420 மெகாவாட் மின் உற்பத்தி கிடைக்க வழிவகை ஏற்படும்.

மேலும், பிள்ளைபெருமாள்நல்லூரில் உள்ள தனியார் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து 330 மெகாவாட் மின்சாரம் பெறப்படும். இவற்றின்மூலம், இழப்பு ஏற்பட்டுள்ள 840 மெகாவாட் மின்சாரத்தில் 750 மெகாவாட் மின்சாரம் கிடைத்துவிடும்.

தீ விபத்தால் பாதிக்கப்பட்டுள்ள மேட்டூர் அனல் மின் நிலையத்தில் சீரமைக்கும் பணிகளை உடனடியாக மேற்கொண்டு, அந்தப் பணிகள் விரைந்து முடிக்கப்பட வேண்டும் என்று நான் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

இந்தத் தீ விபத்தில் உயிரிழந்த உதவியாளர் திரு. நல்லதம்பி அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தீ விபத்தில் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள உதவியாளர் திரு. கோபால் அவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மாவட்ட நிருவாகத்திற்கு நான் உத்தரவிட்டுள்ளேன். மேலும், அவர் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் தீவிபத்தில் உயிரிழந்த நல்லதம்பி அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 2 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதையும், காயமடைந்த திரு. கோபால் அவர்களுக்கு 25,000 ரூபாய் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் கிராம விளையாட்டுப் போட்டிகள்!

10.05.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இளைய சமுதாயத்தினரின் அறிவு வளர்ச்சிக்கு கல்வி துணை நிற்பது போல், உடல் வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்திற்கும் இன்றியமையாததாக விளங்குவது விளையாட்டு என்று சொன்னால் அது மிகையாகாது.

இதனை உணர்ந்த எனது தலைமையிலான அரசு, கல்விக்கு அளிக்கும் அதே முக்கியத்துவத்தை விளையாட்டிற்கும் அளித்து வருகிறது. சர்வதேச அளவிலான போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில், தினப் பயிற்சி திட்டத்தின் மூலம் முழுமையான பயிற்சி அளித்தல்; பன்னாட்டுத் தரத்தில் விளையாட்டு மைதானங்கள் அமைத்தல்; உள் விளையாட்டு அரங்கங்களை அமைத்தல்; ஊக்கத் தொகை அளித்தல்; போன்ற பல்வேறு முனைப்பான திட்டங்கள் விளையாட்டுத் துறையின் மேம்பாட்டிற்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளிலும் விளையாட்டினை மேம்படுத்தும் பொருட்டு, மத்திய – மாநில அரசுகளின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் கிராம இளைஞர் மேம்பாட்டு விளையாட்டுத் திட்டத்தின் கீழ் விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகளை சிறந்த முறையில் பராமரித்து பயன்படுத்திடும் வகையிலும், கிராம மக்களிடையே விளையாட்டு ஆர்வத்தை மேம்படுத்திடும் வண்ணமும், ஆண்டு ஒன்றுக்கு 25 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் ஒவ்வொரு கிராம

ஊராட்சியிலும் கிராம விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆசிய தடகளப் போட்டிகளை இந்தியாவில் நடத்திட ஆசிய தடகளக் கழகம் அனுமதிக்கப்பட்டுள்ளதை அடுத்து, இந்திய தடகள சம்மேளனம், ஆசிய தடகளப் போட்டிகளை 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சென்னையில், தமிழ்நாடு அரசின் ஒத்துழைப்புடன் நடத்திட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் போட்டிகளில் 44 நாடுகளைச் சார்ந்த தடகள விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்பார்கள் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இந்தப் போட்டிகளை சிறப்புற நடத்திட சென்னை நேரு விளையாட்டரங்கில் உள்ள செயற்கை இழை தடகள ஓடுபாதை மாற்றியமைக்கப்படுவதோடு, புதிய பயிற்சி செயற்கை இழை தடகள ஓடுபாதை ஒன்றும், அதாவது Warm up Track அமைக்கப்படும்; தற்போதுள்ள வசதிகள் அனைத்தும் உலக தரத்திற்கு உயர்த்தப்படும்; சர்வதேச தரத்திலான உபகரணங்கள் வாங்கப்படும். மேலும் இப்போட்டிகளில் பங்கு பெறும் அனைத்து பன்னாட்டு வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் உரிய வசதிகள் செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, இதற்காக 40 கோடி ரூபாய் செலவிடப்படும் என்பதையும் மன நிறைவுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

ரூ.136 கோடி மதிப்பீட்டில் 20 சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் திட்டங்கள்!

11.05.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலைவாய்ப்பு மற்றும் உற்பத்தியைப் பெருக்குவதுடன், நமது நாட்டின் பொருளாதார அமைப்பின் துடிப்பான அங்கமாக, உயிர்நாடியாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

இந்த நிறுவனங்களின் உற்பத்தியை அதிகப்படுத்துதல், போட்டித் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் திறன் வளர்த்தல் ஆகியவற்றைக் குழும மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் செயல்படுத்த தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தை தமிழக அரசு முகவராக நியமித்துள்ளது. தமிழ்நாட்டில் குழுமத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக 50 திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதில், 7 திட்டங்கள் முழுமையடைந்துள்ளதோடு மட்டுமல்லாமல், 8 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில், 136 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 20 திட்டங்கள் நிறைவேற்றப்படும். இந்தத் திட்டங்களை விரைந்து நிறைவேற்றும் பொருட்டு, 10 உதவி வளர்ச்சி அலுவலர் பணியிடங்கள் புதிதாகத் தோற்றுவிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்குத் தேவையான தொழில்நுட்பப் பணியாளர்கள் கிடைக்க ஏதுவாக, விருத்தாசலத்தில் அமைந்துள்ள பீங்கான் தொழில்நுட்பப் பயிற்சி மையத்தின் மூலம் மூன்றரை ஆண்டு கால ''பீங்கான் தொழில் நுட்பம்'' பட்டயப் படிப்பும், திண்டுக்கல்லில் உள்ள கருவிப் பொறியியல் பயிலகத்தின் மூலம் மூன்று ஆண்டு கால அச்சு மற்றும் பொறியியல் படிப்பும், சென்னையிலுள்ள அரசினர் தொழில்நுட்பப்

பயிற்சி நிலையத்தின் மூலம் மூன்று ஆண்டு கால இயந்திரவியல் பட்டயப் படிப்புகளில் சிறப்புப் பிரிவுகளான அச்சு மற்றும் கருவிப் பொறியியல், குளிர் பதனம் மற்றும் காற்றுப் பதனவியல் படிப்புகளும் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. இப்பயிலகங்களில் பயிற்சி பெற்ற அனைத்து மாணவர்களும் முன்னணி நிறுவனங்களில் நல்ல வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த இந்தப் பயிலகங்கள் மிகவும் பழுதடைந்துள்ளதைக் கருத்தில் கொண்டும், மாணவர்களின் தேவைகளுக்கேற்ப மாறிவரும் தொழிற்பயிற்சித் திட்டங்களை அளிக்கும் நோக்கத்துடனும், இப்பயிற்சி நிலையங்களின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பாண்டில் மேம்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், மத்திய அரசின் தாராளமயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் கொள்கையினைத் தொடர்ந்து, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் புதுப்புது சவால்களை ஒவ்வொரு ஆண்டும் சந்தித்து வருகின்றன. இவை உலகளாவிய போட்டியினைச் சமாளிக்கும் திறனுடன் செயல்பட வேண்டி உள்ளது. எனவே, மாவட்டத் தொழில் மையங்களின் பணிகள் நவீனமயமாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

மாவட்டத் தொழில் மையங்களின் பணிகளை நவீன முறையில் சீரமைக்கும் பொருட்டு, ஏற்கெனவே சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் மாவட்டத் தொழில் மைய அலுவலக கட்டடங்கள் தேவைக்கேற்ப நவீன வசதிகளுடன் சீரமைக்கப்படும். தேவை உள்ள இடங்களில் புதிய கட்டடம் கட்டித் தரப்படும். வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் மாவட்டத் தொழில் மைய அலுவலகங்களுக்கு நவீன வசதிகளுடன் கூடிய புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படும். மேலும், இம் மையங்களுக்குத் தேவையான நவீன கணினி மற்றும் தொலைத் தொடர்பு சாதனங்கள் நிறுவப்படுவதுடன், இம் மையங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சியும் அளிக்கப்படும். இப் பணிகள் 50 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

நீதிமன்றங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள்

11.05.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஜனநாயகத்தின் மூன்றாவது தூணாக விளங்கும் நீதித் துறை சிறப்பாகச் செயல்பட வேண்டும் எனில், நீதிமன்றங்களுக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது அவசியம் ஆகும்.

இந்த வகையில், பாரம்பரியமிக்க பழைய நீதிமன்றக் கட்டடங்கள் தொன்மை மாறாமல் புதுப்பொலிவுடன் விளங்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், சென்னை நகரில் இயங்கி வரும் பழைமை வாய்ந்த ஜார்ஜ் டவுன் நீதிமன்றம், சைதாப்பேட்டை நீதிமன்றம், எழும்பூர் நீதிமன்றங்கள் மற்றும் சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள சிறுவழக்குகள் நீதிமன்றம் ஆகிய கட்டடங்களுக்கு 22 கோடி ரூபாய் செலவில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தமிழகத்தில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் நீதிமன்றங்களுக்கென படிப்படியாகச் சொந்தக் கட்டடம் கட்டும் வகையில், முதற் கட்டமாக, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசால் அறிவிக்கப்பட்டுத் தொடங்கப்படாமல் இருந்த ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் திண்டிவனம் மெயின்ரோடு,

ஜக்கம்பேட்டை கிராமத்தில் 8.15 ஏக்கர் நிலப்பரப்பில், 17 கோடியே 31 இலட்சத்து 69 ஆயிரம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

இதன் மூலம், விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில், பல்வேறு அரசுக் கட்டடங்கள் மற்றும் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 8 நீதிமன்றங்களும் இந்த ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் செயல்பட வழிவகை ஏற்படுவதோடு, அனைத்து நீதிபதிகளுக்கும் குடியிருப்புகள் கிடைக்க வழிவகை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திட புதிய தயாரிப்பு மண்டலங்கள்

11.05.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"அரும்பும் வியர்வை உதிர்த்துப் புவிமேல் ஆயிரம் தொழில் செய்திடுவீரே" என்ற மகாகவி பாரதியின் வரிகளுக்கு இணங்க, நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாததாக விளங்கும் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், சாதகமான தொழில் கொள்கைகளை வகுத்து, தொழில் முனைவோர்களை தமிழ்நாட்டின் பக்கம் ஈர்க்கும் நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

புதிய முதலீடுகளை ஈர்த்து, புதிய தொழிற்சாலைகளைத் தோற்றுவித்து, வேலைவாய்ப்புகளை உருவாக்கி, அதன்மூலம் தமிழக மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட வேண்டும் என்பதே எனது அரசின் இலக்காகும். இந்த இலக்கை அடைய வேண்டுமெனில், எரிசக்தியில் தன்னிறைவு அடையப்பட வேண்டும். பிற மாநிலங்களில், எரிசக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் இயற்கை எரிவாயுவின் பங்களிப்பு இருந்தாலும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், எரிசக்தி தேவைகள் நிலக்கரி மற்றும் பெட்ரோலியப் பொருட்களையே சார்ந்துள்ளன.

கிருஷ்ணா, கோதாவரி படுகையிலிருந்து கிடைக்கப் பெறும் எரிவாயு, குழாய்க் கட்டமைப்பு உள்ள மாநிலங்களுக்கு மட்டும் மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தென் மாநிலங்களைப் பொறுத்தவரை ஆந்திர மாநிலத்திற்கு மட்டும் தான் எரிவாயு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டின் எரிசக்தித் தேவையைப் பூர்த்தி செய்ய எரிவாயுவின் பங்களிப்பு அவசியம் என்பதைக் கருத்தில்

கொண்டு, அதன் அடிப்படையில், எனது அரசால் வெளியிடப்பட்ட "தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023ல்" திரவ நிலை எரிவாயு முனையங்கள் அமைப்பது மற்றும் எரிவாயு விநியோகக் குழாய் இணைத் தொகுதிகள் அமைப்பது ஆகியவை எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் எரிசக்தித் தேவையைப் பூர்த்தி செய்ய வருடத்திற்கு 5 மில்லியன் டன் கையாளும் திறன் கொண்ட இரண்டு திரவ நிலை எரிவாயு இறக்குமதி முனையங்கள் தேவை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம் காட்டுப்பள்ளி கிராமத்தில் எண்ணூர் துறைமுகத்தின் அருகில், திரவநிலை எரிவாயு இறக்குமதி முனையம் ஒன்றினை அமைக்கும் வகையில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும், அதாவது டிட்கோ நிறுவனமும், மத்திய அரசு நிறுவனமான இந்தியன் ஆயில் நிறுவனமும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை 22.3.2012 அன்று எனது முன்னிலையில் செய்து கொண்டன.

2016ஆம் ஆண்டில் இம்முனையம் செயல்படும்போது ஆண்டொன்றுக்கு 5 மில்லியன் டன் திரவநிலை எரிவாயுவை இறக்குமதி செய்து அதன் மூலம் நாளொன்றுக்கு சுமார் 18 மில்லியன் கனமீட்டர் எரிவாயுவை தமிழ்நாட்டின் மின் உற்பத்திக்கும், தொழிற்சாலைகளுக்கும், வாகனங்களுக்கும், வீட்டு உபயோகத்திற்கும் விநியோகம் செய்ய இயலும்.

இதனை விநியோகிக்கத் தேவையான குழாய்த் தொடரமைப்புத் திட்டங்கள் அவசியம் என்பதன் அடிப்படையில், கெயில் நிறுவனமும், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும், அதாவது டிட்கோ நிறுவனமும் எரிவாயு ஒத்துழைப்புச் செயல் திட்ட ஒப்பந்தம் ஒன்றில் 10.5.2012 அன்று எனது முன்னிலையில் கையெழுத்திட்டன.

1. கெயில் நிறுவனம் கொச்சியில் நிறுவப்பட்டு வரும் திரவ எரிவாயு முனையத்திலிருந்து எரிவாயுவைக் கொண்டு

செல்லும் கொச்சி–பெங்களூரு குழாய் தொடரமைப்புத் திட்டத்தின் கட்டுமானப் பணிகளைத் தொடங்கியுள்ளது. இக்குழாய் தொடரமைப்பில், 310 கிலோ மீட்டர் நீளமுள்ள பகுதி தமிழ்நாட்டின் கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் வழியாகச் செல்லும். கெயில் நிறுவனம் தமிழ்நாடு வழியே செல்லும் இக்குழாய் தொடரமைப்பின் பாதையில் உள்ள தொழில் மையங்கள், போக்குவரத்து வாகனங்கள், நகர்ப்புரத்தில் உள்ள வீடுகள் ஆகியவற்றிற்கு தேவையான எரிவாயுவை விநியோகம் செய்வதற்கான இணை குழாய் தொடரமைப்புத் திட்டத்தினை மேற்கொள்ளும். இத்திட்டம் 1,000 கோடி ரூபாய் முதலீட்டில் செயல்படுத்தப்படும்.

2. இந்த குழாய் தொடரமைப்பின் சேலம் முனையத்திலிருந்து கடலூர் பகுதி வரையில் நாளொன்றுக்கு 6 மில்லியன் கன மீட்டர் எரிவாயு கொண்டு செல்லும் குழாய்களை அமைக்கும் திட்டம் 500 கோடி ரூபாய் முதலீட்டில் செயல்படுத்தப்படும்.

3. தென் மாவட்ட கடலோர பகுதியில் மிதக்கும் திரவ நிலை எரிவாயு முனையம், அதாவது, Floating Storage Degasification Unit ஒன்றினை உருவாக்கும் திட்டம் சுமார் 2,500 கோடி ரூபாய் முதலீட்டில் செயல்படுத்தப்படும்.

இந்தத் திட்டங்கள் கெயில் நிறுவனத்தால் செயல்படுத்தப்படும். டிட்கோ நிறுவனம் இதற்குத் தேவையான ஒத்துழைப்பை நல்கும்.

மேலும் கொச்சி – பெங்களூரு எரிவாயுக் குழாய்த் தொடரமைப்பில் கிடைக்கும் எரிவாயு மூலம் முதற் கட்டமாக 500 மெகா வாட் திறனுள்ள மின் உற்பத்தி திட்டம் 2,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். இதனை நிறைவேற்ற டிட்கோவும், கெயில் நிறுவனமும் இணைந்து ஒரு கூட்டுத் துறை நிறுவனத்தை ஏற்படுத்தும். இந்தத் திட்டம் வரும் ஐந்தாண்டுகளில் மேலும் விரிவுபடுத்தப்பட்டு 10,000 கோடி

ரூபாய் அளவிற்கு முதலீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் வகையில், உயர்தர உட்கட்டமைப்பு, பொது உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் போட்டியிட்டு வணிகம் செய்வதற்கு ஏற்ற சூழ்நிலைகளைக் கொண்ட புதிய தயாரிப்பு மண்டலங்கள் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதற்கட்டமாக, தூத்துக்குடி மாவட்டம்–ஒட்டப்பிடாரத்தில் 1,500 ஏக்கர்; வேலூர் மாவட்டம்–காட்ராம்பாக்கத்தில் 2,000 ஏக்கர்; கிருஷ்ணகிரி மாவட்டம்–ஓசூரில் 4,000 ஏக்கர் பரப்பளவில் புதிய தயாரிப்பு மண்டலங்கள் நிறுவப்படும். இந்தப் புதிய மண்டலங்களை நிறுவி மேலாண்மை செய்வதற்காக ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு சிறப்பு நோக்க நிறுவனம் (Special Purpose Vehicle) அமைக்கப்படும்.

எண்ணூர் துறைமுகம் பகுதியின் முக்கியத்துவத்தைக் கருதி அங்குள்ள சாலைகளின் தரம் மேம்படுத்தப்படும் என்றும், ஒரகடம் பகுதியில் உள்ள தொழில் நிறுவனங்கள் தங்கள் ஏற்றுமதிப் பொருட்களை எளிதில் அனுப்ப வசதியாக வடக்குத் துறைமுக இணைப்புச் சாலை அமைக்கப்படும் என்றும் நான் ஏற்கெனவே அறிவித்திருந்தேன். புதிதாக உருவாகும் இந்த சாலைகளுக்கு அருகில் சுமார் 1,000 ஏக்கர் பரப்பளவில் கனரகப் பொறியியல் தொழிற்சாலைகளுக்கான ஒரு பெரு மையம், அதாவது Hub ஒன்று உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியைப் பரவலாக்கும் நோக்கத்துடனும், புதிய தொழில் முனைவோருக்குத் தேவையான நிலங்களை உட்கட்டமைப்பு வசதிகளோடு வழங்கும் நோக்கத்துடனும், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், அதாவது சிப்காட் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் தற்போது தமிழ்நாட்டில் முதலீடு செய்ய முன்வரும் பெரும் தொழில்

நிறுவனங்களுக்குத் தேவையான நிலங்களை விரைந்து அளிக்க வசதியாக சுமார் 20,000 ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தினால் பராமரிக்கப்பட்டு வரும் தொழிற் பூங்காக்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, 100 கோடி ரூபாய் நிதியுடன் ''தொழில் கட்டமைப்பு தொகுப்பு நிதி'' ஒன்று உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தொகுப்பு நிதியை உருவாக்குவதற்கு, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் 80 கோடி ரூபாயும், அரசு 20 கோடி ரூபாயும் நிதி உதவி அளிக்கும். இந்த நிதியின் மூலம், சிப்காட் தொழிற்பூங்கா அமைந்துள்ள பகுதிகளில், தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலையுடன் இணைப்பதற்கான சாலைகள் அமைத்தல், சிறு பாலங்கள் கட்டுதல், ஏற்கெனவே உள்ள இணைப்புச் சாலைகளை மேம்படுத்தி அகலப்படுத்துதல், மாசுக் கட்டுப்பாட்டிற்குத் தேவையான பொது உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், குடிநீர் அல்லது தொழிற்சாலைகளுக்குத் தேவையான புதிய நீர் ஆதாரங்களை உருவாக்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

மீனவர்களின் நலன்காக்க மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறோம்!

14.05.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மிகவும் பழைமை வாய்ந்த தொழில்களில் ஒன்றான மீன்பிடித் தொழில் மூலம் உயர்தர புரதச் சத்துடன் கூடிய தரமான உணவுத் தேவையினைப் பூர்த்தி செய்வதிலும், வேலை வாய்ப்புகளை உருவாக்குவதிலும், அந்நியச் செலாவணியை ஈட்டுவதிலும் முக்கியப் பங்கினை தமிழக மீனவர்கள் வகிக்கிறார்கள்.

இப்படிப்பட்ட இன்றியமையாத் தொழிலைச் செய்யும் மீனவர்களின் நலன் காக்கும் வகையில், மீன்பிடித் தடைக் காலத்தில் நிவாரணத் தொகை வழங்குவது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை எனது அரசு எடுத்து வருகிறது.

தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையினரின் தாக்குதல்களை நிறுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கவும், இந்நிகழ்வுகளை ஒரு தேசியப் பிரச்சினையாகக் கருதி பிரச்சினைக்குத் தீர்வு காணவும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைக் கடிதம் மூலம் பலமுறை வலியுறுத்தியுள்ளேன்.

இந்தச் சூழ்நிலையில், 10.5.2012 அன்று பாம்பன் கிராமத்தைச் சார்ந்த 5 மீனவர்கள் ஒரு நாட்டுப் படகில் இராமேஸ்வரம் அருகே அரியமான் கடற்கரையிலிருந்து நான்கு கடல் மைல் தொலைவில் மீன் பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, இரவு 8.45 மணியளவில் இந்தியக் கடலோரக் காவல் படையின் கப்பலொன்று மீன்பிடிப்பு மேற்கொண்டிருந்த இப்படகின் மீது மோதியதாகத் தெரிகிறது. இதன் காரணமாக மீன்பிடிப் படகு சேதமுற்று கடலில் மூழ்கியது. படகில் இருந்த 5 மீனவர்களில், நான்கு மீனவர்கள் சிறிது தொலைவு நீந்தி வேறு ஒரு வள்ளத்தில் ஏறிக் கரை சேர்ந்தனர். மற்ற ஒரு மீனவரான திரு பௌனிராஜ்

என்பவரின் மகன் கால்வின் மில்லர் காயமுற்று நீரில் மூழ்கிக் காணாமல் போய்விட்டார். 12.5.2012 அன்று காலையில் இந்த 19 வயது இளைஞனின் உடல், மண்டபத்திலிருந்து 7 கடல் மைல் தொலைவில் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தச் செய்தியைக் கேட்டு அதிர்ச்சியடைந்த நான், அகால மரணமடைந்த மீனவர் கால்வின் மில்லர் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்ததுடன், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஐந்து இலட்சம் ரூபாய் நிவாரண உதவியை உடனடியாக அளித்திட உத்தரவிட்டுள்ளேன்.

எனது உத்தரவின் பேரில், தமிழக அரசின் தலைமைச்செயலாளர் அவர்கள் புது டில்லியில் உள்ள இந்தியக் கடலோரக் காவல் படையின் தலைமை இயக்குநரைக் கடிதம் மூலம் தொடர்பு கொண்டு இவ்விபத்தின் உண்மை நிலையினை அறிய விரிவான விசாரணை ஒன்று மேற்கொள்ள வேண்டுமென்றும் மீனவரின் இறப்பிற்குக் காரணமான நபர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

மீனவர்களின் நலன் காப்பதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வரும் எனது தலைமையிலான அரசு, இந்நிகழ்வில் பாதிக்கப்பட்ட மீனவரின் குடும்பத்திற்கு நியாயம் கிடைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் வசதியற்ற மாணாக்கர்களுக்கு அரசே கட்டணம் செலுத்தும்!

14.05.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொருளாதாரத்தில் ஒரு நாடு சிறந்து விளங்க வேண்டுமெனில், ஏட்டுக் கல்வியுடன் தொழில் கல்வியும் வளர்ச்சி பெற வேண்டியது இன்றியமையாதது ஆகும்.

இதன் அடிப்படையில், இளைய சமுதாயத்தினர் தொழில் கல்வியில் வளர்ச்சி பெறத் தேவையான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருவதன் காரணமாக, தொழில்நுட்பத் தகுதி பெற்றுள்ள மாணவ – மாணவியரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள 62 அரசுத் தொழிற் பயிற்சி நிலையங்கள் மூலம், சுமார் 21,000 மாணவ, மாணவியருக்குக் கட்டணம் எதுவும் இன்றி பயிற்சி அளிக்கப்படுகிறது. தகுதி பெற்ற அனைத்து மாணவ–மாணவியருக்கும் அரசுத் தொழிற் பயிற்சி நிலையங்கள் மூலம் பயிற்சி அளிக்க முடியாத சூழ்நிலை உள்ளது.

அதே சமயத்தில், தமிழ்நாட்டில் உள்ள 627 தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் மூலம் 60,320 மாணவ – மாணவியருக்குப் பயிற்சி அளிக்க முடியும். ஊரகப் பகுதிகளில் உள்ள தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் 20,000/– ரூபாய் முதல் 25,000/– ரூபாய் வரையிலும், நகரப் பகுதிகளில் உள்ள தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் 25,000/– ரூபாய் முதல் 30,000/– ரூபாய் வரையிலும் பயிற்சிக் கட்டணமாக வசூலிக்கின்றன. இந்தப் பயிற்சிக் கட்டணத்தை ஏழ்மை நிலையில் உள்ள படித்த இளைஞர்களால் கட்ட முடியாததால், தனியார் தொழிற்பயிற்சி

நிலையங்களில் 50 விழுக்காட்டிற்கு மேல் இடங்கள் நிரப்பப்படாமல் காலியாகவே உள்ளன.

தொழில் சார்ந்த திறன் பயிற்சி மற்றும் அறிவு சார் திறன் பயிற்சி பெற்ற மனித வளத்தை உருவாக்குவது, தமிழ்நாட்டின் தொலைநோக்குத் திட்டம் – 2023இன் வெற்றிக்கு ஆதாரமாக அமையும். வரும் 11 ஆண்டுகளில், 2 கோடி நபர்களை வேலை வாய்ப்புக்கு ஏற்ற பயிற்சி மற்றும் திறன் பெற்ற பணியாளர்களாக உருவாக்குவது தொலை நோக்குத் திட்டம்–2023இன் வளர்ச்சி யுத்திகளில் ஒன்றாகும்.

இந்தச் சூழ்நிலையில், வேலைவாய்ப்புக்கேற்ற பயிற்சித் திறனைத் தகுதி படைத்த மாணவ – மாணவியர் அனைவருக்கும் அளித்திடும் வண்ணம், அங்கீகரிக்கப்பட்ட மற்றும் தகுதியுள்ள தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50 விழுக்காடு இருக்கைகளை, அரசுத் தொழிற்பயிற்சி நிலையங்களில் பின்பற்றப்படும் மாணவர் சேர்க்கை முறையைப் பின்பற்றி, மாவட்டந்தோறும் கலந்தாய்வு நடத்தி, அரசே நிரப்பும் வண்ணம் நடவடிக்கை எடுக்கப்படும். இதனால் திறமை இருந்தும், வசதியின்மை காரணமாக தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர இயலாத மாணவ–மாணவியர் பெரிதும் பயன் அடைவர். தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் இம் மாணவ – மாணவியர் வேலை வாய்ப்பைப் பெறும் வகையில் ஒரு வருட மற்றும் இரண்டு வருடப் படிப்புகளில் பயிற்சி அளிக்கப்படும். அரசுத் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவ–மாணவியரைப் போலவே, இத்திட்டத்தின் மூலம் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் சேர்ந்து பயிலும் மாணவ–மாணவியரிடமிருந்து பயிற்சிக் கட்டணம் ஏதும் வசூலிக்கப்பட மாட்டாது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாணவ–மாணவியர் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களுக்குச் செலுத்த வேண்டிய பயிற்சிக் கட்டணத்தை அரசே செலுத்தும். இதன்படி ஊரகப் பகுதிகளில் உள்ள தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு மாணாக்கர் ஒருவருக்கு

10,000 ரூபாய் வீதமும், நகர்ப் பகுதிகளில் உள்ள தனியார் பயிற்சி நிலையங்களுக்கு மாணாக்கர் ஒருவருக்கு 12,000 ரூபாய் வீதமும் பயிற்சிக் கட்டணம் அரசால் செலுத்தப்படும்.

இத்திட்டத்தின் மூலம் முதலாம் ஆண்டில் சுமார் 18,000 மாணவ – மாணவியரும், பின்னர் வரும் ஆண்டுகளில் 30,000 மாணவ – மாணவியரும், வேலைவாய்ப்புக்கு ஏற்ற திறன் பயிற்சி பெறுவார்கள். இதற்கென 2012–2013ஆம் ஆண்டில் 14 கோடியே 85 இலட்சம் ரூபாயும், 2013–2014ஆம் ஆண்டில் 26 கோடியே 40 இலட்சம் ரூபாயும், 2014–2015ஆம் ஆண்டு முதல் ஆண்டொன்றுக்கு 33 கோடி ரூபாயும் அரசுக்குச் செலவு ஏற்படும்.

இதன் மூலம், தனியார் துறையில் இளைஞர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பு கிடைத்து, அவர்களது பொருளாதார நிலை உயர்வதுடன், நாட்டின் தொழில் உற்பத்தித் திறனும் அதிகரிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்த 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

14.05.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொழில்நுட்பத் தகுதியுடன் கூடிய சிறப்பான மனித வளத்தைக் கொண்டுள்ள தமிழ்நாட்டில், அதிக அளவு தொழில் முனைவோரை ஈர்க்கும் வகையில், கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகளை, தொலைநோக்குப் பார்வையுடன் எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

இந்தியாவின் ஒட்டுமொத்த வளர்ச்சி விகிதத்தைவிட தமிழகத்தின் வளர்ச்சி விகிதம் 20 விழுக்காடு அதிகமாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தொலைநோக்குத் திட்டம் 2023 தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், தொழில் துறையில் நேரடி முதலீட்டை ஈர்ப்பதில் ஒரு முன்னணி மாநிலமாகவும், ஆசியாவிலேயே முதலீட்டுக்கு உகந்த முதல் 3 இடங்களில் ஒன்றாகவும் தமிழ்நாட்டை உருவாக்கவேண்டும் என்பதும் தொலைநோக்குத் திட்டத்தில் அடங்கியுள்ள குறிக்கோள் ஆகும்.

இத்தகைய வளர்ச்சியை நாம் அடைய வேண்டுமென்றால் அதற்குத் தேவையான எரிசக்தி கிடைப்பதை உறுதிசெய்வது அவசியம் என்பதால், கடந்த 10.5.2012 அன்று கெயில் இந்தியா நிறுவனத்துடன் மிகப் பெரும் எரிவாயு ஒப்பந்தம் ஒன்றினைத் தமிழக அரசின் டிட்கோ நிறுவனம் எனது முன்னிலையில் கையெழுத்திட்ட விவரத்தை நான் ஏற்கெனவே இந்த அவையில் 11.5.2012 அன்று அறிவித்தேன்.

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தும் விதமாக, இன்று என் முன்னிலையில் 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

கையெழுத்திடப்பட்டன என்ற செய்தியை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. ஓரகடத்தில் டெய்ம்லர் இந்தியா கமர்ஷியல் வெஹிகிள் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் (Daimler India Commercial Vehicles Private Limited) தொழிற்சாலையை 18.4.2012 அன்று நான் திறந்து வைத்ததை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். 2008ஆம் ஆண்டு கடந்த ஆட்சியின்போது டெய்ம்லர் நிறுவனம் 3,000 கோடி ரூபாய் முதலீடு செய்ய ஒப்பந்தம் கையெழுத்திட்டது. ஆனால், அந்நிறுவனம் 2010ஆம் ஆண்டில் தனது முதலீட்டினை 2,000 கோடி ரூபாயாகக் குறைத்துக் கொண்டது. எனது தலைமையிலான அரசால் எடுக்கப்பட்ட பல முன்னோடி நடவடிக்கைகளின் காரணமாக டெய்ம்லர் நிறுவனம் 2,000 கோடி ரூபாயாகக் குறைத்த தனது முதலீட்டினை இருமடங்காக்கி 4,000 கோடி ரூபாயாக முதலீடு செய்ய தற்போது முன் வந்துள்ளது. அதற்கான ஒப்பந்தம் இன்று கையெழுத்திடப்பட்டது. இதன் மூலம் 3,000 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பு உருவாகும்.

2. ஜப்பான் நாட்டின் உலகப் புகழ்பெற்ற யமஹா நிறுவனம் மோட்டார் சைக்கிள்கள், மின்னணுப் பொருட்கள், இசைக் கருவிகள், படகுகளுக்கான மோட்டார் என்ஜின்கள் போன்றவற்றைத் தயாரிக்கும் நிறுவனமாகும். தற்போது, இந்தியா யமஹா மோட்டார் லிமிடெட் நிறுவனம் (India Yamaha Motor Limited), காஞ்சிபுரம் மாவட்டம் வல்லம் வடகால் சிப்காட் தொழிற் பூங்காவில் 1,500 கோடி ரூபாய் முதலீட்டில் 125 ஏக்கர் பரப்பளவில் அதிநவீன மோட்டார் சைக்கிள்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்று காலை கையெழுத்தானது. இதன் மூலம் 3,000 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும் 20 ஆயிரம் பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

3. அசோக் லேலண்ட் – நிசான் மோட்டார் கம்பெனி லிமிடெட் நிறுவனத்துடன் (Ashok Leyland - Nissan Motor Company Limited) முந்தைய அரசு 8.9.2008 அன்று இலகுரக வாகனங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதற்காக, 4,150 கோடி ரூபாய் முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிட்டது. ஆனால், இந்நிறுவனத்திற்கு ஒப்பந்தத்தின்படி வழங்க வேண்டிய நிலம், 21.2.2011 அன்று, அதாவது சுமார் இரண்டரை ஆண்டுகள் கழித்துதான் முந்தைய அரசால் வழங்கப்பட்டது. மேலும், அந்நிறுவனத்தின் சில நிருவாகக் கோரிக்கைகள் முறையாகப் பரிசீலித்து முடிவெடுக்கப் படாததால், இந்தத் திட்டம் தொடங்கப்படாமலேயே இருந்தது. முடங்கிக் கிடந்த இத்திட்டத்திற்கு எனது அரசு மீண்டும் புத்துயிரூட்டி புதிய புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று இன்று கையெழுத்திடப்பட்டது. ஓசூர், பிள்ளைப்பாக்கம், எண்ணூர், வெள்ளிவாயல்சாவடி மற்றும் ஒரகடம் ஆகிய பகுதிகளில் அமையவுள்ள இத்திட்டத்தின் மூலம் 3 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

4. புகழ்பெற்ற ராயல் என்ஃபீல்ட் மோட்டார் சைக்கிள்களைத் தயாரிக்கும் எய்ஷர் மோட்டார் நிறுவனம் (Eicher Motors Limited) புதிய தொழிற்சாலை ஒன்றினை ஒரகடத்தில் நிறுவ முன்வந்துள்ளது. இதற்காக, ஒரகடம் சிப்காட் தொழிற்பூங்காவில் 50 ஏக்கர் நிலத்தை எனது அரசு வழங்கியுள்ளது. அங்கு 350 கோடி ரூபாய் முதலீடு செய்ய இன்று அந்நிறுவனம் தமிழ்நாடு அரசுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இதன் மூலம் 300 புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும்.

5. இதேபோன்று, ஆர்.பி. கோயங்கா குழுமத்தின் நிறுவனமான ஃபிலிப்ஸ் கார்பன் பிளாக் லிமிடெட் நிறுவனம் (Philips Carbon Black Limited), டயர் தயாரிப்பதற்குத் தேவையான கார்பன் பிளாக் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை 350 கோடி ரூபாய் முதலீட்டில் திருவள்ளூர் மாவட்டம்

தேர்வாய்க்கண்டிகை சிப்காட் தொழிற் பூங்காவில் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இன்று கையொப்பமிட்டது. இத்தொழிற்சாலையில் 230 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

இன்று ஏற்படுத்தப்பட்ட இந்த ஐந்து புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் மூலம் தமிழகத்திற்குப் புதியதாக வரக்கூடிய முதலீடு குறைந்தபட்சம் 5,700 கோடி ரூபாய் ஆகும். புதிதாக உருவாகும் வேலைவாய்ப்புகள் 9,530 ஆகும்.

இன்னும், பல தொழில் முதலீட்டு முன்மொழிவுகள் அரசின் பரிசீலனையில் உள்ளன என்பதையும், அவற்றுக்கான ஒப்புதல் விரைவில் வழங்கப்பட்டு, அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் விரைவில் கையொப்பமிடப்பட உள்ளன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

சத்துணவு உண்ணும் பள்ளிக் குழந்தைகளுக்கு இந்த ஆண்டு முதல் 4 இணை சீருடைகள்!

14.05.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குழந்தைகள் பசியால் வாடி நலமற்றவர்களாக மாறுவதைத் தடுக்கும் பணியிலும், அவர்களிடையே காணப்படும் ஊட்டச்சத்துக் குறைபாட்டைப் போக்கும் பணியிலும் அங்கன்வாடி மையங்கள் ஈடுபட்டு வருகின்றன.

இந்த அங்கன்வாடி மையங்களில், இணை உணவு, முட்டை, சூடான மதிய உணவு ஆகியவற்றுடன் முன் பருவக் கல்வியும் குழந்தைகளுக்கு அளிக்கப்படுகின்றன. மேலும், இந்த மையங்களில் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளர் இளம் பெண்கள் ஆகியோருக்கு இணை உணவும், முதியோர்களுக்கு மதிய உணவும் அளிக்கப்படுகிறது. தற்போது, தமிழகம் முழுவதிலும் உள்ள இந்த அங்கன்வாடி மையங்கள் மூலம் 31 இலட்சம் பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.

இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த அங்கன்வாடி மையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும், மின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், மின் விசிறி மற்றும் மின் விளக்கு ஆகியவற்றைப் பொருத்தவும் நான் சென்ற ஆண்டு ஆணையிட்டேன்.

தற்போது தமிழ்நாட்டில் உள்ள 54,439 அங்கன்வாடி மையங்களில், 16,645 அங்கன்வாடி மையங்களில் சமைக்கும் நேரத்தை மிச்சப்படுத்தும் வகையிலும், மாசற்ற சுற்றுச் சூழலை உருவாக்கும் வகையிலும் 'புகையில்லா சமையலறைகள்'

அமைக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 37,794 அங்கன்வாடி மையங்களில் 5,000 அங்கன்வாடி மையங்களில் இந்த ஆண்டில், அதாவது 2012–2013ஆம் ஆண்டில், 3 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில், எரிவாயு அடுப்பு, எரிவாயு இணைப்பு மற்றும் அழுத்தக் கலன், அதாவது, பிரஷர் குக்கர் ஆகிய உபகரணங்கள் வழங்கப்பட்டு, புகையில்லாச் சூழ்நிலையை உருவாக்கக்கூடிய நவீனமயமாக்கும் பணி மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்த மையங்களுக்கு அதிக அளவில் குழந்தைகள் ஊட்டச்சத்து உணவைப் பெறுவதற்காகவும், 2 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள் பள்ளிசாரா முன்பருவக்கல்வி பெறுவதற்காகவும் வருகை புரிவதை ஊக்குவிக்கும் பொருட்டு, 2 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு இரண்டு வண்ண உடைகள் இந்த ஆண்டு முதல் வழங்கப்படும். இந்த முன்னோடித் திட்டம் முதற்கட்டமாக, சென்னை, வேலூர், திருச்சிராப்பள்ளி,தேனிமற்றும்திண்டுக்கல்ஆகிய5மாவட்டங்களில் உள்ள 2,01,032 குழந்தைகள் பயனடையும் வகையில், 4 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதேபோன்று, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயனடையும் பள்ளிக் குழந்தைகளுக்காக வழங்கப்பட்டு வந்த இரண்டு இணை சீருடைகளை, நான்கு இணை சீருடைகளாக இந்த ஆண்டு முதல் உயர்த்தி வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். மகளிர் தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்களால் இந்தப் பணியைக் குறித்த காலத்தில் முடிக்க முடியாது என்பதைக் கருத்தில் கொண்டும், இந்த கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள மகளிர் அதிக ஊதியம் பெற வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டும், மகளிர் தையல் கூட்டுறவு சங்கங்களில் 54,000 நவீன தையல் இயந்திரங்களை 54 கோடி ரூபாய் செலவில் வாங்க வழிவகை செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தொகை மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மூலம் கடனாக வழங்கப்படும் என்பதையும், இந்தத் தையல்

கூட்டுறவுச் சங்கங்கள் கடனுதவி பெறத்தக்க வகையில் 10 விழுக்காடு அளவிற்கு ஆதார நிதியை அரசு வழங்கும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் மூலம், தையல் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் தைக்கும் திறன் மூன்று மடங்காக உயர்வதால், இதர நிறுவனங்களிடமிருந்து தைக்கும் வேலை வாய்ப்பினை இவர்கள் பெற்று, அதிக வருவாய் பெற வழி ஏற்படும். மேலும், மாணவ–மாணவியருக்கு குறித்த காலத்தில் சீருடை வழங்க வழிவகை ஏற்படுவதுடன், சீருடைகளின் தையல் தரம் மேம்பட்டதாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

மானசரோவர் - முக்திநாத் செல்லும் இந்துப் பயணிகளுக்கு அரசு மானியம்!

15.05.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆயிரம் இன்னல்கள் வந்தாலும் இறைவனைக் காணும் பணி மேற்கொள்வோம்" என அனைத்து மதத்தினரும் புனித யாத்திரை மேற்கொள்கின்றனர்.

கிறிஸ்தவப் பெருமக்கள் ஜெருசலம் புனித யாத்திரை மேற்கொள்ளவும், இந்துக்கள் சீனாவில் உள்ள மானசரோவர் மற்றும் நேபாளத்தில் உள்ள முக்திநாத் புனித யாத்திரை மேற்கொள்ளவும், அரசு சார்பில் உதவி செய்யப்படும் என்று 2011ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுத் தேர்தல் பிரச்சாரத்தின் போது நான் வாக்குறுதி அளித்து இருந்தேன்.

எனது வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டு, கிறிஸ்தவர்களின் புனித ஸ்தலமான, ஜெருசலம் சென்று வருவதற்கு, அரசு நிதி உதவி அளிக்கும் என்றும், இந்தத் திட்டம் அனைத்துக் கிறிஸ்துவப் பிரிவினரையும் உள்ளடக்கியதாக அமையும் என்றும், முதற்கட்டமாக, 500 கிறிஸ்தவர்கள் ஜெருசலம் சென்று வர ஏற்பாடு செய்யப்படும் என்றும், கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் நான் அறிவித்தேன். இதனையடுத்து, இதற்கான அரசாணைகள் வெளியிடப்பட்டன.

இந்துக்களைப் பொறுத்த வரையில், ஆன்மீகம் தேடும் ஒவ்வொருவருக்கும், ஒரே ஒரு முறையாவது சீனாவில் உள்ள மானசரோவர் சென்று பார்க்க வேண்டும் என்பதும், நேபாள நாட்டில், சாளக்கிராம் மலையில் உள்ள திவ்ய தேசங்களில் ஒன்றான முக்திநாத் சென்று தரிசிக்க வேண்டும் என்பதும் அவர்களது விருப்பமாக இருந்து வருகிறது.

இதன் அடிப்படையில், இந்தத் திருத்தலங்களுக்கு ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான இந்துக்கள் புனித யாத்திரை மேற்கொள்கின்றனர். இருப்பினும், பொருளாதார அடிப்படையில் பின்தங்கியுள்ள இந்துப் பெருமக்களுக்கு இது எட்டாக் கனியாகவே இருந்து வருகிறது.

எனவே, இதனைக் கருத்தில் கொண்டு சீனாவில் உள்ள மானசரோவர் மற்றும் நேபாள நாட்டில் உள்ள முக்திநாத் ஆகிய இடங்களுக்குச் செல்ல விரும்பும் இந்துக்களின் பயணச் செலவுக்கு மானியம் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசு மானியம், மானசரோவர் புனித யாத்திரைக்குச் செல்ல இந்திய வெளியுறவுத் துறையால் தெரிவு செய்யப்படும் தமிழ்நாட்டைச் சார்ந்த 250 இந்துக்களுக்கும், முக்திநாத் புனித யாத்திரை மேற்கொள்ளும் 250 இந்துக்களுக்கும், ஆகமொத்தம் 500 பேருக்கு வழங்கப்படும்.

மானசரோவர் புனிதப் பயணத்திற்கு 1 நபருக்கு ஆகும் மொத்தச் செலவான 1 இலட்சம் ரூபாயில் 40,000 ரூபாயும், முக்திநாத் புனிதப் பயணத்திற்கு ஒரு நபருக்கு ஆகும் செலவான 25,000 ரூபாயில், 10,000 ரூபாயும் மானியமாக வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

அனைத்து அமைப்பு சாரா ஓட்டுநர்களையும் நலவாரியத்தில் சேர்க்க நடவடிக்கை

15.05.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உலகம் ஒரு குடும்பம்" என்னும் உன்னதத் தத்துவத்தை அடைய உறுதுணையாக விளங்கும் போக்குவரத்துகளில், பயணிகளை ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு அழைத்துச் செல்லுதல்; அத்தியாவசியப் பொருட்களை அனைத்துப் பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லுதல்; தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் மூலப் பொருட்களை எடுத்துச் செல்லுதல்; விவசாயப் பொருட்களை விற்பனைக்கு ஏற்றிச் செல்லுதல்; போன்ற அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்ளும் சாலைப் போக்குவரத்து மிகவும் இன்றியமையாததாக விளங்குகிறது. இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த சாலைப் போக்குவரத்தில் அமைப்புசாரா ஓட்டுநர்களின் சேவை மகத்தானது.

இத்தகைய ஓட்டுநர்கள், அமைப்புசாரா தொழிலாளர்களாக இருப்பதால் அவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டங்களை வழங்கும் பொருட்டு, தமிழ்நாடு மோட்டார் வாகன வரிச் சட்டம், 1974இன் கீழ், பயணிகள் மற்றும் பொருட்களை சாலை வழியாகக் கொண்டு செல்லும் வாடகை வாகன உரிமையாளர்களிடமிருந்து, தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல நிதிக்காக 1 சதவீத கூடுதல் வரி பல ஆண்டுகளாக வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்நிதியினைக் கொண்டு, தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர்கள் நல வாரியம் மூலம் நலத் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நல வாரியம் "தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி ஓட்டுநர் நல வாரியம்" என்ற பெயரில் தற்போது இயங்கி

வருகிறது. எனவே, இந்த வாரியத்தில் ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி ஊர்தி ஓட்டுநர்கள் மட்டுமே உறுப்பினராக முடியும் என்ற எண்ணத்தை ஓட்டுநர்களிடம் தோற்றுவிக்கும் வகையில் உள்ளதால் லாரி மற்றும் வேன் போன்ற இதர வாகன ஓட்டுநர்கள் இவ்வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்ள வழிவகை இருந்தாலும், அவர்கள் அவ்வாறு பதிவு செய்து கொள்வது இல்லை. தமிழ்நாட்டில் தற்போது சுமார் 10 இலட்சம் அமைப்பு சாரா ஊர்தி ஓட்டுநர்கள் உள்ளார்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. எனினும், தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி ஓட்டுநர் நல வாரியத்தில் 1 இலட்சத்து 39 ஆயிரத்து 595 நபர்களே உறுப்பினர்களாகப் பதிவு செய்துள்ளனர். தமிழகத்தில் உள்ள அனைத்து அமைப்பு சாரா ஓட்டுநர்களுக்கு சமூகப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்பது எனது அரசின் விருப்பமாகும்.

எனவே, இந்த வாரியத்தில் அமைப்புசாரா ஓட்டுநர்கள் அனைவரும் உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொள்ள வழிவகை ஏற்படும் வகையிலும், இந்த வாரியத்தின் நலத் திட்ட உதவிகள் அனைத்து ஓட்டுநர்களுக்கும் சென்று அடைய வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலும், ''தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி ஓட்டுநர்கள் நல வாரியம்'' என்ற இந்த வாரியத்தின் பெயரை ''தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம்'', அதாவது "Tamil Nadu Unorganised Drivers Welfare Board" என பெயர் மாற்றம் செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை மானியக் கோரிக்கையின் போது, சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு முகாம்கள் மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும் நடத்தப்படும் என்ற அறிவிப்பின் அடிப்படையில், விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு, அனைத்து அமைப்புசாரா ஓட்டுநர்களையும் இந்த நல வாரியத்தில் உறுப்பினர்களாகச் சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

அரசின் இணையதளத்தில் சேவை விளக்கக் கோப்பகம்!

15.05.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தகவல் தொழில் நுட்பவியலில், இந்தியாவில் முன்னணியில் உள்ள மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு திகழ்வதற்கு, 2002ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தகவல் தொழில்நுட்பக் கொள்கைதான் அடிப்படைக் காரணமாக விளங்குகிறது.

அரசுத் துறைகள் பல்வேறு சேவைகளை மக்களுக்கு இணையம் மூலம் வழங்கி வருகின்றன. இந்த இணைய சேவைகள் அனைத்தும் தற்போது அந்தந்தத் துறைகளின் வலைத் தளங்களின் மூலம் அளிக்கப்படுகின்றன. பல்வேறு சேவைகளுக்கான இணையதள முகவரிகளைப் பொதுமக்கள் நினைவில் வைத்துக் கொள்வது கடினமானது ஆகும். இதனைத் தீர்க்கும் வகையில், அரசின் அனைத்து சேவைகள் பற்றிய விவரங்கள் அடங்கிய சேவை விளக்கக் கோப்பகம், அதாவது Online Demonstrative Services Directory ஒன்று தமிழக அரசின் இணையதளத்தில் வெளியிடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சேவை விளக்கக் கோப்பகத்தில் இணையதள சேவை, அதாவது Online Service, இணையதள முகவரி, அதாவது Website Address, சேவை தொடர்பான இணைப்புகள், அதாவது Links to the services, உபயோகிப்போர் விளக்க வழிகாட்டி, அதாவது Demonstrative User Guide மற்றும் சேவையின் நிலை, அதாவது Service Status குறித்த தகவல் போன்ற விவரங்கள் இடம்பெறும். இதன் மூலம் பொதுமக்கள் அரசின் சேவைகளைப் பெற அரசு அலுவலகங்களுக்கு நேரில் செல்ல வேண்டிய தேவை பெருமளவில் குறையும்.

இதே போன்று, அரசின் திட்டங்கள் மக்களை விரைவில் சென்றடைய, திட்டங்களின் செயல்பாட்டினைக் காலமுறை

அடிப்படையில் கண்காணித்து ஆய்வு செய்வது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, ஒரு புதிய கண்காணிப்பு மென்பொருள், அதாவது Scheme Monitoring Application Software உருவாக்கப்படும். இதன் மூலம், திட்டங்களின் செயல்பாடுகளை அதிகாரிகள் எந்நேரமும் இணையம் மூலமாகக் கண்காணிக்கவும், அதன் அடிப்படையில் தக்க முடிவுகளை மேற்கொள்ளவும் இயலும்.

அரசின் செயல்பாடுகள் இணைய பொதுத் தளங்களில் அளிக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் பயன்பாட்டிற்காக உள்ள அரசு இணைய தளங்கள் மற்றும் மென்பொருட்களில் ஏதேனும் பாதுகாப்புக் குறைபாடு இருப்பின் அதனைப் பயன்படுத்தி இணைய வழி ஊடுருவிகள், அதாவது Hackers, இணையதளங்களை உருக்குலைத்து முக்கியமான தகவல்களைக் களவாடிச் செல்ல வாய்ப்பு உள்ளது. முக்கியத்துவம் வாய்ந்த அரசுத் தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்புகளில் இத்தகைய இடையூறு ஏற்படும் போது, பொது மக்களுக்கும் அரசு அளித்து வரும் சேவைகளுக்கும் பெருமளவில் பாதிப்பு ஏற்படும்.

இத்தகைய தாக்குதல்கள் மற்றும் பாதிப்புகளிலிருந்து தற்காத்துக் கொள்ளும் வண்ணம் அரசுத் துறைகளின் இணைய தளங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப மென்பொருட்களை சம்பந்தப்பட்ட துறைகள் படிப்படியாகப் பாதுகாப்புத் தணிக்கை மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

19,075 எக்டேர் பரப்பளவில் தேக்கு மரங்கள் நடவு செய்யப்படும்!

15.05.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வனத்தை வளர்த்து, இயற்கையைக் காத்து, மாசற்ற நிலையை உருவாக்கி, வளரும் தலைமுறையைக் காக்கும் வகையில், தமிழகத்தின் பசுமைப் போர்வையை அதிகரித்திட வனங்களுக்கு வெளியேயும் மரங்களை நட்டுப் பராமரிக்கும் திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் இயற்கையாக வளரும் தேக்கு மரங்களும், தேக்கு மரத் தோட்டங்களும் சத்தியமங்கலம், சேலம், தேனி, நீலகிரி போன்ற மலைப்பகுதிகளில் காணப்படுகின்றன. தற்போது காப்புக் காடுகளிலும், சரணாலயங்களிலும் தேக்கு மரங்களை வெட்டுவது தடை செய்யப்பட்டுள்ளதால் காவிரி ஆற்றுப் படுகை நிலங்களில் தேக்கு மரங்களை வளர்க்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனது முந்தைய ஆட்சிக்காலத்தில் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, ஈரோடு, சேலம் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் 2003–2004ஆம் ஆண்டு முதல் 5 ஆண்டுகளில் 16,050 எக்டேர் பரப்பில் படுகை நிலங்களில் 21 கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் தேக்கு மரத் தோட்டங்கள் ஏற்படுத்தும் திட்டம் துவக்கப்பட்டது.

இத்திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து மக்களின் தேக்கு மரத் தேவையைக் கருத்தில் கொண்டும், அரசுக்கு வருவாயை ஈட்டும் வகையிலும், 19,075 எக்டேர் பரப்பளவில் தேக்கு மரங்கள் நடவு செய்யப்படும். இதற்கென 39 கோடியே 49 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், ஏற்கெனவே பயிரிடப்பட்டுள்ள தேக்கு மரங்களைப் பராமரிப்பதற்கென இந்த ஆண்டு 3 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

வன உயிரினங்களையும், பறவையினங்களையும் கண்டு களிக்க, தமிழகத்தில் தற்போது வண்டலூரில் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, கிண்டி சிறுவர் பூங்கா, குறும்பப்பட்டி மற்றும் அமிர்தியில் சிறிய உயிரினப் பூங்காக்கள் என நான்கு இடங்களில் மட்டுமே வனத் துறையின் கீழ் உயிரினப் பூங்காக்கள் உள்ளன. உயிரினப் பூங்காக்களை மேலும் உருவாக்கும் வகையில், கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் கிராமத்தில் அமைந்துள்ள தொன்மை வாய்ந்த உதயகிரி கோட்டை சுற்றுலாத் தலத்தில் 22.5 எக்டேர் பரப்பளவில் உயிரியல் பூங்கா ஒன்று 15 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். புள்ளிமான், கடமான், வெளிமான், நீலகிரி கருமந்தி, இந்திய எறும்புத் தின்னி போன்ற 26 வகையான வன விலங்குகள் இந்த உயிரியல் பூங்காவில் அமையப்பெறும்.

தமிழ்நாட்டின் உயிர்ப்பன்மையைப் பாதுகாக்கவும், பெருமளவிலான பசுமையாக்குதல் திட்டத்தை நிறைவேற்றவும் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் நிதி உதவியோடு ஒரு மாபெரும் திட்டத்தினை 686 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்த எனது தலைமையிலான அரசு கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஒப்புதல் அளித்தது. இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ள வேண்டிய பணிகளைச் சிறப்பாகச் செயல்படுத்திடவும், திட்டப் பணிகளைக் கண்காணிக்கவும் திட்ட மேலாண்மை அலகு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த அலகுக்கு சென்னை வேளச்சேரியில் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தலைமை அலுவலகக் கட்டடம் இந்த ஆண்டில் கட்டப்படும்.

தமிழ்நாடு வனத்துறையில் சீருடைப் பணியாளர்களாக உள்ள வனவர், வனக்காப்பாளர், ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் மற்றும் வனக்காவலர் ஆகிய பதவிகளில் காலிப் பணியிடங்கள் ஏற்படும் போது, அவை உடனுக்குடன் நிரப்பப்பட வேண்டியது அவசியம் ஆகும். எனவே, தமிழ்நாடு காவல்துறையில் உள்ள பல்வேறு பதவிகளுக்கான காலிப்பணியிடங்களைத் தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலம் தேர்வு செய்து நிரப்பும் நடைமுறையைப் போல் தமிழ்நாடு

வனத்துறையிலும் வனவர், வனக்காப்பாளர், ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் மற்றும் வனக்காவலர் ஆகிய பதவிகளில் ஏற்படும் நேரடி நியமனத்திற்கான காலிப்பணியிடங்களை நிரப்ப மாநில அளவில் "தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்" ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் ஏறத்தாழ 75,000 எக்டேர் பரப்புள்ள காப்புக் காடுகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளை தமிழ்நாடு வனத்துறையிடமிருந்து பெற்று தைலத் தோட்டங்களையும், முந்திரித் தோட்டங்களையும் பராமரித்து வருகிறது. இக்கழகத்தின் பணிகள் மேலும் சிறக்கும் வகையில், இந்த ஆண்டு 4,500 எக்டேர் பரப்பில் 9 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவில் மரக்கூழ் தோட்டங்கள் நடவு செய்யப்படும். மேலும், 800 எக்டேர் பரப்பில் உயர் விளைச்சல் ஒட்டு முந்திரிக் கன்றுகள் 3 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவில் நடவு செய்யப்படும்.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்களுக்கு தேயிலைத் தோட்டங்களில் பணி வழங்கி அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக நீலகிரி மற்றும் தமிழ்நாட்டின் இதர இடங்களில் அரசு வனத் துறைக்குச் சொந்தமான நிலங்களைக் குத்தகைக்கு எடுத்து அதில் தேயிலைத் தோட்டங்களை அமைத்து, கடந்த 36 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது.

இந்த நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் பயன்பெறும் வண்ணம் 40 இலட்சம் ரூபாய் செலவில் சாலை வசதிகளை மேம்படுத்துதல், குடிநீர் வசதி செய்தல், குடியிருப்புப் பகுதிகளை மேம்படுத்துதல் போன்ற பணிகள் இந்த ஆண்டு நிறைவேற்றப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

தமிழ்நாட்டிற்கென தனியாக ஒரு முத்திரைச் சட்டம் இயற்றப்படும்!

15.05.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மக்களுக்கான திட்டங்களையும், வளர்ச்சிப் பணிகளையும் மேற்கொள்வதற்கு அதிக அளவு நிதி ஆதாரங்களைத் திரட்டுவதில் வணிகவரித் துறையும், பதிவுத் துறையும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இப்படிப்பட்ட இன்றியமையாத் துறைகளின் பணிகளை எளிதாக்கும் வண்ணம், இத்துறைகளின் அலுவல்களை கணினி மயமாக்கவும், வாடகைக் கட்டடங்களில் இயங்கும் அலுவலகங் களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டவும் எனது அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த வகையில், கடந்த ஆண்டு, 15 இடங்களில் உள்ள 34 அலுவலகங்களுக்கு 20 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்ட எனது தலைமையிலான அரசு ஆணையிட்டது. நடப்பாண்டில், ராணிப்பேட்டை, விருத்தாச்சலம், கள்ளக்குறிச்சி, செஞ்சி, அரூர், அரியலூர், திருப்பூர், அம்பாசமுத்திரம், நாங்குநேரி மற்றும் திருச்செந்தூர் ஆகிய 10 இடங்களில் உள்ள 16 வணிகவரி அலுவலகங் களுக்காக 12 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில், சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வணிகர்களின் நலனுக்காகப் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராவதற்கான சில நிபந்தனைகளை எனது தலைமையிலான அரசு தளர்த்தியுள்ளதையடுத்து, இவ் வாரியத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரித்துள் ளதைக் கருத்தில் கொண்டு, அரசால் வழங்கப்படும் தொகுப்பு நிதி 2 கோடி ரூபாயிலிருந்து 5 கோடி

ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதே போன்று, பாரம்பரியம் மிக்க துறையான பதிவுத் துறை அலுவலகங்கள் அனைத்தும் தனியார் கட்டடங்கள், பழுதடைந்த அரசுக் கட்டடங்கள் மற்றும் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த அரசு கட்டடங்களில் இயங்கி வருவதைக் கருத்தில் கொண்டு, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் சார் பதிவாளர் அலுவலகங்கள் அனைத்திற்கும் 5 ஆண்டு காலத்திற்குள் சொந்தக் கட்டடங்களைக் கட்ட எனது தலைமையிலான அரசு முடிவு எடுத்துள்ளது.

இதன் அடிப்படையில், முதற்கட்டமாக 26 கோடி ரூபாய் செலவில் 52 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு கடந்த ஆண்டில் சொந்தக் கட்டடம் கட்ட நான் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளேன். இதற்கான கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளது. இதன் தொடர்ச்சியாக, நடப்பு ஆண்டு 2012–2013இல் தென் சென்னை, செங்கல்பட்டு, அரக்கோணம், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், ஈரோடு, கோபிசெட்டிப்பாளையம், நாமக்கல், தருமபுரி, அரியலூர், மயிலாடுதுறை, சேரன்மகாதேவி, மார்த்தாண்டம், பழனி, ராமநாதபுரம், கும்பகோணம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 17 இடங்களில் ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலக வளாகங்கள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஒருங்கிணைந்த வளாகங்களில் மட்டும் 27 சார் பதிவாளர் அலுவலகங்கள் அமையப் பெறும். மேலும் கோவையில் கட்டப்படும் ஒருங்கிணைந்த வளாகத்தில் துணைப் பதிவுத்துறை தலைவர் அலுவலகம், மண்டல உதவி பதிவுத்துறைத் தலைவர் மற்றும் மாவட்ட பதிவாளர் (புலனாய்வு) அலுவலகங்களுக்கான கட்டடங்களும் இடம் பெறும். இந்த 27 சார்பதிவாளர் அலுவலகங்கள் மட்டுமல்லாது, மேலும் 48 சார்பதிவாளர் அலுவலகங்களுக்குத் தனித் தனியாக சொந்தக் கட்டடம் கட்டப்படும். இக்கட்டடப் பணிகள் அனைத்தும் 41 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்படும்.

மகாராஷ்டிரா, குஜராத், கர்நாடகா, கேரளா மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் முத்திரைத் தீர்வையை விதிப்பதற்கான வழிமுறைகள் மற்றும் விகிதங்களுக்காக தனியே முத்திரைச் சட்டத்தினை இயற்றியுள்ளன. ஆனால், தமிழ்நாட்டில் மத்திய சட்டமான 1899ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் தான் பின்பற்றப்படுகிறது. இதன் விளைவாக, பொதுமக்கள் நலன் கருதி மாநில அரசு ஏதாவது மாற்றம் செய்ய விரும்பினால், அதற்கான சட்டமுன்வடிவை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றி, குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறக்கூடிய சூழ்நிலை நிலவுகிறது. இந்தக் காலதாமதத்தினைத் தவிர்க்கும் வகையில், நமது மாநிலத்திற்கென தனியாக ஒரு முத்திரைச் சட்டம் இயற்றப் படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் வழிகாட்டி மதிப்பின் உயர்வினால் ஏழை, எளிய மக்கள் பாதிக்காத வண்ணம் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் விலக்கு பெறுவதற்கான உச்சவரம்பு 5,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை உருவாக்கப்படும்!

29.10.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது, குற்ற நிகழ்வுகளைக் கண்டுபிடிப்பது, குற்றங்கள் நிகழாமல் தடுப்பது, போக்குவரத்தைச் சீர்படுத்துவது, இயற்கை இடர்ப்பாடுகளின் போது மீட்புப் பணிகளை மேற்கொள்வது, விழாக் காலங்களில் ஏற்படும் கூட்ட நெரிசல்களை முறைப்படுத்துவது எனப் பல்வேறு இன்றியமையாப் பணிகளைத் தமிழகக் காவல் துறை ஆற்றி வருகிறது.

இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த காவல் துறையில் உள்ள மொத்தப் பணியிடங்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 13 ஆயிரத்து 629 ஆகும். இது, 635 மக்களுக்கு ஒரு காவல் அலுவலர் என்ற விகிதாச்சாரத்தில் அமைந்துள்ளது. 1.1.2012 நிலவரப்படி, இந்த அனுமதிக்கப்பட்ட பணியிடங்களுக்கு எதிராக 82 விழுக்காடு காவல் அலுவலர்கள் மட்டுமே பணியில் இருந்து வருகிறார்கள்.

காவல் துறையில் நிலவும் இந்தப் பற்றாக்குறையினைச் சீர் செய்யும் வகையில், காலியாக உள்ள 12,208 காவலர் பணியிடங்களைத் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்புமாறு நான் உத்தரவிட்டேன்.

எனது உத்தரவினையடுத்து, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம், காவலர்களுக்கான எழுத்துத் தேர்வை 24.6.2012 அன்று நடத்தியது. இதனைத் தொடர்ந்து, 2012ஆம் ஆண்டு

ஆகஸ்டு மாதம் உடற் தகுதித் தேர்வினை நடத்திய தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம், 12.10.2012 அன்று தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களின் பட்டியலை வெளியிட்டது. இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ள 12,162 காவலர்களுக்குத் தற்போது மருத்துவப் பரிசோதனை நடைபெற்று வருகிறது. மருத்துவப் பரிசோதனைக்குப் பின், தேர்ந்தெடுக்கப்பட்ட காவலர்களுக்கு 7 மாத காலப் பயிற்சி அளிக்கப்பட்டு, அதன் பின்னரே அவர்கள் பணியில் சேரும் நிலை உள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டும், பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப தமிழக அரசால் வகுக்கப்பட்டுள்ள அளவுகோல்களின்படி 19,096 காவல் பணியிடங்கள் கூடுதலாக உருவாக்கப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டும்; ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான காவலர்கள் ஓய்வு பெறுவதைக் கருத்தில் கொண்டும் பார்க்கும் போது, காவல் துறை ஈடுபடும் பல்வேறு நடவடிக்கைகளில் குறிப்பிட்ட சிலவற்றில் அவர்களுக்குத் துணையாக ஒரு துணைப் படையை உருவாக்குவது அவசியமாகிறது. இவ்வாறு அமைப்பதன் மூலம், சட்டம் ஒழுங்குப் பராமரித்தல், குற்றங்களைக் கட்டுப்படுத்துதல், குற்றப் புலனாய்வு போன்ற பிரதான காவல் பணிகளில் தற்போதுள்ள காவலர்களை முழுமையாக ஈடுபடுத்த இயலும்.

இதற்கு வழி செய்யும் வகையில், ''தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை'' என்ற ஒரு சிறப்புப் படை தமிழ்நாட்டில் உருவாக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சிறப்புப் படைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள், போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல்; நீதிமன்றங்களால் வெளியிடப்படும் வருவிப்பு ஆணைகளைச் சார்வு செய்தல்; கூட்ட நெரிசல்களை ஒழுங்குபடுத்துதல்; இரவு ரோந்து மற்றும் ஓட்டுநர் பணிகளில் ஈடுபடுத்தப்படுவர்.

தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படையில் உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு விளம்பரம் செய்யப்பட்டு; மாவட்ட

வாரியாக மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள் மூலம் தேர்வு நடத்தப்படும். பத்தாம் வகுப்புத் தேர்ச்சி பெற்று 18 வயது முதல் 30 வயது வரை உள்ள இளைஞர்கள் இத்தேர்வில் கலந்துகொள்ளத் தகுதியுடையவர் ஆவர். தேர்வில் வெற்றி பெறுபவர்கள் அந்தந்த மாவட்டங்களில் தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை உறுப்பினர்களாகப் பணி அமர்த்தப்படுவர்.

தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை உறுப்பினர்களுக்குப் பயிற்சிக் காலத்திலும்; பணிக் காலத்திலும் மாதம் ஒன்றுக்கு மதிப்பூதியமாக 7,500/– ரூபாய் வழங்கப்படும். மேலும், அவர்கள் காவலர்களுக்கான சிறப்பு அங்காடிகளில் அளிக்கப்படும் வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்படுவர் இது தவிர, அரிசி, கோதுமை, சர்க்கரை, மைதா, பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருட்கள் மானிய விலையில் வகுக்கப்பட்டுள்ள அளவுகோலின்படி அவர்களுக்கு வழங்கப்படும்.

ஓர் ஆண்டுக் காலம் திருப்திகரமான பணியினை நிறைவு செய்யும் தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை உறுப்பினர்கள், காவல் துறையில் காலியாகும் காவலர் பணியிடங்களில் ஈர்த்துக் கொள்ளக் கூடிய தகுதியைப் பெறுவர். ஒவ்வொரு ஆண்டும் காவல் துறையில் காவலர் நிலையில் ஏற்படும் காலியிடங்களில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் இந்த சிறப்புக் காவல் இளைஞர் படையிலிருந்து தேர்ச்சி பெறும் நபர்களுக்கு ஒதுக்கப்படும். சீருடைப் பணியாளர் தேர்வாணையம் இதற்கென ஒவ்வொரு ஆண்டும் சிறப்புத் தேர்வினை நடத்தும். அத்தேர்வில் பங்கேற்று வெற்றி பெறுபவரின் பட்டியல் சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தால் வெளியிடப்படும். இத்தேர்வில் வெற்றி பெறாதவர்கள், 40 வயது வரை, இந்த தமிழ்நாடு சிறப்புக் காவலர் இளைஞர் படையிலேயே, தொடர்ந்து பணியாற்றுவர். 40 வயதிற்கு மேல், அவர்களுக்கு, தமிழக அரசே வேறு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தரும்.

இந்த நிதியாண்டில் தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படைக்கென மாநிலம் முழுவதும் 10,000 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். இதற்கான தேர்வுகள் வரும் டிசம்பர் மாதம் நடத்தப்படும். இந்தத் தேர்வில் வெற்றி பெறுபவர்களுக்கு 2013ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் இந்த நிதியாண்டிற்குள் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள். 2013–2014ஆம் நிதியாண்டில் 15,000 பேர் இந்த இளைஞர் படைக்கெனத் தேர்ந்தெடுக்கப்படுவர். இவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் தேவைக்கேற்ப 50,000 உறுப்பினர்கள் வரை இந்த தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படையில் சேர்க்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வைரவிழா!

01.11.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்தியநாடு, சுதந்திரம் அடைந்த பிறகு, இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி 1952ஆம் ஆண்டு அமைக்கப் பெற்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, இந்த ஆண்டு 60 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளதை அடுத்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின், வைர விழா, சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையில் அமைந்துள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் 30.11.2012 அன்று வெகு விமரிசையாக நடைபெற உள்ளது.

30.11.2012 அன்று நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வைர விழாவில் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு, மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்களை அழைக்கும் பொருட்டு மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர், மாண்புமிகு நிதி அமைச்சர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் 26.10.2012 அன்று, புது டெல்லியில் உள்ள, குடியரசுத் தலைவர் மாளிகையில் அவரை நேரில் சந்தித்து எனது அழைப்புக் கடிதத்தை வழங்கி அழைப்பு விடுத்தனர்.

எனது அழைப்பினை ஏற்றுக் கொண்டு, 30.11.2012 அன்று நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வைர விழாவில் கலந்து கொள்ள, மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள், 29.10.2012 தேதியிட்ட கடிதம் மூலம் இசைவு தெரிவித்துள்ளார்கள்.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வைர விழாவிற்கு தலைமை தாங்குமாறு, மேதகு தமிழ்நாடு ஆளுநர், டாக்டர் கே. ரோசைய்யா அவர்களை இன்று ஆளுநர் மாளிகைக்கு சென்று நேரில் நான் அழைப்பு விடுத்தேன். எனது அழைப்பினை ஏற்று மேதகு தமிழக ஆளுநர் அவர்களும் இந்த விழாவிற்குத் தலைமை தாங்க தனது இசைவினைத் தெரிவித்தார்கள் என்பதை, இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவிலே கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு, இந்த மாமன்றத்தின், உறுப்பினர்கள் அனைவரையும், தங்கள் வாயிலாக கேட்டுக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

தமிழ்நாட்டில் 12 நிறுவனங்கள் ரூ.20,925 கோடி முதலீடு!

01.11.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டின் பொருளாதாரம் புத்துயிர் பெற்று எழுச்சி பெறும் வகையிலும்; நேர்முக மற்றும் மறைமுக வேலைவாய்ப்பினை பெருக்கும் வகையிலும்; மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் வகையிலும்; இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடனும்; தொழில் வளர்ச்சிக்குத் தேவையான முனைப்பான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

தமிழகத்தை, ஒரு திட்டமிட்ட நீண்டகால வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் வண்ணம், 22.3.2012 அன்று "தொலைநோக்குத் திட்டம் – 2023" என்ற திட்ட ஆவணத்தை நான் வெளியிட்டேன். அடுத்த 10 ஆண்டுகளில் இந்தியாவில் எதிர்பார்க்கப்படுகின்ற மொத்த உற்பத்தி வளர்ச்சியைக் காட்டிலும் 20 சதவீதம் அதிகமாக அதாவது, ஆண்டொன்றுக்கான மாநிலத்தின் மொத்த வளர்ச்சி 11 சதவீதம் அல்லது அதற்கு மேலாக இருக்க வேண்டும் என்பது இந்த தொலைநோக்குத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இத்தொலைநோக்குத் திட்டத்தினைச் செயலாக்கும் விதமாக கடந்த 14.5.2012 அன்று 5 தொழில் நிறுவனங்களுடன் 5,700 கோடி ரூபாய் முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் என் முன்னால் கையெழுத்திடப்பட்டன. இதன் மூலம் வேலைவாய்ப்பு பெறுபவர்களின் எண்ணிக்கை 9,530 ஆகும்.

இதன் தொடர்ச்சியாக, 26.9.2012 அன்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில், மேலும் 7 நிறுவனங்கள் தமிழகத்தில் முதலீடு செய்ய ஒப்புதல் வழங்கப்பட்டது. இதன்படி,

1. உலகப் புகழ் பெற்ற அமெரிக்க நிறுவனமான பிபிஜி (PPG) நிறுவனத்துடன் இணைந்து, ஹர்ஷா குரூப் நிறுவனங்கள், 4,100 கோடி ரூபாய் முதலீட்டில் காஞ்சிபுரம் மாவட்டம் தேர்வாய் கண்டிகையில் உள்ள சிப்காட் தொழிற் பூங்காவில் ஃபைபர் கிளாஸ் (Fibre Glass) மற்றும் ஃபுளோட் கிளாஸ் (Float Glass) தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்கும். இதன் மூலம் 1,850 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கும்.

2. தமிழகத்தின் பாரம்பரியமிக்க டி.வி.எஸ் குழும நிறுவனங்கள், தங்களுடைய வாகன உற்பத்திக்குத் தேவையான உதிரி பாகங்கள் மற்றும் ரப்பர் மற்றும் பிளாஸ்டிக் உப பொருள்களைத் தயாரிப்பதற்காக 700 கோடி ரூபாய் முதலீட்டில் சென்னை, ஓசூர் மற்றும் ஓரகடம் ஆகிய பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளை விரிவுபடுத்தும். இதனால் சுமார் 1,300 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு உருவாகும்.

3. தமிழகத்தின் மற்றொரு முன்னணித் தொழில் நிறுவனமான முருகப்பா குழுமம், இரும்பு குழாய்கள்; வாகனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான உபபொருள்கள்; சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் தயாரிப்பதற்கான உதிரி பாகங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் வகையில், 500 கோடி ரூபாய் முதலீட்டில் திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் தொழிற்சாலைகள் அமைக்க இருக்கிறது. இந்த முதலீட்டினால் சுமார் 1,130 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கும்.

4. டென்மார்க் நாட்டைச் சேர்ந்த டான்பாஸ் (Danfoss) நிறுவனம், தனது உற்பத்தி ஆலையினை தமிழகத்தில் அமைத்துள்ளது. தொழிற்சாலைகளுக்குத் தேவையான முக்கியமான இயந்திரங்களை உற்பத்தி செய்யும் இந்த நிறுவனம் தனது ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு வசதிகளை பெருக்கவும்; உற்பத்தியினை விரிவாக்கம் செய்யவும்; சென்னை ஓரகடத்தில் 500 கோடி ரூபாய் முதலீடு செய்ய இருக்கிறது. இதனால் சுமார் 1,200 பேர்கள் நேரடி வேலைவாய்ப்பினைப் பெறுவார்கள்.

5. உலகப் புகழ் பெற்ற சான்மினா (Sanmina-SCI) என்ற அமெரிக்க எலக்ட்ரானிக்ஸ் வன்பொருள் தயாரிப்பு நிறுவனம், Electronics Hardware Manufacturing Company, ஓரகடத்தில் உள்ள தங்களுடைய தொழிற்சாலையினை மேலும் விரிவாக்கம் செய்வதற்காக 250 கோடி ரூபாய் முதலீடு செய்ய உள்ளது. இதன் மூலம் சுமார் 1,500 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

6. உலகின் முன்னணி கைபேசி தயாரிப்பு நிறுவனமான நோக்கியா நிறுவனம், ஏப்ரல் 2005 ஆம் ஆண்டு இந்த அரசுடன் கையொப்பமிட்ட ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி தனது தயாரிப்பினை ஸ்ரீபெரும்புதூரில் துவங்கி இதுவரை 1,380 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது. இங்கு சுமார் 8,800 பேர் பணிபுரிந்து வருகிறார்கள். இந்நிறுவனம் தற்போது மேலும் 250 கோடி ரூபாய் முதலீடு செய்ய முன் வந்துள்ளது. இதன் மூலம் கூடுதலாக 500 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கும்.

7. அமெரிக்காவைத் தலைமையிடமாகக் கொண்ட, புகழ் பெற்ற வீட்டு உபயோகப் பொருட்கள் தயாரிக்கும் நிறுவனமான, Alticor Incorporated என்று அழைக்கப்படும் ஆம்வே நிறுவனம், முதன் முறையாக தனது உற்பத்தியினை தமிழகத்தில் திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் 300 கோடி ரூபாய் முதலீட்டில் துவக்க உள்ளது. இதன் மூலம் சுமார் 475 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

இவை மட்டுமன்றி 27.10.2012 அன்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் மேலும் 5 நிறுவனங்களுக்கு தமிழகத்தில் முதலீடு செய்வதற்காக அனுமதி வழங்கப்பட்டது என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்படி,

8. உலகின் நான்காவது மிகப் பெரிய கார் உற்பத்தி நிறுவனமான ஹுண்டாய் மோட்டார் நிறுவனம், இருங்காட்டுக் கோட்டையில் உள்ள தனது தொழிற்சாலையினை விரிவாக்கம் செய்வதற்காக 4 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்ய முன்

வந்துள்ளது. இதன் மூலம் சுமார் 500 பேர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

9. இந்தியாவின் பெரிய பன்னாட்டு நிறுவனங்களில் ஒன்றான இந்தோ ராமா (Indo Rama) நிறுவனம், தனது பெட்ரோ கெமிக்கல் தொழிற்சாலை மற்றும் சிந்தட்டிக் ஃபைபர் (Synthetic Fibre) தயாரிப்புத் தொழிற்சாலை ஆகியவற்றினை 4,500 கோடி ரூபாய் முதலீட்டில் நிறுவ முன் வந்துள்ளது. சென்னை, எண்ணூர் மற்றும் கோயம்புத்தூர் அருகே அமைய உள்ள இந்த தொழிற்சாலைகளின் மூலம் சுமார் 500 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கும். தமிழகத்தில் அமைய உள்ள முதல் பெட்ரோ கெமிக்கல் தொழிற்சாலை இது தான்.

10. பி.ஜி.ஆர். எனர்ஜி குரூப் (BGR Energy Group) என்ற இந்திய நிறுவனம், உலகப் புகழ் பெற்ற ஹிட்டாச்சி (Hitachi) நிறுவனத்துடன் இணைந்து 2,325 கோடி ரூபாய் முதலீட்டில் மின் உற்பத்தி நிறுவனங்களுக்குத் தேவையான டர்பைன்கள் (Turbines), ஜெனரேட்டர்கள், மற்றும் பாய்லர்கள் ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலையை காஞ்சிபுரம் மாவட்டம் செய்யூர் வட்டம், நெற்குணப்பட்டு கிராமத்தில் அமைக்க உள்ளது. இதன் மூலம் சுமார் 2,400 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

11. கோயம்புத்தூர் மாவட்டம் அன்னூர் அருகே சுமார் 2,200 ஏக்கர் பரப்பளவில் 3,100 கோடி ரூபாய் முதலீட்டில் ஓர் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்க ADD Industrial Park என்ற நிறுவனம் முன்வந்துள்ளது. இதன் மூலம், முதலாம் ஆண்டில் சுமார் 2,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். ஏழாவது ஆண்டின் இறுதியில் இது சுமார் 25,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தும்.

12. பிரான்ஸ் நாட்டின் உலகப் புகழ் பெற்ற கண்ணாடி தயாரிப்பாளர்களான செயின்ட் கோபெயின் (Saint Gobain) நிறுவனம், தனது விரிவாக்கப் பணிகளுக்காக ஸ்ரீபெரும்புதூர் மற்றும் பெருந்துறையில் சுமார் 400 கோடி ரூபாய் முதலீடு

செய்ய முன் வந்துள்ளது. இதன் மூலம் சுமார் 500 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

மேற்படி 12 நிறுவனங்கள் 20,925 கோடி ரூபாய் அளவுக்கு தமிழ்நாட்டில் முதலீடு செய்ய இருப்பதால், 36,855 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும்; சுமார் ஒரு இலட்சம் பேர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் உருவாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்படி 12 நிறுவனங்களுடன் 5 நவம்பர், 2012 அன்று எனது தலைமையிலான அரசு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கையொப்பமிட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்வதோடு; தமிழக தொழில்துறை வரலாற்றிலேயே ஒரே நாளில் கையொப்பமிடப்படும் மிகப் பெரிய முதலீட்டு தொகை இதுவே என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

❋ ❋ ❋

அரசு ஊழியர்களுக்கு பண்டிகை முன்பணம் ரூ. 5,000 ஆக உயர்வு!

01.11.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஓர் அரசாங்கத்தின் அடித்தளமாக, அச்சாணியாக, முதுகெலும்பாக விளங்குபவர்கள் அரசு ஊழியர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த அரசு ஊழியர்கள் – ஆசிரியர்களின் நலன்களை காக்கும் வகையில், வீடு கட்டும் முன் பணத்தினை 15 இலட்சம் ரூபாயிலிருந்து 25 இலட்சம் ரூபாயாக உயர்த்தியது; பெண் ஊழியர்களுக்கான மகப்பேறு விடுப்பினை மூன்று மாதத்திலிருந்து ஆறு மாதமாக உயர்த்தியது; அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கென திருத்தி அமைக்கப்பட்ட புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் எனப் பல்வேறு சலுகைகளை எனது தலைமையிலான அரசு வழங்கி வருகிறது.

நான் முதன் முறை முதலமைச்சராக இருந்த போது, அதாவது 1996ஆம் ஆண்டு, 25 ஆண்டு காலம் அப்பழுக்கற்ற பணியினை முடித்த அரசு உழியர்களுக்கு 500 ரூபாய் மதிப்புள்ள இந்திரா விகாஸ் பத்திரத்தை வழங்கலாம் என்று ஆணையிட்டிருந்தேன். அதன்படி, 25 ஆண்டு காலம் பணியாற்றிய அப்பழுக்கற்ற அரசு ஊழியர்களுக்கு அந்தப் பத்திரம் வழங்கப்பட்டு வந்தது. பின்னர் இந்திரா விகாஸ் பத்திரத்திற்கு பதிலாக கிசான் விகாஸ் பத்திரம் வழங்கப்பட்டு வந்தது. கிசான் விகாஸ் பத்திரம் வழங்குவதை 1.12.2011 முதல் மத்திய அரசு நிறுத்திவிட்டது.

இந்தச் சூழ்நிலையில், மத்திய அரசு கிசான் விகாஸ் பத்திரத்தை நிறுத்தி விட்டதைக் கருத்தில் கொண்டும்; 25 ஆண்டு காலம் அப்பழுக்கற்ற பணியினை முடித்த அரசு

ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த தொகை 15 ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்டது என்பதைக் கருத்தில் கொண்டும்; இந்தத் தொகையை 500 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக உயர்த்திடவும்; அதனை ரொக்கமாக வழங்கிடவும்; அவர்களது பணியினைப் பாராட்டி அரசு சார்பில் சான்றிதழ் வழங்கிடவும் நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், தற்போதுள்ள சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, 5 ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்ட 2,000 ரூபாய் பண்டிகை முன்பணத்தை 5,000 ரூபாயாக உயர்த்திடவும் நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள் அரசு அலுவலர்கள் தங்கள் கடமையை மேலும் செவ்வனே ஆற்ற வழி வகுக்கும் என்ற என் நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

மக்கள் நல்வாழ்வுக்கு மகத்தான பணிகள்!

02.11.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

ஒரு நாட்டின் மனித வளர்ச்சியின் அளவினை நிர்ணயிப்பதிலும்; ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியின் அளவுகோலாக திகழ்வதிலும்; முக்கிய பங்கு வகிப்பது மக்கள் நல்வாழ்வு என்று சொன்னால் அது மிகையாகாது. இதன் அடிப்படையில், அனைத்து மக்களுக்கும் சுகாதாரப் பாதுகாப்பினை அளித்திடும் வகையில், அரசு மருத்துவமனைகளுக்கான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்; மருத்துவர்கள், மருத்துவம் சார்ந்த மற்றும் மருத்துவம் சாராத பணியாளர்களை நியமித்தல், எளிதில் அணுக முடியாத பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அவர்களின் இல்லங்களுக்கு அருகிலேயே தரம் வாய்ந்த மருத்துவ வசதிகள் கிடைக்க வழிவகை செய்தல்; தொழில்நுட்ப வளர்ச்சியினை பயன்படுத்தி உயர்தர மருத்துவ வசதிகளை அளித்தல் போன்ற முனைப்பான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் முக்கியமான திட்டங்களை முன்னின்று நிறைவேற்றுவதில் முக்கியப் பங்கினை வகிப்பவர்கள் கிராம சுகாதார செவிலியர்கள். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் கீழ் கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள் மற்றும் பிரசவித்த தாய்மார்கள் ஆகியோர் பற்றிய விவரங்களை கணினி மூலம் தினந்தோறும் பதிவு செய்வதற்காக அருகிலுள்ள வலை தள மையங்களுக்கும்; அதாவது, Browsing centre–களுக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

எனவே, கிராம சுகாதார செவிலியர்களுக்கு ஏற்படும் கால விரயத்தினைக் குறைக்கும் வகையிலும்; அவர்கள் பணி மேம்பாடு அடையும் வகையிலும்; அவர்களுக்கு விலையில்லாமல் மடிக் கணினி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென, 21 கோடியே 11 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகள், வட்ட மருத்துவமனைகள், மருத்துவ அலுவலகங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில் சுற்றுப்புறத்தை சுத்தம் செய்தல்; சுகாதாரத்தைப் பேணுதல்; மருத்துவமனை வளாகத்தைப் பராமரித்தல்; பாதுகாத்தல்; போன்ற பணிகளை மேற்கொள்ள ஏதுவாக, பல்நோக்கு மருத்துவமனை பணியாளர், அதாவது Multipurpose Hospital Worker என்ற பெயரில் பணியாளர்களை கீழ்க்காணும் முறையில் நியமிக்க எனது தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1. 200 படுக்கைகளுக்குக் குறைவான மருத்துவமனைகளில் சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் துப்புறவுப் பணியாளர்கள்; மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிர்ணயிக்கும் தொகுப்பூதிய அடிப்படையில் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் 5 ஆண்டு நீட்டிப்புக்கு வழிவகை செய்யும் வகையில்; ஓராண்டு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்படுவார்கள். இந்த வகையில் சுமார் 4,000 பேர் பணி நியமனம் செய்யப்படுவர்.

2. 200 படுக்கைகளுக்கு மேற்பட்ட மருத்துவமனைகளில் காலியாகவுள்ள மருத்துவமனைப் பணியாளர் மற்றும் துப்புறவுப் பணியாளர் பணியிடங்கள் புற ஆதார முறையில், அதாவது outsourcing முறையில் நிரப்பப்படும்.

3. காலியாகவுள்ள செவிலியர் உதவியாளர் – நிலை2 பணியிடங்கள், மருத்துவமனைப் பணியாளர்களுக்கு தகுந்த பயிற்சி அளிக்கப்பட்டு பணியமர்த்தல் மூலம் நிரப்பப்படும்.

இதே போன்று, மருத்துவமனைகளின் பாதுகாப்பினை செம்மைப்படுத்தும் வகையில், 2,176 காவல் பணியாளர்கள் கீழ்க்காணும் முறையில் நியமனம் செய்யப்படுவார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1) பெரிய மருத்துவமனைகளின் பாதுகாப்பினை நாள் முழுவதும் மேற்கொள்ளும் வகையில், 8 மணி நேர பணிச் சுழற்சி அடிப்படையில்; புற ஆதார முறையில், அதாவது outsourcing முறையில்; நுழை வாயில்களுக்கு தேவையான 776 காவல் பணியாளர்கள் நியமிக்கப்படுவர்.

2) 200 படுக்கைகளுக்கு மேற்பட்ட மருத்துவமனைகளில் உள்ள தீவிர சிகிச்சை பிரிவு, அதாவது ICU; அவசரப் பிரிவு, அதாவது Emergency Ward; மகப்பேறு பிரிவு, அதாவது Maternity Ward மற்றும் பச்சிளங்குழந்தை பராமரிப்பு, அதாவது Neonatal Care வார்டுகளுக்கு என்று சுமார் 1,400 காவல் பணியாளர்கள் புற ஆதார முறையில், அதாவது outsourcing முறையில் நியமிக்கப்படுவர். இப்பணியாளர் நியமனத்திற்கென கூடுதல் செலவினமாக 20 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

இது மட்டுமல்லாமல், மருத்துவமனைக் கட்டடங்களைப் பராமரிக்கும் வகையில், அதாவது கழிவுநீர் அகற்றல்; கழிப்பிட வசதி; குடிநீர் வசதி ஆகியவற்றை மேம்படுத்துதல்; மின் அமைப்புகளை புதுப்பித்தல் போன்ற பணிகளை 15 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளவும்; மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள உடைந்த மரச் சாமான்களுக்குப் பதிலாக 10 கோடி ரூபாய் செலவில் புதிய மரச் சாமான்கள் வாங்கவும்; மருத்துவமனைகளில் தொய்வின்றி சேவை மேற்கொள்ளும் பொருட்டு தேவையான உபகரணங்கள் மற்றும் மருந்துகள் வாங்க கூடுதலாக 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யவும் எனது தலைமையிலான அரசு

முடிவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், மருத்துவமனைகளில் மருந்துகள் வாங்குவதற்கும்; உயிர் காக்கும் உயர் ரக மருந்துகள் வாங்குவதற்கும்; ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட 284 கோடி ரூபாய் இல்லாமல், உயிர் காக்கும் சிறப்பு மருந்துகள் வாங்க கூடுதலாக 10 கோடி ரூபாய் நிதியினை நான் ஒதுக்கியுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தரமான மருத்துவச் சேவையை தமிழக மக்கள் அனைவரும் பெற வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், ''முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்'' 11.1.2012 அன்று என்னால் தொடங்கி வைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தில் 1,016 வகையான சிகிச்சை முறைகளும்; 23 முக்கிய பரிசோதனைகளும்; 113 தொடர் சிகிச்சை முறைகளும் அடங்கும். இத்திட்டத்தின் கீழ், ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வரை சிகிச்சை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது. குறிப்பிட்ட 77 நோய்களுக்கு ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் வரை சிகிச்சை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது. சிகிச்சை சம்பந்தப்பட்ட பரிசோதனைகளும் காப்பீட்டுக்காக வரையறுக்கப்பட்ட தொகையில் அடங்கும். இதுவரை இந்தத் திட்டத்தின் கீழ், 1,64,365 பயனாளிகளுக்கு 384 கோடி ரூபாய் காப்பீட்டு நிறுவனத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை, அதாவது Liver transplantation; சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சைக்கு பிந்தைய மருந்துகள், அதாவது Renal transplantation including post transplant immunosuppressant therapy; எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை, அதாவது Bone Marrow transplantation; காது நுண் எலும்பு கருவி பொருத்தும் சிகிச்சை, அதாவது Cochlear implantation; ஸ்டெம் செல் மாற்று சிகிச்சை, அதாவது Stem cell transplantation ஆகிய சிகிச்சைகளை மேற்கொள்ள ஒரு இலட்சத்து 50 ஆயிரம்

ரூபாய்க்கு மேலாக செலவு ஆகிறது என்பதால் இந்த கூடுதல் செலவினத்தை, ஏழை எளிய நோயாளிகளே ஏற்கும் நிலைமை உள்ளது என்பது எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இத்தகைய ஏழை, எளிய நோயாளிகளின் நிலையைக் கருத்தில் கொண்டு, அனுமதிக்கப்பட்ட ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கு மேலாக ஏற்படும் கூடுதல் செலவினத்தையும் அரசே ஏற்கும் வகையில் ஒரு சிறப்பு தொகுப்பு நிதி, அதாவது Corpus Fund ஒன்று உருவாக்கப்படும். இந்த சிறப்புத் தொகுப்பு நிதிக்கு முதற்கட்டமாக 10 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும் என்பதையும்; இனிவரும் காலங்களில் அரசு மருத்துவமனைகளில் கிடைக்கும் காப்பீட்டுத் தொகையிலிருந்து இந்த சிறப்புத் தொகுப்பு நிதிக்காக ஆண்டொன்றிற்கு 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என்பதையும் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

சத்துணவுத் திட்டத்தில் புதிய உணவு வகைகள் அறிமுகம்!

02.11.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொருளாதார அடிப்படையில் பின்தங்கிய குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவினை வழங்கி, அதன் மூலம் ஊட்டச்சத்துக் குறைவினை அகற்றுதல்; பள்ளி செல்லும் குழந்தைகளின் விகிதத்தினை அதிகரித்தல்; இடைநிற்றலை அகற்றல் ஆகிய நோக்கங்களை எய்தும் பொருட்டு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் 1982 ஆம் ஆண்டு சத்துணவுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு, கடந்த 30 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வரும் சத்துணவுத் திட்டத்தில், பல காலமாக ஒரே மாதிரியான உணவு வழங்கப்பட்டு வருகிறது என்பதை அறிந்த நான், காலத்திற்கு ஏற்பவும், குழந்தைகளின் விருப்பத்திற்கு ஏற்பவும், உணவு முறையில் மாற்றம் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு அரசு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி இருந்தேன்.

எனது உத்தரவின் பேரில், புதிய வகை உணவு முறையினை அறிமுகப்படுத்துவது குறித்து புகழ் பெற்ற சமையற் கலைஞர்கள் மற்றும் ஊட்டச்சத்து நிபுணர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டது. இந்தக் கலந்தாலோசனைக்குப் பிறகு, சென்னை, சைதாப்பேட்டையில் உள்ள பள்ளியிலும்; திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் தொகுதிக்குட்பட்ட அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியப் பள்ளியிலும் சோதனை முறையில் கொண்டைக்கடலை புலவு சாதம் மற்றும் மிளகுதூள் கலந்த முட்டை தயாரித்து பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டது. இதனை பள்ளிக் குழந்தைகள்

விரும்பி உண்பது கண்டறியப்பட்டது. இது மட்டுமல்லாமல், 13 வகையான கலவை சாதங்கள் மற்றும் 4 வகையான முட்டை மசாலாக்களை சமையல் நிபுணர்கள் தயாரித்து செயல் விளக்கம் செய்து காண்பித்தனர்.

மேற்கூறிய சோதனை முறையின் அடிப்படையில், புதிய உணவு வகைகளை சத்துணவுத் திட்டத்தில் படிப்படியாக அறிமுகம் செய்ய எனது தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்படி, மாதத்தின் முதல் மற்றும் மூன்றாம் வாரங்களில், திங்கட் கிழமையன்று காய்கறி பிரியாணி மற்றும் மிளகுத்தூள் முட்டையும்; செவ்வாய்க் கிழமையன்று கொண்டைக்கடலை புலவு மற்றும் தக்காளி முட்டை மசாலாவும்; புதன் கிழமையன்று தக்காளி சாதம் மற்றும் மிளகுத்தூள் முட்டையும்; வியாழக் கிழமையன்று சாதம், சாம்பார் மற்றும் வேகவைத்த முட்டையும்; வெள்ளிக் கிழமை அன்று கருவேப்பிலை சாதம் அல்லது கீரை சாதம், முட்டை மசாலா மற்றும் மிளகாய் பொடியில் வறுத்த உருளைக்கிழங்கு ஆகியவை வழங்கப்படும்.

மாதத்தின் இரண்டாம் மற்றும் நான்காம் வாரங்களில், திங்கட் கிழமை அன்று சாம்பார் சாதம் மற்றும் வெங்காயம், தக்காளி முட்டை மசாலாவும்; செவ்வாய்க் கிழமை அன்று மீல் மேக்கர், காய்கறி கலவை சாதம், மற்றும் மிளகுத் தூள் முட்டையும்; புதன் கிழமை அன்று புளியோதரை மற்றும் தக்காளி முட்டை மசாலாவும்; வியாழக்கிழமை அன்று எலுமிச்சை சாதம், தக்காளி முட்டை மசாலா மற்றும் சுண்டலும்; வெள்ளிக் கிழமை அன்று சாதம், சாம்பார், வேகவைத்த முட்டை மற்றும் உருளைக்கிழங்கு பொரியலும் வழங்கப்படும்.

இதே போன்று, அங்கன்வாடி மையங்களுக்கு வருகைத் தரும் குழந்தைகளின் சிறப்பம்சம் மற்றும் செரிமானத் திறன் ஆகியவற்றினைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கும் புதிய உணவு வகைகள் அறிமுகம் செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்படி, திங்கட்கிழமை அன்று தக்காளி சாதம், வேகவைத்த முட்டையும்; செவ்வாய்க் கிழமை அன்று கலவை சாதம் மற்றும் சுண்டலும்; புதன் கிழமை அன்று காய்கறி புலவு சாதம் மற்றும் வேகவைத்த முட்டையும்; வியாழக் கிழமை அன்று எலுமிச்சை சாதம் மற்றும் வேகவைத்த முட்டையும்; வெள்ளிக் கிழமை அன்று பருப்பு சாதம், வேகவைத்த உருளைக்கிழங்கும்; சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் கலவை சாதமும் வழங்கப்படும்.

மேற்கூறப்பட்ட புதிய உணவு வகைத் திட்டம், ஒவ்வொரு மாவட்டத்திலும் முதலில் ஒரு வட்டாரத்தில் மட்டும் முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டு; அந்த வட்டாரத்தில் இந்தப் புதிய உணவு முறை திட்டத்தின் செயல்பாடு குறித்து அறிந்த பிறகு, மற்ற வட்டாரங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கை கல்வி பயிலும் குழந்தைகளின் எண்ணிக்கையையும்; அவர்களின் ஊட்டச்சத்து நிலையையும் மேம்படுத்த வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

பாரம்பரிய வேளாண் பொருட்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த ரூ.10 கோடி ஒதுக்கீடு!

02.11.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் பண்புடையதும்; மருத்துவத் தன்மைகளை கொண்டதும்; நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் தன்மை கொண்டதும்; அழகை அதிகரித்து இளமையைத் தக்க வைக்கும் குணமுடையதுமானப் புழக்கத்தில் இருந்த பாரம்பரிய வேளாண் பொருட்கள் வழக்கொழிந்து போவது வேதனைக்குரிய ஒன்றாகும்.

நவீனப் பொருட்களின் ஆதிக்கம் காரணமாக, பாரம்பரிய வேளாண் பொருட்களின் முக்கியத்துவத்தை, இன்றியமையாத் தன்மையை பெரும்பாலான மக்கள் உணராமல் உள்ளனர்.

பண்டைக் காலத்தில் தமிழ் மக்களின் பாரம்பரிய வழக்கத்தில் இருந்த வேளாண் பொருட்களில் முக்கியமானதாக இளநீர், சீயக்காய், பருத்தி போன்றவை விளங்கின.

இளநீரை எடுத்துக் கொண்டால், அதில் பொட்டாசியம், சோடியம், மக்னீசியம், கால்சியம், இரும்புச் சத்து ஆகியவை அதிக அளவில் உள்ளன. இது மட்டுமல்லாமல், உடலுக்குக் குளிர்ச்சியை ஊட்டவும்; ஜீரண சக்தியை மேம்படுத்தவும் இளநீர் பயன்படுகிறது. இளநீர் பருகுவதன் மூலம் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பதாக கூறப்படுகிறது.

தமிழகத்தில் பாரம்பரியமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த மற்றொரு வேளாண் பொருளான சீயக்காய், கூந்தலின் ஆரோக்கியத்தை பேணிக் காக்கவும்; கூந்தலின் வளர்ச்சியை

மிருதுவாக்கவும்; கூந்தலில் ஏற்படும் பொடுகைக் குணப்படுத்தவும் பயன்படுகிறது.

இதே போன்று, மற்றொரு பாரம்பரிய வேளாண் விளை பொருளான பருத்தி, ஆடை நெய்வதற்கான முக்கிய மூலப் பொருளாக விளங்குகிறது. பருத்தி ஆடைகள் கோடையில் நிலவும் கடும் வெப்பத்தையும்; பனிக் காலங்களில் நிலவும் கடும் குளிரையும் தாங்கவல்லதாகவும்; சுற்றுச் சூழலுக்குப் பாதுகாப்பானதாகவும்; சருமப் பராமரிப்பிற்கு ஏற்றதாகவும் விளங்குகிறது.

இது போன்ற பல பாரம்பரியம் மிக்க வேளாண் பொருட்களின் மருத்துவத் தன்மைகளை மக்களிடையே எடுத்துச் செல்லும் வகையிலும்; பாரம்பரியப் பொருட்களின் பயன்பாட்டினை அதிகரிக்கும் வகையிலும்; வழக்கொழிந்து போன பாரம்பரியப் பொருட்களை புழக்கத்தில் கொண்டுவரும் வகையிலும்; இயற்கையின் படைப்பினை பயன்படுத்தி மக்களின் நலத்தினைப் பேணிப் பாதுகாக்கும் வகையிலும்; விவசாயிகளின் வருமானத்தை பெருக்கும் வகையிலும்; பாரம்பரிய வேளாண் பொருட்கள் குறித்த விழிப்புணர்வை மாநிலம் முழுவதும் ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

பாரம்பரிய வேளாண் பொருட்கள் குறித்த விழிப்புணர்வு மாநில மற்றும் மாவட்ட, வட்டார அளவிலான கருத்தரங்கங்கள்; விழிப்புணர்வுப் பேரணிகள்; வானொலி விளம்பரப் பாடல்கள்; "இளநீர் குடியுங்கள்; உடல் நலம் பேணுங்கள்" போன்ற மக்களை கவரும் வாசகங்கள் அடங்கிய விளம்பரங்கள்; கருத்துக் கண்காட்சிகள்; திரையரங்கு விளம்பரங்கள்; பத்திரிகை விளம்பரம் மற்றும் தொலைக்காட்சி விளம்பரங்கள் ஆகியவற்றின் மூலம் தமிழகமெங்கும் ஏற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

ரூ.1,348.30 கோடி மதிப்பில் 131 ஆற்றுப் பாலங்கள் 67 அரசுச் சாலைகள், 18 இரயில்வே மேம்பாலங்கள்

01.04.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதிலும், மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியை நிர்ணயிப்பதிலும் மிக முக்கியப் பங்கினை வகிப்பது சாலைக் கட்டமைப்பு என்பதைக் கருத்தில் கொண்டும்; ஒரு மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியை கணிப்பதில் சாலைக் கட்டமைப்பு இன்றியமையாததாக விளங்குகிறது என்பதைக் கருத்தில் கொண்டும்; சாலை மேம்பாட்டுத் திட்டங்களுக்கு எனது தலைமையிலான அரசு முன்னுரிமை கொடுத்து வருகிறது.

அந்த வகையில், போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் வகையிலும்; பயண நேரம் மற்றும் வாகன இயக்கச் செலவினை குறைக்கும் வண்ணமும்; புதிய பாலங்கள் அமைத்தல்; வட்டச் சாலைகள் அமைத்தல்; புறவழிச்சாலைகள் அமைத்தல் உட்பட பல்வேறு சாலைப் பணிகள் நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்பட உள்ளன.

இதன்படி, சென்னைப் பெருநகர தகவல் தொழில்நுட்ப சாலையில் பெருகி வரும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள்; உயரமான அடுக்குமாடி குடியிருப்பு வசதிகள்; கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றால் உருவாகும் வாகன நெரிசலைக் குறைக்கும் வண்ணம் தரமணி முதல் சிறுசேரி வரை முதல் தொகுப்பாகவும்; சிறுசேரி முதல் மாமல்லபுரம் வரை இரண்டாவது தொகுப்பாகவும்; மொத்தம் 45 கிலோ மீட்டர் நீளத்திற்கு உயர்மட்ட சாலை அமைத்திட எனது தலைமையிலான அரசு முடிவு எடுத்துள்ளது. இந்த திட்டத்தினை செயல்படுத்தும் வகையில், விரிவான திட்ட

அறிக்கை விரைந்து தயாரிக்கப்படும். இதற்கென 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2005ஆம் ஆண்டு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் கேட்டுக் கொண்டபடி, திருநின்றவூர் முதல் பாடி வரையிலான 22 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டது. எனினும், சுங்கம் வசூலிக்க சாத்தியக்கூறு இல்லாத காரணத்தால் தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மேற்படி சாலை எடுத்துக் கொள்ளப்படவில்லை. எனவே, அதிக அளவு வாகனப் போக்குவரத்தால் தற்போது மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள இந்தச் சாலை, மீண்டும் நகர்புற மாநிலச் சாலையாக எடுத்துக் கொள்ளப்பட்டு, 168 கோடி ரூபாய் மதிப்பில் ஆறு வழிச்சாலையாக அகலப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக, 98 கோடி ரூபாய் மதிப்பில் நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், சென்னை உலர் துறைமுகத்திற்காக, திருவள்ளூர் மாவட்டம், மப்பேட்டில், 126 கோடி ரூபாய்க்கு சிப்காட் மூலம் சென்னை துறைமுகக் கழகத்திற்கு நிலம் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. உலர் துறைமுகத்திலிருந்து தேசிய நெடுஞ்சாலை–4 வரை டிரக்குகள் எளிதில் செல்லும் வகையில் இணைப்புச் சாலை அமைக்கும் பொருட்டு, மாவட்ட முக்கியச் சாலையான தண்டலம் – பேரம்பாக்கம் – தக்கோலம் அருகில் 39.40 கிலோ மீட்டர் நீள பாடி சாலை நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்தி, மேம்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாகப்பட்டினம் – கூடலூர் – மைசூர் தேசிய நெடுஞ்சாலையில் தஞ்சாவூர் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து

பெரம்பலூர் – மானாமதுரை மாநில நெடுஞ்சாலையில் மனக்கரம்பை வரை, இரண்டாம் கட்டமாக 14.27 கிலோ மீட்டர் நீளத்திற்கு 98 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தஞ்சாவூர் புறவழிச்சாலை அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நபார்டு வங்கியின் கடன் உதவியுடன், அரசு மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளில், 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 131 ஆற்றுப் பாலங்கள் மற்றும் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 215 கிலோ மீட்டர் நீளமுடைய 67 அரசு சாலைகள் அமைக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், 948 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பில் திருவள்ளூர் மாவட்டத்தில் சின்னக்காவனம் மற்றும் நந்தியம்பாக்கம் ஆகிய இடங்களில் இரண்டு ரயில்வே மேம்பாலங்களும்; திருவண்ணாமலை மாவட்டத்தில் திருவண்ணாமலை மற்றும் போளூர் ஆகிய இடங்களில் இரண்டு ரயில்வே மேம்பாலங்களும்; வேலூர் மாவட்டத்தில் வேலூர் மற்றும் வடுகன்தாங்கல் ஆகிய இடங்களில் இரண்டு ரயில்வே மேம்பாலங்களும்; திருச்சி மாவட்டத்தில் மணக்கால் மற்றும் கீழ கல்கண்டார் கோட்டை ஆகிய இடங்களில் இரண்டு ரயில்வே மேம்பாலங்களும்; சேலம் மாவட்டத்தில் முள்ளுவாடி கேட் மற்றும் வாழப்பாடி ஆகிய இடங்களில் இரண்டு ரயில்வே மேம்பாலங்களும்; திருவாரூர் மாவட்டத்தில் பேரளம், நீடாமங்கலம் மற்றும் சிங்கலாஞ்சேரி ஆகிய இடங்களில் மூன்று ரயில்வே மேம்பாலங்களும்; காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒரு ரயில்வே மேம்பாலமும்; நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஒரு ரயில்வே மேம்பாலமும்; விழுப்புரம் மாவட்டம், மடப்பட்டில் ஒரு ரயில்வே மேம்பாலமும்; கோயம்புத்தூர் மாவட்டம் இராசிப்பாளையத்தில் ஒரு ரயில்வே மேம்பாலமும் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூரில் ஒரு ரயில்வே மேம்பாலமும்; ஆக மொத்தம் 11 மாவட்டங்களில் 18 இரயில்வே மேம்பாலங்கள் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பணிகளை செயல்படுத்தும் வகையில், நில எடுப்பு, பயன்பாட்டுச் சாதனங்களை மாற்றி

அமைத்தல் மற்றும் தல ஆய்வு போன்ற ஆரம்பகட்டப் பணிகள் 201 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

சிறுசேரியில், சிப்காட்டிலிருந்து தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தினால் 2005ஆம் ஆண்டில் 99 வருடக் குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ள 4.9 ஏக்கர் நிலத்தில், 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பொது மற்றும் தனியார் பங்களிப்புடன், 20 அடுக்கில் 2,000 வாகனங்கள் மற்றும் 50 பேருந்துகள் ஒரே சமயத்தில் நிறுத்த உதவும் பல்லடுக்கு வாகன நிறுத்தத்திற்கான கட்டடம் கட்டப்படும்.

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் அருகே அமைந்திருக்கும் சிப்காட் தொழில் வளாகத்தில் உள்ள தொழிற்சாலைகளுக்கு தேவையான மூலப் பொருட்களை கொண்டு செல்வதற்கும்; உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை நாட்டின் இதர பகுதிகளுக்கு அனுப்புவதற்கும்; நல்ல சாலைக் கட்டமைப்புகள் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தினை கருத்தில் கொண்டு; பர்கூரில் உள்ள சிப்காட் தொழில் வளாகத்தினை அருகிலுள்ள தேசிய நெடுஞ்சாலையுடன் இணைக்கும் வகையில் போச்சம்பள்ளி–கொடமண்டப்பட்டி சாலையினை 8 கோடியே 68 இலட்சம் ரூபாயில் அமைக்கவும்; போச்சம்பள்ளி–கொடமண்டப்பட்டி சாலையிலிருந்து சிப்காட் தொழில் வளாகத்தை இணைக்கும் வகையில் 3 கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவில் புதிய சாலையினை அமைக்கவும் எனது தலைமையிலான அரசு முடிவு எடுத்துள்ளது என்பதை மன மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையில் என்னால் அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டங்களின் மூலம், தமிழகத்திலுள்ள சாலைப் போக்குவரத்து மேன்மை அடைவதுடன்; நகர்ப்பகுதிகளில் ஏற்படும் வாகன நெரிசல்கள் தவிர்க்கப்பட்டு, பயணிகள் எந்தவித சிரமமுமின்றி தாங்கள் விரும்பிய இடத்திற்கு குறைந்த நேரத்தில் சென்றடையவும், தொழில் வளர்ச்சி மேலும் மேன்மை அடையவும் வழிவகை ஏற்படும் என்பதை தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

ரூ.258.73 கோடி மதிப்பில் 310 ஏரிகள் 63 அணைக்கட்டுகள் புனரமைப்பு

04.04.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாட்டிற்கு உணவினைத் தந்து, நல்வளங்களைத் தந்து, வீட்டினை ஒளியுடையதாக்கி, நாட்டைக் காக்கும் நற்செயல்களை செய்து வரும் நீர்வள அமைப்புகளான அணைக்கட்டுகள், ஏரிகள் ஆகியவற்றை பராமரிப்பது மிக மிக அவசியம் என்பதை உணர்ந்த எனது தலைமையிலான அரசு பாசன உள்கட்டமைப்புகளை புனரமைக்கும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

பாசன மாநிலங்களுக்கு ஆதாரமாக உள்ள உள்கட்டமைப்புகளை நவீனப்படுத்தும் வகையில், தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் IAMWARM, உலக வங்கி நிதியுதவியுடன் 2005ஆம் ஆண்டு, அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் உப வடிநில கட்டமைப்பு, அதாவது Sub-Basin Framework முறையில் ஒருங்கிணைந்த நீர்வள ஆதார மேலாண்மையின் மூலம் பாசன நீர் வழங்கும் சேவை மற்றும் பாசன நில வேளாண் உற்பத்தித் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவது ஆகும். இந்தத் திட்டத்திற்கான மொத்த திருத்திய மதிப்பீடு 2,816 கோடி ரூபாய் ஆகும். இந்த நிதியிலிருந்து சுமார் 6.69 இலட்சம் ஹெக்டேர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் அணைக்கட்டுகள், முறைசார் மற்றும் முறைசாரா ஏரிகள் மற்றும் அதன் நீர்வழங்கு வாய்க்கால்களைப் புனரமைத்து நவீனப்படுத்த நீர்வள ஆதாரத் துறைக்கு 2,082 கோடியே 85 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. எஞ்சிய நிதி பிற துறைகளுக்கு ஒதுக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 25 மாவட்டங்களில் 4,910 ஏரிகள், 662 அணைக்கட்டுகள் மற்றும் அதன் 8,071 கிலோ மீட்டர் நீர்வழங்கு வாய்க்கால்கள் ஆகியவற்றை புனரமைப்பதற்கான

பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் பெரும்பாலான பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ், மேலும் சில பாசன அமைப்புகளைப் புனரமைக்க வேண்டியிருப்பதால் தமிழக அரசின் வேண்டுகோளை அடுத்து இந்தத் திட்டத்தின் கால அளவை 2014ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை நீட்டித்து உலக வங்கி அனுமதித்துள்ளது.

இதனையடுத்து, தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில் 17 மாவட்டங்களில் 26 உபவடி நிலங்களில் உள்ள 310 ஏரிகள், 63 அணைக்கட்டுகள் மற்றும் அதன் நீர்வழங்கு வாய்க்கால்களைப் புனரமைத்து, நீர் வழங்கும் திறனை மேம்படுத்துதல் மற்றும் மத்திய மண்டலத் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் 258 கோடியே 73 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். அதன்படி, நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ், ஏற்கெனவே நடைபெற்று கொண்டிருக்கும் பணிகளையும், தற்பொழுது செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ள பணிகளையும் செய்து முடிப்பதற்கு ஏதுவாக தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்ட கால அளவு 1.4.2013 முதல் 30.9.2014 வரை 18 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், வடகிழக்குப் பருவ மழைக் காலத்தின் போது மருதையாறு நதியில் மிகக் குறுகிய காலத்தில் அதிக அளவில் வரப் பெறும் நீரை உரிய முறையில் பாசனத்திற்கு பயன்படுத்தும் வகையில் பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், கொட்டரை கிராமம் அருகில், மருதையாற்றின் குறுக்கே 108 கோடி ரூபாய் மதிப்பீட்டில், புதிதாக மருதையாறு நீர்த்தேக்கம் ஒன்று அமைக்கப்படும். மருதையாறு நீர்த்தேக்க திட்டம் 211.58 மில்லியன் கன அடி நீர் கொள்ளளவு கொண்டதாக அமையும்.

இத்திட்டத்தை செயலாக்குவதன் மூலம் பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், கொட்டரை, ஆதனூர், கூத்தூர், புஜங்கராயநல்லூர், நொச்சிக்குளம், தொண்டப்பாடி,

அழகிரிபாளையம், கூடலூர், சாத்தனூர் ஆகிய 10 கிராமங்களிலுள்ள 4,194 ஏக்கர் புன்செய் நிலங்கள் புதிதாக பாசன வசதி பெறும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் மூலம் உணவு உற்பத்தி அதிகரிக்க ஏதுவாக பாசனத்திற்கு தேவையான நீர் கிடைப்பதுடன், அப்பகுதிகளில், நிலத்தடி நீர் மட்டமும் உயர வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

❋ ❋ ❋

மதுரைக்கு அருகே 586.86 ஏக்கரில் துணைக்கோள் நகரம்! சோழிங்கநல்லூரில் 1,500 பன்னடுக்கு மாடிக் குடியிருப்புகள்

04.04.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மக்கள் தொகைப் பெருக்கம் மற்றும் நகர்ப்புற வளர்ச்சி ஆகியவற்றினைக் கருத்தில் கொண்டும், மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் முக்கியமானதாக விளங்கும் உறைவிடத் தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும் குறிப்பாக, ஏழை, எளிய மக்கள் எண்ணற்ற பயன்களை பெறும் வகையிலும் தேவையான அனைத்து திட்டங்களையும் வடிவமைத்து ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் வீட்டுவசதி வளர்ச்சியினை எனது தலைமையிலான அரசு ஏற்படுத்தி வருகிறது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

மதுரை மாவட்டத்தில், தற்போது பெருகி வரும் வீட்டு வசதித் தேவையைக், கருத்தில் கொண்டு மதுரையிலிருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தொலைவில் விமான நிலையத்திற்கு அருகில் மதுரை – திருநெல்வேலி நான்கு வழிப் பாதையில் தோப்பூர் மற்றும் உச்சப்பட்டி கிராமங்களில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான 586.86 ஏக்கர் நிலத்தில் ஒருங்கிணைந்த துணைக்கோள் நகரம் ஒன்று உருவாக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த துணைக்கோள் நகரத்தில் 19,500 மனைகள் உருவாக்கப்படும். இதில், 14,300 மனைகள் குறைந்த வருவாய் பிரிவினருக்கும், 2,500 மனைகள் மத்திய வருவாய் பிரிவினருக்கும், 750 மனைகள் உயர் வருவாய் பிரிவினருக்கும், 1,950 மனைகள் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கும் ஒதுக்கீடு செய்யப்படும். இந்த புதிய துணைக்கோள் நகரத்தில் அடிப்படை வசதிகளான, சாலைகள்,

குடிநீர் வசதி, கழிவு நீர் வடிகால் வசதி, தெரு விளக்குகள், மழை நீர் சேகரிப்பு திட்டம் மற்றும் பூங்காக்கள் ஆகியவைகள் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். மேலும், இங்கு குடியேறும் மக்களின் நலனுக்காக பள்ளி வளாகம், வணிக மனைகள், காவல் நிலையம், அஞ்சலகம், ஆரம்ப சுகாதார வசதி, தீயணைப்பு நிலையம் மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள் என சமுதாயத்திற்குத் தேவையான அனைத்து வசதிகளும் இங்கே உருவாக்கப்படும். இந்தத் துணைக்கோள் நகரம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய நிதியிலிருந்து செயல்படுத்தப்படும்.

இதே போன்று, சென்னைக்கு அருகிலுள்ள சோழிங்கநல்லூர் பகுதியில் தற்போது தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் கைவசம் உள்ள நிலத்தில் முன்கட்டுமானத் தொழில் நுட்பம், அதாவது, pre-fab technology என்ற நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி சுமார் 612 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,500 பன்னடுக்கு மாடி குடியிருப்புகள் சுயநிதி திட்டத்தின் கீழ் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் குடியிருப்புகள் 10 மாடிகளை கொண்டதாக இருக்கும். இந்தத் திட்டத்தின் கீழ், குறைந்த வருவாய் பிரிவு, மத்திய தர வருவாய் பிரிவு, உயர் தர வருவாய் பிரிவினர்களுக்கான குடியிருப்புகள் கட்டப்படும்.

டெல்லி, மும்பை, பெங்களூரு மற்றும் ஐதராபாத் போன்ற நகரங்களில் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள இந்த முன்கட்டுமானத் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் மூலம் கட்டுமானத்தின் காலம் 25 விழுக்காடு குறைவதோடு, கட்டுமானச் செலவும் 10 முதல் 15 விழுக்காடு வரை குறையும். கட்டட பாகங்களான, தூண், உத்திரம், மாடிப்படி, கூரை ஆகியவைகள், தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்டு உபயோகத்திற்கு கொண்டு செல்வதற்கு முன் தண்ணீர் மூலம் curing செய்யப்பட்டு உறுதிபடுத்தப்படும். கட்டுமானப் பாகங்கள் தயாரிக்கப்பட்ட பின் அவைகள் கட்டுமான இடத்திற்கு கொண்டு வரப்பட்டு அதற்குரிய இடங்களில் இயந்திரங்கள் மூலம் நிலை நிறுத்தப்பட்டு கலக்கப்பட்ட திண்காரை கலவை மூலம் இணைக்கப்படும். 24 மாடிகள் கொண்ட உயர் அடுக்குமாடி கட்டடங்களை இத்தொழில்

நுட்பத்தின் மூலம் 24 மாதங்களில் கட்டலாம். கட்டுமானப் பாகங்கள் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படுவதால் கட்டடம் பார்ப்பதற்கு மிக நேர்த்தியாகவும், அழகாகவும் இருக்கும்.

இவைமட்டுமல்லாமல், சென்னை, காஞ்சிபுரம், கோயம்புத்தூர், ஈரோடு, கிருஷ்ணகிரி, சேலம், விருதுநகர், திண்டுக்கல் மற்றும் திருச்சி ஆகிய 9 மாவட்டங்களில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலத்தில் 1,630 தனி வீடுகள் மற்றும் 2,792 அடுக்குமாடி குடியிருப்புகள் சுமார் 918 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுயநிதி திட்டத்தின் கீழ் கட்டப்படும் என்பதையும், மேலும் 32 மனைகள் மேம்படுத்தப்பட உள்ளன என்பதையும் மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள 7 இடங்களில் 13.80 ஏக்கர் நிலத்தில், 844 அடுக்குமாடி குடியிருப்புகள் 371 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் காஞ்சிபுரத்தில், இரண்டு இடங்களில் 22.70 ஏக்கர் நிலத்தில் 1500 அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் 32 மேம்படுத்தப்படும் மனைகள் 303 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் இரண்டு இடங்களில் 3.90 ஏக்கர் நிலத்தில் 344 அடுக்குமாடி குடியிருப்புகள் 50 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், ஈரோடு மாவட்டத்தில், 2 இடங்களில் 12.15 ஏக்கர் நிலத்தில் 468 அடுக்குமாடி குடியிருப்புகள் 59 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், சேலம் மாவட்டத்தில் 36.20 ஏக்கர் நிலத்தில் 120 வீடுகள் 13 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 10.50 ஏக்கர் நிலத்தில் 258 அடுக்குமாடி குடியிருப்புகள் 19 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், விருதுநகர் மாவட்டத்தில் 3 இடங்களில் 32.50 ஏக்கர் நிலத்தில் 722 வீடுகள் 73 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் திண்டுக்கல் மாவட்டத்தில், இரண்டு இடங்களில் 1.03 ஏக்கர் நிலத்தில் 35 வீடுகள் 2 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், மற்றும் திருச்சி மாவட்டத்தில் 2 இடங்களில் 3.09 ஏக்கர் நிலத்தில் 104 அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் 27 வீடுகள், 25 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்,

ஆக மொத்தம் 4,454 அலகுகள், நடப்பு ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு 24 மாதங்களில் முடிக்கப்படும்.

தமிழ்நாடுகுடிசைப்பகுதிமாற்றுவாரியத்தின்மூலம்,இதுவரை, 1.29 இலட்சம் குடியிருப்புகள் மற்றும் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இவற்றில், சுனாமியால் பாதிக்கப்பட்ட 6,620 வீடுகள் தவிர, மீதமுள்ள அனைத்து குடியிருப்புகளும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மாறுபட்ட தட்ப வெட்ப நிலை, குடியிருப்புகளை உபயோகித்தல், சுற்றுப்புற சூழல், அடுக்குமாடிக் குடியிருப்புகளில் குடியிருப்புதாரர்களால் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள், குடியிருப்புகளை சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகள் போன்ற காரணங்களினால் பல குடியிருப்புகளின் கட்டமைப்புகள் மிகவும் பழுதடைந்து வலு குறைந்துள்ளன. இக்குடியிருப்புகளின் கட்டமைப்பு வலுவிழந்துள்ளதுடன் தளங்களில் உள்ள கம்பிகள் காற்றிலுள்ள உப்புத் தன்மை காரணமாக துருப்பிடித்துள்ளன. இத்தகைய குடியிருப்புகளில் வாழும் ஏழை, எளிய மக்கள் மழைக் காலங்களில் தொடர்ந்து அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர். இக்குடியிருப்புகளுக்கான சராசரி ஆயுட் காலம் 70 ஆண்டுகள் என்றிருந்தாலும், பெரும்பாலான குடியிருப்புகள் வலு குறைந்து அவற்றின் ஆயுட் காலம் முடியும் முன்னரே தகுதியற்றவைகளாக ஆகிவிடுகின்றன. எனவே, வலுவிழந்த கட்டடங்களை இடித்துவிட்டு புது வீடுகள் கட்ட எனது தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது.

இதன் முதற்கட்டமாக சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் மிகவும் பழுதடைந்த 3,500 அடுக்குமாடிக் குடியிருப்புகள் இடிக்கப்பட்டு 2013–2014 ஆம் ஆண்டில் மீண்டும் 3,500 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் 280 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் ரங்கநாதபுரம் திட்டத்தின் கீழ் 480 குடியிருப்புகளும், பார்த்தசாரதி நகர் திட்டத்தின் கிழ் 120 குடியிருப்புகளும், பெரம்பூர் தொகுதியில், சத்தியவாணி முத்துநகர் திட்டத்தின் கீழ் 392 குடியிருப்புகளும், எழும்பூர் தொகுதியில் நேரு பார்க் திட்டத்தின் கீழ் 288 குடியிருப்புகளும், பிள்ளையார் கோயில் தெரு திட்டத்தின்

கீழ் 32 குடியிருப்புகளும், சேப்பாக்கம் தொகுதியில் லாக் நகர் (நாவலர் நகர்) திட்டத்தின் கீழ் 304 குடியிருப்புகளும், அயோத்தியா குப்பம் திட்டத்தின் கீழ் 708 குடியிருப்புகளும், சைதாப்பேட்டை தொகுதியில் கோட்டூர்புரம் திட்டத்தின் கீழ் 136 குடியிருப்புகளும், மயிலாப்பூர் தொகுதியில் ஆண்டிமான்ய தோட்டம் திட்டத்தின் கீழ் 42 குடியிருப்புகளும், பல்லக்குமான்யம் திட்டத்தின் கீழ் 48 குடியிருப்புகளும், கோவை மாவட்டத்தில் ஆடுதொட்டி திட்டத்தின் கீழ் 246 குடியிருப்புகளும், திருச்சி மாவட்டம் திருச்சி – பீச்சான்குளம் திட்டத்தின் கீழ் 587 குடியிருப்புகளும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் நாகை கூடைமுடைவோர் காலனி திட்டத்தின் கீழ் 117 குடியிருப்புகளும் என ஆக மொத்தம் 3,500 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்காணும் அரசின் நடவடிக்கைகள் தமிழக மக்களின் வீட்டுவசதித் தேவையை ஓரளவு பூர்த்தி செய்ய வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

மீனவர்களுக்கு 75 சதவிகித மானியத்தில் தகவல் தொடர்புக் கருவிகள்!

05.04.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலை வாய்ப்புகளை உருவாக்குவதிலும், புரதச் சத்துள்ள உணவைப் பெருக்குவதிலும், கணிசமான அந்நியச் செலாவணியை ஈட்டுவதிலும் மீன்பிடித் தொழில் முக்கியப் பங்கு வகிக்கிறது என்றாலும் இந்தத் தொழிலை மேற்கொண்டு வரும் தமிழக மீனவர்கள் பல இன்னல்களை எதிர்கொள்ள வேண்டி உள்ளது. மீனவர்களின் துயரினை உணர்ந்த எனது தலைமையிலான அரசு, மீன்பிடித் தடை காலங்களில் வழங்கப்பட்டு வரும் தொகையை இரட்டிப்பாக்கியது, மீன்பிடிப்பு குறைந்த காலங்களில் சிறப்பு நிவாரண உதவித் தொகையாக 4,000 ரூபாய் வழங்கும் முன்னோடித் திட்டம்; விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்ட டீசல் வழங்கும் திட்டம், விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்ட மண்ணெண்ணெய் வழங்கும் திட்டம் என பல்வேறு திட்டங்களை சிறப்புடன் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் தற்போது 5,600 மீன்பிடி விசைப் படகுகள் உள்ளன. சில மீனவர்கள் தங்கள் படகுகளில் தகவல் தொடர்பு சாதனங்களைப் பொருத்தியுள்ளனர். இன்னும் பெரும்பாலான விசைப் படகுகளில் தகவல் தொடர்புச் சாதனங்கள் ஏதுமில்லை. மீனவர்களின் பாதுகாப்பிற்கு உயர் முக்கியத்துவம் அளிக்கும் வகையில் தகவல் தொடர்பு வசதிகள் இல்லாத விசைப் படகுகளுக்கு மானிய விலையில் VHF ரேடியோ கருவிகள் வழங்கப்படும் என்பதையும்; கடலோரப் பகுதிகளில் உயர் கோபுரங்களை அமைத்து மீனவர்கள் எளிதில் தொடர்பு கொள்ளத் தேவையான தகவல் தொடர்பு உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 20,000 ரூபாய் விலையுள்ள இந்த VHF

கருவிகளுக்கு 75 விழுக்காடு மானியம் வழங்கப்படும். இந்த கம்பியில்லா தகவல் தொடர்பு வசதிகள் மூலம் இடர் நேரிடும் காலங்களில் கரையில் இருக்கும் அரசு அலுவலர்களையும், குடும்பத்தினரையும் தொடர்பு கொள்ள இயலும். இதே போன்று, புயல் மற்றும் வெள்ளக் காலங்களில் எச்சரிக்கைத் தகவல்களை அரசு அலுவலர்கள் மீனவர்களுக்கு கொண்டு செல்ல இயலும். மேலும், ஐதராபாத்தில் உள்ள கடல் தகவல் பணிக்கான இந்திய தேசிய மையத்திலிருந்து, அதாவது Indian National Centre for Ocean Information Service–லிருந்து பெறப்படும் தகவல்களை தாமதமின்றி மீனவர்களுக்கு உடனடியாக அனுப்பிடவும் இந்தத் தகவல் தொடர்பு வசதி பயன்படும். இதனால் மீனவர்கள் துல்லியமாக மீன்கள் நிறைந்த பகுதிக்குச் சென்று மீன் பிடிக்க இயலும்.

தொலைதூரத்தில் ஆழ் கடல் பகுதியில் ஒரு மாதத்திற்கும் மேலாக தங்கி மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் படகுகளுக்கு அதிக அலைவரிசை கொண்ட HF ரேடியோ கருவி வசதிகள் தேவைப்படுவதால், அதிக விலை கொண்ட இந்த HF ரேடியோ கருவிகள் தேவைப்படும் மீனவர்களுக்கு மானிய விலையில் வழங்கப்படும். 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள இந்த HF கருவிகளுக்கு 75 விழுக்காடு மானியம் வழங்கப்படும். இதற்கான கட்டுப்பாட்டு அறைகளை நிர்வகிக்கும் பொறுப்பினையும் மீன் வளத் துறை ஏற்கும். 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

சென்னை மாநகரம் வேகமாக வளர்ந்து வரும் சூழ்நிலையிலும், தொடர்ந்து நீர்பிடிப்புப் பகுதியாகவே விளங்கும் மீன் வளத் துறைக்குச் சொந்தமான 15 ஏக்கர் பரப்பளவு உடைய சேத்துப்பட்டு ஏரி 42 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்படும் என்பதையும், அங்கு பொழுதுபோக்கு தூண்டில் மீன்பிடிப்பு மற்றும் பசுமைப் பூங்கா அதாவது Sports Fishing-cum-Eco Park அமைக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஏரியில் பொழுதுபோக்கு அம்சங்களான தூண்டில் மீன்பிடிப்பு, நீர் சாகச விளையாட்டுகள், படகு சவாரி, திறந்த வெளி அரங்கங்கள் மற்றும் சிறுவர்கள் விளையாட்டு திடல் போன்ற வசதிகள் அமைக்கப்படும். இந்தப் பூங்கா பசுமையுடன் விளங்கும் வகையில் ஏரியின் கரையோரங்களில் அழகிய மற்றும் அரிய வகை மரங்கள் வளர்க்கப்படும். இந்த பசுமைப் பூங்காவில் உருவாக்கப்படவிருக்கும் நடைபாதை மற்றும் தொடர் நடை ஓட்டப் பாதைகள் மக்களுடைய உடல் மற்றும் மன நலத்தை ஆரோக்கியமாக பேண உதவும். இங்கு ஏற்படுத்தப்படவிருக்கும் பல அடுக்கு வாகன நிறுத்த வசதிகள் அந்தப்பகுதியில் உள்ள போக்குவரத்து நெரிசலை குறைக்க வழிவகை செய்வதோடு, சென்னையில் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்களும் இப்பூங்காவினை பயன்படுத்த வழி வகுக்கும். இங்கு அமைக்கப்பட இருக்கும் மீன் உணவகம் சென்னை வாழ் மக்களின் நாவிற்கு நல் விருந்தாக அமையும்.

காசிமேடு மீன்பிடித் துறைமுகம் என்றும், ராயபுரம் மீன்பிடித் துறைமுகம் என்றும் அழைக்கப்பெறும் சென்னை மீன்பிடித் துறைமுகம் 1984 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. 575 மீன்பிடி படகுகளை நிறுத்திட தேவையான வசதிகள் கொண்டதாக இந்த மீன்பிடி துறைமுகம் ஏற்படுத்தப்பட்டது. 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி தாக்குதலால் மீன்பிடி இறங்கு தளம் மிகவும் பழுதடைந்தது. பழுதடைந்த இந்த மீன்பிடி இறங்கு தளத்தை சீர்செய்ய 2011 ஆம் ஆண்டு எனது தலைமையிலான அரசு 16 கோடியே 24 இலட்சம் ரூபாயினை ஒதுக்கீடு செய்தது. படகு நிறுத்துமிடம் சீரமைக்கப்படுவதுடன், மீன் ஏலக் கூடம் கட்டும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. தற்போது இந்த மீன்பிடித் துறைமுகத்தில் படகுகளின் எண்ணிக்கை 1,395 ஆக உயர்ந்துள்ளதையும், கையாளப்படும் மீனின் அளவு அதிகரித்துள்ளதையும், இட நெருக்கடி காரணமாக மீன்களை சுகாதாரமான முறையில் கையாளுவதில் மிகுந்த இடையூறுகள் ஏற்படுவதையும் கருத்தில் கொண்டு 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்தத் துறைமுகம் மேம்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்படி, வடக்கு அலை தடுப்புச் சுவரில் 300 மீட்டர் நீளத்தில் புதிய படகு அணையும் துறை அமைத்தல், கண்ணாடி நாரிழை படகுகள் நிறுத்துவதற்கு ஏற்ற வகையில் 200 மீட்டர் நீளத்திற்கு புதிய படகுத் துறை அமைத்தல், தற்போதைய படகுத் துறையினை வடக்கு மற்றும் தெற்கு முனைகளில் தலா 50 மீட்டர் நீளத்திற்கு நீட்டிப்பு செய்தல், 150 மீட்டர் நீளத்திற்கு இரண்டு புதிய துணை படகு துறைகளும், 200 மீட்டர் நீளத்திற்கு ஒரு புதிய துணை படகு துறையும் அமைத்தல், படகினை பழுது பார்க்க வசதியாக சாய்வு தளம் அமைத்தல், இரண்டு புதிய வலை பழுது பார்க்கும் கூடங்கள் கட்டுதல், சூரிய சக்தி மூலமாக இயங்கும் விளக்குகள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் மீனவர்களின் பாதுகாப்பினை மேம்படுத்தவும், மீனவர்களின் வருவாயைப் பெருக்கவும், அந்நியச் செலாவணியை அதிகரிக்கவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

சென்னையில் ரூ.29 கோடி நிதி ஒதுக்கீட்டில் உலக சதுரங்க வாகையர் போட்டி!

08.04.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மனதிலும், உடலிலும் உறுதியுள்ள இளைய தலைமுறையினரை உருவாக்குவதிலும், சர்வதேச அளவில் நமது நாட்டின் பெயரை நிலைநிறுத்துவதிலும் இன்றியமையாத் தன்மையை வகிப்பது விளையாட்டு என்று சொன்னால் அது மிகையாகாது. இளைய சமுதாயத்திற்குத் தேவையான நற்பண்புகளைப் புகட்டி அவர்களை பொறுப்புள்ள மனிதர்களாக மலரச் செய்யும் விளையாட்டுத் துறைக்கு எனது தலைமையிலான அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

இதன் ஒரு பகுதியாக, கடந்த 2011 ஆம் ஆண்டு உலக சதுரங்கக் கூட்டமைப்பின் தலைவர் திரு. Kirsan Illyumzhinov அவர்கள் என்னை தலைமைச் செயலகத்தில் சந்தித்து, 2012 ஆம் ஆண்டுக்கான உலக சதுரங்க வாகையர் போட்டியினை, World Chess Championship-ஐ சென்னையில் நடத்தும்படி என்னிடம் வேண்டுகோள் விடுத்தவுடன், இதுவரை இந்தியாவில் நடைபெறாத இந்த உலக சதுரங்க வாகையர் போட்டியினை 20 கோடி ரூபாய் செலவில் சென்னையில் நடத்த ஒப்புதல் அளித்தேன்.

இருப்பினும், இந்தப் போட்டியை நடத்துவதற்காக நடத்தப்பட்ட ஏலத்தில், அதிகத் தொகையினை ரஷ்ய நாடு குறிப்பிட்டதால், 2012 ஆம் ஆண்டுக்கான உலக சதுரங்க வாகையர் போட்டி ரஷ்ய நாட்டில் நடைபெற்றது. 2012 ஆம் ஆண்டுக்கான உலக சதுரங்க வாகையர் போட்டியினை நடத்த தமிழ்நாடு முன் வந்ததைக் கருத்தில் கொண்டு, இந்த

ஆண்டு நவம்பர் மாதம் 6 ஆம் தேதி முதல் 26 ஆம் தேதி வரை நடைபெறவுள்ள உலக சதுரங்க வாகையர் போட்டியினை ஏல முறையின்றி சென்னையில் நடத்த உலக சதுரங்க கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

உலக சதுரங்க கூட்டமைப்பின் வேண்டுகோளினை ஏற்று, 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6 ஆம் தேதி முதல் 26 ஆம் தேதி வரை நடைபெறவுள்ள உலக சதுரங்க வாகையர் போட்டியினை சென்னையில் நடத்த எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதையும், இதற்கென 29 கோடி ரூபாய் நிதியினை தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்யும் என்பதையும் மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் போட்டிகள் ஐந்து முறை உலக வாகையர் பட்டம் சூடிய தமிழ்நாட்டைச் சேர்ந்தவரும், தற்போதைய உலக சதுரங்க வாகையருமான கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த் மற்றும் தற்போதைய உலக தர வரிசையில் முதல் சதுரங்க வீரராகவும், FIDE தர வரிசைப் பட்டியலில் இதுவரை உயர்ந்த அளவில் 2,872 புள்ளிகள் பெற்று முன்னணியில் உள்ள நார்வே நாட்டைச் சேர்ந்த திரு. மேக்னஸ் கார்ல்சன் (Mr. Magnus Carlsen) ஆகியோருக்கும் இடையே நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சர்வதேச அளவிலான இது போன்ற போட்டிகள் சென்னையில் நடத்தப்படுவதன் மூலம் இளைய சமுதாயத்தினர் இடையே சதுரங்க விளையாட்டினை பயில்வதற்கான ஆர்வம் மேலும் அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், பல சதுரங்க விளையாட்டு வீரர்களை உருவாக்கவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

❋ ❋ ❋

ரூ.150 கோடி ஒதுக்கீட்டில் அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் உள்ள 4 மண்டல மையங்களில் அடிப்படை வசதிகள்!

08.04.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு மாநிலத்தின் வளமான பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமானதாக விளங்கும் மனித வள மேம்பாட்டிற்கு அடிப்படையாக விளங்குவது உயர் கல்வி. இப்படிப்பட்ட இன்றியமையாத் தன்மை வாய்ந்த உயர் கல்வியை நம் நாட்டிலுள்ள அனைவரும் பெற வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் பல்வேறு திட்டங்களைத் தீட்டி, இந்தியாவிற்கே வழிகாட்டியாக தமிழ்நாடு விளங்கி வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, எவ்வித வசதியுமின்றி செயல்பட்டு வந்த ஐந்து அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகங்களை சென்னை அண்ணா பல்கலைக் கழகத்துடன் இணைத்து, தமிழகத்தில் உள்ள அனைத்து பொறியியல் கல்லூரிகளையும் அண்ணா பல்கலைக் கழகத்தின் கீழ் எனது தலைமையிலான அரசு கொண்டு வந்தது.

இது மட்டுமல்லாமல், கல்வி தொடர்பான விவரங்களை தங்களது கல்லூரிக்கு அருகில் இருந்து பெற்றுக் கொள்ள வசதியாகவும், கல்லூரிகளின் செயல்பாடுகளை கண்காணிக்க வசதியாகவும் திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு மாநகராட்சிகளில் மண்டல மையங்கள் ஏற்படுத்தப்பட்டன.

அண்ணா பல்கலைக் கழகத்தின் கீழுள்ள நான்கு மண்டல மையங்கள் மற்றும் உறுப்பு பொறியியல் கல்லூரிகளுக்கான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் விதமாக, மதுரை

மற்றும் கோயம்புத்தூர் மண்டல அலுவலகங்களுக்கான கல்வி சார்ந்த கட்டடங்கள் தலா 30 கோடி ரூபாய் செலவிலும், மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மண்டல மையங்களில் மாணவ மாணவியருக்கான விடுதிக் கட்டடங்கள் தலா 10 கோடி ரூபாய் செலவிலும், திண்டுக்கல், ராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் நாகர்கோயில் ஆகிய இடங்களில் உள்ள அண்ணா பல்கலைக்கழக உறுப்பு பொறியியல் கல்லூரிகளில் மாணவ – மாணவியருக்கான விடுதிக் கட்டடங்கள் தலா 10 கோடி ரூபாய் செலவிலும், பட்டுக்கோட்டை மற்றும் பண்ருட்டி ஆகிய இடங்களில் உள்ள அண்ணா பல்கலைக்கழக உறுப்பு பொறியியல் கல்லூரிகளில் விடுதிக் கட்டடங்கள் தலா 5 கோடி ரூபாய் செலவிலும் கட்டப்படும். அண்ணா பல்கலைக் கழகத்தின் பன்னிரெண்டு உறுப்புக் கல்லூரிகளுக்கும் மின் வசதி, குடிநீர் வசதி, சுகாதார வசதி மற்றும் பிற வசதிகள் 10 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தித் தரப்படும். மொத்தத்தில் மேற்காணும் பணிகளுக்காக 150 கோடி ரூபாய் செலவிடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய நாட்டின் இளைஞர்களுக்கு வழிகாட்டியாக விளங்கும் சுவாமி விவேகானந்தரின் போதனைகள் தற்கால சூழ்நிலைக்கும் பொருத்தமாக விளங்குவதைக் கருத்தில் கொண்டு, சென்னை பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், பெரியார் பல்கலைக்கழகம், மற்றும் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் ஆகிய ஒன்பது பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றிலும் சுவாமி விவேகானந்தரின் பெயரில் 25 இலட்சம் ரூபாய் செலவில் உயர் ஆய்வு மற்றும் கல்வி மையம் அமைக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம், சுவாமி விவேகானந்தரின் போதனைகளான தேச பக்தி, ஒழுக்கம், கண்ணியம், அறிவாற்றல், மத சகிப்புத் தன்மை ஆகியவை

மாணவ – மாணவியரிடமும், பொதுமக்களிடமும் எடுத்துச் செல்லப்படும்.

புதிதாக கல்லூரிகள் துவங்குவதைப் பொறுத்த வரையில், மூன்று அரசு பொறியியல் கல்லூரிகள், 22 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் 10 அரசு பல வகை தொழில்நுட்பக் கல்லூரிகள் துவங்கப்படும் என எனது தலைமையிலான அரசால் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு இருந்தது. அதன்படி, ஒரு அரசு பொறியியல் கல்லூரி மற்றும் 22 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்கப்பட்டுவிட்டன. இரண்டு அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் 10 அரசு பல வகை தொழில்நுட்பக் கல்லூரிகள் விரைவில் செயல்படத் துவங்கும்.

இது மட்டுமல்லாமல், 2013–2014 ஆம் கல்வி ஆண்டிலிருந்து மேலும் எட்டு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும் என்று நான் ஏற்கெனவே அறிவித்திருந்தேன். இது இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும் இடம் பெற்றிருக்கிறது. இது தவிர, மேலும் நான்கு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இந்த ஆண்டிலிருந்து துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்படி, விருதுநகர் மாவட்டத்தில் உள்ள சிவகாசி; தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள கோயில்பட்டி; ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கடலாடி, முதுகுளத்தூர் மற்றும் திருவாடானை; புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கரம்பக்குடி; கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஓசூர்; நாமக்கல் மாவட்டத்தில் உள்ள குமாரபாளையம்; திருப்பூர் மாவட்டத்தில் உள்ள காங்கேயம்; காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள உத்திரமேரூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பேராவூரணி ஆகிய 11 இடங்களில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், தர்மபுரி மாவட்டத்தில் உள்ள காரிமங்கலத்தில் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் ஆக மொத்தம் 12 கல்லூரிகள் இந்த ஆண்டு முதல் துவங்கப்படும்.

இது தவிர, பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள வேப்பூரில் பல்கலைக்கழக உறுப்பு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் கடலூர் மாவட்டத்தில் உள்ள திட்டக்குடியில் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் இந்த ஆண்டு முதல் துவங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவை மட்டுமின்றி, தமிழ்நாட்டின் மையப் பகுதியாக விளங்கும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரசு பொறியியல் கல்லூரி இல்லாததைக் கருத்தில் கொண்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் ஒரு அரசு பொறியியல் கல்லூரியும்; திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள செய்யாரில் ஒரு அரசு பல வகை தொழில்நுட்பக் கல்லூரியும் இந்த ஆண்டு முதல் துவங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் தமிழ்நாடு உயர் கல்வியில் முன்னேற்றம் அடையவும், இதன் மூலம் தமிழக மக்கள் அனைத்துச் செல்வங்களையும் பெற்று பெருமையும், புகழும் அடையவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

பசுமை வீடுகளுக்கான அலகுத் தொகை ரூ.1.80 இலட்சத்திலிருந்து ரூ.2.10 இலட்சமாக உயர்வு!

09.04.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கிராம ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் இந்திய மக்களாட்சியின் அடித்தளமாக அமைந்துள்ளன. கிராம ஊராட்சிகளையும், ஊராட்சி ஒன்றியங்களையும் நாம் வலுப்படுத்தவில்லை எனில், நமது மக்களாட்சி அமைப்பு வலுவானதாகவும், செயல் திறன் மிக்கதாகவும் இருக்க முடியாது" என்றார் பேரறிஞர் அண்ணா. பேரறிஞர் அண்ணா மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோரின் வழியில் ஆட்சி நடத்தி வரும் எனது தலைமையிலான அரசு, ஊரக பகுதி வாழ் மக்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

நான் 2011 ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம் என்ற ஒரு புதுமையான திட்டத்தை அறிமுகப்படுத்தினேன். இந்தத் திட்டத்தின்படி, சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடு ஒவ்வொன்றும் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 300 சதுர அடி பரப்பளவில் கட்டப்படும் என்றும், ஆண்டிற்கு 60,000 வீடுகள் என்ற அடிப்படையில் ஐந்து ஆண்டுகளில் 3 இலட்சம் வீடுகள் கட்டப்படும் என்றும் நான் அறிவித்தேன். எனது அறிவிப்பிற்கிணங்க, 2011–2012 ஆம் ஆண்டில் 60,000 வீடுகள் 1,080 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதே போல், 2012–2013 ஆம் ஆண்டின் இலக்கான 60,000 வீடுகளில் இதுவரை 20,861 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகள் அனைத்தும் விரைவில் கட்டி முடிக்கப்பட்டுவிடும். அனைத்து வீடுகளும் பயனாளிகள் மூலமே கட்டப்பட்டு வருகின்றன.

இந்தச் சூழ்நிலையில், கட்டுமானப் பொருட்களான மணல், செங்கல், சிமெண்ட் ஆகியவற்றின் விலையேற்றம் காரணமாக சூரிய சக்திக்கான "சூரிய தகடு", அதாவது Solar Panel மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றிற்கு ஆகும் செலவான, 30 ஆயிரம் ரூபாய் நீங்கலாக வீடு கட்டுவதற்கு அரசு நிர்ணயித்துள்ள அலகுத் தொகையான 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயில் வீட்டினை கட்டுவதற்கு சிரமமாக உள்ளது என்பது எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்தின் போதும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் அலகுத் தொகையை உயர்த்திட வேண்டும் என்று கோரினர்.

பயனாளிகளின் வேண்டுகோளினையும், மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கையினையும் ஏற்று, ஏழை மக்கள் பயன்பெறும் வகையில், சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகளுக்கான அலகுத் தொகை 2013–2014 ஆம் ஆண்டு முதல் 1 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாயிலிருந்து 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்படி வீடு கட்டுமானப் பணிக்கான தொகை 1 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் எனவும், சூரிய சக்திக்கான உபகரணங்கள் அமைத்திடும் பணிக்கான தொகை 30 ஆயிரம் ரூபாய் எனவும் நிர்ணயிக்கப்படும்.

இதே போன்று, இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் வீடு கட்ட இந்த அரசு நிர்ணயித்துள்ள ஒரு இலட்சம் ரூபாய் என்ற அலகுத் தொகை 2013–2014 ஆம் ஆண்டு முதல் 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் என உயர்த்தி வழங்கப்படும். இதில் மத்திய அரசின் பங்குத் தொகை 52 ஆயிரத்து 500 ரூபாய் எனவும், மாநில அரசின் பங்குத் தொகை 67 ஆயிரத்து 500 ரூபாய் எனவும் இருக்கும்.

கிராமங்கள் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதன் அடிப்படையிலும், தமிழ்நாட்டில் சுகாதாரப் புரட்சியின் மூலம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டும், சுற்று சூழல் சுகாதார

மேம்பாட்டை உள்ளடக்கிய ''தூய்மையான கிராம இயக்கம்'' என்ற ஒரு திட்டம் என்னுடைய முந்தைய ஆட்சிக் காலத்தில், 2003 ஆம் ஆண்டு துவக்கி வைக்கப்பட்டது. நூறு விழுக்காடு சுகாதாரத்தை எய்துகின்ற ஊராட்சிகளுக்கு அரசின் சார்பில் ரொக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டு வந்தன. இதன் மூலம் முழுமையான சுகாதார அமைப்புகள் பெற்ற கிராமங்கள் உருவாகின. ஆனால், ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்பு, இந்தத் திட்டம் 2006–2007 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படவில்லை.

2011–இல் நான் மீண்டும் முதலமைச்சராக பதவியேற்றவுடன், சுகாதார கிராமங்களை உருவாக்குகின்ற இந்த திட்டத்தை மீண்டும் செயல்படுத்த உத்தரவிட்டேன். இந்தத் திட்டத்தின் கீழ் மாவட்டத்திற்கு ஒரு தூய்மையான கிராம ஊராட்சியை தேர்ந்தெடுத்து, அந்த கிராம ஊராட்சிக்கு 5 இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசும், ''தூய்மையான கிராம இயக்கம்'' என்ற விருதும் வழங்கப்படும் என்றும் அறிவித்தேன். இதன்படி 31 மாவட்டங்களில் உள்ள 31 கிராம ஊராட்சிகளுக்கு 5 இலட்சம் ரூபாய் பரிசு வழங்கும் வகையில், 1 கோடியே 55 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சுகாதார இயக்கத்தின் கீழ் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை ஒரு முக்கிய கூறாகும். எனவே தான், ஊரகப் பகுதிகளில் திடக் கழிவு மேலாண்மைப் பணிகளுக்காக இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 150 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவன்றி, திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைப் பணிகளுக்காக 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு செயல் திட்டம் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய அரசின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி 500 குடும்பங்களுக்கு மேற்பட்ட கிராம ஊராட்சிகளில் 20 இலட்சம் ரூபாய் வரையிலான மதிப்பீட்டில் திட மற்றும் திரவக் கழிவுப் பணிகளை மேற்கொள்ளலாம். மத்திய அரசு இதற்கென நமக்குரிய 100 கோடி ரூபாய் நிதி உதவித் தொகையை இந்தத் திட்டத்திற்கு அளிக்கும் என எதிர்பார்க்கிறேன்.

இந்த நிதியிலிருந்து, குப்பைகளை, மக்கும் மற்றும் மக்காத கழிவுப் பொருட்களாக பிரித்தல் மற்றும் அப்புறப்படுத்துதல்; தெருக்கள், திறந்தவெளிகள் மற்றும் சுற்றுப்புறங்களை கழிவுப் பொருட்கள் இல்லாமல் சுத்தமாக வைத்துக் கொள்ளுதல்; கழிவு நீரை அகற்றுதல், கழிவு நீர் உறிஞ்சு குழிகள் அமைத்தல், நீர் ஆதாரங்கள் மற்றும் வடிகால்கள் சுற்றிலும் முறையாக கழிவு நீர் செல்ல தளம் அமைத்தல்; பொதுவான இடங்களிலும், பொது நீர் நிலைகளுக்கு அருகிலும் கழிவு நீர் முறையாக வெளியேற்றப்பட்டு மேலாண்மை செய்தல், கழிவு நீரை மறு சுழற்சி செய்தல்; உரக்குழிகள், மண்புழு உரம் தயாரித்தல், சாண எரிவாயு கலன்கள் அமைத்தல் போன்ற மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

ஊராட்சிகளில் மக்கள் தொகைக்கேற்ப துப்புரவு பணியாளர்கள் இல்லாத சூழ்நிலை தற்போது நிலவுகிறது. கிராமங்களில் துப்புரவுப் பணியை மேற்கொள்ள தற்போது 9,896 துப்புரவுப் பணியாளர்கள் மட்டுமே உள்ளனர். எனவே, இப்பகுதிகளில் துப்புரவுப் பணியை மேற்கொள்ள கூடுதலான பணியாளர்களை நியமித்தல் அவசியமாகிறது. இதனை இந்த மாமன்றத்தில் பல உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதனைக் கருத்தில் கொண்டு, மக்கள் தொகை 3,000க்கும் கீழ் உள்ள 8,469 கிராம ஊராட்சிகளில் கிராம ஊராட்சிக்கு கூடுதலாக ஒன்று வீதமும்; 3,001 முதல் 10,000 வரை உள்ள 3,908 கிராம ஊராட்சிகளில் கிராம ஊராட்சிக்கு கூடுதலாக இரண்டு வீதமும்; 10,000க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 147 கிராம ஊராட்சிகளில் கிராம ஊராட்சிக்கு கூடுதலாக மூன்று வீதமும், ஆக மொத்தம் 16,726 துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள் கூடுதலாக ஏற்படுத்திட எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு புதிதாக உருவாக்கப்படும் பணியிடங்களில் பணி அமர்த்தப்படுபவர்களுக்கு தொகுப்பூதியமாக மாதம் 2,000 ரூபாயும், அகவிலைப்படியாக 40 ரூபாயும் வழங்கப்படும்.

இதன் காரணமாக, ஒரு பணியிடத்திற்கு ஆண்டொன்றிற்கு தோராயமாக 25 ஆயிரம் ரூபாய் செலவு ஏற்படும். 16,726 துப்புரவுப் பணியாளர்களுக்கு கூடுதலாக 41 கோடியே 81 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவு ஏற்படும்.

இது மட்டுமல்லாமல், ஊராட்சிகளின் செலவினத்தைக் கட்டுப்படுத்தும் வகையிலும், மின் சக்தியினைப் பயன்படுத்துவதில் சிக்கனத்தினைக் கடைப்பிடிக்கும் வகையிலும், புதுப்பிக்கத்தக்க எரி சக்தியினை ஊக்குவிக்கும் வகையிலும் 12,524 கிராம ஊராட்சிகள் மற்றும் 385 ஊராட்சி ஒன்றியங்களில் சூரிய சக்தியைக் கொண்டு மின் வசதி ஏற்படுத்த எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்படி, 2013–2014 ஆம் ஆண்டில் 50 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 500 கிராம ஊராட்சி அலுவலகங்களில் சூரிய சக்தியுடன் கூடிய மின் வசதி ஏற்படுத்தப்படும். ஊராட்சி ஒன்றியம் மற்றும் கிராம ஊராட்சி அலுவலகங்களில் உள்ள மின் விசிறிகள், குழல் விளக்குகள், கணினி மற்றும் அச்சுப்பொறி ஆகிய மின் உபகரணங்கள் சூரிய சக்தி மூலம் செயல்படும் வகையில் சூரிய சக்தி கலன் அமைக்கப்படும்.

ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 7 கிலோ வாட் திறன் கொண்ட சூரிய சக்திக் கலன் அமைத்திட 10 இலட்சம் ரூபாய் வீதம் 50 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கு மொத்தம் 5 கோடி ரூபாயும்; ஒரு கிராம ஊராட்சிக்கு 0.50 கிலோ வாட் திறன் கொண்ட சூரிய சக்திக் கலன் அமைத்திட 80 ஆயிரம் ரூபாய் வீதம் 500 கிராம ஊராட்சி அலுவலகங்களுக்கு 4 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 9 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

மேற்காணும் எனது அரசின் நடவடிக்கைகள் மக்களாட்சியின் அடித்தளமாக விளங்கும் கிராம ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் வலுப்பட வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

❋ ❋ ❋

நடப்பாண்டில் ரூ.797.69 கோடி மதிப்பில் கூட்டுக் குடிநீர் திட்டங்கள்!

10.04.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நகர்ப்புறங்களில் பெருகி வரும் மக்கட் தொகைக்கேற்ப குடிமைப்பணிகளை உயர்ந்த அளவில் நிறைவேற்றிக் கொடுப்பதும், நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதும் உள்ளாட்சி அமைப்புகளின் தலையாய கடமை என்றாலும், மாநில அரசுக்கும் இதில் பொறுப்பு உள்ளது. இதனை உணர்ந்த எனது தலைமையிலான அரசு, மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப நல்ல சுற்றுப்புறச் சூழலை ஏற்படுத்துவதிலும், பொது சுகாதாரத்தைப் பராமரிப்பதிலும், பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்குவதிலும், அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதிலும் அதிக அக்கறை செலுத்தி வருகிறது.

தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் ஒன்றான ராமநாதபுரம் மாவட்டத்தின் குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்க்கும் வகையில் ராமநாதபுரம் மாவட்டம் நரிப்பையூரில் 3.80 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் எனது ஆட்சிக் காலத்தில் தான் கொண்டுவரப்பட்டது. இதன் மூலம் 3.80 மில்லியன் லிட்டர் குடிநீரை பெற முடியும். இதே போன்று, ராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் தான் வடிவமைக்கப்பட்டு பின்னர் நிறைவேற்றப்பட்டது. இருப்பினும் உள்ளூர் நீராதாரங்களின் தரமும், நம்பகத்தன்மையும் தற்போது குறைந்து வருவதால், இம்மாவட்டத்தின் குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்க்க நிரந்தரத் தீர்வு காண வேண்டியது அவசியமாகிறது.

எனவே, சென்னை மாநகரத்தின் நீர்த் தேவையை சமாளிக்க கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைக் கொண்டு வந்தது

போல், ராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் நிலவும் நிலத்தடி நீரின் நிலையற்ற தன்மை மற்றும் குடிநீர் தரப் பிரச்சனை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, அனைத்து காலங்களிலும் நிரந்தரமாக மக்களுக்கு குடிநீர் கிடைக்கும் வகையில் ராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில், தலா 100 மில்லியன் லிட்டர் குடிநீர் திறனுடைய கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள் அமைக்கப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆற்று நீரை ஆதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைப் பொறுத்த வரையில், ஊரகப் பகுதிகளில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் என்ற இலக்கை எய்த வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டு, காவேரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு 450 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திண்டுக்கல் மாவட்டத்தில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம், ஆத்தூர், நிலக்கோட்டை, வத்தலக்குண்டு, சாணார்பட்டி, நத்தம், ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி, வடமதுரை, வேடசந்தூர், குஜிலியம்பாறை, திண்டுக்கல், ரெட்டியார் சத்திரம் மற்றும் பழனி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 1,342 குடியிருப்புகளைச் சேர்ந்த 5,62,000 மக்கள் பயன் பெறுவர்.

இதே போன்று, தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த பேராவூரணி, பெருமகளூர், அதிராம்பட்டினம் பேரூராட்சிகள்; மற்றும் பட்டுக்கோட்டை, சேதுபாவாசத்திரம், பேராவூரணி, மதுக்கூர், பாபநாசம், திருவையாறு, தஞ்சாவூர், ஓரத்தநாடு மற்றும் திருவோணம் ஆகிய ஒன்றியங்களைச் சார்ந்த 1,153 குடியிருப்புகளில் வசிக்கும் 5,76,000 மக்கள் பயன் பெறும் வண்ணம் கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு 125 கோடி ரூபாய் மதிப்பில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள தொண்டாமுத்தூர், பூலுவபட்டி, தென்கரை, வேடப்பட்டி, தாளியூர், ஆலந்துறை, பேரூர் ஆகிய 7 பேரூராட்சிகள் மற்றும் தொண்டாமுத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 134 ஊரக குடியிருப்புகளில் வசிக்கும் 1,55,000 மக்கள் பயன் பெறும் வகையில் பவானி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு 114 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

திருப்பூர் மாவட்டத்திலுள்ள வெள்ளக்கோயில், மூலனூர், தாராபுரம், குண்டடம் மற்றும் காங்கேயம் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஈரோடு மாவட்டத்திலுள்ள சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் ஆகிய பகுதிகளில் உள்ள 1,262 ஊரகக் குடியிருப்புகளில் வசிக்கும் 2,80,140 மக்கள் பயன்பெறும் வண்ணம் காவேரி ஆற்றினை நீராதாரமாகக்கொண்டு 76 கோடியே 44 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள அந்தநல்லூர், மணிகண்டம் மற்றும் மணப்பாறை ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 177 ஊரக குடியிருப்புகளில் வசிக்கும் 1,27,720 மக்கள் பயன்பெறும் வண்ணம் காவேரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு 32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும். ஆக மொத்தம் 797 கோடியே 69 இலட்சம் ரூபாய் மதிப்பிலான கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நடப்பாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், திருநெல்வேலி மாநகராட்சி, ஆரணி, திருவத்திபுரம், மற்றும் பெரியகுளம் ஆகிய 3 நகராட்சிகளில் 2013–2014 ஆம் ஆண்டில் ஜெர்மன் மேம்பாட்டு வங்கி நிதி மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட நிதி ஆகியவற்றின் கீழ் 227 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் சேகரிக்கப்படும் திடக் கழிவுகளில் 40 முதல் 60 விழுக்காடு திடக் கழிவுகள் மக்கும் தன்மை உடையதாக உள்ளன. அதிக அளவில் திடக் கழிவுகள் உற்பத்தியாகும் காய்கறி அங்காடிகள், உணவகங்கள், திருமணக்கூடங்கள், இறைச்சி கூடங்கள் ஆகியவற்றிலிருந்து கழிவுகளை தினசரி சேகரித்து அவற்றிலிருந்து உருவாகும் உயிரி எரிவாயு மூலம் மின் உற்பத்தி செய்யலாம். 5 டன் எடை கொண்ட மக்கும் கழிவிலிருந்து நாளொன்றுக்கு 440 யூனிட்டுகள் மின் உற்பத்தி செய்வதன் மூலம் சுமார் 750 தெரு விளக்குகளை 12 மணி நேரம் ஒளிரச் செய்ய இயலும்.

எனவே, திடக் கழிவுகளிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வதை ஊக்குவிக்கும் வகையில், 200 சதுர மீட்டர் பசுமை பகுதி உள்ளிட்ட 625 சதுர மீட்டர் பரப்பரளவில் திருச்சிராப்பள்ளி, திருப்பூர், ஈரோடு, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய 5 மாநகராட்சிகளிலும், கும்பகோணம், பள்ளிப்பாளையம், ஒசூர், பூந்தமல்லி, காயல்பட்டினம், மேட்டூர், திருத்தணி, ஆவடி, காஞ்சிபுரம், கடலூர், பல்லவபுரம், திருவண்ணாமலை, கரூர், திருச்செங்கோடு, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திண்டுக்கல், உதகமண்டலம், ராஜபாளையம், பொள்ளாச்சி, மேட்டுப்பாளையம், கோபிச்செட்டிபாளையம், நாகர்கோவில் மற்றும் பழனி ஆகிய 24 நகராட்சிகளிலும் 27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திடக் கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் நவீன உயிரி எரிவாயுக் கூடங்கள் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் சொந்த நிதி மூலமாகவும் மத்திய மாநில அரசுகளின் நிதி உதவியுடனும், உலக வங்கி, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கி போன்ற அயல் நாட்டு நிதி நிறுவனங்களிலிருந்து பெறப்படும் நிதி மூலமாகவும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதால், நகராட்சிகளின் நிதி வளர்ச்சியானது பல மடங்கு உயர்ந்துள்ளது. எனவே, நகராட்சிகளின் கணக்குகளை இன்றைய தேவைக்கேற்ப பராமரிக்கவும், நிதி மேலாண்மையை திறம்படுத்தவும், "தமிழ்

நாடு நகராட்சி கணக்குப் பணி'' என்ற பணியமைப்பு ஒன்று உருவாக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பாக, பெருகி வரும் மக்கள் தொகை, அதிகரித்து வரும் வருவாய், பணிகளின் தன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, திண்டுக்கல் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இரு நகராட்சிகள் மாநகராட்சிகளாக தரம் உயர்த்தப்படும் என்பதையும்; காரைக்குடி மற்றும் சிவகாசி நகராட்சிகள் தேர்வு நிலையிலிருந்து சிறப்பு நிலை நகராட்சிகளாக தரம் உயர்த்தப்படும் என்பதையும் இந்த மாமன்றத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் மூலம் நகர்ப்புற மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேறவும், வாழ்க்கைத் தரம் மேம்படவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

ரூ.400 கோடி மதிப்பில் "ஊரகச் சாலைகள் பராமரிப்புத் திட்டம்"

15.04.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு மாநிலத்தின் உயிர் நாடியாக விளங்குவது கிராமங்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. அதனால் தான், மகாத்மா காந்தி அவர்கள் கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுமாறு படித்த இளைஞர்களிடம் வேண்டுகோள் விடுத்தார். கிராமங்களின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்த எனது தலைமையிலான அரசு, கிராம முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

கிராம முன்னேற்றத்தில் முக்கியப் பங்கு வகிப்பது சாலைகள் ஆகும். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் 74,981.29 கிலோ மீட்டர் நீளமுள்ள கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய தார்ச் சாலைகள் உள்ளன. இச்சாலைகளை வாகனப் போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் பராமரிப்பது இன்றியமையாததாகும். இச்சாலைப் பராமரிப்புப் பணிகள், தற்போது நடப்பிலுள்ள ஊரக வளர்ச்சித் திட்டங்களின் மூலமே மேற்கொள்ளப்பட்டு வருவதால் நிதி ஒதுக்கீடு போதுமானதாக இல்லை.

இதனைக் கருத்திற் கொண்டு, கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய தார்ச் சாலைகளைப் பராமரிக்க ஏதுவாக, "ஊரகச் சாலைகள் பராமரிப்புத் திட்டம்" 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும். இதற்கான நிதி, மாநில நிதிக்குழு மற்றும் 13–ஆவது நிதிக் குழு ஆகியவற்றின் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், சாலை அமைக்கும் செலவினத்தில் சேமிப்பினை ஏற்படுத்தும் வகையிலும், சுற்றுச்சூழல் பிரச்சனைகளை பெருமளவில் ஏற்படுத்தி தூய்மைக்குக் கேடு விளைவிக்கும் மக்காத தன்மையுடைய பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி கிராமப் பகுதிகளில் தார்ச் சாலைகள் அமைக்கும் பணியினை எனது தலைமையிலான அரசு மேற்கொண்டு வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில், கிராம ஊராட்சிப் பகுதிகளில் 153 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1254.13 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதில் 1,002 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய சாலைப் பணிகள் விரைவில் முடிக்கப்பட உள்ளன. இச்சாலைகள் அமைக்க 917 மெட்ரிக் டன் பிளாஸ்டிக் கழிவுகள் பயன்படுத்தப்பட்டு உள்ளன. இந்த ஆண்டும் 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள தார் சாலைகள் பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி அமைக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப்புறத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த, குடியிருப்புகளை அலகாகக் கொண்டு இந்தியாவிலேயே முதல் முறையாக ஒரு மாபெரும் செயல்திட்டம் "தாய்" என்ற பெயரில் 2011–2012இல் என்னுடைய அரசால் தொடங்கப்பட்டது. அத்திட்டத்தின் கீழ் கடந்த இரு ஆண்டுகளில் ஏறத்தாழ 97,000 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை தவிர, 45 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், மற்றும் 416 ஊராட்சி அலுவலகக் கட்டடங்களுக்கான பணிகள் 110 கோடியே 64 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் இந்த அரசு பொறுப்பேற்றவுடன் 2011–2012ஆம் ஆண்டில் பயன்பாடற்று இருந்த 12,796 ஊரக மகளிர் சுகாதார வளாகங்கள் 170 கோடி ரூபாய் செலவில் சீரமைக்கப்பட்டு பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. அதே போல, 2012–2013ஆம் ஆண்டில், ஊரகப் பகுதிகளில் உள்ள 36,230 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், 3,416 தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும்

பிரதான குடிநீர்க் குழாய்கள் 175 கோடியே 22 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சீரமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு இதுவரை 13,954 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள அனைத்து ப்பணிகளும் ஏப்ரல், 2013 இறுதிக்குள் முடிக்கப்படும்.

தமிழகத்தில் உள்ள பெரும்பாலான ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடங்கள் 40 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டதால் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன பல்வேறு ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் போதிய இடவசதி இல்லாமல் சிறிய கட்டடங்களில் இயங்கி வருகின்றன. வட்டார அளவில், அந்தந்த வட்டாரத்திற்கு தேவையான அனைத்து வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்தும் அலகாக ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் திகழ்கின்றன. அந்தந்த வட்டாரத்தில் உள்ள பொதுமக்கள், தங்களின் அடிப்படை தேவைகளான வீட்டு வசதி, குடிநீர் வசதி, தெரு விளக்குகள், சாலை வசதி மற்றும் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களை அணுக வேண்டியுள்ளது. ஒன்றிய அளவிலான மக்கள் பிரதிநிதிகள் தங்களின் வட்டாரத்திற்கு தேவையான பணிகளை நிறைவேற்ற அரசு அலுவலர்களுடன் சேர்ந்து செயல்படவும் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முக்கிய மையமாக செயல்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள 25 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கு தலா 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய அலுவலக கட்டடங்கள் கட்டப்படும். இதற்கென 50 கோடி ரூபாய் நிதி ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும். புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடங்களில் பொதுமக்களுக்கான காத்திருப்பு அறை, குடிநீர் வசதி, பெண்களுக்கான கழிவறை வசதி, கூட்ட அரங்கு, பயிற்சி அரங்கு மற்றும் இதர வசதிகள் அமையப் பெற்றிருக்கும்.

ஊராட்சி மன்ற அலுவலக கட்டடங்கள், போதிய இட வசதி இல்லாமல் பழுதடைந்த நிலையில் இருப்பதும் எனது அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. புதிய ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள் கட்ட மக்கள் பிரதிநிதிகள்

இடமிருந்தும் கோரிக்கைகள் வரப் பெற்றுள்ளன. இதற்கிணங்க, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள 200 கிராம ஊராட்சி மன்றங்களுக்கு தலா 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய கிராம ஊராட்சி மன்றக் கட்டடங்கள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இந்த புதிய கிராம ஊராட்சி அலுவலக கட்டடங்களில், மன்ற கூட்ட அறை, பொருட்களுக்கான தளவாட அறை, கழிவறை வசதி போன்ற வசதிகள் அமையப் பெற்றிருக்கும்.

ஊரகப் பகுதிகளில் உள்ள சமுதாயக் கூடங்கள், சத்துணவுக் கூடங்கள், அங்கன்வாடிக் கட்டடங்கள், நியாய விலைக் கடைகள், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கக் கட்டடங்கள், ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள், நூலகக் கட்டடங்கள், இடுகாடு மற்றும் சுடுகாடுகள், மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள், தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டிகள் மற்றும் விளையாட்டு மையங்கள் ஊரக உள்ளாட்சி அமைப்புகளினால் சரிவர பராமரிக்கப்படாமல், மக்களால் முழுமையாக பயன்படுத்த இயலாத நிலை உள்ளது. இந்த நிலையை சரி செய்திடும் வகையில், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு உறுதுணையாக ஊரகச் சொத்துக்களை பராமரிப்பதற்காக செயல்படுத்தப்பட்டு வரும் ''ஊரகக் கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் சீரமைப்புத் திட்டம்'' என்ற திட்டத்திற்காக 2013–2014 ஆம் ஆண்டில் 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பணிகள், ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மூலம் மேற்கொள்ளப்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் தமிழகத்திலுள்ள அனைத்து ஊரகப் பகுதிகளும் தன்னிறைவு பெற்ற பகுதிகளாக உருவாக வழி வகுக்கும் என்பதை தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

ரூ.1,000 கோடி மதிப்பில் கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையம்

16.04.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டின் தலைநகராகவும், இந்தியாவில் உள்ள முக்கிய நகரங்களில் ஒன்றாகவும் விளங்கி வரும், நவீனமும், பாரம்பரியமும் மிக்க சென்னை மாநகரத்தை எழிலார்ந்த சென்னையாக உருவாக்கும் அதே சமயத்தில், சென்னை மாநகரத்துடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளின் உட்கட்டமைப்பு வசதிகளும் சென்னை மாநகருக்கு நிகராக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில், அதற்குத் தேவையான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு முனைப்புடன் எடுத்து வருகிறது.

சென்னை மாநகரத்தில் நிலவி வந்த குடிநீர்ப் பற்றாக்குறையை போக்கும் வகையில், எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், 2004ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் குடிநீரை வழங்கும் புதிய வீராணம் திட்டம் நிறைவேற்றப்பட்டது. இது தவிர, நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தை மீஞ்சூரில் நிறுவுவதற்கான நடவடிக்கைகளும் எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் தான் எடுக்கப்பட்டன.

அந்த வகையில் பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்யும் வகையில், நெம்மேலியில் தற்போது நிறுவப்பட்டுள்ள கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்திற்கு அருகில் காலியாக உள்ள 10.50 ஏக்கர் நிலத்தில் 1,000 கோடி ரூபாய் மதிப்பில் கூடுதலாக நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் ஒன்று அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதன் மூலம், விரிவாக்கப்பட்ட சென்னை

மாநகரின் தென்பகுதியில் அமைந்துள்ள ஆலந்தூர், பெருங்குடி, கொட்டிவாக்கம், புழுதிவாக்கம், பள்ளிக்கரணை, மடிப்பாக்கம், சோழிங்கநல்லூர், காரப்பாக்கம், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், செம்மஞ்சேரி, உத்தண்டி மற்றும் ஒக்கியம்–துரைப்பாக்கம் ஆகிய பகுதிகளில் குடியிருக்கும் சுமார் 6.46 இலட்சம் மக்கள் பயனடைவர்.

மேலும், சென்னைக்கு அருகில் உள்ள பட்டிபுலம் பகுதியில் எதிர்காலத்தில் 400 மில்லியன் லிட்டர் வரை விரிவாக்கம் செய்யக் கூடிய வகையில், 200 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல் நீரை நன்னீராக்கும் நிலையம் ஒன்றினை 4 ஆண்டுகளுக்குள் அமைத்திட எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளின் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு தொடங்கப்பட்ட சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் மூலம் 192 கோடியே 2 இலட்சம் ரூபாய் 2012–2013 ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டு 9 பகுதிகளில் குடிநீர்த் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் 303 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், இடையான் சாவடி, சடையான் குப்பம், கடப்பாக்கம், மணலி, சூரப்பட்டு, கதிர்வேடு, புத்தகரம், புழல், பள்ளிக்கரணை, கொட்டிவாக்கம், சின்ன சேக்காடு, முகலிவாக்கம், பெருங்குடி மற்றும் பாலவாக்கம் ஆகிய 14 பகுதிகளில் வசிக்கும் மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவேற்றும் வண்ணம், குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படும். இதன் மூலம் 3.47 இலட்சம் மக்கள் தங்கள் வீடுகளிலேயே குழாய் மூலம் குடிநீர் பெற்று பயனடைவர்.

சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னை நகருடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளான சூரப்பட்டு, கதிர்வேடு, நொளம்பூர் மற்றும் முகலிவாக்கம் ஆகிய 4 பகுதிகளில் 121 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கழிவு நீரகற்றும் கட்டமைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படும். இதன் மூலம் இப் பகுதிகளில் வசிக்கும் 80,000 மக்கள் பயன் அடைவர்.

சென்னை நகர மையப் பகுதிகளில் உள்ளது போன்ற நவீன மின் விளக்குகள் ஒரே சீராக மாநகராட்சியின் விரிவாக்கப்பட்ட பகுதிகளிலும் பொருத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்துடனும், மின்சாரத்தை சேமிக்க வேண்டும் என்ற குறிக்கோளுடனும் 1,10,000 எண்ணிக்கையில் மின்சாரத்தை சேமிக்கும் வகையிலான தெரு விளக்குகள் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அடுத்த இரண்டு ஆண்டுகளில் பொருத்தப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகருக்கு நிகராக புதிதாக இணைக்கப்பட்டுள்ள விரிவாக்கப் பகுதிகளிலும் மழைநீர் வடிகால்வாய்கள், தெரு விளக்குகள், நடை பாதைகள், தெரு கலன்கள் மற்றும் சேவைத் துறையினருக்கான அமைப்புகள் அதாவது Ducts ஆகியவற்றைக் கொண்ட ஒருங்கிணைந்த சாலைகளை அமைக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2011–2012 ஆம் நிதி ஆண்டில் 175.36 கிலோ மீட்டர் நீளமுள்ள 360 எண்ணிக்கையிலான சாலைகளில் 333 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2012–2013 ஆம் நிதி ஆண்டில் 122 கிலோ மீட்டர் நீளமுள்ள 513 எண்ணிக்கையிலான உட்புறச் சாலைகளில் 253 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக 2013–2014 ஆம் ஆண்டில் சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னை மாநகராட்சியின் விரிவாக்கப் பகுதிகளில் 225 கிலோ மீட்டர் நீளமுள்ள 900 சாலைகளில் ஒருங்கிணைந்த சாலைகள் 290 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் மூலம் சென்னை விரைவில் எழில்மிகு சென்னையாக உருவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

தமிழகத்தில் இரண்டாவது வெண்மைப்புரட்சி விரைவில் நிறைவேறும்!

17.04.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு உடனுக்குடன் ஆதாயமான விலை கிடைக்கச் செய்தல் மற்றும் நுகர்வோருக்கு தரமான பாலினை நியாயமான விலையில் விற்பனை செய்தல் ஆகியவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் எனது தலைமையிலான அரசு, தமிழ்நாட்டில் கால்நடைகளின் எண்ணிக்கையை உயர்த்துவதன் மூலமும், பால் பண்ணைகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலமும், பால் கொள்முதலில் தமிழ்நாடு முதல் இடத்தை அடைவதற்கான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

எனது அரசின் முனைப்பான நடவடிக்கைகள் காரணமாக, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் நாளொன்றுக்கு சுமார் 20 இலட்சம் லிட்டர் என்று இருந்த பால் கொள்முதல் தற்போது 24.36 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. தமிழக வரலாற்றில் முதன் முறையாக 20.11.2012 அன்று 27.15 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து ஆவின் நிறுவனம் சாதனை படைத்திருக்கிறது. மேலும், புதுப் புது பால் உப பொருட்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, பால் பொருட்கள் உற்பத்தியும், விற்பனையும் கணிசமான அளவு தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருகிறது. இதன் காரணமாக, 2011–2012இல் 2,791 கோடி ரூபாயாக இருந்த விற்பனை 2012–2013ஆம் ஆண்டில் 3,584 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது தமிழ்நாட்டில் பால் கொள்முதல் அதிகரித்துள்ள நிலையில், மாவட்ட ஒன்றியப் பால் பண்ணைகளின் உட்கட்டமைப்பு

வசதிகளை அதிகரிக்கும் வகையிலும், பால் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் உறுப்பினர்களை ஊக்குவிக்கும் வகையிலும், 95 கோடியே 66 இலட்சம் ரூபாய் மதிப்பில் கீழ்க்காணும் பணிகள் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1. திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, வேலூர், விழுப்புரம், சேலம், தருமபுரி, திண்டுக்கல் மற்றும் காஞ்சிபுரம் – திருவள்ளூர் பால் கூட்டுறவு ஒன்றியங்களின் பால் பண்ணைகளில் உள்ள குளிர்விப்புத் திறன் வசதி; குளிரூட்டப்பட்ட பாலைச் சேமிக்கும் கொள் கலன்கள் வசதி; பாலை திடப்படுத்தும் வசதி, பாலிலிருந்து நுண் கிருமியை நீக்குவதற்கான வசதி; பாலிலிருந்து வெண்ணெயைப் பிரித்தெடுத்து சமன்படுத்தும் வசதி; பால் விற்பனை செய்ய ஏதுவாக குளிர்பதனக் கிடங்கின் கொள்ளளவை அதிகரித்தல் மற்றும் மின் இயக்குதிறன் ஆகியவை 20 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.
2. சென்னை மாநகரில் நாளொன்றுக்கு 10.20 இலட்சம் லிட்டராக இருந்த விற்பனை 11.25 லட்சம் லிட்டராக அதிகரித்துள்ள நிலையில், பெருகி வரும் பாலின் தேவையைக் கருத்தில் கொண்டு, 37 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் பால் கையாளும் திறன் கீழ்க்கண்டவாறு மேம்படுத்தப்படும்.

❖ அம்பத்தூர் பால் பண்ணையில் சக்தி சேமிப்பு உயர்நிலை அழுத்தக் கருவிகள், பால் திடப்படுத்தும் கருவிகள், வெப்பம் ஊடுருவாத சுவர் மற்றும் தானியங்கி இயந்திரங்கள் 14 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் வாங்கப்படும்.

❖ சோழிங்கநல்லூர் பால் பண்ணையில், மணிக்கு 6,500 லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட உச்ச வெப்ப நிலையில் பதப்படுத்தப்பட்ட பாலை நுண்ணுயிர் நுழையா பைகளில் அடைக்கும் இயந்திரம் 10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

❖ மாதவரம் பால் பண்ணையில், சக்தி சேமிப்புக் கருவியுடன் கூடிய உறைநிலை நீர்த் தொட்டிக் கருவிகள்,

புதிய குளிர்விக்கும் கருவிகள் மற்றும் பசுமைப் பால்பண்ணை சார்ந்த திட்டங்கள் 5 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

❖ சென்னை மாநகர பால் பண்ணைகளில் உணவு பதப்படுத்துதல் திட்டத்தின் கீழ் குளிரூட்டம் செய்வதற்கான வசதிகள் 8 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

3. பால் உற்பத்தியாளர்களுக்கு பாலின் தரத்திற்கேற்ற விலை கிடைக்கும் வகையில், பாலின் தரம் அறிய உதவும் 6,500 பகுப்பாய்வுக் கருவிகள் 35 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் படிப்படியாக வாங்கப்பட்டு, தொடக்க பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும்.

4. தரமான பாலினை தொடர்ந்து வழங்கி வரும் உறுப்பினர்கள் மற்றும் சங்கங்கள் கண்டறியப்பட்டு, ''நட்சத்திர அந்தஸ்து'' மற்றும் ஊக்கத் தொகை வழங்கப்படும். இதன்படி, சங்கங்களுக்கு தரமான பால் வழங்கும் உறுப்பினர்கள் ஒவ்வொரு ஒன்றியத்திலும் தலா 300 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, முதல் நூறு பேருக்கு முதல் பரிசாக 3,000 ரூபாய், இரண்டாவது நூறு பேருக்கு இரண்டாம் பரிசாக 2,000 ரூபாய், மூன்றாவது நூறு பேருக்கு மூன்றாம் பரிசாக 1,000 ரூபாய் என ஊக்கத் தொகை வழங்கப்படும். இதற்கென ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 6 இலட்சம் ரூபாய் என 1 கோடியே 2 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

5. இதே போன்று ஒன்றியங்களுக்கு தரமான பால் வழங்கும் முதல் 10 சங்கங்கள் கண்டறியப்பட்டு, முதல் பரிசாக 25,000 ரூபாயும், இரண்டாம் பரிசாக 15,000 ரூபாயும், மூன்றாம் பரிசாக 10,000 ரூபாயும், மற்ற ஏழு சங்கங்களுக்கு 5,000 ரூபாயும் வழங்கப்படும். இதற்கென ஒரு ஒன்றியத்திற்கு 85,000 ரூபாய் என மொத்தம் 14 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

மேற்காணும் எனது தலைமையிலான அரசின் முனைப்பான நடவடிக்கைகள் மூலம், தமிழகத்தில் இரண்டாவது வெண்மைப் புரட்சி விரைவில் நிறைவேறும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

திருமண நிதியுதவித் திட்ட குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு உயர்வு!

17.04.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆணும், பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவில் ஓங்கி இவ்வையகம் தழைக்குமாம்" என்ற மகாகவி பாரதியாரின் வாக்கிற்கிணங்க, பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், பெண்ணுரிமையை நிலைநாட்டும் வகையிலும் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், திருமண நிதியுதவித் திட்டங்கள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் என பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு சிறப்புடன் செயல்படுத்தி வருகிறது.

பெண் சிசுக் கொலையை முற்றிலும் ஒழிக்கும் வகையிலும், பெண் குழந்தைகளின் கல்வியை மேம்படுத்தும் வகையிலும்; எனது ஆட்சிக் காலத்தில் 1992 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பதிவான பெண் குழந்தைகள் பெயரில் 1,500 ரூபாய்க்கான வைப்புத் தொகை பத்திரங்கள் வழங்கப்பட்டன. பின்னர் 2001 ஆம் ஆண்டு இத்திட்டம் மாற்றி அமைக்கப்பட்டது. இதன்படி, ஒரு குடும்பத்தில் ஒரே ஒரு பெண் குழந்தை மட்டும் இருந்தால், அப்பெண் குழந்தையின் பெயரில் 22,200 ரூபாய் வைப்புத் தொகையும், இரண்டு பெண் குழந்தைகள் இருந்தால் ஒவ்வொரு பெண் குழந்தையின் பெயரிலும் தலா 15,200 ரூபாயும் வைப்பீடு செய்யப்பட்டது. இந்தத் தொகை 20 ஆண்டுகள் கழித்து வட்டியுடன் திருப்பி அளிக்கப்படும். தற்போது இந்தத் தொகை முறையே 50,000 ரூபாய் என்றும், 25,000 ரூபாய் என்றும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் 1992 ஆம் ஆண்டு முதல் 1995 ஆம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்ட பெண் குழந்தைகள் பெறும் முதிர்வுத் தொகை குறைவாக உள்ளதைக் கருத்தில் கொண்டும்; இவர்களுக்கு தற்போது திருமண உதவித் திட்டத்தின் பயன் அளிக்கப்படவில்லை என்பதைக் கருத்தில் கொண்டும், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயன் பெறுபவர்களுக்கு மற்ற திருமண உதவி திட்டங்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்படி, இவர்களுக்கு 4 கிராம் தங்கத்துடன் கல்வித் தகுதிக்கேற்ப திருமண உதவித் தொகையும் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள பயனாளிகளின் வைப்புத் தொகைக்கான முதிர்வுத் தொகை அவர்கள் 20 வயது பூர்த்தி அடைந்தவுடன் வழங்கப்பட்டு வந்தது. இக்குழந்தைகளின் உயர் கல்விக்குப் பயனளிக்கும் வகையில், இந்த முதிர்வுத் தொகை இனிமேல் 18 வயது பூர்த்தி அடைந்தவுடன் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால், நடப்பு நிதி ஆண்டில் 30,000 பெண்கள் பயனடைவர்.

இதே போன்று, ஐந்து திருமண நிதியுதவித் திட்டங்களில், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான நிதியுதவித் திட்டம், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் மற்றும் ஈ.வே.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதியுதவித் திட்டம் ஆகியவற்றின் கீழ் நிதியுதவி பெற குடும்ப ஆண்டு வருமானம் 24,000 ரூபாய் என உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு 24,000 ரூபாயிலிருந்து 72,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாய் சேய் நலத்திற்கு வழிகாட்டும் திட்டமான ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ்

பணியாற்றும் அங்கன்வாடி உதவியாளர்களுக்கு சனிக்கிழமை அன்றும், அங்கன்வாடி பணியாளர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை அன்றும் விடுமுறை அளிக்கப்படுகிறது. அங்கன்வாடி உதவியாளர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்களின் பணிகள் முற்றிலும் மாறுபட்டு ஒருவரையொருவர் சார்ந்து இருப்பதாலும், ஒருவருடைய வேலையை மற்றொருவர் முழுமையாக செய்ய முடியாத சூழ்நிலை உள்ளதாலும், இவர்களுக்கு வெவ்வேறு நாட்களில் விடுமுறை அளிப்பது நடைமுறையில் சாத்தியமற்றதாக இருக்கிறது. இதனைக் கருத்தில் கொண்டும், ஞாயிற்றுக்கிழமை அனைவருக்கும் பொது விடுமுறை என்பதாலும், அங்கன்வாடி ஊழியர்கள் அனைவரும் தங்களது குடும்பத்துடன் வார இறுதி நாளை மகிழ்வுடன் செலவிடும் வகையில், அவர்கள் அனைவருக்கும் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை அளிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், அங்கன்வாடிகளில் சத்துணவு பெறும் 2 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கு ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட வேண்டிய சத்துணவு, வீட்டிற்கு எடுத்துச் செல்லும் வகையில் சமைக்கப்படாத உணவுப் பொருளாக குழந்தைகளின் பெற்றோர்களிடம் அங்கன்வாடி ஊழியர்களால் சனிக்கிழமை அன்றே வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், அங்கன்வாடி மையங்கள் மூலம் குழந்தைகள், வளர் இளம் பெண்கள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரின் எடையைக் கண்காணிக்கும் வகையில், தாய்மார்கள் மற்றும் வளர் இளம் பெண்களுக்காக 16,988 எடை பார்க்கும் கருவிகளும், குழந்தைகளுக்கான 11,333 எடை பார்க்கும் கருவிகளும், பச்சிளம் குழந்தைகளுக்காக 54,439 எடை பார்க்கும் கருவிகளும் 7 கோடியே 11 இலட்சத்து 89 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வாங்கி எடை கருவிகள் இல்லாத அங்கன்வாடி மையங்களுக்கு வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூக நலத் திட்டங்களின் கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கான ஓய்வூதியம் 1,000 ரூபாய் வழங்கப்பட்டுள்ள

நிலையில், அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்களுக்கான சிறப்பு ஓய்வூதியம் 1,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட வேண்டும் என்ற ஊழியர்களின் கோரிக்கையினை ஏற்று, அவர்களுக்கான சிறப்பு ஓய்வூதியம் 1,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் 56,830 சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் பயன் பெறுவர். இதற்காக 26 கோடியே 95 இலட்சம் ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் மகளிர் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்த வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

டெல்டா அல்லாத மாவட்டங்களுக்கு 1,754 கோடியே 86 இலட்சம் ரூபாய்க்கான நிவாரண உதவிகள்

19.04.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இயற்கை இன்னல்களாகிய வறட்சி, புயல், வெள்ளம் ஆகியவற்றிலிருந்து மக்களைக் காக்கும் முன்னேற்பாடுகளை மேற்கொள்வதிலும், இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தேவையான நிவாரணங்களை அளிப்பதிலும், முனைப்புடன் எனது தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

விவசாயிகளின் நலன்களுக்காகவும், விலைவாசியை கட்டுப்பாட்டிற்குள் வைப்பதற்காகவும் எனது தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மாதம் ஒன்றுக்கு 20 கிலோ விலையில்லா அரிசி; வெளிச் சந்தையில் விற்கப்படும் அரிசியின் விலையை கட்டுப்படுத்தும் வகையில் விலை நிலைப்படுத்தும் நிதியத்திலிருந்து 25 கோடி ரூபாய் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ஒதுக்கீடு; அரிசி விலையை உடனடியாக கட்டுப்படுத்த அமுதம் அங்காடிகள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் சிறப்பு அங்காடிகள் மூலம் 20 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டம்; சிறப்பு பொது விநியோக திட்டத்தின் கீழ், வெளிச்சந்தையில் 57 ரூபாய்க்கு விற்கப்படும் ஒரு லிட்டர் பாமாயில் 25 ரூபாய்க்கும், 76 ரூபாய்க்கு விற்கப்படும் ஒரு கிலோ துவரம் பருப்பு 30 ரூபாய்க்கும், 60 ரூபாய்க்கு விற்கப்படும் உளுத்தம்பருப்பு 30 ரூபாய்க்கும் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கும் திட்டம் ஆகியன செயல்படுத்தப்படுகின்றன.

இது மட்டுமல்லாமல் உரங்கள் மீதான மதிப்புக் கூட்டு வரியும், சமையல் எரிவாயு மீதான மதிப்புக் கூட்டு வரியும் முழுமையாக நீக்கப்பட்டுள்ளது. ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் 200 மலிவு விலை உணவகங்கள் சென்னை மாநகராட்சியால் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன.

2012 ஆம் ஆண்டு தமிழகத்தில் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை இயல்பை விட குறைவாக பெய்ததாலும், இடர்பாடு பங்கீட்டு முறையின்படி காவேரியில் நமக்குரிய பங்கினை அண்டை மாநிலமான கர்நாடகம் திறந்து விடாததாலும், சம்பா சாகுபடி பாதிப்பு ஏற்படும் என்பதை முன்கூட்டியே அறிந்து, சம்பா சாகுபடி பாதிப்பை குறைக்கும் வகையில் 68 கோடி ரூபாய் செலவில் புதிய உத்திகளைக் கையாளும் நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்தது. இது மட்டுமல்லாமல், 69 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில் கூடுதல் சிறப்பு உதவிகள் வழங்கப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக, டெல்டா மாவட்டங்களில் ஏற்பட்ட பயிர் பாதிப்புகளை நேரில் ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அளிக்கும் வகையில், மாண்புமிகு நிதியமைச்சர் தலைமையில் ஓர் உயர்மட்ட குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு டெல்டா மாவட்டங்களான நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், அரியலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகியவற்றில் கள ஆய்வு மேற்கொண்டு, தனது அறிக்கையை அரசுக்கு 31.1.2013 அன்று சமர்ப்பித்தது.

உயர்மட்டக் குழுவினுடைய அறிக்கையின் அடிப்படையில், சென்னையை தவிர இதர 31 மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் என்றும், இந்த மாவட்டங்களில் நிலவரி முழுமையாக தள்ளுபடி செய்யப்படும் என்றும், டெல்டா மாவட்டங்களில் 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் பாதித்துள்ள டெல்டா விவசாயிகளின் 3.61 இலட்சம் ஏக்கர் நெற்பயிர்களுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதி, பயிர்க் காப்பீட்டு நிவாரணம் மற்றும் காவேரி சிறப்பு கூடுதல் நிவாரணம் என மொத்தமாக ஏக்கர் ஒன்றுக்கு 15,000/– ரூபாய் வழங்கப்படும் என்றும் நான் தமிழ்நாடு

சட்டமன்றப் பேரவையில் அறிவித்தேன். இதற்கென 541 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. இதில், 524 கோடியே 25 இலட்சம் ரூபாய் அளவிற்கு 3,52,613 விவசாயிகளுக்கு நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

இது தவிர, விவசாயிகள் தங்கள் கடனை திரும்ப செலுத்துவதில் ஏற்பட்டுள்ள சிரமத்தினைக் கருத்தில் கொண்டு, அவர்கள் பெற்றுள்ள கூட்டுறவு கடன்கள் மாற்றியமைக்கப்படும், அதாவது reschedule செய்யப்படும் என்றும் நான் அறிவித்திருந்தேன். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இது மட்டுமல்லாமல், டெல்டா மாவட்டங்களில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், 1,517/– கோடி ரூபாய் அளவிற்கு வேலைவாய்ப்பு தரும் பணிகளை செயல்படுத்த நான் உத்தரவிட்டேன். டெல்டா மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள கால்நடை தீவனப் பற்றாக்குறையை போக்கும் வகையில் 47 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்களையும், குடிநீர் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில் 37 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்களையும் மேற்கொள்ள உத்தரவிட்டதோடு, தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் சென்னை தவிர இதர 31 மாவட்டங்களிலும் தற்போதுள்ள 100 நாட்கள் என்ற பணி வரம்பை 150 நாட்கள் என உயர்த்தவும் ஆணையிட்டேன். இந்தப் பணிகள் எல்லாம் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, டெல்டா அல்லாத ஏனைய மாவட்டங்களில் நிலவும் வறட்சி நிலையை நேரில் ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அளிக்கும் வகையில், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தலைமையில் ஓர் உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டது.

இந்தக் குழு 18 மாவட்டங்களில் தனது ஆய்வினை மேற்கொண்டதோடுமட்டுமல்லாமல்,உள்ளூர்விவசாயிகள்மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகளுடனும், மாவட்ட அலுவலர்களுடனும் கலந்துரையாடி அவர்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்தது.

மேற்கண்ட குழுவினரின் ஆய்வு மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட வறட்சி தொடர்பான அறிக்கைகளின் அடிப்படையில் டெல்டா அல்லாத ஏனைய மாவட்டங்களில் வறட்சியால் நெற்பயிர் உள்ளிட்ட பயிர் வகைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்பது எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், டெல்டா அல்லாத மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான சலுகைகளை நான் இந்த மாமன்றத்தில் அறிவிக்க விழைகின்றேன்.

1. மத்திய அரசின் பேரிடர் நிவாரண வரையறைப்படி 50 விழுக்காட்டிற்கும் மேல் நெற்பயிர் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 2,429 ரூபாய் மட்டுமே நிவாரணமாக வழங்க இயலும். எனினும், 50 விழுக்காட்டிற்கு மேல் நெற்பயிர் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு 5,000 ரூபாய் நிவாரணத் தொகை வழங்கப்படும். இதன்படி 50 விழுக்காட்டிற்கும் மேல் நெற்பயிர் மகசூல் பாதித்துள்ள சுமார் 6,25,481 விவசாயிகளின் 6,25,786 ஏக்கர் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 5,000/– ரூபாய் என்ற வீதத்தில் நிவாரணத் தொகை வழங்கப்படும். இதனால் அரசுக்கு 312 கோடியே 89 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

2. பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் காப்பீட்டு நிவாரணத் தொகையை பொறுத்த வரையில், டெல்டா மாவட்டங்களில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய கட்டணத்தை அரசே செலுத்தியதால், முழு நிவாரணத் தொகையை முன்கூட்டியே தமிழக அரசு வழங்கியது. இந்தத் தொகை பின்னர் காப்பீட்டு நிறுவனங்களால் அரசு கணக்கில் செலுத்தப்படும். டெல்டா அல்லாத இதர மாவட்டங்களைப் பொறுத்தவரை பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு காப்பீட்டு நிறுவனங்கள் காப்பீட்டுத் தொகையை நேரடியாக வழங்கும்.

3. பாசன ஆதாரமுள்ள நிலங்களில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்களைப் பொறுத்த வரையில், 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மத்திய அரசின் பேரிடர் நிவாரண வரையறைப்படி ஏக்கர் ஒன்றுக்கு 2,429 ரூபாய் மட்டுமே நிவாரணமாக வழங்க இயலும். இருப்பினும், தமிழக விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு 4,000 ரூபாய் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்படி, பாசன ஆதாரமுள்ள நிலங்களில் நெற்பயிர், நீண்டகால மற்றும் மல்பெரி அல்லாத பயிர்களை சாகுபடி செய்து 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் பாதித்துள்ள சுமார் 1,01,802 விவசாயிகளின் 1,25,386 ஏக்கர் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 4,000 ரூபாய் என்ற வீதத்தில் நிவாரணத் தொகை வழங்கப்படும். இதன்மூலம் அரசுக்கு 50 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

4. பாசன ஆதாரமற்ற நிலங்களில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்களைப் பொறுத்த வரையில், 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மானில பேரிடர் நிவாரண வரையறைப்படி ஏக்கர் ஒன்றுக்கு 1,215 ரூபாய் மட்டுமே நிவாரணமாக வழங்க இயலும். இருப்பினும், தமிழக விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு 3,000/– ரூபாய் என உயர்த்தி வழங்கப்படும். இதன்படி, பாசன ஆதாரமற்ற நிலங்களில் நெற்பயிர், நீண்டகால மற்றும் மல்பெரி அல்லாத இதர பயிர்களை சாகுபடி செய்து 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் பாதித்துள்ள 10,05,549 விவசாயிகளின் 14,14,126 ஏக்கர் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 3,000 ரூபாய் என்ற வீதத்தில் நிவாரணத் தொகை வழங்கப்படும். இதனால் அரசுக்கு 424 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

5. தென்னை உள்ளிட்ட நீண்ட காலப் பயிர்களைப் பொறுத்த வரையில், மத்திய அரசின் பேரிடர் நிவாரண வரையறைப்படி 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 3,239 ரூபாய் மட்டுமே நிவாரணமாக வழங்க இயலும். இருப்பினும், தமிழக விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு 4,000 ரூபாய் வழங்கப்படும். இதன்படி 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் பாதித்துள்ள தென்னை உள்ளிட்ட நீண்ட கால பயிர்களை சாகுபடி செய்த 50,908 விவசாயிகளின் 1,08,383 ஏக்கர் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 4,000 ரூபாய் என்ற வீதத்தில் நிவாரணத் தொகை வழங்கப்படும். இதன்மூலம் அரசுக்கு 43 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

6. இதே போன்று, மல்பெரி, அதாவது முசுக்கொட்டை சாகுபடி செய்து 50 விழுக்காட்டிற்கு மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகளின் பேரிடர் நிவாரண வரையறைப்படி ஏக்கர் ஒன்றுக்கு 1,296 ரூபாய் மட்டுமே நிவாரணமாக வழங்க இயலும். இருப்பினும், தமிழக விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு 3,000 ரூபாய் வழங்கப்படும். இதன்படி 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் பாதித்துள்ள மல்பெரி சாகுபடி செய்த 10,602 விவசாயிகளின் 15,262 ஏக்கர் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 3,000 ரூபாய் என்ற வீதத்தில் நிவாரணத் தொகை வழங்கப்படும். இதன்மூலம் அரசுக்கு 4 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

7. மொத்தத்தில், தமிழகத்தில் டெல்டா அல்லாத ஏனைய மாவட்டங்களில் வறட்சியால் 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டு பாதிக்கப்பட்டுள்ள 17,94,342 விவசாயிகளுக்கு 835 கோடியே 21 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்படும்.

8. இது தவிர, வறட்சி காரணமாக ஏற்படும் கால்நடைத் தீவன பற்றாக்குறையைத் தீர்க்கும் வகையில், டெல்டா அல்லாத ஏனைய மாவட்டங்களில் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை வாயிலாக 6 கோடியே 25 இலட்சம் ரூபாய்க்கு பசுந்தீவனம், 18 கோடியே 40 இலட்சம் ரூபாய்க்கு உலர்தீவனம் என 24 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

9. வறட்சி காரணமாக டெல்டா அல்லாத ஏனைய பகுதிகளில் ஏற்பட்டுள்ள குடிநீர் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், முதல் கட்டமாக 40 கோடி ரூபாய் மதிப்பில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மூலம் நகராட்சிகளிலும், 20 கோடி ரூபாய் மதிப்பில் பேரூராட்சிகளிலும், 40 கோடி ரூபாய் மதிப்பில் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் மூலம் கிராமப் புறங்களிலும், 25 கோடி ரூபாய் மதிப்பில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம் மூலம் சென்னையிலும், 20 கோடி ரூபாய் மதிப்பில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமும், ஆக மொத்தம் 145 கோடி ரூபாய் மதிப்பில் குடிநீர் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

10. தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை வாயிலாக 750 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 50,000 பண்ணைக் குட்டைகள் டெல்டா அல்லாத இதர மாவட்டங்களில் அமைக்கப்படும்.

டெல்டா அல்லாத இதர மாவட்டங்களுக்கென தற்போது 1,754 கோடியே 86 இலட்சம் ரூபாய்க்கான நிவாரண உதவிகளை நான் அறிவித்துள்ளேன். இந்தியாவிலேயே வறட்சிக்காக நிவாரண உதவிகள் வழங்கப்படுவது இதுதான் முதன்முறை என்பதை இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

இதுவன்றி, வறட்சி கோரிக்கை மனு, அதாவது Drought Memorandum ஒன்று மத்திய அரசுக்கு உடனடியாக அனுப்பப்படும். இந்த வறட்சி கோரிக்கை மனுவில்,

வேளாண்மைத் துறையில் உற்பத்தி இழப்பு ஏற்பட்டதற்காக 9,286 கோடியே 20 இலட்சம் ரூபாய்; விவசாயிகள் பெற்ற கூட்டுறவுக் கடன்களை மாற்றியமைத்த வகையில் கூட்டுறவுத் துறைக்கு 182 கோடியே 10 இலட்சம் ரூபாய்; விவசாயிகளுக்கு பயிரிழப்பு நிவாரணம் வழங்கிய வகையில் மாநில அரசுக்கு ஏற்பட்ட செலவினத்திற்காக 1,376 கோடியே 71 இலட்சம் ரூபாய்; வேளாண்மைத் தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்பு உறுதித் திட்டங்களுக்காக 2,424 கோடியே 47 இலட்சம் ரூபாய்; தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு இழப்பீடாக 2,661 கோடியே 32 இலட்சம் ரூபாய்; வன விலங்குகளைப் பாதுகாப்பதற்காக 5 கோடி ரூபாய்; குடிநீர் வழங்கல் பணிகளுக்காக 1,195 கோடியே 79 இலட்சம் ரூபாய்; கால்நடைப் பராமரிப்புத் துறைக்கென 247 கோடியே 16 இலட்சம் ரூபாய்; பண்ணைக் குட்டை மீன் வளர்ப்புக்கென 12 கோடியே 47 இலட்சம் ரூபாய்; பொதுப்பணித் துறையின் நீர்வள ஆதார அமைப்பிற்கென 1,390 கோடியே 31 இலட்சம் ரூபாய்; ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட மையங்கள் மற்றும் சத்துணவு மையங்களில் உள்ள குழந்தைகளுக்கு கூடுதல் சத்துணவு வழங்க 333 கோடியே 60 இலட்சம் ரூபாய்; பொது விநியோகத் திட்டத்திற்கென 7.92 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி மற்றும் 550 கோடி ரூபாய்; என மொத்தம் 19,665 கோடியே 13 இலட்சம் ரூபாய்க்கான நிவாரண கோரிக்கைகள் அடங்கும்.

மேற்காணும் எனது தலைமையிலான அரசின் நடவடிக்கைகள் விவசாயிகளின் வாழ்வில் விடியலை ஏற்படுத்த வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்க உறுப்பினர்களுக்கு வட்டிச் சலுகைத் திட்டம் மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிப்பு

22.04.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நகர்ப்புற மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் வசிக்கும் ஏழை, எளிய மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றான வீட்டு வசதியை பூர்த்தி செய்வதில் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் முக்கியப் பங்கினை வகிக்கின்றது.

இந்த வீட்டு வசதி இணையம், இதனுடன் இணைக்கப்பட்டுள்ள 619 நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் மற்றும் 197 வட்டக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கு வீடுகள் கட்டத் தேவைப்படும் நிதி உதவியை மாநில அரசின் பொறுப்புறுதியின் பேரில் ஆயுள் காப்பீட்டுக் கழகம், ஹட்கோ நிறுவனம், தேசிய வீட்டு வசதி வங்கி, வீட்டு வசதி மேம்பாட்டு நிதிக் கழகம், வணிக மற்றும் கூட்டுறவு வங்கிகளிடம் இருந்து பெற்று வழங்கி வந்தது.

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் செலுத்த வேண்டிய தொகை அரசு அளித்துள்ள பொறுப்புறுதியின் பேரில் அரசே தவணைத் தொகையை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனை தவிர்க்கும் பொருட்டு, கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களில் கடன் வசூல் செய்யப்படும் தொகை முழுவதும் நிதி நிறுவனங்களுக்கு செலுத்தப்பட வேண்டும் என்றும், கடன் வசூல் முன்னேற்றம் அடையும் வரையில் புதிய கடன் வழங்கக் கூடாது என்றும் 2009 ஆம் ஆண்டு தி.மு.க. அரசால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன் காரணமாக, கடந்த நான்கு ஆண்டுகளாக கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் செயல்படாத நிலைக்கு தள்ளப்பட்டதோடு, நல்ல முறையில் செயல்படும் சங்கங்களும் பெரும் பாதிப்புக்கு உள்ளாயின. பணியாளர்களுக்கு சம்பளம் கூட வழங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளாக புதிய கடன்கள் வழங்கப்படாததாலும், கடன் வசூல் பணி மட்டுமே நடைபெற்றதாலும் 1.9.2009 அன்று 2,136 கோடி ரூபாயாக இருந்த தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்தின் கடன் நிலுவை தற்போது 1,280 கோடி ரூபாயாக குறைந்துள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்தின் பணியை மேம்படுத்தும் வகையில், 2012–2013 ஆம் நிதி ஆண்டில் வட்டித் தள்ளுபடி சலுகைத் திட்டம் ஒன்றை எனது தலைமையிலான அரசு அறிமுகப்படுத்தியது. இதன்படி, கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள குறைந்த வருவாய் பிரிவினருக்கு 75 விழுக்காடு வட்டித் தள்ளுபடியும், 100 விழுக்காடு அபராத வட்டித் தள்ளுபடியும்; நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு 50 விழுக்காடு வட்டித் தள்ளுபடியும், 100 விழுக்காடு அபராத வட்டித் தள்ளுபடியும்; உயர் வருவாய் பிரிவினருக்கு 25 விழுக்காடு வட்டித் தள்ளுபடியும், 100 விழுக்காடு அபராத வட்டித் தள்ளுபடியும் அளிக்கப்பட்டது. இந்தத் திட்டம் 31.3.2013 வரை செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 34,863 பயனாளிகள் 317 கோடியே 6 இலட்சம் ரூபாய் அளவுக்கு வட்டிச் சலுகை பெற்றுள்ளார்கள்.

இதில் அபராத வட்டித் தொகையான 196 கோடியே 26 இலட்சம் ரூபாயை கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் ஏற்றுக் கொண்டுள்ளன. வட்டித் தொகையான 120 கோடியே 80 இலட்சம் ரூபாயை தமிழக அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த வட்டித் தள்ளுபடித் திட்டத்தின் மூலம் கடன் வசூல் 2 விழுக்காட்டிலிருந்து 32 விழுக்காடாக உயர்ந்துள்ளது. கடன் வசூலில் 699 சங்கங்கள் 50 விழுக்காடு வரையிலும், 45 சங்கங்கள் 51 விழுக்காடு முதல் 99

விழுக்காடு வரையிலும், 72 சங்கங்கள் 100 விழுக்காட்டினையும் எய்தியுள்ளன. வசூல் செய்த தொகை 354 கோடியே 44 இலட்சம் ரூபாய் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. 100 விழுக்காடு கடன் வசூல் எய்தியுள்ள 72 சங்கங்கள் மீண்டும் உறுப்பினர்களுக்கு கடன் வழங்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு உள்ளன.

31.3.2013–இல் தவணை தவறிய உறுப்பினர்கள் 88,356 பேர் உள்ளனர். இவர்களிடமிருந்து தவணை தவறிய அசலாக 633 கோடியே 73 இலட்சம் ரூபாய், வட்டியாக 673 கோடியே 67 இலட்சம் ரூபாய், அபராத வட்டியாக 543 கோடியே 10 இலட்சம் ரூபாய் என மொத்தம் 1,850 கோடியே 50 இலட்சம் ரூபாய் வசூலிக்க வேண்டியுள்ளது.

கூட்டுறவு வீட்டு வசதி சங்க உறுப்பினர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, 31.3.2013 வரை வழங்கப்பட்ட வட்டி சலுகைத் திட்டம் மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வட்டிச் சலுகை திட்டத்திற்கு நடப்பாண்டில் 269 கோடியே 21 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும். இந்த வட்டிச் சலுகை காரணமாக எஞ்சியுள்ள 744 சங்கங்களும் விரைவில் உறுப்பினர்களுக்கு கடன் வழங்க வழிவகை ஏற்படும்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டவர்கள் அதற்கான தவணைத் தொகையை சரிவர செலுத்தாததன் காரணமாக வட்டி, அபராத வட்டி ஆகியவை சேர்ந்து அவர்கள் செலுத்த வேண்டிய தொகை அதிகரித்தது. இவர்களுக்கும் வட்டிச் சலுகை அளிக்கும் விதத்தில் மாதத் தவணைக்கான அபராத வட்டி தள்ளுபடி, வட்டி முதலாக்கத்தின் மீதான வட்டி தள்ளுபடி, நிலத்திற்கான இறுதி நிலை வித்தியாசத் தொகையில் ஒவ்வொரு ஆண்டிற்கும் 5 மாத வட்டி தள்ளுபடி, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்கான ஒதுக்கீடுகளுக்கு விலையில் நடைமுறையில் உள்ள 10 விழுக்காடு தொகைக்கு மட்டும் வட்டி வசூலிக்க

ஆணை என பல்வேறு சலுகைகள் 28.9.2012 முதல் 27.3.2013 வரை அளிக்கப்பட்டன. இதன் மூலம், 6,730 ஒதுக்கீட்டாளர்கள் பயனடைந்தனர். இவர்கள் அனைவருக்கும் கிரயப் பத்திரம் வழங்கப்பட்டுவிட்டது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமும் ஒதுக்கீடுதாரர்களிடமிருந்து 150 கோடி ரூபாய் வசூலித்துள்ளது. இன்னமும் கிரயப் பத்திரம் வழங்கப்படாமல் உள்ள 45,939 ஒதுக்கீட்டாளர்கள் பயன்பெறும் வகையில், இந்த வட்டிச் சலுகைத் திட்டம் மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்காணும் தமிழக அரசின் நடவடிக்கைகளால் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள நகர்ப்புற மற்றும் கிராமப்புற ஏழை, எளிய, நடுத்தர மக்களின் கடன் சுமை குறையும் என்பதையும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களுக்கு கிரயப் பத்திரம் கிடைக்க வழிவகுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

தமிழகம் விரைவில் மின் மிகை மாநிலமாக மாறும் !

25.04.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேளாண் வளர்ச்சிக்கும், தொழில் மேம்பாட்டிற்கும், இளைய சமுதாயத்தினர் முன்னேற்றம் அடைவதற்கும் முக்கிய காரணியாக விளங்குவது, மாறி வரும் இன்றைய நவீன வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்திருக்கும் மின்சாரம் என்று சொன்னால் அது மிகையாகாது.

இப்படிப்பட்ட இன்றியமையாத் தன்மை வாய்ந்த மின்சாரத்தின் தேவை தமிழ்நாட்டில் அதிகரித்துக் கொண்டே செல்வதைக் கருத்தில் கொண்டு, தமிழகத்தை மின் மிகை மாநிலமாக மீண்டும் மாற்றிட வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன், மின் உற்பத்தியை பெருக்குதல், மின் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல், மின் தொடரமைப்புகளை நிறுவுதல், மின் அனுப்புகை மற்றும் மின் பகிர்மானத்தை விரிவாக்குதல் ஆகிய பணிகளை எனது தலைமையிலான அரசு முனைப்புடன் மேற்கொண்டு வருகிறது.

எனது அரசு பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுகளுக்குள் 606.5 மெகாவாட் அளவுக்கான மின் உற்பத்தி திறன் கூடுதலாக சேர்க்கப்பட்டு உள்ளது. நான் ஏற்கெனவே அறிவித்திருந்தபடி, மேட்டூர் அனல் மின் நிலையம், வடசென்னை அனல் மின் நிலைய இரண்டாவது நிலையின் முதல் அலகு மற்றும் வல்லூர் கூட்டு மின் திட்டத்தின் இரண்டாவது அலகு ஆகிய புதிய மின் உற்பத்தி நிலையங்கள் முழு உற்பத்தித் திறனை எட்டும் நிலையில் உள்ளன.

வட சென்னை அனல் மின் திட்டத்தின் அடுத்த அலகு மே மாதம் முதல் தனது உற்பத்தியைத் தொடங்க உள்ளது.

வல்லூர் கூட்டு மின் திட்டத்தின் மூன்றாவது அலகு வருகின்ற அக்டோபர் மாதம் முதல் தனது உற்பத்தியைத் தொடங்க உள்ளது. தூத்துக்குடி கூட்டு மின் திட்டத்தின் 500 மெகாவாட் திறன் கொண்ட இரு அலகுகள் முறையே வருகின்ற டிசம்பர் மற்றும் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் முதல் உற்பத்தியைத் தொடங்க உள்ளன.

இது மட்டுமல்லாமல், நான் ஏற்கெனவே அறிவித்தபடி 660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் விரிவாக்கத் திட்டம் அமைப்பதற்கான சர்வதேச ஒப்பந்தப் புள்ளிகள் கோரிப் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளன. 2 x 660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் சிறப்புப் பொருளாதார மையத் திட்டம் மற்றும் 2x660 மெகாவாட் திறன் கொண்ட உடன்குடி அனல் மின் திட்டம் ஆகியவற்றிற்கான ஒப்பந்தப் புள்ளிகளும் கோரப்பட்டுள்ளன. ராமநாதபுரம் மாவட்டம் உப்பூரில் 2 x 800 மெகாவாட் திறன் கொண்ட மின் நிலையம் அமைக்கப்படுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

மின்சார உற்பத்தியில் தன்னிறைவு பெற்றால் தான் தமிழகம் தலை சிறந்த மாநிலமாக விளங்க முடியும் என்பதை நன்கு உணர்ந்துள்ள எனது தலைமையிலான அரசு, அதனை எய்தும் வகையில் செயல்படுத்தப்பட உள்ள மின் திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

நீலகிரி மாவட்டத்தில், 7,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2,000 மெகாவாட் மின் திறன் கொண்ட சில்லஹல்லா நீரேற்று புனல் மின் திட்டம் உருவாக்கப்படும். இந்தத் திட்டம் இரண்டு கட்டங்களாக செயல்படுத்தப்படும்.

முதற்கட்டமாக, குந்தா நதியின் துணை நதியான சில்லஹல்லா ஆற்றின் குறுக்கே, 90.8 மீட்டர் உயரத்திற்கு 2.25 டி.எம்.சி. அடி கொள்ளளவு கொண்ட 'சில்லஹல்லா மேல் நீர்த்தேக்கம்' நிறுவப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ள 5.5 டி.எம்.சி அடி கொள்ளவு கொண்ட அவலாஞ்சி–

எமரால்டு நீர்த்தேக்கங்களுடன் இணைக்கப்படும். இதனை இணைப்பதற்காக 2750 மீட்டர் நீளமுடைய சுரங்க நீர்வழித் தடம் Tunnel அமைக்கப்படும்.

இரண்டாவது கட்டமாக, உத்தேசிக்கப்பட்டுள்ள சில்லஹல்லா நீர்த் தேக்கத்திற்கும், பில்லூர் நீர்தேக்கத்திற்கும் இடையே உள்ள 1,500 மீட்டர் உயரத்தைப் பயன்படுத்தி 2,000 மெகாவாட் மின் உற்பத்தி செய்யக் கூடிய மின் நிலையம் அமைக்கப்படும்.

இந்த மின் நிலையம், நிலத்தடி மின் நிலையமாக, அதாவது Underground Power Station ஆக அமையும். மின் உற்பத்திக்குப் பின் உபயோகப்படுத்தப்பட்ட நீர், கடைவாயில் சுரங்கம், அதாவது Tailrace Tunnel வழியாக பில்லூர் நீர்த்தேக்கத்தை அடையும். நிலத்தடி மின் நிலையத்தை அடைய அணுகு சுரங்க வழி, அதாவது Approach Tunnel அமைக்கப்படும். இத்திட்டம் நிறைவு பெற சுமார் 8 முதல் 10 ஆண்டுகள் ஆகும்.

மேலும் இத்திட்டம், அதிகரித்து வரும் காற்றாலை மின் உற்பத்தி, நிறுவப்படவுள்ள சூரிய மின் உற்பத்தி மற்றும் இரவு நேரங்களில் அனல் மற்றும் அணு மின் நிலையங்களில் மிகையாகக் கிடைக்கப் பெறும் மின்சாரத்தை சேமித்து வைக்கும் விதமாக, இந்த உபரி மின்சாரத்தைப் பயன்படுத்தி கீழ் நீர்த் தேக்கத்திலிருந்து மேல் நீர்த்தேக்கத்திற்கு நீர் ஏற்றி வைக்கப்படும். அவ்வாறு ஏற்றித் தேக்கப்பட்ட நீரையே பயன்படுத்தி உச்ச மின் தேவை காலங்களில் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்படும்.

மின்சாரத்தை உற்பத்தி செய்தால் மட்டும் போதாது, மின் விநியோகமும் சீராக இருக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டின் மின் கட்டமைப்பையும், தொடரமைப்பையும் வலுப்படுத்த 5,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருதிட்டம்தயாரிக்கப்பட்டுள்ளது.இத்திட்டத்தினைசெயல்படுத்த ஜப்பானிய நிறுவனம் 3,572 கோடி ரூபாய் கடன் உதவி வழங்கும். இந்தக் கடன் சிறப்பினமாகக் கருதப்பட்டு ஆண்டு ஒன்றிற்கு 0.55 சதவீத சலுகை வட்டியைக் கொண்டிருக்கும். மேலும் இந்தக்

கடன் தொகையை, கடன் பெற்ற 10 ஆண்டுகள் கழித்து 20 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தலாம். இதன் மூலம் மாநிலத்தின், குறிப்பாக சென்னையின் மின் கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டு சீரான மின் விநியோகம் உறுதிபடுத்தப்படும்.

ஜப்பான் சர்வதேசக் கூட்டுறவு நிறுவனத்தின் நிதி உதவி மூலம், 2,750 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5 புதிய 400 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையங்கள் மற்றும் அதற்குரிய மின்தொடர் பாதைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். இந்தப் புதிய மின் நிலையங்கள் சென்னையில் கிண்டி, கொரட்டூர், மணலி மற்றும் ஒட்டியம் பாக்கத்திலும், கோவையில் காரமடையிலும் அமைக்கப்படும்.

இது மட்டுமல்லாமல், 822 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 230 கிலோ வோல்ட் திறன் கொண்ட 14 புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இந்தத் துணை மின் நிலையங்கள் சென்னையில் ஆலந்தூர், அம்பத்தூர் மூன்றாவது பிரதான சாலை, சென்னை சென்ட்ரல், ராஜா அண்ணாமலைபுரம் மற்றும் மின்சார வாரியத் தலைமையகம் ஆகிய இடங்களிலும்; திருப்பூர் மாவட்டம் திருப்பூர் மற்றும் கருவலூர்; மதுரை மாவட்டம் கிண்ணிமங்கலம்; தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம்; அரியலூர் மாவட்டம் பொய்யூர்; திருவண்ணாமலை மாவட்டம் புரிசை; விருதுநகர் மாவட்டம் சவ்வாஷ்புரம்; ஈரோடு மாவட்டம் செண்பகபுதூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் அமைக்கப்படும்.

தென் மாநிலங்களுக்கு இடையே மின் பகிர்மாற்றம் செய்யும் வகையில் வேலூர் மாவட்டம் திருவலத்தில் 765 கிலோ வோல்ட் திறன் கொண்ட ஒரு புதிய துணை மின் நிலையம் இந்திய மின் தொடரமைப்பு நிறுவனத்தால் அமைக்கப்பட்டு வருகிறது. இதனைப் பயன்படுத்தி, பிற மாநிலங்களிலிருந்து அதிக அளவு மின்சாரத்தை பெற ஏதுவாக, திருவலத்தில் சுமார் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையமும் அதற்கான மின் தொடர்களும் அமைக்கும் பணிகள் இந்த ஆண்டு துவங்கப்படும்.

காற்றாலை மற்றும் சூரிய சக்தி மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை வெளிக் கொணர்ந்து அதனை மாநிலத்தின் மற்ற பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்கோ, இந்த வகை மின்சாரம் அதிக அளவில் உற்பத்தியாகும் நேரங்களில் உபரி மின்சாரத்தை செலுத்தும் வகையிலோ, தேவையான மின் தொடரமைப்பு இல்லாத காரணத்தால் இந்த மின்சாரத்தை முழுமையாகப் பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. இந்தக் குறையை நிவர்த்தி செய்யும் வகையில், மாநிலத்தின் தென் பகுதியில் உற்பத்தியாகும் காற்றாலை மின்சாரத்தை முழுமையாகப் பயன்படுத்தும் விதத்தில் 2,300 கோடி ரூபாய் செலவில் தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறிலிருந்து சென்னைக்கு 1,488 சுற்று கிலோ மீட்டர் நீளத்திற்கு 400 கிலோ வோல்ட் மின் தொடர்பாதை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதே போன்று, 1,230 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோவை, உடுமலைப்பேட்டை மற்றும் தேனி பகுதிகளில் உற்பத்தியாகும் காற்றாலை மின்சாரத்தைக் கொண்டு செல்லும் வகையில் தேனி மாவட்டத்தில் தப்பகுண்டு, மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆனைக்கடவு மற்றும் ராசிபாளையம் ஆகிய இடங்களில் புதிய 400 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையங்கள் அமைக்கும் பணிகளும், அவற்றை இணைத்து 788 சுற்று கிலோ மீட்டர் நீளமுடைய 400 கிலோ வோல்ட் மின்தொடர் பாதை அமைக்கும் பணிகளும் தொடங்கப்படும்.

திருநெல்வேலி மாவட்டம், கானார்பட்டியில் 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மற்றுமொரு 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்கப்படும்.

இது மட்டுமன்றி, காஞ்சிபுரம் மாவட்டம் ஒமேகா தொழிற்பூங்கா, திருவள்ளூர் மாவட்டம் திருவேற்காடு ஆகிய இரண்டு இடங்களில் புதிய 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களும்; சென்னை கோடம்பாக்கம் மற்றும் திருமங்கலம் தெற்கு;திண்டுக்கல்மாவட்டம்ஏழுவானம்பட்டிமற்றும்பாப்பம்பட்டி; கோயம்புத்தூர் மாவட்டம் குரு நல்லிபாளையம்; புதுக்கோட்டை மாவட்டம் மழையூர்; திருநெல்வேலி மாவட்டம் மேலப்பாளையம், நாங்குநேரி, மேலக்கல்லூர் மற்றும் பழையபேட்டை; வேலூர்

மாவட்டம் முகுந்தராயபுரம்; காஞ்சிபுரம் மாவட்டம் ஓமேகா தொழிற் பூங்கா, பெரும்பாக்கம் மற்றும் புதுத் தாங்கல்; கரூர் மாவட்டம் பள்ளப்பட்டி; தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம்; ஈரோடு மாவட்டம் தாளவாடி; திருவண்ணாமலை மாவட்டம் விண்ணவனூர் மற்றும் வேலூர் ஆகிய 19 இடங்களில் 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களும்; ஈரோடு மாவட்டம் சிமிட்டஹள்ளி; கரூர் மாவட்டம் இ. கருங்கல்பட்டி மற்றும் செல்லிவலசு; தஞ்சாவூர் மாவட்டம் குருவிக்கரம்பை; காஞ்சிபுரம் மாவட்டம் இளையனூர் வேலூர், மேலபுடி மற்றும் இராமாபுரம்; திருநெல்வேலி மாவட்டம் நக்கல முத்தான்பட்டி; பெரம்பலூர் மாவட்டம் பென்னகோணம்; திருச்சி மாவட்டம் டி. ஆலை; தருமபுரி மாவட்டம் வி. முத்தாம்பட்டி ஆகிய இடங்களில் 11 புதிய 33 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களும் அமைப்பதற்கான பணிகள் இந்த ஆண்டு துவங்கப்படும்.

மொத்தத்தில், இந்த ஆண்டு 400 கிலோவோல்ட் திறன் கொண்ட 10 துணை மின் நிலையங்கள், 230 கிலோவோல்ட் திறன் கொண்ட 16 துணை மின் நிலையங்கள், 110 கிலோவோல்ட் திறன் கொண்ட 19 துணை மின் நிலையங்கள் மற்றும் 33 கிலோவோல்ட் திறன் கொண்ட 11 துணைமின் நிலையங்கள் என மொத்தம் 56 துணை மின் நிலையங்கள் 8,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

புதிய மின் உற்பத்தி நிலையங்களை இயக்கி வைத்தல், புதிய மின் திட்டங்களைத் தொடங்குதல் மட்டுமல்லாது, பற்றாக்குறையை 85 சதவீதம் வரை ஈடு செய்யும் வகையில், நீண்ட கால அடிப்படையிலான ஒப்பந்தப் புள்ளிகள், அதாவது Case-1 bidding மூலம் மின் கொள்முதல் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த வகையில் முதல் கட்டமாக வருகின்ற அக்டோபர் மாதம் முதல் நீண்ட கால அடிப்படையில் 15 ஆண்டுகளுக்கு 1,000 மெகாவாட் மின்சாரம் கொள்முதல் செய்யப்படும்.

புதுப்பிக்கத் தக்க எரிசக்தித் துறையைப் பொறுத்த வரையில், இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக விளங்கும் தமிழ்நாட்டில் 7,140 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட காற்றாலைகள் நிறுவப்பட்டுள்ளன.

சூரிய சக்தியைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்வதிலும் தமிழ்நாடு முன்னிலையில் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் மூன்றாண்டுகளில் 3,000 மெகாவாட் அளவிற்கு சூரிய ஒளி மூலம் மின் உற்பத்திச் சாதனங்கள் மற்றும் நிலையங்கள் நிறுவப்பட வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தேன். சூரிய ஒளி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதை ஒரு மக்கள் இயக்கமாக செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. வீட்டு மின் உபயோகிப்பாளர்கள் வீட்டு மேற்கூரையில் சூரிய ஒளி மின் உற்பத்திச் சாதனங்களைப் பொருத்தி மின் உற்பத்தி செய்வதன் மூலம் அதிக அளவில் மின்சார உற்பத்தி இலக்கை அடைய முடியும் என கண்டறிந்தேன். இதனை ஊக்குவித்து பெரும்பாலான வீட்டு மின் உபயோகிப்பாளர்கள் முன் வந்து இச்சாதனங்களைப் பொருத்தும் வகையில் அத்தகைய வீட்டு மின் உபயோகிப்பாளர்களுக்கு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் வழங்கி வரும் 30 சதவீத மானியத்துடன் கூடுதலாக தமிழக அரசின் சார்பில் உற்பத்திச் சார்ந்த ஊக்கத் தொகையும் வழங்க ஆணையிட்டிருந்தேன். இதன்படி, இந்த வீட்டுக் கூரை மின் உற்பத்திச் சாதனங்கள் மூலம் உற்பத்தியாகும் மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றிற்கு முதல் இரண்டு ஆண்டுகளுக்கு இரண்டு ரூபாயும், அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு ரூபாயும், மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு 50 பைசாவும் ஊக்கத் தொகையாக வழங்கப்படும் என அறிவித்து இருந்தேன். தற்போது தமிழக அரசின் சார்பில் முதலீட்டு மானியம் வழங்குமாறு கோரிக்கைகள் வந்துள்ளதை ஏற்று, ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள உற்பத்திச் சார்ந்த ஊக்கத் தொகை அல்லது கிலோவாட் ஒன்றிற்கு 20,000 ரூபாய் முதலீட்டு மானியம் மேற் கூரையில் சாதனங்களைப் பொருத்தி மின் உற்பத்தி செய்யும் வீட்டு மின் உபயோகிப்பாளர்களுக்கு வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின் முதல் கட்டமாக 10,000 வீட்டு மின் நுகர்வோர் பயன் பெறுவர்.

தமிழ்நாடு மின் வாரியத்தில் ஏறத்தாழ 2.2 இலட்சம் மின்மாற்றிகள் பொருத்தப்பட்டு நுகர்வோர்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ 10

இலட்சம் புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. மின் நுகர்வோர்களுக்கு சீரான மின்சாரம் வழங்கவும், புதிய பயனீட்டாளர்களுக்கு தாமதமின்றி மின் இணைப்புகள் வழங்கிடவும், பழுதான மின்மாற்றிகளை மாற்றிடவும் புதிய மின் மாற்றிகளை கொள்முதல் செய்தல் மிகவும் அவசியமாகிறது. இதுவரை ஆண்டொன்றிற்கு சராசரியாக 10,000 மின்மாற்றிகளுக்கும் குறைவாகவே வாங்கப்பட்டு வந்துள்ளது. மின் மாற்றிகள் பற்றாக்குறை காரணமாக மின் நுகர்வோர்கள் அதிக பாதிப்புக்கு உள்ளாவதாக அறிகிறேன். இதனைக் களையும் பொருட்டு இதுவரை இல்லாத அளவாக 500 கோடி ரூபாய் செலவில் 20,000 புதிய மின் மாற்றிகள் கொள்முதல் செய்யப்படும்.

மின்சாரத்திற்கான தேவை அதிகரித்து வரும் நிலையில் நுகர்வோர்களுக்கு சீரான மின்சாரத்தை உறுதி செய்யும் பொருட்டு புதிய உயர்வழுத்த மற்றும் தாழ்வழுத்த மின் வழித் தடங்கள் அமைக்க வேண்டியது அவசியமாகும். இந்த ஆண்டு 850 கோடி ரூபாய் செலவில் 15,000 கிலோ மீட்டர் நீளத்திற்கு புதிய உயர்வழுத்த மற்றும் தாழ்வழுத்த மின் வழித் தடங்கள் அமைக்கப்படும்.

இந்தியாவிலேயே 100 சதவீதம் மின் வசதி, அதாவது 100% Electrification பெற்றுள்ள ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாக உள்ளது. தமிழ்நாட்டில் தற்போது சுமார் 2 கோடியே 40 இலட்சம் மின் இணைப்புகள் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. தாமதமின்றி உடனுக்குடன் மின் இணைப்பு வழங்கும் விதமாக இந்த ஆண்டு வீட்டு மின் இணைப்பு, விவசாய மின் இணைப்பு, வணிக மின் இணைப்பு, தொழிற்சாலை மின் இணைப்பு போன்ற 11 இலட்சம் புதிய மின் இணைப்புகள் வழங்கப்படும்.

மேற்காணும் நடவடிக்கைகள் மூலம், தமிழகம் விரைவில் மின் மிகை மாநிலமாக மாறும் என்பதோடு, மின் நுகர்வோருக்கு தடையற்ற சீரான மின்சாரம் வழங்குவது உறுதி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

வண்டலூரில் புதிய புறநகர் பேருந்து நிலையம்

30.04.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை மாநகர மக்கள் தொகை பெருக்கம், அதிகரித்து வரும் வெளி மாநில மற்றும் பிற மாவட்ட மக்களின் புழக்கம், பெருகி வரும் வாகனங்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் காரணமாக ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் வண்ணம் பேருந்து நிலையங்கள், சாலைகள், பாலங்கள் ஆகியவற்றை அமைப்பதில் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

சென்னை மாநகரில் நிலவி வரும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் வகையில், எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் கோயம்பேட்டில் சென்னைப் புறநகர்ப் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்தப் பேருந்து நிலையத்தில் ஒரே நேரத்தில் 180 பேருந்துகள் இயங்கவும், மேலும் 60 இயக்கத்தில் இல்லாத பேருந்துகளை நிறுத்தவும் வசதி செய்யப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டு காலத்தில் இந்தப் பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளது. தற்போது, தென் மாவட்டங்களுக்குச் செல்லும் 1,250 பேருந்துகள் உட்பட மொத்தம் 2,100 பேருந்துகள் தினம் சுமார் 2,900 தடவை இயக்கப்பட்டு வருகின்றன. இடப் பற்றாக்குறை காரணமாக இந்தப் பேருந்து நிலையத்தில் போக்குவரத்துக் கழகங்களுக்கான பணி மனைகள் அமைக்கப்படவில்லை. இதன் காரணமாக பேருந்து நிலையத்திற்குள் வரும் பேருந்துகள் நாள் முழுவதும் பேருந்து இயக்குமிடம் மற்றும் சாலை ஓரங்களிலேயே நிறுத்தப்படுவதால் பேருந்துகள் நிலையத்திலிருந்து வெளியே செல்ல நீண்ட நேரமாகின்றது. பண்டிகை மற்றும் விடுமுறை காலங்களில் பயணிகளின் வசதிக்காக அதிக அளவிலான பேருந்துகள் இயக்கப்படுவதால் பேருந்து நிலையத்திற்குள்ளும், சுற்றுப் பகுதிகளில் உள்ள முக்கிய சாலைப் பகுதிகளிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

சென்னைப் புறநகர்ப் பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள ஒப்பந்தப் பேருந்துகளுக்கான பேருந்து நிலையம், கோயம்பேடு மொத்த விற்பனை வணிக வளாகம் ஆகியவையும் போக்குவரத்து நெரிசலுக்கு முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன. இதன் காரணமாக, வாகனங்கள் செல்லும் வேகம் மணிக்கு 10 கிலோ மீட்டர் என்ற நிலையில் உள்ளது.

இந்தச் சூழ்நிலையில், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் உருவாக்கப்பட்டு வரும் மொத்த உணவு தானிய அங்காடி மற்றும் மெட்ரோ ரயில் நிலையங்கள் திறக்கப்பட்டால் போக்குவரத்து நெரிசல் மேலும் அதிகரிக்கும்.

கோயம்பேடு புறநகர்ப் பேருந்து நிலையத்தில் நிலவும் போக்குவரத்து நெரிசலைக் கருத்தில் கொண்டும், இங்கிருந்து செல்லும் பேருந்துகளில் பாதிக்கு மேல் தென் மாவட்டங்களுக்கு செல்பவையாக இருப்பதைக் கருத்தில் கொண்டும், தென் மாவட்டங்களிலிருந்து வந்து செல்லும் பேருந்துகளுக்கென தெற்கத்திய பெருஞ்சாலை மற்றும் வெளி வட்டச்சாலை ஆகியவற்றிற்கு இடையே வண்டலூர் – வாலாஜாபாத் மாநில நெடுஞ்சாலையை ஒட்டி வண்டலூர் ரயில் நிலையத்திற்கு அருகில் ஒரு புறநகர் பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வண்டலூரில் புதியதாக உருவாக்கப்படும் இந்த புறநகர் பேருந்து நிலையத்தில், புறநகர் பேருந்துகளை இயக்குவதற்கான இடம், மாநகரப் பேருந்துகளை இயக்குவதற்கான இடம், வாகனங்கள் நிறுத்துவதற்கு தேவையான இடம், போக்குவரத்து பணிமனை வசதிகள், இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம், பொதுமக்களுக்கு தேவையான உணவகங்கள், சிறு கடைகள், பொதுக் கழிப்பிட வசதி ஆகிய எல்லா வசதிகளும் ஏற்படுத்தித் தரப்படும்.

இத்திட்டத்தின் மூலம் கோயம்பேட்டின் தற்போதைய நெரிசல் விலகி பயணிகள் எளிதாகவும், வசதியாகவும், விரைவாகவும் பயணிக்க வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

ரூ.16,350 கோடி மதிப்பீட்டில் மின் திட்டங்கள்

30.04.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மின்சார உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவை எய்தும் வகையில் புதிய பல்வேறு மின் திட்டங்களின் விவரங்களை 25.4.2013 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ் நான் அறிவித்தேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் என்னால் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் மொத்த மதிப்பீட்டுத் தொகை பல்வேறு நாளிதழ்களில் வெவ்வேறு விதமாக வெளி வந்துள்ளன. எனவே, புதிய திட்டங்களின் மொத்த மதிப்பீட்டுத் தொகை என்ன என்பதை தமிழக மக்கள் சரியாக அறிந்து கொள்ளும் வகையில், கீழ்க்காணும் விவரங்களை இந்த மாமன்றத்தின் மூலம் தெரிவிக்க விழைகிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் 2,000 மெகாவாட் மின் திறன் கொண்ட சில்லஹல்லா நீரேற்று புனல் மின் திட்டம் 7,000 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்;

400 கிலோ வோல்ட் திறன் கொண்ட 10 துணை மின் நிலையங்கள், 230 கிலோ வோல்ட் திறன் கொண்ட 16 துணை மின் நிலையங்கள், 110 கிலோ வோல்ட் திறன் கொண்ட 19 துணை மின் நிலையங்கள், 33 கிலோ வோல்ட் திறன் கொண்ட 11 துணை மின் நிலையங்கள் என 56 துணை மின் நிலையங்கள் மற்றும் மின் தொடர் பாதைகள் அமைக்கும் திட்டம் 8,000 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்;

20,000 புதிய மின் மாற்றிகள் அமைக்கும் திட்டம் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; 15,000 கிலோ மீட்டர் நீளத்திற்கு புதிய உயர்வழுத்த மற்றும் தாழ்வழுத்த மின் வழித்தடங்கள் அமைக்கும் திட்டம் 850 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் செயல்படுத்தப்படும் என்று நான் அறிவித்து இருந்தேன்.

மொத்தத்தில், 16,350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்காணும் மின் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்ற விளக்கத்தை நான் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

❋ ❋ ❋

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் அகவிலைப்படி உயர்வு!

02.05.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசாங்கத்திற்கும், மக்களுக்கும் இடையே பாலமாக விளங்குபவர்கள் அரசு ஊழியர்கள். ஒரு மனிதனை மனிதன் என்று அடையாளப்படுத்தும் கல்வியையும், ஒழுக்கத்தையும் போதிக்கும் சேவைப் பணியை மேற்கொள்பவர்கள் ஆசிரியர்கள்.

இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த பணியினை மேற்கொள்ளும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும், அவர்களை ஊக்கப்படுத்தும் வகையிலும் பல்வேறு நடவடிக்கைகளை நான் எடுத்து வருகிறேன்.

மத்திய அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படியை 1.1.2013 முதல் அவர்களுடைய அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் எட்டு விழுக்காடு உயர்த்தி, தற்போதுள்ள 72 விழுக்காடிலிருந்து 80 விழுக்காடாக வழங்க மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது போல், தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான அகவிலைப்படியையும், அவர்களது அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் எட்டு விழுக்காடு உயர்த்திட நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அகவிலைப்படி உயர்வு உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்கள்; ஆசிரியர்கள்; வருவாய்த் துறையில் பணிபுரியும்

கிராம உதவியாளர்கள்; அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்கள்; ஊராட்சி உதவியாளர்; எழுத்தர்; ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் வழக்கமாக அகவிலைப்படி அளிக்கப்படும் அனைவருக்கும் பொருந்தும். இதனால் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் என சுமார் 18 இலட்சம் பேர் பயனடைவார்கள்.

இந்த அதிகரிக்கப்பட்ட அகவிலைப்படி 1.1.2013 முதல் கணக்கிடப்பட்டு ரொக்கமாக வழங்கப்படும்.

இந்த அகவிலைப்படி உயர்வு மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 1,639 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

1,000 வருவாய் கிராமங்களில் 97 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவில் 2 கோடி மரக் கன்றுகள்

02.05.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு நாட்டின் வளம், காட்டு வளத்தில் அடங்கியுள்ளது என்பதையும் காடுகளின் வளர்ச்சியால் மனித இனம் நன்மை அடைகிறது என்பதையும் உணர்ந்துள்ள எனது தலைமையிலான அரசுக் காடுகளை கண் போல் காக்கும் கடமையினைக் கண்ணும் கருத்துமாக ஆற்றி வருகிறது.

அந்த வகையில், வளம் மிக்க தமிழ்நாட்டின் வன வளங்களை வலுப்படுத்தும் வகையில், தமிழ்நாடு பல்லுயிர்ப் பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டத்தினை ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு நிறுவனத்தின் நிதி உதவியுடன் 686 கோடி ரூபாய் செலவில் 2011–2012 முதல் எனது தலைமையிலான அரசு தொடங்கியுள்ளது.

தமிழ்நாட்டில் தற்போது 10 வன உயிரின சரணாலயங்கள் உள்ளன. நாட்டிற்கு அழகையும், பொலிவையும் தரக் கூடியதும், மக்களுக்கு மிகுந்த பயனைத் தரக் கூடியதுமான வன விலங்குகளையும், பறவைகளையும் பாதுகாக்க மேலும் சரணாலயங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, 2013–2014 ஆம் ஆண்டில் மாநிலத்தில் வன உயிரினங்கள் அதிகமாக வாழும் பகுதிகளை இணைத்து, புதிதாக நான்கு வன உயிரின சரணாலயங்களை ஏற்படுத்த எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்படி தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள பகுதிகளை உள்ளடக்கி காவேரி வன உயிரின சரணாலயம், திருநெல்வேலி மாவட்டத்தில் கங்கைகொண்டான் புள்ளிமான் உயிரின சரணாலயம், நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் உள்ள பகுதிகளை உள்ளடக்கி கோடியக்கரை வன உயிரின சரணாலயம் மற்றும் திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் உள்ள பகுதிகளை உள்ளடக்கி கொடைக்கானல் வன உயிரின சரணாலயம் ஆகியவை ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாட்டைப் பசுமையாக்கும் வகையில், தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டத்தின் கீழ் 2013–2014ஆம் ஆண்டில் 1,000 வருவாய் கிராமங்களில் தனியார் தரிசு நிலங்கள் மற்றும் விவசாய நிலங்களில் ஊடு பயிர்களாக 97 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவில் 2 கோடி மரக் கன்றுகள் நடப்படும்.

மேலும், ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு நிறுவனத்தின் கடன் தொகையில் எஞ்சியுள்ள 107 கோடியே 96 இலட்சம் ரூபாயினைப் பயன்படுத்தி, தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை–2 பணிகளை 2013–2014 மற்றும் 2014–2015 ஆகிய இரண்டு ஆண்டுகளில் மேற்கொள்ளத் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், கூட்டு வன நிர்வாக அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள பயன்களை தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ளும் வகையிலும், ஏற்படுத்தப்பட்டுள்ள ஆதாரங்களை பராமரிக்கும் வகையிலும், கிராம வனக் குழு உறுப்பினர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி, உள்கட்டமைப்பு மற்றும் அமைப்பு ரீதியான மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாட்டில் வனங்களின் மேம்பாட்டிற்கும், வன வளங்களைப் பாதுகாக்கவும் பதின்மூன்றாவது நிதிக் குழுமம் 2010–2011ஆம் ஆண்டு முதல் 2014–2015 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு 142 கோடியே 48 இலட்சம் ரூபாயை மானியமாக வழங்கிடப் பரிந்துரை செய்துள்ளது. இந்த நிதியினைக் கொண்டு, நடப்பாண்டில் 35 கோடியே 62 இலட்சம்

ரூபாய் மதிப்பீட்டில் வனப் பராமரிப்பு பணிகளான உயிர்ப் பன்மைப் பாதுகாப்பு மற்றும் தீத்தடுப்பு மேலாண்மை, உள்கட்டமைப்பு வளர்ச்சி மற்றும் காடு வளர்ப்பு, கூட்டு வன மேலாண்மையினைப் பலப்படுத்துதல் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

இது மட்டுமல்லாமல், வனப் பகுதிகளிலிருந்து வெளியேறி மனித வாழ்விடங்கள் மற்றும் விவசாய நிலங்களில் யானைகளின் நடமாட்டத்தினைக் கட்டுப்படுத்த, யானை புகா அகழிகள் ஏற்படுத்துவது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, ஏற்கெனவே இதற்காக முதற்கட்டமாக கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு 4 கோடியே 30 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் எனது தலைமையிலான அரசால் ஒதுக்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக, தர்மபுரி, ஈரோடு, திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் யானைகள் தடுப்பு அகழிகள் அமைக்க 5 கோடியே 19 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. மூன்றாம் கட்டமாக வால்பாறை பகுதியில் தடுப்புக் குழிகள் அமைத்தல், எச்சரிக்கை மணி ஒலிக்கும் வசதி ஏற்படுத்திக் கொடுத்தல், யானைகள் விரும்பி உண்ணும் பயிர்களை வளர்த்தல் போன்றவற்றிற்காக 2 கோடியே 22 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில், காட்டு யானைகளால் எளிதில் பாதிப்பிற்கு உள்ளாகக் கூடிய பகுதிகள் கண்டறியப்பட்டு, 440 கிலோ மீட்டர் நீளத்திற்கு 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் யானை புகா அகழிகள் அமைக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

வனவளத்தைப் பாதுகாப்பதில் முக்கியப் பங்கு வகிப்பவர்கள் வனப் பணியாளர்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, 2011–2012 ஆம் ஆண்டில் வனப் பணியாளர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் இடர்படியினை காவல்துறை பணியாளர்களுக்கு இணையாக வழங்கும் வகையில், 60 ரூபாயாக வழங்கப்பட்டு வந்த இடர்படியை 270 ரூபாயாக உயர்த்தி எனது தலைமையிலான அரசு

வழங்கியது. இது மட்டுமல்லாமல், காவல் சிறப்பு அங்காடித் திட்டம் வனத் துறை சீருடைப் பணியாளர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. வனப் பணியாளர்களை மேலும் ஊக்குவிக்கும் வகையில், 2013–2014 ஆம் ஆண்டில் வனத் துறை பணியாளர்களுக்கு காவல் துறை பணியாளர்களுக்கு நிகராக, 2 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் சீருடை வழங்குதல், சலவைப்படி, இடர்படி ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் சுமார் 5,600 வனப் பணியாளர்கள் பயன் அடைவார்கள்.

மேற்காணும் எனது தலைமையிலான அரசின் நடவடிக்கைகள் வனப் பகுதிகள் வளமாக்கப்படவும், வனப் பணியாளர்கள் வளர்ச்சியுறவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

ரூ.50 கோடியில் பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி சாலைகள் மறுசீரமைக்கும் திட்டம்

02.05.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சமுதாயம் நலமாக அமையவும் பிணியற்ற மக்கள் பெருகவும் நலமுள்ள மனிதனும், வளமுள்ள நாடும் உருவாகவும் இன்றியமையாததாக விளங்குவது சுற்றுச் சூழல் என்று சொன்னால் அது மிகையாகாது. இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் பொருட்டு சுற்றுச் சூழல் துறை மூலமாகவும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாகவும் முனைப்பான திட்டங்களை எனது தலைமையிலான அரசு நிறைவேற்றி வருகிறது.

ஏரிகளை மறு சீரமைப்பு செய்தல், சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் வகையில் சிறப்புடன் செயல்படும் தொழிற்சாலைகளுக்கு விருதுகள் வழங்குதல், பிளாஸ்டிக் கழிவுகளை கணிசமான அளவு குறைக்கும் வகையில் பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு தார் சாலைகள் அமைத்தல், பிளாஸ்டிக் பொருட்களின் உபயோகத்தினை குறைத்து அவற்றை மறுசுழற்சி செய்ய பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் என பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு, ஊரகப் பகுதிகளில் 1,255 கிலோ மீட்டர் நீளமுள்ள தார்ச் சாலைப் பணிகளை மேற்கொள்வதற்காக, 2011–2012 மற்றும் 2012–2013 ஆம் ஆண்டுகளில் 153 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் 1,002 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைப் பணிகள் முடிவடைந்துவிட்டன. மீதமுள்ள சாலைப் பணிகள்

விரைவில் முடிக்கப்பட உள்ளன. இந்த ஆண்டும் 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள தார்ச் சாலைகள் பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நகரப் பகுதிகளை எடுத்துக் கொண்டால் 2011 ஆம் ஆண்டு 566 கிலோ மீட்டர் நீளமுள்ள பிளாஸ்டிக் தார்ச் சாலைகள் அமைக்க 153 கோடியே 61 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2012–2013 ஆம் ஆண்டில் 499 கிலோ மீட்டர் நீளமுள்ள பிளாஸ்டிக் தார்ச் சாலைகள் அமைக்க 219.58 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. இந்தப் பணிகள் எல்லாம் தற்போது நடைபெற்று வருகின்றன. 2013–2014 ஆம் ஆண்டில் 100 கிலோ மீட்டர் நீளத்திற்கு பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி சாலைகள் அமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இது மட்டுமல்லாமல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத் தக்க எரிசக்தி மேம்பாட்டு நிதியின் கீழ் 2011–2012 ஆம் ஆண்டில் 50 கோடி ரூபாய் செலவில் பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி 446 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலைகள் மறு சீரமைக்கப்பட்டன. 2012–2013 ஆம் ஆண்டில் 84 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் 577.70 கிலோ மீட்டர் நீளத்திற்கு பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி சாலைகளை மறு சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த பிளாஸ்டிக் சாலைகளின் தரம் சிறந்ததாகவும், மேம்பட்டதாகவும் உள்ளதால் 2013–2014 ஆம் ஆண்டிலும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிதியின் கீழ் 50 கோடி ரூபாய் செலவில் பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி சாலைகள் மறு சீரமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் பிளாஸ்டிக் கழிவுகள் முறையாக மறு பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படுவதுடன் சாலைகளின் தரமும் உயர்கிறது.

மேலும், சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத் தக்க எரிசக்தி மேம்பாட்டு நிதியின் கீழ் 50 கோடி ரூபாய் செலவில்

நுண்ணுயிரி மூலம் ஏரிகளில் உள்ள நீரினைத் தூய்மையாக்குதல் திட்டம், சோலை காடுகளில் உள்ள தாவரங்களை மறு உற்பத்தி செய்தல் திட்டம், உதகை ஏரிப் பாதுகாப்பு நிதி மற்றும் மன்னார் வளைகுடா உயிர்கோள் காப்பக அறக் கட்டளையின் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

சுற்றுச் சூழல் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்தில் துவங்கப்பட்ட தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 32 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 15 மாவட்ட ஆய்வகங்களுடன் தற்போது செயல்பட்டு வருகிறது. இந்த வாரியத்திற்கான தலைமை அலுவலகம் மற்றும் அரும்பாக்கம், அம்பத்தூர், வேலூர், ஓசூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் மறைமலை நகர் ஆகிய 9 மாவட்ட அலுவலகங்கள் சொந்த கட்டடங்களில் இயங்கி வருகின்றன. நடப்பாண்டில், சிவகங்கை, திண்டுக்கல், நாமக்கல் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் செயல்படும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மாவட்ட அலுவலகங்களுக்கு சொந்த அலுவலகக் கட்டடங்கள் 12 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், கடந்த 30 ஆண்டுகளாக இயங்கி வரும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வீட்டுக் கடன் வசதி இதுவரை வழங்கப்படவில்லை என்பது எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அவர்களின் கோரிக்கையை ஏற்று, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியப் பணியாளர்களுக்கு 2013–2014 ஆம் நிதியாண்டு முதல் வீட்டுக் கடன் வசதி ஏனைய அரசு ஊழியர்களுக்கு வழங்குவது போல் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் சுமார் 700 வாரியப் பணியாளர்கள் பயன் அடைவார்கள்.

இந்த அறிவிப்புகள் மாசுத் தொல்லையை கட்டுப்படுத்தவும், மாசுக் கட்டுப்பாடு வாரியப் பணியாளர்களின் வீட்டு வசதித் தேவையைப் பூர்த்தி செய்யவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

வேளாண் உற்பத்தியை அதிகரிக்கவும், விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கவும் ரூ.984 கோடியே 70 இலட்சம் மதிப்பில் திட்டங்கள்!

06.05.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாட்டின் முதன்மைத் தொழிலாகவும், ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாகவும், கிராமப்புறமக்களின் வாழ்வுக்கு ஆதாரமாகவும் விளங்குகின்ற வேளாண் தொழிலை மேம்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

நான் 2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதற்காக எடுத்த நடவடிக்கைகள் காரணமாக, உணவு தானிய உற்பத்தி 2011–2012 ஆம் ஆண்டில் 100 இலட்சம் டன் என்ற அளவினையும் கடந்து சாதனை படைத்தது. 10 இலட்சம் முதல் 100 இலட்சம் மெட்ரிக் டன் வரை உற்பத்தி உள்ள மாநிலங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ள மாநிலங்களிடையே உணவு தானிய உற்பத்தியில் தமிழகம் முதலிடத்தை பெற்றது. இதற்காக ''கிரிஷி கர்மான் விருதும்'' 2 கோடி ரூபாய் பரிசும் தமிழகத்திற்கு கிடைத்தது என்பதை இங்கு பெருமையுடன் நினைவுகூர விரும்புகிறேன்.

2012–2013 ஆம் ஆண்டில், பருவமழை பொய்த்து, கர்நாடகம் வஞ்சித்த நிலையிலும், சாகுபடி பாதிப்பைக் குறைக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் எனது அரசால் எடுக்கப்பட்டன. இந்தியாவிலேயே முதன் முறையாக வறட்சி காரணமாக 50 விழுக்காட்டிற்கு மேல் பயிர் பாதிப்பு ஏற்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், போதிய மழை இல்லாத காலங்களிலும் பயிர்களுக்கு நீர் கிடைக்க வகை செய்யும் வகையில், டெல்டா மாவட்டங்களில் 15,000 பண்ணைக் குட்டைகளும், இதர மாவட்டங்களில் 55,000 பண்ணைக் குட்டைகளும் அமைக்கப்படும் என நான் அறிவித்துள்ளதன் அடிப்படையில் தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் கிடைக்கும் நீரை சிக்கனமாக சேமித்து சாகுபடி செய்ய டீசல் எஞ்ஜின்களுடன் கூடிய 700 மழை தூவுவான் மற்றும் நகரும் தெளிப்பு நீர்ப்பாசன அமைப்புகள், அதாவது Rain gun and Mobile Sprinklers வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் குறைந்த வாடகைக்கு விவசாயிகளுக்கு வழங்கப்படும். இவை 57 கோடி ரூபாய் செலவில் வாங்கப்பட்டு, 350 வட்டாரங்களில், வட்டாரத்திற்கு இரண்டு என்ற அடிப்படையில் வழங்கப்படும்.

குறைந்துவரும் சாகுபடிப் பரப்பினால், உணவு உற்பத்தி பாதிக்கப்படும் சூழ்நிலையைத் தீவிரமாக ஆராய்ந்த எனதுத் தலைமையிலான அரசு, நடப்பாண்டில் 12,500 ஏக்கர் பரப்பிலுள்ள தரிசு நிலங்களை சீர்திருத்தி உரிய நீராதார அமைப்புகளையும் உருவாக்கும் வகையில், ஏக்கருக்கு 4,000 ரூபாய் பின்னேற்பு மானியமாகவும், உரிய முக்கிய இடுபொருட்களை மானிய விலையிலும் வழங்கி சாகுபடிப் பணிகளை மேற்கொள்ள ஒட்டுமொத்தமாக 7 கோடியே 20 இலட்சம் ரூபாயினையும் வழங்கும்.

உணவு தானிய உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு நிலையினை விரைந்து அடைய ஏதுவாக, உற்பத்தி இடைவெளியினை குறைக்கும் முன்னோடி திட்டங்களை ஒருங்கிணைத்து விவசாயிகள், விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்கப் பணியாளர்கள் ஒன்றுகூடி விவசாயிகள் அளவிலான பயிர்த்திட்டம் தயாரிக்கப்படும். இதன் தொடர்ச்சியாக கிராம, வட்டார, மாவட்ட அளவில் நெல், சிறுதானியங்கள் மற்றும் பயறு வகைகளுக்கான 3 வகையான விரைவுத் திட்டங்கள் மூலம் நடப்பாண்டில் உணவு தானிய உற்பத்தியினைப் பெருக்க ‘‘விரைவுத் திட்ட அணுகுமுறை’’ செயல்படுத்தப்படும். இத்திட்ட அணுகுமுறையினை மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ்

சிறப்புடன் செயல்படுத்த திட்டநிதியாக 114 கோடியே 20 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

ஊட்டச் சத்துக்கள் பாதுகாப்பிற்கு, குறிப்பாக புரதச்சத்து தேவையினை ஈடுசெய்யும் வகையில், துவரை உற்பத்தித் திறனை "துவரை நடவு செய்தல்" தொழில் நுட்பம் மூலம் அதிகரிக்கவும், இதற்காக 50,000 ஏக்கர் பரப்பில் துவரை நடவினை மேற்கொள்ளவும், இதில் 10,000 ஏக்கர் நடவு துவரைக்கு சொட்டு நீர்ப்பாசனம் அளிக்கவும் திட்டம் தயாரிக்கப்பட்டு, அதனைச் செயல்படுத்த 55 கோடியே 60 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

கரும்பு உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வகையில், நீடித்த நிலையான கரும்பு உற்பத்தி திட்டம் 50,000 ஏக்கர் பரப்பளவில் 275 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் சர்க்கரை ஆலைகள் மூலம் செயல்படுத்தப்படும்.

வேளாண் மற்றும் தோட்டக் கலைத் துறை திட்டங்களுக்கான தரமான இடுபொருட்கள் உரிய தருணத்தில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், "சிறப்பு நோக்க அமைப்பு", அதாவது Special Purpose Vehicle ஒன்று, தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை ஆணையரகத்தில் ஏற்படுத்தப்படும். இதற்காக 1 கோடி ரூபாய் சமபங்கு தொகையும், வட்டியில்லா சுழல்நிதியாக 100 கோடி ரூபாயும், இதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்த 11 கோடியே 49 இலட்சம் ரூபாயும் ஆக மொத்தம் 112 கோடியே 49 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

வேளாண் தொழிலில் தொடர்ந்து வருமானம் இல்லாததன் காரணமாக வேளாண் அல்லாத பிறபணிகளுக்கு கிராமப்புற மக்கள் செல்வதால் சாகுபடிப் பணிகளை குறித்த காலத்தே மேற்கொள்ள இயலாத சூழ்நிலை நிலவுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, வேளாண்மையை எந்திரமயமாக்கவும், கிராமப்புற இளைஞர்கள் மூலம் வேளாண் தொழில் தொடர்ந்து நடைபெறுவதற்குத் தேவையான அனைத்து திட்டங்களையும் எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. இதன் தொடர்ச்சியாக நடப்பாண்டிலும் 124 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் விவசாயிகளுக்கு பண்ணை இயந்திரங்கள் மானிய விலையில் வழங்கப்படும்.

விவசாயிகளுக்கு அதிக லாபம் தரும் தோட்டக்கலைப் பயிர்களை சாகுபடி செய்ய, அது குறித்த தொழில்நுட்பங்களை பயிற்றுவிக்கவும், தரமான இடுபொருட்கள் வழங்கி அத்துடன் தரமான விரிவாக்க சேவை வழங்கவும் 28 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் 50 வட்டாரங்களில் ''விவசாயிகள் சேவை மையம்'' ஏற்படுத்தவும், 5 ''மாவட்ட தோட்டக்கலை தொழில்நுட்ப ஆதார மையங்கள்'' ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தோட்டக்கலை விளைபொருட்களின் உற்பத்தி பெருகவும், தோட்டக்கலை விவசாயிகட்கு நல்லவிலை கிடைக்கச் செய்யவும், தரமான விதை அல்லது நடவுக்கன்றுகள் வழங்குவதோடு விளை பொருட்களை ''அச்சு மற்றும் ஆரம்'' அதாவது, Hub and Spoke model அமைப்பில், 50 சேகரிப்பு மையங்களில் சேகரித்து சுத்தப்படுத்துதல், தரம் பிரிப்பு, வகைப்படுத்துதல், சிப்பம் கட்டுதல், 10 முன்னோடிச் சந்தைகளில் உள்ள மொத்த வியாபாரிகளுக்கு மின்னணு ஏல முறையில் விற்பனை இணைப்பு ஏற்படுத்தி தருதல், குளிர்பதன சேமிப்பு, ஏலமிடும் அறை, மதிப்புக் கூட்டுதல் உள்ளிட்ட வசதிகளையும் செயல்படுத்த 186 கோடியே 46 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

தென்னை விவசாயிகளின் நலன் காக்கும் வகையில், கோவை மாவட்டத்தில் இளநீருக்கான சிறப்பு வணிக வளாகம் ஒன்றும், வாழை விவசாயிகளுக்கென திருநெல்வேலி மாவட்டத்தில் வாழைக்கான சிறப்பு வணிக வளாகம் ஒன்றும், பத்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு அணுகுசாலை வசதிகளும், தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் மற்றும் ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் பகுதிகளுக்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும், 23 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் அமைத்து தரப்படும்.

ஆக மொத்தம் 984 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பில் இன்று அறிவிக்கப்பட்டுள்ள இந்த திட்டங்கள், வேளாண் உற்பத்தி அதிகரிக்கவும், வேளாண் விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

இந்தியாவிலேயே முதன்முறையாக ரூ.6.48 கோடியில் ஆதார செல் ஆராய்ச்சி மையம்!

06.05.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நிலமற்ற கிராமப்புற விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் முதுகெலும்பாகவும், பெண்களுக்கு சுய வேலைவாய்ப்பினை அளிக்கக் கூடியதாகவும், கிராமப்புற பொருளாதாரத்திற்கு இன்றியமையாததாகவும் விளங்குவது கால்நடைகள் என்று சொன்னால் அது மிகையாகாது.

கிராமப்புற பொருளாதாரத்தில் முக்கியப் பங்கு வகிக்கும் கால்நடைகள் நன்கு பராமரிக்கப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, கால்நடை மருத்துவமனைகள் மற்றும் கால்நடை மருந்தகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

கிராமப்புறப் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் கால்நடை பராமரிப்புத் துறைக்கான அலுவலகக் கட்டடங்களின் பராமரிப்புச் செலவிற்காகவும், புதிய கால்நடை மருத்துவ நிலையங்கள் அமைப்பதற்காகவும், 2009–2010 மற்றும் 2010–2011 ஆகிய இரண்டு ஆண்டுகளில், தி.மு.க. ஆட்சிக் காலத்தில், சுமார் 12 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், எனது தலைமையிலான அரசு பொறுப்பேற்ற இரண்டு ஆண்டு காலத்திற்குள், கிராமப்புற ஏழை விவசாயிகளின் வாழ்வாதாரத்துடன் இணைந்த கால்நடை பராமரிப்புத் துறைக்கு 2 புதிய கால்நடை மருத்துவ கல்லூரிகளை நிர்மாணிக்கவும், புதியதாக 639 கால்நடை மருத்துவ நிலையங்கள்

கட்டவும், 882 கால்நடை மருத்துவ நிலையக் கட்டடங்களைச் சீரமைக்கவும், 12 மாவட்ட கால்நடைப் பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், எப்போதுமில்லாத அளவாக 274 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 385 கிளை நிலையங்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில் ஊரக கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தப்பட்டு உள்ளன. இந்த 385 ஊரக கால்நடை மருந்தகங்கள் மற்றும் முந்தைய அரசால் தரம் உயர்த்தப்பட்டு கால்நடை உதவி மருத்துவர் பணியிடங்கள் அனுமதிக்கப்படாமல் இருந்த 200 ஊரக கால்நடை மருந்தகங்கள் என மொத்தம் 585 கால்நடை உதவி மருத்துவர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டு நிரப்பப்பட்டுள்ளன.

கால்நடைகளுக்கு ஏற்படவிருக்கும் நோய்களிலிருந்து அவற்றைக் காப்பாற்றி, அவை ஆரோக்கியத்துடன் வாழ, தற்போது பயன்பாட்டில் உள்ள இதர மருத்துவ சிகிச்சை முறைகள் மூலம் குணப்படுத்த இயலாத நோய்களை குணப்படுத்தும் திறன் கொண்ட, ஆதார செல்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மறு சீரமைப்பு மருத்துவம் என்ற ஒரு புதிய மருத்துவ முறை நடைமுறைப்படுத்தப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் புதிய மருத்துவ முறை இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழகத்தில் தான் செயல்படுத்தப்படுகிறது என்பதையும் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகம் முழுவதும் மருத்துவ சிகிச்சை முறையானது மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் பொதுவானதாகவே கருதப்பட்டு, ''ஒற்றைச் சிகிச்சைக் கோட்பாடு'' முறையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

''ஸ்டெம் செல்'' எனப்படும் ஆதார செல்கள் கால்நடைகள் மற்றும் மனிதர்களின் கரு முட்டை, எலும்பு மஜ்ஜை, தொப்புள் கொடி உதிரம் மற்றும் கொழுப்புத் திசு போன்றவற்றிலிருந்து பிரித்து எடுக்கப்படும் முதிர்வுறா நிலையில் இருக்கும் செல்கள் ஆகும். தகுந்த ஊட்டச் சத்துக்களை கொண்டு இத்தகைய

"ஸ்டெம் செல்"–களை ஆய்வகத்தில் வளர்க்கும் போது, அவை பயன்படுத்தப்படும் காரணிகளுக்கு ஏற்ப எலும்பு, நரம்பு, ஈரல், இதயம், சிறுநீரகம் மற்றும் ஏனைய திசுக்களாக வளரும் தன்மையை பெறுகின்றன.

மறு சீரமைப்பு மருத்துவம் அதாவது REGENERATIVE MEDICINE என்பது மூல ஆதார செல்கள் மற்றும் உடலுக்கு வெளியே வளர்க்கப்படும் செல்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் மருத்துவ முறையாகும். இம்மருத்துவ முறை மூலம், நடப்பு சிகிச்சை முறைகளால் குணப்படுத்த இயலாத பல நோய்களும் குணமடைய வாய்ப்பு உள்ளது. சிதைந்து போன உடல் உறுப்புகள்அல்லது திசுப் பகுதிகளை மீண்டும் வளர்ச்சி அடையச் செய்து, அவற்றை வழக்கம் போல் இயங்க வைப்பதே மறு சீரமைப்பு மருத்துவத்தின் நோக்கமாகும். மனிதர்கள் மற்றும் விலங்குகளின் நலத்தை பாதிக்கும் பல நோய்களுக்கு மறு சீரமைப்பு மருத்துவமே மாற்றாக அமையும்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், அமெரிக்க நாட்டின் Michigan State University, Virginia – Maryland Regional College of Veterinary Medicine, மற்றும் Wakeforest Institute of Regenerative Medicine - ஆகியவற்றுடன் இணைந்து ஸ்டெம் செல் தொழில்நுட்ப ஆராய்ச்சிகளில் ஈடுபட உள்ளது.

இம்மருத்துவ முறையினால் எதிர்காலத்தில் மனித மருத்துவத்திற்கும் ஏற்படும் நன்மைகளை கருத்தில் கொண்டு, எனது தலைமையிலான அரசு கால்நடைகளுக்காக இந்தியாவிலேயே முதல் முறையாக ஸ்டெம் செல் எனப்படும் "ஆதார செல் ஆராய்ச்சி மையம்" ஒன்றை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் **6** கோடியே **48** இலட்சம் ரூபாய் செலவில் அமைக்க உள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதே போன்று, மனிதர்களுக்கு இணையாக மேம்பட்ட மருத்துவ சேவைகள் மற்றும் நோய் கண்டுப்பிடிப்பு முறைகள்

ஆகியவற்றைக் கால்நடைகளுக்கும் அளிக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில், 22 கால்நடை பெரு மருத்துவமனைகள், 20 கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி அலகுகள் மற்றும் 11 கால்நடை பண்ணைகள் ஆகியவற்றில் மொத்தமாக 53 அல்ட்ரா சவுண்டு ஸ்கேன் எனப்படும் நுண்ணொலி அலகிடும் நோய் கண்டறியும் கருவிகள் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக 8 கோடியே 81 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதன் மூலம் ஆண்டு தோறும், 15,000 கால்நடைகள் பயன்பெறும்.

மேற்காணும் எனது தலைமையிலான அரசின் திட்டங்கள் கால்நடை விவசாயிகள் பெரிதும் பயன் அடைய வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

நடப்பாண்டில் ரூ.500 கோடி மதிப்பீட்டில் 47 சேமிப்புக் கிடங்குகள்

06.05.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்பதை கொள்கையாகக் கொண்டுள்ள எனது தலைமையிலான அரசு, பொது விநியோகத் திட்டத்தை சிறப்புடன் செயல்படுத்தி வருவதோடு மட்டுமல்லாமல், உணவுப் பாதுகாப்பின் அங்கங்களான உற்பத்தி, சேமிப்பு, விற்பனை ஆகியவற்றில் முக்கியப் பங்காற்றி வரும் நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் மற்றும் கூட்டுறவுத் துறை ஆகியவற்றையும் வலுப்படுத்தி வருகிறது.

வேளாண் உற்பத்தியைப் பொறுத்த வரையில், தமிழ்நாட்டில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் முனைப்பான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருவதால், உணவு தானியங்களின் உற்பத்தி அதிகரித்து வருகிறது.

உணவு தானியங்களை கொள்முதல் செய்து சேமித்து வைப்பதற்கென கடந்த இரண்டு ஆண்டுகளில் தலா 3,750 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மூன்று கிடங்குகள் கட்டப்பட்டு உள்ளன. இதனையும் சேர்த்து தற்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 6.68 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு வசதி கொண்ட கிடங்குகள் உள்ளன. நான் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் உணவுப் பொருட்களின் உற்பத்தி அதிகரித்து வருவதால், இவற்றை சேமித்து வைக்க கூடுதல் சேமிப்புக் கிடங்குகள் அவசியம்

என்பதைக் கருத்தில் கொண்டு, நவீன வசதிகளுடன் கூடிய 4,33,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 47 சேமிப்புக் கிடங்குகள் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பாண்டில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதே போன்று, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் வாயிலாக 1.25 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 15 சேமிப்புக் கிடங்குகள் கட்டப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சேமிப்புத் திறன் 6.33 இலட்சம் மெட்ரிக் டன் என்ற அளவிலிருந்து 7.58 இலட்சம் மெட்ரிக் டன் என்ற அளவுக்கு உயரும்.

மேலும், கொள்முதல் பொருட்களைப் பதப்படுத்திப் பாதுகாக்கும் வகையில், எருக்கூர் நவீன அரிசி ஆலையில் 25,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நவீன வசதிகளுடன் கூடிய இரண்டு கட்டமைப்புகள், அதாவது Silos 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதையும் இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

விலை வீழ்ச்சியின் போது பொருட்களைப் பாதுகாத்து, பின்னர் விலை ஏற்றத்தின் போது விற்பனை செய்வது விவசாயிகளின் வருவாயைப் பெருக்க உதவும் என்பதையும், அறுவடைக் காலங்களில் உற்பத்தி அதிகரிப்பால் விலை வீழ்ச்சியும், தேவை அதிகரிக்கும் போது, உற்பத்தி இல்லாததால் விலை ஏற்றமும் ஏற்படுவது தடுக்கப்படும் என்பதையும் கருத்தில் கொண்டு, கடந்த இரண்டு ஆண்டுகளில் 2,270 ஊரகக் கிடங்குகள் கட்டப்பட்டன. இதன் காரணமாக, கூட்டுறவு சங்கங்களில் சேமிப்பு கிடங்குகளின் சேமிப்புத் திறன் 11 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது. நடப்பாண்டில், 140 கோடியே 89 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேலும் 1,044 சேமிப்பு கிடங்குகள் கட்டப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் தானிய சேமிப்புக் கிடங்குகளின் சேமிப்புத் திறன் 12 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயரும்.

உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் 33,519 நியாயவிலைக் கடைகள் மூலம் அரிசி, விலை ஏதுமின்றியும், சர்க்கரை, பாமாயில், மண்ணெண்ணெய், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு ஆகியவை, மானிய விலையிலும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இந்திய உணவுக் கழகம் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்தமான கிடங்குகளில் இருந்து நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் எடுத்துச் செல்லப்படுவதை கண்காணிக்க கணினி மயம் ஆக்கல் அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, 50 கோடி ரூபாய் மதிப்பில் கணினி மயம் ஆக்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இதனைச் செயல்படுத்த மாநில அளவில் தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு குழுவும், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர் அவர்கள் தலைமையில் திட்டச் செயலாக்கத்திற்காக மற்றொரு குழுவும் அமைக்கப்படும்.

தமிழ்நாட்டில் 4,530 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் விவசாய உறுப்பினர்களுக்கு தேவையான பயிர்க் கடன் உதவி வழங்குவதுடன், விவசாய உற்பத்தியை உயர்த்த உரங்கள், விதைகள், பூச்சிகொல்லி மருந்துகள் போன்ற இடுபொருட்களையும் விநியோகம் செய்து வருகின்றன.

விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றக் கூடிய இந்தச் சங்கங்களில் 606 சங்கங்கள் நான் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற போது மிகவும் நலிவுற்று செயலற்ற நிலையில் இருந்தன. எனது அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, கடந்த இரண்டு ஆண்டுகளில் 467 சங்கங்களின் செயல் திறன் தற்போது மேம்பட்டுள்ளது. இது மட்டுமல்லாமல், வேளாண்மை கூட்டுறவு சங்கங்களின் செயல்பாட்டை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மத்திய மாநில அரசுகளின் நிதி உதவியினைக் கூட பெறத் தகுதியில்லாத 41 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் ஒவ்வொன்றிற்கும்

குறுகிய காலக் கடனமைப்பு சீரமைப்புத் திட்டத்தின் கீழ் 50 இலட்சம் ரூபாய் வீதம் 20 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டது. இந்தச் சங்கங்கள் தற்போது நல்ல முறையில் செயலாற்றி வருகின்றன. மேலும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களை கணினிமயம் ஆக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தவிர, ரொக்கம் மற்றும் நகைகளைப் பாதுகாக்கும் வகையில், பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை கட்ட தலா 5 இலட்சம் ரூபாய் வீதம், 50 சங்கங்களுக்கு 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டது. இது போன்ற பாதுகாப்பு சாதனங்களை மேலும் 52 சங்கங்களில் நிறுவும் வகையில், ஒரு சங்கத்திற்கு 1 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாய் வீதம் 52 சங்கங்களுக்கு 69 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும், வேளாண் இயந்திரங்களை விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் அளிக்கும் வகையில், 1,236 வேளாண் சேவை மையங்கள் அமைக்கப்பட்டன. அவை வேளாண் இயந்திரங்களை கொள்முதல் செய்ய 25 கோடியே 60 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டது.

தற்போது நலிவுற்ற நிலையில் இருக்கும் 139 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில், முதற்கட்டமாக 72 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் வணிகத்தை 1 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்தும் வகையிலும், அவைகளை செயல் திறன் மிக்க சங்கங்களாக மாற்றும் வகையிலும், சங்கம் ஒன்றிற்கு 50 இலட்சம் ரூபாய் வீதம் 36 கோடி ரூபாய் சிறப்பு காசுக் கடன் உதவி அதாவது Cash Credit Facility வழங்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்காணும் எனது தலைமையிலான அரசின் நடவடிக்கைகள் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேலும் மேம்படுத்த வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் மூலம் ரூ.1,200 கோடி மதிப்பீட்டில் புதிய ஆலை

07.05.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொருளாதார வளர்ச்சியின் வேகத்தை விரைவு படுத்துதல், வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், 2023 ஆம் ஆண்டுக்குள் உற்பத்தி துறையில் 22 விழுக்காடு வளர்ச்சியை எய்துதல் ஆகிய குறிக்கோள்களின் அடிப்படையில் புதிய தொழில்களை ஏற்படுத்துவதிலும், தொழில் மற்றும் கட்டமைப்புத் திட்டங்களில் பெருமளவிலான முதலீடுகளைச் செய்வதிலும் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

1984 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட நாள் முதல் இன்று வரை தொடர்ந்து லாபகரமாகவும், பல விருதுகளை பெற்றுள்ளதுமான தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனம், காகிதம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது. இந்த நிறுவனத்தின் காகித ஆலையிலிருந்து உருவாகும் சுண்ணாம்புக் கழிவு மற்றும் மின் உற்பத்தி நிலையத்தின் உலர் சாம்பல் ஆகியவற்றின் மூலம் உற்பத்தியாகும் திடக் கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி காகித நிறுவனத்தால் அமைக்கப்படும் இந்தியாவின் முதல் சிமெண்ட் தொழிற்சாலையினை நான் அண்மையில் துவக்கி வைத்தேன்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனத்தின் மூலம் ஆண்டொன்றுக்கு இரண்டு லட்சம் டன் திறன் கொண்ட, இரு புறமும் மேற் பூச்சு செய்யப்பட்ட அடுக்கு காகித அட்டை, அதாவது Multilayer Double Coated Board தயாரிக்கும் ஒரு புதிய ஆலை சுமார் 1200 கோடி ரூபாய்

முதலீட்டில் நவீன இயந்திர வசதிகளுடன் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் புதிய ஆலை திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட குளித்தலை–மணப்பாறை மாநில நெடுஞ்சாலையை ஒட்டிய மணப்பாறை வட்டத்தில் உள்ள மொண்டிப்பட்டி வருவாய் கிராமம் மற்றும் அதனை சுற்றியுள்ள வறட்சியான பகுதியில் சுமார் 989 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படும். இதற்கான பணிகள் 2013–2014 ஆம் நிதியாண்டில் தொடங்கப்பட்டு, 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் முடிக்கப்படும். இதன் மூலம், சுமார் 2,000 பேர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பு உருவாகும்.

நாகப்பட்டினம் மாவட்டத்தின் தெற்கு கடற்கரையோரப் பகுதியில் ஓர் ஆழ் கடல் துறைமுகம், அதாவது Deep Water Port, ஒரு மிதக்கும் திரவ நிலை எரி வாயு முனையம், அதாவது Floating storage Re-gasification Unit மற்றும் 500 மெகாவாட் திறனுள்ள எரிவாயுவை பயன்படுத்தும் மின் உற்பத்தி ஆலை, அதாவது Gas based Power Plant உள்ளடக்கிய ஒரு மாபெரும் தொழில் திட்டம் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமாகிய டிட்கோ மூலம் கூட்டுத் துறையில் சுமார் 3,500 கோடி ரூபாய் முதலீட்டில் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலும் தொழில் துறை வளர்ச்சியை ஏற்படுத்தி, மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், தமிழகத்தின் தென் பகுதியில் உள்ள மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி ஏற்படுத்துவதற்காக செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களை இந்த மாமன்றத்திற்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

1. சிவகங்கை மாவட்டத்தில் ஏற்கெனவே அமைந்துள்ள மானாமதுரை சிப்காட் தொழில் வளாகத்துடன் கூடுதலாக 2,000 ஏக்கர் நிலப்பரப்பில் கிராபைட் மற்றும் பிற

தொழிற்சாலைகள் இடம் பெறும் வகையில் புதிய தொழிற் பூங்கா ஒன்று ஏற்படுத்தப்படும்.

2. ராமநாதபுரம் மாவட்டத்தில் பெட்ரோலிய சுத்திகரிப்பு, ரசாயனம், உரம் போன்ற தயாரிப்புத் தொழிற்சாலைகள் அமைத்திடும் வகையில் 2,000 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய தொழிற் பூங்கா ஒன்று ஏற்படுத்தப்படும்.

3. புதுக்கோட்டை மாவட்டத்தில், 2,000 ஏக்கர் நிலப்பரப்பில் பொறியியல், உலோகத் தொழிற்சாலைகள் மற்றும் உலர் தோல் தொழிற்சாலைப் பூங்கா ஒன்று ஏற்படுத்தப்படும்.

4. திண்டுக்கல் மாவட்டத்தில், பொறியியல் சார்ந்த தொழிற்சாலைகள் மற்றும் உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் சார்ந்த தொழிற் பூங்கா ஒன்று சுமார் 1,500 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்படுத்தப்படும்.

5. தேனி மாவட்டத்தில், சுமார் 2,000 ஏக்கர் நிலப்பரப்பில் உணவுப் பதப்படுத்தல் சார்ந்த தொழிற்பூங்கா உருவாக்கப்படும்.

6. விருதுநகர் மாவட்டத்தில், பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதுடன், உணவுப் பதப்படுத்துதல், பொறியியல் மற்றும் அச்சுத் தொழிற் கூடங்கள் ஆகியவை இடம் பெறும் வகையில் ஒரு தொழில் பூங்கா 3,400 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்படுத்தப்படும்.

7. தூத்துக்குடி மாவட்டத்தில், கடல்சார் தொழில்கள், கப்பல் கட்டுதல் மற்றும் பழுது நீக்கு தொழிற்சாலைகள், கன ரகப் பொறியியல் உலோகத் தொழில் மற்றும் இரசாயனத் தொழில்கள் ஆகியவற்றை ஈர்க்கும் வகையில் சிப்காட் நிறுவனத்தால் சுமார் 6000 ஏக்கர் நிலப்பரப்பில் தொழிற் பூங்கா ஒன்று அமைக்கப்படும்.

8. திருநெல்வேலி மாவட்டத்தில், ஒளி மின் தகடுகள், சூரிய ஒளி சேகரிப்பான்கள் மற்றும் இதர புதுப்பிக்கத் தக்க எரிசக்தி தொடர்பான இயந்திரங்கள், கருவிகள், வீட்டு உபயோகச் சாதனங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் மற்றும் பொறியியல் தொழில்கள் அமையும் வகையில், சுமார் 1,500 ஏக்கர் நிலப்பரப்பில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மையம் Renewable Energy Hub ஒன்று ஏற்படுத்தப்படும்.

9. கன்னியாகுமரி மாவட்டத்தில் கடல்சார் தொழிற்சாலைகளை Marine Industries-ஐ ஈர்க்கும் வகையில் தொழிற் பூங்கா சுமார் 250 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படும். இவற்றுடன் பொறியியல் சார்ந்த தொழில்கள், ரப்பர் தொழில்கள் மற்றும் சுற்றுலாத் தொழில் ஆகியவையும் ஊக்குவிக்கப்படும்.

தென் மாவட்டங்களில் தற்போது உள்ள மற்றும் அமைய உள்ள சிப்காட் தொழிற் பூங்காக்களில் தொழிற்சாலைகளை அமைக்க முன் வரும் தொழில் முனைவர்களை ஊக்குவிக்கும் வகையில் கீழ்க்காணும் சலுகைகள் எனது தலைமையிலான அரசால் அளிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1. சிப்காட் நிறுவனத்தால் 50 சதவிகித மானிய விலையில் நிலம் ஒதுக்கீடு செய்யப்படும். இம்மானியம் சிப்காட் நிறுவனத்திற்கு அரசால் நேரடியாக திரும்ப அளிக்கப்படும்.

2. நிலம் பத்திர பதிவுக்கான முத்திரைத் தாள் கட்டணத்தில் 100 சதவிகித விலக்கு அளிக்கப்படும்.

3. மூலதன மானியம் 1.5 மடங்கிலிருந்து 2 மடங்காக அதிகரிக்கப்படும்.

4. தொழிற்சாலைகளுக்குத் தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் உருவாக்கப்படும்.

5. மதிப்புக் கூட்டிய வரி, அதாவது VAT அடிப்படையிலான சலுகைகள் பெற தற்போது நடைமுறையில் உள்ள குறைந்த பட்ச முதலீட்டுத் தொகையான 50 கோடி ரூபாய் என்பது 10 கோடி ரூபாயாக குறைக்கப்படும்.

மேற்காணும் நடவடிக்கைகள் தென் தமிழ்நாட்டில் தொழில் முனைவோர்கள் அதிக அளவில் உருவாகவும், வேலைவாய்ப்புகள் மேலும் பெருகவும், தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முதல் இடத்தை எய்தவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு பல்வேறு சிறப்புச் சலுகைகள்!

07.05.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதிலும், நிலைத்த வேலை வாய்ப்புகளை அளிப்பதிலும், தொழில் முனைவோர் மேம்பாடு அடைவதற்கும் நாற்றங்காலாக விளங்குவது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறை என்று சொன்னால் அது மிகையாகாது.

இப்படிப்பட்ட இன்றியமையாத் தன்மை வாய்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு பல்வேறு சலுகைகளை அளித்து வரும் எனது தலைமையிலான அரசு, தொழில் முனைவோரை மேலும் ஊக்குவிக்கும் வகையில் வழங்க உள்ள சிறப்புச் சலுகைத் தொகுப்பினை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

(1) தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் அமைக்கப்படும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் அமைக்கப்படும் குறுந்தொழில் நிறுவனங்கள் மற்றும் அனைத்து வட்டாரங்களிலும் அமைக்கப்படும் வேளாண் சார் குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தித் தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு, அவற்றின் இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களின் மொத்த மதிப்பில் 15 விழுக்காடு என்ற அளவில் தற்போது வழங்கப்பட்டு வரும் மானியம் இனி 25 விழுக்காடாக அதிகரித்து வழங்கப்படும். வழங்கப்படும் மானியத்தின் உச்ச வரம்பு 30 இலட்சம் ரூபாய் என இருக்கும்.

(2) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை மேலும் ஊக்குவிக்கும் வகையில், புதிய தொழிற் பேட்டைகளை அமைக்கும் பொருட்டு, தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலமாக, அதாவது SIDCO மூலமாக சுமார் 2,000 ஏக்கர் பரப்பிலான நில வங்கி படிப்படியாக உருவாக்கப்படும்.

(3) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், பெரிய தொழில் நிறுவனங்களின் அருகில் அமையும் வாய்ப்பைப் பெற்று ஒருங்கிணைந்த பயன் பெறும் வகையில், பெரிய நிறுவனங்களுக்காக தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், அதாவது SIPCOT ஆல் உருவாக்கப்பட்ட மற்றும் உருவாக்கப்படும் தொழிற் பேட்டைகளில் உள்ள மொத்த நிலப் பரப்பில் குறைந்த பட்சம் 20 விழுக்காடு நிலம் ஒரே தொகுப்பாக, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு உரிய நிலக் கிரய விலையில் வழங்கப்படும். இவ்வாறு பெறப்படும் நிலத்தை தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் மேம்படுத்தி குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இது மட்டுமல்லாமல், சிறு தொழில் முனைவோர் விரைவாக தொழில் துவங்கும் வகையில், 5,000 சதுர அடிக்கு மேற்பட்ட தொழிற் கூடங்களை ஒதுக்கீடு செய்ய அரசின் அனுமதி பெற வேண்டும் என்ற நிலையை மாற்றி, 50 சென்ட் வரையிலான தொழிற் கூடங்களை ஒதுக்கீடு செய்ய சிட்கோ நிறுவனத்திற்கு முழு அதிகாரம் வழங்கப்படும்.

(4) நகர்ப்புறக் குடியிருப்புப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தொழிற் கூடங்கள் அப்பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பல்வேறு மாசுகளை ஏற்படுத்துகின்றன. நகர்ப் புறத்தில் உள்ள இட நெருக்கடி காரணமாக தொழிற் கூடங்களை விரிவுபடுத்தவும் இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே,

சுற்றுச் சூழலை பாதுகாக்கும் வகையிலும், தொழிற் கூடங்களை விரிவுபடுத்தும் நோக்கிலும், ஏற்கெனவே, நகர்ப் பகுதிகளில் ஆங்காங்கே அமைந்துள்ள தொழிற் கூடங்களை மாற்றி அமைத்து நகருக்கு வெளியே தொழிற் குழுமம் மற்றும் தொழிற் பேட்டைகளை உருவாக்க தனியார் தொழில் முனைவோர் அமைப்புகள் முன் வரும் பட்சத்தில், மின் இணைப்பு வழங்குதல், நீர் வழங்குதல், காட்சி / கருத்தரங்க கூடங்கள், விற்பனை வசதி மையங்கள் முதலிய அடிப்படை கட்டமைப்புகள் மற்றும் பொது வசதிகளை ஏற்படுத்த அரசு மானியம் 75 விழுக்காடு என்ற அளவில் அதிக பட்சமாக 15 கோடி ரூபாய் வரை வழங்கப்படும். இதே போல், தனியார் தொழில் முனைவோர் அமைப்புகள் புதிய தொழில் நிறுவனங்களுக்கென புதிய தொழிற் குழுமம் மற்றும் தொழிற்பேட்டை அமைக்க முன் வரும் பட்சத்தில் அரசு மானியம் 50 விழுக்காடு என்ற அளவில் அதிக பட்சமாக 10 கோடி ரூபாய் வரை வழங்கப்படும்.

(5) தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் நடைமுறையில் உள்ள நில விலை நிர்ணய முறை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு உகந்த வகையில் சீரானதாகவும் நிலையானதாகவும் இல்லை என்பதைக் கருத்தில் கொண்டு, தற்போதுள்ள ''முழு விலை விற்பனை''மற்றும்''தவணை முறைவிற்பனை'' ஆகியவற்றை மாற்றி அமைத்து தொழில் வளர்ச்சிக்கு உகந்த லாப நோக்கமற்ற விலை நிர்ணயக் கொள்கை உருவாக்கப்படும். அரசு மற்றும் சிட்கோ தொழிற் பேட்டைகளில் தொழில் மனைகள் மற்றும் தொழிற் கூடங்களை 30 ஆண்டு கால குத்தகை அடிப்படையில் வழங்கிடவும், 30 ஆண்டு கால முடிவில் தொழில் முனைவோருக்கு முழு கிரய விலையில் வாங்கவும் வாய்ப்பளிக்கப்படும்.

(6) புதிய தொழிற்பேட்டைகளை அமைப்பதில் தகுதியான தனியார் மற்றும் அரசு நிலங்களைத் தேர்வு செய்து

பெறுவதிலிருந்து நில வரை படம் ஒப்புதல் பெற்று ஒதுக்கீடு செய்யும் வரை உள்ள பல்வேறு நிலைகளில், பல்வேறு அரசு துறைகள் மற்றும் நிறுவனங்களிடம் இருந்து தடையின்மைச் சான்று மற்றும் ஒப்புதல்களை பெற வேண்டியுள்ளதால் ஏற்படும் கால தாமதத்தினைத் தவிர்க்கும் பொருட்டு, தலைமைச் செயலாளர் தலைமையில் மாநில அளவிலான ஒற்றைச் சாளர தீர்வுக் குழு, அதாவது Single Window Clearance Committee ஒன்று ஏற்படுத்தப்படும்.

(7) தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை முக்கிய நோக்கமாக கொண்டு பல்வேறு இடங்களில் தொழிற் பேட்டைகளை உருவாக்குதல், மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள தனது சொந்த நிதி மட்டுமல்லாமல் மாநில மற்றும் மத்திய அரசு வழங்கும் மானியத்தைப் பயன்படுத்தி வருகிறது. சிட்கோ நிறுவனத்தின் நிதி ஆதாரத்தை மேலும் பலப்படுத்தி சிறு தொழில்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், சிட்கோ நிறுவனத்திற்கு கூடுதலாக 16 கோடி ரூபாய் அரசின் பங்கு மூலதனமாக வழங்கப்படும்.

(8) சென்னைப் பெருநகரை ஒட்டியுள்ள பகுதிகளில், நிலத்தின் விலை அதிகமாக உயர்ந்து வருவதாலும், தொழிற் பேட்டைகள் துவங்க போதுமான காலி இடங்கள் இல்லாததாலும், தற்போதுள்ள தொழிற்பேட்டைகளை விரிவுபடுத்தப் போதிய இடம் இல்லாததாலும், சிறு தொழில் முனைவோர், தொழிற் கூடங்களை அமைக்க உதவும் வகையில், அடுக்கு மாடி தொழில் வளாகங்களை, அதாவது Multi-storeyed Industrial Complexes அமைத்துத் தர எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது. முதற் கட்டமாக, திருவள்ளூர் மாவட்டம் திருமழிசையில் சிறு தொழில் முனைவோருக்கு நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் குறுந்தொழிற் கூடங்களை ஒதுக்கும்

பொருட்டு 20 கோடி ரூபாய் செலவில் அடுக்குமாடித் தொழில் வளாகம் ஒன்று சிட்கோ நிறுவனத்தின் மூலம் உருவாக்கப்படும்.

(9) தமிழ்நாடு அரசின் தொலை நோக்குப் பார்வை 2023–ல் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கினை எய்தும் வகையிலும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோர்களை உருவாக்கும் வகையிலும், தொழில் நுட்பம் சார்ந்த தொழில் முனைவு மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி ஆகியவற்றை பல்வேறு தொழில் குழுமங்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு, தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், அதாவது Entrepreneurship Development Institute மூலம் வழங்கிட எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது. மேலும், சுயதொழில் நடத்தி வரும் மகளிர் எதிர்நோக்கும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு, மகளிர்க்கென சிறப்புப் பயிற்சிகள் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்படும். இந்தப் பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்த நடப்பாண்டில் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு 5 கோடி ரூபாய் அரசு மானியமாக வழங்கப்படும்.

(10) கூட்டு முயற்சியினை ஊக்குவிக்கும் வகையில், தனியார் தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவன அமைப்புகள் தொழிற்பேட்டைகளை ஆரம்பிக்க முன் வந்தால், சிட்கோ நிறுவனம் அவற்றுடன் இணைந்து 10 விழுக்காடு வரை மூலதனத்தைச் செலுத்தி புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்கும்.

மேற்காணும் நடவடிக்கைகள் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்கள் பயன் பெறவும், அதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் மேம்படவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

புகையிலையால் ஏற்படும் புற்றுநோய்களைத் தடுக்கும் வண்ணம் குட்கா, பான் மசாலாப் பொருட்களுக்குத் தடை

08.05.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு நாட்டினுடைய மனித வளர்ச்சி மற்றும் பொருளாதார வளர்ச்சியினை நிர்ணயிப்பதில் முக்கியப் பங்கு வகிப்பது மக்கள் நல்வாழ்வு என்பதன் அடிப்படையில், உடலை உறுதியாக்கி, நோயற்றவாழ்வாகியகுறைவற்றசெல்வத்தைஅனைத்துமக்களும் பெற வேண்டும் என்ற குறிக்கோளின் அடிப்படையில், சுகாதாரப் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

டெங்கு, சிக்குன் குனியா, பன்றிக் காய்ச்சல் போன்ற பல நோய்களைக் கண்டறியும் IgM, ELISA போன்ற பரிசோதனை வசதிகளை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட அரசு மருத்துவமனைகளிலும் எனது தலைமையிலான அரசு ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும், பல்வேறு வகையான வைரஸ் நோய்களைக் கண்டறியக் கூடிய serotypes என்று சொல்லக் கூடிய சோதனைகளை ஒரே இடத்தில் பரிசோதிக்கும் வசதி தமிழ் நாட்டிலேயே சென்னையில் உள்ள அரசு கிங் இன்ஸ்டிட்யூட்டில் மட்டுமே உள்ளது. இதனால், அசாதாரண வைரஸ்களால் ஏற்படும் நோயினைக் கண்டுபிடிப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது.

நோயினைக் கண்டு பிடிப்பதில் ஏற்படும் கால தாமதத்தினைத் தவிர்க்கும் வகையிலும், நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வெகு விரைவில் சிகிச்சையை ஆரம்பிக்கும் வகையிலும், இந்த நோய் மற்றவர்களுக்கு பரவாமல் தடுக்கும் வகையிலும், அனைத்து உட்கட்டமைப்பு மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய நுண்ணணுத் தொற்று நோய் ஆய்வகத்தை,

அதாவது Molecular Virology Laboratory யினை நிறுவ எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நுண்ணணுத் தொற்று நோய் ஆய்வகம், முதற்கட்டமாக சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் துவக்கப்படும். ஒவ்வொரு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் 2 கோடி ரூபாய் செலவில் நுண்ணணு தொற்றுநோய் ஆய்வகம் நிறுவப்படும். இத்திட்டம், படிப்படியாக அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

சித்தா, ஆயுர்வேதம், யுனானி, ஓமியோபதி, யோகா மற்றும் இயற்கை மருத்துவம் ஆகிய ஐந்து மருத்துவத் துறைகளைக் கொண்டது இந்திய மருத்துவம் ஆகும்.

இந்திய மருத்துவத்திற்கான மத்திய கவுன்சில் விதிகளின்படி, இந்திய மருத்துவத் துறையின் மாணவர்கள், நவீன அறிவியல் தொழில் நுட்பத்துடன், உயரிய தரத்தில் கல்வி பயில, இந்திய மருத்துவக் கல்லூரிகளின் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனித வளம் மேம்படுத்தப்பட வேண்டும் என்ற அவசியத்தைக் கருத்தில் கொண்டு, தமிழகத்தில் இயங்கி வரும் அனைத்து அரசு இந்திய மருத்துவக் கல்லூரிகளுக்கு உள்கட்டமைப்பு மற்றும் தேவையான வசதிகள் செய்ய 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் மருத்துவமனைகளுக்கான தேசிய அங்கீகாரச் சான்றிதழ் பெறும் முதல் பாரம்பரிய மருத்துவமனையாக சென்னை அறிஞர் அண்ணா அரசு இந்திய மருத்துவ மனையினை உருவாக்கிடும் வகையில், இம்மருத்துவமனைக்கு மனித வளம் உள்ளிட்ட அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்திட 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மருந்துகளின் தர நிர்ணயம், புதிய மருந்துகளுக்கான ஆய்வு முதலான பல்வேறு மருத்துவ ஆய்வுகளை இந்திய மருத்துவ கல்லூரிகளும், மருத்துவமனைகளும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதனை இக்கல்லூரி ஆசிரியர்களும் ஆராய்ச்சி மாணவர்களும் மேற்கொள்வதன் மூலம், துறையின் மாண்பும், பயனும் சர்வதேச மருத்துவ ஆய்வு நூல்களில் வெளியாவதுடன், நம் பாரம்பரிய மருத்துவ முறைகளின் பயன் சர்வதேச அளவிற்குச் சென்றடையும். எனவே இந்திய முறை மருத்துவக் கல்லூரிகளுக்கென, தனி ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பிரிவு ஒன்று 12 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

ரத்தக் கொதிப்பு, சர்க்கரை நோய், இதய நோய், புற்று நோய், கழுத்து முதுகுத் தண்டு நோய்களுக்கான மேலாண்மையிலும் தடுப்பிலும் யோகா மற்றும் இயற்கை மருத்துவ முறையின் சிகிச்சைகளான நீர் சிகிச்சை, உணவு சிகிச்சை, மண் சிகிச்சை, அக்யூபங்சர் இவற்றின் பங்கு சிறப்பாக உள்ளது. எனவே தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும், நவீன மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் யோகா மற்றும் இயற்கை மருத்துவம் வழங்கும் வாழ்வியல் மருத்துவ மனைகள், அதாவது Life Style Clinics 9 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கப்படும் என்பதை அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழக அரசு இந்திய மருத்துவத் துறையில் பயின்று வரும் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கென பல புத்தகங்களை வெளியிடுகிறது. இது தவிர இயக்குனர் அகத்தில் இருந்து, இத்துறையின் வளர்ச்சி மற்றும் ஆய்வுகளை மக்களிடையேயும் மருத்துவர்களிடமும் அவ்வப்போது எடுத்துச் செல்ல தனியாக இதழ் ஒன்று வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்விரு பணிகளும் செவ்வனே நடைபெற இந்திய மருத்துவத் துறை இயக்குனர் அகத்தில் நூல்கள் பதிப்பிற்கென, அதாவது Publications and Periodicals-க்கென திரட்டு நிதியாக 2 கோடி ரூபாய் வழங்கப்படும்.

காஞ்சிபுரம் மாவட்டம் ஆலத்தூரில் இயங்கி வரும் தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகம், சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி முறை மருந்துகளை உற்பத்தி செய்யும் அரசுக்குச் சொந்தமான ஒரே நிறுவனம் ஆகும். இந்நிறுவனத்தின் உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தொழில் உபகரணங்களை மேம்படுத்தும் வகையில், 2 கோடி ரூபாய் வழங்கப்படும்.

இந்திய முறை மருத்துவத்திற்கான மத்தியக் கவுன்சிலின் வழிகாட்டுதல்படி, தமிழக அரசின் யுனானி மற்றும் ஆயுர்வேதக் கல்லூரிகளில், மாணவர்களைப் பயிற்றுவிக்க ஒவ்வொரு துறையிலும் பணியாற்ற, பட்ட மேற்படிப்பு படித்த ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. எனவே, பணியில் இருக்கும் யுனானி மற்றும் ஆயுர்வேத பட்டதாரிகளை அரசின் செலவில் வேறு மாநிலங்களுக்குச் சென்று பட்ட மேற்படிப்பு பயின்று வர வழிவகை செய்யப்படும்.

இந்திய மருத்துவத் துறையில் போலிப் பதிவுச் சான்றிதழ் நிலவுவதை களையும் வகையில், 15 இலட்சம் ரூபாய் செலவில், தமிழக அரசின் சித்த மருத்துவக் கவுன்சில், ஓமியோபதி கவுன்சில், இந்திய மருத்துவப் பதிவு கவுன்சில்களில் இனி URL மற்றும் 2D BAR CODE தகவல் தொழில் நுட்பங்களைக் கொண்டு பதிவுச் சான்றிதழ்கள் வழங்கும் வசதி அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இந்திய மருத்துவ முறை வாயிலாக தாய் சேய் நல மருந்துகள் 1 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும் என்பதையும் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இரத்த சோகை நோயை தடுக்கவும், குணப்படுத்தவும் பாரம்பரிய மற்றும் இல்லங்களிலேயே கிடைக்கக் கூடிய கருவேப்பிலை பொடியின் பயன் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

தமிழகத்தில் உள்ள 18 மருத்துவக் கல்லூரிகள் மற்றும் ஒரு பல் மருத்துவக் கல்லூரியின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும்

43 மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சை குறித்த புள்ளி விவரங்கள் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் கிடைக்கும் வகையில் மருத்துவ மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளில் 22 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவில் கணினி வழி மருத்துவத் தகவல் மேலாண்மைத்திட்டம் மற்றும் மருத்துவமனை மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பணி முழுவதும் கணினி மூலம் செயல்படுத்தப்படும். அனைத்து மருத்துவமனைகளும் சென்னையில் உள்ள ஒரு மத்திய சர்வருடன் Central Server– உடன் இணைக்கப்படும். இதன் மூலம், நோயாளிகளுக்கு கிடைக்கும் பயன்கள் மட்டுமல்லாது, நோய் குறித்து சேகரிக்கப்படும் தகவல்கள், புள்ளி விவரங்களை எளிதில் ஆராயவும், அதன் அடிப்படையில் மருத்துவ சிகிச்சை முறைகளை மேற்கொள்ளவும், தமிழகத்தில் நோய் தாக்க விவரங்களை அறிந்து கொள்ளவும், அதற்குத் தேவையான தடுப்பு மற்றும் சிகிச்சை நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவும் இயலும்.

எந்த ஒரு துறையும் திறம்பட செயல்பட அடித்தளமாக விளங்குவது பயிற்சி என்பதைக் கருத்தில் கொண்டு, சுகாதாரத் துறையில் பணியாற்றும் பணியாளர்களுக்கு உரிய பயிற்சி அளிப்பதற்காக சுகாதாரப் பயிற்சி மற்றும் மருத்துவமனை நிர்வாகப் பயிற்சி நிலையம் ஒன்று 10 கோடி ரூபாய் செலவில் சென்னையில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிலையத்தில் மருத்துவர்களுக்கான மருத்துவமனை நிர்வாகப் பயிற்சி, செவிலியர் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கான நிர்வாகப் பயிற்சி, மகப்பேறு மற்றும் சிசு நலம் குறித்த பயிற்சி, மருத்துவக் கல்வி கற்பித்தல் குறித்த பயிற்சி உள்ளிட்ட பல்வேறு சுகாதாரத் துறை சம்பந்தப்பட்ட பயிற்சிகள் அளிக்கப்படும். சுகாதாரத் திட்டம் குறித்த ஆய்வுகளும் இந்த நிலையத்தில் மேற்கொள்ளப்படும். அகமதாபாத் நகரில் உள்ள இந்திய மேலாண்மைக் குழு, மும்பையில் உள்ள டாட்டா சமூக அறிவியல் நிறுவனம், புது

தில்லியில் உள்ள தேசிய மருத்துவம் மற்றும் குடும்ப நல நிலையம் மற்றும் பொது சுகாதாரப் பயிற்சி நிலையம், தேசிய சுகாதாரத் தகவல் நிலையம் மற்றும் இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிலையம் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து இப்பயிற்சி நிலையம் செயல்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இல்லாத மாவட்டங்களில் தற்போது மாவட்ட தலைமை மருத்துவமனைகள் உயர் சிகிச்சை மருத்துவ மனைகளாக செயல்பட்டு வருகின்றன. சில நேரங்களில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் இல்லாத மாவட்டங்களில் உள்ள நோயாளிகள் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் உள்ள மாவட்டங்களுக்கு, மேல் சிகிச்சைக்காக செல்ல வேண்டியுள்ளது. எனவே மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் இல்லாத கடலூர், திருவள்ளூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், விருதுநகர், கரூர், பெரம்பலூர், நாமக்கல், கிருஷ்ணகிரி, ஈரோடு, திருப்பூர், நீலகிரி, திண்டுக்கல், நாகப்பட்டினம் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய 15 மாவட்டங்களில் உள்ள மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு இணையாக 18 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயந்திர கதியில் இயங்கும் தற்போதுள்ள வாழ்வியல் சூழலில், தொற்று நோய்களுக்கு மேலாக இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், இதய நோய், மன அழுத்தத்தினால் ஏற்படும் மற்ற விளைவுகள் மட்டுமல்லாமல் புற்று நோய் போன்ற தொற்றா வகை நோய்களின் Non-Communicable Diseases-களின் தாக்கம் அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, தொற்றா வகை நோய்த்தடுப்புப் பணிகளை ஒருங்கிணைத்து,பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 2013 –2014 ஆம் ஆண்டு தொற்றா வகை நோய்த் தடுப்பு சிறப்பு ஆண்டாக அனுசரிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென சுகாதாரத் திட்டத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும், கர்ப்பப் பை புற்று நோய், மார்பகப் புற்று நோய், இதய நோய் மற்றும்

சர்க்கரை நோய் ஆகியவற்றைத் தடுப்பதற்கும், அவற்றிற்கு சிறப்பு சிகிச்சை அளிப்பதற்கும் வழிவகை செய்யப்படும். இந்த நோய்களைத் தடுப்பதிலும், மேலாண்மை செய்வதிலும், பாரம்பரிய மருத்துவத்தின் பங்கு சிறப்பானது என்பதால், இதற்கென 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் விழிப்புணர்வு மற்றும் நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இந்திய அளவில் புகழ் பெற்ற அடையாறு புற்று நோய் மையத்திற்கு ஆண்டு தோறும் வழங்கப்படும் மானியத்தை, எனது தலைமையிலான அரசு கடந்த ஆண்டு 1 கோடியே 32 இலட்சம் ரூபாயிலிருந்து 1 கோடியே 75 இலட்சம் ரூபாயாக உயர்த்தியது. இந்த மானியத் தொகை இந்த ஆண்டு 2 கோடியே 50 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதையும், வரும் ஆண்டுகளில் இந்த மானியம் ஆண்டு தோறும் 15 விழுக்காடு உயர்த்தி வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நோயினைக் குணப்படுத்த முடியாமல் அவதியுறும் நிலையில் இருக்கும் நோயாளிகளுக்கும், வயோதிகம் காரணமாக படுக்கையில் அவதிப்படும் நோயாளிகளுக்கும், வலியிலிருந்து நிவாரணம் அளிக்கும் திட்டத்தை தொண்டு நிறுவனத்துடன் இணைந்து திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம் மற்றும் திருச்சி ஆகிய நான்கு மாவட்டங்களில் ஒரு ஒன்றியம் வீதம் எனது அரசு சோதனை அடிப்படையில் 2011–2012 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் பயனைக் கருத்தில் கொண்டு சமூகம் சார்ந்த வலி நிவாரணம் மற்றும் உடல் நலக் கவனிப்பை Community based Pain Relief and Palliative Care அனைத்து மாவட்டங்களிலும், 16 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாய் – சேய் நலனைக் காக்கும் வகையில், மதுரை மற்றும் சேலம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளில் உள்ள தாய் சேய் நலப் பிரிவுகள் 50 கோடி ரூபாய் செலவில் மேன்மைமிகு

மையங்களாக மேம்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் கட்டடங்கள் கட்டப்படுவதோடு மட்டுமல்லாமல் நவீன மருத்துவ உபகரணங்களும் வாங்கப்படும்.

பேறு கால அவசர சிகிச்சை மற்றும் பச்சிளம் குழந்தைப் பராமரிப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் 24 மணி நேரமும் செயல்படும் சீமாங்க் CEmONC – Comprehensive Emergency and Obstetric and Neonatal Care Centres திட்டம் 125 அரசு மருத்துவமனைகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த 125 அரசு மருத்துவ மனைகளில் முதல் கட்டமாக கர்ப்பிணிப் பெண்கள் அதிக அளவில் பயன்படுத்தக் கூடிய 55 மருத்துவ மனைகளில் தனித் தீவிர சிகிச்சைப் பிரிவுகள் 12 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், சென்னை மருத்துவக் கல்லூரியின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் எழும்பூர் மகப்பேறு மருத்துவமனை, கஸ்தூரிபாய் காந்தி பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை மற்றும் 16 மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளில் உள்ள மகப்பேறு பிரிவுகளுக்கு தலா இரண்டு மருத்துவர்கள் வீதம் 36 மருத்துவர்கள் கூடுதலாக நியமனம் செய்யப்படுவார்கள். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு 1 கோடியே 64 இலட்சம் ரூபாய் தொடர் செலவு அரசுக்கு ஏற்படும்.

ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, முதற் கட்டமாக ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒரு கூடுதல் மருத்துவர் என்ற அடிப்படையில் 163 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 163 மருத்துவ அலுவலர்கள் கூடுதலாக நியமிக்கப்பட்டனர். தற்போது, இரண்டாம் கட்டமாக மீதமுள்ள 50 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், ஒரு கூடுதல் மருத்துவ அலுவலர் நியமனம் செய்யப்படுவார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பச்சிளம் குழந்தைகளின் பராமரிப்பை வலுப்படுத்தும் வகையில், பொள்ளாச்சி, உசிலம்பட்டி, மன்னார்குடி, கோவில்பட்டி, தென்காசி மற்றும் மேட்டூர் ஆகிய 6 மாவட்ட அரசு தலைமை மருத்துவ மனைகளிலும், பழனி, தாராபுரம், காரைக்குடி, கோபிச்செட்டிபாளையம், குளித்தலை, கூடலூர், கம்பம், திருச்செங்கோடு, அறந்தாங்கி, பரமக்குடி, மற்றும் செய்யார் ஆகிய 11 அரசு மருத்துவமனைகளிலும் பச்சிளம் குழந்தை பராமரிப்பு மையங்கள் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மையங்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு குழந்தைகள் நல மருத்துவர்களும் 10 செவிலியர்களும் நியமிக்கப்படுவார்கள். இது தவிர, ஏற்கெனவே செயல்பட்டு வரும் 44 பச்சிளம் குழந்தை பராமரிப்பு மையங்கள் ஒவ்வொன்றுக்கும் கூடுதலாக ஒரு செவிலியர் நியமிக்கப்படுவார். இந்த மையங்கள் 24 மணி நேரமும் இயங்கும்.

மேலும் சென்னை எழும்பூர் மகப்பேறு மருத்துவமனை, திருவல்லிக்கேணி கஸ்தூரிபாய் காந்தி மகளிர் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனை மற்றும் வண்ணாரப்பேட்டை ராஜா சர் ராமசாமி முதலியார் மருத்துவமனை ஆகிய மூன்று மருத்துவமனைகளில் உள்ள பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மையங்களில் கூடுதலாக தலா 10 செவிலியர்கள் நியமிக்கப்பட்டு, இந்த மையங்கள் வலுப்படுத்தப்படும்.

புகையிலை மற்றும் புகையிலைப் பொருட்கள் ஏற்படுத்தும் புற்று நோய்களை தடுக்கும் நோக்கத்துடன் மத்திய அரசின் உணவு கலப்படத் தடைச் சட்டம் Prevention of Food Adulteration Act 1954–ன் கீழ், மெல்லும் வகை புகையிலைப் பொருட்களை 19.11.2001 முதல் ஐந்து ஆண்டுகளுக்கு எனது அரசு தடை செய்து, அறிவிக்கை வெளியிட்டது. ஆனால் தமிழ்நாடு மற்றும் இதர சில மாநிலங்களின் இத்தகைய அறிவிக்கைகள் notifications, குறித்த வழக்கை விசாரணை செய்த உச்ச நீதிமன்றம் இந்தச் சட்டத்தில், இதனை தடை செய்யும் அதிகாரம் மத்திய அரசுக்கு மட்டுமே உள்ளதாக கூறி, 2.8.2004 அன்று அறிவிக்கையை ரத்து செய்தது.

தற்பொழுது, உணவு கலப்படத் தடைச் சட்டத்திற்கு பதிலாக உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம் Food Safety and Standards Act என்ற புதிய சட்டத்தை 2006இல் மத்திய அரசு இயற்றி உள்ளது. இந்த சட்டம் மற்றும் அதன் விதிமுறைகள் 5.8.2011 முதல் நாடு முழுவதும் நடைமுறைக்கு வந்தன.

தமிழக அரசும் இந்தச் சட்டத்தை செயல்படுத்த இதற்கென 'தமிழ்நாடு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகம்' என்ற தனித் துறையை ஏற்படுத்தியுள்ளது. உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயம் விதிமுறைகளின்கீழ் எந்த ஒரு உணவிலும் சுகாதாரத்தைப் பாதிக்கும் பொருள் இருக்கக் கூடாது என்றும் புகையிலை, அதாவது Tobacco மற்றும் நிக்கோட்டின் Nicotine ஆகியவற்றை உணவுப் பொருளில் சேர்க்கக் கூடாது என்றும் விதிமுறை உள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் முன்பு உள்ள ஒரு வழக்கு விசாரணையின் போது குட்கா மற்றும் பான் மசாலா போன்ற சுவைக்கும் புகையிலைப் பொருட்களை தடை செய்வதை பற்றி மாநில அரசுகளால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று உச்ச நீதிமன்றம் கோரியுள்ளது.

புகையிலையால் ஏற்படும் பல்வேறு வகையான புற்று நோய்களைத் தடுக்கும் வண்ணம், குட்கா, பான் மசாலா போன்ற சுவைக்கும் புகையிலைப் பொருட்களைத் தயாரிக்கவும், சேமித்து வைக்கவும், விநியோகம் செய்யவும், விற்கவும் தடை விதிக்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய மருத்துவ முறையை ஊக்குவிக்கும் வண்ணமும், அரசு மருத்துவமனைகளில் மேம்பட்ட சேவைகள் அளிக்கும் வண்ணமும், என்னால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் ஓர் ஆரோக்யமான சமுதாயம் உருவாக வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் கூடுதலாக நெசவாளர்களுக்கு 10,000 வீடுகள் கட்டப்படும்!

08.05.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்தியப் பொருளாதாரத்தில் தனித்தன்மை பெற்று விளங்குவதும், நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளை உருவாக்குதிலும், மத்திய, மாநில அரசுகளுக்கு கணிசமான வருவாயினைப் பெற்றுத் தருவதிலும், அந்நிய செலாவணியை ஈட்டித் தருவதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்ற ஜவுளித் தொழிலை மேற்கொண்டு வரும் நெசவாளர்களுக்கு பற்பல திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

நெசவுத் தொழிலை மேம்படுத்தும் வகையிலும், மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்துடன் கூடிய தறிகளில் நெசவாளர்கள் உற்பத்தி மேற்கொள்ளவும், அதன் மூலம் அவர்கள் கூடுதல் வருவாய் ஈட்டும் வகையிலும், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருநெல்வேலி, கடலூர், வேலூர், திருச்செங்கோடு, சேலம் மற்றும் மதுரை பகுதிகளில் உள்ள நெசவாளர்களுக்கு ½ குதிரை திறன் கொண்ட மோட்டார் பொருத்தப்பட்ட 6,000 பெடல் தறிகள் அரசின் மானியத்துடன் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான மொத்தச் செலவினம் 24 கோடி ரூபாய் ஆகும். ஆண்டொன்றிற்கு 2,000 பெடல் தறிகள் வீதம் மூன்று ஆண்டுகளில் இவை வழங்கப்படும்.

கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு

சங்கங்களில் சுமார் 1,600க்கும் மேற்பட்ட தற்காலிகப் பணியாளர்கள் ஐந்தாண்டுகள் முதல் 15 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களில், ஓராண்டு பணி முடித்த தற்காலிகப் பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 2,700/– ரூபாய் வீதமும், 5 ஆண்டுகள் பணி முடித்த தற்காலிகப் பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 3,000/– ரூபாய் வீதமும், 10 ஆண்டுகள் பணி முடித்து தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கும் பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 3,750/– ரூபாய் வீதமும் தொகுப்பூதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இவர்களுக்கு ஆண்டுதோறும் ஊக்கத் தொகையும் வழங்கப்பட்டு வருகிறது. தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்ட பணியாளர்கள் நீண்ட காலமாக பணியில் உள்ளதாலும், இவர்களில் பெரும்பாலோனோர் வேறு பணிகளுக்கு நியமனம் செய்யக் கூடிய வயது வரம்பைக் கடந்தவர்கள் என்பதாலும், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில், இன்றைய தேதியில் ஐந்தாண்டுகளுக்கு மேல் பணிபுரிந்து வரும் தொகுப்பூதியம் பெறும் பணியாளர்களுக்கு அவர்கள் பணிபுரியும் சங்கங்களின் வகைபாடுகளுக்கேற்ப பதவி நிலை நான்கில் உள்ள காலமுறை ஊதியம் 1.1.2013 முதல் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென ஆண்டொன்றிற்கு சுமார் 3 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவினம் ஏற்படும்.

கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களின் வருமானத்தைப் பெருக்கும் வகையில், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு, ஒரு நெசவாளருக்கு 1,500/– ரூபாய் வீதம், 25,000 நெசவாளர்களுக்கு 3 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மின் மோட்டார் பொருத்திய தார் சுற்றும் இயந்திரம் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம், நெசவாளர்களின் வேலைப் பளு குறைந்து உற்பத்தி இரு மடங்காக அதிகரிப்பதோடு, நெசவாளர்களின் வருமானமும் இரட்டிப்பாகும். மேலும் நெசவுத் தொழிலுக்கான ஊடை நூல் கிடைப்பதில் உள்ள கால தாமதமும் தவிர்க்கப்படும்.

மைய மற்றும் மாநில அரசுகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வந்த தறிக் கூடத்துடன் கூடிய வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. தற்போது இத்திட்டம் நடைமுறையில் இல்லை. 22.4.2013 அன்று நடைபெற்ற கைத்தறி மற்றும் துணிநூல் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது, 5 ஆண்டுகளில் கட்டப்படும் 3 இலட்சம் பசுமை வீடுகள் மட்டுமல்லாமல், நெசவாளர்களுக்கென அதிகப்படியாக வீடுகளை கட்டித் தருவது குறித்து இந்த அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது; விரைவில் இதற்கான அறிவிப்பு வெளியிடப்படும் என்று நான் அறிவித்தேன். அதனைச் செயல்படுத்தும் வகையில், முதற்கட்டமாக, 2013–2014 ஆம் நிதியாண்டில் 10,000 நெசவாளர்களுக்கு பசுமை வீடுகள் தமிழகம் முழுவதிலும் கட்டித் தரப்படும். முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் 60,000 வீடுகளின்றி, கூடுதலாக நெசவாளர்களுக்கென 10,000 வீடுகள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜவுளித் துறையின் ஓர் அங்கமாக விளங்கும் பட்டு வளர்ச்சித் துறையில் இந்தியாவில் உள்ள பிற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழும் தமிழகம் தொடர்ந்து இந்தச் சாதனைகளை நிகழ்த்தும் வண்ணமும், தரமான பட்டு உற்பத்தியில் தன்னிறைவை நோக்கி பீடு நடை போடும் வண்ணமும், லாபகரமான பட்டுப் புழு வளர்ப்புத் தொழிலை விவசாயிகளிடையே பிரபலப்படுத்தும் வண்ணமும், "பஞ்சாயத்திற்கு ஒரு பட்டு விவசாயி" என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இப்புதிய திட்டத்தின் கீழ் ஏற்கெனவே பட்டுப் புழு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள கிராமங்கள் இல்லாமல், 300 புதிய கிராமங்களில் 2013 – 2014 ஆம் நிதி ஆண்டில் ஒரு கிராமத்திற்கு குறைந்த பட்சம் ஒரு விவசாயி பட்டுப் புழு வளர்ப்புத் தொழிலில் முன்னோடியாக ஈடுபடுத்தப்படுவார். இவரது செயல்பாட்டினை தொடர்ந்து, கிராமத்திலுள்ள மற்ற விவசாயிகள் பட்டுப் புழு வளர்ப்புத் தொழிலில் ஆர்வமுடன் ஈடுபட வாய்ப்பு ஏற்படும்.

தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியினை ஏற்படுத்திடும் முக்கிய உத்திகளில் ஒன்றான மழை நீர் சேகரிப்பை ஊக்குவிக்கும் வகையில், பண்ணைக் குட்டைகள், தடுப்பு அணைகள், கசிவு நீர்க் குட்டைகளை உருவாக்குதல், நுண்ணீர்ப் பாசனம் அமைத்தல், ஏரி குளங்களில் தூர் வாருதல் முதலிய நீர் ஆதாரங்களை மேம்படுத்தும் பணிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இதன் தொடர்ச்சியாக, வேளாண் பொறியியல் துறையினரின் தொழில்நுட்ப உதவியுடன், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் 2013–2014ஆம் நிதியாண்டில் 50 பண்ணைக் குட்டைகள் அரசு பட்டுப் பண்ணைகளில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பட்டு நூல் உற்பத்தியையும், தரத்தினையும் மேம்படுத்தும் வகையில், ஒசூர், வாணியம்பாடி, சேலம், தாளவாடி, புதுக்கோட்டை, சிவகங்கை, நன்னகரம் (தென்காசி) மற்றும் நாகர்கோவில் ஆகிய எட்டு இடங்களில் உள்ள எட்டு அரசு பட்டு நூற்பு அலகுகளிலும் 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட புதிய பல முனை பட்டு நூற்பு இயந்திரங்கள் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்னாள் முதல்வர் மறைந்த புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் 1979ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட பட்டு வளர்ச்சித் துறையின் இயக்குநர் அலுவலகத்திற்கு 33 வருடங்களாகியும் சொந்தக் கட்டடம் இல்லாததைக் கருத்தில் கொண்டு, 1 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பில் சேலத்தில், பட்டு வளர்ச்சித் துறை இயக்குநர் அலுவலகத்திற்கு கட்டடம் ஒன்று கட்டித் தரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது தமிழ்நாட்டில் பட்டு விவசாயிகளுக்கும், பட்டு வளர்ச்சித் துறையில் பணியாற்றும் விரிவாக்கப் பணியாளர்களுக்கும் நவீன பட்டுத் தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சி அளிப்பதற்கு ஒசூரில், தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி

நிலையம் செயல்பட்டு வருகிறது. 'பஞ்சாயத்துக்கு ஒரு பட்டு விவசாயி' என்ற திட்டத்தினை இந்த ஆண்டு செயல்படுத்துவதன் முலம் அதிக எண்ணிக்கையிலான விவசாயிகள் பட்டுப் புழு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட வாய்ப்புள்ளதால், அவர்களுக்கும் பட்டுத் தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சி அளிக்க ஏதுவாக இப்பயிற்சி நிலையத்திற்கு கூடுதலாக நவீன பயிற்சிக் கூடங்களும், தங்கும் விடுதியும் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைவினைப் பொருட்களைத் தயாரிக்கும் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில், 10 கைவினைக் கலைஞர்களுக்கு ஆண்டுதோறும் ''தமிழ்நாடு மாநில விருது'' வழங்கப்பட்டு வருகிறது. இக்கைவினைக் கலையை மேலும் ஊக்குவிக்கும் வண்ணம், 2011–2012 ஆம் ஆண்டில் முதன் முதலாக ''மாவட்ட கைத் திறன் விருது'' எனும் புதிய விருது எனது அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த விருது 16 விதமான கைத் திறத் தொழில்களில் கை தேர்ந்த 85 கைவினைஞர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. பெண் கைவினைஞர்களை ஊக்குவிக்கும் விதமாக, மேற்படி மாவட்ட கைத்திறன் விருதுகளில் 17 விருதுகள் பெண் கைவினைஞர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

''ஜப்பான் நாட்டின் வாழும் தேசிய பொக்கிஷங்கள்'' Living National Treasures of Japan எனும் விருதை, ஏழு விதமான கலைப் பொருட்கள் தயாரிக்கும் கைவினைஞர்களுக்கு ஜப்பான் அரசு வழங்கி வருவது போல், தமிழ் நாட்டிலும் கைத்திறன் தொழிலில் பணிபுரிந்து அதற்காகவே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட கைவினைஞர்களுக்கு ''வாழும் கைவினைப் பொக்கிஷம்'' என்ற உயரிய விருது இந்த ஆண்டு முதல் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். கலைஞர்களைப் பொக்கிஷமாக கருதி அறிவிக்கும் இத்தகைய விருது இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் முதன் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பஞ்சலோக சிற்பங்கள், பித்தளை விளக்குகள் மற்றும் பித்தளைக் கலைப்

பொருட்கள், தஞ்சாவூர் ஓவியங்கள், தஞ்சாவூர் கலைத் தட்டுகள், மர சிற்பங்கள், கற் சிற்பங்கள், சுடுகளிமண், கலம்காரி / பத்திக் /அப்ளிக் துணி ஓவியங்கள், காகிதக் கூழ் பொம்மைகள், பாய் நெசவு, மூங்கில் மற்றும் பனை ஓலை பொருட்கள், நெட்டி வேலை, நார் பொருட்கள், கோவில் நகைகள், சித்திரத் தையல் வேலை, இதர கைவினைப் பொருட்கள் ஆகிய 16 விதமான கைத்திறன் தொழில்களில் இருந்தும் கைதேர்ந்த 65 வயதுக்கும் மேற்பட்ட 10 கைவினைஞர்களை தேர்வுக் குழு மூலம் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு இவ்விருது ஆண்டுதோறும் வழங்கப்படும். இவ்விருது பெறும் கைவினைஞர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கம், தாமிரப் பத்திரம், ஒரு சவரன் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் ஆகியவை வழங்கப்படும். இத்திட்டம் 2013–2014 ஆம் ஆண்டில் 15 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் மூலமாக செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தின் பாரம்பரியப் பெருமைகளை வெளிப்படுத்தும் கைத்திறத் தொழில்களில் தஞ்சாவூர் ஓவியங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த அரிய கலை அழியும் நிலை ஏற்பட்ட போது அன்றைய தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் ஆணைப்படி தஞ்சாவூர் ஓவியங்களுக்கான பயிற்சி வகுப்புகள் 1980–1981ஆம் ஆண்டு தஞ்சையில் நடத்தப்பட்டு இக்கலைக்கு புத்துயிர் அளிக்கப்பட்டது.

இதன் காரணமாக இக்கலை தற்போது தேவையின் அடிப்படையில் பரவலாக பிற பகுதிகளில் வளர்ந்துள்ளது. இக்கலையை மேலும் பரவலாக்கும் வண்ணமும், வீட்டிலுள்ள மகளிர் இந்தக் கலையை கற்று சுயமாக சம்பாதிப்பதற்கு வழிவகை செய்யும் வகையிலும், தற்போது திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கத்தில், திறன் மிக்க கைவினைஞர்களைக் கொண்டு, 100 மகளிருக்கு தஞ்சாவூர் ஓவியங்கள் தயாரித்தலுக்கான ஓராண்டுப் பயிற்சி அளிக்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஸ்ரீரங்கம் மற்றும் அதைச் சுற்றியுள்ள கோயில்களில் பிரசித்தி பெற்ற

ரங்கநாதர், தன்வந்திரி, அகிலாண்டேஸ்வரி, சமயபுரம் மாரியம்மன், சக்கரத்தாழ்வார், சமய முனிவர் இராமானுஜர் ஆகியோரின் திருவுருவங்களை மையப்படுத்தி பயிற்சி அளிக்கப்படும். மேற்படி பயிற்சிக்குத் தேவைப்படும் மூலப் பொருள்களை வழங்குவதுடன், பயிற்சியாளர்களுக்கு 2,000/– ரூபாய் மாத உதவித் தொகையும் வழங்கப்படும். பயிற்சியின் முடிவில் அவர்களுக்கு உரிய சான்றிதழும் வழங்கப்படும். நடப்பாண்டில் இத்திட்டம் 83 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் செயல்படுத்தப்படும்.

மேற்காணும் நடவடிக்கைகள் ஜவுளித் தொழில், பட்டுப் புழு வளர்ப்புத் தொழில் மற்றும் கைத்திறத் தொழில்கள் மேம்படவும், இந்தத் தொழில்களில் ஈடுபடுவோர் வாழ்வு சிறக்கவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

அரசு அலுவலகங்கள் தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்புடன் இணைப்பு!

08.05.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அனைத்து மக்களும் உடனுக்குடன் தொடர்பு கொள்ள வழி ஏற்படுத்தி, உலகை மிகச் சிறிய பரப்புடையதாக்கி 'உலகமே சிறு கிராமம்' என்று சொல்லும் அளவுக்கு தகவல் தொழில் நுட்பவியல் துறை உலகையே சுருக்கியுள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது.

எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், 2002 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட புதிய தகவல் தொழில் நுட்பவியல் கொள்கை தான் தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்ல வித்திட்டது.

அரசுத் துறைகளில் மின் ஆளுகை முயற்சிகளை செயல்படுத்த ஏற்படுத்தப்பட்டுள்ள, மின் ஆளுமை இயக்குனரகம் பலப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, அதன் கட்டுப்பாட்டின் கீழ் தகவல் தொழில் நுட்பவியல் ஆற்றல் மற்றும் பயிற்சி பெற்றவர்களைக் கொண்ட ஒரு தகவல் தொழில் நுட்பவியல் பணி நிலைப் பிரிவு, அதாவது IT Cadre உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பிரிவிலிருந்து தலைமைச் செயலகம் மற்றும் மாநிலத்தில் உள்ள துறைத் தலைமை அலுவலகங்களுக்கு பணிபுரிய அலுவலர்கள் அனுப்பப்படுவர். அவர்கள் அரசு துறைகளில் மின் ஆளுகை முயற்சிகளை செயல்படுத்த உதவி புரிவர்.

மேகக் கணினியம், அதாவது Cloud Computing என்பது கணினித் திறனை இணையத்தின் வாயிலாக பெறக் கூடிய ஒரு அமைப்பாகும். இதன் மூலம் கணினித் திறன்களை வழங்கும் நிறுவனங்களிடம் இருந்து உள் கட்டுமான சேவை, மென் பொருள் தள சேவை, மென் பொருள் சேவை ஆகியவற்றைப் பெற முடியும்.

இப்படிப்பட்ட இன்றியமையாத் தன்மை வாய்ந்த மேகக் கணினியத்தை மாநிலத் தரவு மையத்தில் (State Data Centre) ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முன் மாதிரி ஆய்வுகள் நல்ல பலனை அளித்ததால், மாநிலத் தரவு மையத்தில் (State Data Centre) முழுமையான மேகக் கணினியம் 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் மூலம் கணினி மென் பொருட்கள் மற்றும் வன் பொருட்கள் உள்ளடங்கிய கட்டமைப்பை, பயன்பாட்டுக் கட்டண முறையில் அரசுத் துறைகள் பெற இயலும் என்பதால், வன் பொருட்கள், மென் பொருட்கள், கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்காக ஏற்படும் செலவினங்கள் பெருமளவில் குறையும்.

தமிழ்நாடு பெரும் பரப்பு வலையமைப்பு, அதாவது Tamil Nadu State Wide Area Network, அரசுத் துறைகளை இணைப்பதற்காக உருவாக்கப்பட்ட ஒரு பிரத்தியேகமான இணைப்பாகும். இந்த இணைப்பின் மூலம் குரல், தரவு, வலையம் மற்றும் காணொலி ஆகிய சேவைகளை வழங்க இயலும். இதன் மூலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் ஆகியவை உள்ளடக்கிய 708 வலைய இணைப்பு முனைகள் Points of presence எல்காட் நிறுவனம் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை வணிகவரித் துறை, தமிழ் நாடு குடிநீர் வழங்கல் வாரியம், சுகாதாரத் துறை போன்ற பல அரசுத் துறைகளின் 1,853 அலுவலகங்களுக்கு கிடைமட்ட இணைப்பு, அதாவது Horizontal Connectivity கொடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்

முதற்கட்டப் பணிகள் முடிவுற்று தற்பொழுது இரண்டாம் கட்டப் பணிகள் தொடங்கப்பட உள்ளன. இத்திட்டத்தின் மூலம் பல்வேறு அரசுத் துறைகளும் தங்களது துறை சார்ந்த சேவைகளை பொது மக்களுக்கு அளித்து வருகின்றன. இத்திட்டத்தின் இரண்டாம் கட்டச் செயல்பாட்டிற்கு எல்காட் நிறுவனம் நிதி உதவி கோரியுள்ளது. இத்திட்டத்திற்கான அலை வரிசை இணைப்பு ஒரே நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்டுள்ளதால் அந்த இணைப்பில் ஏதேனும் எதிர்பாராத இடையூறுகள் ஏற்படும் போது, அரசின் சேவைகளை தொடர்ந்து அளிக்கும் விதத்தில் பதிலி இணைப்பு, அதாவது Redundant Connectivity ஒன்று அவசியம் ஆகிறது. மேலும் இவ்வலைய இணைப்பு முனைகளில் இருந்து சற்று தொலைவில் அமைந்துள்ள பல அரசு அலுவலகங்களுக்கு கிடைமட்ட இணைப்பையும் அளிக்க வேண்டியுள்ளது.

எனவே, தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பின் இரண்டாம் கட்டச் செயல்பாட்டிற்கு 50 கோடி ரூபாயும், பதிலி இணைப்பிற்கு 10 கோடி ரூபாயும், கிடைமட்ட இணைப்பிற்கு 40 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 100 கோடி ரூபாய் நிதியினை எனது தலைமையிலான அரசு வழங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் மூலம் இன்னும் பல அரசு அலுவலகங்கள் தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்புடன் இணைக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், அரசுத் துறைகளின் மின் ஆளுமை முயற்சிகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு பொதுமக்களுக்கான சேவைகள் துரிதமாக வழங்கப்படும்.

அரசின் பல்வேறு துறைகளில், துறை சார்ந்த முடிவுகளை எடுப்பதற்காக இடம் சார், அதாவது Spatial மற்றும் இடம் சாராத, அதாவது Non Spatial தரவுகளை சீராக இணைக்கும் புவி சார் தகவல்கள், அதாவது Geographical Information மிகவும் அவசியமானதாகும். இதனை நிறைவு செய்யும் வகையில், 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புவி சார் தகவல்களைக் கொண்ட ஒரு பொதுவான மின்னணு வரைபடக் காப்பக தளம் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மின்னணு வரைபடக் காப்பகத் தளத்திலிருந்து தேவையான வரைபடங்களை, தேவைப்படும் துறைகள் பதிவிறக்கம் செய்து உபயோகிக்க, அனுமதி வழங்கப்படும். இதன் மூலம் அரசுத் துறைகளுக்கு மின்னணு வரைபடங்கள் சுலபமாக கிடைப்பதோடு அல்லாமல் தொழில்நுட்ப பக்கபலமும் கிடைக்கும்.

மின் ஆளுமையின் மூலம் பல்வகையான அரசின் சேவைகள் மக்களுக்கு எளிதில் சென்று அடைவதற்கென, சிறப்பு நோக்குத் துறைகள் Mission Mode Departments தேர்ந்தெடுக்கப்பட்டு, அத்துறைகள் முழுமையாக கணினிமயம் ஆக்கப்பட்டு வருகின்றன. இக்கணினிமயம் ஆக்கல் திட்டச் செலவினங்களை இத்துறைகள் மேற்கொள்வதற்காக பிரத்தியேகமாக சிறப்பு நிதி ஒதுக்கீடு அரசால் செய்யப்பட்டு வருகிறது.

இதே போன்று, சிறப்பு நோக்குத் துறைகள் அல்லாத மற்ற துறைகளிலும், மின் ஆளுமை முயற்சிகளை ஒருங்கிணைத்து பொதுமக்களுக்கு அரசின் சேவைகளை வழங்கும் முயற்சிகளுக்கு ஆதரவு அளிப்பதற்காக ஒரு மின் ஆளுமை முயற்சிக்கான நிதி e-Governance Initiative Fund உருவாக்கப்படும். இதற்கென 10 கோடி ரூபாய் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் சிறப்பு நோக்குத் துறைகளில் மட்டுமன்றி, அனைத்து அரசுத் துறைகளிலும் அரசிடமிருந்து குடிமக்களுக்கு, அரசிடமிருந்து வணிகர்களுக்கு, அரசிடமிருந்து அரசுக்கு வழங்கப்படும் அனைத்து சேவைகளும் சரியான நேரத்தில், சரியான இடத்தில், முறையாக மற்றும் விரைவாக வழங்கப்படும்.

மேற்காணும் நடவடிக்கைகள், அரசின் சேவைகள் அனைத்துத் தரப்பு மக்களையும் விரைவாகவும், எளிதாகவும் சென்றடைய வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு ரூ.4.27 கோடி மதிப்பீட்டில் அலுவலகக் கட்டடம் !

09.05.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கிற்கும் மேல் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் மற்றும் சிறுபான்மையினரின் கல்வி, சமூக மற்றும் பொருளாதார நிலையினை மேம்படுத்திட பல்வேறு நலத் திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

சமூகத்தின் நலிவுற்ற பிரிவினருக்காக, கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டிற்கு சட்டப் பாதுகாப்பு வழங்கிய அரசு இந்த அரசு என்பதைப் பெருமையோடு இந்தத் தருணத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

விடுதிகளில் தங்கிப் படிக்கும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் மற்றும் சிறுபான்மையின மாணவ, மாணவியர் கல்வி கற்பதற்கு ஏற்ற சூழ்நிலை உருவாக்க வேண்டும் என்பதன் அடிப்படையில், அனைத்து விடுதிகளுக்கும் நவீன வசதிகளுடன் கூடிய சொந்தக் கட்டடம் கட்டும் திட்டத்தினை எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. இத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் 1,294 விடுதிகளில் 1,000 விடுதிகள் ஏற்கெனவே சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றில் பெரும்பாலானவை 2001 முதல் 2006 வரை நடைபெற்ற எனது 2ஆவது ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. 226 விடுதிகளுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஏற்கெனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு

கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. எஞ்சியுள்ள 68 விடுதிகளுக்கு நடப்பாண்டில் 86 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் நவீன வசதிகளுடன் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவற்றில் 47 விடுதிகள் 100 மாணவ – மாணவியர் தங்கும் வகையிலும், 21 விடுதிகள் 50 மாணவ – மாணவியர் தங்கும் வகையிலும் கட்டப்படும். இவ்வாறு கட்டப்படும் கட்டடங்களில் சூரிய ஒளி மூலம் தண்ணீரை சூடுபடுத்தும் கருவிகள் மற்றும் சூரிய ஒளி போட்டோ வோல்டேக் பவர் பிளாண்ட் ஆகியவை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை மூலம் நிறுவப்படும்.

இது மட்டுமல்லாமல், 1,000 ஏழை, எளிய மாணவ – மாணவியர் பயன்பெறும் வகையில், 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் பிற்படுத்தப்பட்டோருக்கான 5 விடுதிகள், மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கான 3 விடுதிகள், சீர் மரபினருக்கான ஒரு விடுதி மற்றும் சிறுபான்மையினருக்கான ஒரு விடுதி என மொத்தம் 10 பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகள் புதிதாக துவங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுக் கட்டடங்களில் இயங்கி வரும் 1,000 விடுதிகளில் சுமார் 767 விடுதிகளுக்கு, பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது என்பது எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதனைத் தொடர்ந்து இவ்விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் நல்ல அமைதியான, சுகாதாரமான சூழ்நிலையில் தங்கி கல்வி பயில வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், இவ்விடுதிகளின் பராமரிப்புப் பணிகளுக்காக ஒரு முறை ஒதுக்கீடாக 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் வகுப்பைச் சேர்ந்த

மாணவ, மாணவியருக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகையை பெறுவதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு தற்போது ஒரு இலட்சம் ரூபாயாக உள்ளது. இது 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 23 கோடியே 24 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும். இதன் மூலம் ஏறத்தாழ 1,05,000 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபின வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர் பயனடைவர்.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், சிறு கடன் திட்டத்தின் கீழ் 20 உறுப்பினர்கள் அடங்கிய மகளிர் சுய உதவிக் குழு ஒன்றிற்கு அதிக பட்சம் பத்து இலட்சம் ரூபாய் வரை 4 விழுக்காடு ஆண்டு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்குகிறது. ஆடவர் சுய உதவிக் குழுக்களுக்கு அதே அளவில் 5 விழுக்காடு ஆண்டு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்குகிறது. தனி நபர் மகளிருக்கு 'புதிய பொற்கால திட்டத்தின்' கீழும், ஆடவர் தனி நபருக்கு 'பொதுக் கால கடன் திட்டத்தின்' கீழும் அதிக பட்சம் ஒரு இலட்சம் ரூபாய் வரை முறையே 5 விழுக்காடு மற்றும் 6 விழுக்காடு ஆண்டு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்குகிறது. இது தவிர, கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க உறுப்பினர்கள் தலா 2 உயர் ரக கறவை மாடுகள் வாங்குவதற்கு அதிக பட்சம் 60,000/– ரூபாய் வரை 6 விழுக்காடு ஆண்டு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்குகிறது. இந்த நிறுவனம் இதுவரை 3,22,831 பயனாளிகளுக்கு 313 கோடியே 93 இலட்சம் ரூபாய் கடன் உதவி வழங்கியுள்ளது. மேலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் வகுப்புகளைச் சேர்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு புதிய ஆழ் துளை கிணறு அமைத்து நீர்ப்பாசன வசதி ஏற்படுத்திக் கொள்ள வழங்கப்படும் 50 விழுக்காடு அரசு மானியத்துடன் கூடிய கடன் திட்டத்தின் கீழ் இந்நிறுவனம் இதுவரை 785 பயனாளிகளுக்கு 3 கோடியே 84 இலட்சம் ரூபாய் அரசு மானியமாக வழங்கியுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் வகுப்புகளைச் சார்ந்தவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக லாப நோக்கமின்றி செயல்பட்டு வரும் இந்த நிறுவனம் துவங்கப்பட்ட நாள் முதல் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவது எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு சொந்த அலுவலகக் கட்டடம் தேவை என்பதைக் கருத்தில் கொண்டு, சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக சென்னை, எழும்பூர் – நுங்கம்பாக்கம் வட்டம், எழும்பூரில் 4 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 3 கிரவுண்டு மற்றும் 154 சதுர அடி பரப்பளவு கொண்ட அரசு நிலம் நிலக் கிரயமின்றி இந்த நிறுவனத்தின் பெயரில் நில உரிமை மாற்றம் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த இடத்தில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அலுவலகக் கட்டடம் கட்டப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் மற்றும் சிறுபான்மையின மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், அவர்கள் கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் முன்னேற்றம் அடையவும் வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

54 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நல விடுதிகளுக்கு ரூ.52 கோடி மதிப்பில் சொந்தக் கட்டடங்கள்!

09.05.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் வறுமையிலிருந்து விடுபட்டு ஏனையோருக்கு இணையான கல்வி மற்றும் வாழ்வாதாரங்கள் பெற வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வரும் எனது தலைமையிலான அரசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் அறியாமையை நீக்குவதிலும், அவர்களின் கல்வி அறிவை வளர்ப்பதிலும், அவர்களின் வாழ்க்கைத் தரம் உயரத் தேவையான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

மாநில அரசால் செயல்படுத்தப்படும் மாநில போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டம், விடுதிகளில் மாணாக்கர் சேர்க்கை, குடிமைப்பணிப் பயிற்சி மையத்தில் சேர்க்கை, உயர் கல்வி சிறப்பு உதவித் தொகை உட்பட, அனைத்து திட்டங்களுக்கும் தற்போது பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பு ஒரு இலட்சம் ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த வரம்பு இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் கூடுதலாக 30,000 மாணாக்கர்கள் பயன்பெறுவர்.

தற்போது முனைவர் ஆராய்ச்சிப் படிப்பை மேற்கொள்ள கல்லூரியில் தங்கிப் பயிலும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணாக்கர்களுக்கு தலா 18,000 ரூபாயும், விடுதியில் தங்கிப் பயிலாத மாணாக்கர்களுக்கு 10,000 ரூபாயும் வழங்கப்பட்டு

வருகிறது. சமூக மற்றும் பொருளாதார நிலையில் பின் தங்கியுள்ள ஆதி திராவிட மாணவ – மாணவியருக்கு இந்தத் தொகை போதாது என்பதைக் கருத்தில் கொண்டு, முழு நேர முனைவர் பட்டப் படிப்பை மேற்கொள்ளும் 700 ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவ – மாணவியருக்கு ஆண்டுக்கு தலா 50,000/– ரூபாய் வீதம் 4 ஆண்டுகளுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படும். இதற்கென ஆண்டொன்றுக்கு 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் தற்பொழுது ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் 1,300 ஆதி திராவிடர் நல விடுதிகளும், 42 பழங்குடியினர் விடுதிகளும் இயங்கி வருகின்றன. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குழந்தைகள் கல்வி கற்பதற்காக அரசு எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளின் பயனாக இடை நிற்றல் கணிசமாக குறைந்துள்ளது. இருப்பினும், அதிக அளவு மாணாக்கர்கள் சேர்க்கையின் காரணமாக, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளில் உள்ள இட வசதி, குளியல் அறை வசதி, கழிப்பிட வசதி போன்ற அடிப்படை வசதிகள் போதுமானதாக இல்லை என்பதைக் கருத்தில் கொண்டு, நடப்பாண்டில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 52 ஆதி திராவிட நல விடுதிகள், 2 பழங்குடியின நல விடுதிகள் என மொத்தம் 54 விடுதிகளுக்கு 52 கோடி ரூபாய் மதிப்பில் சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்பொழுது மத்திய பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப் பெறும் முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெறும் ஆதி திராவிட மாணாக்கர்களுக்கு முதன்மைத் தேர்வில் Main Exam-ல் சிறப்பாகச் செயல்பட அவர்கள் தங்களைத் தயார்படுத்திக் கொள்வதற்காக சிறந்த கல்வி நிறுவனங்களில் பயிற்சி பெற ஏதுவாக 50,000 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப் பெறும் தொகுதி I, அதாவது Group I முதனிலைத் தேர்வில்

தேர்ச்சி பெறும் ஆதி திராவிட மாணாக்கர்களுக்கு, அவர்கள் முதன்மைத் தேர்வை சிறப்பாக எதிர்கொள்ளும் வகையில், சிறந்த கல்வி நிறுவனங்களில் பயிற்சி பெற ஏதுவாக தலா 50,000/– ரூபாய் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுக்கு தங்களைத் தயார்படுத்திக் கொள்ளும் வகையில் இவ்வாறு உதவித் தொகை வழங்கும் இத்திட்டம் முதன் முறையாக இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் அறிமுகப்படுத்தப்படுகிறது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது, ஆதி திராவிட மற்றும் பழங்குடியின சமுதாயத்தைச் சேர்ந்த சட்டப் பட்டதாரிகள் சுயமாகத் தொழில் தொடங்கிட ஒரு நபருக்கு 50,000 ரூபாய் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் தோராயமாக 250 பயனாளிகள் பயன் அடைகின்றனர். இதே போன்று, ஆதி திராவிட மற்றும் பழங்குடியின இனத்தைச் சார்ந்த பட்டயக் கணக்கர்கள் அதாவது Chartered Accountants, செலவுக் கணக்கர்கள், அதாவது Cost and Works Accountants தேர்ச்சி பெற்ற பின், அவர்கள் சுயமாகத் தொழில் தொடங்கிட ஒரு நபருக்கு 50,000 ரூபாய் மானியமாக வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம், தோராயமாக 100 பயனாளிகள் பயன் அடைவர்.

மாணாக்கர்களுக்கு கணினி வழியாகக் கல்வி கற்பித்து அவர்களின் புரிதல் திறனை மேம்படுத்தும் வகையில் Smart Class Room என்னும் புதிய தொழில் நுட்பம் நடப்பாண்டு முதல் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நலத் துறையின் கீழ் இயங்கும் 100 மேல் நிலைப் பள்ளிகளிலும் அறிமுகப்படுத்தப்படும். இதற்கென 5 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின சமுதாய மக்கள் கல்வி ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மேம்பட வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ❋

மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கென 32 நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள்

09.05.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாற்றுத் திறனாளிகளை மனித சமுதாயத்தின் ஓர் அங்கமாக அனைவரும் அங்கீகரிக்கும் வகையிலும், நாட்டின் வளர்ச்சியில் மாற்றுத்திறனாளிகளின் பங்கேற்பினை உறுதி செய்யும் வகையிலும், ஏனைய மக்களுக்கு இணையாக மாற்றுத் திறனாளிகள் வாழும் வண்ணமும் எனது தலைமையிலான அரசு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர் கல்வி பயில்வதை ஊக்கப்படுத்தும் வகையில் 1 முதல் 5–ம் வகுப்பு வரை பயிலும் மாணவ–மாணவியருக்கு 500 ரூபாயும், 6–ம் வகுப்பு முதல் 8–ம் வகுப்பு வரை பயிலும் மாணவ–மாணவியருக்கு 1,500 ரூபாயும், 9–ம் வகுப்பு முதல் 12–ம் வகுப்பு வரை பயிலும் மாணவ–மாணவியருக்கு 2,000 ரூபாயும், இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் மாணவ–மாணவியருக்கு 3,000 ரூபாயும், பட்ட மேற்படிப்பு மற்றும் தொழிற்கல்வி பயிலும் மாணவ–மாணவியருக்கு 3,500 ரூபாயும் கல்வி உதவித் தொகையாக ஆண்டுதோறும் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. மாற்றுத்திறனாளி மாணவ – மாணவியர் கல்வி கற்பதை மேலும் ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை நடப்பாண்டு முதல் இரு மடங்காக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் 23,454 மாற்றுத் திறனாளி மாணவ – மாணவியர் பயன்பெறுவர். இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 3 கோடியே 6 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

தற்போது, இரு கால்களும் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட 400 பெட்ரோல் ஸ்கூட்டர்கள் கல்வி பயிலும் மாற்றுத் திறனாளி மாணவ / மாணவிகளுக்கு முன்னுரிமையிலும், எஞ்சிய ஸ்கூட்டர்கள் பணிபுரியும் மற்றும் சுயதொழில் புரியும் மாற்றுத்திறனாளிகளுக்கு விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு நல்ல வரவேற்பு உள்ளதால், பயனாளிகளின் எண்ணிக்கை தற்போதுள்ள 400 இல் இருந்து 1,000 ஆக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென ஆண்டொன்றிற்கு 5 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

மாவட்டத் தலைநகரங்களில் 6 வயது வரை உள்ள மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கென 32 ஆரம்பப் பயிற்சி மையங்களும், செவித் திறன் குறையுடைய குழந்தைகளுக்கென 32 ஆரம்ப நிலை பயிற்சி மையங்களும், பார்வைத் திறன் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கென 18 ஆரம்ப நிலை பயிற்சி மையங்களும் செயல்பட்டு வருகின்றன. இதில் பயன்பெறும் குழந்தைகளுக்கும் அவர்களது துணையாளர்களுக்கும் போக்குவரத்துப் பயணச் சலுகை வழங்கப்பட்டாலும், கடுமையாகப் பாதிக்கப்பட்ட குழந்தைகள் இம்மையங்களுக்கு தொடர்ந்து வருவது சிரமமாக உள்ளதால், இம்மையங்களின் முழு பயனையும் அவர்களால் பெற இயலவில்லை. எனவே, மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கென 32 நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள் தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சிகிச்சைப் பிரிவு ஓர் ஊர்தியில் இயன்முறை சிகிச்சைக் கருவியுடன் செயல்படும். இச்சிகிச்சைப் பிரிவு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்களின் கண்காணிப்பில், பல்நோக்கு மறுவாழ்வு உதவியாளர் மற்றும் முட நீக்கு வல்லுநர் ஆகியோரைக் கொண்டு செயல்படும். இத்திட்டத்திற்கென தொடராச் செலவினமாக 3 கோடியே 52 இலட்சம் ரூபாயும், தொடர் செலவினமாக 97 லட்சம் ரூபாயும், என மொத்தம் 4 கோடியே 49 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பார்வையற்ற மாற்றுத்திறனாளி மாணவ–மாணவியரின் கல்வி அறிவை மேம்படுத்தும் வகையில், 9–ம் வகுப்பு முதல் 12–ம் வகுப்பு வரை பயிலும் மாணவ–மாணவியருக்கு 1,500 ரூபாயும், இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் மாணவ–மாணவியருக்கு 2,500 ரூபாயும், பட்ட மேற்படிப்பு மற்றும் தொழிற்கல்வி பயிலும் மாணவ–மாணவியருக்கு 3,000 ரூபாயும் என வாசிப்பாளர் உதவித் தொகை ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டு முதல் இந்த வாசிப்பாளர் உதவித் தொகை இரு மடங்காக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் 1,500 பார்வையற்ற மாணவ – மாணவியர் பயன்பெறுவர். இதனால் அரசுக்கு ஆண்டொன்றிற்கு 19 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள் மாற்றுத் திறனாளிகளின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

25 புதிய அரசுப் பேருந்து பணிமனைகள் அமைப்பு மற்றும் மலைப்பிரதேசங்களில் 250 சிற்றுந்துகள் அறிமுகம்

10.05.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உலகம் ஒரு குடும்பம் என்னும் தத்துவத்தை அடைய உறுதுணையாக இருக்கும் போக்குவரத்து சேவையினையும், போக்குவரத்து சேவையினை செவ்வனே புரிந்து வரும் போக்குவரத்துத் தொழிலாளர்களின் மேம்பாட்டினையும் உயர்த்தும் உன்னதமான திட்டங்களை எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

மாநிலத்திலுள்ள போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் பேருந்துகள் சேவை எவ்வித தொய்வும் இன்றி வழங்கிட பணிமனைகள் மிகவும் அவசியம் ஆகும். பணிமனைகள் அதிக அளவில் இருப்பது பேருந்துகள் பழுதுபடுதலை குறைப்பதுடன் டீசல் செலவையும் குறைப்பதற்கு வழிவகை ஏற்படுத்தும். கடந்த இரண்டு ஆண்டுகளில் முன் எப்போதும் இல்லாத வகையில் 43 பணிமனைகள் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பல சட்டமன்ற உறுப்பினர்களும் இந்த மாமன்றத்தில் பல இடங்களில் பணிமனைகள் அமைக்க வேண்டும் என கோரியுள்ளனர். பணிமனைகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கும் வகையில், மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் ஆதம்பாக்கம், குரோம்பேட்டை, பெரம்பூர், குன்றத்தூர், பெரும்பாக்கம், தையூர், கும்மிடிபூண்டி ஆகிய இடங்களிலும்; தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் விழுப்புரம் கோட்டத்தில் செங்கம், எலத்தூர் ஆகிய இடங்களிலும்; தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் சேலம் கோட்டத்தில் ஓமலூர், பள்ளப்பட்டி ஆகிய இடங்களிலும்; தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக்

கழகம் கோயம்புத்தூர் கோட்டத்தில் சூலூர், மதுக்கரை, கிணத்துக்கடவு, பேரூர் ஆகிய இடங்களிலும்; தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் கோட்டத்தில் விராலிமலை, உப்பிலியாபுரம், பிராட்டியூர், கரூர், கும்பகோணம், பாளையம் ஆகிய இடங்களிலும்; தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் மதுரை கோட்டத்தில் காரியாப்பட்டி, ஒட்டன்சத்திரம் ஆகிய இடங்களிலும்; தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் திருநெல்வேலி கோட்டத்தில் ஆலங்குளம், சாத்தான்குளம் ஆகிய இடங்களிலும் 25 பணிமனைகள் 22 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் புதியதாக அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மலைப் பிரதேசங்களில் வசிக்கும் மக்கள், மாநிலத்தின் பிற பகுதிகளுக்கு விரைவாக எளிதில் சென்று திரும்பும் வகையில் 35 கோடி ரூபாய் செலவில் 250 சிற்றுந்துகள் அதாவது Mini Bus Service புதியதாக அறிமுகப்படுத்தப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இடைநிற்றல் இன்றி அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்ற நோக்கத்தினை நிறைவு செய்யும் வகையில், அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு திட்டங்களின் பயனாக பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களின் எண்ணிக்கை மற்றும் கல்லூரிகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. மேலும் தொழில் துறை மற்றும் அறிவியல் துறைகளில் அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக தொழில் துறை நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களின் எண்ணிக்கையும் ஆண்டு தோறும் அதிகரித்து வருகிறது. எனவே, இதனால் ஏற்படும் கூடுதல் போக்குவரத்துத் தேவையினை நிறைவேற்றும் வகையிலும், அவர்களுக்கு மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து சேவையினை வழங்கிடும் வகையிலும், தற்போது சென்னை பெருநகரத்தில் மகளிர் மற்றும் சிறுவர்களுக்காக இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கை 134 லிருந்து 200 ஆக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முன் பதிவு செய்யும் பயணிகளை ஊக்குவிக்கும் வகையில், குறைந்த பட்சம் 10 அல்லது அதற்கு மேற்பட்ட பயணச் சீட்டுகள் முன் பதிவு செய்யும் குழுமப் பயணிகளுக்கு பயணத் தொகையில் 10 சதவீதம் தள்ளுபடி வழங்கப்படும். இந்தச் சலுகை தவறாக பயன்படுத்தப்படுவதை தடுக்கும் வகையில் தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகைக் காலங்களில் இச்சலுகை வழங்கப்பட மாட்டாது.

போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகளில் வழக்கமாக பயணம் செய்யும் பயணிகளுக்கு மாநகர் / நகரப் பேருந்துகளில் தற்போது மூன்றில் ஒரு பங்கு சலுகைக் கட்டணத்துடன் கூடிய மாதாந்திர பயணச் சீட்டு வழங்கும் முறை நடைமுறையில் உள்ளது. இந்தச் சலுகை புறநகர் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், பயணிகளின் வசதிக்காக புதுப்பிக்கப்படக் கூடிய கையடக்க பயண அட்டை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின்படி பயணிகள் பயணிக்கும் போது அதற்குரிய கட்டணம் பயண அட்டையில் உள்ள தொகையிலிருந்து கழித்துக் கொள்ளப்படும். போக்குவரத்துக் கழக கிளை அலுவலகம் அல்லது பேருந்து நிலைய அலுவலகம் மற்றும் நடத்துநரிடம் பணத்தினை செலுத்தி கையடக்க அட்டையினை புதுப்பித்துக் கொள்ளலாம். இத்திட்டம் முதற்கட்டமாக சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் அறிமுகப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாகனப் பெருக்கம் மற்றும் சரக அலுவலகத்திற்கும் அதன் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் அலுவலகங்களுக்கும் இடையில் உள்ள தூரம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, நிர்வாகத் திறனை மேம்படுத்த வேலூரை தலைமை இடமாகக் கொண்டு ஒரு புதிய துணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகம் ஏற்படுத்தப்படும்.

போக்குவரத்து வாகனத்திற்கான அனுமதிச் சீட்டு, வாகன மறு பதிவு, தடையில்லாச் சான்று, பன்னாட்டு ஓட்டுநர் உரிமம் ஆகியவற்றைப் பெற பொதுமக்கள் அதிக தூரம் பயணம் செய்வதைத் தவிர்க்கும் வகையில், சோழிங்கநல்லூர், அம்பத்தூர், வாணியம்பாடி, மயிலாடுதுறை மற்றும் ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள பகுதி அலுவலகங்கள், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாக தரம் உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெருகி வரும் வாகன எண்ணிக்கை மற்றும் மக்கள் தொகை காரணமாக தற்போது இயங்கி வரும் போக்குவரத்து அலுவலகங்களில் அன்றாடப் பணிகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இதன் விளைவாக, பொது மக்களுக்கு துரித சேவை செய்திட முடியாத சூழ்நிலை உள்ளது. பொதுமக்களுக்கு விரைந்து சேவை செய்யும் நோக்கில், மீனம்பாக்கம் வட்டாரப் போக்குவரத்து அலுவலக நிர்வாகக் கட்டுப்பாட்டில் உள்ள குன்றத்தூரில், கூடுதலாக ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகமும், சேலம், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில், கூடுதலாக வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களும் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது மக்கள், ஓட்டுநர் உரிமம், நடத்துநர் உரிமம் மற்றும் வாகனப் பதிவு போன்ற பல்வேறு சேவைகளை உடனுக்குடன் பெறும் வகையில், திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி, கடலூர் மாவட்டம் பண்ருட்டி, விழுப்புரம் மாவட்டம் செஞ்சி, வேலூர் மாவட்டம் ஆம்பூர், புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர், திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி, திருச்சி மாவட்டம் லால்குடி, கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை ஆகிய இடங்களில், புதிய பகுதி அலுவலகங்கள் தொடங்கப்படும்.

சாலைப் பாதுகாப்பில் வாகன ஓட்டுநரின் பங்களிப்பு இன்றியமையாதது என்பதைக் கருத்தில் கொண்டும், சாலை விபத்துகளை தவிர்க்கும் வண்ணமும், மொத்தமுள்ள **42**

போக்குவரத்து ஓட்டுநர் தேர்வு தளங்களில், முதற்கட்டமாக 14 ஓட்டுநர் தேர்வு தளங்கள் இந்த ஆண்டு 10 கோடி ரூபாய் செலவில் கணினிமயம் ஆக்கப்பட்ட ஓட்டுநர் தேர்வு தளங்களாக மாற்றி அமைக்கப்படும். கணினிமயம் ஆக்கப்பட்ட தேர்வுத் தளங்கள் மூலம் ஓட்டுநர் உரிமத் தேர்வு நடத்தப்படும் போது, தேர்வு முடிவுகள் அனைத்தும் கணினி வரைபடம் மூலம் துல்லியமாக பதிவு செய்யப்பட்டு, திறமையின் அடிப்படையில் ஓட்டுநர் உரிமம் வழங்க இயலும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணிக்கும் பயணிகளின் வசதியையும், போக்குவரத்து உரிமங்களை பெறும் பொதுமக்களின் வசதியையும், மேம்படுத்துவதோடு, சாலை விபத்துக்களைக் குறைக்கவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

ரூ.5 கோடி செலவில் மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவக தொழில் நுட்பவியல் நிறுவனம் சுற்றுலா விருந்தோம்பல் கல்விக்கான சிறப்பு மையமாக நிலை உயர்வு!

10.05.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மக்களின் மன மகிழ்வுக்கு மூலக் கூறாகவும், வேலை வாய்ப்பினையும், அன்னியச் செலாவணியையும் ஈட்டித் தருவதில் முக்கியப் பங்கு வகிக்கும் சுற்றுலாவை மேம்படுத்துவதிலும், அரிய கலைச் செல்வங்களைப் பேணிப் பாதுகாப்பதிலும், திறன் படைத்த கலைஞர்களைக் கண்டறிந்து ஊக்குவிப்பதிலும் அதிக அக்கறையுடன் எனது தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துவாக்குடியில் உள்ள மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் மூன்றாண்டு பட்டயப் பயிற்சியும், ஓராண்டு சான்றிதழ் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. இது மட்டுமல்லாமல், ஓட்டல் பணியாளர்களுக்கான பயிற்சித் திட்டம் மற்றும் திறன் சார் பயிற்சித் திட்டங்களின் கீழ் திறன் சாராத நபர்களுக்கு வேலை வாய்ப்புப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இந்த நிறுவனம் அனைத்து விதமான சுற்றுலா விருந்தோம்பல் கல்விக்கான சிறப்பு மையமாக **5** கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், பெருமுக்கல் என்ற கிராமத்தில் மலை மீது அமைந்துள்ள ஸ்ரீமுக்யாசலேஸ்வரர் கோயில் தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்ட சின்னமாக அறிவிக்கை செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டு வரும் கோயில் ஆகும்.

செங்கல் கோயிலாக இருந்த இக்கோயில், சோழ மன்னனான விக்கிரம சோழ அரசர் காலத்தில் கற்கோயிலாக மாற்றப்பட்டது. இக்கோயிலில் உள்ள இறைவனின் பெயர் தமிழில் திருவான்மிகை ஈஸ்வரமுடையார் என்றும், பெருமுக்கல் உடையார் என்றும் வடமொழியில் ஸ்ரீமுக்யாசலேஸ்வரர் என்றும் வழங்கப் பெறுகிறது. தற்போது, இக்கோயில் மிகவும் சிதிலமடைந்த நிலையில் உள்ளதால், வரலாற்றுச் சிறப்புமிக்க இக்கோயிலை பழமை மாறாமல் பாதுகாத்து மறு சீரமைப்புப் பணியை மேற்கொள்ள 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என்பதை மனநிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் அதிக அளவில் திருக்கோயில்களும் அவற்றில் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. இதுவரை தொல்லியல் துறையால் 24,060 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகள் தமிழ் பிராமி, வட்டெழுத்து, பண்டைய தமிழ், கிரந்தம், தெலுங்கு, கன்னடம், நாகரி போன்ற எழுத்து வடிவங்களில் உள்ளன. தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறையால் 1967 ஆம் ஆண்டு முதல் படியெடுக்கப்பட்ட கல்வெட்டு மைப்படிகள் Estampages சிதைந்து, கிழிந்து போகும் அபாயத்தில் உள்ளன. இவற்றை ஒழுங்குபடுத்தி சீர் செய்து படிப்பதற்கு ஏற்றவாறு செய்வது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, இக்கல்வெட்டுகளை எண்ணிலக்கம், அதாவது Digitalization முறையில் ஆவணப் படுத்துவதற்காகவும், மாவட்டம், வட்டம், ஊர், கோயில்கள் வாரியாக மைப்படிகளில் உள்ள குறிப்பிடப்பட்ட எண்களைக் கொண்டு தனித் தனியாக பிரித்து கணினியின் மூலம் பதிவு செய்வதற்காகவும், 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பணிகள் நடப்பாண்டு முதல் மூன்று ஆண்டுகளில் செய்து முடிக்கப்படும். இதன் மூலம் தற்போதைய மற்றும் வருங்கால ஆய்வாளர்களும், மாணவர்களும் மிகுந்த பயனடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ள 6 கட்டடங்களுள், 3 கட்டடங்கள் தொன்மையான பாரம்பரியமிக்க

கட்டடங்கள் ஆகும். அதாவது 100 ஆண்டுகளுக்கு மேல் பழைமையானவை. வரலாற்று முக்கியத்துவம் பெற்றவை. அத்தகைய கட்டடங்களில் ஒன்று 'தேசியக் கலைக்கூடம்' National Art Gallery ஆகும். அந்தக் காலகட்டத்தில் இங்கு தொடர்ந்து அறிவார்ந்த சொற்பொழிவுகள் நடைபெற்று வந்தன. சென்னையின் அடையாளக் கட்டடமாக விளங்கும் இந்தக் கட்டடத்தில் பாரம்பரியமிக்க தஞ்சாவூர், ராஜஸ்தான், டெக்கான், மினியேச்சர் எனப்படும் ஓவியங்கள் மற்றும் சந்தன மரச் சிற்பங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இந்தக் கட்டடம் பழுதடைந்ததாலும், இக்கட்டடத்தின் ஒரு பகுதி ஏறத்தாழ ஒரு பக்கம் அழுத்தப்பட்ட நிலையில் இருந்ததாலும், பொது மக்களின் பயன்பாட்டிற்கு உகந்தது அல்ல என்று 2002ஆம் ஆண்டு முடிவு செய்யப்பட்டு இந்த காட்சிக் கூடம் மூடப்பட்டது. எனினும், இந்தக் கட்டடம் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. வரலாற்றுச் சிறப்பு மிக்க கட்டடங்களை ஆய்வு செய்ய நியமிக்கப்பட்ட சிறப்புக் குழு இந்த கட்டடத்தை ஆய்வு செய்து, இப்புராதனக் கட்டடம் தகுந்த வல்லுனர்களைக் கொண்டு பாதுகாக்கப்பட வேண்டும் என முடிவு செய்துள்ளது. சென்னையின் அடையாளங்களில் ஒன்றான இக்கட்டடத்தைப் பழுது பார்த்துப் புதுப்பிக்க 11 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலை பண்பாட்டுத் துறை கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சென்னை, கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகள் மற்றும் மாமல்லபுரம் அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி ஆகியவற்றில் பயிலும் மாணவர்களுக்கு மடிக் கணினி வழங்குவதன் மூலம் பாடத்தை ஒட்டிய கணினி பயிற்சிகளான Photoshop, Dreamweaver, Director, Maya போன்ற Animation கணினி மென்பொருட்களை நன்கு பயன்படுத்தி கலைப் படைப்புகளைப் புதுமையாகவும், பார்ப்போர் வியக்கும் வண்ணமும் செய்ய இயலும் என்பதைக் கருத்தில் கொண்டு, இந்த மூன்று கல்லூரிகளிலும் இளங்கலை பட்டப் படிப்பு பயிலும் 633 மாணவ மாணவிகளில் ஏற்கெனவே 12 ஆம் வகுப்பின் போது விலையில்லா மடிக்கணினி பெற்ற 59 மாணவர்களைத்

தவிர்த்து, எஞ்சியுள்ள 574 மாணவர்களுக்கு விலையில்லா மடிக் கணினிகள் 1 கோடியே 3 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதே போன்று, திருவையாறு அரசு இசைக் கல்லூரியில் B.A. (Music) அதாவது இளங்கலைப் பட்டப் படிப்பில் பயிலும் 32 மாணவ மாணவியரில் ஏற்கெனவே பள்ளிக் கல்வித் துறையின் மூலம் 12ஆம் வகுப்பில் விலையில்லா மடிக் கணினிகள் பெற்ற 4 மாணவர்களைத் தவிர, எஞ்சியுள்ள 28 மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மடிக் கணினிகள் 5 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலை பண்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ், நான்கு அரசு இசைக் கல்லூரிகள், இரண்டு கவின் கலைக் கல்லூரிகள் மற்றும் ஒரு கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி ஆகிய ஏழு கல்லூரிகள் இயங்கி வருகின்றன. தற்போது திருவையாறு, மதுரை, கோயம்புத்தூர் அரசு இசைக் கல்லூரிகள் மற்றும் கும்பகோணம் அரசு கவின்கலைக் கல்லூரியில் பயிலும் மாணவ மாணவியருக்கு கட்டணமில்லா பேருந்துப் பயண அட்டை வழங்கப்பட்டுள்ளது. ஆனால், சென்னை அரசு இசைக் கல்லூரி, சென்னை அரசு கவின் கலைக் கல்லூரி மற்றும் மாமல்லபுரத்தில் உள்ள அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு கட்டணமில்லா பேருந்துப் பயண அட்டை வழங்கப்படவில்லை. இந்த மூன்று கல்லூரிகளில் பயிலும் 801 மாணவ மாணவிகளுக்கும் எதிர் வரும் கல்வியாண்டில் இருந்து கட்டணமில்லா பேருந்துப் பயண அட்டை வழங்கப்படும். அதற்காக 10 இலட்சத்து 41 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இசையானது ஆன்மாவுடன் தொடர்புடையது என்பதை சாதி, சமய, மத சார்பற்று அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது ஆகும். மனதையும், ஆன்மாவையும் இசைய வைப்பதே இசை.

மேற்கத்திய நடைமுறைகள் மற்றும் நாகரிகம், நமது இசையின் உண்மைத் தன்மையை அழித்துவிடாமல் பாதுகாக்கும் பொருட்டும்,

மேற்கத்திய மற்றும் பாரம்பரியம் அற்ற ஓவியங்களுக்கு வழங்கப்பட்டு வரும் வரவேற்பு நமது பாரம்பரியமிக்க ஓவியங்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையிலும், தமிழகத்தின் தொன்மையான இசை மற்றும் கலையினை பாதுகாத்து, அவற்றினை எதிர்கால இளைய தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லும் வகையில், இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகம் ஒன்று ஏற்படுத்தப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பல்கலைக்கழகத்தின் கீழ், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு ஆகிய இடங்களில் உள்ள அரசு இசைக் கல்லூரிகள், சென்னை மற்றும் கும்பகோணத்தில் உள்ள அரசு கவின் கலைக் கல்லூரிகள், மாமல்லபுரத்தில் உள்ள அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி, மற்றும் இத்துறைகளைச் சார்ந்த அனைத்து உதவி பெறும் மற்றும் உதவி பெறாத தனியார் கல்லூரிகள் மற்றும் இசை, நடனம், கவின் கலைகளை கற்பிக்கும் கல்லூரிகள் செயல்படும். இதர பல்கலைக் கழகங்களில் நடத்தப்படும் இசை சார்ந்த, கவின்கலைப் புலம் சார்ந்த, இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப் படிப்புகளும் இப்பல்கலைக்கழகத்தின் ஆளுமையின் கீழ் கொண்டு வரப்படும். இசை மற்றும் கலைக்கு பொதுவான பாட திட்டம், அவற்றை செயல்படுத்தும் நடவடிக்கைகள், ஆய்வுகள் மற்றும் வளர்ச்சிப் பணிகள், தேர்வுப் பணி ஆகியவற்றை இந்த பல்கலைக்கழகம் மேற்கொள்ளும். இப்பல்கலைக்கழகத்தில் குரலிசை, வீணை, வயலின், நாதஸ்வரம், தவில், மிருதங்கம், கடம், கஞ்சிரா, முகர்சிங், புல்லாங்குழல், பரதநாட்டியம், நட்டுவாங்கம், கிராமியக்கலை ஆகிய 13 துறைகள் ஏற்படுத்தப்படும்.

எனது தலைமையிலான அரசால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் சுற்றுலாத் துறையை மேம்படுத்தவும், தமிழகத்தின் பாரம்பரியமிக்க பண்பாடு மற்றும் கலைகளை நல்ல முறையில் பாதுகாக்கவும், அவற்றை இளைய சமுதாயத்தினர் இடையே எடுத்துச் செல்லவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

பி.ஏ.பி.எல்., (ஹானர்ஸ்) பயிலும் தமிழகத்தைச் சார்ந்த முதல் தலைமுறை பட்டதாரி மாணவ–மாணவியருக்கு கல்வி கட்டணச் சலுகை!

10.05.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மக்களாட்சியில் சட்டத்தின் மாட்சியே மேலானது என்பதாலும், சட்டம் மனித சமுதாயத்தின் மாண்பைப் பேணிக் காப்பதாலும், மக்களின் எண்ணங்களையும், விருப்பங்களையும் நிறைவேற்றக் கூடியதாக சட்டங்கள் விளங்குவதாலும், சட்டக் கல்விக்கு எனது தலைமையிலான அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது.

நான் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், சட்டக் கல்வியின் தரத்தை சர்வதேச சட்டப் பள்ளிகளின் தரத்திற்கு இணையாக அமைக்கும் வகையில், ஸ்ரீரங்கத்தில் 100 கோடி ரூபாய் செலவில் தேசிய சட்டப் பள்ளி ஒன்றிற்கு அடிக்கல் நாட்டினேன். இதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்த சட்டப் பள்ளிக்கான மாணவ–மாணவியர் சேர்க்கை விரைவில் நடைபெற உள்ளது.

தற்போது அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் தொழிற் கல்லூரிகளில் ஒற்றைச் சாளர கலந்தாய்வின் மூலம் சேர்க்கைப் பெறும் முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவ–மாணவியருக்கு கல்விக் கட்டணத்தில் சலுகை அளிக்கப்பட்டு வருவதாகவும், ஒற்றைச் சாளரக் கலந்தாய்வின் மூலம் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலை கழகத்தில் சேர்க்கைப் பெறும் மாணவ–மாணவியருக்கும் இந்த கல்விக் கட்டணச் சலுகை அளிக்கப்படுவதாகவும், ஆனால் சீர்மிகு சட்டப் பள்ளியில் ஐந்தாண்டு பி.ஏ., பி.எல். (ஹானர்ஸ்)

பயிலும் மாணவ–மாணவியருக்கு கல்விக் கட்டணச் சலுகை வழங்கப்படுவதில்லை என்றும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

எனவே, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும் சீர்மிகு சட்டப் பள்ளியில் பி.ஏ., பி.எல். (ஹானர்ஸ்) சட்டப் படிப்பிற்கான மாணவ–மாணவியர் சேர்க்கை அரசின் முகமையான தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் மூலம் தகுதித் தேர்வின் அடிப்படையில் நடைபெறுவதாலும், இந்தப் படிப்பு சென்னையில் உள்ள தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளியில் மட்டுமே பயிற்றுவிக்கப்படுகிற காரணத்தாலும், ஒற்றைச் சாளர கலந்தாய்வின் மூலம் மாணவ–மாணவியர் சேர்க்கை நடைபெறவில்லை என்றாலும், இதனைச் சிறப்பினமாகக் கருதி 2010–2011 ஆம் கல்வியாண்டு முதல் இப்பள்ளியில் பி.ஏ.பி.எல்., (ஹானர்ஸ்) பயிலும் தமிழகத்தைச் சார்ந்த முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவ–மாணவியருக்கும் கல்விக் கட்டணத்தில் சலுகை வழங்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இது மட்டுமல்லாமல், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம் மற்றும் சில சட்டக் கல்லூரிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் மற்றும் விடுதிக் கட்டடங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

நான் முதன் முதலாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற போது சட்டக் கல்விக்கென தனியாக தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தை தெற்காசியாவிலேயே முதன் முதலாக நிறுவினேன். இப்பல்கலைக்கழகத்தின் கீழ் 7 அரசு சட்டக் கல்லூரிகளும், 1 தனியார் சுயநிதி சட்டக் கல்லூரியும் இயங்கி வருகின்றன. மேலும், சீர்மிகு சட்டப் பள்ளி மூலம் இளநிலை மற்றும் முதுநிலை ஹானர்ஸ் பட்ட மற்றும் பட்ட மேற்படிப்பு வகுப்புகளை நடத்தி வருகிறது. இந்தப் பல்கலைக்கழகம் தற்போது அமைந்துள்ள இடம் போதுமானதாக இல்லாததால் இங்கு பயிலும்

மாணவ – மாணவியருக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தர இயலாத நிலை உள்ளது. இந்தப் பல்கலைக்கழகம் மேலும் சிறப்புடன் இயங்கும் வகையில், இப்பல்கலைக்கழகத்திற்கென பெருங்குடியில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தில் நிர்வாக கட்டடம், நூலக கட்டடம், இளநிலை மற்றும் முதுநிலை மாணவர்களுக்கான வகுப்பறைகள் அடங்கிய கட்டடங்கள், மாணவ மாணவியர் விடுதிகள், உள் மற்றும் வெளி விளையாட்டு அரங்கங்களை உள்ளடக்கிய ஒரு முழுமையான பல்கலைக்கழக வளாகத்தினை கட்டிட 59 கோடியே 27 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரியில் மாணவியருக்கு விடுதி வசதி உள்ளது போல், மாணவர்களுக்கும் விடுதி வசதி ஏற்படுத்தித் தரும் வகையில், செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு 9,275 சதுர அடி பரப்பளவில், 15 அறைகள் கொண்ட விடுதிக் கட்டடம் கட்ட 1 கோடியே 72 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் 70 மாணவர்கள் விடுதி வசதி பெறுவர்.

தற்போது தற்காலிகக் கட்டடத்தில் இயங்கி வரும் வேலூர் அரசு சட்டக் கல்லூரிக்கு நிரந்தர கட்டட வசதி ஏற்படுத்தித் தரும் வகையில், வேலூர் அரசு சட்டக் கல்லூரிக்கு 17 வகுப்பறைகள், முதல்வர் அறை, ஆசிரியர்கள் அறை, நூலகம் மற்றும் அலுவலக அறைகொண்டபுதியகட்டடம்44,509சதுர அடிபரப்பளவில்7கோடியே 56 இலட்சம் ரூபாய் செலவில் கட்டித் தரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால், நடப்பாண்டில் 240 மாணவர்களும், வேலூர் அரசு சட்டக் கல்லூரியில் 5 ஆண்டு சட்டப் படிப்பு தொடங்கும் போது சுமார் 700 மாணவர்களும் பயன் பெறுவர்.

மதுரை அரசு சட்டக் கல்லூரியில் தற்போது உள்ள விடுதியில் சுமார் 38 மாணவர்களுக்கு மட்டுமே தங்கும் வசதி உள்ளது. வெளியூர்களிலிருந்து வந்து தங்கிக்

கல்வி பயின்று வருகின்ற மாணவர்கள் பலர் தனியார் விடுதி மற்றும் வாடகை வீடுகளில் தங்கியிருந்து சட்டப் படிப்பை மேற்கொள்கின்றனர். எனவே, கூடுதலாக 50 மாணவர்கள் விடுதியில் தங்கி கல்வி பயில ஏதுவாக, மதுரை அரசு சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு இரண்டு தளத்துடன் கூடிய 9,362 சதுர அடி பரப்பளவில் ஒரு புதிய விடுதிக் கட்டிடம் கட்ட 1 கோடியே 21 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள், சீர்மிகு சட்டப் பள்ளியில் பயிலும் தமிழகத்தைச் சார்ந்த முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவ–மாணவியர் பயன் பெறவும், சட்டம் பயிலும் மாணவ–மாணவியருக்கான வசதிகள் மேம்பாடு அடையவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

ரூ.30 கோடி செலவில் மதுரை மற்றும் கோவையில் பெண் சிறைவாசிகளுக்கென புதிய சிறைகள் அமைப்பு!

10.05.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குற்றவாளிகளை சிறையில் அடைத்து, எதிர்காலத்தில் குற்றம் இழைக்காத வண்ணம் சீர்திருத்தி, அவர்களுக்கு புதுவாழ்வு அளிக்கும் புனிதமான பணியை மேற்கொண்டு வரும் சிறைத் துறை பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டும், சிறை வாசிகளின் நலன் மற்றும் மறுவாழ்வினைக் கருத்தில் கொண்டும் பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

தற்போது சென்னை, திருச்சி மற்றும் வேலூர் ஆகிய 3 இடங்களில் மட்டுமே பெண்களுக்கு தனிச் சிறைகள் இருப்பதால், பெண் சிறைவாசிகள் தங்களுடைய சொந்த மாவட்டத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள சிறைகளில் அனுமதிக்கப்படுகின்றனர். உதாரணமாக, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த பெண் சிறைவாசி 350 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள திருச்சி சிறையில் அனுமதிக்கப்படுகின்றார். இவ்வாறு நீண்ட தூரத்தில் உள்ள சிறைகளில் அனுமதிக்கப்படுவதால் சிறைவாசிகளை அவர்களது உறவினர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் சந்திக்க இயலாத நிலையும், சிறைவாசிகளை சம்மந்தப்பட்ட நீதிமன்றங்களில் ஆஜர்படுத்துவதிலும் மிகுந்த சிரமங்கள் ஏற்படுகின்றன. இந்த சிரமங்களைத் தவிர்க்கும் வகையில், தென் மாவட்டங்கள் மற்றும் மேற்கு மாவட்டங்களிலிருந்து வரும் பெண் தண்டனை சிறைவாசிகளை தங்க வைப்பதற்காக

30 கோடி ரூபாய் செலவில் முறையே மதுரை மற்றும் கோயம்பத்தூரில் புதியதாக தனிச் சிறைகள் உருவாக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது தமிழ்நாட்டில் 9 மத்தியச் சிறைகள், 10 மாவட்டச் சிறைகள் என மொத்தம் 19 மாவட்டங்களில் சிறைகள் உள்ளன. மீதமுள்ள 13 மாவட்டங்களில் மாவட்டச் சிறைகள் அமைக்கப்படுவது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, முதல் கட்டமாக திருப்பூர், தருமபுரி மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 39 கோடி ரூபாய் மதிப்பில் மாவட்டச் சிறைச்சாலைகள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும், சிறை வளாகத்தில் பசுமையை மேம்படுத்தும் வகையிலும், சிறைவாசிகளை பயனுள்ள வகையில் பணியில் ஈடுபடுத்தும் வகையிலும், மதுரை மத்திய சிறையில் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் நவீன கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டது. இத்திட்டத்தினை புழல் மத்திய சிறை வளாகத்திலும் விரிவுபடுத்த ஆணையிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தினை மற்ற சிறைச் சாலைகளிலும் செயல்படுத்த வேண்டியது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, 6 மத்திய சிறைகள், 2 பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியம் மூலம் நவீன கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மரபு முறையில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத் தேவையை குறைத்திடவும், சிறையின் மின் தேவையை மரபு சாரா எரிசக்தியின் மூலம் பூர்த்தி செய்யும் வகையிலும், மேற் கூரை சூரிய ஒளி உற்பத்தி முறை, அதாவது Roof top Solar Photo voltic முறையினை புழல் மத்திய சிறையில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை

எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் ஏனைய மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகிய சிறைகளிலும் 35 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்புதிய அறிவிப்புக்கள் சிறைத் துறையை நவீனமயம் ஆக்குவதுடன், சிறைவாசிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், சிறைவாசிகள் குறிப்பாக பெண் சிறைவாசிகள் நல வாழ்வினை மேம்படுத்தவும் உறுதுணை புரியும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

வருவாய் மாவட்டத் தலைநகரங்களில் மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள் அமைக்கப்படும்!

13.05.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான நலத் திட்டங்களையும், நாட்டிற்கான வளர்ச்சித் திட்டங்களையும் செயல்படுத்துவதற்கான நிதி ஆதாரங்களை ஈட்டித் தருவதில் முக்கியப் பங்கு வகிப்பவை வணிக வரிகள் மற்றும் பத்திரப் பதிவுத் துறை என்று சொன்னால் அது மிகையாகாது.

தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்வதற்கு உறுதுணையாக இருக்கும் இந்தத் துறைகளின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் எனது தலைமையிலான அரசு பல்வேறு முன்னோடித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டத்தின் கீழ், தற்போது ஓட்டல்களில் வாடகைக்கு விடப்படும் அறைகளின் கட்டணம் 199 ரூபாய் வரையில் இருந்தால் வரி விலக்கும், 200 ரூபாய் முதல் 499 ரூபாய் வரையில் இருந்தால் 5 விழுக்காடு வரியும், 500 ரூபாய் முதல் 999 ரூபாய் வரையில் இருந்தால் 10 விழுக்காடு வரியும், 1,000 ரூபாய் மற்றும் அதற்கு மேலிருந்தால் 12.5 விழுக்காடு வரியும் ஆடம்பர வரியாக வசூலிக்கப்பட்டு வருகிறது. பல ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்ட ஆடம்பர வரி விலக்கிற்கான வாடகை உச்சவரம்பு 199 ரூபாய் என்பதை உயர்த்த வேண்டும் என்று கோரிக்கைகள் வரப் பெற்றுள்ளன. இந்தக் கோரிக்கையினை ஏற்று, ஆடம்பர வரி செலுத்துவதில் இருந்து விலக்கு பெறுவதற்கான உச்சவரம்பு 199 ரூபாயிலிருந்து 499 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்

கொள்கிறேன். இதனால் 500 ரூபாய்க்கு கீழ் வாடகை உள்ள அறைகளை வாடகைக்கு எடுக்கும் சாதாரண, நடுத்தர மக்கள் பயன்பெறுவர்.

அரசுக்கு வருவாய் ஈட்டித் தரும் வணிகவரித் துறை அலுவலகங்கள் பெரும்பாலும் வாடகைக் கட்டடங்களிலேயே இயங்கி வருவதால் பொதுமக்களுக்கும், பணியாளர்களுக்கும் ஏற்படும் சிரமங்களைக் கருத்தில் கொண்டு, 2011–2012ஆம் ஆண்டில் 34 அலுவலகங்களுக்கும், 2012–2013ஆம் ஆண்டில் 16 அலுவலகங்களுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, இந்த ஆண்டில் வாள் வச்ச கோஷ்டம், தேவகோட்டை, சிதம்பரம், ஆற்காடு, கோயம்புத்தூர், வேலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய 7 இடங்களில் இயங்கி வரும் 9 வணிகவரி அலுவலகங்களுக்கு 10 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கட்டடங்களில் "தமிழ்நாடு சூரிய சக்தி கொள்கை–2012"–ன் நோக்கங்களின்படி சூரிய சக்தியினைக் கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான மேற்கூரைகள் பொருத்தப்படும்.

சார்பதிவாளர் அலுவலகங்களில் பாதுகாக்கப்பட்டு வரும் ஆவணங்கள் நிரந்தரமான பதிவுறுக்கள் என்பதால், அவற்றை தீ விபத்திலிருந்து பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். எனவே, அனைத்து அலுவலகங்களுக்கும் தீ விபத்து தடுப்பு உபகரணங்களான தீ தடுப்பான்கள், தீ தடுப்பு வாளிகள், மின் இணைப்பு முறிப்பான்கள், அலுமினிய ஏணிகள் ஆகியவை வழங்கப்படும் என்பதையும், இவற்றைப் பயன்படுத்த பணியாளர்களுக்கு உரிய பயிற்சி வழங்கப்படும் என்பதையும் இதற்காக 4 கோடியே 78 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பதிவுத் துறையை கணினிமயம் ஆக்கப்படுவதற்கு முன்பு பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் அலுவலக நகல்கள் காகித வடிவில் உள்ளன. இந்தப் பதிவுறுக்கள் துறையின் பணியாளர்களால் அடிக்கடி கையாளப்படுவதால் காகிதத்தினால் ஆன இந்தப் பதிவுறுக்கள் சிதிலமடைந்தும், எளிதில் கிழிந்து விடக் கூடியதாகவும் ஆகி விடுகின்றன. இவற்றை எவ்வித சேதமும் அடையாமல் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை கருத்தில் கொண்டு, பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை நுண்ணிய படம் பிடிக்கவும் Micro Filming செய்யவும்; மற்றும் அவற்றை மின்னணு மயம் ஆக்கவும் Digitisation செய்யவும்; நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும்; காகித வடிவில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவுறுக்கள் 140 கோடி ரூபாய் செலவில் நுண்ணிய படம் பிடித்து மின்னணு மயம் ஆக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுமக்களிடமிருந்து வில்லங்கச் சான்றுகள் கோரி வரப் பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டும், சார் பதிவாளர் அலுவலகங்களில் பணியாற்றும் ஊழியர்களின் வேலைப் பளுவைக் குறைக்கும் நோக்கிலும், பொது மக்கள் தாங்களே இணைய தளம் மூலமாக சொத்து தொடர்பான வில்லங்கங்களைப் பார்க்கவும், அதனை நகல் எடுத்துக் கொள்ளவும் வசதி செய்து கொடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் பொது மக்கள் தாங்கள் அறிய விரும்பும் சொத்து தொடர்பான வில்லங்கங்களை உடனுக்குடன் எந்த நேரமும் தெரிந்து கொள்ள முடிவதுடன் தங்களது சொத்தில் முறைகேடான ஆவணப் பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும் அறிய இயலும்.

தமிழ்நாடு முழுவதும் 50 பதிவு மாவட்டங்கள் இருப்பினும், திருவள்ளூர், தேனி, பெரம்பலூர், திருவாரூர் ஆகிய வருவாய் மாவட்டத் தலைநகரங்களில் மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள் இல்லாத சூழ்நிலை தற்போது நிலவுகிறது. இந்தக் குறையைக் களையும் வகையில், ஒவ்வொரு வருவாய் மாவட்டத் தலைநகரத்திலும் ஒரு மாவட்டப் பதிவாளர்

அலுவலகம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், பதிவு மாவட்டங்களின் ஆட்சி எல்லைகள் வருவாய் மாவட்டத்திற்கு ஏற்ப மாற்றி அமைக்கப்படும். இந்த மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களில், நிர்வாகப் பணிகளைக் கவனிக்கும் மாவட்டப் பதிவாளர் பதவி, உதவி பதிவுத் துறைத் தலைவர் நிலைக்கு உயர்த்தப்படும். தற்போதுள்ள 45 தணிக்கை மாவட்டப் பதிவாளர் பணியிடங்கள் 85 ஆக உயர்த்தப்படும். சீட்டு, சங்கம், திருமணப் பதிவு தொடர்பான பணிகளைக் கவனிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்டப் பதிவாளர் நியமிக்கப்படுவார். இதனால் நிர்வாகம் சீராவதுடன், தணிக்கைப் பணி மற்றும் சீட்டு, சங்கம், திருமணப் பதிவு தொடர்பான பணி செம்மைப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுமக்கள் கால விரயம் இன்றி ஆவணப் பதிவினை மேற்கொள்ளும் பொருட்டு, பொது மக்கள் இணைய தளம் மூலம் சார்பதிவாளருடன் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஆவணப் பதிவு செய்து கொள்ள முன்பதிவு செய்து கொள்ளும் வசதி அறிமுகப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆவணம் பதிவு செய்வதற்கான குறிப்பிட்ட நேரத்தை பொது மக்கள் இணைய தளம் மூலம் முன்பதிவு செய்து கொண்டு, அந்த நேரத்தில் சார் பதிவாளர் அலுவலகம் சென்று, தங்களது ஆவணப் பதிவு தொடர்பான பணிகளை விரைவாக நிறைவேற்றிக் கொள்ளலாம்.

வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் பதிவுத் துறை அலுவலகங்களில் பதிவுத்துறை ஆவணங்களைப் பராமரிப்பதற்கும், பணியாளர்கள் முழு அளவில் பணியாற்றுவதற்கும் போதிய இட வசதி இல்லாததைக் கருத்தில் கொண்டும், சிறிய இடங்களுக்கு அதிக அளவு வாடகை தர வேண்டிய நிலை உள்ளதை கருத்தில் கொண்டும், பதிவுத் துறையில் வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் சார் பதிவாளர் அலுவலகங்கள் அனைத்திற்கும்

5 ஆண்டு காலத்திற்குள் சொந்தக் கட்டடங்கள் கட்ட நான் ஏற்கெனவே உத்தரவிட்டு இருந்தேன். இதன் அடிப்படையில், 2011–2012 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக 26 கோடி ரூபாய் செலவில் 52 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டவும், 2012–2013 ஆம் நிதியாண்டில் 48 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 17 இடங்களில் 29 சார் பதிவாளர் அலுவலகங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலக வளாகங்கள் மற்றும் தனித்தனியே 48 சார் பதிவாளர் அலுவலகங்களுக்குக் கட்டடம் கட்டவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திண்டுக்கல், உதகமண்டலம், கோயம்பேடு மற்றும் செய்யார் ஆகிய நான்கு இடங்களில் ஒருங்கிணைந்த பதிவுத்துறை வளாகங்களும், 35 சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு தனித் தனியாக புதிய கட்டடங்களும் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கட்டடங்கள் சூரிய சக்தியின் மூலம் பெறப்படும் மின்சாரத்தைப் பயன்படுத்தும் விதமாகக் கட்டப்படும்.

வணிகவரி மற்றும் பதிவுத் துறையில் என்னால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் மூலம் பொதுமக்கள் பெரிதும் பயன் அடைவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

அனைத்து ஐ.டி.ஐ. மாணவர்களுக்கும் மடிக்கணினிகள் வழங்கப்படும்

13.05.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உழைக்கும் தொழிலாளர்களின் உயர்விலும், தொழிற்சாலைகளின் பாதுகாப்பிலும், தொழில் அமைதியை ஏற்படுத்துவதிலும், வேலை தேடும் பல இலட்சம் இளைஞர்களின் எதிர்காலத்திலும் எனது தலைமையிலான அரசு அதிக அக்கறை செலுத்தி வருகிறது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் பணிகள் மாவட்ட அளவில் தொழிலாளர் அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மதுரை மாவட்டம் நீங்கலாக பிற மாவட்டங்களில் இவ்வலுவலகங்கள் தற்போது வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவ்வலுவலகங்களுக்கு தொழிலாளர்கள் அதிக அளவில் வருவதால் மாவட்டந்தோறும் போதுமான உள் கட்டமைப்பு வசதியுடன் கூடிய சொந்த கட்டடம் கட்டுதல் அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, முதற்கட்டமாக திருச்சி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, பெரம்பலூர், கடலூர், வேலூர், தருமபுரி, சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், திண்டுக்கல், தேனி, சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, மற்றும் நீலகிரி ஆகிய 20 மாவட்டங்களில் உள்ள சமூகப் பாதுகாப்புத் திட்ட தொழிலாளர் அலுவலர் அலுவலகங்களுக்கு சொந்த அலுவலகக் கட்டடங்கள் 40 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டித் தரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் தொழிலாளர் துறையை

சார்ந்த பிற அலுவலகங்களுக்கும் இக்கட்டடங்களில் இடம் ஒதுக்கீடு செய்யப்படும்.

தொழில் உறவு சீராக இருந்தால் தான் உற்பத்தித் திறன் அதிகரிக்க முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு, தொழிலாளர் சட்டங்கள் மற்றும் நிருவாகவியல் சட்டங்களை மனித வள மேலாண்மை மற்றும் தொழிலுறவு அலுவலர்கள் அனைவரும் தெளிவாகத் தெரிந்து கொள்ள உதவும் வகையில் தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தில் "தொழிலாளர் சட்டங்களும் நிர்வாகவியல் சட்டமும்" என்ற ஓராண்டு பகுதி நேர பட்டயப் படிப்பு 2013–2014 ஆம் கல்வியாண்டு முதல் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பணியில் உள்ளவர்கள் பயனடையும் வகையில், இப்பட்டயப் படிப்புக்கான வகுப்புகள் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் நடைபெறும். இப்படிப்பில் 50 பேர் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் சமுதாய வளர்ச்சி ஆகியவற்றிற்கு முக்கிய காரணிகளாக விளங்கும் தொழில் திறன் மற்றும் அறிவுத் திறன் ஆகியவற்றை உருவாக்குவதில் ஐ.டி.ஐ–கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இங்கு பயிலும் மாணவர்கள் உற்சாகத்துடனும், ஊக்கத்துடனும் பயிற்சி பெற்றிட அரசு பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. தற்போது, பள்ளிக் கல்வியில், மாணவர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு சலுகைகளுடன் புத்தகங்கள் வாங்குவதில் பெற்றோருக்கு உள்ள சுமைகளைக் குறைத்திட பாடப் புத்தகங்களை அரசு வழங்கி வருகிறது. இது போல், அரசு மற்றும் அரசு உதவி பெறும் ஐ.டி.ஐ–களில் பயிற்சி பெற்று வரும் பயிற்சியாளர்களுக்கும் ஐ.டி.ஐ. பாடத் திட்டத்தின்படி வெளியிடப்படும் கருத்தியல் பாடப் புத்தகங்கள், செய்முறை விளக்கப் பாடப் புத்தகங்கள், பயிற்சிப் பாடப் புத்தகங்கள், கணிதப் பாடப் புத்தகங்கள், வரை படப் பாடப் புத்தகங்கள், வரை பட விளக்க செய்முறை பாடப் புத்தகங்கள், ஆங்கில புலமை மற்றும் பேச்சாற்றலை வளர்க்கும் பணித் திறன் வளர்ப்புப் பாடப் புத்தகங்கள் மற்றும் மாணவர்கள் பொறியியல் வரை படங்களை வரைவதில் தக்க பயிற்சி பெறத் தேவையான

உபகரணங்கள் ஆகியவை வழங்கப்படும்என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும். இதன் மூலம் அரசு ஐ.டி.ஐ–களில் பயிலும் சுமார் 26,000 பயிற்சியாளர்கள், அரசு உதவி பெறும் ஐ.டி.ஐ–களில் பயிலும் சுமார் 1,683 பயிற்சியாளர்கள் என மொத்தம் 27,683 பயிற்சியாளர்கள் பயன்பெறுவர்.

வேலைக்குத் தகுதி பெறும் திறனை அதிகரிக்கும் வகையில், தமிழ்நாட்டில் உள்ள ஐ.டி.ஐ–களில் அனைத்து தொழிற் பிரிவுகளிலும் பயிற்சி பெறுவோருக்கான பாடத் திட்டத்தில் மொழித் திறன், கணினித் திறன் மற்றும் மென் திறன் பயிற்சி குறித்த பாடப் பிரிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன. இத்தகைய பயிற்சிகளுக்கான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, அனைத்து அரசு ஐடிஐ–களிலும் மொழி மற்றும் மென் திறன் ஆய்வகங்கள் 15 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆய்வகங்களை அமைக்க தேவைப்படும் இடங்களில் புதிய கட்டடம், மொழித் திறன் பயிற்சிக்கான மென்பொருள், கணிப் பொறிகள் மற்றும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஆகியவற்றிற்கான செலவினங்கள் இதில் மேற்கொள்ளப்படும். இதன் மூலம் சுமார் 25,231 அரசு தொழிற் பயிற்சி நிலைய பயிற்சியாளர்கள் பயன்பெறுவர்.

அரசு ஐ.டி.ஐ.–களில் தற்போது கணிப்பொறி தொடர்புடைய பிரிவுகளில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு மட்டும் மடிக்கணினி வழங்கப்பட்டு வருகிறது. கணிப்பொறி அல்லாத பிற தொழிற் பிரிவுகளில் பயிலும் ஐ.டி.ஐ மாணவர்கள் அனைவருக்கும் கணிப்பொறி பயிற்சி பெறுவது தற்போது கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளதாலும், அரசு கல்லூரிகள், மேல்நிலைப் பள்ளி மாணவர்கள், பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பொறியியல் கல்லூரி மாணவர்கள் ஆகியோருக்கு அவர்கள் படிக்கும் பாடப் பிரிவுகளைக் கணக்கில் கொள்ளாது அனைவருக்கும் மடிக்கணினி வழங்கப்படுவதாலும், இதே அடிப்படையில், ஐ.டி.ஐ.–களில் பயிற்சி பெறும் அனைத்து தொழிற் பிரிவு மாணவர்களுக்கும் மடிக்கணினி வழங்கப்படும் என்பதையும்

இதற்கென 35 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு ஐ.டி.ஐ.–களில் பல்வேறு தொழிற் பிரிவுகளில் தொழிற் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு பயிற்சிக் காலத்தில் பேருந்து பயணச் சலுகை, 500 ரூபாய் மாத உதவித் தொகை, விலையில்லா மிதி வண்டி, 2 செட் சீருடை, 1 ஜோடி காலணி போன்ற சலுகைகள் அளிக்கப்படுகின்றன. பள்ளிகளைப் பொறுத்தவரை அரசு பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் அனைத்து சலுகைகளும் அரசு உதவி பெறும் தனியார் பள்ளி மாணவர்களுக்கும் வழங்கப்படுவதைப் போல, அரசு ஐ.டி.ஐ. மாணவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளான பேருந்து பயண சலுகை, 500 ரூபாய் மாத உதவித் தொகை, விலையில்லா மிதிவண்டி மற்றும் மடிக்கணினி ஆகியவை, இனி அரசு உதவி பெறும் தனியார் ஐ.டி.ஐ. மாணவர்களுக்கும் வழங்கப்படும் என்பதையும் இதற்கென 3 கோடியே 7 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் ஆண்டொன்றுக்கு சுமார் 1,683 பேர் பயன் பெறுவர்.

தொழிற் பயிற்சி பெறுவதில் மகளிர் சிரமமின்றி பங்கு பெற வேண்டும் என மகளிருக்காக தனியாக 12 அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டு வருகின்றன. இதில் 2003 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கரூர் மகளிர் அரசு தொழிற் பயிற்சி நிலையம் இன்று வரை வாடகைக் கட்டடத்தில் வசதிக் குறைவுடன் இயங்கி வருகிறது. மகளிர் சிரமமின்றி தொழிற் பயிற்சி பெறும் வகையில், கரூர் மகளிர் அரசு தொழிற் பயிற்சி நிலையத்திற்கு ஆய்வுக்கூடம், வகுப்பறை, அலுவலக அறை, நூலக அறை ஆகிய வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் 2 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுவதற்கான திறன் பயிற்சி வழங்கும் நோக்கில் இயங்கி வருகின்ற தமிழ்நாடு திறன் மேம்பாட்டு இயக்ககம், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரகக்

கட்டடத்தில் ஒரு பகுதியில் இயங்கி வருகிறது. திறன் பயிற்சிகளை வழங்குவதற்கு அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, கிண்டி, மகளிர் அரசினர் தொழிற் பயிற்சி நிலைய வேலைவாய்ப்பு அலுவலக வளாகத்தில் தற்போது கட்டப்பட்டு செயல்பட்டு வரும் கட்டடத்தின் மேல் கூடுதலாக இரண்டு தளங்கள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு இயக்கக அலுவலகத்திற்கு 3 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இது மட்டுமல்லாமல், அரசின் பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் அனைத்து திறன் எய்தும் பயிற்சிகளுக்கு ஒருங்கிணைவு முகமையாக செயல்படும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு மையத்தின் மூலம், அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தரக்கூடிய சில்லறை வர்த்தகம், உபசரிப்பு மேலாண்மை, மருத்துவ சேவைகள், தானியங்கி, கட்டுமானம், ஓட்டுநர் பயிற்சி, பாதுகாவலர் பணிகள், தோல் மற்றும் தோல் பொருள்கள், ஜவுளி, தகவல் தொழில் நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள், திறன் எய்தும் பயிற்சி, கைபேசி பழுது பார்த்தல், பற்ற வைத்தல், பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிப்பு, கனரக பொறியியல், உணவு பதனிடுதல், வங்கி மற்றும் நிதி சேவைகள், ஆபரணக் கல் மற்றும் நகை தயாரித்தல் போன்ற 18 துறைகளில் நடப்பாண்டில் 2 இலட்சத்து 24 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு பெறுவதற்கான திறன் பயிற்சி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்காணும் நடவடிக்கைகள் தொழில் திறன் மேம்பட்டு, வேலை வாய்ப்புகள் கிடைக்கவும், அறிவு சார்ந்த மனித வள சமுதாயம் உருவாகவும், தொழில் அமைதி உருவாகவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

மேலும் 100 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் விரிவாக்கம்!

14.05.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அற நெறியையும், ஆன்மீக உணர்வையும், ஒழுக்கத்தின் மேன்மையையும் வளர்ப்பதோடு மட்டுமின்றி, புகழ் வாய்ந்த பழைய பண்பாட்டுப் பாரம்பரியத்தை மக்களுக்கு எடுத்துரைக்கும் பொக்கிஷங்களாகவும் விளங்கும் திருக்கோயில்களின் அசையும் மற்றும் அசையா சொத்துக்களை பேணிப் பாதுகாப்பது, பக்தர்களுக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுப்பது போன்ற பணிகளை எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோரே என்ற புறநானூற்று வரிகளுக்கேற்ப திருக்கோயில்கள் வாயிலாக இறை அன்பர்களுக்கு அமுது படைக்கும் அரும்பணி எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் துவக்கப்பட்டது என்பதைப் பெருமையோடு இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முன்றாவது முறையாக நான் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன், ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாதசுவாமி திருக்கோயில் மற்றும் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் ஆகியவற்றிற்கு வருகை புரியும் பக்தர்களுக்கு நாள் முழுதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை நான் துவக்கி வைத்தேன். தற்போது 518 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் சீரோடும், சிறப்போடும் செயல்பட்டு வருகிறது. பக்தர்களின் வருகையையும், தேவையையும் கருத்திற் கொண்டு இத்திட்டம் மேலும் 100 திருக்கோயில்களுக்கு இந்த ஆண்டில் விரிவுபடுத்தப்படும் என்பதை பேரவைக்கு மகிழ்ச்சியுடன்

தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக 2 கோடியே 37 இலட்சம் ரூபாய் ஆண்டுதோறும் செலவினம் ஏற்படும்.

ஆழ்வார்கள் மற்றும் நாயன்மார்களால் வளமிக்க தமிழ் மொழியில் இறைவனை போற்றி பாடப் பெற்ற நாலாயிர திவ்யப் பிரபந்தம் மற்றும் பன்னிரு திருமுறைகள் ஆகிய பாடல்களை பக்தர்களிடம் எடுத்துச் செல்லும் வகையில், ஸ்ரீரங்கம், அருள்மிகு ரங்கநாத சுவாமி திருக்கோயில் வளாகத்தில் ஆழ்வார்கள் பாடல்கள் அடங்கிய கல்வெட்டு நந்தவனமும், திருவண்ணாமலை, அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில் வளாகத்தில் நாயன்மார்களின் பாடல்கள் அடங்கிய கல்வெட்டு நந்தவனமும், சிறப்புற அமைக்கப்படும் என்பதை இந்த பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகம விதியின்படி திருக்கோயில்களுக்கு 12 ஆண்டுகளுக்கு ஒரு முறையேனும் திருப்பணி செய்து குட முழுக்கு நடத்தப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, 2011–2012ஆம் ஆண்டில் 1,006 திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்து குட முழுக்கு நடத்தப்பட்டது. அதே போன்று, 2012–2013ஆம் ஆண்டிலும் 1906 திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்து குட முழுக்கு சிறப்பாக நடத்தப்பட்டது. நடப்பாண்டில் மேலும் 1,006 திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்து குட முழுக்கு நடத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் இல்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் அமையப் பெற்றுள்ள திருக்கோயில்கள், பல இடங்களில் கட்டுமானங்கள் நிறைவு பெறாமலும், மிகவும் சிதிலம் அடைந்த நிலையிலும் உள்ளன என்ற செய்தி எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இதை அறிந்த நான் கடந்த 2011–2012ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென திருக்கோயில் ஒன்றுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் தொகையை 25,000/– ரூபாயிலிருந்து 50,000/– ரூபாயாக உயர்த்தி வழங்கிட ஆணையிட்டேன். அதன் பயனாக கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் ஆதிதிராவிட மக்கள் வாழும் 624 பகுதிகளில் உள்ள திருக்கோயில்கள் பயனடைந்துள்ளன.

நடப்பாண்டிலும், ஆதிதிராவிட மக்கள் வசிக்கும் பகுதிகளில் உள்ள 1,006 திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்திட திருக்கோயில் ஒன்றுக்கு 50,000/– ரூபாய் வீதம் 1,006 திருக்கோயில்களுக்கு 5 கோடியே 3 இலட்சம் ரூபாய் நிதியுதவி செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் கிராமப்புறங்களில் அமைந்துள்ள சிறு திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்வதற்காக வழங்கப்பட்டு வந்த நிதியுதவி 2011–2012ஆம் ஆண்டிலிருந்து 50,000/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது. இதன் மூலம், இதுவரை 300 திருக்கோயில்கள் பயன் பெற்றுள்ளன. கிராமப்புறங்களில் உள்ள மேலும் பல சிறு திருக்கோயில்கள் திருப்பணி செய்ய வேண்டிய நிலையில் உள்ளதைக் கருத்தில் கொண்டு, இவ்வாண்டு மேலும் 1,006 திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்திட திருக்கோயில் ஒன்றுக்கு 50,000/– ரூபாய் வீதம் 5 கோடியே 3 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான உலோகத் திருமேனிகள், ஆபரணங்கள் மற்றும் விலை உயர்ந்த பொருட்களை பாதுகாக்கும் பொருட்டு, திருக்கோயில்களில் களவு எச்சரிக்கை மணி, கண்காணிப்புக் கேமிரா ஆகியன பொருத்தவும் அங்குள்ள பாதுகாப்பு அறைகளை வலுப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பாதுகாப்பு வசதிகள் குறைவாக உள்ள திருக்கோயில்களில் இருக்கும் விலை உயர்ந்த பொருட்கள் தற்போது திருவாரூர், கும்பகோணம், திருச்சி, திருநெல்வேலி, காஞ்சிபுரம் போன்ற 19 இடங்களில் உள்ள பாதுகாப்பு மையங்களில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மேலும், பல திருக்கோயில்களில் பூஜையில் இல்லாத உலோக விக்கிரகங்களும், பயன்பாட்டில் இல்லாத ஆபரணங்கள் மற்றும் விலை உயர்ந்த பொருட்களும் பாதுகாக்கப்படும் வகையில், கரூர், அரியலூர், பெரம்பலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், நாமக்கல், திருப்பூர், ஈரோடு,

திண்டுக்கல், தேனி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய 12 மாவட்டங்களில் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம் 5 கோடியே 61 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்து சமய அறநிலையத் துறையின் நேரடி ஆளுகையின் கீழ் கொண்டு வரப்படாத திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணி புரிந்து 60 வயதினை நிறைவு செய்து ஓய்வு பெற்ற 2819 பூசாரிகளுக்கு வழங்கப்பட்டு வரும் 750 ரூபாய் மாதாந்திர ஓய்வூதியம் 1,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 84 இலட்சத்து 57 ஆயிரம் ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

திருக்கோயில்களில் 10 ஆண்டிற்கு குறைவாக பணியாற்றிய ஊழியர்களுக்கும் ஓய்வூதியம் அளிக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கில் "துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டம்" என்ற திட்டத்தை எனது அரசு ஏற்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ் தற்போது 3,183 ஓய்வு பெற்ற பணியாளர்கள் மாத ஓய்வூதியமாக தலா 800/– ரூபாய் பெறுகின்றனர். இந்த ஓய்வூதியம் 1,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் காரணமாக ஆண்டு ஒன்றுக்கு 76 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில் நிருவாகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 490 திருக்கோயில்கள், ஒரு பெண்கள் கல்லூரி, ஒரு மேல்நிலைப்பள்ளி, இரண்டு உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றை செம்மையாக நிருவகிக்க போதுமான நிதி வசதி இல்லை என்பது எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இந்த நிருவாகத்தில் ஏற்பட்டுள்ள நிதி இடர்பாடுகளை களைந்து செம்மையான நிருவாகத்தை மேற்கொள்ள தற்போது ஆண்டு ஒன்றுக்கு வழங்கப்படும் 1 கோடி ரூபாய் மானியம் 3 கோடி ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொன்மை மிகு திருக்கோயில்களை அவற்றின் தொன்மை மாறாது புதுப்பிக்க பதின்மூன்றாவது நிதி ஆணையத்தின் ஒதுக்கீட்டின் கீழ் 2011–2012 ஆம் ஆண்டு 94 திருக்கோயில்களுக்கு 22 கோடியே 50 இலட்சம் ரூபாயும், 2012–2013ஆம் ஆண்டிற்கு 43 திருக்கோயில்களுக்கு 22 கோடியே 50 இலட்சம் ரூபாயும் என மொத்தம் 45 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. இந்த ஆண்டு 49 தொன்மையான திருக்கோயில்களை அவற்றின் தொன்மை மாறாது புதுப்பிக்க 22 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் வட்டத்தில் உள்ள இரணியல் கிராமத்தில் 2.43 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் அமைந்துள்ள தொன்மை வாய்ந்த இரணியல் அரண்மனையைப் பாதுகாக்கும் வகையில், இந்த அரண்மனைக் கட்டடத்தை அனுபவம் வாய்ந்த தொல்லியல் வல்லுநர்கள் உதவியுடன் புதுப்பிக்க 3 கோடியே 85 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சுமார் 50 திருக்கோயில்களில் உள்ள பழைமையான ஓவியங்கள் பல இடங்களில் போதிய பராமரிப்பின்றி மிகவும் சிதிலம் அடைந்து அழிவுறும் அபாயம் உள்ளது என்பது எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த பழைமையான ஓவியங்கள் தொல்லியல் துறை வல்லுநர்களையும் தொல்லியல் துறையிலிருந்து ஓய்வு பெற்ற வேதியியல் நிபுணர்களையும் கொண்டு பழைமை மாறாது புதுப்பித்துப் பராமரிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். முதற்கட்டமாக, கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் அருள்மிகு தாணுமாலையசுவாமி திருக்கோயில் ஏழு நிலை இராஜகோபுரத்தில் அமைந்துள்ள சுவர் ஓவியங்களை அதன் பழைமை மாறாது புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

❋ ❋ ❋

''முதலமைச்சரின் அனைவருக்கும் உடல் ஆரோக்கியம்''என்ற புதிய திட்டம் அறிமுகம்!

14.05.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அறிவாற்றலை வளர்க்கக் கூடிய கல்வி, ஆரோக்கியத்தை பேணிக் காக்கக் கூடிய விளையாட்டு ஆகிய இரண்டும் இளைய சமுதாயத்தின் இரு கண்கள் என்பதால் இவற்றை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டை விளையாட்டு மற்றும் இளைஞர் மேம்பாட்டில் இந்தியாவிலேயே தலை சிறந்த மாநிலமாக உருவாக்கும் வகையில், இதற்கென தனியாக ஒரு புதிய கொள்கை உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கொள்கை, சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் இடையே விளையாட்டில் ஈடுபட வேண்டியதன் அவசியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல், விளையாட்டிற்கு ஏற்றப்படி அவர்களது உடலைத் தயார்படுத்தும் முறைகள், மாற்றுத் திறனாளிகள் இடையே விளையாட்டு ஆர்வத்தை ஏற்படுத்துதல், விளையாட்டு அரங்கங்கள் அமைத்தல், பன்னாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கங்கள் பெறுவதற்கு வழிவகை செய்யும் பயிற்சிகள் அளித்தல், அந்த பயிற்சிகளைத் தருவதற்கு தகுதி வாய்ந்த பயிற்சியாளர்கள் தெரிவு செய்தல், விளையாட்டுகளுக்கு அடிப்படைத் தேவைகளான தடகள தளங்கள், நீச்சல் குளங்கள் போன்ற பல்வேறு அமைப்புகளை உருவாக்குதல், விளையாட்டு மைதானங்களை உருவாக்குதல் போன்ற பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

உடல் ஆரோக்கியம் பேணப்படுவதன் மூலம் நோய் விகிதம் மற்றும் இறப்பு விகிதம் குறையும் என்பதன் அடிப்படையிலும், ஆரோக்கியமான, துடிப்பான வாழ்க்கை பல்வேறு நோய்களைத் தடுக்கும் கேடயம் என்பதைக் கருத்தில் கொண்டும், அனைத்துத் தரப்பு மக்களும் ஆரோக்கியமான வளமான வாழ்வை பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் ''முதலமைச்சரின் அனைவருக்கும் உடல் ஆரோக்கியம்'' என்ற ஒரு திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், ஊடகத் துறை, உள்ளாட்சி அமைப்புகள், கல்வி நிறுவனங்கள், குடியிருப்பு மற்றும் பல்வேறு நலச் சங்கங்கள், விளையாட்டு இணையங்கள், சுய உதவிக் குழு அமைப்புக்கள் மற்றும் இதர அமைப்புகளின் ஒத்துழைப்போடு செயல்படுத்தப்படும்.

1993ஆம் ஆண்டு என்னால் துவக்கி வைக்கப்பட்ட ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் புதிய செயற்கைப் புல் ஓடு தளம், கால் பந்து வளாகம், புதுப்பிக்கப்பட்ட அலுவலகம் ஆகியவற்றுடன் புதிய பொலிவு பெற்று விளங்குகிறது. தற்போது பல்நோக்கு உள் விளையாட்டரங்கம் அருகில் செயற்கை இழை தட களஓடு தளம் மற்றும் இயற்கை புல் வெளி கால்பந்து திடல் வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பகுதியில் விளையாட்டு வீரர்கள் மேலும் பயன் அடைவதற்கு ஏதுவாக ஸ்குவாஷ் அரங்கம், இறகுப் பந்து உள்ளரங்கம், கையுந்துப் பந்து, கூடைப் பந்து ஆடு களங்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கென பிரத்யேக நீர் சிகிச்சை நீச்சல் குளம் ஆகியவை கொண்ட, மேம்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகம் 12 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் வருங்காலத்தில் சர்வதேச அல்லது தேசிய அளவிலான போட்டிகள் இந்த ஒருங்கிணைந்த வளாகத்தில் நடத்த வழிவகை ஏற்படும்.

கடந்த 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டு அறிவிப்புகளின்படி முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் பத்து விளையாட்டுகளில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு சிறந்த முறையில் நடத்தி முடிக்கப்பட்டன. தமிழ்நாட்டு

விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் இடையே இந்தப் போட்டிகளின் மீதான தாக்கத்தை அதிகரிக்கும் நோக்கில், இந்தப் போட்டிகளை மேலும் வலுப்படுத்தி விளையாட்டுப் போட்டிகளின் தரம் அதிகரிக்கும் வகையில் தேசிய விளையாட்டுப் போட்டிகளைப் போன்று, National Games போன்று "முதலமைச்சர் கோப்பைக்கான மாநில போட்டிகள்" State Games for Chief Minister's Trophy ஆண்டுதோறும் நடத்தப்படும். இதில் முதல் மூன்று இடம் வெல்வோர் ஒவ்வொருவருக்கும் 1 இலட்சம் ரூபாய், 75,000 ரூபாய் மற்றும் 50,000 ரூபாய் முறையே ரொக்கப் பரிசாக வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென ஆண்டுதோறும் கூடுதலாக 2.57 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகள் நடத்தும் போது விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் தங்குவதற்கான கட்டமைப்பு வசதிகள் மிகவும் குறைவாக உள்ளதைக் கருத்தில் கொண்டு, போட்டிகளில் பங்கு பெறும் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளின் வசதிக்காக சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இரு இடங்களில் தலா 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீன தங்குமிடம் மற்றும் உணவுக் கூட வசதிகள் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக அரசு தலைமைச் செயலகத்தில் சுமார் 6,000 ஊழியர்கள் மற்றும் அலுவலர்கள் பணி புரிந்து வருகிறார்கள். அவர்கள் அலுவலக நாட்களில் நீண்ட நேரம் பணிபுரிந்து வருவதுடன், விடுமுறை நாட்களிலும் அலுவலகத்திற்கு வந்து பணியாற்றுகிறார்கள். தொடர்ந்து பல மணி நேரம் இருக்கையிலேயே அமர்ந்து பணி புரிய வேண்டிய சூழ்நிலையினால் அவர்களது உடல் நலம் பாதிக்கப்படுகிறது. ஊழியர்கள் நல்ல ஆரோக்கியத்துடன் இருந்தால், பணிகளை விரைவாகவும், குறித்த காலத்திலும் முடிக்க இயலும். அவர்களின் பணித் திறன் அதிகரிக்கவும் வழிவகை ஏற்படும். எனவே அரசு ஊழியர்களின் உடல் நலத்தைப் பாதுகாக்க, ஆண்கள் மற்றும் பெண்களுக்கு என தனித் தனியே அனைத்து

வசதிகளுடன் கூடிய உடற் பயிற்சிக் கூடங்கள் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1995ஆம் ஆண்டு ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் நடைபெற்ற போது, டென்னிஸ் போட்டிகள் நடத்துவதற்காக நவீன வசதிகளுடன் சென்னை நுங்கம்பாக்கத்தில் கட்டப்பட்ட டென்னிஸ் விளையாட்டரங்கம் அமைக்கப்பட்டு 18 ஆண்டுகள் கடந்த நிலையில் பன்னாட்டு அளவிலான போட்டிகள் நடத்த ஏதுவாக இங்குள்ள செயற்கை இழை டென்னிஸ் ஆடு களங்கள், மின்னொளி அமைப்புகள், ஸ்கோர் போர்டு ஆகியவைகளை மாற்றி அமைப்பதுடன் பல்வேறு சீரமைப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட வேண்டிய நிலை உள்ளதால், தொலைக்காட்சி ஒளிபரப்பு வசதி, வீரர்கள் உடை மாற்றும் அறைகள், முக்கிய பிரமுகர்கள் அறை போன்ற பல்வேறு நவீன வசதிகளுடன் 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் இந்த டென்னிஸ் விளையாட்டரங்கம் புனரமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

10 வயது முதல் 14 வயதிற்குட்பட்ட, விளையாட்டில் ஆர்வமும், திறமையும் உள்ள 25 மாணவர்கள் மற்றும் 25 மாணவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு விளையாட்டில் உயர் தர நுணுக்கங்களுடன் கூடிய விஞ்ஞான ரீதியான பயிற்சி அளிப்பதற்கென சென்னையில் உலகத் தரம் வாய்ந்த முதன்மை நிலை விளையாட்டு மையம், அதாவது Centre of Excellence in Sports ஒன்று அமைக்கப்படும் என்றும் அதில் தேர்ந்தெடுக்கப்படும் மாணவ, மாணவியர் தங்கி பயிற்சி பெறுவார்கள் என்றும் ஏற்கெனவேநான் அறிவித்திருந்தேன். இதன்படி சிறுவர்களுக்கான முதன்மை நிலை விளையாட்டு மையம் ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கிலும், சிறுமியர்களுக்கான மையம் நேரு உள் விளையாட்டரங்கிலும் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தினை மேலும் விரிவுப்படுத்தும் நோக்கத்துடன், ஸ்ரீரங்கம், திருநெல்வேலி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில்

விளையாட்டு உபகரணங்கள், நவீன உடற்பயிற்சிக்கூடம் ஆகிய வசதிகளுடன் கூடிய முதன்மை நிலை விளையாட்டு மையங்கள் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த மையங்களில் பயிற்சி பெறும் மாணவ–மாணவியருக்கு அந்தந்த இடங்களில் உள்ள சிறந்த பள்ளிகளில் கல்வி பயிலவும் அரசு ஆவன செய்யும். இந்த மையங்கள் அமைக்க ஆண்டொன்றுக்கு 90 இலட்சம் ரூபாய் தொடரா செலவினமும், 60 இலட்சம் ரூபாய் தொடர் செலவினமும் ஏற்படும்.

சர்வதேச விளையாட்டரங்கில் வெற்றி பெறும் விளையாட்டு வீரர்களுக்கு மருத்துவர்கள் மற்றும் உணவு நிபுணர்களின் ஆலோசனைப்படி விஞ்ஞான முறையில் விளையாட்டின் தன்மையின் அடிப்படையில் சத்தான சமச்சீர் உணவு வழங்கப்பட்டு வருவது அவர்களின் வெற்றிக்கு ஒரு மூல காரணம் என்பதைக் கருத்தில் கொண்டு, விளையாட்டு விடுதிகளில் பயிற்சி பெற்று வரும் வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு சத்தான சமச்சீர் உணவு வகைகளை நாள்தோறும் வழங்குவதற்கு ஏதுவாக தற்போது வழங்கப்பட்டு வரும் தொகையான 75 ரூபாய், 250 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக, ஆண்டொன்றுக்கு கூடுதலாக 7 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

முதன்மை நிலை விளையாட்டு மையங்களில் பயிலும் சிறுவர், சிறுமியருக்கு உணவுக்காக நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 150 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் மேற்காணும் இடங்களில் கல்லூரியில் பயிலும் மாணவ மாணவியருக்காக தனித்தனியே சிறப்பு விளையாட்டு விடுதிகளும் செயல்பட்டு வருகின்றன. இவர்களுக்கு உணவுப்படியாக நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. மேற்காணும் முதன்மை விளையாட்டு மையம் மற்றும் சிறப்பு விளையாட்டு விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியருக்கு வழங்கப்பட்டு வரும் உணவுப்படி இனிமேல் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 200 ரூபாய் என உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்

கொள்கிறேன். இதற்காக, ஆண்டொன்றுக்கு கூடுதலாக 57 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

சிறந்த விளையாட்டுவீரர்களை உருவாக்கும் பயிற்றுநர்களின் பணியினை அங்கீகரிக்கும் வகையில், அவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர மதிப்பூதியம் 8,000 ரூபாயிலிருந்து 15,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக ஆண்டொன்றுக்கு கூடுதலாக ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் இயங்கும் மாவட்ட விளையாட்டு வளாகங்கள் அனைத்தும் கட்டி முடிக்கப்பட்டு 15 முதல் 20 ஆண்டுகள் முடிந்து விட்டபடியால் அவைகளை சீரமைத்து புதுப்பிக்க வேண்டியது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, விளையாட்டு அரங்கங்கள் மற்றும் கட்டமைப்புக்களைப் புதுப்பிக்க மற்றும் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள ஒரு முறை சிறப்பு மானியமாக 5 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திலுள்ள அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் தேசிய மாணவர் படை National Cadet Corps என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட இந்த தேசிய மாணவர் படைக்கென தனியாக எந்த விதமான பயிற்சி நிலையமும் இல்லை என்பதைக் கருத்தில் கொண்டும், இதன் காரணமாக பயிற்சி முகாம்கள் நடத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டும், தேசிய மாணவர் படைக்கென தனியாக பயிற்சி அகாடமி ஒன்று 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் முதன் முதலாக தமிழகத்தில் உடற் கல்வி மற்றும் விளையாட்டிற்கென பல்கலைக்கழகம் 2005 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 125 ஏக்கர் பரப்பளவுள்ள மேலக்கோட்டையூர் என்ற இடத்தில் இயங்கி வரும் இந்தப் பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்கள்

உடற் பயிற்சி செய்திட பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடங்கள் அமையப் பெறவில்லை. இப்பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவ மாணவியரின் பாடத் திட்டத்திற்கு ஏற்ப பயிற்சி செய்திட 40 இலட்சம் ரூபாய் செலவில் பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம் ஒன்று அமைக்கப்படும் என்பதையும், விளையாட்டுத் திடல் 35 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்காணும் நடவடிக்கைகள், ஆரோக்கியமான தமிழகம் உருவாகவும், தமிழக விளையாட்டு வீரர்களின் திறன் சர்வதேச அளவில் மேம்படவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

மகளிர் கல்வி வளர்ச்சிக்காக "தமிழ்நாடு காமன்வெல்த் அன்னை தெரசா மகளிர் பன்னாட்டு மையம்"!

14.05.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெண்களின் வளர்ச்சியை வைத்தே ஒரு நாட்டின் வளர்ச்சியை அளவிட முடியும் என்பதை உணர்ந்த எனது தலைமையிலான அரசு, தொட்டில் குழந்தை திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், மகளிர் சிறப்பு அதிரடிப்படை, மகளிர் காவல் நிலையம், மகளிர் எழுத்தறிவுத் திட்டம், மகளிர் தொழில் முனைவோர்களுக்கான பிரத்யேக தொழிற்பேட்டைகள், மகளிர் மேம்பாட்டுக் கழகம் மூலம் கடன் உதவிகள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் திட்டம், பெண்களின் சுகாதாரம் பேணும் வகையில் விலையில்லா சானிடரி நேப்கின் வழங்கும் திட்டம், மகளிர் வாழ்வாதாரத் திட்டங்கள் போன்ற பல முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்தி சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

மகளிர் மேம்பாட்டுக்காக நடப்பாண்டில் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

1. பெண்களின் கல்வி முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு அரசும், காமன்வெல்த் பல்கலைக்கழகச் சங்கமும் இணைந்து கொடைக்கானலில் உள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தில் "தமிழ்நாடு காமன்வெல்த் அன்னை தெரசா மகளிர் பன்னாட்டு மையம்" என்ற பெயரில் ஒரு பன்னாட்டு மையம் தொடங்கப்படும். இந்த மையத்திற்கான நிலத்தினை அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் வழங்கும்; கலை நயத்துடன் கூடிய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காக 5 கோடி ரூபாய் நிதி உதவியை தமிழக அரசு வழங்கும். இந்த மையம் மாணவிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் பன்னாட்டுக் கல்வி அனுபவத்தை வழங்கும்.

2. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்குவதற்கு ஊக்கமளிக்கும் வகையில், 2013–2014ஆம் ஆண்டில், தகுதியான மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 6,000 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்படும்.

3. மக்கள் நிலை ஆய்வு மூலம் கண்டறியப்பட்ட ஏழைக் குடும்பங்களுக்கு கடன் மீட்பு, மருத்துவ உதவி மற்றும் சிறிய வாழ்வாதாரங்களை மேற்கொள்வதற்கு உதவும் வகையிலும், திறன் வளர்ப்பு நடவடிக்கைகளுக்காகவும் 2,323 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு தலா 10 இலட்சம் ரூபாய் வீதம் 232 கோடியே 30 இலட்சம் ரூபாய் சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படும்.

4. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு உறுதுணையாக இருந்து வழி நடத்திடவும், அவர்களின் செயல்பாடுகளைக் கண்காணித்திடவும் தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெறும் ஊராட்சி அளவிலான 4,000 கூட்டமைப்புகளுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 40 கோடி ரூபாய் ஊக்க நிதி வழங்கப்படும்.

5. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் முதற்கட்டமாக செயல்படுத்தப்பட்டுவரும் 60 வட்டாரங்களில் 25,000 சுயஉதவிக் குழுக்களுக்கும், புதுவாழ்வுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் 120 வட்டாரங்களில் 25,000 சுய உதவிக் குழுக்களுக்கும் தொடர் கல்வித் திட்டம் மற்றும் பெண்கள் எழுத்தறிவுத் திட்டம் ஆகிய திட்டங்களின் ஒத்துழைப்புடன் படிப்பறிவு, எண்ணறிவு மற்றும் எழுத்தறிவு பயிற்சி அளிக்க 9 கோடியே 50 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

6. சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்த 100 "மதி" நடமாடும் அங்காடிகள் மற்றும் விற்பனை மையங்கள் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

7. பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளைத் தடுப்பதற்காக, தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் ஊராட்சி

அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கு 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் பாலின பயிற்சி வழங்கப்படும்.

8. சுய உதவிக் குழு பெண்கள் மூலம் சூரிய சக்தி சாதனங்கள் பயன்பாட்டினை ஊக்குவித்தல் மற்றும் பராமரிக்கும் வகையில் 2013–2014ஆம் ஆண்டில், ஒரு வட்டாரத்திற்கு 10 பெண்கள் வீதம் 4,000 பெண்களுக்கு 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி வழங்கப்படும்.

9. சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் இருந்து 1,000 வங்கி முகவர்கள் உருவாக்கப்படுவர்.

10. சுகாதாரச் சேவைகள் அனைவரையும் சென்றடையும் வகையில், 6300 சுய உதவிக் குழுப் பெண்களுக்கு 19 கோடியே ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுகாதார சமூக வல்லுநர் ஆவதற்கான பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்கள் மூலம் 88 இலட்சத்து 19 ஆயிரம் பெண்கள் மத்தியில், ''தொற்றா நோய்கள்'' குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

11. 1994–1995ஆம் ஆண்டு நான் தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த போது துவக்கப்பட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியருக்கான கல்வி ஊக்குவிப்பு சிறப்புத் திட்டத்தின் கீழ், 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியருக்கு ஆண்டொன்றுக்கு 500 ரூபாயும், 6ஆம் வகுப்பு பயிலும் மாணவியருக்கு ஆண்டொன்றுக்கு 1,000 ரூபாயும் கல்வி ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டம் இந்த ஆண்டு முதல் ஏழாம் வகுப்பு மற்றும் எட்டாம் வகுப்பு பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவியர்களும் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்படி ஏழாம் வகுப்பு மற்றும் எட்டாம் வகுப்பு பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவியருக்கு ஆண்டொன்றுக்கு 1500 ரூபாய் ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்படும். இதன் மூலம் 2 இலட்சத்து 77 ஆயிரம் மாணவியர் பயனடைவர்.

12. தமிழ்நாட்டில் உள்ள 76 ஆதி திராவிடர் நல மாணவியர் கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் மாணவியர் தங்கள் உடமைகளை துவைப்பதற்காக அன்றாடம் அதிக நேரம் செலவிடுகின்றனர் என்பதைக் கருத்தில் கொண்டு, இவர்கள் கல்வியில் தங்களது கவனத்தை முழுமையாக செலுத்தும் வகையில், இவ்விடுதிகளுக்கு துணிகளை துவைப்பதற்கு சலவை இயந்திரங்கள் வழங்கப்படும்.

13. 8,406 ஆதிதிராவிடர் இன மகளிரை உறுப்பினர்களாகக் கொண்ட மகளிர் தொழில் தையல் கூட்டுறவு சங்கங்களில் உள்ள பழமையான தையல் இயந்திரங்கள் மூலம் அவர்களால் தற்போது மாணவ, மாணவியர்களுக்கு அதிகரித்து வழங்கப்படுகின்ற 4 ஜோடி சீருடைகளை உரிய நேரத்தில் தைத்துக் கொடுக்க இயலவில்லை. மாணவ, மாணவியர்களுக்கான சீருடைகளை உரிய நேரத்தில் தைத்துக் கொடுக்க ஏதுவாக, இவர்களுக்கு நவீன தையல் இயந்திரங்கள் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக திட்டத் தொகையில் 70 விழுக்காடு விளிம்புக் கடனாக, அதாவது Margin Money ஆக 4 விழுக்காடு வட்டிக்கு தாட்கோ மூலம் வழங்கப்படும். இதற்கான செலவினத் தொகையான 8 கோடியே 83 இலட்சம் ரூபாய் தாட்கோ பங்கு மூலதனத்தில் இருந்தும், மீதமுள்ள 30 விழுக்காடு சிறப்பு மைய நிதி உதவியில் இருந்தும் வழங்கப்படும்.

14. வெளியூரில், குறிப்பாக மாவட்டத் தலைமையிடங்கள் மற்றும் பெருநகரங்களில் பணிக்குச் செல்லும் மகளிருக்கு குறைந்த கட்டணத்தில் பாதுகாப்பான உறைவிடங்கள் அதிகமாக தேவைப்படுகின்றன என்பதைக் கருத்தில் கொண்டு, பெண்களுக்குப் பாதுகாப்பான உறைவிட வசதிகளை செய்து தரும் வகையில் சமூக நலத் துறையின் மூலம், சென்னையில் இரண்டு இடங்களிலும், கடலூர், திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, தர்மபுரி மற்றும் தூத்துக்குடி ஆகிய 6 மாவட்டங்களிலும் தலா ஒரு இடத்திலும் என மொத்தம் 8 அரசு பணிபுரியும் மகளிர் விடுதிகள் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன. பணிபுரியும் பெண்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள்

உயர்ந்து வருவதைக் கருத்தில் கொண்டு கோயம்புத்தூர், திருப்பூர், சேலம், வேலூர், திருவள்ளூர், விழுப்புரம், பெரம்பலூர், திருச்சி, தஞ்சாவூர், சிவகங்கை மற்றும் திருநெல்வேலி, ஆகிய மாவட்டங்களில் தலா 1 விடுதி வீதம் 11 பணிபுரியும் மகளிர் விடுதிகளும், சென்னையில் 6 பணிபுரியும் மகளிர் விடுதிகளும், காஞ்சிபுரத்தில் 3 பணிபுரியும் மகளிர் விடுதிகளும் ஆக மொத்தம் 20 பணிபுரியும் பெண்களுக்கான அரசு விடுதிகள் கட்டப்படும். இதன் மூலம் சுமார் 1,000 பணிபுரியும் பெண்கள் பயன் பெறுவர். ஒரு விடுதி கட்டுமானம் மற்றும் பராமரிப்பிற்கென 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் வீதம், 25 கோடி ரூபாய் செலவில் இந்த விடுதிகள் அமைக்கப்படும்.

15. தமிழ்நாட்டில் 4,530 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் தங்கள் உறுப்பினர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு பல்வேறு கடன் உதவிகளை அளித்து வருகின்றன. தற்போது குறுகிய காலப் பயிர்க்கடன் அளவு மற்றும் வேளாண் முதலீட்டுக் கடன் அளவு அதிகரித்துள்ள நிலையில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களில் கடன் பெறும் உறுப்பினர்கள் கூடுதலாக பங்குத் தொகை செலுத்த வேண்டிய நிலை உள்ளது. எனவே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களில் உள்ள மகளிர் உறுப்பினர்கள் தங்கு தடையின்றி கடன் உதவி பெறும் வகையிலும், அவர்கள் கடன் வாங்கும் சக்தியினை அதிகரிக்கும் வகையிலும் 20,000 மகளிர் உறுப்பினர்களுக்கு 2,500 ரூபாய் வீதம் பங்குத் தொகை மானியமாக வழங்கப்படும். இதற்கென அரசு மானியமாக 5 கோடி ரூபாய் வழங்கப்படும். இதன் மூலம் மகளிர் தங்களது அத்தியாவசிய தேவைகளுக்காக 50,000 ரூபாய் வரை கடன் பெற இயலும்.

பெண்களின் நலனுக்காக செயல்படுத்தப்படும் இந்த திட்டங்கள், பெண்களின் வாழ்வில் ஒரு புதிய மறுமலர்ச்சியை நிச்சயம் ஏற்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

ரூ.100 கோடி மதிப்பீட்டில் மதுரையில் தமிழ்த்தாய் சிலை!

14.05.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திராவிட மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியாகவும், சீரிளமை குன்றாத மொழியாகவும், வளமையும் தூய்மையும் மிக்க மொழியாகவும், மொழிக்கு மட்டுமல்லாமல் வாழும் நெறிக்கும் இலக்கணம் வகுத்த மொழியாகவும், உலக மொழிகள் அனைத்திலும் தொன்மை மிக்க மொழியாகவும் விளங்குகின்ற தமிழ் மொழிக்கு பெருமை சேர்ப்பதிலும், அதனை உலகெங்கும் பரப்புவதிலும் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

பெருமை வாய்ந்த தமிழ் மொழியை சிறப்பிக்கும் வண்ணம், அமெரிக்கா நாட்டின் பெருமையையும் புகழையும் உலகளவில் பரப்பும் வகையில் அமைந்துள்ள சுதந்திர தேவி சிலையைப் போல, Statue of Liberty போல தமிழர்களின் நாகரீகம், பண்பாடு, இலக்கியச் செல்வங்கள், கட்டடக் கலைத் திறன் ஆகியவற்றை உலகிற்கு எடுத்துக் காட்டும் வகையில், சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்த் தாய் சிலை அமைக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், ஐவகை நிலங்களான குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல், பாலை ஆகியவற்றின் மாதிரிகளை உருவாக்கி தமிழர்களின் தொன்மைச் சான்றுகளாய் விளங்கும் சங்க இலக்கியங்களில் குறிப்பிட்டுள்ள மரம், செடி, கொடிகளுடன் தமிழ்த் தாய்ப் பூங்கா ஒன்றும் அங்கு உருவாக்கப்படும்.

தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் ஆண்டு தோறும் சிறந்த தமிழ் அறிஞர்களுக்கு திருவள்ளுவர் விருது, திரு.வி.க. விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, பாரதியார் விருது, கி.ஆ.பெ.

விசுவநாதம் விருது ஆகியவை திருவள்ளுவர் திருநாளிலும், தமிழ்த் தாய் விருது, கபிலர் விருது, உ.வே.சா. விருது, கம்பர் விருது, சொல்லின் செல்வர் விருது ஆகியவை சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்றும் வழங்கப்படுகின்றன. அந்த வகையில், திருக்குறளை முதன் முதலில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து திருக்குறளை பிற நாட்டு அறிஞர்களும் பாமரர்களும் புரிந்து கொள்ள வழிவகை செய்தவரும், அற நெறிக் கருவூலமான நாலடியார் மற்றும் திக்கெட்டும் தமிழ்ப் புகழ் பரப்பும் திருவாசகம் ஆகியவற்றை மொழி பெயர்த்தவரும் ஆன அயல்நாட்டுத் தமிழ் அறிஞர் திரு. ஜி.யு. போப் அவர்களின் தமிழ்த் தொண்டை போற்றும் வகையில், அயல் நாட்டு மொழிகளில் தமிழ் இலக்கியங்களை மொழி பெயர்க்கும் சிறந்த தமிழ் மொழி பெயர்ப்பாளர் ஒருவருக்கு ஜி.யு.போப் விருது வழங்கப்படும். விருது பெறுபவருக்கு விருதுத் தொகையாக ஒரு இலட்சம் ரூபாய், தங்கப் பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்படும். இதற்கென ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இந்த விருது சித்திரைத் திருநாள் தமிழ்ப் புத்தாண்டு அன்று வழங்கப்படும்.

இஸ்லாமியத் தமிழ்க் காப்பியங்களில் சிறந்த காப்பியமான சீறாப் புராணத்தை இயற்றிய உமறுப் புலவர் தமிழுக்கு ஆற்றிய அருந்தொண்டைப் போற்றும் வகையில், தமிழுக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் தொண்டாற்றி வரும் தமிழ் அறிஞர் ஒருவருக்கு உமறுப் புலவர் பெயரில் விருது வழங்கப்படும். விருது பெறுபவருக்கு விருதுத் தொகையாக ஒரு இலட்சம் ரூபாய், தங்கப் பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடை ஆகியவை வழங்கப்படும். இதற்கென ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இந்த விருது சித்திரைத் திருநாள் தமிழ்ப் புத்தாண்டு அன்று வழங்கப்படும். வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப உலகமெலாம் கணினி வழித் தமிழ் மொழி பரவிட வகை செய்யும் வகையில் கணினித் தமிழ் வளர்ச்சிக்காக சிறந்த தமிழ் மென்பொருள் உருவாக்குபவர்களை ஊக்குவிக்கும் வகையில் 'முதலமைச்சர் கணினித் தமிழ் விருது' என்ற பெயரில் ஒரு விருது வழங்கப்படும். விருது பெறுபவருக்கு

விருதுத் தொகையாக ஒரு இலட்சம் ரூபாய், தங்கப் பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்படும். இதற்கென ஒரு இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இந்த விருது சித்திரைத் திருநாள் தமிழ்ப் புத்தாண்டு அன்று வழங்கப்படும்.

இந்தியாவின் ஏனைய மாநிலங்களிலும் தமிழ்க் கல்வி வளர முதல் நடவடிக்கையாக டெல்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை நிறுவிட 2003 ஆம் ஆண்டு 50 இலட்சம் ரூபாய் நிதி எனது அரசால் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, ஒரிசா, உத்தர் பிரதேஷ், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கை நிறுவிட மானியங்கள் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளன. ஆந்திராவில் உள்ள சிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றான திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ் அறிஞர் மு.வ. அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தமிழ்த் துறை தொடங்கப்பட்டு தற்போது பொன்விழா கண்டுள்ளது. இத்தமிழ்த் துறையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் தமிழ் முதுகலை, முனைவர் பட்டப் படிப்பு படித்து வருகின்றனர். ஆனால் தமிழ்த் துறையில் போதிய அளவு ஆசிரியர்கள் இல்லாத நிலை உள்ளது. எனவே அங்கு தமிழ் படிக்கும் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டும், வருங்காலத்தில் ஆந்திர மாநிலத்தில் தமிழ் மொழியை வளர்ப்பதைக் கருத்தில் கொண்டும், திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைக்கு 3 உதவிப் பேராசிரியர் பணியிடங்களுக்கு நிதி உதவியாக ஆண்டுக்கு 30 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழர் பண்பாட்டையும் நாகரீகத்தையும் போற்றி வளர்த்து வரும் தில்லி தமிழ்ச் சங்க வளாகத்தின் நுழைவாயிலில் தமிழர்தம் கட்டடக் கலையை வெளிப்படுத்தும் விதமாக தோரண வாயில் அமைத்திட வேண்டும் எனவும் அதற்கு தமிழக அரசு உதவிட வேண்டும் எனவும் தில்லித் தமிழ்ச் சங்கம் கோரிக்கை வைத்துள்ளது. அவர்களின் கோரிக்கையை ஏற்று தில்லித் தமிழ்ச்

சங்கத்திற்கு தோரண வாயில் கட்ட நிதி உதவியாக 25 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை மனநிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்களால் 1968ஆம் ஆண்டு நடத்தப்பட்ட உலகத் தமிழ் மாநாட்டின் போது அறிவிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் அமைக்கப்பட்ட உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் தமிழர்தம் வாழ்க்கை வளத்தை எடுத்துக் கூறும் தொல் காப்பியத்தின் பெயரால் ஆய்விருக்கை ஏற்படுத்தப்படும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தொல்காப்பியத்திற்கு எழுதியுள்ள பல்வேறு விளக்க உரைகளை ஒன்று சேர்த்து முறைப்படுத்துவது, பிற பல்கலைக்கழகங்களுடன் இணைந்து தொல்காப்பியம் குறித்தான பயிலரங்குகள், கருத்தரங்குகள் நடத்துவது போன்ற பல்வேறு தமிழ் வளர்ச்சிப் பணிகள் இந்த ஆய்விருக்கையின் மூலம் மேற்கொள்ளப்படும். இதற்கென உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு 50 இலட்சம் ரூபாய் வைப்புத் தொகையாக வழங்கப்படும்.

நாட்டிற்காகப் பெருந்தொண்டாற்றி பல்வேறு தியாகங்களைச் செய்த தலைவர்கள் மற்றும் சான்றோர்களைக் கவுரவிக்கும் வகையிலும், வருங்கால சந்ததியினர் அவர்களின் தியாகங்களை அறிந்து கொள்ளும் வகையிலும் நினைவிடங்கள், நினைவு இல்லங்கள் மற்றும் மணி மண்டபங்களை அரசு உருவாக்கிப் பராமரித்து வருகிறது.

அந்த வகையில், வாள் வீச்சு, அம்பு எறிதல், ஈட்டி எறிதல், குதிரையேற்றம் என பல்வேறு போர்க் கலைகளை கற்றறிந்தவரும், பல மொழிகளில் புலமை பெற்றவரும், ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடிய முதல் இந்தியப் பெண்மணி என்ற பெயரை பெற்றவரும், சிவகங்கை சீமை மன்னர் பதவியை வகித்தவருமான வீர மங்கை வேலு நாச்சியார் அவர்களுக்கு 80 இலட்சம் ரூபாய் செலவில் சிவகங்கை மாவட்டத்தில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்று நான் இந்த மாமன்றத்தில் அறிவித்தேன்.

இதன்படி, 80 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தத் தருணத்தில், 8.4.2013 அன்று இந்த மாமன்றத்தில் வினாக்கள் – விடைகள் நேரத்தில் பேசிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள், வீர மங்கை வேலு நாச்சியார் நினைவைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் அரசு விழா நடத்தப்பட வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார்.

இவரது கோரிக்கையை ஏற்று, சுதந்திர போராட்ட வீரர் வீர மங்கை வேலு நாச்சியார் அவர்களுக்கு சிவகங்கை மாவட்டத்தில் நினைவுச் சின்னம் அமைக்கின்ற பணிகள் முடிக்கப் பெற்றவுடன், அவரது பிறந்த நாள் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏறத்தாழ 12 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா நினைவிட வளாகத்திற்குள் உள்ள 3 ஏக்கர் பரப்பளவிலான இடம் பயன்பாட்டில் இல்லாத நிலையில் உள்ளதைக் கருத்தில் கொண்டும், இங்கு வரக் கூடிய இலட்சக்கணக்கான மக்களை மகிழ்வூட்டும் வகையிலும், அந்த இடத்தினை மேம்படுத்தி இயற்கை எழில் கொஞ்சும் பூங்கா அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பத்திரிகையாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்களது குடும்பச் சூழ்நிலைகளையும், தற்போதைய காலச் சூழ்நிலையையும், கருத்தில் கொண்டு, பத்திரிகையாளர்களின் மாதாந்திர ஓய்வூதியத் தொகை 6,000 ரூபாயிலிருந்து 7,500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதே போன்று, பத்திரிகையாளரின் மனைவிக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர குடும்ப ஓய்வூதியம் 3,000 ரூபாயிலிருந்து 4,500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

எழுது பொருள் மற்றும் அச்சுத் துறையின் முக்கிய அங்கமாக விளங்கும் அரசு மைய அச்சகம் பல்லாண்டுகளாக

தொய்வின்றி செயல்பட்டு வருகிறது. இங்கு அரசுத் துறைகளைச் சார்ந்த அனைத்து ஆவணங்களும் அச்சிடப்படுகின்றன. இந்த மையத்தின் காகிதக் கிடங்கு பழமை வாய்ந்த கட்டடத்தில் ஓடு வேய்ந்த கூரையின் கீழ் சிதிலம் அடைந்த கட்டடத்தில் இயங்கி வருகிறது. பழைமை வாய்ந்த அக்கட்டடத்தில் ஏற்படும் சேதங்கள் அவ்வப்போது சீரமைக்கப்பட்டு வந்தாலும், மழைக் காலங்களில் நீர் கசிவு ஏற்பட்டு காகிதங்கள் சேதம் அடைய வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. எனவே அரசு மைய அச்சகத்திற்கு என புதிய காகித கிடங்கு 4,000 சதுர அடியில், 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்காணும் நடவடிக்கைகள் தமிழ் மொழியின் பெருமையையும், தமிழ் அறிஞர்களின் பெருமையையும் உலக அரங்கில் எடுத்துச் செல்ல வழி வகுப்பதோடு மட்டுமல்லாமல், பொதுமக்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் நன்மை பயக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

ரூ.1,481 கோடி மதிப்பீட்டில் கடலோரப் பேரிடர் இன்னல்கள் குறைப்புத் திட்டம்!

15.05.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அனைத்துத் துறைகளுக்கும் தாய்த் துறையாகவும், அரசாங்கத்தின் முதுகெலும்பாகவும், ஏழை, எளிய மக்களின் துயர்களை களைந்து அவர்களை ஏற்றிவிடும் ஏணியாகவும் விளங்குகின்ற வருவாய்த் துறையின் செயல் திறனை மேம்படுத்தும் நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு முனைப்புடன் எடுத்து வருகிறது.

வருவாய்த் துறையின் சேவை மக்களை விரைந்து அடைய வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், புதிய மாவட்டங்களை உருவாக்குதல், புதிய வட்டாட்சியர் அலுவலகங்களை உருவாக்குதல், ஒவ்வொரு கிராமத்திற்கும் தனியாக கிராம நிருவாக அலுவலர்களை நியமித்தல் போன்ற எண்ணற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் உள்ள வருவாய் வட்டங்களில், 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட வட்டங்களை பிரிக்க பரிந்துரை செய்யும் வகையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு 4 இலட்சத்திற்கும் மேல் மக்கள் தொகை கொண்ட 62 வட்டங்களைக் கண்டறிந்து அவற்றில் 51 வட்டங்களை முதலில் பிரிக்க பரிந்துரை செய்துள்ளது. அதில் முதற்கட்டமாக மாநகரப் பகுதியில் உள்ள வட்டங்களை பிரிக்க முன்னுரிமை அளிக்கப்படும்.

அதன்படி, இந்த நிதியாண்டில் சென்னை மாவட்டத்தில் உள்ள கோட்டை – தண்டையார்பேட்டை வட்டத்தினைப் பிரித்து புரசைவாக்கத்தில் ஒரு புதிய வட்டமும்; புரசைவாக்கம்–பெரம்பூர் வட்டத்தினைப் பிரித்து அயனாவரத்தில் ஒரு புதிய வட்டமும்; எழும்பூர்–நுங்கம்பாக்கம் வட்டத்தினைப் பிரித்து அமைந்தகரையில் ஒரு புதிய வட்டமும்; மைலாப்பூர்–திருவல்லிக்கேணி வட்டத்தினைப் பிரித்து வேளச்சேரியில் ஒரு புதிய வட்டமும்; மாம்பலம் –கிண்டி

வட்டத்தினைப் பிரித்து கிண்டியில் ஒரு புதிய வட்டமும்; திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் வட்டத்தினைப் பிரித்து திருவொற்றியூரில் ஒரு புதிய வட்டமும்; அம்பத்தூர் வட்டத்தினைப் பிரித்து மதுரவாயலில் ஒரு புதிய வட்டமும்; திருப்பூர் மாவட்டம் திருப்பூர் வட்டத்தினைப் பிரித்து திருப்பூர் (தெற்கு) என்ற ஒரு புதிய வட்டமும்; அவினாசி வட்டத்தைப் பிரித்து ஊத்துக்குளியில் ஒரு புதிய வட்டமும்; திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி வட்டத்தினைப் பிரித்து திருச்சிராப்பள்ளி (கிழக்கு) என்ற ஒரு புதிய வட்டமும்; மணப்பாறை வட்டத்தைப் பிரித்து மருங்காபுரியில் ஒரு புதிய வட்டமும்; மதுரை மாவட்டம், மதுரை (தெற்கு) வட்டத்தினைப் பிரித்து திருப்பரங்குன்றம் மற்றும் மதுரை (மேற்கு) ஆகிய இரு புதிய வட்டங்களும்; மதுரை (வடக்கு) வட்டத்தினைப் பிரித்து மதுரை (கிழக்கு) என்ற புதிய வட்டமும்; கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் (தெற்கு) வட்டத்தினைப் பிரித்து பேரூர் மற்றும் மதுக்கரை ஆகிய இரு புதிய வட்டங்களும்; சேலம் மாவட்டம், சேலம் வட்டத்தினைப் பிரித்து சேலம் (மேற்கு) மற்றும் சேலம் (தெற்கு) ஆகிய இரு புதிய வட்டங்களும்; வேலூர் மாவட்டம், வேலூர் வட்டத்தினைப் பிரித்து அணைக்கட்டில் ஒரு புதிய வட்டமும்; திருப்பத்தூர் வட்டத்தைப் பிரித்து நாட்றாம்பள்ளியில் ஒரு புதிய வட்டமும்; கரூர் மாவட்டம், கரூர் வட்டத்தைப் பிரித்து மண் மங்கலத்தில் ஒரு புதிய வட்டமும்; விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டத்தைப் பிரித்து, விக்ரவாண்டியில் ஒரு புதிய வட்டமும்; கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் வட்டத்தைப் பிரித்து, வேப்பூரில் ஒரு புதிய வட்டமும்; தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டத்தைப் பிரித்து பூதலூரில் ஒரு புதிய வட்டமும்; திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டத்தைப் பிரித்து, திண்டுக்கல் (மேற்கு) என்ற புதிய வட்டமும் என மொத்தம் 25 புதிய வருவாய் வட்டங்கள் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டில் உருவாக்கப்பட்ட 9 புதிய வருவாய் வட்டங்கள் மற்றும் தற்போது உருவாக்கப்பட உள்ள 25 புதிய வருவாய் வட்டங்கள் ஆகியவற்றை சேர்த்து கடந்த இரண்டாண்டு காலத்தில் 34 புதிய வருவாய் வட்டங்கள் உருவாக்க நடவடிக்கை

எடுக்கப்பட்டுள்ளது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிக அளவு வருவாய் வட்டங்களை மட்டும் உருவாக்கினால் போதுமானதல்ல, அந்த வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு உரிய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, கடலூர் மாவட்டத்தில் குறிஞ்சிப்பாடி, நாகப்பட்டினம் மாவட்டத்தில் குத்தாலம், திருவள்ளூர் மாவட்டத்தில் மாதவரம், திருப்பூர் மாவட்டத்தில் மடத்துக்குளம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் சோழிங்கநல்லூர் மற்றும் வேலூர் மாவட்டத்தில் ஆம்பூர் ஆகிய ஆறு வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு மொத்தம் 16 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதே போன்று, நடப்பாண்டில் 20 வருவாய் ஆய்வாளர்களுக்கு குடியிருப்புடன் கூடிய அலுவலகக் கட்டடங்கள் தலா 14 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுமக்கள் குறு வட்ட அளவர்களை எளிதாக தொடர்பு கொள்ள வசதியாக, மொத்தமுள்ள 1,136 குறு வட்டங்களில், 100 குறு வட்டங்களில் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் தலா 14 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் செலவில் குறு வட்ட அளவர்களின் பயன்பாட்டிற்காக கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், நடப்பாண்டில் 114 கிராம நிருவாக அலுவலர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புக் கட்டடங்கள் தலா 8 இலட்சத்து 21 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென 9 கோடியே 36 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

மேலும், 5,000 கிராம நிருவாக அலுவலகக் கட்டடங்கள் 25 கோடி ரூபாய் செலவில் நடப்பாண்டில் புதுப்பிக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக கடலோர மாவட்ட மக்களுக்கு, கடல் சீற்றம், சுனாமி, புயல் போன்ற பேரிடர்களினால் ஏற்படும் பாதிப்பினை தணிக்கும்

வகையில், ஏறத்தாழ 1,481 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கடலோர பேரிடர் இன்னல்கள் குறைப்புத் திட்டம், அதாவது Coastal Disaster Risk Reduction Project இந்த நிதியாண்டில் உலக வங்கி நிதி உதவியுடன் துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தின் கீழ் 121 கடலோரப் பாதுகாப்பு மையங்கள் அமைத்தல், பாதுகாப்பு மையங்களுக்கான 50 கிலோ மீட்டர் நீளமுள்ள வழித் தடங்கள் அமைத்தல், 439 முன்னெச்சரிக்கை அறிவிப்புக் கருவிகள் அமைத்தல் போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படும். எனது தலைமையில் அமைக்கப்பட்டுள்ள மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம், அதாவது Tamil Nadu Disaster Management Authority மூலமாக இத் திட்டத்தின் பணிகள் கண்காணிக்கப்படும். மேலும் இந்த ஆணையத்தின் மூலம் பேரிடர்களினால் ஏற்படும் இன்னல்களைக் கண்காணித்து அவற்றைத் தணிப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவ்வாணையத்தை வலுப்படுத்தும் வகையில் புதிய கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும். இந்த ஆணையத்தின் மூலம் கடலோர மக்களுக்கு பேரிடர் தொடர்பான விழிப்புணர்வுப் பயிற்சிகள் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ், இயற்கைச் சீற்றங்களினால் அதிக பாதிப்பிற்கு உள்ளாகும் கடற்கரை மாவட்டங்களான கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களின் நகரப் பகுதிகளில் அமைந்துள்ள மின் இணைப்புகளை மாற்றி புதியதாக பூமிக்கு அடியில் மின் கம்பிகளைப் பதித்து மின் இணைப்புகள் வழங்கப்படும் என்பதையும் மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டமானது, நடப்பாண்டில் தொடங்கி 5 வருடங்களில் முடிவடையும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வருவாய்த் துறையில் செயல்படுத்தப்பட உள்ள இந்த திட்டங்கள் மூலம் பொதுமக்களும், வருவாய்த் துறையினரும் பெரிதும் பயன் அடைவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

150 பள்ளிகள் நிலை உயர்வு!
புதிதாக 54 தொடக்கப் பள்ளிகள் அமைப்பு!

15.05.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மனித வாழ்க்கை வளம் பெறுவதற்கும், சமுதாய மேம்பாட்டிற்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் அடித்தளமாக விளங்குவது வற்றாத செல்வமாம் கல்வி என்பதை உணர்ந்த எனது தலைமையிலான அரசு, கடந்த இரண்டு ஆண்டுகளில் கல்விக்காக காசு செலவழிக்கத் தேவையில்லை என்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கி தமிழ்நாட்டில் கல்விப் புரட்சியையே ஏற்படுத்தியுள்ளது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

மக்கள் தொகை 300 பேர் கொண்ட குடியிருப்புப் பகுதிகளில் இருந்து ஒரு கிலோமீட்டர் தூரத்திற்குள் ஒரு தொடக்கப்பள்ளி அமைய வேண்டும் என்ற அடிப்படையில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் 54 குடியிருப்பு பகுதிகளில் தொடக்கப் பள்ளிகள் இல்லாதது கண்டறியப்பட்டுள்ளது. இந்த 54 குடியிருப்புப் பகுதிகளிலும் புதிய தொடக்கப் பள்ளிகள் அமைக்கப்படும் என்பதையும், அப்பள்ளிகளுக்கு தேவைக்கேற்ப ஒரு தலைமை ஆசிரியர் மற்றும் ஒரு இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்தப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளை பொறுத்த வரையில், 5 கிலோமீட்டர் தொலைவிற்குள் ஓர் உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில், மத்திய அரசால் நிதி உதவி அளிக்கப்படாத நிலையிலும், மாணவர்களின் நலன் கருதி, மாநில நிதியிலிருந்து 2013–2014 ஆம் கல்வியாண்டில் 50 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். உயர்நிலைப் பள்ளி

ஒன்றுக்கு ஒரு தலைமையாசிரியர் பணியிடம் வீதம் 50 உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்கள் மற்றும் உயர்நிலைப் பள்ளி ஒன்றுக்கு 5 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 250 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் என மொத்தம் 300 பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும்.

இதே போன்று, 2013–2014 ஆம் கல்வியாண்டில் 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படும் என்பதையும், இவ்வாறு தரம் உயர்த்தப்படும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு பள்ளி ஒன்றுக்கு ஒரு தலைமையாசிரியர் பணியிடம் வீதம் 100 தலைமையாசிரியர் பணியிடங்கள் மற்றும் பள்ளி ஒன்றுக்கு ஒன்பது முதுகலை ஆசிரியர் பணியிடம் வீதம் 900 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் என மொத்தம் 1,000 பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென ஆண்டொன்றுக்கு 45 கோடி ரூபாய் அரசுக்கு செலவு ஏற்படும்.

தமிழகம் மற்றும் பிற மாநிலங்களைச் சார்ந்த தொழிலாளர்கள் பணிநிமித்தம் இடம்பெயர்ந்து தமிழகத்தில் உள்ள பல்வேறு மாவட்டங்களில் தங்களது குடும்பங்களுடன் தற்காலிகமாக குடியேறுகின்றனர். இவ்வாறு இடம்பெயர்ந்த 6,081 தொழிலாளர்களின் குழந்தைகள் அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்தக் குழந்தைகளுக்கு கல்வி பெறும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தரும் நல்நோக்குடன் "இடம் பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி வசதி அளிக்கும் திட்டம்" என்ற புதிய திட்டம் நடப்பாண்டு முதல் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்படி, இடம் பெயர்ந்து வந்த தொழிலாளர்களின் குழந்தைகள் அவர்தம் இருப்பிடத்திற்கு அருகில் உள்ள பள்ளிகளில் முறையாக சேர்க்கப்படுவர். இவர்களுக்கு அவர்களது தாய் மொழியும் கற்பிக்கப்படும். இதன் மூலம் அரசுக்கு தோராயமாக 4 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

மாணவ–மாணவியருக்கு வழங்கப்படும் விலையில்லா பொருட்கள் தரமானதாகவும், குறித்த காலத்திலும் வழங்கப்பட

வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டும், பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் வெவ்வேறு இயக்ககங்கள் கல்வி சார்ந்த பணிகளில் தனிக் கவனம் செலுத்தி சிறப்பாக செயல்பட வேண்டும் என்ற அடிப்படையிலும், மாணவ – மாணவியருக்காக வழங்கப்படும் அனைத்து பொருள்களையும் கொள்முதல் செய்து விநியோகிக்கும் பணி இனி வருங்காலங்களில் தமிழ்நாடு பாடநூல் கழகத்திற்கு வழங்கப்படும் என்பதையும், தமிழ்நாடு பாடநூல் கழகம் கொள்முதல் ஒருங்கிணைப்பு மையமாக செயல்பட ஏதுவாக "தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்" என பெயர் மாற்றம் செய்யப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வியில் மட்டுமல்லாது விளையாட்டிலும் மாணவர்கள் சிறந்து விளங்க வேண்டும் என்பதில் ஆணித்தரமான நம்பிக்கை கொண்டுள்ள எனது தலைமையிலான அரசு, விளையாட்டிற்கான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவது, பள்ளிகளில் பல்வேறு வகையான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது, தேசிய அளவில் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களை விளையாட்டு உபகரணங்கள் வழங்கி ஊக்குவிப்பது என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நடப்பாண்டு முதல் மாநில மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெறும் மாணவ–மாணவியருக்கு உதவி புரியும் வகையில், இதற்கென முதன் முறையாக 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வியிலும், பொருளாதாரத்திலும் பின்தங்கியுள்ள குடும்பங்களைச் சேர்ந்த பெண் குழந்தைகள் மேல்நிலைப் படிப்பு பயில ஏதுவாக, மத்திய – மாநில அரசுகளின் நிதி உதவியுடன் 44 பெண்கள் விடுதிகள் கட்டுவதற்கு 2009–2010 ஆம் ஆண்டு ஆணையிடப்பட்டது. இருப்பினும், ஒப்பளிக்கப்பட்ட தொகை இவ்விடுதிகள் கட்ட போதுமானதாக இல்லை என்கின்ற காரணத்தினால், இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. மத்திய – மாநில அரசுகளின் நிதி உதவியுடன் இந்தப் பணிகள்

மேற்கொள்ளப்பட உள்ளதைக் கருத்தில் கொண்டு, நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், கூடுதல் நிதியை அளிக்குமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்ள உத்தரவிட்டேன். மத்திய அரசிடமிருந்து சாதகமான பதில் வராத சூழ்நிலையில், பெண்களுக்கான விடுதிகள் உடனடியாக கட்டப்பட வேண்டும் என்பதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு விடுதியிலும் 100 பெண்கள் தங்கக்கூடிய 44 பெண்கள் விடுதிகள் கட்டத் தேவைப்படுகின்ற கூடுதல் நிதியான 31 கோடியே 46 இலட்சம் ரூபாயை மாநில அரசின் நிதியிலிருந்து உடனடியாக ஒதுக்கீடு செய்யுமாறு நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்மூலம் 4,400 பெண் குழந்தைகள் பயன்பெறுவார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள 13 மாவட்டங்களில் 44 ஒன்றியங்கள் கல்வியில் பின்தங்கியுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. இந்த பகுதியில் உள்ள மாணவ–மாணவியரின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக 2012–2013 ஆம் ஆண்டு 26 மாதிரிப் பள்ளிகள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கிராமப்புற மாணவர்களுக்கு பயனளிக்கக்கூடிய இந்த மாதிரிப் பள்ளிகளை தரமுடன் உடனடியாக கட்டி முடிக்க கூடுதல் நிதி உதவி தேவைப்படுவது எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, இதற்கென 38 கோடியே 44 இலட்சம் ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்மூலம் 10,640 மாணவர்கள் பயன்பெறுவார்கள்.

மேற்காணும் அரசின் நடவடிக்கைகள், கல்வியின் தரத்திலும், உட்கட்டமைப்பிலும், விளையாட்டுத் துறையிலும் இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக்க வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

சென்னையைப் போன்றே இதர 9 மாநகராட்சிகளிலும் அம்மா உணவகங்கள்!

15.05.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வயிற்றுக்குச் சோறிட வேண்டும் – இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்" என்ற பாரதியின் வரிகளுக்கேற்ப, ஏழை, எளிய, நடுத்தர மக்கள் மலிவு விலையில் வயிறார உணவு உண்ணும் வகையில், சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 200 வார்டுகளிலும் மலிவு விலை உணவகங்களை நான் திறந்து வைத்துள்ளேன் என்பதை மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

இந்தத் திட்டத்தின்படி, காலை 7 மணி முதல் 10 மணி வரை இட்லி ஒன்று ஒரு ரூபாய்க்கும், மதிய உணவாக நண்பகல் 12 மணி முதல் மாலை 3 மணி வரை சாம்பார் சாதம் 5 ரூபாய்க்கும், தயிர் சாதம் 3 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் பொதுமக்கள் மத்தியில் அமோக வரவேற்பினை பெற்றுள்ளது.

இந்தத் திட்டம் தமிழகத்தின் இதர பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில் மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, சேலம், திருப்பூர், தூத்துக்குடி, வேலூர், மற்றும் ஈரோடு ஆகிய ஒன்பது மாநகராட்சிகளில் முதற்கட்டமாக ஒவ்வொரு மாநகராட்சியிலும் 10 இடங்களில் மலிவு விலை உணவகங்கள் இந்த மாத இறுதிக்குள் திறக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த உணவகங்களிலும் காலை 7 மணி முதல் 10 மணி வரை இட்லி ஒன்று ஒரு ரூபாய்க்கும், மதிய உணவாக நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை சாம்பார் சாதம் 5 ரூபாய்க்கும், தயிர் சாதம் 3 ரூபாய்க்கும் வழங்கப்படும்.

சென்னை மாநகராட்சியில் தற்போது செயல்பட்டு வரும் உணவகங்களுக்கு வரும் பொதுமக்கள் காலைச் சிற்றுண்டியில் கூடுதலாக பொங்கல் சேர்க்க வேண்டும் என்றும், மதிய உணவின் போது, கூடுதலாக சாத வகைகளை சேர்க்க வேண்டும் என்றும், மாலை நேரங்களில் சப்பாத்தி விநியோகிக்க வேண்டும் என்றும், கோரிக்கைகள் விடுத்துள்ளனர். பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று, சென்னை மாநகரத்தில் செயல்படும் அனைத்து மலிவு விலை உணவகங்களிலும், காலை சிற்றுண்டியின் போது இட்லி தவிர, பொங்கல் – சாம்பார் 5 ரூபாய்க்கும், மதிய உணவின் போது எலுமிச்சை சாதம் அல்லது கருவேப்பிலை சாதம் 5 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாலை நேரங்களில் சப்பாத்தி விற்பனை செய்வதைப் பொறுத்த வரையில், சப்பாத்தி தயாரிப்பதற்குத் தேவையான இயந்திரங்கள் மற்றும் பாத்திரங்களை ஒப்பந்தப் புள்ளி மூலம் கொள்முதல் செய்வதற்குத் தேவைப்படும் கால அவகாசத்தைக் கருத்தில் கொண்டு, இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் சென்னை மாநகராட்சி நடத்தி வரும் 200 மலிவு விலை உணவகங்களிலும் மாலை வேளைகளில் இரண்டு சப்பாத்தி மற்றும் பருப்பு கடைசல் அல்லது குருமா 3 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும்.

இதன் மூலம், ஏழை, எளிய, நடுத்தர மக்கள் விலைவாசி உயர்விலிருந்து ஓரளவு பாதுகாக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

விவசாயிகளுக்கு 80 விழுக்காடு மானியத்தில் 2,000 சூரியசக்தி பம்பு செட்டுகள்!

15.05.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் வகையிலும், விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கும் வகையிலும், பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

தமிழ்நாடு நீர்ப் பற்றாக்குறை உள்ள மாநிலம் என்பதால், பாசனத்திற்கு இப்பொழுது கிடைக்கும் நீரினை வீணாக்காமல் சிக்கனமாகப் பயன்படுத்தி, பயிரிடும் பரப்பினை அதிகரித்து அதிக மகசூல் பெறுவது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் முதலான நுண்ணீர்ப் பாசன அமைப்புகளை சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 விழுக்காடு மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 75 விழுக்காடு மானியத்திலும், இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழக அரசு வழங்கி இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

அதிகரித்து வரும் மின்சாரத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு, சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டுகளை மானியத்தில் வழங்கும் திட்டத்தை எனது தலைமையிலான அரசு முதன் முதலாக சென்ற ஆண்டு அறிவித்தது. இதனைச் செயல்படுத்தும் வகையில், டெல்டா மாவட்டங்களில் 500 சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டுகளை 80 விழுக்காடு மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கும் பணிகள் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் மூலம் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்த பம்பு செட்டுகள் விரைவில் வழங்கப்படும்.

தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்த பாசன நீர் மற்றும் எரிசக்தித் தேவையை பூர்த்தி செய்வது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, மின்சாரத்திற்கான தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகின்ற இந்தச் சூழ்நிலையில், வேளாண் பாசனத்திற்கு ஒரு சிறந்த மற்றும் நிரந்தரத் தீர்வு காணும் வகையில், சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளை விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கவும், அதனுடன் நுண்ணீர்ப் பாசன அமைப்புகளை இணைத்தும் ஒரு புதிய திட்டத்தை செயல்படுத்த எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2013–2014 ஆம் நிதியாண்டில், வேளாண்மைத் துறை மூலம் விவசாயிகளுக்கு குழாய்க் கிணறு, ஆழ்க் குழாய்க் கிணறு, திறந்த வெளிக் கிணறு மற்றும் தரை மட்ட நீர்த் தேக்கத் தொட்டியிலிருந்து நீரை இறைக்க ஏதுவாக, 80 விழுக்காடு மானியத்துடன் கூடிய, 5 குதிரைத் திறன் கொண்ட சூரிய சக்தியால் இயங்கும் சூரிய ஒளியினை முழுமையாக தொடர்ந்து பெற ஏதுவாக, நகரும் வகையில், Solar Tracking வகையில் அமையும் சூரிய தகடு பயன்படுத்தப்படும் 2,000 ஏ.சி பம்பு செட்டு அமைப்புகளை வழங்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், தற்போதுள்ள நுண்ணீர்ப் பாசன அமைப்புகளை நடைமுறையில் உள்ள நெறிமுறைகள் மற்றும் பயிர்களுக்கு ஏற்ற முதன்மை தொழில் நுட்பங்கள் ஆகியவற்றுடன் ஒருங்கிணைக்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது. ஒரு அமைப்பிற்கான செலவு தோராயமாக 5 இலட்சம் ரூபாய் ஆகும். இதில் அரசு மானியம் 80 விழுக்காடு, அதாவது 4 இலட்சம் ரூபாய் ஆகும். விவசாயியின் பங்களிப்பு 20 விழுக்காடு, அதாவது ஒரு இலட்சம் ரூபாய் ஆகும். இதற்கென அரசுக்கு 100 கோடி ரூபாய் செலவு ஏற்படும். விவசாயிகளின் பங்களிப்பான 20 விழுக்காடு தொகையை விவசாயிகள் நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு ஏதுவாக, தேவைப்படும் விவசாயிகளுக்கு நடைமுறையில் உள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு கூட்டுறவு வங்கிக் கடன் வசதி பெறவும் ஏற்பாடு செய்து தரப்படும்.

இத்திட்டம், விவசாயிகளுக்கு சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கு உகந்த சூரிய சக்தியினைப் பயன்படுத்திடவும், நுண்ணீர்ப் பாசனம் மூலம் பாசன நீரை சிக்கனமாகப் பயன்படுத்திடவும், வேளாண் பயிர்களில் உயரிய சாகுபடி முறைகள் மற்றும் தோட்டக்கலை பயிர்களில் பசுமை குடில் மற்றும் நிழல் வலை முறையில் சாகுபடி போன்ற பல்வேறு நவீன தொழில் நுட்பங்களுடன் உயர் மகசூல் ரகங்களையும் பயன்படுத்தி, அதன் மூலம் உற்பத்தியினை அதிகரித்து, விவசாயிகளின் வருமானத்தினை உயர்த்திடவும் இத்திட்டம் வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

வீரத்தாய் குயிலிக்கு நினைவுச் சின்னம்- ஹைதர் அலி, திப்புசுல்தான் மற்றும் சுவாமி சகஜானந்தா ஆகியோருக்கு மணிமண்டபங்கள்!

15.05.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட சுதந்திரப் போராட்ட வீரர்களையும், ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக குரல் கொடுத்து தங்கள் இன்னுயிரை ஈந்த தியாகிகளையும், சமுதாய மேம்பாட்டிற்காகப் பாடுபட்டவர்களையும் போற்றிப் பெருமைப்படுத்தும் அரும்பணியை எனது தலைமையிலான அரசு மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில், கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம், தியாகி சங்கரலிங்கனார், வீரபாண்டிய கட்டபொம்மன், மனு நீதிச் சோழன் ஆகியோருக்கு மணி மண்டபங்களை அமைக்கவும், தீரன் சின்னமலை, வீரமங்கை வேலுநாச்சியார் ஆகியோருக்கு நினைவுச் சின்னங்கள் அமைக்கவும், தியாகி சிதம்பரநாதன், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, தியாகி கீழப்பழுவூர் சின்னசாமி ஆகியோருக்கு திருவுருவச் சிலைகள் எழுப்பவும் ஆணையிட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

நேற்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய சட்டமன்ற உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள், வீரமங்கை வேலு நாச்சியாரின் படைத் தளபதியாய் விளங்கி தன் உயிரை மாய்த்துக் கொண்ட வீரத் தாய் குயிலி அவர்களின் நினைவைப் போற்றும்

வகையில், வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்கப்படவிருக்கும் வளாகத்திலேயே ஒரு நினைவுச் சின்னம் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். இதே கோரிக்கையை, இதற்கு முன்பே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்களும் இந்த அவையில் வைத்திருக்கிறார். இவர்களின் கோரிக்கையை ஏற்று, வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்கப்பட்டு வரும் வளாகத்தில் வீரத்தாய் குயிலிக்கும் நினைவுச் சின்னம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதே போன்று, மனித நேய மக்கள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள் நேற்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில், ஆங்கிலேயர்களை எதிர்ப்பதற்காக வீரமங்கை வேலு நாச்சியார் அவர்களை திண்டுக்கல்லுக்கு வரவழைத்து பீரங்கிகளையும், படை வீரர்களையும் வழங்கிய மாவீரன் ஹைதர் அலி மற்றும் ஆங்கிலேயருக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய அவரது புதல்வர் திப்பு சுல்தான் நினைவாக திண்டுக்கல்லில் நூலகம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன் அவர்களும் செல்வி பாலபாரதி அவர்களும், திப்பு சுல்தான் அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தனர்.

இவர்களது கோரிக்கையை ஏற்று, ஆங்கிலேயர்களின் ஏகாதிபத்திய ஆட்சிக்கும், அடிமைத்தனத்திற்கும் எதிராக கிளர்ந்தெழுந்து தன்னுயிரையும் துச்சமென மதித்து போராடி வீரமரணம் அடைந்த ஹைதர் அலி மற்றும் திப்பு சுல்தான் ஆகியோர் நினைவாக திண்டுக்கல் மாவட்டத்தில், அரசின் சார்பில் ஒரே வளாகத்தில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழை மக்கள் உயர்வு பெற தன் வாழ்வை அர்ப்பணித்தவரும், மக்களின் அறியாமையைப் போக்க கல்வி நிறுவனம் தொடங்கியவரும், காந்தி அடிகளை அழைத்து வந்து அறநெறி பரப்பியவரும், சட்டமன்ற மேலவை மற்றும் பேரவை உறுப்பினராக பணியாற்றியவரும் ஆன சுவாமி சகஜானந்தா அவர்களுக்கு, அவர் வாழ்ந்த இடமான சிதம்பரத்தில் மணிமண்டபம் அமைக்க வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள் கோரிக்கை விடுத்திருந்தார். இதே கோரிக்கையை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.க.பாலகிருஷ்ணன் மற்றும் திரு.ஆர்.ராமமூர்த்தி ஆகியோரும் விடுத்திருந்தனர். இவர்களுடைய கோரிக்கையினை ஏற்று, சுவாமி சகஜானந்தா தொண்டு செய்து வாழ்ந்த இடமான சிதம்பரத்தில் அரசின் சார்பில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதே போன்று, எனது ஆட்சிக் காலத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2000ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட சென்னையில் உள்ள டாக்டர் அம்பேத்கர் மணிமண்டபத்தினை சிறப்பான முறையில் புதுப்பித்து, புனரமைத்திட வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார். இவரது கோரிக்கையினை ஏற்று, சென்னை, மந்தைவெளி, பசுமை வழிச் சாலையில் அமைந்துள்ள சட்ட மேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களது மணிமண்டபம் புதுப்பித்துப் புனரமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

23 ஆண்டுகள் சிறைவாசம் செய்வோரை விடுவிக்க குற்ற விசாரணைச் சட்டம் 432ன் கீழ் மாநில அரசுக்கு அளிக்கப்பட்டுள்ளது அதிகாரம்!

19.02.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜிவ் காந்தி அவர்கள், 21.05.1991 அன்று ஸ்ரீபெரும்புதூரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள வந்தபோது படுகொலை செய்யப்பட்டார். இந்தக் கொலை குறித்த வழக்கு, பூந்தமல்லி தடா நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, குற்றம் சாட்டப்பட்ட 26 பேருக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. தடா நீதிமன்றத் தீர்ப்பினை எதிர்த்து குற்றம் சாட்டப்பட்டவர்கள் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தனர். இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம், நளினி, ஸ்ரீஹரன் என்கிற முருகன், சுதேந்திர ராஜா என்கிற சாந்தன், பேரறிவாளன் என்கிற அறிவு ஆகிய நான்கு பேரின் தூக்கு தண்டனையை உறுதி செய்தும்; 3 பேரின் தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தும், மீதமுள்ள 19 பேரை விடுதலை செய்தும் தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து, தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட 4 நபர்களும் உச்ச நீதிமன்றத்தில் மறு ஆய்வு மனு தாக்கல் செய்தனர். இந்த மறு ஆய்வு மனுவினை விசாரித்த உச்ச நீதிமன்றம், அதனைத் தள்ளுபடி செய்து 08.10.1999 அன்று தீர்ப்பளித்தது.

இதனைத் தொடர்ந்து, மேற்கண்ட தூக்கு தண்டனை கைதிகள் மேதகு தமிழக ஆளுநர் அவர்களுக்கு 17.10.1999 அன்று கருணை மனுக்களை சமர்ப்பித்தார்கள். இந்த கருணை மனுக்கள் 27.10.1999 அன்று மேதகு தமிழக ஆளுநர் அவர்களால் நிராகரிக்கப்பட்டன.

மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் ஆணையினை எதிர்த்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் தூக்கு தண்டனைக் கைதிகளால் வழக்குகள் தொடுக்கப்பட்டன. இவற்றை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், மனுதாரர்கள் தொடுத்த வழக்குகளை ஏற்று, கருணை மனுக்களை நிராகரித்த மேதகு ஆளுநரின் ஆணையை தள்ளுபடி செய்ததோடு, அமைச்சரவையின் ஆலோசனையைப் பெற்று புதிய ஆணை பிறப்பிக்குமாறு மேதகு ஆளுநருக்கு 25.11.1999 அன்று உத்தரவு பிறப்பித்தது.

சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்பின்படி, அன்றைய முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி தலைமையில் 19.04.2000 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவு எடுக்கப்பட்டது:–

> "தூக்கு தண்டனை வழங்கப்பட்ட நான்கு கைதிகளில் ஒருவரான நளினியின் பெண் குழந்தை அனாதையாகி விடும் என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்திற்கிணங்க, நளினி ஒருவருக்கு மட்டும் கருணை காட்டி மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கலாம் என்றும்; மற்றவர்களைப் பொறுத்த வரையில் அவர்களது கருணை மனுக்களை நிராகரிக்கலாம் என்றும் ஆளுநருக்கு ஆலோசனை வழங்க அமைச்சரவை முடிவெடுத்தது."

திரு. கருணாநிதி தலைமையிலான அமைச்சரவையின் முடிவிற்கு மேதகு ஆளுநர் அவர்கள் 21.04.2000 அன்று ஒப்புதல் அளித்தார். அதன்படி தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட 4 நபர்களில், சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோரது தூக்கு தண்டனை உறுதி செய்யப்பட்டது. நளினியின் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

திரு. கருணாநிதி தலைமையிலான அமைச்சரவை முடிவினால் பாதிக்கப்பட்ட சாந்தன், முருகன் மற்றும் பேரறிவாளன் ஆகிய மூன்று பேரும் மேதகு குடியரசுத் தலைவருக்கு கருணை

மனுக்களை அளித்தனர். இந்த கருணை மனுக்களை 28.04.2000 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தது.

28.04.2000 அன்று தமிழக அரசால் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தின் மீது 11 ஆண்டுகளாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பின்னர், 12.08.2011 நாளிட்ட கடிதத்தின் மூலம், மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் இந்த கருணை மனுக்களை நிராகரித்து உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவித்த மத்திய உள்துறை அமைச்சகம், இந்தத் தகவலை மேற்கண்ட கைதிகளுக்கு தெரியப்படுத்துமாறு தமிழக அரசை கேட்டுக் கொண்டது. இதன் அடிப்படையில், இந்தக் கடிதத்தின் விவரம் சம்பந்தப்பட்ட கைதிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சூழ்நிலையில், பேரறிவாளன், சாந்தன் மற்றும் முருகன் ஆகிய மூன்றுபேரையும் தூக்கு தண்டனையில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற கோரிக்கைகள் எழுந்தன. பல்வேறு அரசியல் கட்சிகளும், பல்வேறு அமைப்புகளும் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தின. தனது மகன் பேரறிவாளனை விடுவிக்குமாறு, அவரது தாய் திருமதி அற்புதம் அம்மாள் அவர்கள் என்னைக் கடிதம் வாயிலாகக் கேட்டுக் கொண்டார். மேற்படி மூவரின் தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க முடியாது என்று தனது தலைமையில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுத்த முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதியும், சட்ட நுணுக்கங்களை ஆராயாமல், இவர்களைக் காப்பாற்ற நான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பத்திரிகைகள் வாயிலாக வேண்டுகோள் விடுத்தார்.

29.08.2011 அன்று நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில், திரு. கருணாநிதியின் இரட்டை வேடத்தை நான் தோலுரித்துக் காட்டினேன். மேலும், உச்ச நீதிமன்றத்தால் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு மேதகு ஆளுநரோ அல்லது மேதகு குடியரசுத் தலைவரோ தான் இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி மன்னிப்பு அளிக்க முடியும் என்பதையும்; இவர்களுக்கு மேதகு ஆளுநர் அவர்கள் மன்னிப்பு அளிக்க

வேண்டும் எனக் கருதப்பட்டிருந்தால், 2000ஆம் ஆண்டு அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தான் அதற்கான முடிவு எடுத்திருக்க முடியும்; எடுத்திருக்க வேண்டும் என்பதையும்; அமைச்சரவையின் அறிவுரைப்படி மேதகு ஆளுநர் அவர்களால் பேரறிவாளன் உள்ளிட்ட மூவரின் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டு, பின்னர் மேதகு குடியரசுத் தலைவர் அவர்களாலும் மூவரின் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில், தூக்கு தண்டனையை ரத்து செய்வதற்கோ, நிறுத்தி வைப்பதற்கோ மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை என்பதையும் எடுத்துக் கூறினேன். அதாவது, மேதகு குடியரசுத் தலைவர் அவர்களால் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில், மீண்டும் அதே பொருள் தொடர்பான கருணை மனுவை மாநில ஆளுநர் பரிசீலிக்க வேண்டும் என மாநில அரசு கோர முடியாது என 1991 ஆம் ஆண்டே மத்திய அரசு தெளிவுரை வழங்கி உள்ளதையும் எடுத்துக் கூறினேன்.

இந்திய அரசமைப்புச் சட்ட பிரிவுக் கூறு 257 உட்பிரிவு (1) இன் படி, கருணை மனு இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 72இன் கீழ் குடியரசுத் தலைவரால் நிராகரிக்கப்பட்ட பின், அதே பிரச்சினையை மாநில ஆளுநர் இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 161இன்படி எடுத்துக் கொள்ள முடியாது என்றும், மீண்டும் குடியரசுத் தலைவர் தான் கருணை மனுவை மறுபரிசீலனை செய்ய இயலும் என்றும் மத்திய அரசு உத்தரவிட்டு இருந்ததையும் சுட்டிக் காட்டினேன்.

இந்திய அரசமைப்புச் சட்டப்படி எனது அரசின் இயலாமையை சுட்டிக்காட்டிய நான், இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண வேண்டும் என்ற நோக்கில், தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்ற எண்ணத்தில்; எனக்கு வரப்பெற்ற பல்வேறு கோரிக்கைகளின் அடிப்படையில்,

> "தமிழக மக்களின் உணர்வுகளுக்கும், தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளின் கருத்துகளுக்கும் மதிப்பளிக்கும் வகையில்,

திருவாளர்கள் சுதேந்திர ராஜா என்கிற சாந்தன், ஸ்ரீஹரன் என்கிற முருகன், மற்றும் பேரறிவாளன் என்கிற அறிவு ஆகியோரின் கருணை மனுக்களை மறுபரிசீலனை செய்து, அவர்களின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது."

என்னும் தீர்மானத்தினை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நானே முன்மொழிந்தேன். என்னால் முன்மொழியப்பட்ட இந்தத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்தின்மீது 2½ ஆண்டுகளாக மத்திய அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானம் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு 1½ ஆண்டுகள் வரை, அதாவது மார்ச் 2013 வரை மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசில் தி.மு.க. அங்கம் வகித்தது. இதன் மீது நடவடிக்கை எடுக்குமாறு திரு. கருணாநிதி மத்திய அரசை வலியுறுத்தினாரா? இல்லை! வலியுறுத்தவில்லை!

மத்திய அரசும், அதனைத் தாங்கிப் பிடித்திருந்த திரு. கருணாநிதியும் எந்த நடவடிக்கையையும் எடுக்கமாட்டார்கள் என்று தெரிந்த திருவாளர்கள் சாந்தன், ஸ்ரீஹரன் மற்றும் பேரறிவாளன் ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்தனர். இந்த மனுக்களில், தங்களுடைய கருணை மனுக்கள் மீது முடிவு எடுக்க 11 ஆண்டு காலதாமதம் ஏற்பட்டதைக் கருத்தில் கொண்டும், கடந்த 23 ஆண்டுகளாக சிறையில் இருப்பதைக் கருத்தில் கொண்டும்; தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க வேண்டும் என்றும் கோரியிருந்தனர். பின்னர் இந்த வழக்குகள் சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து உச்ச நீதிமன்றத்திற்கு மாற்றம்

செய்யப்பட்டன. இது குறித்த விசாரணை உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்ற போது, இவர்களின் தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கக் கூடாது என்று மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசின் சார்பில் ஆஜரான மத்திய தலைமை வழக்குரைஞர் எடுத்துரைத்தார். இருப்பினும், இந்த மனுக்களை விசாரித்த உச்ச நீதிமன்றம், மனுதாரர்களின் கோரிக்கையை ஏற்று, அவர்களுடைய தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்து 18.02.2014 அன்று தீர்ப்பளித்ததோடு, ஆயுள் தண்டனை என்பது வாழ்நாள் முழுவதும் சிறைவாசம் என்றும்; எனினும் குற்ற விசாரணை முறைச் சட்டம் பிரிவு 432 மற்றும் 433Aஇன்படி, அரசு எடுக்கும் தண்டனை மாற்றுதல் அல்லது தள்ளுபடி செய்தல் நடவடிக்கைக்கு உட்பட்டது என்றும் தெரிவித்துள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு வெளிவந்தவுடன், இதுகுறித்து உடனடியாக நான் விரிவாக விவாதித்தேன். இந்த விரிவான விவாதத்திற்குப் பின், இன்று, 19.02.2014, காலை எனது தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் திருவாளர்கள் சுதேந்திரராஜா என்கிற சாந்தன், ஸ்ரீஹரன் என்கிற முருகன் மற்றும் பேரறிவாளன் என்கிற அறிவு ஆகியோர் 23 ஆண்டுகளாக சிறைச்சாலையில் இருந்து வருவதைக் கருத்தில் கொண்டு, குற்ற விசாரணை முறைச் சட்டம் 432இல் மாநில அரசுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில், அவர்களை உடனடியாக விடுதலை செய்யலாம் என முடிவு செய்யப்பட்டது. இதேபோன்று, ஏற்கெனவே ஆயுள் கைதியாக 23 ஆண்டுகளாக சிறையில் இருக்கும் திருமதி நளினி, ராபர்ட் பயஸ், ஜெயகுமார் மற்றும் ரவிச்சந்திரன் ஆகியோரையும் விடுதலை செய்யலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது.

இருப்பினும், இந்த வழக்கு மத்தியப் புலனாய்வு அமைப்பினால் புலனாய்வு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் தடா நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தண்டனை வழங்கப்பட்டதால், குற்ற விசாரணை முறைச்சட்டம் 435இன்படி, தமிழ்நாடு அமைச்சரவையின் முடிவு குறித்து மத்திய அரசுடன் கலந்தாலோசிக்கப்பட வேண்டும்.

எனவே, மத்திய அரசின் கருத்தினைப் பெறும் வகையில், திருவாளர்கள் சுதேந்திரராஜா என்கிற சாந்தன், ஸ்ரீஹரன் என்கிற முருகன், பேரறிவாளன் என்கிற அறிவு, திருமதி நளினி, ராபர்ட் பயஸ், ஜெயகுமார் மற்றும் ரவிச்சந்திரன் ஆகிய ஏழு பேரையும் விடுதலை செய்யலாம் என்ற தமிழ்நாடு அமைச்சரவையின் முடிவு மத்திய அரசுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்படும்.

மத்திய அரசு 3 நாட்களுக்குள் தனது கருத்தினைத் தெரிவிக்காமல் காலம் தாழ்த்தினால், குற்ற விசாரணை முறைச் சட்டம் 432இல் மாநில அரசுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, திருவாளர்கள் சுதேந்திரராஜா என்கிற சாந்தன், ஸ்ரீஹரன் என்கிற முருகன், பேரறிவாளன் என்கிற அறிவு, திருமதி நளினி, ராபர்ட் பயஸ், ஜெயகுமார் மற்றும் ரவிச்சந்திரன் ஆகியோர் விடுவிக்கப்படுவார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

திரைத்துறைக்கும் திரைப்படப் பயிற்சி மாணவர்களுக்கும் பயனளிக்கும் படப்பிடிப்புத் தளங்கள்!

14.07.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மனிதன் நாகரிகம் அடைந்து உருவாக்கிய படைப்புகளில் உன்னத கலைப் படைப்பாகத் திகழும் திரைப்படம் இன்றைய மனித வாழ்க்கையில் இன்றியமையாத இடத்தினைப் பெற்றுள்ளதோடு மட்டுமல்லாமல், பல இலட்சக்கணக்கான குடும்பங்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வாழ்வாதாரத்தை வழங்கிக் கொண்டிருக்கிறது.

இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த திரைப்படத் துறையின் வளர்ச்சிக்காகவும், நலன்களுக்காகவும் நான் பல்வேறு சலுகைகளை அளித்துள்ளேன். நான் மூன்றாவது முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர், இந்திய சினிமா நூற்றாண்டு விழாவினை நடத்திட தமிழ்நாடு அரசின் சார்பாக, 10 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கினேன். எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் 9 கோடியே, 50 இலட்சம் ரூபாய் செலவில், உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன் அதாவது, Animation and Visual Effects எனும் பாடப்பிரிவு தொடங்கப்பட்டு அங்கு மாணவர்கள் பயின்று வருகின்றனர். அங்குள்ள முன்காண் திரையரங்கம், அதாவது Preview Theatre, நவீன வசதிகளுடன் 99 இலட்சம் ரூபாய் செலவிலும், படப்பிடிப்புத் தளம் 1 கோடியே 43 இலட்சம் ரூபாய் செலவிலும் புனரமைக்கப்பட்டன. திரைப்படத் துறையினர் நல வாரியத்தில் ஏறத்தாழ 20 ஆயிரம் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், மாறிவரும் டிஜிட்டல் தொழில்நுட்ப முறைகளால் தயாரிக்கப்படும் திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி தொடர்கள் அதிகரித்துள்ளதால், படப்பிடிப்புத் தளங்கள் அதிக அளவில் தேவைப்படுகிறது என்றும், எனவே, புதிய படப்பிடிப்புத் தளங்களை ஏற்படுத்தித்தர வேண்டும் என்றும் தென்னிந்திய திரைப்பட தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவர்களின் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் காலியாக உள்ள 2.5 ஏக்கர் நிலப்பரப்பில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அதி நவீன வசதிகளுடன் கூடிய முழுவதும் குளிரூட்டப்பட்ட இரண்டு படப்பிடிப்புத் தளங்கள் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் புதிய படப்பிடிப்புத் தளங்கள் அமைவதன் மூலம் திரைப்படத் துறையினர் பயன்பெறுவதோடு மட்டுமல்லாமல், திரைப்படப் பயிற்சி பெறும் மாணவ மாணவியருக்கும் இது பெரும் வாய்ப்பாகத் திகழும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

அரசு மைய அச்சகத்திற்கு ரூ.21.59 கோடி மதிப்பீட்டில் புதிய நிரந்தரக் கட்டடம்!

14.07.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நவீனமயமாக்கத்தின் மூலம் நாட்டை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்வதில் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. ஆளுநர் உரை, நிதிநிலை அறிக்கை, சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகள், கொள்கை விளக்கக் குறிப்புகள், குறிப்பேடுகள், கையேடுகள் உள்பட, அரசுக்குத் தேவையான அனைத்து அச்சகத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் பணியை அரசு மைய அச்சகம் மேற்கொண்டு வருகிறது.

182 ஆண்டுகள் பழமை வாய்ந்த, அரசு மைய அச்சகத்தின் பணிப்பளு அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டும், பெரும்பாலான பணிகள் குறுகிய காலத்திற்குள் முடிக்க வேண்டியிருப்பதைக் கருத்தில் கொண்டும், அச்சகத்தின் இயந்திரப் பிரிவினை நவீனமயமாக்கும் வகையில் 6 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தனித்தாள் பல வண்ண அச்சு இயந்திரம், 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கணினியிலிருந்து அச்சுத்தகடு தயாரிக்கும் இயந்திரம், 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தானியங்கி சேகரிப்பு இயந்திரம், 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திரை அச்சு இயந்திரம் என மொத்தம் 8 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் இயந்திரங்கள் வாங்கி நிறுவப்பட்டுள்ளன. இதே போன்று, 67 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய காகிதக் கிடங்கு கட்டுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், சென்னை அரசு மைய அச்சகத்தில் எதிர்பாராது ஏற்பட்ட தீ விபத்தில் கட்டடங்களும், அச்சு இயந்திரங்களும் சேதமடைந்ததால், சீரமைப்பு நடவடிக்கையாக இயந்திரக் கொள்முதல் மற்றும் தொடர்புடைய பிற பணிகளுக்காக 19 கோடியே

7 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய், கட்டடப் பணிகளுக்காக 3 கோடியே 57 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் என மொத்தம் 22 கோடியே 64 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

சுமார் 5 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்த அச்சகத்தின் 84,000 சதுர அடிகள் கொண்ட பழமை வாய்ந்த சிவப்புக் கட்டடமானது, இந்த தீ விபத்தில் முழுவதுமாக எரிந்து சேதமடைந்துவிட்டதாலும், பணியாளர்கள் சிரமமின்றி பாதுகாப்புடன் பணிபுரிய நிரந்தரமான கட்டடம் அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டும், 21 கோடியே 59 இலட்சம் ரூபாய் செலவில் புதிய நிரந்தரக் கட்டடம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை அரசு மைய அச்சகத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து அச்சுப் பணிகளும் ஒரே நேரத்தில், குறைந்த காலத்தில் விரைந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்றால், அங்குள்ள அச்சகப் புத்தகம் கட்டும் பிரிவு அதாவது Binding Section மேம்படுத்தப்படுவது அவசியம் ஆகும். எனவே, அரசு மைய அச்சகத்தின் அச்சகப் புத்தகம் கட்டும் பிரிவிற்காக 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தானியங்கி புத்தகம் தைக்கும் இயந்திரம் அதாவது, (Automatic Sewing Machine for Binding) வாங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கை கூடுதல் உற்பத்தித் திறனுடன் அதிக நேர்த்தியாகவும், விரைவாகவும் புத்தகங்கள் கட்டும் பணியினை மேற்கொள்ள வழிவகுக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

வீட்டுவசதி, அலுவலக வசதி, போக்குவரத்து வசதிகளைப் பூர்த்தி செய்யும் புதிய திட்டங்கள்!

15.07.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வளர்ந்து வரும் மக்கள் தொகை மற்றும் நகர்மயமாக்கல் ஆகியவற்றினைக் கருத்திற்கொண்டு, மக்களின் மகிழ்வான, வளமான, நலமான வாழ்க்கைக்கு வேண்டிய அத்தியாவசியத் தேவைகளில் மிகவும் முக்கியமான ஒன்றாக கருதப்படும் வீட்டு வசதியினை ஏற்படுத்திக் கொடுப்பதிலும், அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, சுகாதார வசதி, கழிப்பிட வசதி, போக்குவரத்து வசதி, சாலை வசதி ஆகியவற்றை ஏற்படுத்தித் தருவதிலும் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பிலும்; தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சார்பிலும்; பல்வேறு குடியிருப்புத் திட்டங்கள் தீட்டப்பட்டு, ஆயிரக்கணக்கான குடியிருப்புகள் மக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக, கீழ்க்காணும் திட்டங்களை செயல்படுத்த எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது.

1. திருச்சி மாவட்டம், நாவல்பட்டில், திருச்சி – புதுக்கோட்டை நெடுஞ்சாலை இணையும் பகுதியில் அமைந்துள்ள 68.82 ஏக்கர் நிலப்பரப்பில், 20 கோடியே 53 இலட்சம் ரூபாய் செலவில், அனைத்து வசதிகளுடன் கூடிய 1,360 பல்வேறு வகை மனைகள் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதில், பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்காக 690 மனைகளும், மத்திய வருவாய் பிரிவினருக்காக 475 மனைகளும், உயர் வருவாய் பிரிவினருக்காக 195 மனைகளும் உருவாக்கப்படும்.

2. தொலைநோக்குத் திட்டம்–2023–ஐ நிறைவேற்றும் முகத்தான், மைய மற்றும் மாநில அரசுகளின் குடிசைப் பகுதிகள் அற்ற நகரங்கள் திட்டத்தின் கீழ், முதற்கட்டமாக, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் சென்னை மற்றும் இதர நகரங்களில் 825 கோடி ரூபாய் செலவில் 10,000 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதில், மைய அரசின் பங்கு 50 விழுக்காடாகவும், மாநில அரசின் பங்கு 40 விழுக்காடாகவும், பயனாளிகளின் பங்கு வீட்டு கட்டுமான செலவில் மட்டும் 10 விழுக்காடாகவும் இருக்கும். கடந்த ஆண்டு எனது உத்தரவின்படி கட்டடப் பரப்பு 397 சதுர அடியாக அதிகரிக்கப்பட்டது. தற்போது கட்டப்பட உள்ள குடியிருப்பின் கட்டுமானப் பரப்பு 400 சதுர அடியாக இருக்கும். மேலும், மின் விசிறிகள், மின் விளக்குகள் ஆகியவை பொருத்திக் கொடுக்கப்படும். இது தவிர, அடிப்படை வசதிகளான சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர் விநியோகம், கழிவுநீர் அகற்று அமைப்புகள் மற்றும் சமூகக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.

3. 1972ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தினால் நொச்சிக்குப்பம் பகுதியில் கட்டப்பட்ட 534 குடியிருப்புகள் மிகவும் சிதிலமைடந்து இருப்பதாகவும், அவற்றை மீண்டும் கட்டித் தருமாறும் அப்பகுதியில் வசிக்கும் குடும்பத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். இவர்களின் கோரிக்கையினை ஏற்று, நொச்சிக்குப்பம் திட்டப் பகுதியில் 534 அடுக்குமாடிக் குடியிருப்புகளை 48 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவில் மாநில நிதியுதவியின் கீழ் கட்ட நான் உத்தரவிட்டுள்ளேன்

என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு குடியிருப்பும், 400 சதுர அடி கட்டடப் பரப்பில் ஒரு பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையலறை, பால்கனி, குளியலறை, கழிப்பறை வசதிகளுடன், மின்விசிறி மற்றும் மின் விளக்குகள் ஆகியவற்றைக் கொண்டதாக இருக்கும். இக்குடியிருப்புகளுக்கு தெரு மின் விளக்குகள், குழாய் மூலம் குடிநீர் வசதி மற்றும் கழிவுநீர் அகற்று வசதிகள் அமைக்கப்படும். நியாய விலைக் கடைகள், பாலர் பள்ளிகள் போன்ற சமூக உட்கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படும். கடலோரப் பகுதிகளுக்கான ஒழுங்குமுறை விதிகளின் படி ஒப்புதல், கலங்கரை விளக்க ஆணைக் குழுவின் ஒப்புதல் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் ஒப்புதல் ஆகியவை பெறப்பட்ட பின் இந்தக் குடியிருப்புகள் கட்டப்படும்.

இக்குடியிருப்புகளில் வாழும் குடும்பங்கள் தங்களது விரிவாக்கப்பட்ட குடும்பங்களுக்கும் குடியிருப்புகள் கோரியதால் இக்குடியிருப்புகளை மீண்டும் கட்டும் பணிகளை கடந்த பல ஆண்டுகளாக மேற்கொள்ள இயலவில்லை. இந்தக் குடியிருப்புகளில் ஒதுக்கீடு பெற்ற குடும்பங்களுக்கு மட்டும் இந்தப் பகுதியில் கட்டப்பட உள்ள புதிய குடியிருப்புகளில் ஒதுக்கீடு அளிக்கப்படும். இவர்களது விரிவடைந்த குடும்பங்களுக்கு ஒக்கியம் துரைப்பாக்கம் திட்டப் பகுதியில் குடியிருப்புகள் வழங்கப்படும்.

4. மாநிலத்தின் செழுமையான பாரம்பரியத்தைப் பேணிப் பாதுகாக்க இதுகாறும் 64 நகரங்கள் புராதன நகரங்கள் என அரசால் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த புராதன நகரங்களின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த முன்னர் ஒவ்வொரு புராதன நகரத்திற்கும் தலா 50 இலட்சம் ரூபாய் வரை மானியம் வழங்கப்பட்டு வந்தது. இதற்கான மானியத் தொகை 2012–2013 ஆம் ஆண்டில் 1 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டது. இதுவரை அறிவிக்கப்பட்டுள்ள 64 புராதன நகரங்களில் 60 புராதன நகரங்களுக்கு

இதுகாறும் 16 கோடியே 82 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள புராதன நகரங்களான திருப்பரங்குன்றம், திருவட்டாறு, சுசீந்திரம் மற்றும் கொடுமுடி ஆகிய நகரங்களில் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக தலா ஒரு கோடி ரூபாய் மானியம் வழங்கப்படும். இது மட்டுமல்லாமல், திருமுருகன்பூண்டி, கழுகு மலை, சுவாமி மலை, புன்னைநல்லூர் மாரியம்மன் கோவில், திருப்புனவாசல் மற்றும் திருபுவனம் ஆகிய ஆறு நகரங்கள் புராதன நகரங்களாக அறிவிக்கப்பட்டு, அவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக தலா ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும். மொத்தத்தில், இந்த 10 நகரங்களுக்கும் 10 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. சென்னைப் பெருநகரப் பகுதிக்கான முதலாம் முழுமைத் திட்டத்தில் மறைமலைநகர் புதுநகர்த் திட்டம் ஒரு புதிய நகரமாக சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் உருவாக்கப்பட்டு, 1,915 ஏக்கர் பரப்பளவில் பல கட்டங்களில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

மறைமலை நகரைச் சுற்றியுள்ள பகுதியில் பெருகி வரும் வீட்டு மனைத் தேவையைக் கருத்தில் கொண்டு, கடம்பூர் கிராமத்தில் உள்ள 222 ஏக்கர் நிலப்பரப்பை அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் தன்னிறைவு பெற்ற குடியிருப்புப் பகுதியாக மாற்றி அமைக்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திட்டத்தின் கீழ், திறந்த வெளியிடம், பொது உபயோகப் பகுதிகள் மற்றும் சாலைப் பகுதிகளுடன் கூடிய உயர்தர வருவாய் பிரிவு, நடுத்தர வருவாய் பிரிவு, குறைந்த வருவாய் பிரிவு மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்த வருவாய் பிரிவு ஆகியோருக்கான குடியிருப்பு மனைகள் உருவாக்கப்படும். கடம்பூர் கிராமத்தில்

58 ஏக்கர் பரப்பளவில் உள்ள ஒரு பெரிய ஏரியை நீர் நிலையாகவே நிலை நிறுத்தி, அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் பொழுதுபோக்கு வசதிகளை அபிவிருத்தி செய்து, சுற்றுச்சூழல் சமன்படுத்தப்படும்.

6. கோயம்பேட்டில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு சொந்தமான ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் 63 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் பல அடுக்குமாடி அலுவலகக் கட்டடம் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கட்டடம் 1 இலட்சத்து 9 ஆயிரத்து 840 சதுர அடி பரப்பளவில் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் நவீன வசதிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய மூன்று அடித்தளங்கள் + தொகுப்பு + 8 மாடிகளைக் கொண்ட கட்டடமாக, அதாவது 3 basement floors + Stilt floor + 8 floors கொண்ட கட்டடமாக அமையும். சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலகம் மற்றும் இதர அரசு அலுவலகங்களுக்கு இந்தக் கட்டடம் பயன்படும்.

7. சென்னைப் பெருநகரப் பகுதியில் போக்குவரத்து அமைப்பினை மேம்படுத்தி நீடித்த நிலையான கட்டமைப்பினை அமைக்க உலக வங்கி நிதி உதவியுடன், மூன்றாம் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒரு விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பெருகி வரும் வாகனப் போக்குவரத்தினால் பல்லாயிரக்கணக்கான பாதசாரிகள் சாலையினைப் பாதுகாப்பாகவும், எளிதாகவும் கடக்க, மேற்கண்ட ஆய்வில் பல சுரங்க நடைபாதைகள் தேவை என கண்டறியப்பட்டது. அவ்வாறு கண்டறியப்பட்ட சுரங்க நடைபாதைகளில், காமராஜ் சாலையில் காந்தி சிலை அருகில்; புரசைவாக்கத்தில் கங்காதீஸ்வரர் கோவில் தெரு; அயனாவரம் – கொன்னூர் நெடுஞ்சாலை; வடபழனி – என். எஸ். கே. சாலை; கோடம்பாக்கம் மீனாட்சி கல்லூரி சாலை; அரும்பாக்கம் உள்வட்டச் சாலையில் உள்ள மெட்ரோ இரயில் நிலையம் அருகில்; ஜி.எஸ்.டி. சாலையில் உள்ள ஆலந்தூர் என மொத்தம் ஏழு இடங்களில்

23 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுரங்க நடைபாதைகள் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சுரங்க நடைபாதைகள், அடிப்படை கட்டமைப்பு நிதி அளிப்புடன் சென்னை மாநகராட்சி மற்றும் நெடுஞ்சாலைத் துறைகளுடன் கலந்தாலோசித்து சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் முன்னுரிமை அடிப்படையில் நடப்பாண்டில் செயல்படுத்தப்படும்.

8. இரண்டாவது பெருந்திரள் துரித இரயில் திட்டம், இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசால் தென்னக இரயில்வேயின் பெருநகர போக்குவரத்து இரயில் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டது. இரண்டாவது பெருந்திரள் துரித இரயில் திட்டத்தில், மந்தைவெளி, கிரீன்வேஸ் ரோடு, கோட்டூர்புரம், கஸ்தூரிபாய் நகர், இந்திரா நகர், திருவான்மியூர், தரமணி, பெருங்குடி மற்றும் வேளச்சேரி ஆகிய ஒன்பது இரயில் நிலையங்கள் உள்ளன. இவை அனைத்தும், முடிக்கப்பட வேண்டிய சில இறுதிப் பணிகளுடன் இயங்கி வருகின்றன. இந்தத் திட்டத்திற்கான நிருவாக ஒப்புதல் அளிக்கும் போதே, தமிழக அரசானது இரண்டாவது பெருந்திரள் துரித இரயில் திட்டத்தில் அமைந்துள்ள இரயில் நிலையங்களின் மேல் உள்ள திறந்த வெளியினை வணிக நோக்கத்திற்காகப் பயன்படுத்த திட்டம் தீட்டுவதற்கும் அனுமதி அளிக்கப்பட்டது. இதன்படி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் உரிய கலந்தாய்வாளர்களையும், கட்டடக்கலை வல்லுநர்களையும், வணிக கட்டடங்களைத் திட்டமிடுவதற்காக நியமித்தது. ஒவ்வொரு இரயில் நிலையத்திலும் கலை நுணுக்கத்துடன் மேலும் மேம்படுத்தப்பட்ட வசதிகள் கொண்ட பிரத்யேக வாகன நிறுத்துமிடம் போன்ற வசதிகள் கொண்ட வணிக வளாகம் வடிவமைக்கப்பட்டுள்ளது. வேளச்சேரி துரித இரயில் நிலையத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள வணிகப் பகுதியை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான ஒப்பந்த ஆவணங்கள் உள்ளடக்கிய விரிவான சாத்தியக்கூறு அறிக்கை கலந்தாலோசகர்

மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில், வேளச்சேரி இரயில் நிலையத்தின் மேல் அலுவலக வளாகம் அமைப்பதற்கான, சாத்தியக்கூறு இருப்பதாக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்தப் பரிந்துரையின்படி, வேளச்சேரி பறக்கும் இரயில் நிலையத்தின் மேல் 1 இலட்சத்து 11 ஆயிரம் சதுர அடி பரப்பில், இரண்டு தளம் கொண்ட அலுவலக வளாகம் சுமார் 40 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான இந்த அரசின் நடவடிக்கைகள் மூலம், அனைத்துத் தரப்பு மக்களின் வீட்டு வசதி, அரசு அலுவலகங்களின் அலுவலக வசதி மற்றும் போக்குவரத்து வசதிக்கான தேவைகள் பூர்த்தி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

தமிழ் கலாச்சாரத்திற்கு எதிராக செயல்படும் மன்றங்களின் அனுமதி ரத்து செய்யப்படும்!

16.07.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வெளிநாடுகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் எல்லாம் தமிழர்களின் பாரம்பரிய உடையான வேட்டி அணிந்து கலந்து கொள்வதற்கோ அல்லது உரையாற்றுவதற்கோ எவ்வித தடையும் இல்லாத சூழ்நிலையில், தமிழ்நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சியில் வேட்டி அணிந்து பங்கேற்க தனியார் மன்றம் தடை விதித்திருப்பது அரசமைப்புச் சட்டத்திற்கும், ஜனநாயக மரபுகளுக்கும், தனிநபர் உரிமைக்கும், தமிழ் கலாச்சாரத்திற்கும் எதிரான செயல்.

11.07.2014 அன்று மாலை சென்னை சேப்பாக்கத்தில் உள்ள தமிழ்நாடு கிரிக்கெட் சங்க மன்றத்தில், அதாவது Tamil Nadu Cricket Association Club-இன் கூட்ட அரங்கில், ஒரு பொது நிகழ்ச்சி, அதாவது சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் பொறுப்புதலைமைநீதிபதி அவர்கள்எழுதியபுத்தகத்தின்வெளியீட்டு விழா நிகழ்ச்சி நடைபெற்று இருக்கிறது. இந்த நிகழ்ச்சிக்கு முன்னாள் தலைமை நீதியரசர்கள், நீதியரசர்கள், வழக்கறிஞர்கள் உள்ளிட்டோர் அழைக்கப்பட்டு இருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. D.அரி பரந்தாமன் அவர்களும் மற்றும் அவரோடு சில மூத்த வழக்கறிஞர்களும் தமிழ்நாடு கிரிக்கெட் சங்க மன்றத்திற்குள் செல்ல முயன்றபோது, வேட்டி அணிந்து இருந்தனர் என்ற ஒரே காரணத்தைக் காட்டி, அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் செயல் தமிழர்களின் நாகரிகத்தையும், பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் அவமதிக்கும் செயல்

ஆகும்; கொச்சைப்படுத்தும் செயலாகும். இதற்கு எனது கடும் கண்டனத்தை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தான் இது போன்ற நடைமுறைகள் பின்பற்றப்பட்டன. ஆங்கிலேயர் ஆட்சி அகற்றப்பட்டு 67 ஆண்டுகள் ஆகியும் இது போன்ற செயல்கள் நடைபெறுவது மிகவும் வேதனைக்குரியது.

இந்தப் பிரச்சினை 14.07.2014 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ளப்பட்டு, அனைத்துக் கட்சியினரும் தங்களது மேலான கருத்துகளை தெரிவித்து இருக்கிறார்கள். இந்தச் செயலுக்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், மன்ற விதிகளில் திருத்தம் செய்ய வேண்டும் என்றும், இதற்காக சட்டம் கொண்டு வர வேண்டும் என்றும், எதிர்காலத்தில் இது போன்ற நிகழ்வுகள் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் பேசி இருக்கிறார்கள். இந்த அவைக்கு வெளியேயும் சிலர் தங்கள் கருத்துகளை தெரிவித்து இருக்கிறார்கள்.

தி.மு.க. சார்பில் இந்த அவையில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின், "... இது குறித்து அரசு உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகளை எடுத்து, தமிழ்ப் பாரம்பரியத்திற்குரிய அந்தப் பெருமையை நிலைநாட்டிட வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

இந்தத் தருணத்தில் 2010-ஆம் ஆண்டு இந்த அவையில் நடைபெற்ற ஒரு விவாதத்தை இங்கே எடுத்துக் கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

2010–2011ஆம் ஆண்டிற்கான சுற்றுலா, கலை மற்றும் பண்பாடு மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர், "... நம்முடைய சென்னை தலைநகரிலே உள்ள கிரிக்கெட் கிளப், போட் கிளப் போன்ற

இடங்களுக்கு நாம் வேட்டி கட்டிச் சென்றால் அனுமதிப்பது கிடையாது. அப்படிப்பட்ட ஒரு தடை விதித்து இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் நாம் வேட்டி கட்டாமல் செல்ல முடியுமா? பீகாரில் இப்படித்தான் ஓர் ஓட்டலில் பீகார் உடை அணிந்து சென்றவர்களைத் தடுத்த காரணத்தினால், அந்த ஓட்டலையே மூடிவிட்டார்கள். எனவே, இதற்கு மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். ...” என்று பேசி இருக்கிறார்.

அதற்கு அப்போதைய துணை முதல்வர், அதாவது மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், “... வேட்டி கட்டுவதில் இருக்கின்ற பிரச்சினைப் பற்றி இங்கே பேசி இருக்கிறார். முதலில் அவர் தொடர்ந்து சட்டமன்றத்திற்கு வேட்டி கட்டிக் கொண்டு வர வேண்டும் என்ற என்னுடைய வேண்டுகோளை நான் வைக்கிறேன்” என்று பதில் அளித்துள்ளார்.

இதை நான் இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம், இந்தப் பிரச்சினை சுட்டிக் காட்டப்பட்டும், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத் தான்.

இன்னொரு சம்பவத்தையும் நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சியை சேர்ந்த பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தின் முன்னாள் கௌரவ ஆலோசகர், 2007-ஆம் ஆண்டு சென்னை கிரிக்கெட் கிளப்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றுவதற்காக சென்றபோது, வேட்டி அணிந்து இருந்தார் என்ற காரணத்தைக் காட்டி அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இது குறித்து அப்போதைய முதலமைச்சர் திரு. கருணாநிதிக்கு கடிதம் எழுதியதோடு, தமிழ்நாடு கிரிக்கெட் அசோசியேஷனுக்கு எதிராக கையெழுத்து இயக்கத்தையும் அவர் நடத்தி இருக்கிறார். இந்தச் செய்தி பத்திரிகைகளில் எல்லாம் வெளிவந்தது. ஆனால், இதன் மீதும் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்தத் தருணத்தில் சர். பி. தியாகராயர் வாழ்க்கையிலே நடைபெற்ற ஒரு சம்பவத்தை உங்களிடையே நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

சென்னை மாநகராட்சியின் தலைவராக சர். பி. தியாகராயர் இருந்த சமயத்தில் வேல்ஸ் இளவரசர் சென்னைக்கு வந்தார். அப்போது சென்னை மாகாண கவர்னராக இருந்தவர் லார்டு வில்லிங்டன்.

லார்டு வில்லிங்டன் அவர்கள் சர் தியாகராயரைப் பார்த்து, "சென்னை மாநகரின் முதல் பிரஜை என்கிற முறையில் நீங்கள் தான் இளவரசரை வரவேற்க வேண்டும்" என்றார். அதற்கு சர் தியாகராயரும் சம்மதம் தெரிவித்தார்.

அதன் பின்னர் சென்னை மாகாண கவர்னர் லார்டு வில்லிங்டன் சர்.பி. தியாகராயரை சந்தித்த போது, "இளவரசரைச் சந்திக்கின்ற போது நீங்கள் இன்னின்ன மாதிரி உடை தான் உடுத்திக் கொண்டு வர வேண்டும்" என்று நிபந்தனை போட்டார்.

அப்போது, சர்.பி. தியாகராயர் என்ன செய்தார் தெரியுமா? அரசாங்கத்துக்கு ஒரு பதில் எழுதினார்.

அந்தப் பதிலில், "என்னுடைய வெள்ளை வேட்டி, வெள்ளைக் கோட்டு, வெள்ளைத் தலைப்பாகை ஆடைகளோடு இளவரசர் என்னைப் பார்க்க விரும்பினால் நான் அவரை மனதார வரவேற்கிறேன். இந்த ஆடையுடன் நான் அவரைப் பார்க்க முடியாதென்று நீங்கள் முடிவெடுத்தால், இளவரசரை வரவேற்கிற பாக்கியம் எனக்கு இல்லை என்று நினைத்து அமைதி பெறுவேன். இளவரசரை வரவேற்பதற்காக நான் என்னுடைய வழக்கமான ஆடைகளை மாற்றிக் கொள்வதற்கில்லை" என்று உறுதிபடத் தெரிவித்தார் சர்.பி. தியாகராயர்.

பின்னர் என்ன நடந்தது தெரியுமா?

ஆங்கிலேய அரசே பணிந்து வந்தது. சர்.பி. தியாகராயர் தன்னுடைய வழக்கமான உடையிலேயே வேல்ஸ் இளவரசரை வரவேற்க அனுமதி வழங்கியது.

தன்னுடைய உறுதியான நடவடிக்கையால் ஆங்கிலேய அரசையே பணிய வைத்த பெருமைக்குரியவர் சர்.பி. தியாகராயர்.

ஆங்கிலேய அரசையே பணிய வைத்த நமக்கு மன்றங்கள் எம்மாத்திரம்?

இந்தப் பிரச்சினை குறித்த மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துகளுக்கு பதில் அளித்து பேசிய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று ஆவன செய்யப்படும் என்று கூறினார்.

இந்தப் பிரச்சினை குறித்து நான் அரசு உயர் அதிகாரிகள் மற்றும் சட்ட நிபுணர்களுடன் கலந்து ஆலோசித்தேன். தமிழ்நாடு கிரிக்கெட் சங்க மன்றம் என்பது தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு பதிவு செய்யப்படும் போது, அதற்கான துணை விதிகளை வகுத்து தமிழ்நாடு சங்கங்களின் பதிவாளருக்கு தமிழ்நாடு கிரிக்கெட் சங்க மன்றம் சமர்ப்பித்துள்ளது. அந்தத் துணை விதியில், உடை அணியும் முறைகள் குறித்து கீழ்க்காணுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

“10. DRESS REGULATION

Persons will not be admitted into the Club premises if they are not decently dressed. Persons attired in coloured Bermudas, colour / multi colour lungies, cut banians / vests and / or wearing hawai chappals will not be permitted into THE TNCA CLUB.”

அதாவது, கண்ணியமான ஆடையை அணியாதவர்கள் கிளப்பிற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். வண்ண அரைக்கால் சட்டைகள், வண்ண மற்றும் பல வண்ண லுங்கிகள், கையில்லாத பனியன்கள், அரையங்கிகள் மற்றும் ஹவாய் காலணிகள் ஆகியவற்றை அணிந்து கொண்டு வருபவர்கள் தமிழ்நாடு கிரிக்கெட் சங்கக் கிளப்பிற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று அந்த துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் வேட்டியை பற்றிக் குறிப்பிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, வேட்டி அணிந்தவர்களை சங்கக் கட்டட வளாகத்திற்குள் அனுமதிக்காத தமிழ்நாடு கிரிக்கெட் சங்க மன்றத்தின் செயல்பாடு, தமிழர் நாகரிகத்தையும், தமிழர் பண்பாட்டினையும் இழிவுபடுத்துவதோடு மட்டுமல்லாமல் தமிழ்நாடு கிரிக்கெட் சங்க மன்ற விதிகளுக்கும் முரணானதாகும். இது ஒரு sartorial despotism, அதாவது உடை தொடர்பான எதேச்சதிகாரம் ஆகும்.

இது குறித்து, தமிழ்நாடு கிரிக்கெட் சங்க மன்றத்திற்கு விளக்கம் கேட்டு ஒரு கடிதம் அனுப்புமாறு தமிழ்நாடு அரசின் சங்கங்கள் பதிவாளருக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

தமிழர் உடையான வேட்டி அணிந்து வருவதற்கு தடை விதிக்கும் இது போன்ற நடைமுறை சென்னையில் உள்ள சில கிளப்புகளில் உள்ளதாக தகவல்கள் வருகின்றன. இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், உரிய சட்ட முன் வடிவு நடப்புக் கூட்டத் தொடரிலேயே கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்படும் என்பதையும், அதன் அடிப்படையில் தமிழர் கலாச்சாரத்திற்கு எதிரான செயல்களில் இனி வருங்காலங்களில் மன்றங்கள் ஈடுபடுமேயானால், அந்த மன்றங்களுக்கு வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்படும் என்பதையும் இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

முல்லைப் பெரியாறு வெற்றி தமிழக மக்களுக்கு வழங்கப்பட்ட நீதி!

18.07.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்த வேண்டும் என்ற தமிழக மக்களின் நீண்ட நாள் கோரிக்கைக்கு எனது தலைமையிலான அரசு எடுத்த திடமான, உறுதியான, ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மற்றும் உச்ச நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு முன்பு தமிழகத்தின் சார்பில் வைக்கப்பட்ட வலுவான வாதங்கள் மூலம் தமிழகத்திற்கு கிடைத்த நியாயமான தீர்ப்பினையடுத்து, மத்திய அரசின் ஒத்துழைப்போடு நேற்று, அதாவது, 17.07.2014 அன்று, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்துவதற்கு மேற்பார்வைக் குழு எடுத்த முடிவினை அடுத்து, அடைப்பான்கள் அதாவது shutters கீழ் இறக்கப்பட்டன. இது தமிழ்நாட்டிற்குக் கிடைத்த வெற்றி; தமிழக மக்களுக்கு, குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, கிடைத்த மகத்தான வெற்றி. இந்த நடவடிக்கை மூலம் 37 ஆண்டுகளுக்குப்பின் கிடைத்த வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த வெற்றி என்னை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியிருக்கிறது. இதன் மூலம், முல்லைப் பெரியாறு நதிநீர்ப் பிரச்சினையில் தமிழக மக்களின் உரிமை நிலைநாட்டப்பட்டிருக்கிறது.

தேனி, மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் திண்டுக்கல் மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்திற்கு உயிர் நாடியாக விளங்கும் முல்லைப் பெரியாறு அணை குறித்து கேரள மற்றும் சென்னை உயர் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுக்கள் 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் உச்ச நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டன. இந்த வழக்கு விசாரணை உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்ற போது, எனது அறிவுரையின் பேரில், எனது தலைமையிலான தமிழக அரசின் சார்பில் எடுத்துரைக்கப்பட்ட வலுவான வாதங்களையடுத்து, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து முதற்கட்டமாக 142 அடியாக

உயர்த்திக் கொள்ளலாம் எனவும்; அணையினை பலப்படுத்தும் எஞ்சிய பணிகளை மேற்கொள்ளலாம் எனவும்; இப்பணிகளை மேற்கொள்வதற்கு தமிழக அரசுக்கு கேரள அரசு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் எனவும் 27.02.2006 அன்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. பலப்படுத்தும் பணிகள், மத்திய நீர்வளக் குழுமம் கூறியபடி முடிக்கப்பட்டவுடன் தனிப்பட்ட நிபுணர்கள் மேற்கொண்டு ஆய்வு நடத்தி, அணையின் நீர்மட்டத்தை உச்சமட்ட நீர் அளவான 152 அடிக்கு உயர்த்துவது குறித்து முடிவு செய்வார்கள் என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்புரை வழங்கியது.

உச்ச நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பினை முற்றிலும் அவமதிக்கும் வகையில், கேரள அரசு, 2003ஆம் ஆண்டைய கேரளா நீர்ப்பாசனம் மற்றும் நீர்வளப் பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டது. இந்த திருத்தச் சட்டத்தில் முல்லைப் பெரியாறு அணையின் உச்ச மட்ட நீரளவு 136 அடி என நிர்ணயம் செய்யப்பட்டது. கேரளா அரசின் இந்த சட்டத் திருத்தம் செல்லத்தக்கது அல்ல என உத்தரவிடக் கோரி 31.03.2006 அன்று உச்ச நீதிமன்றத்தில் எனது தலைமையிலான அரசால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

முல்லைப் பெரியாறு அணையின் வழக்கினை விசாரித்த உச்சநீதிமன்ற அரசமைப்புப் பிரிவு, ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டாக்டர் ஏ.எஸ். ஆனந்த் அவர்களைத் தலைவராகக் கொண்டு, 5 நபர்களைக் கொண்ட ஒரு அதிகாரம் படைத்த குழுவினை அமைக்க உத்தரவிட்டது. முந்தைய மைனாரிட்டி தி.மு.க அரசின் முதலமைச்சர் திரு. கருணாநிதி இந்த குழுவில் தமிழகம் இடம்பெறாது என அறிவித்தார். தமிழகத்தின் சார்பில் இந்தக் குழுவில் பிரதிநிதியை நியமித்தால்தான் தமிழகத்தின் நலனைக் காப்பாற்ற முடியும் என நான் அறிக்கை வெளியிட்டபின் தமிழகத்தின் சார்பில் ஒரு பிரதிநிதியை முந்தைய மைனாரிட்டி தி.மு.க அரசு நியமித்தது.

உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரம் அளிக்கப்பட்ட குழு முன்பு, தமிழக அரசின் சார்பில் நியாயமான, வலுவான, திறமையான வாதங்கள் வைக்கப்பட்டன. தமிழ்நாடு மற்றும் கேரள அரசின் சார்பில் வைக்கப்பட்ட வாதங்களை கருத்தில் கொண்டும்; ஆய்வுகளின் அடிப்படையிலும்; அதிகாரம்

படைத்த குழு தனது அறிக்கையினை 25.04.2012 அன்று உச்ச நீதிமன்றத்திற்கு அளித்தது.

உச்சநீதிமன்றத் தலைமை நீதியரசர் தலைமையிலான 5 நீதியரசர்களை கொண்ட அரசமைப்பு அமர்வு தனது தீர்ப்பினை 07.05.2014 அன்று வழங்கியது. இந்த தீர்ப்பில், தமிழ்நாடு தாக்கல் செய்த சிவில் வழக்கு, தீர்ப்பாணை அதாவது, Decreed ஆக்கப்பட்டது. கேரள அரசின், கேரள பாசன மற்றும் நீர்ப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம், 2006, அரசமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்று உத்திரவிட்டதோடு; உச்ச நீதிமன்றம் முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடி வரையில் உயர்த்திக் கொள்ளலாம் என்ற தீர்ப்பிற்கு கேரள அரசு குறுக்கீடு ஏதும் செய்யக் கூடாது என்றும், அந்தத் தீர்ப்பில் குறிப்பிட்டவாறு தமிழ்நாடு அரசு பராமரிப்புப் பணி மற்றும் வலுப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளலாம் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. மேலும், கேரள அரசின் அச்சங்களில் உண்மை ஏதுமில்லை என்றாலும்; மத்திய நீர்வளக் குழுமம், தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களின் சார்பில் நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்கள் கொண்ட குழு அணையின் நீர்மட்டத்தை 142 அடி அளவுக்கு உயர்த்தப்படுவதை மேற்பார்வையிட வேண்டும் என்றும் இந்தத் தீர்ப்பில் கூறப்பட்டது.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பினை நடைமுறைப்படுத்தும் வகையில், மூவர் குழுவை அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தி மாண்புமிகு பாரதப் பிரதமரை 03.06.2014 அன்று நான் நேரில் சென்று, டெல்லியில் சந்தித்து கோரிக்கை மனுவினை அளித்ததோடு; அதில் உள்ள அம்சங்களை மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு விரிவாகவும், தெளிவாகவும் எடுத்துக்கூறினேன். என்னுடைய கோரிக்கையில் இருந்த நியாயத்தைப் புரிந்து கொண்ட மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் ஆவன செய்வதாக என்னிடம் உறுதி அளித்தார். அதன்படி, உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்கேற்ப மேற்பார்வைக் குழுவை அமைப்பதற்கான ஆணையை 01.07.2014 அன்று மத்திய அரசு வெளியிட்டது.

இந்த ஆணை கிடைக்கப் பெற்றவுடன்; மேற்பார்வைக் குழுக் கூட்டம் உடனடியாக கூட்டப்பட வேண்டுமென்று மேற்பார்வைக் குழுவின் தலைவரை தமிழக அரசு கேட்டுக் கொண்டது. அதன் அடிப்படையில், இந்தக் குழுவின் முதல் கூட்டம் 08.07.2014

அன்று திருவனந்தபுரத்தில் நடைபெற்றது. அந்த கூட்டத்திலேயே முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்துவதற்குரிய நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டுமென்று தமிழகத்தின் சார்பில் வலியுறுத்தப்பட்டது. மேற்பார்வைக் குழுவின் இரண்டாவது கூட்டம் 17.07.2014 அன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் உச்ச நீதிமன்றத்தின் ஆணையை நிறைவேற்றும் வகையில் அணையின் நீர்மட்டத்தை 142 அடி வரை உயர்த்துவதற்கு முடிவு செய்யப்பட்டு; அவ்வாறு 142 அடி வரை நீரை தேக்கி வைப்பதற்கு ஏதுவாக அடைப்பான்கள், அதாவது shutters, இறக்கப்பட்டன.

தி.மு.க தலைவர் திரு. கருணாநிதி, மேற்பார்வைக் குழுவின் முதல் கூட்டம் நடைபெறுவதற்கு முதல் நாள் "இனி என்ன செய்யப்போகிறது இந்த அரசு?" என்ற தலைப்பில் மேற்பார்வைக் குழுவின் செயல்பாட்டுக்கு தடைவிதிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்திடம் கேரள அரசு கேட்டுள்ளதே என்று உண்மைக்கு மாறாக தெரிவித்து; "தமிழக அரசு இந்தப் பிரச்சினையில் என்ன செய்யப் போகிறது ?" என்று கேள்விக் கணையும் தொடுத்திருந்தார். அதற்கு நான், கேரள அரசு தடை கோரி எந்த மனுவினையும் தாக்கல் செய்யாத போது; கேரள அரசைத் தூண்டும் வகையில் திரு கருணாநிதி அறிக்கை வெளியிட்டதைக் கண்டித்தேன். மேலும் "தமிழகத்திலே திறம்பட செயல்படும் அரசு இருப்பதால் தான், முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் தமிழகத்திற்கு நியாயமான தீர்ப்பு கிடைக்கப் பெற்றது; மேற்பார்வைக் குழு அமைக்கப்பட்டது; மேற்பார்வைக் குழுக் கூட்டத்திற்கான நாளும் குறிக்கப்பட்டுவிட்டது; விரைவில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டம் 142 அடியாக நிச்சயம் உயர்த்தப்படும்" என்று தெரிவித்து இருந்தேன்.

நான் தெரிவித்திருந்ததைப் போலவே, நேற்று அணையின் அடைப்பான்கள், அதாவது shutters கீழே இறக்கப்பட்டு 142 அடி வரை தண்ணீர் தேக்கி வைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை, தமிழகத்திற்கு, தமிழக மக்களுக்குக் கிடைத்த வெற்றி. "வெற்றி" என்பதை விட இது தமிழக மக்களுக்கு "வழங்கப்பட்ட நீதி" என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

தொழில் திறன் பெற்ற மனித வளத்தை உருவாக்கிட முனைப்புடன் செயல்படும் அரசு!

23.07.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாட்டின் பொருளாதாரம் சிறக்கவும்; வேலைவாய்ப்புகள் பெருகவும்; மக்கள் தேவைகள் பூர்த்தி அடையவும் வேண்டுமென்றால்; ஏட்டுக் கல்வியுடன் தொழிற்கல்வியும் அவசியம் என்பதை உணர்ந்த எனது தலைமையிலான அரசு, தொழிற்கல்வியை ஊக்குவிப்பதிலும்; தொழிற் திறன் பெற்ற மனித வளத்தை உருவாக்குவதிலும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

எனது தலைமையிலான அரசால் வகுக்கப்பட்ட தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023இல் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை பூர்த்தி செய்ய தொழில் கல்வி படித்தவர்களும், தொழிற்திறன் பெற்றவர்களும் தேவை. இதனைக் கருத்தில் கொண்டு, சென்ற ஆண்டு 10 புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாகவும்; மாணாக்கர்களின் விருப்பத்தினை நிறைவு செய்யும் வகையிலும்; நடப்பாண்டில் திருச்சி மாவட்டத்தில் உள்ள மணிகண்டம்; விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள சின்ன சேலம்; திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கடையநல்லூர்; கடலூர் மாவட்டத்தில் உள்ள காட்டுமன்னார்கோவில்; மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள உடுமலைப்பேட்டை ஆகிய 5 இடங்களில் உள்ள இளைஞர்கள் தொழிற் கல்வி பயின்று வேலைவாய்ப்புப் பெற்று பயனடையும் வகையில், 40 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் 5 புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் தொடங்கப்படும்

என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் எனது தலைமையிலான அரசு கடந்த மூன்று ஆண்டுகளில் 15 புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்களைத் தொடங்கியுள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்கு பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மகளிருக்கென, அம்பத்தூர், கிண்டி, புள்ளம்பாடி, கடலூர், சேலம், கோயம்புத்தூர், மதுரை, திண்டுக்கல், நாமக்கல், நாகர்கோவில், ஆண்டிப்பட்டி மற்றும் கரூர் ஆகிய இடங்களில் 12 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. கடந்த 3 ஆண்டுகளில் சொந்தக் கட்டடம் இல்லாத கடலூர் மற்றும் கரூர் மகளிர் அரசு தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட உத்தரவிடப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

2003–ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட நாமக்கல் மகளிர் அரசு தொழிற்பயிற்சி நிலையம் மட்டும் இன்று வரை வாடகைக் கட்டடத்தில் வசதி குறைவுடன் இயங்கி வருவதாகவும், இதன் காரணமாக மகளிர் பயிற்சி பெறுவதில் அதிக சிரமத்திற்கு உள்ளாகின்றனர் என்பதும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

மகளிர் சிரமமின்றி தொழிற்பயிற்சி பெறும் வகையில், நாமக்கல் மகளிர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு ஆய்வுக்கூடம், வகுப்பறை, அலுவலக அறை, நூலக அறை ஆகிய வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள், வருங்காலத்தில் தொழிற் திறன் வாய்ந்த மனித வளம் அதிகரிக்க வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

தொழிலாளர்க்கு கூடுதல் மருத்துவசேவை பாதுகாப்புக்கு தனி வலைதளம், வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கும் புதிய கட்டடங்கள்!

23.07.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலை நாடுநர்களின் நலனைக் கருத்தில் கொண்டு; வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்ய வருவோருக்கு போதிய வசதிகளை அளிப்பதிலும்; அவர்களுக்கு விரைந்து வேலைவாய்ப்புகளை வழங்குவதிலும்; தொழிற்சாலைகளில் பணிபுரிவோரின் பாதுகாப்பினை மேம்படுத்துவதிலும்; அவர்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகளை அளிப்பதிலும் எனது தலைமையிலான அரசு கண்ணும் கருத்துமாக விளங்கி வருகிறது.

தமிழ்நாட்டில் படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற தங்கள் கல்வித் தகுதிகளை பதிவு செய்வதற்கு 37 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் 32 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. நான் மூன்றாவது முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற போது, பெரும்பாலான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் போதிய அடிப்படை வசதிகள் இல்லாமல் இட நெருக்கடியில் செயல்பட்டு வருவது எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இவற்றிற்கு ஒரு தீர்வுகாணும் பொருட்டு, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்ட வேண்டும் என முடிவு எடுத்தேன். இதன் அடிப்படையில், முதற்கட்டமாக 2011–2012ஆம் நிதியாண்டில் 10 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கும், 2012–2013ஆம் நிதியாண்டில் 5 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கும் சொந்தக்

கட்டடங்கள் கட்ட ஆணையிடப்பட்டது. தற்போது 18 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, 2014–2015–ஆம் நிதியாண்டில், ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு 1 கோடியே 65 இலட்சம் ரூபாய் வீதத்தில், 8 கோடியே 25 லட்சம் ரூபாய் செலவில்; காஞ்சிபுரம், விழுப்புரம், திருவாரூர், திருவள்ளூர் மற்றும் தருமபுரி ஆகிய ஐந்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு அனைத்து உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளுடன் கூடிய சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிற்சாலைகள் சட்டம் 1948இன் கீழ், புதிய தொழிற்சாலைகளை பதிவு செய்து உரிமம் வழங்குதல் மற்றும் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட சுமார் 42,000 தொழிற்சாலைகளின் உரிமங்களை ஆண்டுதோறும் புதுப்பித்தல் போன்ற பணிகளில் நடைமுறையில் உள்ள சிரமங்கள் எனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. அரசு சேவைகள், தொழில் முனைவோருக்கு உரிய நேரத்தில் சென்றடைய வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, உரிமம் வழங்கும் பணி இனிமேல் வலைதளம், அதாவது Web Portal மூலம் மேற்கொள்ளப்படும் என்பதையும்; தொழில் வழிப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்த விவரங்கள், கோட்பாடுகள் மற்றும் புதிய யுத்திகள் ஆகியவற்றையும் தொழிலாளர், தொழிற்சாலைகள் நிருவாகத்தினர் மற்றும் பொதுமக்கள் வலைதளம் மூலம் தெரிந்துக் கொள்ளலாம் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவற்றை செயல்படுத்தும் வகையில், 2 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்திற்கென பிரத்யேக வலைதளம் உருவாக்கப்படும்.

கடந்த மூன்று ஆண்டுகளில் தொழிலாளர்களின் மருத்துவ சேவையினை மேம்படுத்தும் வகையில், 20 புதிய இடங்களில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களைத் துவக்கியும்;

33 புதிய பகுதிகளைத் திட்டத்தில் சேர்த்தும்; 1 இலட்சத்து 83 ஆயிரத்து 537 தொழிலாளர்களும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் திட்டப் பயன்கள் பெற எனது தலைமையிலான அரசு வழிவகை செய்துள்ளது. தற்போது தமிழ்நாட்டில் 10 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் 205 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் மூலம் காப்பீட்டாளர்களுக்கும், அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் மருத்துவச் சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

நடப்பாண்டில், கூடங்குளம், நாரணமங்கலம், திருச்செந்தூர், ஓசூர் (சிப்காட்–II), நெய்வேலி மற்றும் சிவகாசி (நாரணபுரம்) ஆகிய 6 இடங்களில் 4 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக மருந்தகங்கள் துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்ட செயலாக்கத்திற்காக 19 மருத்துவர்கள் உள்ளிட்ட 96 பணியிடங்கள் உருவாக்கப்படும். இதன் மூலம் 15,884 தொழிலாளர்கள் பயன்பெறுவர்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள், அதிக வசதிகளுடன் காற்றோட்டமான சுற்றுச்சூழலில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் செயல்படவும், தொழிலாளர் பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் வலைதளம் மூலம் அனைவரும் தெரிந்துகொள்ளவும், தொழிலாளர்கள் கூடுதல் மருத்துவச் சேவையினை பெறவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியில் உயர்ந்திடும் நாட்டின் பொருளாதாரம்!

24.07.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொருளாதார வளர்ச்சியின் உந்து சக்தியாகவும்; தொழில் முனைவோர் செயல்திறன் மேம்பாடு அடைவதற்கான நாற்றங்காலாகவும்; நிலைத்த வேலைவாய்ப்பினை வழங்கும் அட்சயப் பாத்திரமாகவும் விளங்கும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை உருவாக்குவதில் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக தமிழ்நாடு விளங்கி வருகிறது.

நாட்டின் பொருளாதாரத்தை மேலும் மேம்படுத்தும் வகையில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்காக கீழ்க்காணும் திட்டங்களை இந்த மாமன்றத்திற்கு அளிப்பதில் நான் பெருமை அடைகிறேன்.

1. தமிழ்நாட்டில் 31.03.2014 அன்றைய நிலவரப்படி 9.68 இலட்சம் பதிவு செய்யப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் உள்ளன. இத்தொழில் நிறுவனங்களிலும், புதியதாக ஏற்படுத்தப்படும் தொழில் நிறுவனங்களிலும் தேவைப்படும் மனித ஆற்றலை வழங்கிடும் வகையிலும்; வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையிலும் "அம்மா திறன் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி திட்டம்" என்ற புதிய திட்டம் தொடங்கப்படும் என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின் கீழ், 18 முதல் 25 வயது வரையிலான பொறியியல், தொழிற் கல்வியியல், தொழில் பட்டயப்படிப்பு ஆகியவற்றில்

தேர்ச்சிபெற்று வேலையில்லாத இளைஞர்களுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்புடன் கூடிய பயிற்சி அளிக்கப்படும். இதன்படி குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் 6 மாதங்களுக்கான வேலை குறித்த பயிற்சியினை இளைஞர்களுக்கு அளிக்கும். பயிற்சிக்காலத்தில் தொழில் நிறுவனங்கள் மாதம் 5,000 ரூபாய் உதவித் தொகை வழங்கும். ஆறுமாதப் பயிற்சி முடிந்தவுடன், சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு 12,000 ரூபாயினை அரசு வழங்கும். 6 மாதப் பயிற்சிக்குப் பிறகு, பயிற்சி பெற்றவர்களின் திறமை, தேசியத்திறன் மேம்பாட்டுக் கழகத்தால், அதாவது National Skill Development Corporation-ஆல் அறியப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படும். இந்தச் சான்றிதழ் பெறுவதற்கான கட்டணத்தையும் அரசு வழங்கும். ஆறு மாதப் பயிற்சி முடித்த இளைஞர்களை தொழில் நிறுவனங்கள் வேலைக்கு அமர்த்திக்கொள்ளும். வேலையில் சேர்த்துக்கொண்ட பின் வழங்கப்படும் ஊதியம் 5,000 ரூபாய் அல்லது தொடர்புடைய சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதியம் இவற்றுள் எது உயர்ந்ததோ அத்தொகை சம்மந்தப்பட்ட நிறுவனங்களால் வழங்கப்படும். நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் 25,000 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். இதில் 30 சதவீதம் மகளிருக்கென ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டத்திற்காக 32 கோடியே 50 இலட்சம் ரூபாயினை அரசு வழங்கும். இத்திட்டம், படித்து வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்கள் தகுந்த ஊதியத்துடன் கூடிய பயிற்சியினைப் பெற்று வேலைவாய்ப்புகளைப் பெற வழிவகுக்கும்.

2. சமூக மற்றும் பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ளவர்களை; குறிப்பாக படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களை; சுய தொழில் முனைவோர்களாக ஆக்கும் வகையில் தமிழக அரசு உருவாக்கியுள்ள வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ், 1 இலட்சம் ரூபாய் முதல் 5 இலட்சம் ரூபாய் வரையிலான முதலீட்டில்

தொழில் நிறுவனங்களை அமைக்க முன் வருவோருக்கு, திட்ட மதிப்பீட்டில் 15 விழுக்காடு அல்லது அதிகபட்சம் 75,000 ரூபாய் என்ற அளவில் தற்போது அரசு மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த மானியத்தை 25 விழுக்காடாக அதிகரித்து, அதிகபட்சம் 1 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் வழங்க எனது தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 25 கோடி ரூபாய் செலவு ஏற்படும்.

3. சிட்கோ நிறுவனம், அரசால் நிறுவப்பட்ட 35 தொழிற்பேட்டைகளையும்; சிட்கோவால் நிறுவப்பட்ட 62 தொழிற்பேட்டைகளையும் பராமரித்து வருகிறது. நடப்பாண்டில் மேலும் மூன்று தொழிற்பேட்டைகள் திண்டுக்கல் மாவட்டம் ஆர். கோம்பையில் 51.26 ஏக்கரிலும்; காஞ்சிபுரம் மாவட்டம் தண்டரையில் 43 ஏக்கரிலும்; மற்றும் கரூர் மாவட்டம் புஞ்சை காளக்குறிச்சியில் 54.27 ஏக்கரிலும் துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மூன்று தொழிற்பேட்டைகளுடன் சேர்த்து சிட்கோ நிறுவனத்தின் பராமரிப்பில் உள்ள தொழிற்பேட்டைகளின் எண்ணிக்கை 100 ஆக உயரும். மேற்கண்ட 3 இடங்களில் 148.53 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்கப்படவுள்ள புதிய தொழிற் பேட்டைகளில் 23 கோடி ரூபாய் செலவில் தார் சாலைகள்; தெரு விளக்குகள்; குடிநீர் வசதி; பொது வசதி மையம் போன்றவை ஏற்படுத்தப்படும். இந்த தொழிற்பேட்டைகளில் வாகன உதிரி பாகங்கள்; பொது பொறியியல் அலகுகள்; பின்னலாடைத் தொழிற்சாலைகள் மற்றும் ஜவுளித் தொழிற்சாலைகள் என ஏறத்தாழ 345 தொழில்மனைகள் அமையப்பெற்று ஏறக்குறைய 10,000 பேர் வேலைவாய்ப்பினைப் பெறுவர். இந்தத் தொழிற்பேட்டைகளை அமைப்பதற்கான செலவினம் சிட்கோவின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

4. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலமாக அதாவது, சிட்கோவின் மூலமாக, விழுப்புரம் மாவட்டம்

காட்டுவன்னஞ்சூர்; தருமபுரி மாவட்டம் பர்வதனஹள்ளி; அரியலூர் மாவட்டம் மல்லூர்; மற்றும் நாமக்கல் மாவட்டம் வேட்டம்பாடி ஆகிய இடங்களில் தொழிற்பேட்டைகள் உருவாக்கிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த 4 தொழிற் பேட்டைகளில் 13 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சாலை; மழைநீர் கால்வாய்; சிறு பாலம்; தெருவிளக்கு போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் மூலமாக திருவள்ளூர் மாவட்டம் திருமுல்லைவாயில்; காஞ்சிபுரம் மாவட்டம் திருமுடிவாக்கம்; சேலம் மாவட்டம் கருப்பூர்; திருச்சி மாவட்டம் வாழவந்தான் கோட்டை; மற்றும் மதுரை மாவட்டம் கப்பலூர் ஆகிய5இடங்களில்எனதுஆணைப்படிமகளிருக்கென தனியாக தொழிற்பூங்காக்கள் 358.44 ஏக்கர் பரப்பளவில் 1,198 தொழில்மனைகளுடன் உருவாக்கப்பட்டு; 2001ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகின்றன. இத்தொழிலகங்களில் 9,100 தொழிலாளர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். மேற்கண்ட தொழிற் பூங்காக்களில், மகளிர் தொழில் முனைவோர்கள் தங்களது தொழில் நடவடிக்கைகளை போட்டித் திறனுடன் மேற்கொள்ள, தொழில்நுட்பம்; தொழில்திறன்; விற்பனை உதவி ஆகியவைகளை மேம்படுத்த வேண்டியுள்ளது.இதற்காக, இந்த 5 மகளிர் தொழிற் பூங்காக்களில் உலகத்தரம் வாய்ந்த நேர்த்திமிகு மையம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நேர்த்திமிகு மையத்தில் பொதுக் காட்சியகம்;மற்றும் விற்பனை மையம்; பொது வியாபார மையம்; பொதுக்கூட்ட அரங்கம்; பொதுப்பயிற்சி கூடம்;நிருவாக அலுவலகம்; வங்கி; குழந்தைகள் காப்பகம்; மற்றும் மருத்துவ மையம் போன்றவை அமையப்பெறும். ஒவ்வொரு மையமும் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் என மொத்தம் 12 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் இவை அமைக்கப்படும். எனது தலைமையிலான அரசு இத்தொகையை மானியமாக வழங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. சென்னை கிண்டியிலுள்ள அரசு தொழில்நுட்ப பயிற்சி மையம், தொழிற்சாலைகளுக்கு தொழில் அறிவுமிக்க மனித ஆற்றலை உருவாக்கித்தரும் நோக்கத்துடன் கருவி மற்றும் அச்சு, அதாவது Tool and Die; குளிர்சாதனம் மற்றும் குளிர்பதனியல் கலையில் மூன்றாண்டு பட்டயப்படிப்பினை புது தில்லியில் உள்ள அகில இந்திய தொழில்நுட்ப கவுன்சில் ஒப்புதலுடன் நடத்தி வருகிறது. தற்போதுள்ள கட்டடம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அகில இந்திய தொழில்நுட்பக் கவுன்சிலின் ஒப்புதல் விதிகளுக்கு உரியதாக இல்லை. எனவே, 30,000 சதுர அடி பரப்பளவில் கூடுதல் கட்டடம் ஒன்று 9 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. டான்சி நிறுவனத்தின் கீழ், மர அறைகலன் உற்பத்திக்கென மட்டும் 9 தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இதன் மூலம் பாரம்பரிய மர அறைகலன்களை மட்டும் தயாரிக்க முடிகிறது. தனியார் நிறுவனங்களுடன் போட்டிபோடும் நோக்கத்துடனும்; தரமான பொருட்களைத் தயார் செய்து உரிய நேரத்தில் வழங்குவதற்காகவும்; ஒரு புதிய மர அறைகலன் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை டான்சி நிறுவனத்தின் கீழ் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இப்புதிய மர அறைகலன் உற்பத்தித் தொழிற்சாலை நவீன உபகரணங்களுடன் 3 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் சென்னை அம்பத்தூரில் உள்ள தொழிற்பேட்டையில் அமைக்கப்படும்.

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம், தொழில்வளம் மேலும் பெருகி; வேலைவாய்ப்புகள் அதிகரித்து; தமிழ்நாட்டின் பொருளாதாரம் உயர வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

தொழில் வளர்ச்சியினை அதிகரிக்க, வேலைவாய்ப்புகளை உருவாக்க, மாசினைக் கட்டுப்படுத்த புதிய தொழில் வளர்ச்சித் திட்டங்கள்!

24.07.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொழில் கட்டமைப்பு வசதிகள், தொழில்நுட்பத் தகுதியுடன் கூடிய மனிதவளம், தடையில்லா மின்சாரம், அமைதியான சட்டம்–ஒழுங்கு, வெளிப்படையான முறையில் எளிமையான அணுகுமுறை போன்ற, தொழில் தொடங்கத் தேவையான, சாதகமான சூழ்நிலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதோடு மட்டுமல்லாமல், இலக்குகளுடன் கூடிய தொலை நோக்குத் திட்டம் 2023, தமிழ்நாடு தொழில் கொள்கை 2014, மோட்டார் வாகனங்கள் மற்றும் உதிரி பாகங்கள் கொள்கை 2014, உயிரி தொழில்நுட்பக் கொள்கை 2014 ஆகியவைகளை எனது தலைமையிலான அரசு வகுத்துள்ளதன் காரணமாக, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை மேலும் அதிகரித்து, வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில், கீழ்க்காணும் தொழில் வளர்ச்சித் திட்டங்களை அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. கோயம்புத்தூர் பகுதியின் இட அமைப்பு, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளங்கள், சந்தை வாய்ப்புக்கள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, கோயம்புத்தூரில் அண்ணா பல்கலைக்கழகத்துக்குச் சொந்தமான 10 ஏக்கர் நிலப்பரப்பில் 55 கோடி ரூபாய் செலவில் டைசல் பயோ பார்க்-

III-ஐ, டிட்கோ நிறுவனம் டைடல் பார்க் நிறுவனத்துடன் இணைந்து துவக்கும் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இத்திட்டம் 500 அறிவியல் அறிஞர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பினையும், 500 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பினையும் அளிக்கும்.

2. மருத்துவ உபகரணங்கள் தயாரிப்புத் துறையில் இந்தியாவின் மையமாக தமிழ்நாட்டினை உருவாக்கும் பொருட்டும், மருத்துவத் தொழில்நுட்பத் துறையில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டும், மருத்துவத் தொழில்நுட்பத் தயாரிப்புகளின் இறக்குமதியை குறைத்து அதன் மூலம் மருத்துவச் செலவைக் குறைக்கும் நோக்கிலும், எச்.எல்.எல். லைப்கேர் லிமிடெட் என்கிற ஓர் இந்திய அரசு நிறுவனத்துடன் இணைந்து காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு அருகில் 330 ஏக்கர் நிலப்பரப்பில் 130 கோடி ரூபாய் திட்டச் செலவில் ஒரு மருத்துவப் பூங்கா டிட்கோ நிறுவனத்தால் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மருத்துவப் பூங்கா இந்திய நாட்டில் முதன்மையான மருத்துவப் பூங்காவாக அமைவதோடு, மருத்துவக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் மண்டலம், உயிரி தொழில்நுட்பம், உயிரி தகவல் மண்டலம், அடைகாப்பு வசதி மற்றும் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மண்டலம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் கொண்டதாகவும் அமையும். இப்பூங்காவில் அமைக்கப்படவுள்ள 100 தொழில் பிரிவுகளில், 30 தொழில் பிரிவுகள் பெரிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்காக அமைக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 3,000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், சுமார் 5,000 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. தமிழ்நாட்டில் பின்தங்கிய மாவட்டங்களில் ஒன்றான இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் மற்றும் திருவாடானை வட்டங்களில் தேசிய முதலீடு மற்றும் உற்பத்தி மண்டலம், அதாவது National Investment

and Manufacturing Zone சுமார் 6,525 கோடி ரூபாய் முதலீட்டில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மண்டலத்திற்கான விரிவான திட்ட அறிக்கை நடப்பாண்டில் தயாரிக்கப்பட்டு மைய அரசுக்கு அனுப்பி வைக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், பணிகளை விரைவில் மேற்கொள்ள எனது தலைமையிலான அரசு முழு முயற்சிகளை மேற்கொள்ளும்.

4. தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் ஆக்கபூர்வமான தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில், இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி வட்டத்தில் உள்ள வாலிநோக்கம் உப்பள வளாகத்தில் 500 ஏக்கர் அரசு நிலத்தில் 50 மெகாவாட் மின்திறன் கொண்ட சூரிய வெப்பச் சலன மின் உற்பத்தியுடன் கூடிய 15 mld கடல் நீரை சுத்திகரிக்கும் திட்டம் ஒன்று 1,500 கோடி ரூபாய் செலவில் டிட்கோ நிறுவனத்தால் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின் மூலம் ஏறத்தாழ ஆண்டிற்கு 190 மில்லியன் யூனிட்டுகள் மின் உற்பத்தி செய்யப்படும். இத்திட்டத்திலிருந்து வெளியாகும் உப்பு நீரிலிருந்து உப்பை உற்பத்தி செய்ய தமிழ்நாடு உப்பு நிறுவனம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

5. மின்னணுவியல் துறையின் உட்கட்டமைப்பு மற்றும் உற்பத்தி ஆகியவைகளை தமிழ்நாட்டின் பின்தங்கிய மாவட்டங்களுக்கும் விரிவாக்கம் செய்யும் நோக்கத்தோடு, மின்னணுவியல் உற்பத்தி வளாகம் ஒன்று கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 527 ஏக்கர் பரப்பளவில் 920 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய அரசின் தேசிய மின்னணுவியல் கொள்கையின் அடிப்படையில், டிட்கோ மற்றும் G.M.R. Infrastructure நிறுவனம் ஆகியவை இணைந்து இத்திட்டத்தைச் செயல்படுத்தும். 527 ஏக்கர் நிலப்பரப்பில்

65 சதவிகித இடம் மின்னணுவியல் நிறுவனங்கள் நிறுவுவதற்கான உற்பத்தி சார்ந்த பகுதியாகவும், மீதமுள்ள இடம் உற்பத்தி சாரா பகுதியாகவும் அமைக்கப்படும். இத்திட்டத்திற்கான கொள்கை அளவிலான ஒப்புதலை மைய அரசு வழங்கியுள்ளது. இத்திட்டம் சுமார் 7,000 கோடி ரூபாய் முதலீட்டை ஈர்ப்பதோடு, சுமார் 40,000 நபர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்பை வழங்கும்.

6. பெரும் முதலீடுகளை ஈர்க்கும் வகையிலும், மாநிலத்தின் வேலைவாய்ப்பைப் பெருக்கும் வகையிலும், 2014–2015ஆம் ஆண்டில் 190 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சிப்காட் நிறுவனத்தின் வெவ்வேறு தொழில் வளாகங்கள் / பூங்காக்களில் சாலைகள், தண்ணீர் வசதி, தெரு விளக்குகள், கழிவு நீரகற்று வசதிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதும், அழிந்து வரும் வனங்களை உயிர்ப்பிப்பதும் அத்தியாவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டின் 12 மாவட்டங்களில் உள்ள 20 சிப்காட் தொழில் பூங்காக்களில் உள்ள சாலையோரங்களில் இரு புறமும் 10 மீட்டர் இடைவெளியில் 5 கோடி ரூபாய் செலவில் மரங்களை நட்டு அவற்றை சிறப்பாக பேணி வளர்க்க சிப்காட் நிறுவனம் நடவடிக்கை எடுக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மரங்களை நடுவதற்கும், இவற்றை ஐந்து ஆண்டுகள் பராமரிக்கவும் வனத் துறையுடன் சிப்காட் நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளும்.

8. சிப்காட் நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மூன்று தொழில் வளாகங்கள் மற்றும் தொழில் பூங்காக்களில் உள்ள நீர் நிலைகளில் நிலத்தடி நீரை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் 6 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்

என்பதையும், சிப்காட் தொழில் வளாகங்கள் / பூங்காக்கள் / வளர்ச்சி மையங்களில் உள்ள 42 கழிவு நீர் தொட்டிகள் ஒவ்வொன்றும் சுமார் 40 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்படும் என்பதையும், நடப்பாண்டில் 10 கழிவு நீர் தொட்டிகள் 4 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

9. பெருகி வரும் கட்டுமானத் தொழிலை ஊக்குவிக்கும் வகையிலும், கட்டுமானத் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பை உறுதி செய்யும் வகையிலும், கட்டுமானத் தொழிலுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களுள் ஒன்றான சிமெண்ட் உற்பத்தியைப் பெருக்கும் வகையிலும், தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனத்தின் காகித ஆலையிலிருந்து உருவாகும் சுண்ணாம்புக் கழிவு மற்றும் மின் உற்பத்தி நிலையத்தின் உலர் சாம்பல் ஆகியவற்றைப் பயன்படுத்தி நாளொன்றுக்கு 600 டன் சிமெண்ட் தயாரிக்கும் ஆலை ஒன்று 30.01.2013 அன்று என்னால் ஏற்கெனவே துவக்கி வைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்த ஆலை 30 கோடி ரூபாய் செலவில் விரிவாக்கப்படும். இதன் மூலம் இந்த சிமெண்ட் ஆலையின் உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு 600 மெட்ரிக் டன்னிலிருந்து 900 மெட்ரிக் டன்னாக உயரும்.

10. தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனத்தின் மூலம் திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில், இரு புறமும் மேற்பூச்சு செய்யப்பட்ட அடுக்கு காகித அட்டை தயாரிக்கும் புதிய ஆலை ஒன்று 1,200 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 2,000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பினை உருவாக்கும் வகையில் நிறுவப்படும் என இந்த மாமன்றத்தில் 07.05.2013 அன்று நான் அறிவித்தேன். அந்த ஆலையை நிறுவிடும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனம் உற்பத்தி செய்யும் காகிதம் மற்றும் அடுக்கு காகித

அட்டையிலிருந்து, விலை மதிப்புக் கூட்டிய பொருட்களை உற்பத்தி செய்யும் மையம் ஒன்று கரூர் மாவட்டம், மாயனூரில் 38.40 ஏக்கர் பரப்பளவில் 40 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மையத்தில், நோட்டுப் புத்தகம், பாடப் புத்தகம், சிறிய அட்டை பெட்டி தயார் செய்தல் போன்ற காகிதம் மற்றும் அடுக்கு காகித அட்டை சார்ந்த சுமார் 15 தொழிற்கூடங்கள் அமையப் பெற்று, சுமார் 500 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு கிடைக்கும்.

11. தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனத்தின் மென்பொருள் தொழில்நுட்பப் பிரிவின் சேவை மையம், அந்நிறுவனத்தின் தற்போதைய தேவைக்கு ஏற்ப 12 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்

12. சர்க்கரை ஆலைகளை ஊக்குவிக்கும் விதமாக, கள்ளக்குறிச்சி–II மற்றும் தருமபுரி சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில், தலா 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 45 கிலோ லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட வடிப்பகத்துடன் கூடிய எத்தனால் ஆலைகள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் அந்தப் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் கரும்புப் பயிர் முழுமையாக பயன்படுத்தப்படும். கரும்பு கசண்டு மதிப்புக் கூட்டப்பட்டு, எத்தனால் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எரிசாராயம் தயாரிக்கப்பட்டு ஆலைக்கு அதிக வருவாயும், லாபம் ஈட்டும் வாய்ப்பும் அதிகரிக்கும். இத்திட்டத்திற்குத் தேவைப்படும் 180 கோடி ரூபாயில், 50 சதவீதம் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மூலமும், 40 சதவீதம் சர்க்கரை வளர்ச்சி நிதியிலிருந்தும், 10 சதவீதம் பங்கு மூலதனத்தின் மூலமும் ஈடு செய்யப்படும்.

13. அமராவதி மற்றும் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் வடிப்பகத்துடன் கூடிய எத்தனால் ஆலைகள் இயங்கி

வருகின்றன. ஆண்டொன்றுக்கு 90 இலட்சம் லிட்டர் எத்தனாலையும், 1.65 கோடி லிட்டர் எரிசாராயத்தையும் உற்பத்தி செய்யும் திறனை இவ்வாலைகள் பெற்றுள்ளன. இவ்வாலைகளில் தண்ணீரை சேமிக்கும் நோக்கத்துடனும், மாசுக் கட்டுப்பாட்டு விதிகளை முழுமையாக பின்பற்றும் நோக்கத்துடனும் நவீன சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சுத்திகரிக்கும் நிலையமானது, ஈரடுக்கு எதிர்மறை சவ்வூடு பரவல் முறையில் அமைக்கப்படும். சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர், மறு சுழற்சி முறையில் மீண்டும் ஆலையில் பயன்படுத்தப்படுவதால் தண்ணீர்த் தேவை குறையும். ஆலை கழிவு நீர் வெளியேற்றம் முழுமையாக கட்டுப்படுத்தப்படும். இந்த நவீன சுத்திகரிப்பு நிலையம் ஒவ்வொன்றும் 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மொத்தம் 17 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.

14. தண்ணீர் மற்றும் காற்றின் தரத்தினை மேம்படுத்தவும், மாசுக் கட்டுப்பாட்டு விதிகளைக் கடைபிடிக்கும் நோக்கத்துடனும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியக் காற்றுக் கவனிப்பு அலகுடன், நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை, திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை, அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை, ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை, மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை, அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை வடிப்பகம் மற்றும் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை வடிப்பகம் ஆகியவை இணைக்கப்படும். தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்துடன் ஏற்படுத்தப்படும் நேரடி தொடர்பு அமைப்பு, மின்னணுக் காட்சி முறையில் கண்காணிக்கும் வண்ணம் அமைக்கப்படும். இதன் மூலம் காற்று மற்றும் நீரிலுள்ள மாசு விவரங்கள் துல்லியமாக அறியப்படும். மாசுக் கட்டுப்பாட்டு விதிகளை முழுமையாக பின்பற்றவும், ஆலையைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் ஆலையிலிருந்து வெளியேற்றப்படும் நீர் மற்றும் காற்று

மாசு விவரங்களை உடனுக்குடன் தெரிந்து கொள்ளவும் இத்திட்டம் உதவும். இத்திட்டத்திற்கு ஆகும் மொத்த செலவு 5 கோடியே 51 இலட்சம் ரூபாய் ஆகும்.

15. தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் குவாரிகள் மற்றும் சுரங்கங்களில் விரிவாக்கம் மற்றும் உற்பத்திப் பணிகளுக்காக பளு தூக்கி இயந்திரங்கள், சுரங்க லாரிகள், அதாவது டிப்பர்கள், துளையிடும் இயந்திரங்கள், மண் வாரி இயந்திரங்கள் மற்றும் காற்றழுத்தி இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த இயந்திரங்கள் நவீன முறையில் பெரியபாறைகளிலிருந்துகற்துண்டங்களைவெட்டி எடுப்பதற்கும், அவற்றைக் கையாளுவதற்கும், கிரானைட் கழிவுகளை கையாளுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. தற்போது, வாடகை இயந்திரங்களுக்கு செலவிடப்படும் தொகையினை குறைக்கும் வகையிலும், பழுது நீக்கும் நேரத்தை குறைக்கும் வகையிலும், புதிய இயந்திரங்களை வாங்கி, சுரங்கம் மற்றும் குவாரிகளில் பயன்படுத்தி, உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வண்ணமும், விஞ்ஞான முறையில் மிகச் சிறப்பாக சுரங்கப் பணிகளை மேற்கொள்ளும் வகையிலும், 16 கோடியே 42 லட்சம் ரூபாய் செலவில் சொந்தமாக நவீன இயந்திரங்களான 11 மண் வாரி இயந்திரங்கள், 10 சுரங்க லாரிகள், அதாவது டிப்பர்கள், மற்றும் 6 காற்றழுத்தி இயந்திரங்கள் ஆகியவை தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கென வாங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்காணும் எனது தலைமையிலான அரசின் நடவடிக்கைகள், முதலீடுகளை ஈர்த்து தொழில் வளர்ச்சியினை அதிகரிக்கவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், மாசினை கட்டுப்படுத்தவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

தாய்மார்கள் குழந்தைகள் நலனுக்கு அங்கன்வாடி மையங்களில் புதிய சலுகைகள் - வசதிகள்!

24.07.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கர்ப்பிணித் தாய்மார்கள், வளரிளம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு நிறைவான ஊட்டச் சத்து, மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலை, சிசு இறப்பு விகிதம் குறைப்பு போன்ற குறிக்கோள்களை அடையும் வண்ணம், தமிழ்நாட்டில் உள்ள அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள 54,439 அங்கன்வாடி மையங்கள் மூலம் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகள், வளரிளம் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் முதியோர் உதவித் தொகை பெறுவோர் என மொத்தம் 35 இலட்சத்து 36 ஆயிரத்து 705 பேர் பயன் அடைந்து வருகின்றனர். இந்த அங்கன்வாடி மையங்கள் மூலம் மேலும் பல சலுகைகளையும், வசதிகளையும் தாய்மார்களும், குழந்தைகளும், ஏழை, எளிய குடும்பங்களும் பெறும் வண்ணம் கீழ்க்காணும் அறிவிப்புகளை வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. இந்த அங்கன்வாடி மையங்கள் மூலம் பயனடைந்து வரும் 6 மாதம் முதல் 60 மாதம் வரையிலான குழந்தைகள் குதூகலமான சூழலில் வளர வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, அங்கன்வாடி மையங்களை "எழுச்சிமிகு முன் பருவ குழந்தை வளர்ச்சி மற்றும் கற்றல் மையங்களாக", அதாவது Vibrant Early Childhood Development and Learning Centre ஆக தரம் உயர்த்த எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். முதற்கட்டமாக,

மொத்தமுள்ள 54,439 அங்கன்வாடி மையங்களில், 5,565 அங்கன்வாடி மையங்கள் 55 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்படும். இதன் மூலம், 4 இலட்சத்து 50 ஆயிரம் குழந்தைகள் பயனடைவார்கள். இவ்வாறு தரம் உயர்த்த உத்தேசிக்கப்பட்டு உள்ள அங்கன்வாடி மையங்களில் 100 சதுர அடி அளவில் கூடுதலாக ஓர் அறை கட்டுதல், குழந்தை நேய கழிப்பறைகளைக் கட்டுதல் மற்றும் சீரமைத்தல், தண்ணீர்த் தொட்டி அமைத்தல், கை கழுவும் தொட்டி, சமையலறைத் தொட்டி, காலணி அலமாரி, தண்ணீர் வடிகட்டி ஆகியவற்றை அமைத்தல், குழந்தைகளுக்கான வெளி விளையாட்டு சாதனங்கள், நாற்காலி மற்றும் மேசை, வாத்து மற்றும் குதிரை வடிவிலான ஆடும் நாற்காலி, புத்தகப் பை மற்றும் தண்ணீர் பாட்டில், புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை ஆகியவற்றை வழங்குதல், அங்கன்வாடி மையங்களில் வெள்ளை அடித்து சுவர் ஓவியம் வரைதல் மற்றும் சிறிய பழுதுகளை நீக்குதல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2. அங்கன்வாடி மையங்களில், அங்கன்வாடிப் பயனாளிகளுக்குத் தேவையான ஊட்டச் சத்து, சுகாதாரச் சேவைகள், தடுப்பூசி உள்ளிட்ட மருத்துவ வசதிகள் ஆகியவை அளிக்கப்பட்டு வருகின்றன. காய்ச்சல் அறிகுறி உள்ள குழந்தைகளுக்கு காய்ச்சலின் அளவினை மின்னணு வெப்பமானி, அதாவது Thermometer மூலம் அறிந்து, பதிவு செய்து, அதற்கேற்றாற் போல் மருந்துகளை வழங்கினால் நலம் பயக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு, மின்னணு வெப்பமானி, காயத்திற்கு கட்டும் துணியை வெட்டும் கத்திரிக்கோல், சுத்தப்படுத்தப்பட்ட காயத்திற்கு கட்டும் துணி, நுண் துளையிடப்பட்ட ஒட்டும் துணி, அதாவது Micropore, காயங்களுக்கான ஒட்டுப்பசைத் துணி, அதாவது Handyplast மற்றும் முதலுதவிக் கையேடு ஆகியன அடங்கிய முதலுதவிப் பெட்டிகள் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் 54,439 அங்கன்வாடி

மையங்களுக்கும் வழங்கப்படும் என்பதை அறிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

3. பணிக்குச் செல்லும் தாய்மார்கள், 5 வயது வரையுள்ள தங்கள் குழந்தைகளைப் பராமரிப்பதில் மிகுந்த சிரமங்களை எதிர் கொள்வதால், அக்குழந்தைகளுக்கு பராமரிப்பகங்களை அமைப்பது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, தற்போதுள்ள அங்கன்வாடி மையங்களை "மழலையர் பராமரிப்பகங்களாக" தரம் உயர்த்த எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். முதற்கட்டமாக பெரம்பலூர், கன்னியாகுமரி, சென்னை, புதுக்கோட்டை, திண்டுக்கல், காஞ்சிபுரம், திருவள்ளூர், கோயம்புத்தூர், திருவண்ணாமலை, திருநெல்வேலி, சேலம், வேலூர், விழுப்புரம் ஆகிய 13 மாவட்டங்களில் மொத்தம் 211 அங்கன்வாடி மையங்கள் 2 கோடியே 31 இலட்சம் ரூபாய் செலவில் மழலையர் பராமரிப்பகங்களாக தரம் உயர்த்தப்படும். இந்த "மழலையர் பராமரிப்பகங்கள்" முதற்கட்டமாக தேவைப்படும் இடங்களில் வாடகைக் கட்டடங்களில் முதன்மை அங்கன்வாடி மையங்களுடன் இணைக்கப்பட்டு செயல்படுத்தப்படும். இதன் மூலம், 211 அங்கன்வாடி மையங்களில் ஒரு மையத்திற்கு குறைந்த பட்சமாக 15 குழந்தைகள் என்ற எண்ணிக்கையில் மொத்தம் 3,165 குழந்தைகள் பயனடைவர். மேலும், இக்குழந்தைகளைக் கவனிக்கத் தேவைப்படும் விளையாட்டுப் பொருட்கள், பொம்மைகள், தொட்டில்கள், சுத்தம் செய்யத் தேவையான பொருட்கள், கூடுதலான படுக்கைகள், போர்வைகள், குழந்தைகளுக்கான அடையாள அட்டைகள் ஆகியன வழங்கப்படும். இது தவிர, மழலையர் பராமரிப்பகங்களுக்கு வரும் குழந்தைகளுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் இணை உணவு மற்றும் சத்துணவுடன், ஒரு நாளைக்கு, ஒரு குழந்தைக்கு 6 ரூபாய் செலவில் வருடத்தில் 300 நாட்களுக்கு, காலை உணவு, சிறு உணவு மற்றும் மாலை சிற்றுண்டி ஆகியவை வழங்கப்படும்.

4. நான் முதன் முறையாக தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற 1991 முதல் 1996 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில், பெண் கல்வியை மேம்படுத்தவும், பெண் சிசுக் கொலையை ஒழிக்கவும், சிறு குடும்ப முறையை ஊக்கப்படுத்தவும் முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் என்ற திட்டத்தை 1992 ஆம் ஆண்டு தொடங்கினேன். 01.08.2011–க்குப் பிறகு குடும்பத்தில் ஒரே ஒரு பெண் குழந்தை மட்டும் இருந்து, ஆண் குழந்தை இல்லாதிருப்பின், அப்பெண் குழந்தையின் பெயரில் ஆரம்ப வைப்பீடாக 50,000/–ரூபாயும், குடும்பத்தில் இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் இருந்து, ஆண் குழந்தை ஏதும் இல்லாதிருப்பின், ஒவ்வொரு பெண் குழந்தையின் பெயரிலும் தலா 25,000/– ரூபாயும் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்படுகிறது. இந்த வைப்புத் தொகை ஒவ்வொரு ஐந்தாண்டு முடிவிலும் புதுப்பிக்கப்பட்டு, பெண் குழந்தைக்கு 18 வயது நிறைவடைந்ததும் திரளான வட்டி விகிதத்துடன் கூடிய, நிலை வைப்புத் தொகையின் முதிர்வுத் தொகை இரு திட்டங்களின் கீழ் முறையே 3 இலட்சத்து 232 ரூபாய் மற்றும் 1 இலட்சத்து 50 ஆயிரத்து 117 ரூபாய் ஒவ்வொரு பயனாளிக்கும் வழங்கப்படுகிறது. மேலும் இந்த திட்டங்களின் கீழ், தொகை வைப்பீடு செய்யப்பட்ட ஆறாவது ஆண்டிலிருந்து கல்விச் செலவுக்காக ஆண்டுதோறும் ஊக்கத் தொகை 1,800 ரூபாய் வரை வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் பெண் கல்வி முன்னேற்றம் அடைந்துள்ளதற்கும், பெண் குழந்தைகளின் இடை நிறுத்தல் குறைந்துள்ளதற்கும், பெண் குழந்தை பாலின விகிதம் அதிகரித்துள்ளதற்கும் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் முக்கிய காரணியாக உள்ளது.

கூலித் தொழிலாளர்கள், அமைப்புசாரா தொழிலாளர்கள், தனியார் மருத்துவமனைகளில் பணிபுரியும் செவிலியர், கடைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், தங்கும் விடுதிகளில் பணிபுரிவோர், உணவகம், பெட்டிக் கடை நடத்துபவர்கள், தெரு வியாபாரிகள்,

தனியார் மழலையர் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள் போன்றோர் மாத வருமானம் சுமார் 5,000/– ரூபாய் வீதம், ஆண்டு வருமானம் 60,000/– ரூபாய் வரை ஈட்டும் சாதாரணப் பிரிவைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர். இவர்களும் இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் வகையில், தற்போது நிர்ணயிக்கப்பட்ட திட்டம்–1–க்கான வருமான உச்ச வரம்பு 50,000/–ரூபாயையும், திட்டம்–2–க்கான வருமான உச்ச வரம்பு 24,000/– ரூபாயையும் அகற்றிவிட்டு, இரு திட்டங்களுக்கும் பொதுவாக 72,000/– ரூபாய் உச்ச வரம்பு நிர்ணயிக்கப்படும். இதற்காக 31 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

மேற்கானும் எனது தலைமையிலான அரசின் நடவடிக்கைகள், பெண்கள், தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் வாழ்வில் மகிழ்ச்சியை ஏற்படுத்தவும், அவர்கள் அனைத்து வசதிகளையும் பெற்று ஊட்டச் சத்து நிறைந்தவர்களாகத் திகழவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

ரூ.2,325.48 கோடியில் சாலை உட்கட்டமைப்பு மேம்பாடு! தமிழ்நாடு முழுவதும் சாலைகள், பாலங்கள், சுரங்கப்பாதைகள்!

25.07.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொழில் வளர்ச்சி, வேளாண் வளர்ச்சி, குறைந்த நேரத்தில் விரைவான பயணம், எரிபொருள் சிக்கனம், பாதுகாப்பான பயணம் ஆகியவற்றின் அடித்தளங்களாக விளங்குபவை சாலைகள் மற்றும் பாலங்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, சாலை உட்கட்டமைப்பு வசதிகளை தமிழ்நாடு முழுவதும் மேம்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, 2,325 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பிலான சாலைகள், பாலங்கள், சுரங்கப் பாதைகள் அமைக்கும் திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. புதிதாக விரிவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சி எல்லைப் பகுதியில் அமைந்துள்ள நெடுஞ்சாலைத் துறையின் 250 கிலோ மீட்டர் சாலைகளில் விளிம்பு வரை அகலப்படுத்தும் பணிகள், வடிகால் வசதியுடன் கூடிய நடைபாதைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். இதற்கு மொத்தம் 1,033 கோடி ரூபாய் செலவு ஏற்படும். முதற்கட்டமாக, இந்த ஆண்டு 250 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் மேற்கொள்ளப்படும்.

2. சென்னை பெருநகரில் பெருகி வரும் போக்குவரத்தின் தேவைகளைக் கருத்தில் கொண்டு, 185 கோடியே

50 இலட்சம் ரூபாய் மதிப்பில் மேடவாக்கம் மற்றும் கீழ்க்கட்டளையில் இரண்டு பல்வழிச்சாலை மேம்பாலங்களும்; 50 கோடி ரூபாய் மதிப்பில் தெற்கு உள் வட்ட சாலையில் வாகன சுரங்கப் பாதையும் ஜப்பான் பன்னாட்டு ஒருங்கிணைப்பு முகமையின் நிதியுதவியுடன் கட்டப்படும்.

3. 58 கோடி ரூபாய் மதிப்பில், பருத்திப்பட்டு, இராமாவரம் மற்றும் நொளம்பூர் அருகே மூன்று உயர்மட்ட பாலங்களும்; 12 கோடி ரூபாய் மதிப்பில் தாம்பரம் இரயில்வே நிலையத்திற்கு அருகில் நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய ஒரு நடை மேம்பாலமும் அமைக்கப்படும்.

4. ஓரகடம் தொழிற்பூங்கா பகுதியில் சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், சிங்கப்பெருமாள் கோயில் – திருப்பெரும்புதூர் மாநில நெடுஞ்சாலையில், ஓரகடம் முதல் திருப்பெரும்புதூர் வரை ஆறு வழிச் சாலையாக அகலப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, சிங்கப்பெருமாள் கோயில் முதல் ஓரகடம் வரை ஆறு வழிச்சாலையாக அகலப்படுத்தும் பணிகள் 120 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

5. மதுரை மாநகரில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை பெருமளவு குறைக்கும் வகையில், மீனாட்சி மிஷன் மருத்துவமனை முதல் கப்பலூர் வரை 27 கிலோ மீட்டர் நீள மதுரை வட்டச் சாலையை நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்தும் பணி 200 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

6. போக்குவரத்து நெரிசல் மிகுந்த சேலம் மாநகர் ஐந்து சாலைகள் சந்திப்பு அருகே உயர்மட்டப் பாலம் கட்டப்படும். இப்பணிக்காக நடப்பாண்டில் 275 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

7. பின்தங்கிய மாவட்டங்களான இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக, இராமநாதபுரம் மாவட்டத்தில் 35 கிலோ மீட்டர் நீள மாநில நெடுஞ்சாலையும், விருதுநகர் மாவட்டத்தில் 15.6 கிலோ மீட்டர் நீள மாநில நெடுஞ்சாலையும் 100 கோடி ரூபாய் செலவில் மேம்பாடு செய்யப்படும்.

8. நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் நகரைச் சுற்றியுள்ள சாலைகளில் மழைக்காலங்களில், நீர் தேங்குவதைத் தவிர்க்கும் பொருட்டு 33 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பில் சாலைகள் உயர்த்தி அமைக்கப்படும்.

9. நாமக்கல் – திருச்செங்கோடு சாலை 140 கோடி ரூபாய் செலவில் நான்கு வழித் தடமாக மாற்றி அமைக்கப்படும்.

10. பாதசாரிகளின் பாதுகாப்பினை உறுதி செய்ய, அரக்கோணம் சுரங்கப்பாதை அருகே 66 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பில் இரயில்வே மேம்பாலம் கட்டப்படும்.

11. கடலூர் மாவட்டத்தில் உள்ள புவனகிரி, கொள்ளிடம் ஆற்றின் இடது புறக்கரை சாலை, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சித்திரம்பூர் மற்றும் தருமபுரி மாவட்டத்தில் உள்ள வாணியாற்றின் குறுக்கே என 4 உயர்மட்ட பாலங்கள் 60 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்படும்.

12. இதே போல், சேலம் நகரத்தில் திருவாக் கவுண்டனூர் சந்திப்பில் ஒரு பல் வழிச் சாலை மேம்பாலம் 50 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்படும்.

13. மேலும், கோயம்புத்தூர் நகரத்தில் நஞ்சுண்டாபுரம் சந்திப்பு மற்றும் இரயில் நிலையம் சந்திப்பில் இரண்டு நகரும் படிக்கட்டுடன் கூடிய நடை மேம்பாலங்களும்; கரூர் நகரத்தில் பேருந்து நிலையம் அருகே ஒரு நடை மேம்பாலமும் 24 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

14. நகரங்களில் விபத்தைத் தடுக்கும் வண்ணம், அனைத்து சாலைப் பகுதிகளிலும் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல், வடிவியல் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல், குறுகிய பாலங்களை அகலப்படுத்துதல், திறந்த கிணறுகளில் விபத்துத் தடுப்பான்கள், மையத் தடுப்பான்கள் அமைத்தல், சாலை சமிக்ஞைகள் அமைத்தல் போன்றவற்றிற்காக 1,130 கோடி ரூபாய் மதிப்பில் பணிகள் கண்டறியப்பட்டுள்ளன. முதற்கட்டமாக 400 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் நடப்பாண்டு மேற்கொள்ளப்படும்.

15. நபார்டு வங்கி கடனுதவியுடன், அரசு மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளில் 300 கோடி ரூபாய் மதிப்பில் 100 ஆற்றுப் பாலங்கள் கட்டப்படும்.

16. இவை தவிர, சாலைகளின் மேலாண்மை மற்றும் பராமரிப்புப் பணிகளை திறன்பட செயல்படுத்தும் வகையில், இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளை 5 ஆண்டுகளுக்கு மேம்படுத்தி, ஒருங்கிணைத்து பராமரிக்க 1,020 கோடி ரூபாய் மதிப்பில் பராமரிப்பு ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும்.

எனது தலைமையிலான அரசின் நடவடிக்கைகள், அனைத்துத் தரப்பு மக்களின் போக்குவரத்து வசதியை மேலும் மேம்படுத்துவதுடன், நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றப் பாதையில் செல்லவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

மனநலம் குன்றியோர் மாற்றுத்திறனாளிகள் நலனுக்கு சீரிய திட்டங்கள்!

25.07.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மன வளர்ச்சி குன்றியவர்களுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் மறுவாழ்வு அளிக்கும் வகையிலும், மாற்றுத் திறனாளிகளை மனித சமுதாயத்தின் ஓர் அங்கமாக அனைவரும் அங்கீகரிக்கும் வகையிலும், நாட்டின் வளர்ச்சியில் மாற்றுத் திறனாளிகளின் பங்கேற்பினை உறுதி செய்யும் வகையிலும் எண்ணற்ற பல சீரிய திட்டங்களை எனது தலைமையிலான அரசு தீட்டிச் செயல்படுத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, கீழ்க்காணும் திட்டங்களை அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. மன நலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லங்கள் தற்போது அரசின் நிதியுதவியுடன், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் திருவள்ளூர், கடலூர், திருவாரூர், தூத்துக்குடி, இராமநாதபுரம், கோயம்புத்தூர், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, சேலம், வேலூர் மற்றும் மதுரை ஆகிய 11 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. மன நலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உறைவிடம், உணவு, மருத்துவம் மற்றும் மறுவாழ்வுப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு இல்லத்திற்கும் 9 இலட்சத்து 14 ஆயிரத்து 800 ரூபாய் வீதம், மொத்தம் 1 கோடியே 62 ஆயிரத்து 800 ரூபாயினை 11 இல்லங்களுக்கும் ஆண்டுதோறும் அரசு மானியமாக வழங்கி வருகிறது. தற்போது மன நல காப்பகம் இல்லாத மாவட்டங்களிலிருந்து மீட்கப்படும்,

மன நலம் பாதிக்கப்பட்டவர்கள், வேறு மாவட்டத்தில் இயங்கும் மன நலக் காப்பகம் அல்லது மன நல மருத்துவமனையில் சேர்க்கப்படுகிறார்கள். எனவே, இதனைத் தவிர்த்து அந்தந்த மாவட்டங்களிலிருந்து மீட்கப்படும் மன நலம் பாதிக்கப்பட்டவர்கள், அம்மாவட்டங்களிலேயே பயனடையும் வண்ணம் மீதமுள்ள 21 மாவட்டங்களில் மன நலம் பாதிக்கப்பட்டோருக்கான இல்லங்கள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 1 கோடியே 92 இலட்சத்து 10 ஆயிரத்து 800 ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

2. தமிழ்நாட்டில் 14 வயதிற்கு மேற்பட்ட மன வளர்ச்சி குன்றியோருக்கான தங்கும் வசதி, உணவு மற்றும் தொழிற் பயிற்சியுடன் கூடிய 31 இல்லங்கள் 21 மாவட்டங்களில் அரசின் நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த இல்லங்கள் மூலம் பெறப்படும் பராமரிப்பு மற்றும் பயிற்சிகள் பயனாளிகளின் பெற்றோர்களுக்கும் குடும்ப உறுப்பினர்களுக்கும் மிகப் பெரிய பயனாக உள்ளன. எனவே, இந்த இல்லங்களை மேலும் 11 மாவட்டங்களில் அதாவது தருமபுரி, கரூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை மற்றும் திருவாரூர் ஆகிய ஆறு மாவட்டங்களில், ஆண்களுக்கான ஆறு இல்லங்களையும், விருதுநகர், அரியலூர், திருப்பூர், நீலகிரி மற்றும் விழுப்புரம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் பெண்களுக்கான ஐந்து இல்லங்களையும் திறக்க எனது தலைமையிலான அரசு முடிவெடுத்து உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால், அரசுக்கு ஒரு இல்லத்திற்கு, ஆண்டுக்கு, 9 இலட்சத்து 66 ஆயிரத்து 800 ரூபாய் என்ற வீதத்தில் 11 இல்லங்களுக்கு 1 கோடியே 6 இலட்சத்து 34 ஆயிரத்து 800 ரூபாய் செலவினம் ஏற்படும்.

3. மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் கீழ், 23 அரசு சிறப்புப் பள்ளிகளும், 54 அரசு உதவி பெறும் சிறப்புப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில், விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு ஒரு நபருக்கு 650 ரூபாய் வீதம் உணவூட்டுச் செலவினம் வழங்கப்பட்டு வருகிறது. இச்சிறப்புப் பள்ளிகளில், தினசரி காலை வந்து மாலை வீடு திரும்பும் மாணவ, மாணவியருக்கு தற்போது மதிய உணவு வழங்கப்படுவதில்லை. எனவே, சத்துணவு திட்டம் மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின், கட்டுப்பாட்டில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கும் விரிவு படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின் மூலம், உத்தேசமாக 1,733 மாணவ, மாணவியர் பயன்பெறுவர். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 38 இலட்சத்து 99 ஆயிரத்து 250 ரூபாய் தொடர் செலவினம் ஏற்படும்.

மேற்காணும் நடவடிக்கைகள், மன நலம் பாதிக்கப்பட்டோர், மன வளர்ச்சி குன்றியோர் தங்கள் மாவட்டங்களில் உள்ள இல்லங்களில் சேரவும், சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியர் சத்துணவுத் திட்டத்தின் பயனைப் பெறவும் வழிவகை செய்திடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

இளங்கோவடிகள் பெயரில் புதிய விருது! தமிழ் வளர்ச்சி ஆர்வலர்களுக்கு ''தமிழ்ச் செம்மல்'' விருது!

25.07.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்த குடி'' என்று தமிழரின் பழம் பெருமையைப் பற்றி புகழ்ந்து பேசுகிறது புறப்பொருள் வெண்பா மாலை. இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த தமிழ் மொழிக்குப் பெருமை சேர்ப்பதிலும், தமிழ் மொழிக்குப் பெருமை சேர்த்தவர்களைக் கௌரவிப்பதிலும் சிறப்பிப்பதிலும் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில், தமிழ் வளர்த்த சான்றோர்களான கம்பர், கபிலர், உ.வே. சுவாமிநாத அய்யர், உமறுப் புலவர், ஜி.யு. போப் ஆகியோர் பெயரில் புதிய விருதுகள் ஏற்படுத்தப்பட்டன. இது தவிர, சொல்லின் செல்வர் விருது, கணினித் தமிழ் விருது மற்றும் தமிழ்த் தாய் விருது ஆகிய விருதுகளும் ஏற்படுத்தப்பட்டு, தமிழ் மொழியின் சிறப்புக்கு மேலும் சிறப்பு சேர்த்த அரசு எனது தலைமையிலான அரசு.

''யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல், வள்ளுவர் போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை'' என்று கம்பரையும், வள்ளுவரையும், இளங்கோவடிகளையும் போற்றிப் பாடினார் மகாகவி பாரதியார். இவர்களில், உலகப் பொது மறையாம் திருக்குறளைப் படைத்த தெய்வப் புலவர் திருவள்ளுவர் பெயரில் முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் விருது அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. கம்பர் பெயரில்

கடந்த ஆண்டு என்னால் விருது அறிவிக்கப்பட்டது. நடப்பாண்டு முதல், நெஞ்சை அள்ளும் "சிலப்பதிகாரம்" என்று போற்றப்படும் காலத்தை வென்ற காப்பியத்தைத் தந்த இளங்கோவடிகள் பெயரில் புதிய விருது வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இளங்கோவடிகளின் நடையையொட்டி புதிய காப்பியம் படைப்பவருக்கோ அல்லது சிலப்பதிகாரத்தின் புகழ் பரப்புபவருக்கோ ஆண்டுதோறும் சித்திரைத் திங்கள் தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று இவ்விருது வழங்கப்படும். இளங்கோவடிகள் விருது பெறுபவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும், தகுதியுரையும் வழங்கப்படும்.

இதே போன்று, தமிழ்நாட்டில் தமிழ் வளர்ச்சிக்காக அரும்பாடுபடும் ஆர்வலர்களைக் கண்டறிந்து, அவர்களின் தமிழ்த் தொண்டினைப் பெருமைப்படுத்தி, ஊக்கப்படுத்தும் வகையில் "தமிழ்ச் செம்மல்" என்ற விருது ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். விருது பெறுபவருக்கு 25,000 ரூபாய் பரிசுத் தொகையும், தகுதியுரையும் வழங்கப்படும். இவ்விருது, மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 32 பேருக்கு வழங்கப்படும்.

மேலும், சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையில் 1981 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்ட உலகத் தமிழறிஞர்களின் கோரிக்கையினை ஏற்று முன்னாள் முதலமைச்சர், இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் தஞ்சாவூரில் தோற்றுவிக்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பெருகி வரும் மாணவர்களின் நலன்களைக் கருத்திற் கொண்டும், கட்டட வசதிகளின் தேவையைக் கருத்திற் கொண்டும், 15 கோடி ரூபாய் செலவில் இரண்டு புதிய கட்டடங்கள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பாக, பழந்தமிழரின் சிறப்புக்களையெல்லாம் நாட்டுக்கு எடுத்துக் காட்டும் வகையில், சுடுமண் சிற்பம், சுதைச் சிற்பம் மற்றும் மரம், கல்,

உலோகம் ஆகியவற்றைக் கொண்டு படிமங்களாக வடிவமைத்த கலைப்பொருட்களைக் கொண்டு பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக் கூடம் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் சென்னை, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள் தமிழ் மொழியை மேலும் வளர்க்கவும், தமிழ் ஆர்வலர்களை ஊக்குவிக்கவும், பழந்தமிழரின் வாழ்வியல் நெறிகள் குறித்து இன்றைய தலைமுறையினர் மட்டுமின்றி எதிர்கால தலைமுறையினரும், உலகமக்கள் அனைவரும் அறிந்துகொள்ளவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

கல்லாதோர் இல்லாத மாநிலம் என்னும் இலக்கை எய்திட வழிவகுக்கும் சிறப்புத் திட்டங்கள்!

30.07.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செல்வத்துள் பெரும் செல்வம் ஆகிய கல்வியை அனைவரும் கற்று, கல்லாதவர்களே இல்லாத மாநிலம் தமிழகம் என்ற குறிக்கோளை அடையும் வகையில் எனது தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது.

இதன் அடிப்படையில், கீழ்க்காணும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. கல்வியின் அடித்தளமாக விளங்குவது தொடக்கக் கல்வி என்பதைக் கருத்தில் கொண்டு, நடப்புக் கல்வியாண்டில், 25 மாவட்டங்களில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் அதிகம் உள்ள 128 குடியிருப்புப் பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன. இந்தக் குடியிருப்புப் பகுதிகளில், தலா ஒரு தொடக்கப் பள்ளி வீதம் 128 புதிய தொடக்கப் பள்ளிகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு தலைமை ஆசிரியர் மற்றும் ஓர் இடைநிலை ஆசிரியர் என மொத்தம் 256 ஆசிரியர்கள் பணியமர்த்தப்படுவார்கள். இவ்வாறாக தொடங்கப்படும் தொடக்கப் பள்ளிகளில் மதிய உணவு சமைப்பதற்குத் தேவையான நவீன சமையலறை, குடிநீர் வசதியுடன் கூடிய கட்டடங்கள் மற்றும் கழிப்பிடங்கள் ஆகியவை ஏற்படுத்தித் தரப்படும். இதனால் ஆண்டொன்றுக்கு தோராயமாக 19 கோடியே 43 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

2. 2009 ஆம் ஆண்டைய குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்படி, 3 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு ஒரு நடுநிலைப் பள்ளி அமைக்கப்பட வேண்டும். அதன்படி கடந்த மூன்று ஆண்டுகளில் 65 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் 19 மாவட்டங்களில் 42 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக, நிலை உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு நிலை உயர்த்தப்படும் ஒவ்வொரு பள்ளிக்கும் 3 பட்டதாரி ஆசிரியர்கள் வீதம் 126 ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்படுவதோடு, ஒவ்வொரு பள்ளிக்கும் 3 கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தரப்படும். இதனால் ஆண்டொன்றுக்கு 9 கோடியே 28 இலட்சம் ரூபாய் அரசுக்கு செலவு ஏற்படும்.

3. கடந்த மூன்று ஆண்டுகளில், 760 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டன. இதன் காரணமாக, சுமார் 1 இலட்சத்து 6 ஆயிரம் மாணவ, மாணவியர் பயன் அடைந்துள்ளனர். நடப்புக் கல்வியாண்டில், 50 அரசு நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். உயர்நிலைப் பள்ளி ஒன்றுக்கு ஒரு தலைமை ஆசிரியர் பணியிடம் வீதம் 50 தலைமை ஆசிரியர் பணியிடங்களும், 5 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 250 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் என மொத்தம் 300 ஆசிரியர் பணியிடங்கள் பணி நிரவல் மூலம் நிரப்பப்படும். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

4. கடந்த மூன்று ஆண்டுகளில் 300 அரசு, மாநகராட்சி மற்றும் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டன. நிலை உயர்த்தப்படும் மேல்நிலைப்

பள்ளிகளுக்கு ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் ஆகிய 5 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையை மாற்றி, கூடுதலாக தமிழ், வரலாறு, பொருளாதாரம் மற்றும் வணிகவியல் ஆகிய பாடங்களுக்கும் சேர்த்து 9 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு உள்ளன. இதன் தொடர்ச்சியாக, நடப்புக் கல்வியாண்டில் 100 அரசு, மாநகராட்சி மற்றும் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு நிலை உயர்த்தப்படும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு பள்ளி ஒன்றுக்கு ஒரு தலைமை ஆசிரியர் பணியிடம் வீதம் 100 தலைமை ஆசிரியர் பணியிடங்கள், ஒன்பது முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 900 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் என மொத்தம் 1000 பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும் என்பதையும் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென ஆண்டொன்றுக்கு 31 கோடியே 82 இலட்சம் ரூபாய் அரசுக்கு செலவு ஏற்படும்.

5. வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்து விட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ, வருவாய் இன்மை காரணமாக பள்ளியில் கல்வி கற்கும் அவர்களது குழந்தைகள் கல்வியைத் தொடர்ந்து கற்க இயலாத நிலை ஏற்படும் சமயத்தில், அவர்களது குழந்தைகள் தங்களது கல்வியை தொடர்ந்து கற்கும் வகையில் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி கற்கும் மாணவ, மாணவியர், ஒவ்வொருவருக்கும் 50,000 ரூபாய் நிதி வழங்கும் திட்டம் என்னால் 2005 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் தொகை இனி 75,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நிதி அரசு நிதி நிறுவனங்களில் வைப்புத் தொகையாகச் செலுத்தப்பட்டு அதில் இருந்து

கிடைக்கின்ற வட்டித் தொகை மற்றும் அதன் முதிர்வுத் தொகை ஆகியவை அந்த மாணவ, மாணவியரின் கல்விச் செலவுக்காகவும் மற்றும் பராமரிப்புக்காகவும் பயன்படுத்தப்படும். இத்திட்டத்தினால் அரசுக்கு 2 கோடியே 70 இலட்சம் ரூபாய் கூடுதலாக செலவு ஏற்படும்.

6. அனைத்துப் பள்ளிகளிலும் 100 விழுக்காடு கழிவறை வசதி மற்றும் குடிநீர் வசதி இருக்க வேண்டும் என்பதற்காக கணக்கெடுப்பு பணி எனது தலைமையிலான அரசால் மேற்கொள்ளப்பட்டு, கழிவறை வசதிகள் இல்லாத 2,057 பள்ளிகளுக்குக் கழிவறை வசதிகள் உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. கழிவறைகளைக் கட்டிக் கொடுத்தால் மட்டும் போதாது. குழந்தைகளின் சுகாதாரம் கருதி அக்கழிவறைகளை சுத்தமாகப் பராமரிப்பதும் மிகவும் இன்றியமையாத பணி என்பதால், முதன் முறையாக, கழிவறைகளை பராமரிப்பதற்காக 160 கோடியே 77 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம், 56 இலட்சத்து 55 ஆயிரம் மாணவ, மாணவியர் பயனடைவார்கள்.

7. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குத் தரமான கட்டணமில்லாக் கல்வி வழங்குவதோடு, விலையில்லாப் பாடப் புத்தகம், நோட்டுப் புத்தகம், புத்தகப் பை, கணித உபகரணப் பெட்டி, வண்ணப் பென்சில்கள், கிரையான்கள், வரைபடப் புத்தகம், மடிக்கணினி, மிதிவண்டி, பேருந்துப் பயண அட்டை, சீருடை, காலணி, ஆகியவை விலையின்றி வழங்கப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் மாணவ, மாணவியரிடையே அழகாக எழுதும் பழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, 1 ஆம் வகுப்பு முதல் 7-ஆம் வகுப்பு வரை பயிலும் 45 இலட்சத்து 76 ஆயிரம் மாணவர்களுக்கு முதன் முறையாக கையெழுத்துப் பயிற்சி ஏடுகள் வழங்கவும், 1 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் 63 இலட்சத்து

18 ஆயிரம் மாணவ, மாணவியர்களுக்கு அவர்களது கலைத் திறன் மற்றும் கற்பனை வளத்தை ஊக்குவிக்கும் வகையில் ஓவியப் பயிற்சி ஏடுகள் வழங்கவும், 9 மற்றும் 10 ஆம் வகுப்பில் பயிலும் 10 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கு அறிவியல் பாடங்களுக்கான செயல்முறைப் பயிற்சி ஏடுகள் வழங்கவும் நான் ஆணையிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென அரசுக்கு 5 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

8. தொலைதூர மற்றும் மலைப் பகுதிகளில் வாழும் நலிவடைந்த வகுப்பினைச் சேர்ந்த குழந்தைகளுக்கும் கல்வி வழங்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கில், நடப்பாண்டில், 500 குழந்தைகள் பயன்பெறும் வகையில் 5 உண்டு உறைவிடப் பள்ளிகள் நீலகிரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பள்ளிகளுக்கு 5 முழு நேர ஆசிரியர்கள் மற்றும் 3 பகுதி நேர ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள். இதற்கென ஆண்டொன்றுக்கு 3 கோடியே 74 இலட்சம் ரூபாய் அரசுக்கு செலவு ஏற்படும்.

9. சமூக விழிப்புணர்வினை குழந்தைகளிடம் கொண்டு செல்லும் வகையில் பள்ளிக் கல்வித் துறையும், காவல் துறையும் இணைந்து பள்ளிகளில் போட்டிகள், விழிப்புணர்வுப் பேரணி, கிராமக் கல்வித் திருவிழா, ஊடகம் மற்றும் தொடர் குழு நடவடிக்கைகள் ஆகியவற்றை நடத்தி வருகின்றன. நடப்புக் கல்வி ஆண்டிலும் இத்திட்டம் 9 கோடியே 99 இலட்சம் ரூபாய் செலவில் - தொடரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10. குழந்தைகளுக்குத் தரமான கல்வி வழங்குவதோடு, கல்வி பயில்வதற்கேற்ற இனிய சூழல் தேவை என்பதைக் கருத்தில் கொண்டு தொடக்கக் கல்வித் துறையின் கீழ் இயங்கும், அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு 72 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில், 1,175 கூடுதல்

வகுப்பறைகளும், பெண் குழந்தைகளுக்கென தனியே 270 கழிப்பறைகளும் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

11. 2013–2014 ஆம் ஆண்டு 46,737 பள்ளி செல்லாக் குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் 24,638 குழந்தைகளுக்கு சிறப்புப் பயிற்சி தேவைப்படுகிறது என்பதைக் கண்டறிந்து, அதன் அடிப்படையில், 22 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் 9,641 குழந்தைகளுக்கு உறைவிட வசதியுடன் கூடிய சிறப்புப் பயிற்சியும், 14,997 குழந்தைகளுக்கு உறைவிட வசதியின்றி சிறப்புப் பயிற்சியும் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

12. சிறப்புக் கவனம் தேவைப்படும் 1,26,641 குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்ற உள்ளடக்கிய கல்வியின் தொடர்ச்சியாக, 31 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவில் சிறப்புப் பயிற்சிகள், உதவும் உபகரணங்கள், அதாவது Assistive Devices ஆகியவை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

13. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு பள்ளி வேலை நாட்கள், தேர்வுகள் போன்றவற்றை மாணவர்களும், பெற்றோர்களும் அறிந்து கொள்ளவும், ஆசிரியர்கள் வழங்கும் முக்கிய குறிப்புகளை குறித்து வைத்துக் கொள்ளவும் முதன் முறையாக பள்ளி நாட்காட்டியுடன் இணைந்த குறிப்பேடு, அதாவது School Diary with Calendar 3 கோடி ரூபாய் செலவில் நடப்புக் கல்வி ஆண்டு முதல் வழங்கப்படும்.

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள், கல்லாதோர் இல்லாத மாநிலம் தமிழகம் என்ற இலக்கை அடைய வழி வகுக்கும்.

❋ ❋ ❋

உடல் நலமும் மனநலமும் உறுதி செய்யும் விளையாட்டை மேம்படுத்தும் சிறப்பான திட்டங்கள்!

30.07.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விளையாட்டு என்பது பொழுதுபோக்கிற்காக மட்டுமல்லாமல், உடல் நலம், மன நலம் பேணுவதாகவும், வாழ்க்கைக்கு பயிற்சி அளிக்கும் களமாகவும் விளங்குகிறது. இப்படிப்பட்ட இன்றியமையாத் தன்மை வாய்ந்த விளையாட்டினை மேம்படுத்தும் வகையில் கடந்த மூன்றாண்டுகளில் எண்ணற்ற திட்டங்கள் எனது தலைமையிலான அரசால் தீட்டப்பட்டு, செயல்படுத்தப்படுகின்றன.

மனதிற்கு மகிழ்ச்சி தரும் விளையாட்டுகளை ஊக்குவிக்கும் வகையில், கீழ்க்காணும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

1. வேலூர் மற்றும் திருப்பூர் தவிர ஏனைய மாவட்ட தலைமையிடங்களில் மாவட்ட விளையாட்டு வளாகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில், பெரும்பான்மையான விளையாட்டு வளாகங்கள் 15–20 ஆண்டுகள் பழைமையானவை. சேலம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விளையாட்டு வளாகங்களில் முக்கியப்புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள ஒவ்வொரு வளாகத்திற்கும் ஒரு கோடி ரூபாய் வீதம் 4 கோடி ரூபாய்; மற்றும் பிற மாவட்டங்களில் உள்ள விளையாட்டு வளாகங்களில் அவசரப் பழுதுகள் சரிபார்த்தல் மற்றும் பராமரிப்புப் பணிகளுக்காக 1 கோடி ரூபாய் என மொத்தம் 5 கோடி ரூபாய் ஒரு முறை சிறப்பு மானியமாக ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, தற்போது திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி, காஞ்சிபுரம் மற்றும்

திண்டுக்கல்லில் உள்ள மாவட்ட விளையாட்டு வளாகங்களில் முக்கிய புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள தலா 80 இலட்சம் ரூபாய் மற்றும் பிற மாவட்ட வளாகங்களில் அவசர பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள 80 இலட்சம் ரூபாய் என மொத்தம் 4 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. தற்போது 23 மாவட்டங்களில் 25 நீச்சல் குளங்கள் இயங்கி வருகின்றன. பெரும்பான்மையான நீச்சல் குளங்கள் 15–லிருந்து 20 ஆண்டுகள் வரை பழைமையானவை. தண்ணீரை சரி சமமாக பராமரித்தல் மற்றும் ஆரோக்கியமான சுற்றுச்சூழலைப் பேணுதல் ஆகியவை நீச்சல் குளங்களை பராமரித்தலின் மிக முக்கிய அம்சங்கள் ஆகும். பெரும்பான்மையான இடங்களில் நீரை சுத்தப்படுத்தும் நீர் வடிப்பான்கள் நிறைவான அளவிற்கு செயல்படுவதில்லை. பயன்பாடு மற்றும் தேய்மானம் காரணமாக, குளங்களிலுள்ள தரைத் தளம் மற்றும் சுற்றுச் சுவர் உடைந்துள்ளன. எனவே இந்த நீச்சல் குளங்கள் 3 கோடி ரூபாய் செலவில் புனரமைப்பு செய்து, புதுப்பித்து பராமரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. நீச்சல் குளத்திலுள்ள நீருக்கு ஓசோன் சுத்திகரிப்பு செய்யப்பட்டால் நீரின் தரம் அதிகமாக உயர்த்தப்படுவதுடன், அதற்காக ஆகும் செலவுகளையும் காலப் போக்கில் மிச்சப்படுத்தலாம் என்பதன் அடிப்படையில், வேளச்சேரி நீச்சல் குள வளாகம், சென்னை நகர், மதுரை, திருச்சி மற்றும் தஞ்சாவூரில் உள்ள நீச்சல் குளங்களில் நிறுவப்பட்டுள்ள வடிகட்டும் நிலையங்களை மாற்றி தலா 15 இலட்சம் ரூபாய் வீதம் 75 இலட்சம் ரூபாய் செலவில் ஓசோன் சுத்திகரிப்புடன் கூடிய புதிய வடிகட்டும் நிலையங்கள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. சமுதாய வளர்ச்சிக்குச் சேவையாற்றும் இளைஞர்களது பணியை அங்கீகரிக்கும் பொருட்டு, முதலமைச்சர் மாநில இளைஞர் விருது என்ற புதிய விருது உருவாக்கப்படும்.

15 முதல் 35 வயது வரை உள்ள 3 ஆண்கள் மற்றும் 3 பெண்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று இவ்விருது வழங்கப்படும். இந்த முதலமைச்சர் மாநில இளைஞர் விருது, 50,000/– ரூபாய் ரொக்கம், பாராட்டுப் பத்திரம் மற்றும் பதக்கத்தை உள்ளடக்கியதாக இருக்கும்.

5. 2005 ஆம் ஆண்டு எனது ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட விளையாட்டு மற்றும் உடற் கல்விக்கான தனிப் பல்கலைக்கழகம் சென்னைக்கு அருகில் உள்ள மேலக்கோட்டையூரில் 125 ஏக்கர் பரப்பிலான பரந்த வளாகத்தில் இயங்கி வருகிறது. இந்தப் பல்கலைக்கழகத்தில், மாணாக்கர் மற்றும் ஆராய்ச்சி அறிஞர்களின் பயன்பாட்டிற்காக உலகத் தரம் வாய்ந்த வசதிகளை அளிக்கும் வகையில், 18 கோடியே 3 இலட்சம் ரூபாய் செலவில் நூலக அறை, ஆய்வுக் கூடம், கூட்டரங்கம் மற்றும் பல்நோக்கு உள் விளையாட்டரங்கம் ஆகியவை அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது மட்டுமல்லாமல், பரந்து விரிந்த இந்தப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள நிருவாகக் கட்டடம், விடுதிகள், பணியாளர் குடியிருப்புகள், விளையாட்டு மைதானங்கள் ஆகிய இடங்களுக்கு மாணாக்கரும், பணியாளர்களும் சென்று வர வசதியாக 2 கிலோ மீட்டர் இணைப்புச் சாலை அமைத்துத் தரப்படும்.

6. இவை எல்லாவற்றிற்கும் மேலாக, சமூக மாற்றத்திற்கான முக்கிய காரணியாகவும், சமுதாயத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியின் பின்னணியில் இருப்பவர்களாகவும் விளங்கிக் கொண்டிருக்கின்ற இளைஞர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, இளைஞர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு ஒருமித்த அணுகுமுறையை வழங்கும் வகையிலும், தேசிய வளர்ச்சியில் அவர்கள் முழுமையாகப் பங்காற்றும் வகையிலும், மாநிலத்திற்கென ஓர் இளைஞர் கொள்கை வகுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம், இளைய சமுதாயத்தினரின் உடல் நலமும், மன நலமும் மேலும் உறுதி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

போக்குவரத்து சேவை மேம்பாடு காண புதிய திட்டங்கள்!

31.07.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக விளங்கும் போக்குவரத்து சேவையினையும், போக்குவரத்து சேவையினை செவ்வனே புரிந்து வரும் போக்குவரத்துத் தொழிலாளர்களின் மேம்பாட்டினையும் உயர்த்தும் உன்னதமான திட்டங்களை எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

தமிழகத்திலுள்ள அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் திறமையான மற்றும் தேவையான போக்குவரத்து வசதியினை பொது மக்களுக்கு வழங்குவதில் முக்கியமான பங்கினை வகிக்கின்றன. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், செயல் திறன் மற்றும் நிருவாக மேலாண்மையில் பல்வேறு சாதனைகளை அகில இந்திய அளவில் படைத்துள்ளன. இப்போக்குவரத்துக் கழகங்கள் பொதுமக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் சாதாரண வகைப் பேருந்துகளுடன், விரைவுப் பேருந்துகள், தாழ்தள சொகுசுப் பேருந்துகள், சொகுசுப் பேருந்துகள், அதிசொகுசுப் பேருந்துகள், அதிநவீன சொகுசுப் பேருந்துகள் மற்றும் குளிர்சாதனப் பேருந்துகள் போன்ற பல்வேறு வகைப் பேருந்துகள் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலங்களில் நாளொன்றுக்கு 91.20 இலட்சம் கிலோ மீட்டர் தூரத்திற்கு பேருந்துகளை இயக்கி அதன் மூலம் இரண்டு கோடியே பத்து இலட்சம் பயணிகள் குறைந்த செலவில் நிறைவான பயணம் செய்திடும் வகையில், அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் திறம்பட செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களால் போக்குவரத்துக் கழகங்களின் சேவை மகத்தானதாக போற்றப்படுகிறது.

கடந்த மூன்று ஆண்டு காலத்தில், 1,476 புதிய வழித் தடங்கள் துவக்கி வைக்கப்பட்டதோடு, 4,649 புதிய பேருந்துகள், 712 புனரமைக்கப்பட்ட பேருந்துகள் மற்றும் 107 சிற்றுந்துகள் வாங்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. தமிழக போக்குவரத்துத் துறை வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு மாநிலம் முழுவதும் 20,684 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், தமிழக அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளை நவீனப்படுத்தும் வகையில், பல ஆண்டுகளுக்கு மேல் இயக்கப்படும் பழைய பேருந்துகளுக்கு பதிலாக புதிய பேருந்துகளை இயக்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக 2014 – 2015-ஆம் ஆண்டில், 253 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் 1,200 புதிய பேருந்துகள் வாங்கப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பின், மோட்டார் வாகன விபத்துகள் இழப்பீடு வழங்காமையால், நீதிமன்றங்களால் ஜப்தி செய்யப்பட்ட பேருந்துகளை மீட்பதற்காக 38 கோடியே 91 இலட்சம் ரூபாயினை அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு எனது தலைமையிலான அரசு வழங்கியுள்ளது. 23.07.2014 அன்று போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் நீதிமன்றங்களால் ஜப்தி செய்யப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி பேசினார்கள். இது குறித்து அரசு உயர் அதிகாரிகளிடம் விவாதித்ததில், விபத்துக்கான இழப்பீட்டுத் தொகையான 39 கோடியே 73 இலட்சம் ரூபாயினை அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் செலுத்தாததால் 544 அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகள் ஜப்தி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இந்த 544 அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை மீட்கும் வகையில், 39 கோடியே 73 இலட்சம் ரூபாயினை அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு வழிவகை முன்பணமாக எனது தலைமையிலான அரசு வழங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகர மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், போக்குவரத்து இணைப்பில்லா பகுதிகளிலிருந்து அருகிலுள்ள பேருந்து நிலையம், இரயில் நிலையம் மற்றும் விமான நிலையத்தை இணைக்கும் வகையில் 100 சிற்றுந்துகள் வாங்கப்பட்டு, மக்களின் பயன்பாட்டிற்காக இயக்கப்பட்டு வருகின்றன. இதற்கு சென்னை மாநகர மக்களிடையே ஏகோபித்த வரவேற்பு இருப்பதை கருத்தில் கொண்டும், பெருகி வரும் மக்கள் தொகையை கணக்கில் கொண்டும், மேலும் 100 புதிய சிற்றுந்துகள் 16 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்டு, சென்னை மாநகரில் உள்ள, பல்வேறு வழித் தடங்களில் இயக்கப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்ட தலைநகரங்களுக்கு இணையாக சில மாவட்டங்களின் இதர பகுதிகளில் மக்கள் தொகை, தொழில் வளர்ச்சி, வாகனங்களின் எண்ணிக்கை ஆகியவை அதிகரித்துள்ளன. இந்தப் பகுதிகளில் உள்ள மக்கள், ஓட்டுநர் உரிமம், நடத்துநர் உரிமம், புதிய வாகனம் பதிவு செய்தல் போன்ற பணிகளுக்காக வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு செல்ல 15 கிலோ மீட்டர் முதல் 40 கிலோ மீட்டர் வரை பயணம் செய்ய வேண்டி உள்ளது. இதனை களையும் வகையில், 2 கோடியே 79 இலட்சம் ரூபாய் செலவில், மண்மங்கலம், உசிலம்பட்டி, திருத்தணி மற்றும் செய்யார் ஆகிய பகுதிகளில் புதிய பகுதி அலுவலகங்கள் உருவாக்கப்படும் என்பதையும், சிதம்பரம் மற்றும் திருச்செந்தூர் ஆகிய இடங்களில் உள்ள பகுதி அலுவலகங்கள், 1 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாக தரம் உயர்த்தப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள், பொதுமக்கள் நெரிசலின்றி, குறித்த நேரத்தில் தாங்கள் செல்ல வேண்டிய இடங்களுக்கு சென்றடையவும், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு வெகு விரைவில் சென்று வரவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

மின் நிறுவுத் திறனை அதிகரிக்கும் புதிய மின் திட்டங்கள்!

31.07.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"எங்கும் மின்சாரம், எதிலும் மின்சாரம்" என்ற அளவுக்கு, வேளாண்மை, தொழில்கள், தொழிற்சாலைகள், இரயில் போக்குவரத்து, மருத்துவமனைகள், அலுவலகங்கள், இல்லங்கள் என அனைத்தும் மின்சாரமயமாகி இருக்கின்ற சூழ்நிலையில், தமிழ்நாட்டின் மின் நிறுவுத் திறனை கணிசமாக அதிகரித்துள்ளதோடு மட்டுமல்லாமல், எதிர்காலத் தேவையைக் கருத்தில் கொண்டு, மின் திட்டங்களைத் தீட்டி, அதற்கு செயல் வடிவம் கொடுக்கும் பணியில் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

2011–ஆம் ஆண்டு மே மாதம் மூன்றாவது முறையாக நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற போது, தமிழகத்தின் மின் தேவை 12,000 மெகாவாட்டாக இருந்தது. ஆனால், மின் உற்பத்தி மற்றும் கொள்முதல் மூலம் 8,000 மெகாவாட் மின்சாரம் மட்டுமே கிடைத்து வந்தது. அதாவது, 4,000 மெகாவாட் மின் பற்றாக்குறை நிலவியது. இந்தப் பற்றாக்குறையினை போக்கும் வகையில், ஆமை வேகத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த அனல் மின் திட்டங்கள் முடுக்கி விடப்பட்டன. இதன் காரணமாக கடந்த மூன்றாண்டுகளில் வல்லூர், மேட்டூர் மற்றும் வட சென்னையில் 5 அனல் மின் உற்பத்தி அலகுகள் கட்டி முடிக்கப்பட்டு 2,500 மெகாவாட் கூடுதல் மின் உற்பத்தித் திறன் நிறுவப்பட்டு, அவை வணிக ரீதியாக மின் உற்பத்தி செய்து வருகின்றன. மேலும், நடுத்தரக் கால கொள்முதல் அடிப்படையில் 500 மெகாவாட் மின்சாரம் ஜூன் 2013 முதல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இது தவிர, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் நீண்ட கால அடிப்படையில்,

2014–2015 ஆம் ஆண்டிலிருந்து 15 ஆண்டுகளுக்கு, 3,330 மெகாவாட் மின்சாரம் கொள்முதல் செய்ய தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களுடன் கொள்முதல் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. இந்த 3,330 மெகாவாட் மின்சாரத்தில், 224 மெகாவாட் மின்சாரம் தற்போது கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. வரும் ஆகஸ்ட் 2014 முதல் 1,000 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும். மீதமுள்ள மின்சாரம் வரும் 2015–2016 ஆம் ஆண்டிலிருந்து பெறப்படும்.

நான் எடுத்த பகீரத முயற்சிகளின் விளைவாக, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் 24.06.2014 அன்று 13,775 மெகாவாட் உயர் அளவு தேவையை நிறைவேற்றியுள்ளது. மேலும், 20.06.2014 அன்று 294 மில்லியன் யூனிட் மின்சாரம் வழங்கி சாதனை படைத்துள்ளது.

இது மட்டுமல்லாமல், தமிழகத்தில் மேலும் பல புதிய மின் திட்டங்கள் நடப்பு நிதியாண்டில் உற்பத்தியைத் தொடங்க இருக்கின்றன. தமிழ்நாடு மின் வாரியம் மற்றும் தேசிய அனல் மின் கழகத்தின் கூட்டு முயற்சியில் உருவாக்கப்பட்ட 500 மெகாவாட் திறன் கொண்ட வல்லூர் அனல் மின் திட்டத்தின் மூன்றாவது அலகு, வரும் ஆகஸ்ட் மாதம் வணிக ரீதியாக மின் உற்பத்தியைத் தொடங்கும். 500 மெகாவாட் திறன் கொண்ட தமிழ்நாடு மின் வாரியம் மற்றும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் கூட்டு முயற்சித் திட்டத்தின் முதல் அலகு, வரும் அக்டோபர் மாதத்திலும், 500 மெகாவாட் திறன் கொண்ட இரண்டாம் அலகு, 2015 மார்ச் மாதத்திலும் வணிக ரீதியாக மின் உற்பத்தியைத் துவங்க இருக்கின்றன. இத்திட்டத்திலிருந்து தமிழகத்திற்கு கிடைக்கும் பங்கு 387 மெகாவாட் ஆகும்.

கூடங்குளம் அணு மின் நிலையத்தின் முதல் அலகு, 1,000 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் திறனை 07.06.2014 அன்று எட்டியுள்ளது. இந்த அலகிலிருந்து தமிழகத்திற்கு கிடைக்கும் பங்கு 462 மெகாவாட் ஆகும். கூடங்குளம் அணுமின் நிலையத்திலிருந்து தமிழகத்திற்கு கூடுதல் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று நான்

பாரதப் பிரதமரைக் கேட்டுக் கொண்டதன் பலனாக, மத்திய அரசின் ஒதுக்கப்படாத அளவிலிருந்து தமிழகத்திற்கு 100 மெகாவாட் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆக, இந்த திட்டத்தில் தமிழகத்திற்கு 562 மெகாவாட் மின்சாரம் கிடைத்து வருகிறது. 1,000 மெகாவாட் திறன் கொண்ட கூடங்குளம் அணு மின் நிலையத்தின் இரண்டாம் அலகு இந்த ஆண்டு இறுதியில் மின் உற்பத்தியைத் தொடங்கும். இதில், தமிழகத்தின் பங்கு 463 மெகாவாட் ஆகும்.

மேலும், 2014–2015 ஆம் ஆண்டில் தலா 250 மெகாவாட் திறன் கொண்ட நெய்வேலி பழுப்பு நிலக்கரி விரிவாக்கத் திட்டம் நிலை–2இன் இரண்டு அலகுகள் மின் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் தமிழகத்திற்கு கிடைக்கும் பங்கு 230 மெகாவாட் ஆகும்.

நடப்பு நிதியாண்டில் உற்பத்தி தொடங்கவிருக்கின்ற புதிய மின் திட்டங்கள் மற்றும் நீண்ட கால அடிப்படையில் கொள்முதல் செய்யப்படும் மின்சாரம் மற்றும் ஜூன் முதல் செப்டம்பர் வரை அதிக அளவில் கிடைக்கும் காற்றாலை மின்சாரம் ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் உயர் மின் அழுத்தத் தொழிற்சாலைகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் அனைத்தையும் 01.06.2014 முதல் எனது தலைமையிலான அரசு நீக்கியுள்ளது. இதன் காரணமாக, தமிழகத்தில் அனைத்து நுகர்வோருக்கும் தடையற்ற மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

இவற்றின் தொடர்ச்சியாக, கீழ்க்காணும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. தமிழகத்தின் புனல் மின் நிலையங்கள், காலை மற்றும் மாலை நேரத்தில் உள்ள உச்ச மின் தேவையை நிறைவேற்ற துணை புரிகின்றன. இப்புனல் மின் நிலையங்கள் பல்லாண்டுகளுக்கு முன் கட்டப்பட்டவை என்பதால், அவற்றைப் புனரமைத்து நவீனப்படுத்துவது மிகவும்

அவசியம். இதனைக் கருத்தில் கொண்டு, புனல் மின் நிலையங்கள் படிப்படியாக புனரமைக்கப்பட்டு வருகின்றன. இதுவரை, மேட்டூர் மற்றும் பாபநாசம் புனல் மின் நிலையங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. பெரியார் புனல் மின் நிலையம் புனரமைக்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக, 1971ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 43 ஆண்டுகளாக இயங்கி வருகின்ற கோவை மாவட்டத்திலுள்ள சோலையார் புனல் மின் நிலையம்–1–இன் இரு அலகுகளையும் புதுமைப்படுத்தி நவீனமயமாக்கும் பணி மற்றும் இவ்வலகுகளின் நிறுவுதிறனை தலா 35 மெகாவாட்டிலிருந்து 42 மெகாவாட்டாக அதிகரிக்கும் பணி ஆகியவை 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. நுகர்வோருக்கு தடையற்ற தரமான மின்சாரம் வழங்கப்பட வேண்டுமென்றால், கூடுதல் மின் உற்பத்திக்கு ஏற்ப மின் தொடரமைப்பு மற்றும் பகிர்மானம் ஆகியவற்றின் கட்டமைப்புகளை வலுப்படுத்துவது மிகவும் அவசியம். மூன்றாவது முறையாக எனது தலைமையிலான அரசு ஆட்சிப்பொறுப்பேற்ற பிறகு, கடந்த மூன்று ஆண்டுகளில் 134 துணை மின் நிலையங்கள் நிறுவப்பட்டன. இதன் தொடர்ச்சியாக, நடப்பு நிதி ஆண்டில் 60 துணை மின் நிலையங்கள் மற்றும் 2,500 சுற்று கிலோ மீட்டர் உயர் அழுத்த மின் வழித்தடப் பாதைகள் 5,284 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த 60 துணை மின் நிலையங்களில், மூன்று 400 கிலோவோல்ட் துணை மின் நிலையங்கள், ஒன்பது 230 கிலோவோல்ட் துணை மின் நிலையங்கள், முப்பத்தியெட்டு 110 கிலோவோல்ட் துணை மின் நிலையங்கள், பத்து 33 கிலோவோல்ட் துணை மின் நிலையங்கள் அடங்கும்.

3. இது தவிர, சென்னை மாநகரின் மின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக மேலும் இரண்டு 230 கிலோவோல்ட் துணை மின் நிலையங்கள் 338 கோடியே 8 இலட்சம்

ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். இவற்றில், மேற்கு மாம்பலத்தில் 92 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு துணை மின் நிலையமும், போரூரில் 245 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு துணை மின் நிலையமும் அமைக்கப்படும்.

4. தமிழ்நாட்டில் அபரிமிதமாக கிடைக்கும் சூரிய மின் சக்தியை அதிக அளவில் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்குடன் சூரிய மின் சக்திக் கொள்கையை நான் 20.10.2012 அன்று வெளியிட்டேன். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு கடந்த மூன்று ஆண்டுகளில் 102 மெகாவாட் நிறுவுதிறன் கொண்ட 49 சூரிய மின் சக்தி உற்பத்தி நிலையங்கள் தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் தொடங்கப்பட்டு, சூரிய மின் சக்தி உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இது தவிர, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் 708 மெகாவாட் அளவிற்கு சூரிய மின் சக்தி உற்பத்தி செய்ய தொழில் முனைவோருக்கு இசைவுக் கடிதங்களை வழங்கியுள்ளது. மேலும், ஒவ்வொரு ஆண்டும் ஊரக வளர்ச்சித் துறை மூலம் கட்டப்படும் 60,000 பசுமை வீடுகளுக்கு சூரிய மின் சக்தி வசதி அளிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் 20,000 தெரு விளக்குகள் சூரிய மின் சக்தி வசதியுடன் பொருத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைமையகத்தில், மேற்கூரையில் அறுபது கிலோவாட் சூரிய மின் சக்தி உற்பத்தி நிலையத்தை 30.12.2013 அன்று நான் தொடங்கி வைத்தேன். வீட்டு மேற்கூரைகளில் சூரிய மின் சக்தி தயாரிக்கும் நிலையங்களை நிறுவுவதற்காக ஒரு கிலோவாட் சூரிய மின் சக்தி நிறுவுதிறனுக்காக 20,000 ரூபாய் மானியத்தை தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. இதுவரை 1,708 வீடுகளுக்கு மானியம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, மாநிலத்தின் தென் மாவட்டங்களில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள சூரிய மின் சக்தி மூலம் கிடைக்கும் மின்சாரத்தை மின் தொடரமைப்பில் சேர்ப்பதற்காக

இராமநாதபுரம் மாவட்டம் கமுதியில் 400 கிலோவோல்ட் துணை மின் நிலையம் 435 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், விருதுநகர் மாவட்டம் முத்துராமலிங்கபுரத்தில் 230 கிலோவோல்ட் துணை மின் நிலையம் 47 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் அமைக்கப்படும்.

5. மின் தொடரமைப்பை வலுப்படுத்துவது மட்டுமல்லாமல் மின் பகிர்மானக் கட்டமைப்பை செம்மைப்படுத்தினால் தான் நுகர்வோருக்கு சீரான மின்சாரம் கிடைக்கும். இதனைக் கருத்தில் கொண்டு, இந்த நிதியாண்டில் 28,000 மின் விநியோக மாற்றிகள் 660 கோடி ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்பட்டு நிறுவப்படும்.

6. எனது தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறகு, கடந்த மூன்று ஆண்டுகளில் 30 இலட்சம் புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டு உள்ளன. இதன் தொடர்ச்சியாக நடப்பு நிதியாண்டில் மேலும் 10 இலட்சம் மின் இணைப்புகள் வழங்கப்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் மக்கள் உயர்வுக்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

ஆதிதிராவிடர், பழங்குடியின மாணவ, மாணவியர் கல்வி வளர்ச்சி பெற்றிட எண்ணற்ற சலுகைகள்!

31.07.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சமூக ரீதியாக பின்தங்கியுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், சமூகப் பொருளாதார முன்னேற்றம் பெறுவதற்கு அடிப்படையாக விளங்குவது கல்வி என்பதால், அவர்கள் கல்வியில் வளர்ச்சி பெறுவதற்குத் தேவையான அனைத்து சலுகைகளையும், உகந்த சூழலையும் உருவாக்கும் வண்ணம் பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு தீட்டிச் செயல்படுத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும் மேம்படுத்தும் வகையில் கீழ்க்காணும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. 10 மற்றும் 12–ஆம் வகுப்பு முடித்த மாணவ மாணவியர்கள் தொழில்நுட்பக் கல்வி பயில ஏதுவாக, கடலூர் மாவட்டம், நந்தனார் ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி வளாகத்திலும், திருவள்ளூர் மாவட்டம், செவ்வாப்பேட்டை ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி வளாகத்திலும் இரு தொழில்நுட்பக் கல்லூரிகள் 24 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. 10–ஆம் வகுப்பு முடித்த மாணவ மாணவியர்கள் தொழிற் பயிற்சி பெற ஏதுவாக, திருவள்ளூர் மாவட்டம், செவ்வாப்பேட்டை ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் ஒரு தொழிற் பயிற்சி நிலையம்

10 கோடி ரூபாய் செலவில் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலப் பள்ளிகள் மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு, சரி விகித உணவுப் பட்டியலில் உள்ளபடி உணவு வழங்கப்பட்டு வருகிறது. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவிகள் உரிய நேரத்தில் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்குச் செல்லும் வகையிலும், ஒரே நேரத்தில் சூடான உணவு தயாரித்து பரிமாற வழிவகை செய்யும் வகையிலும், 150 மாணாக்கர்களுக்கு மேல் தங்கியுள்ள 200 விடுதிகளுக்கு 8 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் நீராவிக் கொதி கலன்கள் அதாவது Electric Steam Boilers வாங்கி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் உண்டி உறைவிடப் பள்ளிகளில், தங்கி பயிலும் மாணாக்கர்களுக்கு சூடாகவும், சுவையாகவும் இட்லி தயாரித்து வழங்கும் வகையில், 1 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவில் 1,577 நீராவி இட்லி குக்கர்கள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் பாய் மற்றும் போர்வை வழங்கப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணாக்கர்களுக்கும் 4 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவில் உறையுடன் கூடிய தலையணை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. மலைப் பகுதிகளில் உள்ள பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில்

பயிலும் மாணவ, மாணவியர் மழைக் காலங்களில் பள்ளிகளுக்கு நனையாமல் செல்ல ஏதுவாக அனைவருக்கும் 2 கோடி ரூபாய் செலவில் தலா ஒரு ரெயின் கோட்டும், குளிர் காலங்களில் மாணவ, மாணவியரின் உடல் நலத்தைப் பாதுகாக்கும் வகையில் அனைவருக்கும் 1 கோடியே 8 இலட்சம் ரூபாய் செலவில் தலா ஒரு கம்பளிச் சட்டையும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. தமிழ்நாட்டிலுள்ள கல்லூரிகளில் கல்வி பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருவதால் 2014–2015 ஆம் கல்வி ஆண்டில், பெரம்பலூர் மாவட்டத்தில் இரண்டு விடுதிகள், புதுக்கோட்டை, தஞ்சாவூர், மதுரை, வேலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் சென்னை ஆகிய எட்டு மாவட்டங்களில் தலா ஒன்று வீதம் 8 விடுதிகள் என மொத்தம் 10 கல்லூரி விடுதிகள் 2 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

8. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் அரசு பழங்குடியின உண்டி உறைவிடப் பள்ளிகளில், பயன்பாட்டில் உள்ள குழல் விளக்கு, மின் விசிறி மற்றும் தண்ணீர்க் குழாய் ஆகியவற்றினைப் பராமரிக்க ஒரு விடுதிக்கு ஆண்டொன்றுக்கு 15,000/– ரூபாய் வீதம் 1,647 விடுதிகளுக்கு 2 கோடியே 47 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

9. B.Ed., படித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள 906 பழங்குடியினப் பட்டதாரிகளுக்கு, அவர்கள் ஆசிரியர் தகுதித் தேர்வில் தகுதி பெற ஏதுவாக, 66 இலட்சம் ரூபாய் செலவில் மாநில கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் வாயிலாகவும், ஆசிரியர் பட்டயப் பயிற்சியில் தேர்ச்சி பெற்ற 500 ஆதிதிராவிடர் மற்றும்

பழங்குடியினர் மற்றும் B.Ed. பட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்ற 500 ஆதிதிராவிடர்களுக்கு ஆசிரியர் தகுதித் தேர்வில் தகுதி பெற வழிவகை செய்யும் வகையில்; 55 இலட்சம் ரூபாய் செலவில் தனியார் பயிற்சி நிறுவனங்கள் வாயிலாகவும் பயிற்சி அளிக்கப்படும்.

மேற்காணும் எனது தலைமையிலான அரசின் நடவடிக்கைகள், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர் கல்வியில் தேர்ச்சி பெற்று, அதன் மூலம் சமூக பொருளாதார ரீதியாக வளர்ச்சி பெற வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

பொதுமக்களுக்கும் விவசாயிகளுக்கும் குறைந்த விலையில் நிறைவான, தரமான சேவை!

01.08.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொது விநியோகத் திட்டத்தின் மூலம் தமிழக மக்களுக்கு உணவுப் பாதுகாப்பினை வழங்குவதிலும், நுகர்வோருக்குத் தேவையான பொருட்கள் சரியான அளவில், நியாயமான விலையில், தரமானதாகக் கிடைப்பதை உறுதி செய்வதிலும், நுகர்வோரின் குறைகளைக் களைவதற்கான அமைப்புகளை மேம்படுத்துவதிலும் முக்கியப் பங்கினை வகிக்கும் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையினை எனது தலைமையிலான அரசு செவ்வனே செயல்படுத்தி வருகிறது. இதன் காரணமாக, உணவுப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு உள்ளதோடு, விலைவாசி உயர்விலிருந்தும் தமிழக மக்கள் ஓரளவு பாதுகாக்கப்படுகின்றனர்.

மக்களின் அன்றாட வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்துள்ள உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையினை மேலும் மேம்படுத்தும் விதமாக, கீழ்க்காணும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. கூட்டுறவு நிறுவனங்கள் சார்பில் 114 பல்பொருள் அங்காடிகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் 23 அமுதம் பல்பொருள் அங்காடிகள் என மொத்தம் 137 அங்காடிகள் தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டு வருகின்றன. பல்பொருள் அங்காடிகள் விரிவுபடுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, 37 கோடியே 17 இலட்சம் ரூபாய் செலவில் 300 'அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகள்' தமிழகமெங்கும் துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்தமான அரிசி ஆலைகளிலிருந்து தவிடு உப பொருளாக கிடைக்கிறது. தற்போது இந்த தவிடு, ஒப்பந்தப் புள்ளி அடிப்படையில் தனியாருக்கு விற்கப்படுகிறது. தமிழ்நாட்டில் சமையல் எண்ணெய்த் தேவை அதிகரித்துள்ளதாலும், தவிட்டிலிருந்து எடுக்கப்படும் சமையல் எண்ணெய் பொது மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளதாலும், நவீன அரிசி ஆலையிலிருந்து உப பொருளாகக் கிடைக்கும் தவிட்டிலிருந்து சமையல் எண்ணெய் தயாரிக்க திருவாரூர் மாவட்டத்தில் 140 மெட்ரிக் டன் திறன் கொண்ட தவிட்டு எண்ணெய் ஆலை 16 கோடி ரூபாய் மதிப்பில் நிறுவப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தவிட்டு எண்ணெய் சமையல் பயன்பாட்டிற்கு மட்டுமல்லாமல், சோப்பு மற்றும் அழகு சாதனப் பொருட்கள் தயாரிக்க உப பொருளாகவும் பயன்படும். எண்ணெய் நீக்கப்பட்ட தவிடு கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படும்.

3. உணவுப் பாதுகாப்பின் அங்கங்களான சேமிப்பு, விற்பனை ஆகியவற்றில் முக்கிய பங்காற்றி வரும் சேமிப்புக் கிடங்குகளை அதிகரித்து உணவுதானியங்களை முறையாக சேமித்து வைக்கும் வகையில், கடந்த 3 ஆண்டுகளில் 552 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 5,53,950 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 116 சேமிப்புக் கிடங்குகள் அமைக்க ஆணையிடப்பட்டு, இதுவரை 81,450 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மீதமுள்ள 4.73 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்தமாக மேலும் கூடுதல் கிடங்குகள் அமைப்பதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு;84,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 39 புதிய கிடங்குகள் 112 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனால் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளின் கொள்ளளவு 8.36 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயரும்.

4. விவசாயிகளின் நலன் காக்கும் பொருட்டு, காவேரிப் பாசனப் பகுதிகளில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும், ஏனைய இடங்களில் கூட்டுறவு நிறுவனங்களும் விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்கின்றன. 2014–2015 ஆம் ஆண்டிற்கு காவேரிப் பாசனம் அல்லாத பகுதிகளில் நெல் கொள்முதல் செய்ய தேசியக் கூட்டுறவு நுகர்வோர் இணையத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் நெல் கொள்முதல் நிலையங்களில் போதுமான உள்கட்டமைப்பு வசதிகள் இல்லாததைக் கருத்தில் கொண்டு; சென்ற ஆண்டு சூரிய ஒளி வாங்கி வசதி, நெல் தூற்றும் இயந்திரம் மற்றும் உலர் கலன் ஆகிய உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய 100 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கட்ட அனுமதிக்கப்பட்டு, அதற்கான கட்டடங்களும் கட்டப்பட்டுள்ளன. இதே போன்று, நடப்பாண்டிலும், விவசாயிகளின் சிரமத்தைக் குறைக்கும் வகையில், விளைவிக்கும் இடங்களுக்கு அருகிலேயே 35 கோடி ரூபாய் மதிப்பில் 100 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவற்றில் 75 நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்கள் காவிரிப் பாசனப் பகுதிகளிலும், இதர 25 நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்கள் திருவண்ணாமலை, காஞ்சிபுரம், ஈரோடு மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலும் கட்டப்படும்.

5. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், இந்திய உணவுக் கழகம் ஆகியவை கொள்முதல் செய்யும் நெல், கோதுமை ஆகியவற்றைச் சேமித்து வைக்கும் நிறுவனமாகவும், சிறு, குறு விவசாயிகளிடமிருந்து உணவு தானிய வகைகளான அரிசி, நெல், வேர்க்கடலை, பருத்தி, பருப்பு வகைகள், கம்பு,

மக்காச் சோளம், கேழ்வரகு போன்ற விளை பொருட்களை விவசாயிகள் சேமித்து வைக்கும் நிறுவனமாகவும் தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் விளங்குகிறது. விவசாயிகள் மற்றும் வணிகர்கள், தங்களுடைய விவசாயப் பொருட்களை விஞ்ஞான ரீதியில் சேமித்து வைத்து தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு சரக்குக் கட்டணத்தில் 30 சதவிகிதம் தள்ளுபடி மற்றும் அனைத்து வங்கிகளிடமிருந்து 7 சதவிகித வட்டியில் விவசாயப் பொருட்களின் மதிப்பில் 75 சதவிகிதம் பொருள் இருப்பு மீதான கடனைப் பெறுவதை கிடங்குகள் மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையம் அங்கீகரித்துள்ளது. இதற்காக தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் 36 கிடங்குகள் முறையாக மதிப்பீடு செய்யப்பட்டு, தரச் சான்றிதழ் பெறப்பட்டு, மேற்படி கிடங்குகள் மூலம் மாற்றத் தக்க சேமிப்புக் கிடங்கு ரசீதுகள், அதாவது Negotiable Warehouse Receipts வழங்குவதை கிடங்குகள் மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையம் அங்கீகரித்துள்ளது. இதனால் விவசாயிகள் மற்றும் வணிகர்கள் இருப்பு வைக்கும் பொருட்களுக்கு அனைத்து வங்கிகளிலும் மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு ரசீதுகள் மூலம் கடன் வசதி பெற இயலும். மேற்படி மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு ரசீதுகளை பெறுவதற்கு, பொருட்களின் தரம், ஈரத் தன்மை, வகைப்பாடு ஆகியவற்றை விஞ்ஞான ரீதியில் பரிசோதனை செய்ய வேண்டியுள்ளது. எனவே ஸ்ரீரங்கம், திருச்சி, திருவாரூர், ஈரோடு, ஆரணி, வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய விஞ்ஞான ரீதியிலான பரிசோதனைக் கூடங்கள் 7 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும்.

6. தமிழக அரசு உணவுப் பாதுகாப்பை அளிப்பதுடன், உணவுப் பொருள்கள் தரமானதாக, உண்பதற்குத் தகுதியானதாக உள்ளதா என்பதை உறுதி செய்யவும், உடல் நலனுக்கு ஊறு விளைவிக்கும் கலப்படப் பொருட்கள் ஏதேனும் உள்ளதா என்பதைக் கண்டறியவும் தேவையான பயிற்சிகளை

அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு அளிக்க ஏதுவாக ஆய்வகம் மற்றும் பயிற்சி மையம் அமைக்க காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டத்தில் உள்ள 3.03 ஏக்கர் நிலம் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில், புரிந்துணர்வு ஒப்பந்தம் அடிப்படையில், Centre for Consumer Education Research, Teaching, Training and Testing நிறுவனம் ஓர் ஆய்வகத்தைக் கட்டுவதற்காகவும், பயிற்சி அளிப்பதற்காகவும் 10 கோடியே 31 இலட்சம் ரூபாய் செலவில் 14,750 சதுர அடி நிலப்பரப்பில், கட்டடம் கட்டுவதற்கான கருத்துரு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்ட பின், ஆய்வகம் மற்றும் பயிற்சி மையம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு தமிழக அரசின் பங்கீடாக 40 சதவிகிதத் தொகையான 4 கோடியே 12 இலட்சம் ரூபாய் அளிக்கப்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள், குறைந்த விலையில், நிறைவான மற்றும் தரமான சேவையினை பொதுமக்களும், விவசாயப் பெருங்குடி மக்களும் பெற வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

கூட்டுறவுப் பணியாளர் வாழ்வு சிறக்க கூட்டுறவு அமைப்புகளின் சேவைகள் எளிதாக மக்களுக்கு கிடைக்க இனிதான திட்டங்கள்

01.08.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தனி மனிதனுக்காகச் சமூகமும், சமூகத்திற்காகத் தனி மனிதனும்" என்ற கூட்டுறவுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் கூட்டுறவு இயக்கங்களை வலுப்படுத்துவதிலும், முன்னேற்றம் அடையச் செய்வதிலும் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

மக்கள் நலத் திட்டங்களை செவ்வனே செயல்படுத்தி வரும் கூட்டுறவு இயக்கங்களை மேலும் மேம்படுத்தும் வகையில் கீழ்க்காணும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. பொதுமக்கள் மற்றும் விவசாயிகளின் நலன்களுக்காக பணியாற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள், நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் மற்றும், கூட்டுறவு வேளாண் விற்பனைச் சங்கங்கள் ஆகியவை கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன. இந்தச் சங்கங்களில் பணியாற்றும் சுமார் 60,000 பணியாளர்கள், தங்களுக்கு இது நாள் வரை மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், அதாவது Health Insurance Scheme ஏதும் செயல்படுத்தப்படவில்லை எனவும், அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்போன்ற ஒன்றினை தங்களுக்கும் அளிக்க வேண்டும் எனவும் கோரிக்கை வைத்துள்ளனர். இவர்களின் கோரிக்கையினை ஏற்று, அரசு ஊழியர்களுக்காக தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் மருத்துவக்

காப்பீட்டுத் திட்டம், கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் 60,000 பணியாளர்களுக்கும் நீட்டிக்கப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்திற்கென ஆண்டுதோறும் செலுத்தப்பட வேண்டிய காப்பீட்டுக் கட்டணமான 12 கோடியே 54 இலட்சம் ரூபாயினை கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் சரி சமமாக ஏற்றுக் கொள்வார்கள்.

2. தமிழ்நாட்டில் கூட்டுறவுக் கடன் அமைப்பின் அடித்தளமாக 4,530 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. பயிர்க் கடன், நகைக் கடன், வைப்பு நிதி திரட்டுதல், பொது விநியோகத் திட்டப் பொருட்களை விநியோகம் செய்திடும் நியாய விலைக் கடைகளை திறம்பட நடத்துதல் உள்பட பல்வேறு இன்றியமையாப் பணிகளை செய்து வரும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை நவீனப்படுத்திட வேண்டியது அவசியமாகிறது. பிற வங்கிகளில் உள்ளது போல், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் முகப்புத் தோற்றத்தை பொலிவூட்டுதல், நவீன வங்கிக் கூடங்கள் அமைத்தல், வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பு பெட்டக வசதி ஏற்படுத்துதல், வாடிக்கையாளர்களுக்கு குளிர்சாதன வசதி ஏற்படுத்துதல் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி அதன் மூலம் பொது மக்களிடமிருந்து அதிக அளவில் வைப்பு நிதியினை திரட்டும் வகையில் 100 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் 2014–15 ஆம் ஆண்டில் 6 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் நவீனமயம் ஆக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. தமிழ்நாட்டில் 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் 783 கிளைகளுடன் குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பின் முக்கிய அங்கமாக செயல்பட்டு வருகின்றன. இந்த வங்கிகள் பொது மக்களிடமிருந்து வைப்பு நிதியினை

திரட்டி, அதன் மூலமாக இணைப்புச் சங்கங்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றன. வாடிக்கையாளர்களின் அடித்தளத்தை அதிகரிக்க, இந்த வங்கிகளுக்கு நவீன வசதிகள் கொண்ட சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டியது அவசியமாகும். பாதுகாப்புப் பெட்டக வசதி, பாதுகாப்புக் கதவுகளுடன் கூடிய பாதுகாப்பு அறை, நவீன வங்கிக் கூடங்கள், சிறந்த உட்கட்டமைப்பு வசதி, பொலிவுடன் கூடிய வெளிப்புறத் தோற்றம், குளிர்சாதன வசதி, இருக்கை வசதி ஆகியவற்றை உள்ளடக்கிய சொந்தக் கட்டடங்கள் ஏற்கெனவே 14 மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் 25 கிளைகளுக்கு 6 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு, அவற்றிற்கு பொதுமக்கள் மற்றும் வாடிக்கையாளர்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, சொந்த அடிமனைகள் கொண்டுள்ள மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் 18 கிளைகளுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய சொந்தக் கட்டடங்கள் 12 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

4. தமிழ்நாட்டில் கூட்டுறவுக் கடன் அமைப்பில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, 46 கிளைகளுடனும், 23 மத்தியக் கூட்டுறவு வங்கிகள், 783 கிளைகளுடனும் மற்றும் 120 நகரக் கூட்டுறவு வங்கிகள் 183 கிளைகளுடனும் பொது மக்களுக்கு பல்வேறு வங்கிச் சேவைகளை வழங்கி வருகின்றன. தமிழகத்தில் அனைத்து மத்தியக் கூட்டுறவு வங்கிகளும், இந்திய ரிசர்வ் வங்கியின் உரிமம் பெற்று மைய வங்கியியல் தீர்வு முறையிலான வங்கியியல் சேவையினை, அதாவது, CORE Banking Services-ஐ அளித்து வருகின்றன. 2011–2012 ஆம் ஆண்டில் மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 25 புதிய கிளைகள் துவக்கப்பட்டன. இதற்கு பொது மக்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்துள்ளதாலும், கூட்டுறவு வங்கிகளில் சேவைக் கட்டணம் மற்ற வங்கிகளை

ஒப்பிடும் போது குறைவாக உள்ள காரணத்தினாலும், வாடிக்கையாளர்களுக்கு பல்வேறு சேவைகளை வழங்கி வருவதன் காரணத்தினாலும், புதிய கிளைகளைத் துவக்கிட வேண்டும் என்ற கோரிக்கை பொது மக்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது. பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று, அனைத்துப் பகுதி மக்களுக்கும் கூட்டுறவு வங்கிகளின் சேவையை விரிவாக்கம் செய்திட ஏதுவாக, 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 19 மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கிளைகள், 2 நகரக் கூட்டுறவு வங்கிகளின் கிளைகள் என மொத்தம் 21 புதிய கிளைகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி தற்போது முழுவதுமாக கணினிமயம் ஆக்கப்பட்டு, பல்வேறு சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகிறது. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, இணைய தள வங்கிச் சேவையை, அதாவது Net Banking Facility-ஐ 02.08.2012 முதல் தனது வாடிக்கையாளர்களுக்கும், கூட்டுறவு நிறுவனங்களுக்கும் வழங்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாக, இணைய தள வங்கிச் சேவையினை பெற்று வரும் வாடிக்கையாளர்களுக்கு இணைய தளம் மூலம் சென்னை மாநகராட்சி, ஆயுள் காப்பீட்டுக் கழகம் போன்ற 300க்கும் மேற்பட்ட நிறுவனங்களுக்கு பணம் செலுத்தும் வசதியினை 23.01.2013 முதல் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது. மேலும் இணைய தள வங்கிச் சேவையினை பயன்படுத்தி, வாடிக்கையாளர்கள், தாங்களாகவே வைப்புக் கணக்கினை துவக்கும் வசதியினையும், அதாவது Online Deposit Opening Facility-ஐயும் அளித்து வருகிறது. வணிக வங்கிகளுக்கு இணையாக, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியால் அளிக்கப்படும் இவ்வகையான சேவைகளால் வங்கி வாடிக்கையாளர்கள் பெருமளவில் பயனடைந்து வருகின்றனர். இதனைத் தொடர்ந்து, வாடிக்கையாளர்கள் தங்கள் கைபேசி மூலமாக வங்கிப்

பணிகளைச் சிரமமின்றி மேற்கொள்ள ஏதுவாக 1 கோடி ரூபாய் செலவில் கைபேசி வங்கியியல் சேவை, அதாவது Mobile Banking Facility தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியில் அறிமுகப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்காக, 1977 ஆம் ஆண்டு, பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் துவங்கப்பட்டன. இச்சங்கங்கள் மலைவாழ் மக்களுக்கு கடன் வழங்குதல், இடு பொருட்கள் வழங்குதல், விவசாய விளைப் பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் பொது விநியோகத் திட்டம் போன்ற பல்வேறு சேவைகளை வழங்கி வருகின்றன. தமிழ்நாட்டிலுள்ள 19 பெரும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் தற்போது 96,332 பழங்குடியினரும், 17,477 பழங்குடியினர் அல்லாதோரும் உறுப்பினர்களாக உள்ளனர். பெரும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் மலைவாழ் பழங்குடியின மக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களான தேன், சாமை, வரகு, மற்றும் புளி ஆகியவற்றைக் கொள்முதல் செய்து அவற்றிற்குப் பொதுவான வணிக முத்திரையிட்டு, அவர்களின் வருமானத்தை, அதிகரிக்கச் செய்யும் வகையில் விற்பனை செய்யும் திட்டம் 2013–2014 ஆம் ஆண்டு முதல் துவக்கப்பட்டு, இத்திட்டத்தில், 30.06.2014 வரை 21 இலட்சத்து 70 ஆயிரத்து 169 ரூபாய் மதிப்பிலான தேன், சாமை, புளி மற்றும் வரகு பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. நீலகிரி மாவட்டத்தில் உள்ள மசினகுடி மலைவாழ் மக்கள் பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பந்தலூர் வட்டத்தில் இருந்து 70 கிலோ மீட்டர் தொலைவில் இருப்பதாலும், கோத்தகிரி வட்டம் 100 கிலோ மீட்டர் தொலைவில் இருப்பதாலும், பந்தலூர் வட்டத்தில் உள்ள எருமாடு மற்றும் நெலாக்கோட்டை ஊராட்சிகளுக்கு உட்பட்ட சுமார் 3,032 தொல் பழங்குடியின குடும்பங்களும், கோத்தகிரி வட்டத்திலுள்ள 65 கிராமங்களுக்கு உட்பட்ட சுமார் 6,272 பழங்குடியின குடும்பங்களும், சங்கத்தின்

சேவையைப் பெற முடியவில்லை. இதே போன்று தருமபுரி மாவட்டத்தில், சித்தேரியை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் சித்தேரி மலைவாழ் மக்கள் பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் செயல் எல்லையில், பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்தைச் சார்ந்த 5 வருவாய் கிராமங்களும், 37 குக்கிராமங்களும், அரூர் வட்டத்தைச் சார்ந்த 15 வருவாய் கிராமங்களும், 19 குக்கிராமங்களும் உள்ளன. இங்குள்ள 2,341 மலைவாழ் குடும்பங்கள் சித்தேரி செல்ல 75 கிலோ மீட்டர் தூரம் பயணிக்க வேண்டி இருக்கிறது.

பழங்குடியின மக்களுக்குத் தேவையான இடுபொருட்கள் மற்றும் இதர சேவைகள் அவர்களின் கிராமங்களுக்கு அருகிலேயே கிடைத்திடும் வகையில், நீலகிரி மாவட்டத்தில் பந்தலூர் வட்ட தொல்பழங்குடியினர் பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கோத்தகிரி வட்ட மலைவாழ் பழங்குடியினர் பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்; மற்றும் தருமபுரி மாவட்டத்தில், சிட்டிலிங்கி மலைவாழ் மக்கள் பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகிய புதிய 3 மலைவாழ் பழங்குடியினர் பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள், கூட்டுறவு அமைப்புகளின் சேவைகள் எளிதில் மக்களுக்குக் கிடைக்கவும், கூட்டுறவுப் பணியாளர்களின் வாழ்வு மேம்பாடு அடையவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✶ ✶ ✶

உயர் கல்வி வளம் பெற, உயர்வான திட்டங்கள்

01.08.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாட்டை வளப்படுத்துவதிலும், மக்களை மேம்படுத்துவதிலும், அறிவு சார்ந்த சமுதாயத்தை உருவாக்குவதிலும் முக்கியப் பங்கு வகிப்பது உயர் கல்வி என்பதைக் கருத்திற் கொண்டு, உயர் கல்வியை அனைத்துத் தரப்பினரும் கற்பதற்குத் தேவையான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

உயர் கல்வி பயிலுவதை மேலும் ஊக்குவிக்கும் வகையில், கீழ்க்காணும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1) 665 கல்வியியல் கல்லூரிகளின் இணைப்புடன், ஆராய்ச்சிப் பட்டப் படிப்பினையும் நடத்திக் கொண்டிருக்கும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், தற்காலிகமாக காமராஜர் சாலையில் அமைந்துள்ள லேடி வில்லிங்டன் கல்லூரி வளாகத்தில் மிகுந்த இட நெருக்கடிக்கிடையே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த இட நெருக்கடியைக் களையும் பொருட்டு, தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்திற்கு காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூரில் உள்ள காரப்பாக்கம் கிராமத்தில் 10 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இங்கு பல்கலைக்கழகத்திற்கான கல்வியியல் வளாகமும் நிர்வாக வளாகமும் 95 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2) தமிழ்நாட்டிலுள்ள மாணவ, மாணவியர் குறிப்பாக கிராமப்புற பகுதியைச் சார்ந்த, சமூகப் பொருளாதார நிலைகளில் பின்தங்கிய மாணவ, மாணவியர் உயர் கல்வியை பெறும் வகையில், கடந்த மூன்றாண்டுகளில் பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்; அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் என 37 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து, மயிலாடுதுறை மற்றும் சீர்காழி சட்டமன்ற தொகுதி மக்களின் கோரிக்கைக்கிணங்க, மயிலாடுதுறையில் 'மணல்மேடு' என்னுமிடத்தில் புதியதாக இரு பாலர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி நடப்பாண்டு முதல் துவங்கப்படும்.

3) தமிழகத்தை தொழிற் கல்வியில் முதன்மை மாநிலமாக திகழச் செய்ய வேண்டும் என்ற இலட்சியத்துடன் செயல்பட்டு வரும் எனது தலைமையிலான அரசு, இந்தியாவில் உள்ள முன்னணி தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் ஒன்றாகத் திகழும் சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தின் மண்டல மையங்கள் மற்றும் உறுப்புப் பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்குச் சிறந்த உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த 150 கோடி ரூபாய் நிதியை அளித்து, அதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவ, மாணவியருக்கான வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட வேண்டும் என்பதைக் கருத்திற் கொண்டு, சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தின் முதன்மை வளாகத்தில் பயிலும் இளநிலை மாணவ, மாணவியர்களுக்கென புதிய மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகள்; குரோம்பேட்டை, Madras Institute of Technology-க்கு என நிருவாகக் கட்டடம் மற்றும் அங்கு பயிலும் இளநிலை மாணவியர்களின் வசதிக்கென புதிய விடுதிக் கட்டடங்கள் ஆகியவை 30 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4) கல்லூரிகளை துவக்குவதோடு மட்டுமல்லாமல், மாணவ, மாணவியருக்கு தரமான கல்வியினை அளிக்க, தகுதியான ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில், அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் காலியாக உள்ள 1,623 பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக நிரப்புவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இதே போன்று, 2013–2014 ஆம் கல்வியாண்டில் பதவி உயர்வு, பணி ஓய்வு ஆகியவற்றால் ஏற்பட்ட காலிப் பணியிடங்கள் மற்றும் புதிய பாடப் பிரிவுகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் சேர்த்து மொத்தமாக, 1,112 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக நிரப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5) திருச்சி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகக் கட்டுப்பாட்டின் கீழ் 10 மாவட்டங்களில் உள்ள கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. அதே போல், கோயம்புத்தூர் மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகக் கட்டுப்பாட்டின் கீழ் 8 மாவட்டங்களில் உள்ள கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த இரண்டு மண்டல அலுவலகங்களில் அதிக மாவட்டங்கள் இடம் பெற்றுள்ளதால், நிருவாக வசதிக்காக திருச்சி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகத்தை இரண்டாக பிரித்து, தஞ்சாவூர், திருவாரூர், அரியலூர், நாகப்பட்டினம் ஆகிய நான்கு மாவட்டங்களை உள்ளடக்கி தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரு மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகம் உருவாக்கப்படும். இவ்வலுவலகம் மன்னர் சரபோஜி அரசுக் கலை கல்லூரி வளாகத்தில் செயல்படும். மேலும் கோயம்புத்தூர் மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகத்தை இரண்டாகப் பிரித்து, சேலம், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களை உள்ளடக்கி தருமபுரியில் ஒரு

மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகம் உருவாக்கப்படும். இவ்வலுவலகம் அரசுக் கலை கல்லூரி வளாகத்தில் செயல்படும். இதன் தொடர்ச்சியாக, வேலூர் மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகக் கட்டுப்பாட்டின் கீழ் விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்கள் சேர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான தொடர் மற்றும் தொடராச் செலவினம் 3 கோடியே 22 இலட்சம் ரூபாய் ஆகும்.

6) இந்தியாவின் அறிவுத் தலைநகரமாகவும், புதுமைத் தளமாகவும் தமிழகத்தை மாற்றுவது தான் எனது அரசின் குறிக்கோளாகும். தற்போதுள்ள எண்ணியல் தொழில்நுட்ப யுகத்தில், உயர் கல்வித் துறையின் 13 பல்கலைக்கழகங்களில், நூலகம் சார்ந்த தகவல்கள், ஆராய்ச்சி மற்றும் பாடப் பொருள்களை இணைய தளம் மூலம் இணைத்து அண்ணா பல்கலைக்கழகத்திலும், தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைக்கழகத்திலும் மின் தொடர்பு நூலகக் களஞ்சியங்களை இணைய தள வசதியுடன் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மின்–நூல்கள், மின்–இதழ்கள், ஒளிப் படங்கள் மற்றும் அனைத்து பல்கலைக்கழகங்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஆகியவற்றை, மாணவ மாணவியர் மற்றும் ஆசிரியர்கள் பதிவிறக்கம் செய்து எளிதில் பெற இத்திட்டம் வழிவகை செய்யும். அனைத்து பல்கலைக்கழகங்களும், அவற்றில் இணைவு பெற்ற கல்லூரிகளும், இந்தக் களஞ்சியத்துடன் இணைக்கப்படும். உலகளாவிய அறிவு வளங்களை எளிதில் பரிமாறிக் கொள்ள வகை செய்யும் இத்திட்டம் 1 கோடியே 86 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

7) தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாணவ மாணவியருக்கும் தரமான கல்வியை அளிப்பதோடு மட்டுமல்லாமல், அவர்கள் சிறப்பான சூழ்நிலையில் கல்வி கற்க வேண்டும் என்ற நோக்கில் 93 அரசு / பல்கலைக் கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உள் கட்டமைப்பு

வசதிகளை மேம்படுத்துவதற்கு 100 கோடி ரூபாயை அரசு வழங்கியுள்ளது. தற்போது திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகங்கள் தனியார் கட்டடங்களில் அதிக வாடகை செலுத்தி செயல்பட்டு வருகின்றன. இதனைத் தவிர்க்கும் பொருட்டும் பணியாளர்கள் அனைத்து அடிப்படை வசதிகளுடன் நல்லதொரு சூழ்நிலையில் பணி புரிவதற்கென இம்மூன்று அலுவலகங்களுக்கும் மொத்தமாக 24,300 சதுர அடி பரப்பளவில் 4 கோடியே 59 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும்.

8) தமிழ்நாட்டின் மொத்த சேர்க்கை விகிதத்தினை, அதாவது Gross Enrolment Ratio-வை உயர்த்தும் பொருட்டும், கிராமப்புறம் மற்றும் பொருளாதாரத்தில் நலிவுற்ற மாணவ, மாணவியர் உயர் கல்வி பெறும் பொருட்டும், கடந்த மூன்று ஆண்டுகளில் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 797 புதிய பாடப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இப்பாடப் பிரிவுகளில் 10,204 மாணவ மாணவியர்கள் சேர்ந்து பயனடைந்துள்ளனர். இதன் காரணமாகவும், மொத்த சேர்க்கை விகிதம் 38.2 ஆக உயர்ந்துள்ளது. இதே போன்று 2014–2015 ஆம் கல்வியாண்டில், அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 26 இளங்கலை பாடப் பிரிவுகள், 23 முதுகலை பாடப் பிரிவுகள், 62 M.Phil பாடப் பிரிவுகள் மற்றும் 52 Ph.D. பாடப் பிரிவுகள் என மொத்தம் 163 பாடப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்காணும் நடவடிக்கைகள் மூலம், உயர் கல்வி வளம் அடைவதோடு தமிழ்நாடும் வளர்ச்சி அடையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

மீனவர்களின் வாழ்வாதாரத்தையும், மீன் உற்பத்தியையும் மேம்படுத்தும் சிறப்புத் திட்டங்கள்

04.08.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும், புரதச் சத்துள்ள உணவை பொதுமக்களுக்கு அளிப்பதிலும், மீனவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதிலும், வருவாயைப் பெருக்குவதிலும் முக்கியப் பங்கு வகிக்கும் மீன்பிடித் தொழிலைப் பெருக்கும் வகையில், புதிய மீன் பிடித் துறைமுகங்கள் அமைத்தல், மீன் இறங்கு தளங்கள் அமைத்தல், கடலோர நகரங்களில் மீன் பதனிடும் பூங்காக்கள் அமைத்தல், உள்நாட்டு மீன் வளத்தை அதிகரித்தல், மீன் விற்பனையை ஊக்குவித்தல் மற்றும் சந்தையை நவீனப்படுத்துதல் ஆகியவற்றை மேம்படுத்துவதிலும், மீனவர் நலத் திட்டங்களை, செயல்படுத்துவதிலும் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

மீனவர்களின் வாழ்வாதாரத்தையும், மீன் உற்பத்தியையும் மேலும் மேம்படுத்தும் வகையில், கீழ்க்காணும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. மத்திய மாநில அரசுகளின் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வரும், தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும், மீன்பிடிப்பு குறைந்த காலத்தில் கடல் மீனவர்களுக்கு 1,800/–ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகையில், மத்திய, மாநில அரசுகள் மற்றும் பயனாளிகளின் பங்குத் தொகை தலா 600/– ரூபாய் ஆகும். இத்திட்டத்திற்கான தனது பங்குத் தொகையை 600/– ரூபாயிலிருந்து 900/– ரூபாயாக மத்திய அரசு உயர்த்தியுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, மாநில அரசின் பங்குத் தொகையும் 600/– ரூபாயிலிருந்து 900/– ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய, மாநில அரசுகளின் பங்குத் தொகையுடன், பயனாளிகளின் பங்குத் தொகையான 900/– ரூபாயையும் சேர்த்து, கடல் மீனவர்களுக்கு மீன்பிடி குறைவு கால நிவாரணமாக 2,700/–ரூபாய் வழங்கப்படும். சுமார் 2 இலட்சத்து 10 ஆயிரம் கடல் மீனவர்கள் பயனடையும் இத்திட்டத்திற்கு ஆண்டொன்றுக்கு 6 கோடியே 30 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

2. கடல் மீனவ மகளிருக்கு தமிழக அரசு 1,800/– ரூபாய் நிவாரணமாக வழங்கி வருகிறது. இதில் பயனாளி பங்குத் தொகை 600/– ரூபாய் மற்றும் மாநில அரசு பங்குத் தொகை 1,200/– ரூபாயாகும். கடல் மீனவர்களுக்கு நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்குவது போல்; கடல் மீனவ மகளிருக்கும் நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்கும் வகையில், மீனவ மகளிருக்கும் தற்போது வழங்கப்பட்டு வரும் நிவாரணத் தொகையான 1,800/– ரூபாய் 2,700/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதில் பயனாளியின் பங்குத் தொகை 900/– ரூபாயாகவும், மாநில அரசின் பங்குத் தொகை 1,800/–ரூபாயாகவும் இருக்கும். சுமார் 1 இலட்சத்து 90 ஆயிரம் கடல் மீனவ மகளிர் பயனடையும் இத்திட்டத்திற்கு ஆண்டொன்றுக்கு 11 கோடியே 40 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

3. தமிழ்நாட்டில் தற்போது 7 மீன்பிடி துறைமுகங்களும், 19 மீன் இறங்கு தளங்களும் உள்ளன. மேலும் 4 இடங்களில் புதிய மீன்பிடி துறைமுகங்களும், 11 இடங்களில் மீன் இறங்கு தளங்களும் அமைக்கும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. இதன் தொடர்ச்சியாக நடப்பாண்டில் காஞ்சிபுரம் மாவட்டம், கோவளத்தில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்,கன்னியாகுமரிமாவட்டம்இரையுமன்துறையில் 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும்

தூத்தூரில் 4 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் என மொத்தம் 17 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 3 புதிய மீன் இறங்கு தளங்கள் அமைக்கப்படும். இந்த மீன் இறங்கு தளங்கள் சுமார் 1,500 மெட்ரிக் டன் மீன்களை சுகாதாரமான முறையில் விரைவாக கையாளப் பயன்படுவதுடன் 625 மீன்பிடி படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்தவும் வழி வகுக்கும். இதன் மூலம் இப்பகுதிகளைச் சார்ந்த சுமார் 8,300 மீனவர்கள் பயன் பெறுவர்.

4. மீன் குஞ்சு உற்பத்தியைப் பெருக்கி அதன் மூலம் உள்நாட்டு மீன் உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிடும் வகையில், 2014–2015 ஆம் ஆண்டில் கடலூர் மாவட்டத்தில், பரங்கிப்பேட்டை, ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகர் அணை, திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானல் மற்றும் தேனி மாவட்டத்தில் வைகை அணை ஆகிய 4 இடங்களில் உள்ள அரசு மீன் குஞ்சு வளர்ப்புப் பண்ணைகள் 17 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

5. மீன் வளத் துறை அலுவலகங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடும் பொருட்டு, 2014–2015 ஆம் ஆண்டில் இராமநாதபுரத்தில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட மீன் வளத் துறை துணை இயக்குநர் அலுவலகம், இராமநாதபுரம் மாவட்ட மீன் வளப் பணிகளை செயல்படுத்த வடக்கு மற்றும் தெற்கு என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ள இரண்டு மீன் வளத் துறை உதவி இயக்குநர் அலுவலகங்கள் மற்றும் மீன்பிடி உட்கட்டமைப்பு பணிகளை செயல்படுத்தி வரும் மீன்பிடி துறைமுக, உதவி செயற் பொறியாளர் அலுவலகம் ஆகிய 4 அலுவலகங்களுக்கும் 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம் கட்டப்படும்.

இதைப் போலவே, நாகப்பட்டினத்தில் இயங்கி வரும் மீன் வளத் துறை மண்டல இணை இயக்குநர் அலுவலகம்,

மீன் வளத் துறை உதவி இயக்குநர் அலுவலகம், மீன் பிடி துறைமுக செயற் பொறியாளர் அலுவலகம் மற்றும் உதவி செயற் பொறியாளர் அலுவலகம் ஆகிய 4 அலுவலகங்களுக்கும் ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம் 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். ஆக மொத்தம் 3 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு ஒருங்கிணைந்த மீன் வளத் துறை அலுவலகங்கள் இராமநாதபுரம் மற்றும் நாகப்பட்டினத்தில் கட்டப்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் திட்டங்களின் மூலம் மீன் உற்பத்தி பெருகி, மீனவர்கள் நிறைவான பயன்களைப் பெற்று வாழ்வில் வளம் பெறுவர் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✶ ✶ ✶

பால் உற்பத்தி பெருக விவசாயிகள் கூடுதல் பயன் பெற முனைப்பான திட்டங்கள்!

04.08.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும், சமூகப் பொருளாதார மாற்றங்களை உருவாக்குவதிலும், வேலை வாய்ப்புகளை தோற்றுவிப்பதிலும் முக்கியப் பங்காற்றி வரும் சத்துள்ள உணவான பாலின் உற்பத்தியைப் பெருக்கவும், பால் உற்பத்தியாளர்களுக்கு ஆதாயமான விலை கிடைக்கவும், நுகர்வோருக்கு தரமான பால் மற்றும் பால் பொருட்கள் தங்கு தடையின்றி நியாயமான விலையில் கிடைக்கவும் தேவையான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

பால் உற்பத்தித் தொழிலை ஊக்கப்படுத்துவதன் மூலம் ஏழை விவசாயிகளின் பொருளாதார நிலை உயர்ந்து, அவர்தம் வாழ்வு வளம் பெறும் என்பதைக் கருத்தில் கொண்டு எனது தலைமையிலான அரசு இரண்டாம் வெண்மைப் புரட்சிக்கு வித்திட்டு பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கான தொடர் நடவடிக்கைகள் எடுத்ததன் பயனாக, அதிக பால் உற்பத்தி செய்யும் மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாக விளங்குகிறது. முந்தையமைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில், நாளொன்றுக்கு 20 இலட்சம் லிட்டர் என்று இருந்த ஆவின் பால் கொள்முதல் தற்போது 2013–2014–இல் நாள் ஒன்றுக்கு 23.22 இலட்சம் லிட்டர் என்ற அளவுக்கு உயர்ந்துள்ளது.

இதன் தொடர்ச்சியாக, பால் பண்ணைகளின் கட்டமைப்பை அதிகரித்து பால் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர்கள் நலனுக்காகவும், கால்நடை தீவன பயன்பாட்டை

ஊக்கப்படுத்தவும் கீழ்க்காணும் பணிகள் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள், கூட்டுறவு இணையத்தின் மூலம் 46 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இம்மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

1) சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், விழுப்புரம் மற்றும் வேலூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் பால் பண்ணை மற்றும் பால் குளிரூட்டும் நிலையங்களின் இயந்திரத் தளவாடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதி–களை மேம்படுத்த புதிய பால் குளிரூட்டும் இயந்திரங்கள், பால் கொள்கலன்கள், பாட்டில்களில் நெய் நிரப்பும் தானியங்கி இயந்திரம், மின்ஆக்கி, பால் பதப்படுத்தும் இயந்திரங்கள், கொழுப்பு பிரித்தெடுக்கும் இயந்திரங்கள், பால் சமன்படுத்தும் இயந்திரங்கள், பிளாஸ்டிக் டப்புகள் சுத்தம் செய்யும் இயந்திரங்கள், பால் பாக்கெட்டுகள் மீது, உரிய விவரங்களை அச்சிடும் வெப்பமாற்று முறை உபகரணங்கள், அதாவது Thermal transfer for over-printing equipment ஆகியவை 35 கோடியே 77 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும். இதன் மூலம் சுமார் 2 இலட்சத்து 26 ஆயிரத்து 432 பால் உற்பத்தியாளர்களும், 5 இலட்சத்து 13 ஆயிரத்து 138 பால் நுகர்வோர்களும் பயனடைவார்கள்.

2) தமிழ்நாட்டில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் இடையே கால்நடை தீவனப் பயன்பாட்டை ஊக்கப்படுத்தும் வகையில், ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் செயல்பட்டு வரும் தீவனத் தொழிற்சாலை 10 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவில் விரிவாக்கப்பட்டு, தீவன உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு 150 டன் என்ற அளவிற்கு உயர்த்தப்படும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 4 இலட்சத்து 29 ஆயிரம் உறுப்பினர்கள் பயனடைவார்கள்.

மேற்கூறிய எனது தலைமையிலான அரசின் முனைப்பான திட்டங்கள், தமிழகத்தில் பால் உற்பத்தியைப் பெருக்கவும், விவசாயிகள் கூடுதலான பயன்களைப் பெற்று நன்மை பெறவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ✶

கூடுதல் பாசனவசதி ஏற்படுத்தி, வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் சீரிய திட்டங்கள்!

04.08.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இயற்கை ஆதாரங்களுள் முதன்மையானதாக விளங்கும் நீரினை முறையாகப் பயன்படுத்தும் வகையில், பாசனக் கட்டமைப்புகளை பராமரித்து, புதிய பாசனத் திட்டங்களை உருவாக்கி, அதன் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் முக்கியப் பங்கினை வகிக்கும் பொதுப் பணித் துறை வாயிலாக எனது தலைமையிலான அரசு கடந்த மூன்று ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி உள்ளது.

பொதுப் பணித் துறை மூலம் நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட இருக்கும் திட்டங்களை இந்த மாமன்றத்தில் நான் அறிவிப்பதில் பெருமை அடைகிறேன்.

1) மழைக்காலங்களில் காவேரியில் வரப் பெறும் வெள்ள நீரைத் திருப்பி விடுவதற்காக, கொள்ளிடம் ஆறு பிரதானமாக ஒரு வெள்ள நீர்ப் போக்கியாக செயல்பட்டு வருகிறது. இந்த ஆற்றில், கீழணை, அதாவது Lower Coleroon Anicut தவிர, எந்த ஒரு பாசனக் கட்டுமானமும் இல்லாததால், மழைக் காலத்தில் கிடைக்கும் வெள்ள நீர் கீழணைக்கு கீழ் புறம் சென்று கடலில் வீணாக கலக்கிறது. இதனைத் தடுக்கும் வகையில், இந்தப் பகுதியில் ஒரு தடுப்பணை கட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கையை பல்வேறு தரப்பினர் வைத்துள்ளனர்.

இந்த கோரிக்கையை ஏற்று, கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே, கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், ஆதனூர் – குமாரமங்கலம் கிராமங்களுக்கு இடையே கீழணையின்

கீழ் புறம், 0.6 TMC அடி கொள்ளளவு கொண்ட தலை மதகுகளுடன் ஒரு கதவணை, அதாவது Barrage 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2) திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், பெட்டவாய்த்தலை கிராமத்தில் உய்யகொண்டான் வாய்க்காலின், தலை மதகில் உள்ள மண் போக்கி, அதாவது Sand Vent மற்றும் திருச்சி மாநகராட்சிக்கு உட்பட்ட பாலக்கரை பகுதியில் உள்ள உய்யகொண்டான் வாய்க்கால் ஆகியவை 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைத்து நவீனப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், அரியாற்றின் குறுக்கே உள்ள வடசேரி அணைக்கட்டு, பிராட்டியூர் அணைக்கட்டு, அரியாவூர் அணைக்கட்டு மற்றும் அதன் வழங்கு வாய்க்கால், புங்கானூர் அணைக்கட்டு, இனாம்குளத்தூர் அணைக்கட்டு மற்றும் அதன் வழங்கு வாய்க்கால், மணப்பாறை வட்டம் அரியாற்றின் குறுக்கே உள்ள 7 அணைக்கட்டுகள் மற்றும் சமுத்திரம் மரவனூர் ஏரிகள் 16 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவிலும்; திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், கொத்தமங்கலம் ஆற்றின் குறுக்கே உள்ள கொத்தமங்கலம் அணைக்கட்டு 2 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; திருச்சி மாவட்டம், திருவெறும்பூர், முசிறி மற்றும் துறையூர் வட்டங்களில் உள்ள 3 ஏரிகள் 2 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் புனரமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது தவிர, திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், மேலணையின் கீழ்புறம் காவேரி ஆற்றின் வலது கரையைப் பாதுகாக்கும் பணி 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

3) தேனி மாவட்டத்தில் உள்ள 18 ஆம் கால்வாயானது, வைரவனார் அணைக்கட்டின் மேற் புறம் அமைந்துள்ள தலை மதகிலிருந்து துவங்கி சுமார் 14 கிலோ மீட்டர்

நீளத்திற்கு அமைக்கப்பட்டு பாசன வசதி அளித்து வருகிறது. இந்தக் கால்வாயை, உத்தமபாளையம் வட்டத்தில் உள்ள ரெங்கனாதபுரம் கிராமத்தில் உள்ள சுத்த கங்கை ஓடையிலிருந்து கூவலிங்க ஆறு வரை நீட்டித்து கோட்டக்குடி ஆறுடன் இணைக்க வேண்டும் எனப் பொதுமக்கள் கோரி வருகின்றனர். பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று, 18 ஆம் கால்வாயினை சுத்த கங்கை ஓடையிலிருந்து கூவலிங்க ஆறு வரையில் நீட்டித்து, கோட்டக்குடி ஆற்றுடன் இணைக்கும் திட்டம் 48 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4) திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், அளுந்தூர் கிராமம் அருகே கொத்தமங்கலம் வாரியின் குறுக்கே 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; லால்குடி வட்டம், இருதயபுரம் கிராமம் அருகே நந்தியாற்றின் குறுக்கே 4 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; மேலரசூர் கிராமம் அருகே, மானோடையின் குறுக்கே 1 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணச்சநல்லூர் வட்டம், சிறுமருதூர் கிராமம் அருகே, பங்குனி வடிகாலின் குறுக்கே 1 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; ஸ்ரீதேவி மங்கலம் கிராமம் அருகே, உப்பாற்றின் குறுக்கே 3 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; திருப்பத்தூர் கிராமம் அருகே, சண்முகாநதி ஓடையின் குறுக்கே 1 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; திருச்சிராப்பள்ளி மாவட்டம், மருங்காபுரி வட்டம், வேம்பனூர் கிராமம் அருகே, வெள்ளாற்றின் குறுக்கே 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், குமாரவாடி கிராமம் அருகே, கண்ணூத்து ஓடையின் குறுக்கே 1 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; சமுத்திரம் கிராமம் அருகே, மாமுண்டியாறு ஆற்றின் குறுக்கே 2 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; கருப்பூர் கிராமம் அருகே, கோரையாறு ஆற்றின் குறுக்கே 2 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; கே. பெரியப்பட்டி கிராமம் அருகே, உப்பாறு வாரியின் குறுக்கே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; பொன்னனியாற்றின்

குறுக்கே 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம், தண்டலைப் புதூர் கிராமம் அருகே, அய்யாறு ஆற்றின் குறுக்கே 4 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; திருத்தியமலை கிராமம் அருகே, திருத்தியமலை ஆற்றின் குறுக்கே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; திண்ணக்கோணம் கிராமம் அருகே, அய்யாறு ஆற்றின் குறுக்கே 3 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், கொல்லம்பட்டி கிராமம் அருகே, குண்டாறு ஆற்றின் குறுக்கே 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் வட்டம், கும்பக்குடி கிராமம் அருகே, காட்டாற்றின் குறுக்கே 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் என மொத்தம், 32 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக 17 தடுப்பணைகள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

5) தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், தென்கரை கிராமத்தில் புது அணை, ஒட்டணை, குடமுருட்டி அணை, பிரம்பு அணை, முக்காவூர் பிரிவணை, கெங்குவார்பட்டி கிராமத்தில் உள்ள வைரவன் அணைக்கட்டின் வழங்கு வாய்க்கால் ஆகியவை 7 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், சிலமலை, சில்லமரத்துப்பட்டி, தொம்புச்சேரி, பொட்டிபுரம் கிராமங்களில் உள்ள எரமன்குளம் அணைக்கட்டு, தம்பிரான்குளம் அணைக்கட்டு, அம்மாகுளம் அணைக்கட்டு, எலுப்ப மரத்து அணைக்கட்டு, சென்னைய கௌண்டன்பட்டி மற்றும் போசிகௌண்டன் அணைக்கட்டு, போடி கிராமத்தில் உள்ள சாமி வாய்க்கால் அணைக்கட்டு ஆகியவை 3 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், குன்னூர் கிராமத்தின் அருகே உள்ள குன்னூர் அணைக்கட்டின் வரத்துக் கால்வாய் 8 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் புனரமைக்கப்படும்.

இது தவிர, தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், உத்தமபாளையம் மற்றும் கோகிலாபுரம் கிராமத்தில் உள்ள தாமரைக்குளம் வரத்துக் கால்வாய் மற்றும் அதன் கண்மாய் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீனப்படுத்தப்படும்.

6) திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், வடகாடு கிராமம் அருகே உள்ள பரப்பலாறு அணை 1974 ஆம் ஆண்டு 200 மில்லியன் கனஅடி கொள்ளளவு நீர் தேக்கி வைக்க கட்டப்பட்டது. இந்த நீர்த்தேக்கமானது மலை சூழ்ந்த பகுதியில் அமைந்துள்ளதால், வண்டல் மண் படிந்து, தற்போது அணையின் கொள்ளளவு 120 மில்லியன் கனஅடியாகக் குறைந்துள்ளதன் காரணமாக, குடிநீருக்கும், விவசாயத் தேவைக்கும் நீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இந்த அணையின் நீர் பரப்புப் பகுதியில், தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதன் அசல் கொள்ளளவுக்கு மீளக் கொண்டுவரும் திட்டம் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

7) திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், நரசிங்கபுரம் கிராமத்தில் உள்ள நரசிங்கபுரம் ராஜா வாய்க்கால், கொடகனாற்றின் கிளை நதியான பெரியாற்றின் குறுக்கே அமைந்துள்ள அணைக்கட்டின் வலது புறக் கரையில் இருந்து தொடங்கி, 3,950 மீட்டர் தூரம் ஓடி, தாமரைக்குளம், போலசமுத்திரம், வாடிகுளம், செங்கட்டான் குளம், சொட்டான் குளம், பள்ளக் குளம், பெரியகுளம், கொங்கறு குளம், மன்னவராதி கண்மாய் மற்றும் புளியங்குளம், அத்திகுளம் ஏந்தல், ரங்கசமுத்திரம் ஆகிய குளங்களுக்கு, பாசனப் பயன் அளிக்கிறது. இவ்வாய்க்கால் தூர்ந்துவிட்டதால், நேரடி ஆயக்கட்டுகள் மற்றும் குளங்களுக்குத் தேவையான நீர் வழங்க இயலாத நிலை உள்ளது. எனவே, இவ்வாய்க்காலில் மேற்பூச்சு மற்றும் நவீனப்படுத்தும் பணிகள் 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

8) ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், பவானி ஆற்றின் குறுக்கே மிகப் பழமையான கொடிவேரி அணைக்கட்டு உள்ளது. இந்த அணைக்கட்டிலிருந்து பிரியும் தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை கால்வாய்கள் சுமார் 100 வருடத்திற்கு முன்பே அமைக்கப்பட்டுள்ளன. 77 கிலோ மீட்டர் நீளமுள்ள தடப்பள்ளிக் கால்வாய் 17,654 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி அளித்து வருகிறது. 32 கிலோ மீட்டர் நீளமுள்ள அரக்கன்கோட்டை கால்வாய் 6,850 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி அளித்து வருகிறது. இக்கால்வாய்களின் படுகை மட்டம் வண்டல் படிவங்களால் தூர்ந்து போய் இருப்பதாலும், நீர்க் கசிவு அதிகமாக இருப்பதாலும், பவானிசாகர் அணையிலிருந்து விடுவிக்கப்படும் நீர் கடைமடைப் பகுதிக்கு முழுமையாக சென்றடைவதில்லை. இந்தக் கால்வாய்களின் செயல்திறனை அதிகப்படுத்தும் வகையில், முதற்கட்டமாக, தலை மதகு பகுதியில் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்பூச்சு மற்றும் புனரமைக்கும் பணிகள் நடப்பாண்டில் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9) பெரியாறு பிரதான கால்வாய், பெரியாறு வைகை வடிநிலத்தில் அமைந்துள்ளது. இந்த கால்வாய் 58 கிலோ மீட்டர் பயணித்து 12 பிரிவு வாய்க்கால் மற்றும் 64 கிளை வாய்க்கால் மூலம் 68,334 ஹெக்டேர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கிறது. சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு சீரமைப்புப் பணிகள் செய்யப்பட்ட இக்கால்வாய்களின் மேற்பூச்சு சிதிலம் அடைந்து, நீர் கடத்தும் திறன் வெகுவாக குறைந்துள்ளது. இதனால், கடைமடைப் பகுதிக்கு போதிய நீர் சென்றடைவதில்லை. என்னுடைய அரசின் விவேகத்துடன் கூடிய சீரிய முயற்சியால் முல்லை பெரியாறு அணையின் நீர் மட்டம், தற்காலிகமாக குறைக்கப்பட்ட 136 அடியிலிருந்து முதற்கட்டமாக 142 அடி வரை உயர்த்தப்பட்டுள்ளது. இந்தக் கூடுதல் நீரை உரிய வகையில் பயன்படுத்த பெரியாறு பிரதான கால்வாயின் கிளைக் கால்வாய்களை

புனரமைப்பு செய்வது மிக அவசியமாகிறது. முதற்கட்டமாக, மதுரை மற்றும் சிவகங்கை மாவட்டத்திலுள்ள 1–ஆவது பிரிவு வாய்க்கால், 2–ஆவது பிரிவு வாய்க்கால், 3–ஆவது பிரிவு வாய்க்கால் 4–ஆவது பிரிவு வாய்க்கால், 12–ஆவது பிரிவு வாய்க்கால் மற்றும் பெரியார் நீட்டிப்புக் கால்வாய் ஆகியவற்றில் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்பூச்சு மற்றும் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10) திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டத்திலுள்ள கண்டலேறு பூண்டி கால்வாய் 177.105 கிலோ மீட்டர் நீளத்தில், கிருஷ்ணா நதி நீரை, சென்னை மாநகரக் குடிநீர் தேவைக்காக கொண்டு வர அமைக்கப்பட்டது. தமிழ்நாட்டில், இக்கால்வாயின் நீளம் 25.275 கிலோ மீட்டர் ஆகும். மழையினால், இக்கால்வாயில் பெருமளவு சேதங்கள் ஏற்பட்டு, மண் சரிவுகள் ஆங்காங்கே ஏற்பட்டுள்ளன. இதனால் இக்கால்வாயின் நீர் கடத்தும் திறன் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது.

இந்த சரிவுகளை சரி செய்து கரைகளைப் பலப்படுத்த 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் செயலாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மொத்தத்தில் 670 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பில் என்னால் அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்கள் மூலம் ஆயக்கட்டு நிலைப்படுத்தப்பட்டு, கூடுதல் பாசன வசதி ஏற்படுத்தப்படுவதால் வேளாண் உற்பத்தி அதிகரித்து, வேளாண் பெருங்குடி மக்கள் வாழ்வு சிறக்க வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

காவேரி டெல்டா விவசாயிகள் சம்பா சாகுபடி மேற்கொள்ள மேட்டூர் அணை திறப்பு!

07.08.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உணவினை அளித்து, நல் வளங்களை வழங்கி, விவசாயிகளின் விடிவெள்ளியாகத் திகழும் காவேரி நீர், மேட்டூர் அணையிலிருந்து காவேரி டெல்டா பாசனத்திற்கு, நீர் இருப்பினை பொறுத்து, ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதத்திலோ அல்லது அதற்குப் பின்னரோ திறந்து விடப்படும்.

இந்த ஆண்டு ஜூன் 12–ஆம் தேதி அன்று மேட்டூர் அணையின் நீர்மட்டம் 44.40 அடியாக இருந்ததாலும், தென் மேற்கு பருவமழை 05.06.2014 அன்று கருநாடகா – கேரளா நீர்பிடிப்புப் பகுதிகளில் துவங்கி பின்னர் குறைவடைந்ததாலும், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைவாக இருந்ததாலும், மேட்டூர் அணையிலிருந்து காவேரி டெல்டா பாசனத்திற்காக ஜூன் 12 அன்று தண்ணீர் திறந்துவிட இயலவில்லை.

தற்போது கருநாடகா–கேரளா மாநிலங்களில், காவேரி நீர்பிடிப்புப் பகுதிகளில், தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்து தொடர் மழை பெய்து வருவதால், கருநாடகத்தில் உள்ள முக்கிய அணைகளான ஹாரங்கி, ஹேமாவதி, கிருஷ்ணராஜசாகர் மற்றும் கபினி ஆகியன முழு கொள்ளளவை எட்டி வருகின்றன. கிருஷ்ணராஜசாகர் மற்றும் கபினி அணைகளிலிருந்து அதிக அளவில் தண்ணீர் வெளியேற்றப்படுவதால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்து 06.08.2014 மாலை நிலவரப்படி 93.24 அடியாக, அதாவது 56.432 டி.எம்.சி. அடியாக உயர்ந்துள்ளது. தொடர்ந்து மேட்டூர் அணைக்குக் கணிசமான நீர் வந்து கொண்டிருக்கிறது.

காவேரி நீர்பிடிப்புப் பகுதியில் தென்மேற்கு பருவமழை மேலும் நன்றாக இருக்கும் என்பதை எதிர்நோக்கியும், தற்போது மேட்டூர் அணையில் உள்ள நீர் இருப்பைக் கருத்திற் கொண்டும், இந்த வருடம் வடகிழக்கு பருவமழை இயல்பானதாக இருக்கும் என்பதைக் கருத்திற் கொண்டும், சுமார் 12 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் காவேரி டெல்டா மாவட்ட விவசாயிகள் சம்பா சாகுபடி மேற்கொள்ள ஏதுவாக, 15.08.2014 முதல் பாசனத்திற்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் மூலம், மேட்டூர் அணைக்கு வரும் தண்ணீர் வீணாகாமல், காவேரி, வெண்ணாறு மற்றும் கல்லணைக் கால்வாய் பாசனப் பகுதிகளில் உள்ள கிளை ஆறுகள் மற்றும் வாய்க்கால்கள் ஆகியவற்றிற்கு நீரைப் பகிர்ந்து அளிக்கவும், ஏரிகளில் நீரைச் சேமிக்கவும் வழிவகை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

அனைத்து துறைகளுக்கான ஒருங்கிணைந்த சோதனைச்சாவடி! சார்நிலை பதிவாளர் அலுவலக புதிய கட்டடங்கள்

07.08.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வளர்ச்சித் திட்டங்களையும், நலத் திட்டங்களையும் செயல்படுத்துவதற்கான நிதி ஆதாரத்தைத் தரும் ஆணிவேராக விளங்கக் கூடிய வணிக வரித் துறை மற்றும் பத்திரப் பதிவுத் துறையை செம்மைப்படுத்தவும், சீராக்கவும் தேவையான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

வணிக வரி மற்றும் பத்திரப் பதிவுத் துறைகளின் மூலம் கிடைக்கும் வருவாயினைப் பெருக்கும் வகையிலும், பணியாளர்கள், வணிகர்கள் மற்றும் பொதுமக்களுக்குக் கூடுதல் வசதிகளை அளிக்கும் வகையிலும், கீழ்க்காணும் திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. வணிக வரித் துறை அலுவலகங்களுக்கு வருகை புரியும் வணிகர்களுக்கு கூடுதல் வசதி செய்திடும் வகையிலும், பணியாளர்கள் பணிபுரிவதற்கான உகந்த சூழ்நிலையை உருவாக்கும் வகையிலும், கடந்த மூன்று ஆண்டுகளில் 45 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் 67 அலுவலகங்களை உள்ளடக்கிய 33 கட்டடங்கள் கட்ட அனுமதிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் 11 கட்டடங்கள் இதுவரை என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில், சென்னை நகரில் 70 வணிகவரி அலுவலகங்களை உள்ளடக்கிய அனைத்து வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த இரண்டு

வணிக வரி அலுவலகங்கள் 60 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. காவல் துறை, போக்குவரத்துத் துறை, வருவாய்த் துறை, வணிக வரித் துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆகிய துறைகளின் சார்பில் தனித் தனியே சோதனைச் சாவடிகள் செயல்படுவதன் காரணமாக, சரக்கு வாகனங்களை சரிவர சோதனைக்கு உட்படுத்த இயலாமல் போகிறது. இதனால் அரசுக்கு வரி இழப்பு ஏற்படுகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு, 120 கோடி ரூபாய் செலவில் வணிக வரித் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் இதர துறைகளுடன் இணைந்து அனைத்து துறைகளுக்கான ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி ஒன்று ஓசூரில் நிறுவப்படும்.

3. தற்போது, வணிக வரி ஆணையர் அலுவலகம், சென்னை எழிலகத்தில் நான்காம் தளத்தில் இயங்கி வருகிறது. அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் திறம்பட பணியாற்றவும், வணிக வரித் துறையை கணினிமயம் ஆக்குவதற்கும் வணிகவரி ஆணையர் அலுவலகத்தின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது அவசியமாகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, 7,965 சதுர அடி பரப்பிலான வணிகவரி ஆணையர் அலுவலகம் 1 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

4. பாரம்பரியமிக்க துறையான பதிவுத் துறை அலுவலகங்கள் அனைத்தும் தனியார் கட்டடங்கள், பழுதடைந்த அரசுக் கட்டடங்கள் மற்றும் 100 ஆண்டுகள் பழைமை வாய்ந்த அரசுக் கட்டடங்களில் இயங்கி வருவதைக் கருத்திற்கொண்டு, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் சார்பதிவாளர் அலுவலகங்கள் அனைத்திற்கும் 5 ஆண்டு காலத்திற்குள் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டும் என்ற நோக்கத்தில், கடந்த மூன்று

ஆண்டுகளில், 104 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் 216 அலுவலகங்களை உள்ளடக்கிய 156 கட்டடங்கள் கட்ட அனுமதிக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில், சென்னை, காஞ்சிபுரம், திருப்பூர், சேலம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய ஐந்து இடங்களில் 10 சார்பதிவாளர் அலுவலகங்களை உள்ளடக்கிய 5 ஒருங்கிணைந்த பதிவுத் துறை வளாகங்கள் மற்றும் தனித் தனியாக 25 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அறிவிப்புகள், அலுவலகப் பணியாளர்கள், வணிகர்கள், பொதுமக்கள் என அனைவரும் பயனுற வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

விவசாய உற்பத்தியில் இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக்க வேளாண் மேம்பாட்டுத் திட்டங்கள்!

07.08.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மண் வளத்தை மேம்படுத்துதல், நவீன உத்திகளை கையாளுதல், விதை, நுண்ணூட்டச் சத்து, உரங்கள் ஆகியவை உரிய நேரத்தில் கிடைக்கச் செய்தல், பயிர்க் கடன் வழங்குதல், தீவிர சாகுபடி முறை, நுண்ணீர் பாசனத் திட்டம், நெல் நடவு இயந்திரங்கள், களை எடுக்கும் கருவிகள் ஆகியவற்றை மானிய விலையில் வழங்குதல் போன்றவற்றின் மூலம் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது. இதன் காரணமாக, 2013–2014 ஆம் ஆண்டு உணவு தானிய உற்பத்தியில் 110.65 இலட்சம் மெட்ரிக் டன் என்ற உயர் நிலையை தமிழ்நாடு எய்தி மீண்டும் ஒரு வரலாற்றுச் சாதனையை படைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டின் முதன்மைத் தொழிலாகவும், ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாகவும், கிராமப்புற மக்களின் வாழ்வுக்கு ஆதாரமாகவும் விளங்குகின்ற வேளாண் தொழிலை மேம்படுத்தும் வகையில், கீழ்க்காணும் திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. இடு பொருட்கள் உற்பத்தி உள்ளிட்ட விவசாயப் பணிகள் மற்றும் அறுவடைக்கு பிந்தைய செயல்பாடுகள் ஆகியவற்றில் மகளிருக்கு பயிற்சி வழங்கும் "அம்மா பண்ணை மகளிர் திறன் மேம்பாட்டுத் திட்டம்" 113 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன்

தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டில் 770 ''பண்ணை மகளிர் குழுக்கள்'' அமைத்து, உரிய கடன் வசதி மற்றும் சுழல் நிதி வழங்கப்படும்.

2. தமிழக விவசாயிகள் சான்று பெற்ற விதைகளை அதிகளவில் உபயோகிப்பதை ஊக்குவிக்கும் வகையில், அரசு விதைப் பண்ணைகள், விதை உற்பத்தி செய்யும் நிலையங்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோரை ஒருங்கிணைத்து, உரிய பணியாளர்களை நியமித்து, 156 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை ஒன்று ஏற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு உற்பத்தி செய்யப்படும் தரமான, சான்று பெற்ற விதைகள் ''அம்மா SEEDS'' என்ற பெயரில் ''அம்மா சேவை மையம்'' விற்பனை வாயில்கள் மூலம் நியாயமான விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

3. வேளாண்மைக்கான ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் வகையிலும், அதிகரித்து வரும் வேளாண் கல்விக்கான தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலும், கிராமப்புற இளைஞர்கள் மற்றும் விவசாயிகள் பயன் பெறும் வகையிலும், புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலை, தஞ்சாவூர் மாவட்டம் ஈச்சங்கோட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் வாழவச்சனூர் ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம் மூன்று வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் 150 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

4. தமிழ்நாட்டில் உணவு தானிய உற்பத்தியை மேலும் பெருக்கும் வகையில், 16 கோடியே 9 இலட்சம் ரூபாய் செலவில், ''விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க முறை'' செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின்படி, 'விவசாய உற்பத்தியாளர் குழுக்கள்' அமைக்கப்படும்.

மேலும், ''பண்ணைப் பயிர் மேலாண்மைத் திட்டம்'' என்னும் தகவல்தொழில்நுட்பம், தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கும் நீட்டிக்கப்படும். தகவல் தொழில்நுட்பத்துடன்

கூடிய அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மைத் திட்டத்துடன் பண்ணைப் பயிர் மேலாண்மைத் திட்டமும் இணைக்கப்படும். மேலும், உற்பத்தியாளர் குழுக்களுக்கு லாபகரமான விலை கிடைக்க இக்குழுக்களை இணைத்து ஒன்பது விவசாய உற்பத்தியாளர் அமைப்புகள் உருவாக்கப்படும்.

இவையன்றி, மாவட்ட அளவிலான வேளாண் விரிவாக்க அலுவலர்களையும் ஊக்குவிக்கும் வகையில், சாதனை புரியும் விவசாயிகளுக்கும், சிறந்த முறையில் பணியாற்றும் அலுவலர்களுக்கும் மாவட்ட அளவில் பரிசுகள் வழங்கப்படும். இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திட, துறை அலுவலர்களுக்கு 143 பழைய வாகனங்களுக்குப் பதிலாக புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

5. பயிர் உற்பத்தியை அதிகரிக்கும் நவீனத் தொழில் நுட்பங்களை வழங்கவும், முக்கிய இடுபொருட்கள், வேளாண் கருவிகள் மற்றும் பயிர்ப் பாதுகாப்புக் கருவிகளை இருப்பு வைத்து வழங்கவும், செய்தி மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் வாயிலாக விவசாயிகளுக்கு விதைப்பு முதல் அறுவடை வரையிலான அனைத்து செயல்பாடுகளுக்கும் உரிய ஆலோசனைகள் வழங்கவும், அனைத்துப் பயனாளிகளையும் ஒருங்கிணைத்து பன்முக செயல்பாட்டு முனையமாக திகழவும், கருத்துக் காட்சி, விவசாயிகள் பயிற்சி அறை, இடுபொருள் இருப்பு வைத்து விநியோகிக்கும் வசதியுடன் கூடிய ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள் 50 வட்டாரங்களில் 75 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

6. வேளாண் தொழிலாளர்கள் தட்டுப்பாட்டை சமாளிக்கும் வகையில், வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்க 212 கோடி ரூபாய் அளவுக்கு எனது

தலைமையிலான அரசு மானியம் வழங்கியுள்ளது. சாகுபடி செய்யப்படும் முக்கியப் பயிர்களுக்குத் தேவையான அனைத்து வகையான வேளாண் கருவிகள் மற்றும் வேளாண் இயந்திரங்கள் விவசாயிகளுக்கு நியாயமான வாடகைக்கு வழங்கவும், இந்த இயந்திரங்களை பழுது நீக்கவும் பொது மற்றும் தனியார் பங்கேற்புடன் 385 வட்டாரங்களிலும் 'வேளாண் இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கும் மற்றும் இயந்திரங்கள், பழுது நீக்கும் சேவை மையங்கள்' 126 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

7. வேளாண்மையில், குறிப்பாக தோட்டக்கலையில் விளை பொருட்கள் விரைவில் வீணாகும் தன்மை கொண்டவை. இவற்றைப் பதப்படுத்துவதால், வேளாண் விளைபொருட்களில் அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்பு குறைக்கப்படுவதுடன், விவசாயிகளுக்கு சீரான விலையும், நுகர்வோருக்கு ஆண்டு முழுவதும் பதப்படுத்திய, பக்குவப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களும் கிடைக்கும். எனவே, அரியலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, பெரம்பலூர், இராமநாதபுரம், சிவகங்கை, தூத்துக்குடி, திருவண்ணாமலை, விருதுநகர் மற்றும் சேலம் ஆகிய 10 மாவட்டங்களில், அம்மாவட்டத்திற்கு உகந்த வகையில் அரசு அல்லது பொது மற்றும் தனியார் துறை அல்லது கூட்டு நிறுவனங்கள் அல்லது உழவர் உற்பத்தியாளர் குழுக்கள், தனியார் தொழில் முனைவோர் மூலம் ''வேளாண் பதப்படுத்தும் மாதிரித் தொழிற்சாலை'' 25 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு இதற்கு தேவையான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

8. பயறு உற்பத்தியில் தன்னிறைவு அடைய ஏதுவாக, சாகுபடிப் பரப்பினை உயர்த்த துவரைப் பயிர் சாகுபடி ஓர் இயக்கமாகச் செயல்படுத்தப்படும். துவரைச் சாகுபடியை அதிகரிக்க பல்வேறு உத்திகள் கடைபிடிக்கப்படுவதுடன், துவரை சாகுபடி செய்யும் விவசாயிகள் குழுக்கள் அமைத்து, அக்குழுக்களை விவசாயிகள்

உற்பத்தியாளர்கள் அமைப்பாக ஒருங்கிணைத்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுத் துறை மூலம் அரசே நியாயமான விலைக்கு துவரையினைக் கொள்முதல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும். துவரைப் பயறுக்கான இச்சிறப்புத் திட்டம் 55 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

9. காலநிலை மாற்றம், குறைந்து வரும் இயற்கை வளங்கள் மற்றும் வளர்ந்து வரும் போட்டிச் சூழல் போன்றவற்றால் வேளாண்மையில் ஏற்படும் பின்னடைவுகளை எதிர்கொண்டு நிலைத் தன்மையை ஏற்படுத்தும் வகையில், நடப்பு ஆண்டில் வேளாண் ஆராய்ச்சியின் மூலம் 28 கோடி ரூபாய் செலவில் 6 இனங்களில் மகத்துவ மையங்கள் உருவாக்கப்படும். இதன்படி, கோயம்புத்தூரில் மூலக் கூறு மரபியல் மகத்துவ மையம் ஒன்றும்; செட்டிநாட்டில் மானாவாரி பண்ணைய மகத்துவ மையம் ஒன்றும்; திருச்சிராப்பள்ளியில், மண் வள மகத்துவ மையம் ஒன்றும், மதுரையில் புதுமை ஆய்வு மகத்துவ மையம் ஒன்றும், திருச்சிராப்பள்ளியில் பண்ணை மகளிர் அறிவு மேம்பாட்டு மையம் ஒன்றும், பட்டுக்கோட்டையில் எண்ணெய்ப் பனை மகத்துவ மையம் ஒன்றும் உருவாக்கப்படும்.

10. சுற்றுச்சூழலுக்கு உகந்த, நீடித்த வேளாண் பணிகளை மேம்படுத்துவதற்காக வேலூர், ஈரோடு, தருமபுரி, திருவண்ணாமலை மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய ஐந்து மாவட்டங்களில், மாவட்டத்திற்கு ஒரு கிராமம் வீதம், கிராமம் ஒன்றுக்கு 10 இலட்சம் ரூபாய் செலவில், 5 மாதிரி இயற்கைக் கிராமங்கள் உருவாக்கப்படுவதோடு, ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மையை வலுப்படுத்தும் நோக்கோடு 150 சுற்றுச்சூழலுக்கு உகந்த ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மாதிரி கிராமங்களும், அதாவது Eco-Friendly Integrated

Pest Management Villages அமைக்கப்படும். மேலும், 7 புதிய திரவ உயிர் உர உற்பத்தி ஆய்வகங்கள் அமைக்கப்படுவதுடன், அங்கக உரங்களின் சத்துக்களை ஆய்வு செய்வதற்கு 2 புதிய ஆய்வகங்கள் அமைக்கப்படும். இதுவன்றி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இயற்கைப் பண்ணையப் பணிகளை தரப்படுத்தி இயற்கைப் பண்ணையத்தில் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கு ஆய்வக வளாகமும் 22 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

11. நவீன வேளாண்மையில் விதைப்பு முதல் அறுவடை மற்றும் சந்தைப்படுத்துதல் வரையிலான பல்வேறு வேளாண் பணிகளுக்கு திறன் மேம்பாட்டுடன் கூடிய மனித வள ஆற்றல் அவசியமாகிறது. எனவே, மனித வள ஆற்றலை அதிகரிக்கும் வகையில் வேளாண் திறன் மேம்பாட்டு மையம் ஒன்று துவக்கப்படும். இதன் மூலம் வரும் 10 ஆண்டுகளில் 20 கோடி ரூபாய் செலவில் 10 ஆயிரம் கிராமப்புற இளைஞர்களுக்கு 1 வருட சான்றிதழ் படிப்பு பயிற்றுவிக்கப்படும்.

12. விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளை பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கவும், விலை கட்டுப்படி ஆகாத பட்சத்தில், சேமித்து வைத்து நல்ல விலை வந்தவுடன் விற்பனை செய்வதற்கும், ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் மிக முக்கிய பங்காற்றி வருகின்றன. திருவண்ணாமலை மாவட்டம் கலசப்பாக்கம் மற்றும் நாயுடுமங்கலம் வட்டங்களில் தலா ஒன்றும், விழுப்புரம் மாவட்டம் திருநாவலூரில் ஒன்றும் என மொத்தம் மூன்று இடங்களில் புதிய ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் அமைக்கவும், நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யத்தில் இயங்கி வரும் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்திற்கு புதிய கட்டடம் கட்டவும் 2 கோடியே 38 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

13. மரபு சாரா எரிசக்தியை ஊக்கப்படுத்துவதில் தமிழகம் முன்னணி மாநிலமாக திகழ்கிறது. சூரிய சக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதுடன், பாசன நீர் இறைக்கும் பம்புகள், வேளாண் பொருட்களை உலர்த்துவது மற்றும் பதப்படுத்துவது ஆகியவற்றையும் செயல்படுத்திடலாம். சூரிய சக்தி மூலம் இயங்கும் விவசாய மோட்டார் பம்பு செட்டுகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு எனது அரசால் வழங்கப்பட்டு உள்ளன. 2013–2014ஆம் ஆண்டில் சூரியக் கூடார மிளகாய் உலர்த்தி அமைப்புகள் 40 இலட்சம் ரூபாய் செலவில் மிளகாய் பயிரிடும் 20 குழுக்களுக்கு வழங்கப்பட்டன. சூரிய சக்தி பயன்பாட்டினை விவசாயிகள் மற்றும் விவசாய குழுக்கள் மேற்கொள்ள ஊக்குவிக்கும் வகையில், 50 விழுக்காடு மானியத்தில் சூரிய கூடார உலர்த்திகள் படிப்படியாக நிறுவப்படும். முதல் கட்டமாக 2014–2015 ஆம் ஆண்டில் 4 கோடி ரூபாய் மதிப்பில் 100 சூரிய கூடார உலர்த்திகள் நிறுவப்பட்டு, வேளாண் பதப்படுத்துதல், மதிப்புக் கூட்டுதல் மற்றும் விற்பனை வசதியுடன் உரிய முறையில் இணைக்கப்படும். இதற்காக கடன் வசதி தேவைப்படும் விவசாயிகளுக்கு கூட்டுறவுத் துறை மூலம் உரிய கடன் வழங்க ஆவன செய்யப்படும்.

மேற்காணும் நடவடிக்கைகள், விவசாய உற்பத்தியில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்கவும், விவசாயிகள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

சிறந்த புத்தாக்க முயற்சிகளுக்கு "மாண்புமிகு முதலமைச்சரின் புத்தாக்க விருது"

08.08.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டும் என்ற இலக்கினை அடையும் வகையில், 'தொலைநோக்குத் திட்டம், 2023–ஐ தீட்டி, அதை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்துள்ளது.

இதன் ஒரு பகுதியாக, திட்டம் மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் சார்பாக கீழ்க்காணும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

1. தமிழ்நாட்டில் புத்தாக்கப் பண்பாட்டை வளர்ப்பதற்காக, அரசுத் துறைகளில் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்கு, மாநில திட்டக் குழுவில் "தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள்" அதாவது Tamil Nadu Innovative Initiative என்ற ஓர் அமைப்பு நிறுவப்படும். முதற்கட்டமாக, இந்த அமைப்பு அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களில் புத்தாக்கத்தை வளர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். இது படிப்படியாக அரசுத் துறை அல்லாத நிறுவனங்களுக்கும் நீட்டிக்கப்படும். புத்தாக்க முயற்சிகளுக்கு பரிசுகள் வழங்கும் திட்டமும் உருவாக்கப்படும். இதற்கென "மாநில புத்தாக்க நிதியம்" என்ற ஒரு நிதியம் ஏற்படுத்தப்படும். புத்தாக்க முயற்சிகளை உள்ளடக்கிய திட்டங்களுக்கு இந்த நிதியத்திலிருந்து நிதி வழங்கப்படும். இந்த நிதியத்திற்கு ஆண்டுதோறும் 150 கோடி ரூபாய் வழங்கப்படும். சிறந்த புத்தாக்க முயற்சிகளுக்கு "மாண்புமிகு முதலமைச்சரின் புத்தாக்க விருது" என்ற பெயரில் விருதுகளும் வழங்கப்படும்.

2. சிறந்த ஆளுமை என்பது, நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் அவற்றின் குறிக்கோள்களை எய்தியுள்ளனவா என ஆராய்ந்து, அதன் அடிப்படையில் கொள்கைகளை வகுப்பது ஆகும். எனவே, நடைமுறையில் உள்ள திட்டங்களைக் கண்காணிப்பதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் ஏதுவாக, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை மேலும் வலுப்படுத்தப்படும். தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களில் இடைக்காலத் திருத்தங்களை மேற்கொள்ளவும், வருங்காலத்தில் சிறப்பான மற்றும் அதிக பயன் அளிக்கக் கூடிய திட்டங்களை உருவாக்கவும் இது உதவிகரமாக இருக்கும். இதற்காக, அமெரிக்காவிலுள்ள, உலக அளவில் மிகச்சிறந்த கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையமான மாசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தில் Massa chusetts Institute of Techology- MIT-யில் செயல்படும் ஜமீல் – வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வகம் Jameel – Poverty Action Lab – அமைப்புடன் இந்த அரசு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளும். பள்ளிக் கல்வி, சுகாதாரம், வறுமை ஒழிப்பு மற்றும் சத்துணவு ஆகிய முக்கியத் துறைகளில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை மதிப்பீடு மற்றும் திறன் மேம்பாடு செய்ய உலக அளவில் புகழ்பெற்ற சிறந்த பொருளாதார வல்லுநர்கள் மற்றும் சமூக விஞ்ஞானிகள் ஈடுபடுத்தப்படுவர். இதற்காக, நடப்பு நிதியாண்டில் 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. ஒருங்கிணைந்த பண்ணை முறை, வேளாண்மையையும், அதனைச் சார்ந்த தொழில்களையும் ஒன்றிணைத்து விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்க வகை செய்கிறது. மேலும் இது வேளாண்மையின் உப பொருட்களை சிறந்த முறையில் பயன்படுத்தவும், ஒரு தொழிலின் கழிவுப் பொருட்களை அடுத்த தொழிலுக்கு இடுபொருளாகப் பயன்படுத்தி உற்பத்தியையும் லாபத்தையும் அதிகரிக்கவும் வழிவகை செய்கிறது. எனவே, பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள வேப்பூர் வட்டாரம்,

நாமக்கல் மாவட்டத்திலுள்ள மல்ல சமுத்திரம் வட்டாரம், தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கயத்தாறு, கோவில்பட்டி; ஒட்டப்பிடாரம், புதூர் மற்றும் உடன்குடி வட்டாரங்கள், மதுரை மாவட்டத்தில் கள்ளிகுடி வட்டாரம், தேனி மாவட்டத்தில் ஆண்டிப்பட்டி, கடமலைக்குண்டு வட்டாரங்கள் மற்றும் திருவாரூர் மாவட்டத்தில் கொரடாச்சேரி மற்றும் கோட்டூர் வட்டாரங்களைச் சேர்ந்த மிக ஏழ்மை நிலைமையில் உள்ள 750 விவசாயிகள் பயன்பெறும் வகையில் 8 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த பண்ணை முறையை ஊக்குவிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, பன்றி வளர்ப்பு, கோழி வளர்ப்பு, பண்ணை குட்டைகள் அமைத்தல், மண்புழு உரம் தயாரித்தல், சாண எரிவாயு உற்பத்தி ஆகியவற்றுக்காக மானிய உதவி அளிக்கப்படும். மேலும், ஒருங்கிணைந்த பண்ணை முறையைப் பின்பற்றத் தேவையான பயிற்சியும் இத்திட்டத்தின் மூலம் அளிக்கப்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் மூலம், நடைமுறையில் உள்ள திட்டங்கள் மேம்பாடு அடையவும், விவசாயிகளின் வருமானம் பெருகவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✶ ✶ ✶

பொதுமக்களுக்கு அரசின் சேவைகள் கால விரயமின்றி குறைந்த செலவில் கிடைத்திட அம்மா மக்கள் சேவை மையங்கள்!

08.08.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தில் உள்ள அனைத்து இல்லங்களிலும் தரமான குடிநீர், குழாய் மூலம் கிடைக்கப்பட வேண்டும் என்ற நிலையை எய்துவதையும், திடக் கழிவு மேலாண்மைத் திட்டங்களை அனைத்துப் பகுதிகளிலும் செயல்படுத்துவதையும் குறிக்கோளாகக் கொண்டு, அதற்கேற்ப குடிநீர் மற்றும் திடக் கழிவு மேலாண்மைத் திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

இந்தக் குறிக்கோளை எய்தும் வகையில், கீழ்க்காணும் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் திடக் கழிவு மேலாண்மைத் திட்டங்களை, இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. தேனி மாவட்டம், வடுகபட்டி பேரூராட்சி மற்றும் பெரியகுளம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 60 ஊரகக் குடியிருப்புகளுக்கு, வைகை அணையினை நீர் ஆதாரமாகக் கொண்டு 72,945 மக்கள் பயன்பெறும் வகையில் 20 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும்.

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள திருப்புவனம், மானாமதுரை, கண்டனூர், நாட்டரசன்கோட்டை, கோட்டையூர், புதுவயல், கானாடுகாத்தான் மற்றும் பள்ளத்தூர் ஆகிய 8 பேரூராட்சிகள் மற்றும் 2,297 ஊரகக் குடியிருப்புகளுக்கு காவேரி ஆற்றினை நீர் ஆதாரமாகக் கொண்டு, 5 இலட்சத்து 7 ஆயிரத்து 775 மக்கள் பயன்பெறும் வகையில் 1,160 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

கன்னியாகுமரி மாவட்டம், இரணியல் பேரூராட்சி மற்றும் 319 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், பத்மநாபபுரம் மற்றும் காட்டாத்துறை கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் 2 இலட்சத்து 78 ஆயிரத்து 570 மக்கள் பயன்பெறும் வண்ணம், 169 கோடி ரூபாய் மதிப்பில், பொதுவான குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்துடன் கூடிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 9 ஊராட்சிகளைச் சார்ந்த 185 ஊரகக் குடியிருப்புகளுக்கு பவானி ஆற்றினை, நீர் ஆதாரமாகக் கொண்டு 80,997 மக்கள் பயன்பெறும் வகையில் 42 கோடியே 94 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் மற்றும் நம்பியூர் ஒன்றியங்கள், காரப்பாடி மற்றும் 5 ஊராட்சிகளைச் சார்ந்த 88 ஊரகக் குடியிருப்புகளுக்கு பவானி ஆற்றினை நீர் ஆதாரமாகக் கொண்டு 18,731 மக்கள் பயன்பெறும் வகையில் 11 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் நகராட்சி, திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் மற்றும் புளியங்குடி நகராட்சிகளிலுள்ள 2 இலட்சத்து 81 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில், 267 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும். ஆக மொத்தம், 6 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் 1,672 கோடியே ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. இதே போன்று, பேரூராட்சிகளுக்கு என காஞ்சிபுரம் மாவட்டம் திருக்கழுக்குன்றம் மற்றும் கருங்குழி பேரூராட்சிகளுக்கு 11 கோடியே 42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 47,502 மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள், திருச்சி

மாவட்டம் கல்லக்குடி, புள்ளம்பாடி மற்றும் முசிறி பேரூராட்சிகளுக்கு 15 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 57,800 மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள், நாமக்கல் மாவட்டம் மோகனூர் மற்றும் பொத்தனூர் பேரூராட்சிகளுக்கு 7 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 35,600 மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள், கரூர் மாவட்டத்திலுள்ள கிருஷ்ணராயபுரம் பேரூராட்சிக்கு 2 கோடியே 43 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 12,020 மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி மற்றும் தேவதானப்பட்டி பேரூராட்சிகளுக்கு 16 கோடியே 82 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 49,000 மக்கள் பயன்பெறும் வகையிலான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், என மொத்தம் 53 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 5 குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. கோயம்புத்தூர் மாநகராட்சியின் எல்லையை விரிவாக்கம் செய்வதற்கு முன்பிருந்த பகுதிகளுக்கென 159 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கடந்த 2012–ஆம் ஆண்டு பில்லூர் இரண்டாவது தனி குடிநீர்த் திட்டத்தினை நான் துவக்கி வைத்தேன். இத்திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு சுமார் 125 எம்.எல்.டி. மற்றும் சிறுவாணி குடிநீர்த் திட்டம் மூலம் நாளொன்றுக்கு 75 எம்.எல்.டி. குடிநீர் கிடைத்துக் கொண்டு இருப்பதைக் கருத்தில் கொண்டு, சீரான அழுத்தத்துடன் பாதுகாக்கப்பட்ட குடிநீர் அனைத்து நாட்களிலும் 24 மணி நேரமும் கிடைக்கும் வகையில், குடிநீர் விநியோகத் திட்டம் 451 கோடியே 66 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. கழிவு நீரை மறு சுழற்சி செய்து குடிநீர் அல்லாத பிற தேவைக்குப் பயன்படுத்துவதை எனது தலைமையிலான அரசு தொடர்ந்து ஊக்குவிக்கிறது. வட சென்னையை ஒட்டியுள்ள மணலி மற்றும் மீஞ்சூர் பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளுக்கு 2030 ஆம் ஆண்டிற்கான தண்ணீர் தேவை நாளொன்றுக்கு

75 மில்லியன் லிட்டர் எனக் கண்டறியப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளுக்கான தேவை தொடர்ந்து அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, கொடுங்கையூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில், மூன்றாம் நிலை சுத்திகரிப்பு செய்து வட சென்னை பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் மின்சார வாரிய மின் உற்பத்தி நிலையங்களுக்கு வழங்குவதற்கு கொடுங்கையூரில் நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையிலான மூன்றாம் நிலை சுத்திகரிப்புநிலையம் 255 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

5. கடந்த 2011 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியுடன் 42 உள்ளாட்சி அமைப்புகள் இணைக்கப்பட்டதை அடுத்து, இந்தியாவிலேயே நான்காவது மிகப் பெரிய மாநகராட்சியாக சென்னை மாநகராட்சி விளங்குகிறது. இவ்வாறு விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தி, சென்னையை உலகத் தரம் வாய்ந்த நகரமாக உருவாக்க, சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் என்ற மாபெரும் திட்டத்தினை அறிவித்து கடந்த மூன்று ஆண்டுகளில் 1,500 கோடி ரூபாய் நிதியினை எனது தலைமையிலான அரசு ஏற்கெனவே வழங்கியுள்ளது. இதன் தொடர்ச்சியாக மழைக் காலங்களில் மழைநீர் தேங்காத வண்ணம் சிறந்த வடிகால் வசதிகளை ஏற்படுத்தி வெள்ளப் பெருக்கினால் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்பினைத் தடுக்க ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைப்பதற்காக 4,034 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இத்திட்டத்தின் மூலம், சிறிய கால்வாய்களில் உள்ள மழைநீர் பெரிய கால்வாய்களை சென்றடைந்து இயற்கை நீர்வழித் தடங்கள், கால்வாய்கள் மற்றும் நதிகள் வழியாக வங்காள விரிகுடா கடலை சென்றடையும் வண்ணம் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முதல் கட்டமாக, சென்னை மாநகராட்சியில் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளுக்கு 1,101 கோடியே

43 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அடையாறு மற்றும் கூவம் ஆறுகளின் வடிநிலத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் நடப்பாண்டில் எடுத்துக் கொள்ளப்படும்.

6. திடக்கழிவு மேலாண்மை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மிகப் பெரும் சவாலாக உள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் திடக் கழிவு மேலாண்மையை அறிவியல் ரீதியாக செயல்படுத்த தேவையான நிலம் கிடைப்பதில் பல்வேறு தடைகள் உள்ளன. தற்பொழுது உள்ள குப்பை கிடங்குகள் நிரம்பி அதனால் ஏற்படும் சுகாதார சீர்கேட்டினை கருத்தில் கொண்டு, இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில், ஒரு புதிய முயற்சியாக மண்டல அளவிலான ஒருங்கிணைந்த திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படும். இதன் முதற்கட்டமாக நடப்பாண்டில் திருச்சிராப்பள்ளி, திருப்பூர், தூத்துக்குடி, வேலூர் ஆகிய மாநகராட்சிகளிலும் நாகர்கோவில் நகராட்சியிலும் மண்டல அளவிலான ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத் திட்டம், 631 கோடியே 39 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

7. அலுவலர்கள் அலுவல் நிமித்தமாக வெளி இடங்களுக்கு சென்றுவிடும் நேர்வில், மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி அலுவலகங்களுக்கு வரும் பொதுமக்கள் அலுவலர்களை சந்திக்க இயலாமல் போய்விடுகிறது. இந்த இடர்பாட்டை தவிர்க்க, வாரத்தில் ஒரு நாள் மாநகராட்சிகளில் உள்ள மண்டல அலுவலகங்களிலும், நகராட்சிகளிலும் பேரூராட்சிகளிலும் பிறப்பு இறப்பு சான்றிதழ், வர்த்தக உரிமம், பாதாள சாக்கடை குழாய் இணைப்பு, குடிநீர் குழாய் இணைப்பு, தொழில் வரி விதிப்பு, சொத்து வரி கேட்பு, கட்டட அனுமதி, பெயர் மாற்றம், காலிமனை வரி விதிப்பு, வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கு சான்றிதழ் ஆகியவை கோரும் விண்ணப்பங்களின் மீது உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கும் வகையில், ''அம்மா மக்கள் சேவை மையம்'' நடத்தப்படும். இந்த மையத்தில் ஒவ்வொரு புதன் கிழமையிலும் மாநகராட்சி மண்டல அலுவலகங்கள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் முறையே உதவி ஆணையாளர்கள், ஆணையர்கள், செயல் அலுவலர்கள்

பொது மக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று, அவற்றின் மீது ஆய்வு செய்து, மக்கள் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கால வரையறைக்கு ஏற்ப ஆணை வழங்க நடவடிக்கை எடுப்பார்கள். அனைத்து விண்ணப்பங்களையும் கணினியில் பதிவு செய்து, ஒவ்வொரு கோரிக்கை மனுவிற்கும் விண்ணப்பதாரர்களுக்கு முறையான பதில் வழங்க ஏற்பாடு செய்யப்படும். இப்பணி முறையாக நடப்பதை உறுதி செய்ய அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும், மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து அந்தந்த துறை தலைவர்கள் வலைதளம் மூலம் கண்காணிக்கும் வசதி ஏற்படுத்தப்படும். இதன் மூலம் அரசின் சேவைகள் பொதுமக்களுக்கு காலவிரயம் இன்றி குறைந்த செலவில் சென்றடைவது உறுதி செய்யப்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் மூலம், மக்களின் அடிப்படை வசதிகள் மேலும் மேம்படவும், பொதுமக்களின் குறைகள் தீரவும் வழி வகுக்கும்.

❋ ❋ ❋

கிராமங்கள் மேம்படவும், கிராம மக்கள் வளம்பெறவும் தேவையான அடிப்படை வசதிகள் உட்கட்டமைப்பு மேம்பாடுகள்!

08.08.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது ஊரகப் பகுதிகளின் வளர்ச்சியில் தான் இருக்கிறது என்பதை நன்கு உணர்ந்த எனது தலைமையிலான அரசு, ஊரகப் பகுதிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளையும், உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்து வருகிறது.

நடப்பாண்டில், ஊரகப் பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் கீழ்க்காணும் திட்டங்களை அறிவிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

1. கிராமப்புற மக்களின் அடிப்படைத் தேவைகளில் முதன்மையானதாக விளங்கும் குடிநீர்த் தேவை பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டு செயலாற்றும் எனது அரசு, கடந்த மூன்று ஆண்டுகளில் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை அமைத்தல், கைப் பம்பு மற்றும் சிறு மின் விசைப் பம்புகள் அமைத்தல், ஏற்கெனவே உள்ள குடிநீர் ஆதாரங்களை சீரமைத்தல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொண்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில், 40 கோடி ரூபாய் செலவில் 1,000 புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்தல், 45 கோடி ரூபாய் செலவில் 3,000 சிறு மின் விசைப் பம்புகள் அமைத்தல், 6 கோடி ரூபாய் செலவில் 1,000 கைப் பம்புகள் அமைத்தல், 10 கோடி ரூபாய் செலவில் பழுதாகியுள்ள 10,000 ஆழ்துளைக் கிணறுகளை புனரமைத்தல் என மொத்தம்

101 கோடி ரூபாய் செலவில் ஊரகப் பகுதிகளில் குடிநீர்ப் பணிகள் இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும்.

2. சுகாதாரமான கிராமங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில், கிராமங்களை சுகாதாரமாகவும் தூய்மையாகவும் பராமரிக்கும் வகையில், 44 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பில் 12,524 கிராம ஊராட்சிகளுக்கும், குப்பைகளை எடுத்துச் செல்வதற்காக 17,638 மூன்று சக்கர மிதி வண்டிகள் வழங்கப்படும். இதன்படி, மக்கள் தொகை 3,000–க்கு குறைவாக உள்ள கிராம ஊராட்சிகளுக்கு தலா ஒரு வண்டியும், மக்கள் தொகை 3,001 முதல் 10,000 வரை உள்ள கிராம ஊராட்சிகளுக்கு தலா இரண்டு வண்டிகளும்; மக்கள் தொகை 10,000–த்திற்கு மேல் உள்ள கிராம ஊராட்சிகளுக்கு தலா மூன்று வண்டிகளும் வழங்கப்படும்.

3. கிராம ஊராட்சிகளின் கட்டமைப்புகளை வலுப்படுத்தும் வகையில், பழுதடைந்த 500 கிராம ஊராட்சி அலுவலகக் கட்டடங்களுக்கு பதிலாக பொதுமக்கள் வந்து செல்லவும், மன்றக் கூட்டங்கள் நடத்தவும், தளவாடப் பொருட்கள் வைக்கவும் ஏற்றவாறு போதிய இட வசதியுடன் கூடிய புதிய ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

4. ஊரகப் பகுதிகளின் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் சாலைகள் நேரடிப் பங்கு வகிப்பதால், கிராமப் பகுதிகளிலுள்ள பழுதடைந்த 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள பேருந்து செல்லும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வலுப்படுத்தப்பட்டு, மேம்பாடு செய்யப்படும். மேலும், இச்சாலைகளை நீண்டகாலம் பயன்படுத்திடும் வகையில், தேவையான வடிகால் கட்டமைப்புகளும் ஏற்படுத்தப்படும்.

5. ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள அங்கன்வாடி மையங்களில், ஊட்டச்சத்து, முன்பருவக் கல்வி, சுகாதாரக் கல்வி, நோய்தடுப்பு, உடல்நல பரிசோதனை போன்றவற்றை பொது சுகாதார துறைகளுடன் ஒருங்கிணைத்து

செயல்படுவதை எனது தலைமையிலான அரசு தொடர்ந்து உறுதி செய்து வருகிறது. இம்முயற்சிக்கு மேலும் வலுவூட்டும் வகையிலும், 6 மாதம் முதல் 6 வயது வரையுள்ள சின்னஞ்சிறு குழந்தைகள், கருவுற்றிருக்கும் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளரிளம் பெண்கள் ஆகியோருக்கு சுகாதாரமான சூழ்நிலையினை அளிக்கும் வகையிலும் 3,000 அங்கன்வாடி மையக் கட்டடங்கள் 195 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

6. ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்களான சுகாதார வளாகங்கள், நீர்த்தேக்கத் தொட்டிகள், அங்கன்வாடி கட்டடங்கள், நூலகங்கள் போன்றவற்றைப் பராமரித்திட மிகுந்த அக்கறையுடனும், பொறுப்புடனும் செயல்பட்டு வரும் எனது தலைமையிலான அரசு, கடந்த மூன்று ஆண்டுகளில் 557 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் 92,031 ஊரகச் சொத்துக்களை சீரமைத்து மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்துள்ளது. இதன் தொடர்ச்சியாக, நடப்பு நிதியாண்டில், ஊரகப் பகுதிகளிலுள்ள 40,680 ஊரகச் சொத்துக்கள் 200 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்படும்.

7. கிராமப் பகுதிகளை தூய்மைப்படுத்தும் வகையில், பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி தார்ச் சாலைகளை அமைக்க உத்தரவிடப்பட்டு, கடந்த மூன்று ஆண்டுகளில் 5,710 கிலோ மீட்டர் நீளமுள்ள பிளாஸ்டிக் தார்ச் சாலைகள் 717 கோடியே 97 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தும் வகையில், இந்த ஆண்டு 175 கோடி ரூபாய் மதிப்பில் 1,600 கிலோ மீட்டர் நீளமுள்ள பிளாஸ்டிக் தார்ச் சாலைகள் அமைக்கப்படும்.

8. அரசு சேவைகளான பல்வேறு சான்றிதழ்கள் வழங்குதல், வரிகளைச் செலுத்துவதற்கான வசதிகள் மற்றும் பல்வேறு வகையான சமூகப் பாதுகாப்பு உதவிகள் பெறுவதற்கான வசதிகள், ஊரக வளர்ச்சித் திட்டங்கள் போன்றவற்றை

வழங்கும் சேவை மையங்களாக கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் திகழ வேண்டும் என்பதே எனது தலைமையிலான அரசின் முக்கிய நோக்கமாகும். இந்த நோக்கத்தை அடையும் வகையில், 4,460 கிராம ஊராட்சி சேவை மையங்கள் 648 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். இதே போன்று, 150 வட்டார ஊராட்சி சேவை மையங்கள் 45 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

9. சுய உதவிக் குழு வங்கிக் கடன் இணைப்பானது, மகளிரை சமூக மற்றும் பொருளாதார ரீதியாக ஆற்றல் படுத்தும் ஒரு முக்கிய உயிர்நாடியாகும். கடந்த மூன்று ஆண்டுகளில், 2 இலட்சத்து 37 ஆயிரம் சுய உதவிக் குழுக்கள் 14,097 கோடி ரூபாய் கடன் உதவி பெற்றுப் பயனடைந்துள்ளன. 2014–2015 ஆம் ஆண்டில், சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 6,000 கோடி ரூபாய் வங்கிக் கடன் பெற வழிவகை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் 2.5 இலட்சம் சுய உதவிக் குழுக்கள் பயனடையும்.

10. கடன் பெறுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்துவதுடன் வங்கிக் கடன் திரும்ப செலுத்தும் பணிகளை நிருவகிக்க சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளரின் சேவை அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு பகுதிக்கும் தலா நான்கு சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களை நியமிக்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி, 2014–2015 ஆம் ஆண்டில் 2000 சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சுய உதவிக் குழு உறுப்பினர்களிலிருந்து தேர்வு செய்யப்படும் இந்த ஒருங்கிணைப்பாளர்களுக்கு மாதாந்திர மதிப்பு ஊதியமாக 2,000 ரூபாய் வழங்கப்படும். இவர்கள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும்

வங்கிகளுக்கும் இடையே ஒரு பாலமாக செயல்பட்டு கல்விக் கடன் வசதி, வங்கிக் கடனை திரும்பச் செலுத்துதல் மற்றும் காப்பீடுப் பணிகளில் ஈடுபடுத்தப்படுவர்.

11. சமுதாய அமைப்பான, கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உரிய அதிகாரம் பெற்று, அவற்றை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்வதை எனது தலைமையிலான அரசு குறிக்கோளாய்க் கொண்டுள்ளது. வறுமையை குறைக்கும் முயற்சியாக, சமுதாய முதலீட்டு நிதி 10 இலட்சம் ரூபாய் ஒவ்வொரு கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கும் வழங்கப்படுகிறது. 2013–2014 ஆம் ஆண்டில், முதல் கட்டமாக அமைக்கப்பட்ட 2,323 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு சமுதாய முதலீட்டு நிதியாக 232 கோடி ரூபாய் எனது அரசால் அனுமதிக்கப்பட்டது. 2014–2015 ஆம் ஆண்டில், இரண்டாம் கட்டமாக எடுக்கப்பட்டுள்ள 3,491 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கும் தலா 10 இலட்சம் ரூபாய் வீதம் 349 கோடியே 10 இலட்சம் ரூபாய் வழங்கப்படும். இந்த நிதி ஆதாரங்கள் மூலம் 5.9 இலட்சம் குடும்பங்கள் நேரடியாக பயன்பெறும்.

12. ஊரகப் பகுதிகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையிலும், ஊரகப் பகுதிகளில் சிறிய அளவில் விவசாய நிலங்களை வைத்திருக்கும் தாழ்த்தப்பட்ட / பழங்குடியின, சிறு மற்றும் குறு விவசாயிகளின் கூடுதல் வருவாய்க்கு வழி ஏற்படுத்தித் தரும் வகையிலும், வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை மற்றும் தமிழ்நாடு நீர்வள மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து 4,000 ஏக்கர் நிலப்பரப்பில் மரக் கன்றுகள் மற்றும் பழக் கன்றுகள் வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவதன் மூலம் 62 கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் 37.54 இலட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்கப்படும்.

13. விவசாயப் பெருங்குடி மக்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களைப் பாதுகாக்க போதிய சேமிப்பு வசதிகள் ஏற்படுத்தும் வகையில், 2014–2015 ஆம் ஆண்டில் ஊரகப் பகுதிகளில் உள்ள 385 வட்டாரங்களில், ஒரு வட்டாரத்திற்கு ஒரு உணவு தானிய சேமிப்பு கிடங்கு என்ற விகிதத்தில், 385 உணவு தானிய சேமிப்பு கிடங்குகள் தலா 8 இலட்சம் ரூபாய் வீதத்தில் 30 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள், கிராமங்கள் மேம்படவும், கிராம மக்கள் வளம் பெறவும், அதன் மூலம் தமிழ்நாடு பல வகையில் முன்னேற்றம் அடையவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

நெசவுத் தொழில் மேம்படவும் சாய / சலவைத் தொழில் காத்திடவும் ரூ.700 கோடியில் வளர்ச்சிக் குழுமம்

11.08.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உயிர்கள் வாழ இன்றியமையாததாக விளங்குகின்ற காற்றிலும், நீரிலும் மாசுகள் கலக்காதவாறு காக்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ள எனது தலைமையிலான அரசு, அதே சமயத்தில் தமிழகத்தின் பெருமை வாய்ந்த ஜவுளித் தொழிலின் முக்கிய அங்கமாகவும், பல்லாயிரக் கணக்கானவர்களின் அடிப்படை வாழ்வாதாரமாகவும் அமைந்துள்ள சாயம் மற்றும் சலவைத் தொழிலைப் பாதுகாப்பதிலும் உறுதியாக உள்ளது.

நாமக்கல், ஈரோடு, சேலம், மற்றும் கரூர் மாவட்டங்களில் அமைந்துள்ள ஏறத்தாழ, 900 குறு மற்றும் சிறு சாய / சலவைப் பட்டறைகள் ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகளை நேரடியாக வழங்குவதோடு மட்டுமல்லாமல் அது சார்ந்த நெசவுத் துறையிலும் இலட்சக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பின் அடிப்படையாகவும் அமைகிறது.

மாறிவரும் சுற்றுச்சூழல் சட்டங்களின் தேவைக்கேற்ப பெரிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் பூஜ்ய திரவ வெளியேற்ற வசதிகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளன. எனது தலைமையிலான அரசின் வட்டியில்லாக் கடன் உதவி மூலம், திருப்பூரில் 18 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், குறு மற்றும் சிறு சாய / சலவைப் பட்டறைகளால் இத்தொழில் நுட்பத்தினை செயல்படுத்த இயலாமல், சுத்திகரிக்கப்படாத சாயக் கழிவு நீரினை நேரடியாக காவிரி, பவானி, அமராவதி மற்றும் பிற நீர்நிலைகளிலும், நிலத்திலும் வெளியேற்றுகின்றன. இதனால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவது மட்டுமல்லாது, நீதிமன்ற

உத்தரவுகளாலும், பெரும்பான்மையான சாய / சலவை பட்டறைகள் தங்களது தொழிலைத் தொடர முடியாத நிலையும், அதனால் தமிழகத்தின் ஜவுளித் தொழில் மிகுந்த பாதிப்புகளுக்கு உள்ளாகி பொருளாதார இழப்புகளும் ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

எனது அரசின் நோக்கம் கட்டுப்பாடுகளைச் செயல்படுத்துவதோடு மட்டுமல்லாமல் "கட்டுப்பாட்டுடன் கூடிய நிலைத்த பொருளாதார வளர்ச்சியை" ஏற்படுத்துவதாகும். எனவே, குறு மற்றும் சிறு சாய / சலவைத் தொழிலுக்கும் மற்றும் அது சார்ந்த ஜவுளித் தொழிலுக்கும் புத்துணர்வு ஏற்படுத்தும் வகையில், இச்சாய / சலவைப் பட்டறைகள் இடம்பெயர உதவி செய்து, ஒரே இடத்தில் ஒருமுகப்படுத்தி தொழில் சார்ந்த வளர்ச்சிக் குழுமமாக உருவாக்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தினால் நேரடியாக சுமார் 10,000 பேருக்கும், அது சார்ந்த நெசவுத் தொழில் மூலமாக சுமார் ஒரு இலட்சம் பேருக்கும் வேலைவாய்ப்புகளை உறுதி செய்ய இயலும்.

700 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான இத்திட்டச் செயல்பாட்டிற்குத் தேவையான முதலீட்டை மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்களைச் சார்ந்த திட்டங்களின் மூலமாக பெற நடவடிக்கை எடுக்கப்படும். எஞ்சிய நிதித் தேவையினை எனது தலைமையிலான அரசு வழங்கும்.இத்திட்டம் நடப்பு நிதியாண்டில் தொடங்கப்பட்டு மூன்று ஆண்டுகளில் முடிக்கப்படும். இத்திட்டத்தினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் மற்றும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை ஆகியவை இணைந்து நடைமுறைப்படுத்தும்.

இதன் மூலம், சாய, சலவை மற்றும் நெசவுத் தொழில் வளர்ச்சி அடைவதோடு மட்டுமல்லாது, தமிழ்நாட்டின் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி சுமார் 7,000 கோடி ரூபாய் அளவிற்கு அதிகரிக்கவும், மாசுக் கட்டுப்பாட்டிற்குள் இருக்கவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

வனவிலங்குகள் பாதுகாப்புக்கு வளமான திட்டங்கள்!

11.08.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மரம் வளர வனம் பெருகும், வனம் பெருக மழை பொழியும், மழை பொழிய பயிர் வளரும், பயிர் வளர மக்கள் உயர்வர், மக்கள் உயர மாநிலம் உயரும் என்பதற்கேற்ப வனங்களைப் பாதுகாத்து, அதன் மூலம் மக்களையும், விலங்குகளையும், பறவைகளையும் காப்பதற்கான பல்வேறுத் திட்டங்களை எனது தலைமையிலான அரசு செவ்வனே செயல்படுத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, நடப்பு ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்களை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாட்டின் சூழல் பாதுகாப்பு மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சியினை உறுதி செய்யவும், தமிழ்நாட்டைப் பசுமை மாநிலமாக்கவும், நடப்பு ஆண்டில் உயிர்ப்பன்மை பாதுகாப்பு, அடிப்படை இயற்கை வளங்களைப் பெருக்க தனியார் நிலங்களில் மரங்கள் வளர்த்தல் மற்றும் ஆளுமைத் திறன் மேம்படுத்துதல் போன்ற முக்கிய செயல்பாடுகளை உள்ளடக்கிய திட்டப்பணிகள் 110 கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

வளமான சூழல் அமைப்பினை உறுதி செய்யும் வகையில், உயிர்ப்பன்மைப் பாதுகாப்பு, வனப் பணியாளர்கள் திறம்பட வனங்களைப் பாதுகாத்து மேம்படுத்திட உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் தமிழ்நாட்டில் பசுமைப் பரப்பினை அதிகரித்தல், காடு வளர்ப்பு போன்ற பணிகள் 35 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடப்பு ஆண்டு மேற்கொள்ளப்படும்.

வனத்துறை களப் பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில், கடந்த ஆண்டு முதல் அவர்களுக்கு மாதந்தோறும் 400 ரூபாய் இடர்படியினை எனது தலைமையிலான அரசு வழங்கி வருகிறது. இயற்கை வளத்தின் சின்னமாக விளங்கும் வனம் மற்றும் வன உயிரினங்களைப் பாதுகாக்கும் பணியில் முறையான பீட் (Beat) பணியாளர்களுக்கு உறுதுணையாக மிகைப்பணியிடத் தோட்டக் காவலர்களும், மிகைப் பணியிட வேட்டைத் தடுப்புக் காவலர்களும் பணிபுரிந்து வருவதால், வனத்துறையின் களப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் இடர்படியின் பயன் இவர்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் அரசுக்கு ஆண்டுதோறும் 76 இலட்சம் ரூபாய் கூடுதலாக செலவாகும். இதன் மூலம் மிகைப் பணியிடத்தில் பணிபுரிந்து வரும் 1,439 தோட்டக் காவலர்களும், 137 வேட்டைத் தடுப்புக் காவலர்களும் பயனடைவார்கள்.

உயிர்ப்பன்மைப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மையில் தமிழ்நாடு தற்போது முன்னிலை வகிக்கும் மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. தமிழ்நாட்டில் தற்போது 14 வன உயிரின சரணாலயங்களும், 5 தேசியப் பூங்காக்களும், 14 பறவைகள் சரணாலயங்களும், 4 புலிகள் காப்பகங்களும், 4 யானைகள் காப்பகங்களும், 3 உயிர்க்கோள் காப்பகங்களும், ஒரு பாதுகாக்கப்பட்ட ஒதுக்குப் பகுதியும் உள்ளன. சுற்றுச் சூழலுடன் இணைந்த உயிர்ப் பன்மை செறிந்துள்ள பகுதிகளை 'பாதுகாக்கப்பட்ட பகுதிகள் மேலாண்மையின், கீழ் கொண்டு வருவதன் மூலம் வன உயிரினங்களின் எண்ணிக்கை அதிகரிக்க உகந்த சூழ்நிலை உருவாக்கப்படுகிறது. எனவே, உயிரியல் முக்கியத்துவம் நிறைந்த பகுதிகளை வன உயிரினச் சரணாலயமாக ஏற்படுத்த எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி, திருநெல்வேலி மாவட்டத்தில் உயிர்ப் பன்மை செறிந்துள்ள பகுதிகளை உள்ளடக்கி தமிழ்நாட்டின் 15 ஆவது வன உயிரினச் சரணாலயமாக, நெல்லை வன உயிரினச் சரணாலயம் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இடம் பெயர்ந்து வரும் பல்வேறு பறவையினங்களின் குளிர்கால புகலிடமாக மட்டுமின்றி, உயிர்ப் பன்மை செறிந்ததாகவும் விளங்கும் விழுப்புரம் மாவட்டத்திலுள்ள ஒசூடு ஏரிப்பகுதி தமிழ்நாட்டின் 15 ஆவது பறவைகள் சரணாலயமாக ஆக்கப்படும்.

வனத்துறையின் களப் பணியாளர்களுக்கு வன உயிரினங்கள் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை, மனித–வன உயிரின மோதல்களைத் தடுத்தல், வனப்பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு பணிகளில் திறம்பட பயிற்சி அளிக்கும் வகையில், ஆனைமலை புலிகள் காப்பகத்தில் அட்டகட்டி மற்றும் முதுமலை புலிகள் காப்பகத்தில் தெப்பக்காடு பகுதிகளிலுள்ள அடிப்படைப் பயிற்சி மையங்கள் 2 கோடி ரூபாய் செலவில் 'மேம்படுத்தப்பட்ட வன உயிரின மேலாண்மைப் பயிற்சி மையங்களாக' தரம் உயர்த்தப்படும். இப்பயிற்சி மையங்களை நிருவகிக்க இரண்டு உதவி வனப் பாதுகாவலர் பணியிடங்கள் உருவாக்கப்படும்.

வனத்துறை மற்றும் அதைச்சார்ந்த மூன்று வனக் கழகங்களில் வனவர், வனக் காப்பாளர், ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக் காப்பாளர் மற்றும் வனக் காவலர் ஆகிய பதவிகளில் காலியாக உள்ள சுமார் 650 காலிப் பணியிடங்கள் தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தால் நேரடி நியமனம் மூலம் நடப்பாண்டில் நிரப்பப்படும். முதன் முறையாக வனத் துறையில் இப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம் மூலம் மகளிரும் தேர்வு செய்யப்பட உள்ளனர் என்பதை இந்த மாமன்றத்திற்கு மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் திட்டங்கள் விலங்குகள் பாதுகாப்பிற்கும்; வருங்கால சந்ததியினரின் வளமான வாழ்விற்கும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* * *

வருவாய்த்துறை சேவைகள் மக்களுக்கு விரைந்து கிடைத்திட 15 புதிய வட்டங்கள் உருவாக்கம்!

11.08.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசின் சட்ட திட்டங்களை நிறைவேற்றும் முக்கிய கருவியாகவும், மக்களை நாடிச் சென்று உதவிகள் புரியும் ஆபத்பாந்தவனாகவும், அரசாங்கத்தின் ஆணிவேராகவும், நிருவாகத்தின் முதுகெலும்பாகவும், மக்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தில் முக்கியப் பங்கு வகிப்பதுமான வருவாய்த் துறையின் செயல்பாடுகளை மேம்படுத்தும் முனைப்பான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

பொதுமக்களின் பயண நேரத்தைக் குறைக்கும் வகையிலும், காலதாமதமின்றி வருவாய்த் துறையின் சேவை மக்களை விரைந்து அடைய வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலும், புதிய கோட்டங்களை உருவாக்குதல், புதிய வட்டாட்சியர் அலுவலகங்களை உருவாக்குதல், ஒவ்வொரு கிராமத்திற்கும் தனியாக கிராம நிருவாக அலுவலர்களை நியமித்தல் போன்ற எண்ணற்ற நடவடிக்கைகளைக் கடந்த மூன்று ஆண்டுகளாக எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, வருவாய்த் துறையின் சேவை மக்களுக்கு விரைந்து கிடைத்திடும் வகையில், நடப்பு ஆண்டில், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அம்பத்தூர் மற்றும் பூந்தமல்லி வட்டங்களைச் சீரமைத்து ஆவடியில் ஒரு புதிய வட்டமும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள காஞ்சிபுரம் வட்டத்தினைப் பிரித்து வாலாஜாபாத்தில் ஒரு புதிய வட்டமும், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள திண்டிவனம் வட்டத்தினைப் பிரித்து மரக்காணத்தில் ஒரு புதிய வட்டமும், கடலூர் மாவட்டத்தில் உள்ள சிதம்பரம் வட்டத்தினைப் பிரித்து புவனகிரியில் ஒரு புதிய

வட்டமும், சேலம் மாவட்டத்தில் உள்ள ஆத்தூர் வட்டத்தினைப் பிரித்து பெத்தநாயக்கன் பாளையத்தில் ஒரு புதிய வட்டமும், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள நாமக்கல் வட்டத்தினைப் பிரித்து சேந்தமங்கலத்தில் ஒரு புதிய வட்டமும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி மற்றும் போச்சம்பள்ளி ஆகிய வட்டங்களைச் சீரமைத்து பர்கூரில் ஒரு புதிய வட்டமும், திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள போளூர், ஆரணி மற்றும் வந்தவாசி வட்டங்களைச் சீரமைத்து சேத்துப்பட்டில் ஒரு புதிய வட்டமும் மற்றும் செய்யாறு வட்டத்தினைப் பிரித்து வெம்பாக்கத்தில் ஒரு புதிய வட்டமும், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள இலுப்பூர் மற்றும் குளத்தூர் வட்டங்களைச் சீரமைத்து விராலிமலையில் ஒரு புதிய வட்டமும், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள சிவகங்கை வட்டத்தினைப் பிரித்து காளையார்கோயிலில் ஒரு புதிய வட்டமும், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இராமநாதபுரம் மற்றும் கடலாடி ஆகிய வட்டங்களைச் சீரமைத்து கீழக்கரையில் ஒரு புதிய வட்டமும், விருதுநகர் மாவட்டத்தில் உள்ள சிவகாசி, இராஜபாளையம் மற்றும் சாத்தூர் ஆகிய வட்டங்களைச் சீரமைத்து வெம்பக்கோட்டையில் ஒரு புதிய வட்டமும், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சங்கரன்கோயில் வட்டத்தினைப் பிரித்து திருவேங்கடத்தில் ஒரு புதிய வட்டமும் மற்றும் தென்காசி, சங்கரன்கோயில், சிவகிரி மற்றும் செங்கோட்டை ஆகிய வட்டங்களைச் சீரமைத்து கடையநல்லூரில் ஒரு புதிய வட்டமும் என மொத்தம் 15 புதிய வட்டங்கள் 45 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்துடன் தமிழ்நாட்டில் தற்போது செயல்பட்டு வரும் 254 வட்டங்களைச் சேர்த்து மொத்தம் 269 வட்டங்கள் செயல்படும்.

எனது தலைமையிலான அரசின் இந்த அறிவிப்பின் மூலம், பொதுமக்களுக்கு வருவாய்த் துறையினரின் சேவை விரைந்து கிடைக்கவும், வருவாய்த் துறையினர் தங்கள் சேவையை எளிதாகவும், விரைவாகவும், திறம்படவும் பொதுமக்களுக்கு ஆற்றவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✶ ✶ ✶

ரூ.40 கோடியில் தமிழ்நாடு மாநில தரவு மையம் நிலை உயர்வு!

11.08.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"யாதும் ஊரே யாவருங் கேளிர்"என்ற புறநானூற்று வரிகளுக்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையில், அறிவியல் யுகத்தில் அளப்பரிய வளர்ச்சியினைப் பெற்று இருக்கின்ற தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் பொதுமக்களுக்கான சேவைகளை விரைந்து வழங்கி வருகின்ற எனது தலைமையிலான அரசு, அதனை மேலும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் முனைப்புடன் எடுத்து வருகிறது.

அந்த வகையில், நடப்பு ஆண்டில் கீழ்க்காணும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. தமிழ்நாடு மாநிலத் தரவு மையம், அதாவது Tamil Nadu State Data Centre தற்போது வணிகவரித் துறை, தமிழ்நாடு சுகாதாரத் திட்டம், சென்னை மாநகராட்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, மெட்ரோ இரயில் திட்டம் உள்ளிட்ட 15–க்கும் மேற்பட்ட அரசுத் துறைகள் மற்றும் திட்டங்களின் கணினி சார்ந்த தேவைகளை வழங்கி வருகிறது. இன்னும் பல அரசுத் துறைகள் தங்களது தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளை அதிக அளவில் பொதுமக்களுக்கு அளித்திட முனைந்து வரும் இத்தருணத்தில், தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தில் தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகள் இத்தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை. அரசுத் துறைகளின் அதிகரித்து வரும் தகவல் உட்கட்டமைப்புத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, 5,000 சதுர அடி பரப்பளவில் புதிய கட்டடம் ஒன்று கட்டி, அதில் 40 அடுக்குகளை, Racks அமைத்து 40 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தின் நிலை உயர்த்தப்படும்.

2. மின்ஆளுமைக்கான தகவல் தொழில்நுட்பச் சேவைகளை தடையில்லாமல் வழங்குதல் அவசியமான ஒன்றாகும். ஆனால், இயற்கை சீற்றங்களான பூகம்பம், வெள்ளம் போன்றவை தரவு மையப் பாதுகாப்பிற்கு சவாலாக உள்ளன. எனவே, இச்சேவைகளுக்கான தரவுகளை பேரிடர் மீட்பு மையம் தவிர மாநகரில் உள்ள வேறு ஒரு இடத்திலும் நகல் ஏற்றுவது அவசியமாகும். அரசின் மின்னாளுமை சேவைகளுக்கான தரவுகளை, மாநில தரவு மையத்திலிருந்து உடனுக்குடன் மற்றொரு இடத்தில் நகல் ஏற்றம் செய்யும் பொருட்டு, 1,250 சதுர அடி பரப்பளவில் ஒரு பேரிடர் தரவு மீட்பு மையம், அதாவது Near Line Disaster Recovery Centre 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

3. தமிழக அரசு "tn.gov.in" என்ற இணைய வரம்பில், Domain Name-இல் அலுவல்சார் தொடர்புக்கான மின்னஞ்சல் முகவரிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இணையப் பாதுகாப்பில் உள்ள சிக்கல்கள் மற்றும் அரசுதுறை தகவல்களின் இரகசியத் தன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, அரசுத் துறைகள் மற்றும் அரசுத்துறை அலுவலர்களின் அலுவல் சார்ந்த மின்னஞ்சல் முகவரிகளையும், மின்னஞ்சல்களையும் நிருவகிக்க ஒரு திடமான, கட்டுறுதியான மின்னஞ்சல் தொகுப்பினைத் தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தில் செயல்படுத்துவது அவசியமாகிறது. சிறந்த, விரைவான, பாதுகாப்பான மற்றும் செயல்திறன் கொண்ட மின்னஞ்சல் தொடர்பினை பல்வேறு இயங்கு தள உதவியுடன் அளிக்கும் வகையில், தமிழ்நாடு அரசின் மின்னஞ்சல் தொகுப்பு ஒன்று 1கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தில் செயல்படுத்தப்படும்.

4. தமிழ்நாடு முழுவதும், இதுவரை 20 இலட்சத்துக்கும் மேற்பட்ட மடிக்கணினிகள் மாணவ மாணவியருக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இம்மடிக்கணினிகளை சிறந்த முறையில் உபயோகப்படுத்துவதற்கான தகவல் தொழில்நுட்ப வளங்களைக் குறைந்த கட்டணத்தில் வழங்குவது அவசியமாகிறது. இளைஞர்களின் தொழில் முனையும் திறனை

மேம்படுத்தும் வகையிலும், அவர்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் வகையிலும், மாணவர்கள் மற்றும் இளம் தொழில் முனைவோர்களுக்கான மேகக் கணினி சார்ந்த சேவைகள், அதாவது Cloud Services மற்றும் இணையப் பதிவேற்ற சேவைகள், அதாவது Web-hosting Services ஆகியவற்றைக் குறைந்த கட்டணத்தில் வழங்கும் திட்டம் 50 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

5. உலகெங்கும் உள்ள தமிழ் அறிஞர்கள், வல்லுநர்கள், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் ஒருங்கிணைந்து இணைய வழிப் பங்காற்றி தகவல்களைப் பகிர்ந்து கொள்ளும் வகையில், தமிழர், தமிழ்மொழி மற்றும் தமிழ் இலக்கியத்தின் சாதனைகளை உள்ளடக்கிய தமிழ்மொழி, கலை மற்றும் பண்பாட்டுக்கான விரிவான இணையவழிக் களஞ்சியம் ஒன்று தமிழ் இணையக் கல்விக் கழகத்தினால் உருவாக்கப்படும். முதற்கட்டமாக இதற்கு 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

6. தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம், உயர் தர கேபிள் டிவி சேவையினை உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் வாயிலாக பொதுமக்களுக்கு மிகக்குறைந்த மாத சந்தா தொகையான 70 ரூபாய்க்கு வழங்கி வருகிறது. அரசு கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்கள் வாயிலாக மாநிலம் முழுவதும் அதிவேக அகண்ட அலைவரிசை சேவைகள், அதாவது Broadband Services மற்றும் இதர இணையதள சேவைகள், அதாவது Internet Services ஆகியவற்றையும் குறைந்த கட்டணத்தில் அரசு கேபிள் டி.வி. இனி வழங்கும். அகண்ட அலைவரிசை உரிமங்கள் பெற்று உள்ளவர்களுடன் இணைந்து வழங்கப்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள், தகவல் தொழில்நுட்பத்தின் கூடுதல் பயனை பொதுமக்களும், அரசுத் துறைகளும் அடைய வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

சிறைவாசிகள் மற்றும் சிறைத்துறைப் பணியாளர்களுக்கு கூடுதல் வசதிகள்!

11.08.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குற்றவாளிகளை சிறையில் அடைத்து சீர்திருத்தி, மறுவாழ்வளித்து, விடுதலைக்குப் பின் அவர்கள் சமுதாயத்தின் அங்கமாகத் திகழ்வதற்கான பணியை செய்து கொண்டிருக்கும் சிறைத் துறையை மேம்படுத்துவதிலும், சிறைத் துறை பணியாளர்களுக்கும், சிறைவாசிகளுக்கும் கூடுதல் வசதிகளை செய்து கொடுப்பதிலும் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

அந்த வகையில், தேனி மாவட்டத்தில் சிறைச்சாலைகள் ஏதும் இல்லாததால் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த சிறைவாசிகள் தற்போது மதுரை மத்திய சிறைக்கும், வளரிளம் சிறைவாசிகள் மதுரை மாவட்டம் மேலூரில் உள்ள பார்ஸ்டல் பள்ளிக்கும் கொண்டு செல்லப்படுகின்றனர். எனவே, இச்சிறைவாசிகளை தேனி மாவட்டத்தில் உள்ள நீதிமன்றங்களில் ஆஜர்படுத்துவதில் உள்ள இடர்பாடுகளைக் களையவும், மதுரை மத்தியச் சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளியில் இட நெருக்கடியைக் குறைக்கவும், 14 கோடி ரூபாய் செலவில் தேனி மாவட்டத்தில் 200 சிறைவாசிகள் தங்கும் வகையில், 'பார்ஸ்டல்' பள்ளியை உள்ளடக்கிய ஒரு மாவட்டச் சிறை அமைக்கப்படும்.

சிறைப் பாதுகாப்புப் பணிகள் மற்றும் அவசரக் கால நேர்வுகளில் பணிபுரிந்திட, சிறைக் களப் பணியாளர்கள் சிறை வளாகத்திலேயே வசிக்க வேண்டியது அவசியமாகும். எனவே, சிறைப் பணியாளர்களின் குடியிருப்புத் தேவைகளைப் பூர்த்தி

செய்வதற்காக ஆண்டுதோறும் 100 குடியிருப்புகள் கட்ட அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. அதன்படி 2012–2013 மற்றும் 2013–2014 ஆம் ஆண்டுகளில் தலா 100 குடியிருப்புகளை கட்ட அரசு ஆணையிட்டுள்ளது. அக்கொள்கை முடிவின் தொடர்ச்சியாக, 2014–2015 ஆம் ஆண்டில் 13 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவில் 100 குடியிருப்புகள் கட்டப்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள், சிறைவாசிகள் மற்றும் சிறைத்துறைப் பணியாளர்கள் கூடுதல் வசதி பெற வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

நீதிமன்றப் புதிய கட்டடங்கள் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள்!

11.08.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஜனநாயகத்தின் தூண்களுள் முக்கியத் தூணாக விளங்கிக் கொண்டிருக்கின்ற நீதித்துறை, நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிக்கும் வகையில் நீதிமன்றங்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளையும், நீதிபதிகளுக்குத் தேவையான குடியிருப்பு வசதிகளையும் எனது தலைமையிலான அரசு ஏற்படுத்தித் தருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் புதிய நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்காக, 225 கோடியே 19 இலட்சம் ரூபாய் நிதியினை எனது தலைமையிலான அரசு ஒதுக்கியுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரியில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்தில், 18 நீதிமன்றங்கள் போதிய இடவசதியின்றி இயங்கி வருவதைக் கருத்தில் கொண்டும், நீதிபதி மற்றும் நீதித்துறை அலுவலர்களுக்குத் தேவையான குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டும், வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் மேற்காணும் நீதிமன்றங்கள் போதுமான இடவசதியுடன் சிறப்பாக செயல்பட கட்டடம் ஒன்றும், நீதிபதிகளுக்கான குடியிருப்புகளும் 20 கோடியே 3 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

இதே போன்று, நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள 8 நீதிமன்றங்கள் பழைமை வாய்ந்த கட்டடத்திலும், பழுதடைந்த கட்டடத்திலும் செயல்படுவதால், அந்தக் கட்டடங்கள் நீதித் துறை அலுவலர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு உகந்ததாக இல்லை

என்பதைக் கருத்தில் கொண்டு, மகளிர் நீதிமன்றம் உட்பட மாவட்டத்தில் உள்ள அனைத்து நீதிமன்றங்களையும் உள்ளடக்கிய அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய, ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் தற்போதுள்ள நீதிமன்ற வளாகத்திலேயே 19 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

இதன் மூலம், நீதிபதிகள் மற்றும் நீதிமன்றங்களுக்கு வருகை புரியும் வழக்கறிஞர்கள் மற்றும் பொதுமக்களுக்கு கூடுதல் வசதி கிடைக்க வழிவகை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

16 வகை பொருட்களுடன் அம்மா குழந்தை நல பரிசுப் பெட்டகம்!

12.08.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஏழை, எளிய மக்களுக்கு, தரமான மருத்துவச் சேவை, தங்கு தடையின்றி கிடைத்திடவும், அனைத்து மக்களும் நோயற்ற வாழ்க்கை வாழவும் தேவையான திட்டங்களை எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் கீழ்க்காணும் திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1) தாய் சேய் நலப் பிரிவுகளை மேம்படுத்தும் வகையில், மதுரை மற்றும் சேலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள தாய் சேய் நலப் பிரிவுகள் 50 கோடி ரூபாய் செலவில், மேன்மைமிகு மையங்களாக மேம்படுத்தப்படும் என என்னால் கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் தொடர்ச்சியாக நடப்பாண்டில் திருச்சி மற்றும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள அரசு இராணியார் மகப்பேறு மருத்துவமனை ஆகியவற்றில் தலா 20 கோடி ரூபாய் வீதம் மொத்தம் 60 கோடி ரூபாய் மதிப்பில் மூன்று மேன்மைமிகு மையங்கள் ஏற்படுத்தப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம், மேற்படி மருத்துவமனைகளின் மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைப் பிரிவுகள் வலுப்படுத்தப்படுவதோடு, 200 படுக்கைகள் கொண்ட கட்டடம் கட்டப்பட்டு, நவீன

மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படும். மேலும், கூடுதலாக சிறப்பு மருத்துவர்கள் நியமனம் செய்யப்படுவார்கள்.

2) திருத்தி அமைக்கப்பட்ட முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், மாதவிடாய் சுகாதாரத் திட்டம், சீரமைக்கப்பட்ட மற்றும் உயர்த்தப்பட்ட நிதி உதவி வழங்கும் டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம், நடமாடும் மருத்துவமனைத் திட்டம் என்ற வரிசையில், அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் 1,000 ரூபாய் மதிப்புடைய "'அம்மா' குழந்தை நல பரிசுப் பெட்டகம்", அதாவது Amma Baby Care Kit வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பெட்டகம், குழந்தையைப் பாதுகாப்பாக பராமரிப்பதற்குத் தேவையான பராமரிப்புத் துண்டு, குழந்தை உடை, குழந்தை படுக்கை, குழந்தைப் பாதுகாப்பு வலை, குழந்தை நாப்கின், 100 மில்லி லிட்டர் அளவு கொண்ட எண்ணெய் டப்பா, பிளாஸ்டிக் குப்பியில் 60 மில்லி லிட்டர் ஷாம்பூ, சோப்புப் பெட்டி, சோப்பு, நக வெட்டி, கிலுகிலுப்பை, பொம்மை, சுத்தமான கைகளுடன் குழந்தையைப் பராமரிக்க பிளாஸ்டிக் டப்பாவில் 250 மில்லி லிட்டர் அளவு கை கழுவும் திரவம், பிரசவித்த தாய்க்கு 100 கிராம் எடையுள்ள சோப்பு, பிரசவித்த தாயின் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், தாய்ப்பாலை அதிகரிக்கவும் 'சௌபாக்கியா' சுண்டிலேகியம், தாய் மற்றும் பச்சிளம் குழந்தையைப் பராமரிக்க தேவையான பொருட்களை வைத்துக் கொள்ள ஒரு பெட்டகம் என 16 பொருட்களை உள்ளடக்கியதாகும். நடப்பு ஆண்டில் இத்திட்டத்திற்கு 67 கோடி ரூபாய் செலவு ஏற்படும். இதனால் 6.7 இலட்சம் குழந்தைகள் பயன்பெறுவர்

3) இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் மற்றும் புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தனியார் மருத்துவமனைகளில் வழங்கப்படும் சிகிச்சைக்கு இணையான சிகிச்சை அரசு மருத்துவமனைகளில் கிடைக்கப் பெற வேண்டும்

என்ற நோக்கத்தில், அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில், தனியார் அமைப்புகளுடன் இணைந்து டயாலிசிஸ் (Dialysis), டயாக்னோசிஸ் (Diagnosis), டயாபிடிஸ் (Diabetes) மையங்கள் நிறுவப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மையங்களில் கூடுதலாக MRI மற்றும் C.T. ஸ்கேன்கள் நிறுவப்படும்.

4) சென்னை அரசுப் பொது மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு கூடுதல் வசதிகள் செய்து தரும் பொருட்டு, புற நோயாளி பிரிவு, முடக்கியியல் பிரிவு, சிறு நீரகவியல் அறுவை சிகிச்சைப் பிரிவு மற்றும் சிறு நீரகவியல் மருத்துவப் பிரிவு ஆகியவற்றிற்கு 50 கோடி ரூபாய் செலவில் அடுக்குமாடிக் கட்டடம் கட்டப்படும்.

5) நிருவாக வசதிக்காகவும், மக்களுக்கு ஏற்படும் சிரமங்களை குறைக்கவும் ஏற்கெனவே உள்ள பெரிய வட்டங்களை பிரித்து, புதிய வட்டங்களை அரசு உருவாக்கி வருகிறது. பல புதிய வட்டங்களில் தற்போது அரசு வட்ட மருத்துவமனை இல்லை. அரசு வட்ட மருத்துவமனை இல்லாத புதிய வட்டங்களில், புதிய அரசு மருத்துவமனைகளை படிப்படியாக ஏற்படுத்தும் வகையில், முதற்கட்டமாக நடப்பாண்டில் 10 வட்டங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் 25 கோடி ரூபாய் செலவில் வட்ட மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

6) அரசு மருத்துவக் கல்லூரி இல்லாத 15 மாவட்டங்களில் உள்ள மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு இணையாக தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற இலக்கை எய்தும் வகையில், மருத்துவர்கள், பணியாளர்களை நியமிக்கவும்; உபகரணங்களை வாங்கவும்; மற்றும் கட்டடங்கள் கட்டுவதற்கெனவும்

97 கோடியே 40 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.இந்தமாவட்டத் தலைமைமருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேலும் மேம்படுத்தும் வகையில், 32 கோடியே 81 இலட்சம் ரூபாய் வழங்கப்படும். இதுவன்றி, மேலும் 12 மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் 31 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

7) தமிழ்நாட்டில் தற்போது 17 மாவட்டங்களில் 19 அரசு மருத்துவக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. கரூர் மாவட்டத்தில் எந்த ஒரு அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரியும் இல்லாததைக் கருத்தில் கொண்டு, கரூர் மாவட்டத்தில் உள்ள பொதுமக்களும், மாணவ, மாணவியரும் பயன்பெறும் வகையில் ஒரு புதிய அரசு மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும்.

8) அரசு மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகளுக்கும் அவர்களுடன் வரும் உடனாளர்களுக்கும், நல்ல குடி தண்ணீர் கிடைக்க வேண்டும் என்பதற்காக, நடப்பாண்டில் 45 மருத்துவம் மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவமனைகள், 30 மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், 240 வட்ட மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள் என மொத்தம் 315 அரசு மருத்துவமனைகளுக்கு 40 கோடி ரூபாய் செலவில் எதிர் சவ்வூடு பரவல் தண்ணீர் உபகரணம், அதாவது Reverse Osmosis Water Plant நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

9) ஏழை நோயாளிகள், அரசு மருத்துவமனைகளில் உயரிய மருத்துவ வசதி பெற வேண்டும் என்பதற்காக அரசு மருத்துவமனைகளுக்கு நவீன மருத்துவக் கருவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி, நடப்பாண்டில், மணப்பாறை, உடுமலைப்பேட்டை, கள்ளக்குறிச்சி,

மயிலாடுதுறை, வாலாஜா, திருப்பத்தூர், காரைக்குடி, அருப்புக்கோட்டை, பரமக்குடி, மேட்டுப்பாளையம், ஆத்தூர் மற்றும் செய்யார் ஆகிய 12 அரசு மருத்துவமனைகளுக்கு எக்ஸ்ரே படத்தைப் பாதுகாத்து அனுப்பும் வசதியுடன் கூடிய டிஜிட்டல் எக்ஸ்ரே கருவிகள் 13 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

இதே போன்று, பொள்ளாச்சி, கடலூர், பென்னாகரம், திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், பத்மநாபபுரம், கரூர், கிருஷ்ணகிரி, உசிலம்பட்டி, நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், மேட்டூர் அணை, காரைக்குடி, கும்பகோணம், உதகமண்டலம், பெரியகுளம், திருவள்ளூர், தென்காசி, திருப்பூர், செய்யார், மன்னார்குடி, மணப்பாறை, கோவில்பட்டி, கள்ளக்குறிச்சி, விருதுநகர், வேலூர் மற்றும் அரியலூர் ஆகிய 31 அரசு மருத்துவமனைகளுக்கு C-Arm எக்ஸ்ரே கருவி மற்றும் முடநீக்கியல் அறுவை சிகிச்சைக்கான கருவிகள் 9 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவிலும் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

10) ஒவ்வொரு வட்டாரத்திலும் 30 படுக்கைகள் கொண்ட ஓர் அரசு மருத்துவமனை அமைக்க வேண்டும் என்பதன் அடிப்படையில், கடந்த மூன்று ஆண்டுகளில், 131 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் 122 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 8 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 18 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக மேம்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

11) கிராமப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு, அவர்கள் வாழும் பகுதிகளிலேயே மருத்துவ வசதிகள் கிடைக்கப் பெற வேண்டும் என்பதன் அடிப்படையில், கடந்த மூன்று ஆண்டுகளில்,

172 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் 134 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நடப்பாண்டில் 21 கோடியே 67 இலட்சம் ரூபாய் செலவில் மேலும் 20 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

12) மருத்துவ பட்டமேற்படிப்பு மாணவர்கள் மற்றும் செவிலிய மாணவியர்கள், அவர்கள் தங்கிப் படிக்க வசதியாக, சென்னை மருத்துவக் கல்லூரியில் 6 கோடி ரூபாய் செலவில் நடப்பாண்டில் புதிய விடுதிகள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

13) அரசு மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகளுக்கு துல்லியமான பரிசோதனை முடிவுகள் அறிந்து சிகிச்சை தர வேண்டும் என்பதற்காக, MRI ஸ்கேன், C.T. ஸ்கேன் போன்ற நவீன மருத்துவக் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் சென்னை ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் 5 கோடி ரூபாய் செலவில் புதியதாக எம்.ஆர்.ஐ. ஸ்கேன் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

14) அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகளில் பணிபுரியும் பயிற்சி மருத்துவர்கள், முதுநிலைப் பட்டம் பயிலும் மருத்துவர்கள், முதுநிலை பட்டயம் பயிலும் மருத்துவர்கள், உயர்தர சிறப்புப் படிப்பு பயிலும் மருத்துவர்கள், நரம்பு அறுவை சிகிச்சை முதுநிலைப் பட்டம் பயிலும் மருத்துவர்கள் என 4,088 பயிற்சி மருத்துவர்கள் தங்களுக்கு வழங்கப்படும் பயிற்சிக் கால உதவித் தொகை உயர்த்தித் தரப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளனர். அவர்களின் கோரிக்கையினை ஏற்று, பயிற்சி மருத்துவர்களுக்கான உதவித் தொகை 8,500 ரூபாயிலிருந்து 13,000 ரூபாயாகவும், முதுநிலைப் பட்டம் பயிலும் மருத்துவர்களுக்கான உதவித் தொகை முதல் ஆண்டிற்கு 18,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாகவும்,

இரண்டாம் ஆண்டிற்கு 19,000 ரூபாயிலிருந்து 26,000 ரூபாயாகவும், மூன்றாம் ஆண்டிற்கு 20,000 ரூபாயிலிருந்து 27,000 ரூபாயாகவும், முதுநிலை பட்டயம் பயிலும் மருத்துவர்களுக்கான உதவித் தொகை முதல் ஆண்டிற்கு 18,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாகவும், இரண்டாம் ஆண்டிற்கு 19,000 ரூபாயிலிருந்து 26,000 ரூபாயாகவும், உயர்தர சிறப்புப் படிப்பு பயிலும் மருத்துவர்களுக்கான உதவித் தொகை முதல் ஆண்டிற்கு 21,000 ரூபாயிலிருந்து 30,000 ரூபாயாகவும், இரண்டாம் ஆண்டிற்கு 22,000 ரூபாயிலிருந்து 30,000 ரூபாயாகவும், மூன்றாம் ஆண்டிற்கு 23,000 ரூபாயிலிருந்து 30,000 ரூபாயாகவும், நரம்பு அறுவை சிகிச்சை முதுநிலை பட்டம் பயிலும் மருத்துவர்களுக்கான உதவித் தொகை நான்காம் ஆண்டிற்கு 21,000 ரூபாயிலிருந்து 30,000 ரூபாயாகவும், ஐந்தாம் ஆண்டிற்கு 22,000 ரூபாயிலிருந்து 30,000 ரூபாயாகவும், ஆறாம் ஆண்டிற்கு 30,000 ரூபாயாகவும் உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இது தவிர, பயிற்சி மருத்துவர்களுக்கு ஆண்டு உதவித் தொகை உயர்வு 400 ரூபாய் எனவும், முதுநிலை மருத்துவர்களுக்கு 700 ரூபாய் எனவும் நிர்ணயம் செய்யப்படும். இதன் மூலம் அரசுக்கு 28 கோடியே 74 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள், அரசு மருத்துவமனைகளின் செயல்பாடுகள் மேலும் சிறந்து விளங்கவும், பொதுமக்கள் குறிப்பாக ஏழை எளிய மக்கள் சிறப்பான உயர் தர மருத்துவ சேவையை அரசு மருத்துவமனைகளில் பெறவும், பயிற்சி மருத்துவர்கள் கூடுதல் உதவித் தொகை பெறவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

இறையன்பர் நலம் பேணும் திருக்கோயில் அறப்பணிகள்

12.08.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்ப் பண்பாட்டின் பெட்டகமாகவும், ஆன்மீகத்தின் இருப்பிடமாகவும், கலைத்திறனின் நிலைக்களமாகவும் விளங்குகின்ற திருக்கோயில்களின் சொத்துக்களைப் பாதுகாத்து பராமரிப்பதிலும், வழிபாடுகளை நடத்துவதிலும், அன்னதானம் உட்பட இறையன்பர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித் தருவதிலும் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

இறையன்பர்களின் வசதிகளை மேலும் மேம்படுத்தும் பொருட்டு கீழ்க்காணும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள திருக்கோயில்களில் உள்ள தொன்மையான ஓவியங்களை பழைமை மாறாது புதுப்பிக்கும் வகையில், தொல்லியல் வல்லுநர்களைக் கொண்ட குழு ஒன்று எனது தலைமையிலான அரசால் அமைக்கப்பட்டது. இந்தக் குழு அளித்த மதிப்பீட்டின்படி, திருநெல்வேலி மாவட்டம், திருப்புடைமருதூர், அருள்மிகு நாறும்பூநாதசுவாமி திருக்கோயில் 5 நிலை ராஜகோபுரத்தில் உள்ள பழமையான சுவரோவியங்களை 1 கோடியே 42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பித்துப் பராமரிக்கப்படும்.

2. 2002 ஆம் ஆண்டு என்னால் துவக்கி வைக்கப்பட்ட திருக்கோயில்களில் அன்னதானம் வழங்கும் திட்டம் தற்போது 518 திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம், ஆன்றோர்கள், சான்றோர்கள், இறையன்பர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை

பெற்றுள்ளதையடுத்து, ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாதசுவாமி திருக்கோயில் மற்றும் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் 13.09.2012 அன்று என்னால் தொடங்கி வைக்கப்பட்டது. திருக்கோயில்களுக்கு வருகை புரியும் பக்தர்களுக்கு பெரும் பயனளிக்கும் இத்திட்டம், நடப்பு ஆண்டில் 3 கோடியே 87 இலட்சம் ரூபாய் செலவில் மேலும் 106 திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

3. இந்து சமய திருக்கோயில்களை ஆகம விதியின்படி 12 ஆண்டுகளுக்கு ஒரு முறையேனும் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தப்பட வேண்டும். இதன்படி, இதுவரை இல்லாத அளவுக்கு, கடந்த மூன்று ஆண்டு காலத்தில், 5,351 திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தப்பட்டது. நடப்பு ஆண்டில் மேலும் 1,006 திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தப்படும். இதற்கென அரசு மானியமாக 6 கோடி ரூபாய் வழங்கப்படும்.

4. இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் இல்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் அமையப் பெற்றுள்ள திருக்கோயில்கள் சரியான பராமரிப்பின்றி சிதிலம் அடைந்து இருப்பதை அறிந்த எனது தலைமையிலான அரசு, கடந்த 3 ஆண்டுகளில், ஆதிதிராவிடர் வாழும் பகுதிகளிலுள்ள 1,630 திருக்கோயில்களை சீரமைக்க, ஒரு திருக்கோயிலுக்கு 50,000 ரூபாய் வீதம் 8 கோடியே 15 இலட்சம் ரூபாய் நிதியினை ஒதுக்கி, அதன் மூலம் அத்திருக்கோயில்கள் பயனடைந்துள்ளன. இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் உள்ள 1,006 திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்திட திருக்கோயில் ஒன்றுக்கு 50,000/– ரூபாய் வீதம் 5 கோடியே 3 இலட்சம் ரூபாய் நிதியுதவி செய்யப்படும்.

5. இந்து சமய அறநிலையத்துறைக் கட்டுப்பாட்டில் உள்ள கிராமப்புறங்களில் அமைந்துள்ள சிறிய திருக்கோயில்கள்

நிதி வசதியின்மையால் திருப்பணிகள் மேற்கொள்ளப்படாது சிதிலம் அடைந்துள்ளதை அறிந்த எனது தலைமையிலான அரசு, திருப்பணிக்கான உதவியை 25,000 ரூபாயிலிருந்து 50,000 ரூபாயாக உயர்த்தியதோடு, கடந்த மூன்று ஆண்டு காலத்தில் 1,262 திருக்கோயில்களுக்கு 6 கோடியே 31 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, அந்த திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. இதன் தொடர்ச்சியாக, நடப்பு ஆண்டில் 1,006 திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்திட திருக்கோயில் ஒன்றுக்கு 50,000/– ரூபாய் வீதம் 5 கோடியே 3 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்.

6. அன்னதானம் அருந்தும் பக்தர்கள் வசதிக்கென அன்னதானக் கூடம் இல்லாத திருக்கோயில்களில் சமையல் அறையுடன் கூடிய அன்னதானக் கூடம் அமைத்தல், அங்கு பக்தர்கள் வசதியுடன் அமர்ந்து உணவருந்தத் தேவையான மேஜை நாற்காலிகள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தருதல் ஆகியவற்றை நிறைவேற்றும் வகையில், கடந்த 3 ஆண்டுகளில் 23 அன்னதானக் கூடங்கள் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 29 அன்னதானக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, நடப்பு ஆண்டில் 16 திருக்கோயில்களில் 3 கோடியே 46 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக அன்னதானக் கூடங்கள் கட்டப்படும்.

7. திருக்கோயில்களில் ஒரு கால பூஜையேனும் நடைபெற வேண்டும் என்ற நோக்கில் ஒரு கால பூஜைத் திட்டத்தை சீரமைத்து இன்று 11,931 கிராமப்புறத் திருக்கோயில்கள் பயனடைந்து வருகின்றன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் அமைந்துள்ள சிறு சிறு திருக்கோயில்கள் உட்பட சிறு சிறு கிராமப்புறத் திருக்கோயில்களிலும், நாள்தோறும் முறையாக பூஜை நடைபெறுவதற்குத் தேவையான பூஜை உபகரணங்கள்

இல்லை என்பது எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. எனவே, கிராமப்புறங்களில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் அமைந்துள்ள திருக்கோயில்கள் உள்ளிட்ட 10,000 சிறு சிறுத் திருக்கோயில்களுக்கு முறையான பூஜை செய்திட ஏதுவாக, பித்தளைத் தாம்பாளம், தூபக்கால், மணி, கார்த்திகை விளக்கு மற்றும் தொங்கு விளக்கு ஆகியவை 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் வாங்கி வழங்கப்படும்.

8. வரலாற்றுச் சிறப்புமிக்க தொன்மையான திருக்கோயில்களை அவற்றின் தொன்மை மாறாது புனரமைத்துப் புதுப்பிக்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்து கடந்த மூன்று ஆண்டுகளில் 186 திருக்கோயில்களுக்கு 67 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டது. இவ்வாண்டு மேலும் 68 தொன்மையான திருக்கோயில்களை அவற்றின் தொன்மை மாறாது புனரமைத்துப் புதுப்பிக்க 22 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

9. பஞ்சபூத தலங்களில் அக்னித் தலமாக விளங்கும் திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலுக்கு வருகை புரியும் பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் நலன் கருதி சுமார் 500 பக்தர்கள் தங்கும் வகையில் பக்தர்கள் தங்கும் விடுதி 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

10. பழம் பெருமை வாய்ந்ததும், 12 ஜோதிர்லிங்க தலங்களில் ஒன்றாக விளங்குவதுமான இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் தங்கி வழிபடுவதற்கும், சுற்றுலாப் பயணிகள் தங்கிச் செல்லவும் போதுமான தங்கும் வசதி இத்தலத்தில் இல்லை என்ற சூழ்நிலையை கருத்தில் கொண்டு, இத்திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் நலன் கருதி சுமார் 500 பக்தர்கள் தங்கும் வகையில் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தங்கும் விடுதி அமைக்கப்படும்.

11. 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பகோணம் நகரில் அமைந்துள்ள மகாமகத் திருக்குளத்தில் மகாமகப் பெருவிழா நடைபெறுவது வழக்கம். இப்பெருவிழா 2016 ஆம் ஆண்டு பிப்ரவரி 13 ஆம் நாள் கொடியேற்றத்துடன் தொடங்கி பிப்ரவரி 22 ஆம் நாள் நிறைவு பெறும். இம்மகாமகப் பெருவிழாவை முன்னிட்டு கும்பகோணம் நகர் பகுதியில் அமைந்துள்ள 86 திருக்கோயில்களில் நல்ல நிலையில் உள்ள 17 திருக்கோயில்கள் தவிர எஞ்சிய 69 திருக்கோயில்கள் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செப்பனிட்டுப் பாதுகாக்கப்படும்.

12. திருக்கோயில்களில் அன்னதானம் வழங்கும் திட்டம் என்னால் துவக்கி வைக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த அன்னதானம் வழங்கும் பணிகளில் சமையல் செய்பவர், உதவியாளர், துப்புரவாளர் என்ற நிலைகளில் 673 நபர்கள் தினக் கூலி அடிப்படையிலும், 147 நபர்கள் தொகுப்பூதிய அடிப்படையிலும் மொத்தம் 820 நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு, தகுதி மற்றும் நன்னடத்தை அடிப்படையில், அந்தந்த திருக்கோயில்களுக்கு உரிய சம்பள விகிதத்தில் ஊதிய நிர்ணயம் செய்து அவர்களுடைய பணி வரன்முறை செய்யப்படும். இதன் மூலம் ஆண்டொன்றுக்கு 7 கோடியே 89 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

13. கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்கள் நிருவாகத்தில் 490 இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள் உள்ளன. இத்திருக்கோயில்களில் மொத்தம் 869 பணியிடங்கள் உள்ளன. இப்பணியிடங்களில் 65 பணியிடங்களுக்கு முதல்நிலைத் திருக்கோயில் பணியாளர்களுக்கான சம்பள விகிதம் நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. எஞ்சிய 804 பணியிடங்கள் சில்லரைச் செலவினப் பணியிடங்கள் என வரையறை செய்யப்பட்டுள்ளது. இச்சில்லரைச் செலவினப் பணியிடங்களில் 356 பணியாளர்கள் மட்டும் சாந்தி அதாவது அர்ச்சகர், காவலர், தவில், வாத்தியம், கொத்தன், சுருதி,

மாலைக்கட்டு போன்ற அத்தியாவசியப் பணியிடங்களில் சம்பள விகிதத்தில் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் 294 சில்லரைச் செலவினப் பணியிடங்களில் மேற்கண்ட பதவிகளில் தினக்கூலி 40/– ரூபாய் என்ற அடிப்படையில் பணிபுரிகின்றனர். இவர்களது பணி, தகுதி மற்றும் நன்னடத்தை அடிப்படையில் ஊதிய விகித முறையில் வரன்முறை செய்யப்படும். இதனால் ஆண்டு ஒன்றுக்கு 46 ,லட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். மேலும், காலியாக உள்ள 154 பணியிடங்கள் தகுதி உடையோரைக் கொண்டு ஊதிய விகித அடிப்படையில் உடனடியாக நிரப்பப்படும்.

14. இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் ஆண்டு வருமான அடிப்படையில் பல்வேறு நிலைகளில் உள்ள திருக்கோயில்களில் பல ஆண்டுகளாக ஏற்பட்ட காலிப் பணியிடங்களில் தினக் கூலி மற்றும் தொகுப்பூதிய அடிப்படையில் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவர்களில் 5 ஆண்டுகளுக்கு மேலாக 8,184 பணியாளர்கள் பணிபுரிகின்றனர். இவர்கள் நீண்ட காலமாகத் தங்களுடைய வாழ்வாதாரத்தை சீரமைத்திட தங்கள் பணியினை ஊதிய விகித அடிப்படையில் வரன்முறைப்படுத்திட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். இவர்களது குடும்ப சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, தினக் கூலி மற்றும் தொகுப்பூதியத்தில் பணிபுரியும் 8,184 பணியாளர்களுக்கு தகுதி மற்றும் நன்னடத்தை அடிப்படையில் ஊதிய விகிதம் நிர்ணயம் செய்யப்பட்டு அவர்களது பணி வரன்முறை செய்யப்படும். இதனால் ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக 44 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகளினால், திருக்கோயில்களுக்கு வருகை புரியும் பக்தர்கள் கூடுதல் வசதியைப் பெறவும், திருக்கோயில் பணியாளர்கள் கூடுதல் சலுகைகளைப் பெறவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

பொன்விழாக் காணும்
பட்டுக்கோட்டை நகராட்சிக்கு
ரூ.25 கோடி செலவில் அபிவிருத்திப் பணிகள்!

12.08.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பண்டைய சிற்பங்களுக்கும், பழமை வாய்ந்த கோயில்களுக்கும் பெயர் பெற்றதும், பெயரிலேயே வளத்தை பிரதிபலிப்பதும், தஞ்சாவூர் மாவட்டத்தின் தன்னிகரற்ற நகரமாக விளங்குவதும், காவேரி ஆற்றில் இருந்து பிரியும் கல்லணைக் கால்வாயில் அமைந்துள்ளதுமான பட்டுக்கோட்டை நகரம், 01.04.1965 அன்று நகராட்சியாக உருவாக்கப்பட்டு, பின்னர் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, இந்த ஆண்டு பொன் விழாவினைக் கொண்டாட இருக்கிறது.

வரலாற்றுப் பாரம்பரியமும், சிறப்பும் கொண்ட இந்தப் பட்டுக்கோட்டை நகரம், 21.83 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது. இந்த நகராட்சியில், 33 வார்டுகள், 73 கிலோ மீட்டர் சாலைகள், 2,883 தெரு விளக்குகள், 5 பூங்காக்கள், 21 ஆரம்ப மற்றும் உயர்நிலைப் பள்ளிகள், பாலிடெக்னிக் மற்றும் அரசு மருத்துவமனை ஆகியவை உள்ளன.

பட்டுக்கோட்டை நகராட்சி தொடங்கப் பெற்று 49 ஆண்டுகள் முடிவடைந்து, பொன்விழா ஆண்டான 50 ஆவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது. பட்டுக்கோட்டை நகராட்சி பொன் விழா காணும் இத்தருணத்தில், அதன் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்பாடு செய்திட அரசிடம் நிதி கோரி பட்டுக்கோட்டை நகராட்சி ஆணையர் அரசுக்கு கடிதம் அனுப்பியுள்ளார். பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினரும் இது குறித்து என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பட்டுக்கோட்டை நகராட்சி தனது பொன்விழா ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது என்பது பெருமைக்குரிய அம்சமாகும். இந்தப் பெருமைக்கு உரிய நிகழ்ச்சியை நினைவு கூரும் வகையில், பட்டுக்கோட்டை நகராட்சியின் குடிநீர் அபிவிருத்தி, சாலை மற்றும் வடிகால் அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை, குளங்களை சீரமைத்தல், பேருந்து நிலைய மேம்பாடு, அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல் உள்ளிட்ட பல்வேறு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக, பட்டுக்கோட்டை நகராட்சிக்கு சிறப்பு உதவித் தொகையாக 25 கோடி ரூபாயினை எனது தலைமையிலான அரசு வழங்கும் என்பதை இந்த மாமன்றத்திற்கு பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் மூலம், பட்டுக்கோட்டை நகராட்சியைச் சார்ந்த மக்களின் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

கட்டுமானத் தொழிலாளர்கள் நலம் காத்து சமூகப் பாதுகாப்பை மேம்படுத்தும் சிறப்பான திட்டங்கள்!

12.08.2014

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உழைத்து வாழ்பவனே வணங்கத் தக்கவன். வாழ்த்துக்கு உரியவன். அந்த உழைப்பாளிக்கு ஊறு ஏற்படுவது சமுதாயத்தின் நல்வாழ்வையே புரையோடச் செய்வதாகும்." என்றார் பேரறிஞர் அண்ணா.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்மொழிக்கு ஏற்ப, அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு வழங்கும் வகையில், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டத்தினை 1982 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இயற்றினார். இந்தச் சட்டத்தின்படி, கட்டுமானத் தொழில்களில் பணிபுரியும் அமைப்பு சாராத் தொழிலாளர்களின் நலன் காக்கும் பொருட்டு, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் 1994 ஆம் ஆண்டு என்னால் உருவாக்கப்பட்டது.

கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள தனி நபர் அல்லது நிறுவனம், தான் மேற்கொள்ள உள்ள கட்டடம் மற்றும் கட்டுமானப் பணியின் உத்தேச மொத்த மதிப்பீட்டில் 1 விழுக்காடு தொகையை பங்களிப்புத் தொகையாக வாரிய நிதிக்கு செலுத்த வேண்டும். இந்த நிதியிலிருந்து பதிவு பெற்ற தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் பல்வேறு நலத்திட்ட உதவிகளை பெற்று வருகின்றனர். கடந்த மூன்று ஆண்டு காலத்தில் மட்டும் 112 கோடியே 96 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் மதிப்புடைய நலத்திட்ட உதவிகள் 3 இலட்சத்து 85 ஆயிரத்து 244 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு உள்ளன.

கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் சமூகப் பாதுகாப்பினை மேலும் மேம்படுத்தும் வகையில், 127 கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பிலான கீழ்க்காணும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. தற்போது பணியிடத்தில் பணியின் போது நிகழும் விபத்தின் காரணமாக அல்லது பிற இடங்களில் நிகழும் விபத்துகளின் காரணமாக பதிவு செய்யப்பட்ட கட்டுமானத் தொழிலாளர் இறக்கும் நேர்வில், அவர்தம் நியமனதாரருக்கு 1 இலட்சம் ரூபாய் நிதி உதவியாக வழங்கப்பட்டு வருகிறது. இதில் பணியில் ஈடுபட்டிருக்கும் போது, பணியிடங்களில் விபத்து ஏற்பட்டு இறக்கும் தொழிலாளர்களுக்கான நிதி உதவி ஐந்து இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.

2. தமிழ்நாட்டை சார்ந்த கட்டுமானத் தொழிலாளர்கள் மட்டுமே தற்போது தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்து கொள்கிறார்கள். வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்து கொள்வதற்கான நடைமுறைகளை வெளி மாநிலத் தொழிலாளர்கள் பூர்த்தி செய்ய இயலாத நிலை உள்ளதால், அவர்களால் கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்து கொள்ள முடியவில்லை. இன்றைய சூழலில், பிற மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு இடம் பெயர்ந்து வரும் தொழிலாளர்கள் கட்டுமானத் தொழிலில் அதிக அளவில் ஈடுபட்டுள்ளதைக் கருத்தில் கொண்டும், வாரியத்தின் நலத்திட்ட உதவிகள் அவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதன் அடிப்படையிலும், வெளி மாநிலத் தொழிலாளர்களால் தாக்கல் செய்யப்படும் ஆவணங்கள் மற்றும் வேலை அளிப்போரின் சான்றிதழ் ஆகியவற்றை மட்டும் பரிசீலித்து, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் அவர்கள் உறுப்பினர்களாகப் பதிவு செய்யப்படுவார்கள்.

3. கட்டுமானப் பணியிடங்களில் சுமை தூக்கிப் பொறி, போக்குவரத்து சாதனங்கள் அல்லது வாகனங்கள் ஆகியவற்றை இயக்குவதில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு மட்டுமே வேலை அளிப்போரால் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. இதர கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு இவ்வசதி இல்லை. எனவே, பாலங்கள், சாலைகள் மற்றும் கட்டடங்கள் கட்டும் கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள கட்டுமானத் தொழிலாளர்களுக்கு அவர்களின் பணியிடம் தேடி சுகாதார சேவைகள் வழங்கும் வகையில், சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் ஆய்வக வசதி மற்றும் பல்வேறு பரிசோதனைகளுக்கான வசதிகளுடன் கூடிய 15 நகரும் மருத்துவமனைகள், பிற மாவட்டங்களில் 35 நகரும் மருத்துவமனைகள் என மொத்தம் 50 நகரும் மருத்துவமனைகள் 19 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். ஒவ்வொரு நகரும் மருத்துவமனையிலும் ஓர் ஆண் மருத்துவர், ஒரு பெண் மருத்துவர், செவிலியர், மருந்தாளுநர், ஆய்வக நுட்புநர், உதவியாளர் போன்றவர்கள் அடங்கிய ஒரு மருத்துவக் குழு இருக்கும்.

4. தற்போது கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்களின் குழந்தைகள் அனைவருக்கும் அவர்கள் பணிபுரியும் இடங்களில் கல்வி வசதி அளிக்க இயலாத நிலை உள்ளது. பெரும்பாலான கட்டுமானப் பணிகள் நடைபெறும் இடங்களில் அவர்களின் குழந்தைகள் குறைந்த எண்ணிக்கையில் உள்ளது தான் இதற்குக் காரணம். எனவே, அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் செயல்படும் மையங்களில் கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி பெற ஏதுவாக, உரிய வாகன வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.

5. கட்டுமானப் பணியிடத்தில் 50 அல்லது அதற்கும் மேற்பட்ட பெண் தொழிலாளர்கள் பணிபுரிந்தால், வேலை அளிப்பவரால்

குழந்தைகள் காப்பகம் ஏற்படுத்தப்பட வேண்டும். குறைவான எண்ணிக்கையில் பெண் தொழிலாளர்கள் பணிபுரியும் இடங்களில் இவ்வசதி கிடைப்பதில்லை. மேலும், பெரும்பான்மையான தொழிலாளர்கள் வேலைக்காக அடிக்கடி இடம் பெயர்ந்து செல்வதால் அவர்களது சொந்த இருப்பிடங்கள் அமைந்துள்ள பகுதிகளில் உள்ள அங்கன்வாடி வசதிகளையும் அவர்களால் பெற இயலவில்லை. எனவே, கட்டுமானத் தொழிலாளர்களுடைய குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் வளர்ச்சிக்கான தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், கட்டுமானப் பணிகள் அதிக அளவில் நடைபெறும் 50 இடங்களில் அங்கன்வாடி மையங்கள் துவங்கப்படும். ஒவ்வொரு அங்கன்வாடி மையமும் சுமார் 400 சதுர அடியில், 20 குழந்தைகளைப் பேணும் வகையில் பொதுப்பணித் துறையினரால் அமைக்கப்படும். இந்த அங்கன்வாடி மையங்களில் 6 மாதங்கள் முதல் 36 மாதங்கள் வரையுள்ள குழந்தைகளுக்கு இணை உணவு வழங்கப்படும். 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு பருப்பு வகைகள், தானியங்கள், எண்ணெய், காய்கறிகள் அடங்கிய சூடான, சத்தான, சமைத்த மதிய உணவு வழங்கப்படும். உணவுடன் திங்கள், புதன் மற்றும் வியாழன் ஆகிய நாட்களில் ஒரு முட்டையும், செவ்வாய்க் கிழமையன்று கடலைப் பருப்பு அல்லது பச்சைப் பயிறு உணவும், வெள்ளிக் கிழமையன்று உருளைக்கிழங்கு சேர்த்த உணவும் வழங்கப்படும். அவர்களை பள்ளிக்குச் செல்ல தயார்படுத்த 2 முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு பாலர் பள்ளி வசதி செய்து தரப்படும். கூடுதலாக மருத்துவ பரிசோதனை, தடுப்பூசி, வைட்டமின் 'A' மாத்திரை, மருத்துவ மற்றும் சுகாதாரக் கல்வி ஆகியவை குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்கு வழங்கப்படும். மேலும், தாய்–குழந்தை இணைப்பு மருத்துவ அட்டை பயனாளிகளுக்கு வழங்கப்படும். இந்தத் திட்டத்திற்காக ஆண்டு ஒன்றுக்கு 2 கோடியே 51 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

6. பொதுவாக, கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு வேலை அளிப்பவரால் பணி இடத்திற்கு அருகில் தற்காலிக இருப்பிட வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும். ஆனால், அவ்வாறு ஏற்படுத்திக் கொடுக்கப்படும் தங்கும் இட வசதிகள் பாதுகாப்பு அற்றதாக உள்ளன. மேலும் சிறிய கட்டுமான நிறுவனங்கள் அதற்கான வசதிகளை செய்து கொடுப்பதே இல்லை. இந்த சிரமங்களைப் போக்கிடும் வகையில், சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில், 5 இடங்களில் தலா 1,000 தொழிலாளர்கள் தங்கும் வகையிலும், திருச்சிராப்பள்ளி, சேலம், மதுரை மற்றும் கோவை ஆகிய மாவட்டங்களில் தலா 500 தொழிலாளர்கள் தங்கும் வகையிலும் என மொத்தம் 7,000 தொழிலாளர்கள் தங்கும் வகையில் 9 இடங்களில் 105 கோடி ரூபாய் செலவில் தூங்கும் அறைகள் அதாவது Dormitories தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தால் பொதுப்பணித் துறை மூலம் கட்டப்படும். இவை கட்டப்படும் வளாகங்களில் அம்மா உணவகம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், சலவை செய்யும் வசதி, குழந்தைகள் மற்றும் முதியோர் பாதுகாப்பு மையம், வங்கி தொடர்பு சேவை, படிப்பகம், சுகாதார மையம், பொழுதுபோக்கு மையம் ஆகியவை ஏற்படுத்தப்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் மூலம், கட்டுமானத் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு மேம்படுத்தப்படுவதுடன், அவர்கள் கூடுதல் வசதியினை பெறவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

ஏழை, எளிய மக்களுக்குத் தரமான உயர்ந்த மருத்துவச் சேவை தங்கு தடையின்றி கிடைக்க வேண்டும்!

25.08.2015

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"விசையுறும் பந்தினைப் போல் – உள்ளம்
வேண்டியபடி செலும் உடல் கேட்டேன்"

என்று சொன்னதைச் செய்யும் உடல் வேண்டி உருகுகிறார் மகாகவி பாரதியார்.

நோயற்ற வாழ்வாகிய குறைவற்ற செல்வத்தைப் பெற்றால் தான் அறிவுச் செல்வம் உட்பட அனைத்துச் செல்வங்களையும் எளிதில் பெற்று மனித வளக் குறியீட்டில் தமிழகம் சாதனைப் படைக்க முடியும் என்பதால் தான் எனது தலைமையிலான அரசு, தமிழக மக்களின் உடல் நலன் பேணும் பல்வேறு நடவடிக்கைகளை கடந்த நான்கு ஆண்டுகளில் எடுத்து அதில் வெற்றியும் கண்டிருக்கிறது. இதன் காரணமாக, தாய் சேய் நலத்தை பேணிக்காப்பது, தொற்றும் மற்றும் தொற்றா நோய்களைத் தடுப்பது மற்றும் கட்டுப்படுத்துவது உள்பட அனைத்திலும் தமிழ்நாடு முன்மாதிரி மாநிலமாக திகழ்கிறது.

சுகாதாரச் சேவைகள் மேலும் செம்மையுற்று, அதன் பயன்கள் மக்களைச் சென்றடையும் வகையில், நடப்பாண்டில் பின் வரும் புதிய திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆரம்ப சுகாதாரச் சேவைகளை வலுப்படுத்த கடந்த நான்காண்டுகளில் 172 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் துவங்கப்பட்டுள்ளன. இவை மட்டுமல்லாது 122 ஆரம்ப

சுகாதார நிலையங்கள் 30 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனைகளாக மேம்படுத்தப்பட்டு உள்ளன. இதன் தொடர்ச்சியாக, நடப்பு ஆண்டில் 10 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் 6 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், 10 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 12 கோடி ரூபாய் செலவில் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் செவிலியர்களுக்கு இருப்பிட வசதிகள் ஏற்படுத்தும் வண்ணம், 60 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 6 கோடி ரூபாய் செலவில் செவிலியர் குடியிருப்புகள் கட்டப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாதுகாப்பான தரமான இரத்தம் மற்றும் இரத்தக் கூறுகள் நோயாளிகளின் தேவைக்கேற்ப உரிய நேரத்தில் கிடைக்கச் செய்வது இன்றியமையாததாகும். அறுவை சிகிச்சைக்கு ரத்தம் தேவைப்படுவது மட்டுமல்லாது, டெங்கு போன்ற நோய்களினால் ஏற்படும் இறப்பைத் தடுப்பதற்கும் இரத்தம் அவசியமாகும். தமிழ்நாட்டில் அரசு அங்கீகாரம் பெற்ற 281 ரத்த வங்கிகளும், 415 இரத்த சேமிப்பு மையங்களும் செயல்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டில் 12 புதிய இரத்த வங்கிகள், 10 இரத்த சேமிப்பு மையங்கள் மற்றும் 10 ரத்த சேகரிப்பு பிரிவுகள் 12 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் குழந்தைகளின் இறப்பு விகிதத்தை குறைப்பதற்கு, பச்சிளம் குழந்தைகள் தீவிர சிகிச்சை மையங்களை அரசு மருத்துவமனைகளில் எனது தலைமையிலான அரசு அமைத்து வருகிறது. தற்போது 64 பச்சிளம் குழந்தைகள் தீவிர சிகிச்சை மையங்கள் செம்மையாக செயல்பட்டு வருகின்றன. இதனை, மேலும் வலுப்படுத்தும் வகையில், தாம்பரம், திருத்தணி, குடியாத்தம், ராஜபாளையம் மற்றும் விருதாச்சலம் ஆகிய 5 மருத்துவமனைகளில், பச்சிளம் குழந்தைகள் தீவிர சிகிச்சை

மையம் 3 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். மேலும், குழந்தைகளுக்கு ஏற்படும் டெங்கு, மூளைக் காய்ச்சல், சாலை விபத்து மற்றும் தற்செயலாக விஷம் அருந்துவது போன்ற அபாயகரமானவற்றிலிருந்து அவர்களை காப்பாற்ற, ராஜபாளையத்தில் 20 படுக்கை வசதி கொண்ட குழந்தைகள் தீவிர சிகிச்சை பிரிவும், தீவிர சிகிச்சைக்குப் பின் நிலைப்படுத்தப்பட்ட குழந்தைகளை அடுத்த 48 மணி நேரத்திற்கு பராமரிக்கும் 5 படுக்கை வசதி கொண்ட ஸ்டெப் டவுன் வார்டும், (Step Down Ward) 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரசவிக்கும் தாய்மார்கள் மற்றும் பச்சிளம் குழந்தைகள் சிகிச்சை முடிந்து கட்டணம் ஏதுமின்றி மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு அழைத்துச் செல்லப்படும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் இதுவரை சுமார் 3 இலட்சம் பிரசவித்த தாய்மார்கள் மற்றும் பச்சிளம் குழந்தைகள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தை மேலும் செம்மையாக செயல்படுத்த 20 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு 20 வாகனங்கள், 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் வாங்கி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

விபத்துகளினால் ஏற்படும் உயிர் இழப்புகளை குறைப்பதற்கும், விலை மதிப்பற்ற மனித உயிர்களை காப்பாற்றவும் '108 அவசரகால ஆம்புலன்ஸ் சேவை' மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் இந்த ஆம்புலன்ஸ்களின் எண்ணிக்கை 406–லிருந்து 751–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் நடப்பு ஆண்டில், முதல் கட்டமாக 50 பழைய ஆம்புலன்ஸ்களுக்கு பதிலாக புதிய ஆம்புலன்ஸ்கள் 5 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆபத்தான நிலையில் உள்ள இளம் குழந்தைகளுக்கு இளம் சிசு பராமரிப்பு மையம் சிறப்பாக சிகிச்சை அளித்து வருகிறது.

இவைகளை வலுப்படுத்தும் பொருட்டு, முதல் கட்டமாக 10 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் 8 மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் செயல்பட்டு வரும் இளம் சிசு பராமரிப்பு மையங்களுக்கு 10 கோடியே 8 இலட்சம் ரூபாய் செலவில் வெண்டிலேட்டர் போன்ற புதிய உபகரணங்கள் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

புற்று நோய் போன்ற தொற்றா நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து குணப்படுத்த எனது தலைமையிலான அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய 4 இடங்களில் மண்டல புற்று நோய் மையங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. புற்று நோயை குணப்படுத்த அடையார் புற்று நோய் மையம் சிறப்பாகச் செயல்பட்டு வருவதால் அதை ஒப்புயர்வு மையமாகத் தரம் உயர்த்த வேண்டும் என்று பாரதப் பிரதமருக்கு நான் கடிதம் எழுதியிருந்தேன். எனது கோரிக்கையினை மத்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இதன்படி, சென்னை, அடையாறு புற்று நோய் மையம், மாநில உயர்நிலை மையமாகவும், ஒப்புயர்வு மையமாகவும் 120 கோடி ரூபாய் செலவில் வலுப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், மார்பக புற்று நோயைக் கண்டறிந்து உறுதி செய்ய 15 மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கு 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில், மேமோகிராபி (Mammography) மருத்துவக் கருவிகள் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை, அறுவை சிகிச்சைக்குப் பின்னர் நோய் தடுப்பு சிகிச்சை உட்பட சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை, காது வால் உள்வைப்பு அறுவை சிகிச்சை மற்றும் ஸ்டெம் செல் மாற்று சிகிச்சை போன்ற ஐந்து வகை உயர் சிகிச்சைகளுக்கு, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் ஒரு வருடத்தில் அனுமதிக்கப்படும் காப்பீட்டுத் தொகை 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கும் மேல் ஏற்படும் கூடுதல் செலவினத்தை அரசே ஏற்கும் வகையில்,

10 கோடி ரூபாய் தொகுப்பு நிதி ஒன்று ஏற்படுத்தப்படும் என்று நான் ஏற்கெனவே அறிவித்ததற்கு இணங்க, மாநில அரசின் பங்காக 10 கோடி ரூபாயும், காப்பீட்டு தொகையிலிருந்து அரசு மருத்துவமனைகளுக்கு கிடைக்கப்பெறும் தொகையிலிருந்து ஒரு பங்கினையும் சேர்த்து ஒரு தொகுப்பு நிதி 2012ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. **இந்த நிதியிலிருந்து, இதுவரை 2,506 பயனாளிகள் உயர் சிகிச்சை பெற்றுள்ளனர். அதற்கென 177 கோடியே 80 இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது** என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதியிலிருந்து பயன்பெறுவோரின் எண்ணிக்கை ஒவ்வொரு மாதமும் கணிசமாக உயர்ந்து வருவதால், இந்தத் தொகுப்பு நிதியை உயர்த்த வேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது. இந்த தொகுப்பு நிதிக்கு – Corpus Fundற்கு, கூடுதலாக 25 கோடி ரூபாய் அரசின் பங்காக வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சர்க்கரை நோயாளிகளின் மூன்று மாத கால சர்க்கரை சராசரி அளவைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்க HbA1C அனலைசர் கருவியும், நோய் தாக்கம் மற்றும் இரத்த உட்கூறுகளின் அளவை கண்டறிய செல் கவுண்டர் (Cell Counter) கருவியும் அனைத்து மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள் என 302 அரசு மருத்துவமனைகளுக்கு 9 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிருவாக வசதிக்காகவும், மக்களின் சிரமங்களைப் போக்கவும், தமிழ்நாட்டில் உள்ள பெரிய வட்டங்களை பிரித்து, புதிய வட்டங்களை அரசு உருவாக்கி வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் 49 புதிய வட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 10 வட்டங்களில், புதிய தாலுக்கா மருத்துவமனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 39 புதிய வட்டங்களில் வட்டத்திற்கு ஒன்று வீதம், 39 வட்டம் சாரா மருத்துவமனைகள் அல்லது மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள், தாலுக்கா மருத்துவமனைகளாக 70 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை அரசு பொது மருத்துவமனையில் உள்ள முட நீக்கியல் சிகிச்சை மையம், மாநிலத்தில் உள்ள முடநீக்கியல் நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்குகிறது. முடநீக்கியல் நோயாளிகள், மற்ற நோயாளிகளிலிருந்து மாறுபட்டு இருப்பதால், அவர்களுக்கு மருந்துகள் வழங்க மற்ற துறைகளை விட கூடுதல் நிதி தேவைப்படுகிறது. எனவே, சென்னை அரசு பொது மருத்துவமனையின் முடநீக்கியல் சிகிச்சை மையத்திற்கு, சிறப்பு மருந்துகளுக்காக 5 கோடி ரூபாய், சிறப்பு நிதியாக வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை அரசு பொது மருத்துவமனையில் பர்னாடு கதிர்வீச்சு நிலையம் Bernard Radiology Institute சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்த நிலையத்தில் அணு மருத்துவத்தைப் பயன்படுத்தி, பொது மற்றும் தனியார் கூட்டாண்மை மூலம் அதாவது, Public Private Partnership மூலம் 25 கோடி ரூபாய் செலவில் புற்றுநோய் இமேஜிங் மற்றும் சிகிச்சைத் திட்டம் மேம்படுத்தப்படும்.

சென்னை எழும்பூரில் உள்ள குழந்தைகள் நல நிலையம் மற்றும் குழந்தைகளுக்கான மருத்துவமனை, குழந்தைகளுக்கு சிகிச்சை அளிப்பதில் சிறப்பான சேவை செய்து வருகிறது. இம்மருத்துவமனைக்கு சென்னை மற்றும் வட தமிழகத்திலிருந்து மட்டும் அல்லாது அண்டை மாநிலமான ஆந்திராவின் பல பகுதிகளிலிருந்தும் குழந்தைகள் வந்து சிகிச்சை பெற்று செல்கின்றனர். இந்த மருத்துவமனையில் மரபியல் காரணங்களால் ஏற்படும் நோயைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்க ஏதுவாக உயர்தர ஆய்வகம் Laboratory for Diagnosing Inherited Disorders ஒன்று 10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் தேவையான மருந்துகள் நோயாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு தமிழ்நாடு அரசு மருந்துக்கு மட்டும் 307 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்கிறது. நடப்பு ஆண்டில் தொற்றா நோய் தடுப்புத் திட்டம், பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம், நகரும் மருத்துவப் பிரிவுத் திட்டம்

ஆகியவற்றிற்காக கூடுதலாக மருந்துகள் வழங்க 102 கோடியே 51 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டு மக்களுக்கு தகுதியான மருத்துவர்களைக் கொண்டு மருத்துவ வசதிகள் வழங்கப்பட வேண்டும் என்பது இந்த அரசின் முன்னுரிமைப் பணிகளில் ஒன்றாகும். புதிய மருத்துவக் கல்லூரிகள் அமைப்பது என்பது ஒரு தொலைநோக்கு திட்டமாகும். இந்திய மருத்துவக் குழுமத்தின் நெறிமுறைகளுக்கு ஏற்ப மருத்துவக் கல்லூரிகளுக்குத் தேவையான மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சாராப் பணியாளர்கள், தேவையான கட்டமைப்பு மற்றும் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும். ஆண்டிற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற அடிப்படையில் எனது அரசு புதிய மருத்துவ கல்லூரிகளை ஏற்படுத்தி வருகிறது. இதன் அடிப்படையில், சிவகங்கை, திருவண்ணாமலை மற்றும் சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டம் ஆகிய இடங்களில் 100 மாணவர்கள் சேர்க்கையுடன் 3 புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே செயல்பட்டு வரும் ஏழு அரசு மருத்துவக் கல்லூரிகளில், கூடுதலாக 410 மருத்துவ மாணவர் சேர்க்கை இடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. கடந்த நான்கு ஆண்டுகளில் இந்த அரசு எடுத்த தொடர் முயற்சிகளினால், கூடுதலாக 710 மருத்துவ பட்டப் படிப்பு இடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. கரூரில் ஒரு புதிய அரசு மருத்துவக் கல்லூரி தொடங்க நான் ஏற்கெனவே ஆணையிட்டுள்ளேன். அதற்கான பணிகள் துவங்கப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக மேலும் ஒரு புதிய அரசு மருத்துவக் கல்லூரி புதுக்கோட்டையில் தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில், ஒரு அரசு பல் மருத்துவக் கல்லூரி மட்டுமே சென்னையில் உள்ளது. எனது தலைமையிலான அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு, இந்த பல் மருத்துவக் கல்லூரிக்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டதன் காரணமாக,

முதுகலை பல் மருத்துவப் படிப்பு மாணவர்கள் சேர்க்கை 35லிருந்து 58ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் பல் மருத்துவமனை ஓர் ஒப்புயர்வு மையமாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. தென் தமிழகத்தில் ஒரு அரசு பல் மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில், 50 கோடி ரூபாய் செலவில், தென் தமிழ்நாட்டில் ஒரு புதிய அரசு பல் மருத்துவக் கல்லூரி தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நடப்பாண்டில் தேனி அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் உள்ள செவிலியர் பயிற்சி பள்ளி மாணவியர்களுக்கு 6 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் விடுதிக் கட்டடம் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு மருத்துவக் கல்லூரிகளில் பணிபுரியும் பேராசிரியர் மற்றும் பணியாளர்களுக்கு தங்கும் குடியிருப்புகள் இருந்தால், அங்கு அவர்கள் தங்கி மேலும் சிறப்பாகப் பணி செய்ய முடியும் என்பதை கருத்தில் கொண்டு, நடப்பாண்டில் செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரியில் 4 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் தங்கும் குடியிருப்புகளும், திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரியில் 3 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில், 30 தங்கும் குடியிருப்புகள் மற்றும் 400 மாணவர்கள் அமரும் வகையில் விரிவுரை அரங்கமும் கட்டப்படும்.

ஓமந்தூரார் அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் நோயாளிகளின் வசதிக்காக மின்கலத்தால் செயல்படும் ஊர்திகள் Battery Operated Cars அறிமுகப்படுத்தப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. இதனைத் தொடர்ந்து, இத்தகைய வசதியை மேலும் விரிவுபடுத்தும் வகையில், முதல் கட்டமாக 20 அரசு மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவமனைகளுக்கு மின்கலத்தால் செயல்படும் ஊர்திகள் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் வாங்கி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோபிச்செட்டிபாளையம் அரசு மருத்துவமனையில் பழுதடைந்துள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவு கட்டடம் இடிக்கப்பட்டு, புதிய கட்டடம் 2 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நோய் இருப்பது உரிய நேரத்தில் அறியப்பட்டால் தக்க சிகிச்சை பெற்று பூரண குணம் அடைய இயலும். எனவேதான் உடல் ஆரோக்கியத்தைக் கண்டறிய முழு உடல் பரிசோதனையை பலரும் மேற்கொள்கின்றனர். தற்போது பல தனியார் மருத்துவமனைகள், முழு உடல் பரிசோதனைக்கு 5,000 ரூபாய் முதல் 12,000 ரூபாய் வரை கட்டணம் வசூலிக்கின்றன. அனைவராலும் அதிக அளவில் கட்டணம் செலுத்தி, முழு உடல் பரிசோதனை செய்து கொள்ள இயலாது. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் வலுப்படுத்தப்பட்டு உள்ளதோடு, நவீன மருத்துவக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளதால், ஆண்கள் மற்றும் பெண்கள் என இருவருக்கும் இத்தகைய உடல் பரிசோதனை செய்யும் வசதிகள் தற்போது அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் உள்ளன. எனவே, முன்னோடித் திட்டமாக, சென்னை அரசு பொது மருத்துவமனையில் "அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டம்" அதாவது, **Amma Master Health Check-up** தொடங்கப்படும். இந்த திட்டத்தில் முழு இரத்த பரிசோதனை, சிறுநீரக பரிசோதனை, இரத்த சர்க்கரை பரிசோதனை, இரத்தக் கொழுப்பு பரிசோதனை, கல்லீரல் செயல்பாடு பரிசோதனை, ஹெப்படைடிஸ் பி இரத்தப் பரிசோதனை, இரத்த வகை மற்றும் ஆர்.எச் (Rh) பரிசோதனை, நெஞ்சு சுருள் படம், நெஞ்சு ஊடுகதிர் படம், மிகையொலி பரிசோதனை (USG – abdomen), இதய மீள் ஒலி பரிசோதனை (echo), தைராய்டு இரத்த பரிசோதனை மற்றும் சிறப்பு சர்க்கரை நோய் பரிசோதனை (HbA1C) ஆகியவை செய்யப்படும். இதே போல் மகளிருக்கு என்று தனியாக "அம்மா மகளிர் சிறப்பு முழு உடல் பரிசோதனை", அதாவது Amma Woman Special Master Health

Check-up என்ற திட்டமும் தொடங்கப்படும். இந்தத் திட்டத்தின் கீழ், மேற்கண்ட அனைத்து பரிசோதனைகளுடன் கூடுதலாக கருப்பை முகைப் பரிசோதனை (pap smear), மார்பக எண்ணியல் ஊடு கதிர்ப்பட பரிசோதனை Digital Mammogram, எலும்பு திறனாய்வு பரிசோதனை, இரத்த வைட்டமின்-டி, கால்சியம், பாஸ்பரஸ் மற்றும் பாரா தைராய்டு ஹார்மோன் (Parathyroid Hormone) பரிசோதனை ஆகியவைகளும் செய்யப்படும். இதற்காக 10 கோடி ரூபாய் செலவில் மருத்துவக் கருவிகள் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். முழு உடல் பரிசோதனைக்கு மிகக் குறைந்த கட்டணமே வசூலிக்கப்படும். மேலும், மாநிலத்திலுள்ள அனைத்து 385 வட்டார அளவிலான மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் வாரத்தில் இரு நாட்களில் பொதுமக்கள் சென்று, இரத்தம் மற்றும் சிறுநீர் பரிசோதனைகள், சர்க்கரை நோய் கண்டறிதல், இரத்த அழுத்தம், இ.சி.ஜி., கொலஸ்ட்ரால், கண் பரிசோதனை போன்ற அனைத்து அடிப்படை பரிசோதனைகளும் கட்டணம் ஏதுமின்றி செய்து கொள்ளும் வகையில் "அம்மா ஆரோக்கியத் திட்டம்" என்ற ஒரு புதிய திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் நோய் அறிகுறிகள் கண்டறியப்பட்டால் அவர்களுக்கு அந்த ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் அரசு மருத்துவமனைகளில் கட்டணம் ஏதும் இல்லாமல் சிகிச்சை அளிக்கப்படும்.

எனது தலைமையிலான அரசு, பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் பல்வேறு சமூக நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். மகப்பேறு காலத்தில் பெண்களின் ஆரோக்கியத்தை காக்க சித்த மருத்துவத்தில் 11 வகை மூலிகை மருந்துகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மகப்பேற்றின் முதல் மூன்று மாதங்களில் வரும் வாந்தி, மயக்கம் போன்றவற்றை தவிர்க்க மாதுளை மணப்பாகு மற்றும் கருவேப்பிலை பொடியையும்; அடுத்த மூன்று மாதங்களின்

போது தாய்க்கு ஏற்படும் இரும்பு சத்து மற்றும் வைட்டமின் சத்து குறைபாட்டை நீக்க அன்னபேதி மாத்திரை, நெல்லிக்காய் லேகியம், ஏலாதி சூரண மாத்திரை போன்றவற்றையும்; கடைசி மூன்று மாதங்களின் போது ஏற்படும் வயிற்று வலி, இடுப்பு வலி போன்றவற்றை குறைக்க உளுந்து தைலத்தையும்; சுக மகப்பேறுக்கு குந்திரிக தைலம் மற்றும் பாவன பஞ்சங்குல தைலத்தையும் பயன்படுத்தலாம். ஒரு பூரண மகப்பேறு மருத்துவம் என்பது குழந்தை பிறப்புடன் முடிந்து விடுவது இல்லை. குழந்தை பிறப்பிற்குப் பிறகு தாய் சேய் நலம் காக்கப்பட வேண்டும் என்பதால் தாய்ப்பால் சுரப்பை அதிகப்படுத்துவதற்காக சதாவேரி லேகியம்; இடுப்பு வலி, கைகால் வலிக்கு பிண்ட தைலம்; குழந்தையின் ஆரம்ப கால நோய்களை சமாளிக்க, உரை மாத்திரை ஆகியவை உள்ளிட்ட 11 வகை மூலிகை மருந்துகள் கொண்ட 'அம்மா மகப்பேறு சஞ்சீவி' என்ற ஒரு முழுமை பெற்ற மருத்துவ பொக்கிஷம் தாய்மை அடைந்த பெண்களுக்கு வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மருந்துகள், சித்த மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்படும். இதற்காக ஆண்டொன்றுக்கு 10 கோடி ரூபாய் செலவிடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் இதுவரை அறிவித்தத் திட்டங்கள், அரசு மருத்துவமனைகளின் செயல்பாடுகள் மேலும் சிறந்து விளங்கவும், அதன் மூலம் தரமான உயர்தர மருத்துவச் சேவை தங்கு தடையின்றி, ஏழை எளிய மக்களுக்கு கிடைக்கவும், ஒளிபடைத்த தமிழகம் உருவாகவும் வழிவகுக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

தமிழ்நாடு அரசு சார்பில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு மணிமண்டபம்!

26.08.2015

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாட்டின் சுதந்திரத்திற்காக போராடிய தியாகிகளையும், சமுதாய மேம்பாட்டிற்காக பாடுபட்ட தலைவர்களையும், தமிழ்மொழியின் வளர்ச்சிக்காகவும், உரிமைக்காகவும் தம்முடைய வாழ்க்கையை அர்ப்பணித்த தமிழ்ச் சான்றோர்கள் மற்றும் பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்களையும் போற்றிப் பெருமைப்படுத்துவதிலும், அவர்களது பெருமைகளை வருங்கால சந்ததியினர் அறிந்து பின்பற்றும் வகையில் நினைவுச் சின்னங்கள் மற்றும் மணிமண்டபங்கள் எழுப்பி மரியாதை செய்வதிலும் எனது தலைமையிலான அரசு இந்தியாவிற்கே வழிகாட்டியாக விளங்குகிறது.

அந்த வகையில், கடந்த நான்கு ஆண்டுகளில் தியாகி சங்கரலிங்கனார், வீரபாண்டிய கட்டபொம்மன், பொறியியல் அற்புதமான கல்லணையைக் கட்டிய கரிகால் சோழன், தென் தமிழகத்தின் உயிர் நாடியாக விளங்கும் முல்லைப் பெரியாறு அணையைக் கட்டிய கர்னல் ஜான் பென்னிகுயிக் ஆகியோருக்கு மணி மண்டபங்களும் தீரன் சின்னமலை, வீரமங்கை வேலுநாச்சியார், வீரத்தாய் குயிலி ஆகியோருக்கு நினைவுச் சின்னங்களும் அமைக்கப்பட்டு என்னால் திறந்து வைக்கப்பட்டன.

மேலும், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம், மனு நீதிச் சோழன், சுவாமி சகஜானந்தா, ஹைதர் அலி – திப்பு சுல்தான் ஆகியோருக்கு மணிமண்டபங்கள் அமைக்கவும், தியாகி சிதம்பரநாதன், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, தியாகி கீழப்பழுவூர் சின்னசாமி ஆகியோருக்கு

திருவுருவச் சிலைகள் எழுப்பவும் என்னால் ஆணையிடப்பட்டு பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன.

நடிகர்களில் சிறப்பிடத்தைப் பெற்றவரும், "இந்து ராஜ்ஜியம்" என்ற நாடகத்தில் பேரரசர் சிவாஜியாக நடித்து தன் திறமையை வெளிப்படுத்தியதன் காரணமாக தந்தை பெரியார் அவர்களால் "சிவாஜி கணேசன்" என்று அன்புடன் அழைக்கப்பட்டவரும், தமிழ், இந்தி, தெலுங்கு, மலையாளம் உள்ளிட்ட 300–க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்து புகழ் பெற்றவரும், "நடிகர் திலகம்" என்று மக்களால் போற்றப்பட்டவரும், 'கலைமாமணி', 'பத்ம ஸ்ரீ', 'பத்மபூஷன்', 'செவாலியே', 'தாதா சாகேப் பால்கே விருது' ஆகிய விருதுகளுக்கு சொந்தக்காரரும், 'வீரபாண்டிய கட்டபொம்மன்', 'கப்பலோட்டிய தமிழன்' போன்ற சுதந்திரப் போராட்ட வீரர்களின் பாத்திரங்களை ஏற்று அற்புதமாக நடித்து, அவர்களின் பங்களிப்பினை திரைப்படங்கள் மூலம், பட்டிதொட்டி எங்கும் எடுத்துச் சென்றவருமான மறைந்த திரு.சிவாஜி கணேசன் அவர்களின் கலைச் சேவையைப் பாராட்டிடும் வகையிலும், அவரது நினைவைப் போற்றிடும் வகையிலும், தென்னிந்திய நடிகர் சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று, நடிகர் சங்கம் சார்பாக நினைவகம் அமைக்கும் வகையில், சென்னை மாவட்டம், அடையாறு பகுதி சத்யா ஸ்டுடியோவிற்கு எதிரே உள்ள பொதுப்பணித் துறைக்கு சொந்தமான 65 சென்ட் நிலத்தினை தென்னிந்திய நடிகர் சங்கத்திற்கு வழங்கிட 26.09.2002 அன்று நான் உத்தரவிட்டேன்.

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் சார்பில் திரு.சிவாஜி கணேசன் அவர்களுக்கு நினைவகம் அமைக்க இடம் ஒதுக்கித் தரும்படி, கேட்டுக் கொண்டதன் பேரில் நான் இந்த உத்தரவை வழங்கினேன். அதன் பேரில் மைலாப்பூர் வட்டாட்சியர் அவர்களால் இந்த இடம் தென்னிந்திய நடிகர் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட இடத்தின் ஊடே நீதியரசர்கள் குடியிருப்புகளுக்குச் செல்லும் சாலை அமைந்திருந்ததால், நீதியரசர்கள் குடியிருப்புக்குச் செல்ல தனியே சாலை அமைப்பதன்

செலவான 4 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயை தென்னிந்திய நடிகர் சங்கம் அளித்திட வேண்டுமென அரசால் கேட்டுக் கொள்ளப்பட்டது. தென்னிந்திய நடிகர் சங்கம் தங்களால் 2 இலட்சம் ரூபாய் மட்டுமே வழங்க இயலும் என தெரிவித்து அதனை 26.07.2004 அன்று வழங்கினர். எனவே, புதிய அணுகு சாலையை அமைப்பதற்கான மீதமுள்ள 2 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயை எனது தலைமையிலான தமிழக அரசே ஏற்றுக் கொண்டது. திரு.சிவாஜி கணேசன் மணிமண்டபம் அமைப்பதற்கு வழங்கப்பட்ட நிலத்தை சுற்றி சுற்றுச் சுவர் ஒன்றை 13.02.2006 அன்று எனது தலைமையிலான அரசே அமைத்தது. தென்னிந்திய நடிகர் சங்கம், திரு.சிவாஜி கணேசன் மணிமண்டபத்தை தாங்களே அமைத்து விடுவோம் என்று தெரிவித்த காரணத்தால் எனது தலைமையிலான அப்போதைய அரசு மணி மண்டபம் கட்டுவதற்கான நடவடிக்கையை எடுக்கவில்லை. திரு.சிவாஜி கணேசன் அவர்களின் மணிமண்டபத்தை அரசே கட்ட வேண்டும் என்று அப்போதே தென்னிந்திய நடிகர் சங்கம் கேட்டிருந்தால், அதற்கான உத்தரவையும் நான் அப்போதே வழங்கியிருப்பேன்.

திரு. சிவாஜி கணேசன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைப்பதற்காக எனது அரசால் வழங்கப்பட்ட இடத்தில், தென்னிந்திய நடிகர் சங்கத்தால் இதுவரை நினைவகம் அமைக்கப்படவில்லை. அந்த இடத்தில் தமிழக அரசே திரு.சிவாஜி கணேசன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைத்திட வேண்டுமென பல்வேறு தரப்பினரும், அரசியல் கட்சியினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே, திரு.சிவாஜி கணேசன் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், மணிமண்டபம் அமைக்க தென்னிந்திய நடிகர் சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ள இடத்தில் மறைந்த நடிகர் திலகம் திரு. சிவாஜி கணேசன் அவர்களுக்கு தமிழக அரசு சார்பாக மணிமண்டபம் அமைக்கப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் இப்பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

வன உயிரிகளிடமிருந்தும், சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாட்டிலிருந்தும் மக்களைக் காக்க முனைப்புடன் செயல்படும் அரசு!

27.08.2015

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு நாட்டின் வளம் வன வளத்தில் அடங்கியுள்ளது. எனவே, எனது தலைமையிலான அரசு, வன வளம் மற்றும் பசுமைப் போர்வையினை பாதுகாப்பதிலும், வன உயிரினங்களிடம் இருந்து மனிதர்களை காப்பதிலும், தமிழக மக்களுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பினை வழங்குவதிலும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இதனை மேலும் செம்மைப்படுத்தும் வகையில் பின் வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாட்டின் பல பகுதிகளில் மாமிச உண்ணிகள், யானைகள், காட்டு மாடுகள், காட்டுப் பன்றிகள் மற்றும் கரடிகளால் மனித–வன உயிரின மோதல்கள் தொடர்பான நிகழ்வுகள் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றன. அத்தகைய மோதல் சூழ்நிலைகளில் அதிவிரைவான செயல்பாட்டுக்கென ஒரு குழுவினை ஏற்படுத்துவது அவசியமாகிறது. அதிநவீன கருவிகளுடன் சிறப்புப் பயிற்சி பெற்ற பணியாளர்களைக் கொண்டதாக அமையப் பெறும் இக்குழு, விரைவாகச் செயல்படுவதுடன், சிக்கலான சூழ்நிலைகளையும் மேலாண்மை செய்யும். மேலும், புலிகள் காப்பகத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் மனித–வன உயிரின மோதல்களில் ஈடுபடும் மாமிச உண்ணிகளை எதிர்கொள்வதற்கு அதிவிரைவு குழுக்கள் உருவாக்குவதை தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் ஏற்றுக் கொண்டுள்ளது. எனவே, கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, ஊட்டி, கூடலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 2015 – 2016ஆம் ஆண்டில்

8 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஐந்து அதிவிரைவு குழுக்கள் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜவ்வாதுமலை, சேர்வராயன் மலை, கொல்லிமலை, பச்சைமலை மற்றும் சித்தேரிமலைப் பகுதிகள் சந்தன மரங்கள் இயற்கையாக வளரும் தாயகமாக உள்ளன. வேலூர், சேலம், ஈரோடு, தர்மபுரி மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் சந்தன மரங்கள் அதிகம் வளரும் இடங்களுக்கு அருகில் உள்ள பட்டா நிலங்கள் மற்றும் காப்புக் காடுகளில் சந்தனமரம் வளர்க்கும் திட்டம் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டம் பழங்குடியினருக்கு வேலை வாய்ப்பளித்து கூடுதல் வாழ்வாதார பாதுகாப்பை உருவாக்குவதுடன், சந்தன மரவளத்தைப் பெருக்கி அரசுக்கு கணிசமான வருவாயை ஈட்டித் தரும். இத்திட்டம் நாளடைவில் வேலை வாய்ப்பிற்காக பழங்குடியினர் வேறு மாநிலங்களுக்கு இடம் பெயர்தலைத் தடுக்கும். இத்திட்டத்திற்கு, ஆண்டொன்றிற்கு தலா 10 கோடி ரூபாய் வீதம் பத்து ஆண்டுகளுக்கு மொத்தம் 100 கோடி ரூபாய் செலவாகும். நடப்பாண்டில் இத்திட்டத்திற்கு 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவில் மிகவும் நகரமயமானதும், தொழிற்சாலைகள் மிகுந்த மாநிலங்களில் ஒன்றாகவும் தமிழ்நாடு விளங்குகிறது. காற்று மாசுபடுவதற்கு முக்கிய காரணியாக வாகனங்கள் மற்றும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் புகை உள்ளது. எனவே, காற்றின் தன்மையை நகர மற்றும் தொழிற்சாலைப் பகுதிகளில் கண்காணிப்பதுமற்றும்தகுந்ததடுப்புநடவடிக்கைகளை மேற்கொள்வது மிகவும் அவசியமாகிறது. எனவே, காற்றின் தன்மையை தொடர்ச்சியாக உடனுக்குடன் கண்காணிக்க மாநிலம் முழுவதும் உள்ளநகரம் மற்றும் தொழிற்சாலைப் பகுதிகளில் 25 இடங்களில் தொடர் காற்று கண்காணிப்பு நிலையங்கள் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் மூலம் காற்றின் தன்மை குறித்த தகவல்களை முழுமையாக சேகரிக்க இயலும். தமிழ்நாடு முழுவதும் அமைக்கப்படும் இத்தகைய தொடர் காற்று கண்காணிப்பு அமைப்பானது இந்தியாவிலேயே முதன்மையானதும் மற்றும் தனிச் சிறப்பும் வாய்ந்ததாகும் என்பதைபெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர் அதிக மதிப்பெண்கள் பெற வழிவகுக்கும் திட்டங்கள்!

27.08.2015

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வலுவான பொருளாதாரத் திட்டங்கள் மற்றும் கல்வி அறிவை அளிப்பதன் மூலம் சமூக மற்றும் பொருளாதார நிலையில் நலிவடைந்துள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்வில் நிரந்தரமான மாறுதலை ஏற்படுத்த இயலும் என்பதால் எனது தலைமையிலான அரசு, அதற்கான திட்டங்களைத் தீட்டி அவற்றை செவ்வனே செயல்படுத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியரின் கல்வி சார்ந்த திட்டங்களை மேலும் வலுப்படுத்தும் வகையில்; நடப்பாண்டில் பின் வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆதிதிராவிடர் நல விடுதிகள், பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு குறித்த நேரத்தில் உணவு தயாரித்து வழங்குவதில் உள்ள சிரமத்தினைக் குறைக்கும் வகையில், நடப்பாண்டில், 160 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கும், 100 ஆதிதிராவிடர் நல பள்ளிகளுக்கும் என மொத்தம் 12 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 260 நீராவி கொதிகலன்கள் வாங்கி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியர் அவரவர் வசதிகளுக்கு ஏற்ப

தட்டு மற்றும் டம்ளர்களை பயன்படுத்தி வருகின்றனர். மாணவ / மாணவியரிடம் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் வளர்க்கும் நோக்கத்தில், 1,314 ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் 98,039 மாணவ / மாணவியருக்கு, 1 கோடியே 46 இலட்சம் ரூபாய் செலவில் எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வாங்கி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பணிபுரியும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர், தங்கள் பணி காரணமாக இருப்பிட மாவட்டங்களையும், குடும்பங்களையும் விட்டு பிற மாவட்டங்களுக்குச் சென்று தங்கி பணி புரியும் போது பாதுகாப்புடனும், கவலையின்றியும், தங்கிப் பணிபுரிவதற்கு ஏதுவாக மகளிர் விடுதிகள் துவங்குவது அவசியமாகும்.

எனவே, முதற்கட்டமாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கோயம்புத்தூர் மற்றும் திருச்சி மாவட்டங்களில் பணிபுரியும் மகளிருக்கான புதிய விடுதிகள் 4 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் / பழங்குடியினர் நல உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர் உயர்கல்வி பயில நீண்ட தூரம் செல்ல வேண்டிய நிலையைக் கருத்தில் கொண்டு தங்கள் இருப்பிடத்திற்கு அருகிலேயே மேல்நிலைக் கல்வி பயில்வதற்கும், விரும்பும் பாடப் பிரிவில் சேர்வதற்கும் ஏதுவாக வரும் கல்வியாண்டில் 5 ஆதிதிராவிடர்/பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாக 2 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் நிலை உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதே போன்று, நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, தங்கள் இருப்பிடத்திற்கு அருகிலேயே பள்ளிக் கல்வியை தொடர

ஏதுவாகவும், இடை நிற்றலை தவிர்க்கும் நோக்குடனும், வரும் கல்வியாண்டில் 15 ஆதிதிராவிடர் /பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் நிலை உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் மாவட்டம் அபினவம் மற்றும் விழுப்புரம் மாவட்டம் வெள்ளி மலையில் 2 ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இதே போன்று, நீலகிரி மாவட்டத்தில் உள்ள 32,813 பழங்குடியினர்கள் பயன்பெறும் வகையில் உதகமண்டலத்தில் உள்ள முத்தோரை பாலாடா பழங்குடியினர் ஆராய்ச்சி மைய வளாகத்தில், 2 கோடி ரூபாய் செலவில் மாதிரி உண்டி உறைவிடப் பள்ளி ஒன்று தோற்றுவிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு கணினி மூலமாக பாடங்களை பயிற்றுவிக்கும் வகையில், அறிவுத் திறன் வகுப்பறை ஏற்படுத்தப்பட்டதை போன்று பழங்குடியினர் உண்டி உறைவிட, உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்கள் பயன்பெறும் வகையில், 1 கோடியே 31 இலட்சம் ரூபாய் செலவில் 26 பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளிகளில் ஒரு பள்ளிக்கு ஓர் அறிவுத் திறன் வகுப்பறை, அதாவது Smart Class Room ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அறிவிப்புகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியர் கல்வியில் அதிக கவனம் செலுத்தி, தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

வருவாய்த்துறை திறம்பட செயலாற்ற 16 வட்டங்கள், 5 வருவாய் கோட்டங்கள்!

31.08.2015

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அனைத்துத் துறைகளுக்கும் தாய்த் துறையாக கருதப்படுவதும், அரசின் சட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தும் முக்கிய கருவியாக விளங்குவதும், நிர்வாகத்தின் அச்சாணியாக விளங்குவதும், கட்டுக்கோப்பான சமுதாய முன்னேற்றத்திற்கும், அதன் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றுவதும், பொதுமக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்ததுமான வருவாய்த் துறையின் சேவைகள் மக்களை விரைந்து சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் கடந்த நான்கு ஆண்டுகளாக வருவாய்த் துறையை வலுப்படுத்தும் பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு தீட்டி செயல்படுத்தி வருகிறது.

வருவாய்த் துறையின் செயல்பாடுகளை மேலும் வலுப்படுத்தும் விதமாக, நடப்பாண்டில் பின் வரும் திட்டங்களை அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

வருவாய்த் துறையின் சேவை மக்களுக்கு விரைந்து கிடைத்திடும் வகையில், கடந்த நான்காண்டுகளில் 4 புதிய கோட்டங்களும், 49 புதிய வட்டங்களும், 59 குறுவட்டங்களும் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. நடப்பு ஆண்டில், திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள திருவண்ணாமலை வட்டத்தைப் பிரித்து கீழ்ப் பென்னாத்தூரில் புதிய வட்டமும்; விழுப்புரம் மாவட்டத்தில் செஞ்சி மற்றும் திருக்கோவிலூர் வட்டங்களைப் பிரித்து முறையே மேல்மலையனூர் மற்றும் கண்டாச்சிபுரம் ஆகிய புதிய இரு வட்டங்களும்; கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள ஓசூர் வட்டத்தைப் பிரித்து சூளகிரியில் ஒரு புதிய வட்டமும்;

தருமபுரி மாவட்டத்திலுள்ள பாலக்கோடு, அரூர் ஆகிய வட்டங்களைச் சீரமைத்து காரிமங்கலத்தில் ஒரு புதிய வட்டமும்; தருமபுரி வட்டத்தைப் பிரித்து நல்லம்பள்ளியில் ஒரு புதிய வட்டமும்; சேலம் மாவட்டத்திலுள்ள ஓமலூர் வட்டத்தைப் பிரித்து காடையாம்பட்டியில் ஒரு புதிய வட்டமும்; காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள ஆலந்தூர் மற்றும் திருப்பெரும்புதூர் ஆகிய வட்டங்களை சீரமைத்து பல்லாவரத்தில் ஒரு புதிய வட்டமும்; வேலூர் மாவட்டத்திலுள்ள அரக்கோணம் மற்றும் குடியாத்தம் வட்டங்களைப் பிரித்து முறையே நெமிலி மற்றும் பேர்ணாம்பட்டு ஆகிய இரு புதிய வட்டங்களும்; திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருநெல்வேலி மற்றும் அம்பாசமுத்திரம் ஆகிய இரு வட்டங்களைப் பிரித்து முறையே மானூர் மற்றும் சேரன்மகாதேவி ஆகிய இரு புதிய வட்டங்களும்; நாமக்கல் மாவட்டத்திலுள்ள திருச்செங்கோடு வட்டத்தைப் பிரித்து கொமாரபாளையத்தில் ஒரு புதிய வட்டமும்; ஈரோடு மாவட்டத்திலுள்ள சத்தியமங்கலம் வட்டத்தைப் பிரித்து தாளவாடியில் ஒரு புதிய வட்டமும்; ஈரோடு வட்டத்தினைப் பிரித்து கொடுமுடி, மொடக்குறிச்சி ஆகிய புதிய இரு வட்டங்களும் என மொத்தம் 16 புதிய வட்டங்கள் 16 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் தமிழ்நாட்டில் தற்போது செயல்பட்டு வரும் 269 வட்டங்களின் எண்ணிக்கை 285 வட்டங்களாக அதிகரிக்கும்.

இதே போன்று, கடந்த நான்கு ஆண்டுகளில் நான்கு புதிய வருவாய் கோட்டங்கள் தோற்றுவிக்கப்பட்டு உள்ளன. சென்னை மாவட்டத்தில் வருவாய் கோட்டங்கள் எதுவும் இல்லை. எனவே, நடப்பாண்டில் சென்னை மாவட்டத்தில் எழும்பூர் மற்றும் தண்டையார்பேட்டை என்ற இரு புதிய வருவாய் கோட்டங்களும்; மதுரை மாவட்டத்திலுள்ள மதுரை கோட்டத்தினைப் பிரித்து மேலூரில் ஒரு புதிய வருவாய் கோட்டமும்; கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள கோயம்புத்தூர் கோட்டத்தைப் பிரித்து கோயம்புத்தூர் (வடக்கு) என்ற ஒரு புதிய வருவாய் கோட்டமும்;

விருதுநகர் மாவட்டத்திலுள்ள சிவகாசி கோட்டத்தைப் பிரித்து சாத்தூரில் ஒரு புதிய வருவாய் கோட்டமும் என மொத்தம் 5 வருவாய் கோட்டங்கள் 1 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் தமிழ்நாட்டில் தற்போது செயல்பட்டு வரும் வருவாய்க் கோட்டங்களின் எண்ணிக்கை 80–லிருந்து 85–ஆக உயரும்.

மொத்தம் 17 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தவிருக்கும் மேற்கண்ட அறிவிப்புகளின் மூலம், பொதுமக்களுக்கு வருவாய்த் துறையினரின் சேவை விரைந்து கிடைக்கவும், வருவாய்த் துறையினர் தங்கள் சேவையை எளிதாகவும், விரைவாகவும், திறம்படவும் பொதுமக்களுக்கு ஆற்றவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

ரூ.100 கோடி மதிப்பீட்டில் கிண்டி தொழிற்பேட்டையில் அடுக்குமாடி வளாகம்!

31.08.2015

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தன்னம்பிக்கையுடன் ஒவ்வொரு மனிதனும் வாழ வகை செய்வதும், அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்குவதும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கக் கூடியதுமான குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களை ஊக்குவித்து, சிறு முதலீட்டாளர்களின் நண்பனாக எனது தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களை மேம்படுத்தும் வகையில், பின் வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அரசின் தொலை நோக்கு கொள்கைகள் மற்றும் மக்களின் தொழில் புரியும் ஆவலான மனநிலை ஆகியவை மாநிலத்தில் மிகப் பெரிய அளவில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அமைவதற்கு அடித்தளமாக அமைந்துள்ளன. 67,000 கோடி ரூபாய்க்கும் அதிகமான முதலீடுகளைக் கொண்ட, பதிவு செய்யப்பட்ட 11 இலட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் அதிகபட்சமாக 60 இலட்சம் நபர்களுக்கு மேல் வேலைவாய்ப்பினை வழங்கி; தமிழ் நாட்டை இந்தியாவின் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களில் முதன்மை மாநிலமாக விளங்கச் செய்துள்ளது. தமிழ்நாட்டினை ஆசியாவின், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் தலைநகரமாக உருவாக்கிட, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான, புதிய தொழிற் கொள்கை உருவாக்கப்படும்.

இந்தப் புதிய கொள்கையானது குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் எதிர்கொண்டு வரும் சவால்களுக்கு தீர்வு காண்பதோடு அல்லாமல், தொலை நோக்கு பார்வை 2023–ன் குறிக்கோளினை எளிதாக அடையவும் வழி வகுக்கும். மேலும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் ஏற்கெனவே உயர் வளர்ச்சி அடைந்துள்ள நிலையில், இத்துறையின் உலக அளவிலான போட்டித் திறனை அதிகரிக்கும் வகையில் துறை சார்ந்த பன்னாட்டு அளவிலான ஆய்வு மேற்கொள்ளப்படும். தமிழ்நாட்டில் உள்ள குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் தற்போதைய போட்டித் திறனை மதிப்பிட்டு உலக அளவில் செயல்பட்டு வரும் இத்தகைய தொழில் நிறுவனங்களின், போட்டி திறனுடன் ஒப்பிட்டு சிறந்த நிலை அடைய இந்த ஆய்வு பயன்படும்.

1958ஆம் ஆண்டில் கிண்டி தொழிற்பேட்டை முதன்முதலாக தமிழக அரசால் சென்னை நகரின் மையப் பகுதியில் உருவாக்கப்பட்டது. இத்தொழிற்பேட்டையில் கிடைமட்ட விரிவாக்கத்திற்கான நிலம் பற்றாக்குறையாக இருப்பதால், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு உதவி செய்வதற்கும்; மேலும் கிண்டி தொழிற்பேட்டையில் ஏற்கெனவே இயங்கி வரும் நிறுவனங்களின் விடுபட்ட தேவைகளை பூர்த்தி செய்வதற்கும்; அடுக்குமாடி தொழில் வளாகம் ஏற்படுத்தித் தருவது அவசியமாகிறது. எனவே, கிண்டி தொழிற்பேட்டையில் ஓர் அடுக்குமாடி தொழில் வளாகம் சுமார் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

சிறைத்துறை மேம்படவும், சிறைப் பணியாளர்கள் செம்மையாகப் பணியாற்றவும் வழிவகுக்கும் திட்டங்கள்!

01.09.2015

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிறைக் கைதிகளை சீர்திருத்தும் இடமாக; அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் இடமாக; மீண்டும் குற்றங்கள் ஏற்படா வண்ணம் தடுக்கும் இடமாக விளங்கிக் கொண்டிருக்கும் சிறைகளின் கட்டமைப்பு, மற்றும் சிறைக் கைதிகளின் வாழ்க்கைத் தரம் ஆகியவற்றை மேம்படுத்தி; சிறைப் பணியாளர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுப்பதில் இந்தியாவிற்கே வழிகாட்டியாக எனது தலைமையிலான தமிழ்நாடு அரசு விளங்கிக் கொண்டு இருக்கிறது.

இப்படிப்பட்ட இன்றியமையாத் துறையை மேலும் மேம்படுத்தும் வகையில், பின்வரும், புதிய அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழக சிறைத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் 9 மத்திய சிறைகள்; 3 பெண்கள் தனிச் சிறைகள்; பார்ஸ்டல் பள்ளி (வளர் இளம் பருவத்தினர் சீர்திருத்தப் பள்ளி); மற்றும் மாவட்டச் சிறை, புதுக்கோட்டை ஆகியவற்றில் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் சிறைவாசிகளுக்கு அவசர மருத்துவ சிகிச்சை அளிப்பது மற்றும் சிறைகளிலுள்ள 30 அவசர கால ஊர்திகளிலும்; உயிர் காக்கும் மருத்துவ உபகரணங்களை இருப்பில் வைத்திருப்பது ஆகியவை இன்றியமையாததாகும். இதனைக் கருத்தில் கொண்டு, 9 மத்திய சிறைகள்; 3 பெண்கள் தனிச் சிறைகள்; ஒரு பார்ஸ்டல் பள்ளி மற்றும் மாவட்ட சிறை ஆகியவற்றில் உள்ள 13 மருத்துவமனைகள்

மற்றும் 30 அவசர கால ஊர்திகளுக்கு 2 கோடியே 34 இலட்சம் ரூபாய் செலவில் ஆக்ஸிஜன் (OXYGEN) புளோ மீட்டர்; டிராலி, மல்டி சேனல் மானிட்டர், (Multi-Channel Monitor), வென்டிலேட்டர் முதலிய 13 வகையான உயிர் காக்கும் மருத்துவ உபகரணங்கள் வாங்கி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறைத் துறைப் பணியாளர்களின் நலனைக் கருத்திற் கொண்டு, சிறைப் பணியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் 100 குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசால் கொள்கை அளவில் ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 2012–2013; 2013–2014; மற்றும் 2014–2015 ஆகிய ஆண்டுகளில், தலா 100 குடியிருப்புகள் வீதம் 300 குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. இவற்றில் 100 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு சிறைத் துறை பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 100 குடியிருப்புகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 100 குடியிருப்புகள் கட்ட தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளன.

நடப்பாண்டில் மேலும் 100 களப் பணியாளர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கும் வகையில், 14 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவினத்தில், புழல் வளாகம்; பாளையங்கோட்டை மற்றும் கோவை ஆகிய மத்திய சிறை வளாகங்களில் தலா 30 குடியிருப்புகள்; புதுக்கோட்டை, பார்ஸ்டல் பள்ளி மற்றும் மாவட்ட சிறை வளாகத்தில் 10 குடியிருப்புகள் என மொத்தம் 100 குடியிருப்புகள் கட்ட அனுமதி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அறிவிப்புகள் சிறைத் துறை மேம்படவும், சிறைப் பணியாளர்கள் மேலும் செம்மையாகப் பணியாற்றவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

தமிழகம் மின் நிலைமையில் தன்னிறைவு பெறும் அளவுக்கு அளப்பரிய சாதனைகள்!

01.09.2015

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கண்ணால் காண முடியாத, செயலால் மட்டுமே பார்க்கக் கூடியதும், நாட்டின் பொருளாதாரத்திலும், மனிதனின் வாழ்வாதாரத்திலும் முக்கியப் பங்கு வகிப்பதுமான மின்சாரத் துறையில் தமிழகம் தன்னிறைவு பெறும் அளவுக்கு கடந்த நான்கு ஆண்டுகளில் எனது தலைமையிலான அரசு அளப்பரிய சாதனைகளை செய்துள்ளது.

எனது தலைமையிலான அரசு, 2011 ஆம் ஆண்டில் பொறுப்பேற்றதிலிருந்து தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக மின் திட்டங்கள், கூட்டு முயற்சி திட்டம், மத்திய மின் உற்பத்தி திட்டங்களிலிருந்து கிடைக்கும் பங்கு மற்றும் மின் கொள்முதல் மூலம், இதுவரை 5954.5 மெகாவாட் மின்சாரம் மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன் பயனாக, தமிழக மக்களுக்குத் தரமான மற்றும் தடையில்லா மின்சாரம் கிடைக்கப் பெற்று வருகின்றது.

மேலும், அதிகரித்து வரும் மின் தேவையை கருத்திற்கொண்டு எனது தலைமையிலான அரசு ஏற்கெனவே பல புதிய மின் உற்பத்தித் திட்டங்களை தொடங்க அறிவித்திருந்தது. அதில் 660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டம் மற்றும் தலா 660 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு அலகுகள் உடைய எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டல அனல் மின் திட்டங்களுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், எதிர்கால மின் தேவையை கருத்திற் கொண்டு 800 மெகாவாட் திறன் கொண்ட, வட சென்னை அனல் மின் திட்டம் நிலை–III, தலா 800 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு அலகுகள் உடைய உப்பூர் அனல் மின் திட்டம், தலா 660 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு அலகுகள் உடைய உடன்குடி அனல் மின் திட்டம் மற்றும் 660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் மாற்று அனல் மின் திட்டம் ஆகிய திட்டங்களுக்கான ஆரம்பகட்ட பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 2000 மெகாவாட் சில்லஹல்லா நீரேற்று புனல் மின் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தலுக்கான பணி நடைபெற்று வருகிறது.

இதே போன்று மின் கட்டமைப்பை வலுப்படுத்தும் விதமாக, கடந்த நான்கு ஆண்டுகளில் பல்வேறு துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்தை மின்நிலைமையில் தன்னிறைவு பெற்ற மாநிலமாக மாற்ற தமிழ்நாடு தொலைநோக்குப் பார்வை 2023 ஆவணத்தில் நிர்ணயித்த இலக்கான கூடுதல் 20,000 மெகாவாட் மின் நிறுவுத் திறன் ஏற்படுத்தும் நோக்குடன் பல்வேறு திட்டங்கள் என்னால் அறிவிக்கப்பட்டு அதற்கான பணிகள் துவங்கப்பட்டுள்ளன. இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி தாலுகாவில் 4,000 மெகாவாட் திறன் கொண்ட ஒரு மாபெரும் அனல் மின் திட்டம் 24,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்திற்குத் தேவையான சுமார் 3000 ஏக்கர் நிலம் கொண்ட நல்லாம்பட்டி வருவாய் கிராமத்தில் கண்டறியப்பட்டுள்ளது. தேவையான திட்ட அனுமதிகளை பெற்ற பின் இம்மின் திட்டம் தொடங்கப்படும்.

மின் கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில் 400 கிலோ வோல்ட் மற்றும் 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மின் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில், வட சென்னையில் 765/400 கிலோ வோல்ட் 3x1500 எம்.வி.ஏ. திறன் கொண்ட தொகுப்பு துணை மின் நிலையம் 2,335 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும். இந்த தொகுப்பு துணை மின் நிலையம் 765/400 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அரியலூர் மற்றும் 400 கிலோ வோல்ட் புளியந்தோப்பு ஆகிய துணை மின் நிலையங்களுடன் இணைக்கப்பட்டு வட சென்னை மற்றும் எண்ணூரில் அமையவிருக்கும் அனல் மின் நிலையங்களில் உற்பத்தியாகும் மின்சாரத்தை வெளியேற்ற வழிவகை செய்யும்.

மேலும், அரியலூரில் 765/400 கிலோ வோல்ட் 2 x 1500 எம்.வி.ஏ., திறன் கொண்ட துணை மின் நிலையம் 2121 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் துணை மின் நிலையம் 765/400 கிலோ வோல்ட் திருவலம் துணை மின் நிலையத்துடன் இணைக்கப்பட்டு வட சென்னை மற்றும் எண்ணூரில் அமையவிருக்கும் அனல் மின் நிலையங்களில் உற்பத்தி செய்யப்படவிருக்கும் மின்சாரத்தை கடத்துவதற்கு துணை புரியும்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் 765/400 கிலோ வோல்ட் 2 x 1500 எம்.வி.ஏ. திறன் கொண்ட துணை மின் நிலையம் 2,335 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த துணை மின் நிலையம் அரியலூர் 765/400 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் மற்றும் 400 கிலோவோல்ட் எடையார் பாளையம், ராசிப்பாளையம் துணை மின் நிலையங்களுடன் இணைக்கப்பட்டு, கோவை, சேலம் மற்றும் மேட்டூர் பகுதிகளின் மின் கட்டமைப்பை வலுப்படுத்தும்.

மேற்காணும் அறிவிப்புகள் மூலம் தமிழகம் மின்சாரத்தில் மின் மிகை மாநிலம் என்ற நிலையைப் பெறுவதோடு, தொழில் வளர்ச்சி மேன்மையடைந்து வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் வழி வகுக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

ஜவுளித் தொழில் உற்பத்தி பெருகும்! நெசவாளர்களின் வாழ்வு பொலிவுறும்!

01.09.2015

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்கினை வகிப்பதிலும், மரபு மற்றும் பண்பாட்டினை பாதுகாப்பதிலும், வேலை வாய்ப்புகளை உருவாக்குவதிலும், முக்கியப் பங்கு வகிக்கும் கைத்தறி மற்றும் துணிநூல் துறையை ஊக்குவிக்கும் வண்ணமும், இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களின் சமூக பொருளாதார நிலையினை மேம்படுத்தும் வண்ணமும் பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு கடந்த நான்கு ஆண்டுகளாக எடுத்து வருகிறது.

கைத்தறி மற்றும் துணிநூல் தொழிலையும், நெசவாளர்களையும் மேலும் ஊக்குவிக்கும் வகையில், பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாடு பல ஆண்டுகளாக இந்திய ஜவுளித் தொழிலில் முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. ஜவுளித் தொழிலின் பல்வேறு பிரிவுகளான கைத்தறி, விசைத்தறி, நூற்புப் பிரிவு, ஆயத்த ஆடை மற்றும் பின்னலாடை பிரிவுகளை மேலும் வலுப்படுத்தி, வளர்ச்சியினை அடையும் விதமாக அனைத்து பிரிவுகளின் கருத்துக்களைப் பெற்று ஒருங்கிணைந்த வளர்ச்சியினை அடையும் விதமாக ஒவ்வொரு பிரிவிலிருந்தும் பிரதிநிதிகளை உள்ளடக்கி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் "மாநில ஜவுளி ஆலோசனைக் குழு" ஒன்று அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள 83 பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் மூலம் ஆண்டொன்றுக்கு சுமார் 200 கோடி ரூபாய் முதல் 220 கோடி ரூபாய் மதிப்பிலான பட்டுத் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் ஆகியவற்றின் பட்டு ரக விற்பனையினை மேம்படுத்தவும் சரக்கு இருப்பினை வெகுவாகக் குறைக்கவும் அதன் மூலம் நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பினை உறுதி செய்யவும், பட்டு ரக துணிகளின் விற்பனைக்கு 15 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் அரசுக்கு 10 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

ஜவுளித் தொழிலில், சர்வதேச தரத்துடன் கூடிய உட்கட்டமைப்பு வசதிகளை ஒரே இடத்தில் ஏற்படுத்தும் வகையில், மத்திய அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்கும் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 14 ஜவுளிப் பூங்காக்கள் 983 கோடியே 41 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒப்பளிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் அதிக எண்ணிக்கையிலான ஜவுளிப் பூங்காக்களை உருவாக்குவதன் மூலம் ஜவுளித் தொழில் வளர்ச்சி அடையும். தமிழ்நாட்டில் உள்ள ஜவுளி மையங்களில் சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்கள் அமைப்பதை ஊக்குவிக்கும் வகையிலும், உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கும் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்க முன் வரும் தொழில் முனைவோர்களுக்கு 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் வரை நிதி உதவி தமிழக அரசால் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய பதனிடுதல் பூங்காக்கள் உருவாக்குவதுடன் அல்லாமல், ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட பதனிடும் குழுமங்களை மேம்படுத்த, குறிப்பாக, பதனிடும் தொழிலுக்கு நீர் மற்றும் கழிவுநீர் மேலாண்மை பிரிவுகளை மேம்படுத்த மைய அரசு "ஒருங்கிணைந்த பதனிடும் மேம்பாட்டுத் திட்டம்" என்ற

புதிய திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. ஜவுளித் துறையில், தரமான சுற்றுச்சூழல் மற்றும் தொழில்நுட்பத்தினை ஏற்படுத்தி உலகளாவிய போட்டியினை எளிதாக எதிர்கொள்வதே ஒருங்கிணைந்த பதனிடும் மேம்பாட்டு திட்டத்தின் முதன்மை நோக்கமாகும். மத்திய அரசின் ஒருங்கிணைந்த பதனிடும் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஜவுளித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழில் நிறுவனங்களுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட திட்ட மதிப்பீட்டில் மாநில அரசின் பங்காக 25 விழுக்காடு அளவிற்கு நிதி உதவி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசின் ஜவுளி அமைச்சகத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வந்த கிரியா ஊக்கத் திட்டத்திற்கு வழங்கப்பட்டு வந்த நிதியுதவிகள் சிலவற்றை 2015–2016 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு நிறுத்திவிட்டது. இருப்பினும், தமிழக பட்டு விவசாயிகளின் நலன்களைத் தொடர்ந்து பாதுகாத்திடும் வகையில் நிறுத்தப்பட்ட சிலவற்றில் முக்கிய திட்டங்களுக்கு மத்திய அரசின் பங்கினையும் சேர்த்து மாநில அரசு 2015–2016 ஆம் ஆண்டு முதல் கூடுதல் நிதியினை வழங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

- 5 கோடியே 25 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கி, 5,000 ஏக்கரில் உயர் விளைச்சல் தரும் மல்பரி ரகங்களை நடவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.
- 5 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் நவீன பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் விவசாய உபகரணங்கள் 1,000 விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.
- தனியாக பட்டுப்புழு வளர்ப்புக் குடில் கட்ட 1,000 பட்டு விவசாயிகளுக்கு 8 கோடியே 5 இலட்சம் ரூபாய் மானியம்

வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

- 4 கோடி ரூபாய் மானியத்தில், பட்டு விவசாயிகளுக்கு 1400 மல்பரி ஏக்கரில் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திட்டங்கள் 22 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்காணும் அறிவிப்புகள், ஜவுளித் தொழில் உற்பத்தி பெருகவும், நெசவாளர்களின் வாழ்வு மேலும் பொலிவுறவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

கிராமங்கள் மேம்படவும், சுயஉதவிக் குழுக்கள் வளர்ச்சி அடையவும், இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறவும் நடவடிக்கை!

03.09.2015

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஊர் செழித்தால் நாடு செழிக்கும்" என்பதற்கேற்ப, ஊராட்சிகளில் வாழும் மக்கள் நலன் கருதி நகரங்களில் கிடைக்கப்பெறும் அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை கிராமங்களிலும் எனது தலைமையிலான அரசு ஏற்படுத்தி வருகிறது. ஊரக சாலைகளை மேம்படுத்துதல், வீட்டு வசதியினை அளித்தல், தூய்மையான சுற்றுப்புறம் மற்றும் சுகாதாரத்தைப் பேணுதல், ஊரக மக்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகளை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

அந்த வகையில், நடப்பாண்டில், ஊரகப் பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் பின் வரும் திட்டங்களை அறிவிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

ஊரகச் சாலைகள் சமூகப் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்துவதிலும் வறுமையை ஒழிப்பதிலும் முக்கிய பங்காற்றுகின்றன. இதனை கருத்திற் கொண்டு, தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் என்ற புதிய திட்டத்தின் கீழ் 2015–2016ஆம் ஆண்டு 4,000 கி.மீ. நீளமுள்ள ஊரகச் சாலைகள் மேம்பாட்டிற்கு, 800 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, ஊரகச் சாலைகள் மேம்பாட்டிற்காக நபார்டு திட்டத்தின் கீழ் 41 பாலங்கள் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்படும். மேலும் ஊரகச் சாலைகள் பராமரிப்பிற்காக 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊரகப் பகுதிகளில் பல்வேறு அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் வகையில் சாலைகள், பாலங்கள், ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், கிராம ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் போன்ற பல்வேறு பணிகள் 375 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், மாநில உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதியின் கீழ் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலைகள், பாலங்கள் மற்றும் இதர அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆக மொத்தம், சாலைகள், பாலங்கள் மற்றும் பல்வேறு அடிப்படை கட்டமைப்பு வசதிகளுக்காக, ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட 800 கோடி ரூபாய் நிதியுடன் சேர்த்து, நடப்பாண்டில் மொத்தம் 1475 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப் புறங்களில் உள்ள மக்கள் தங்கள் கிராமங்களிலேயே பல்வேறு அரசு சேவைகளான பிறப்பு / இறப்பு சான்றிதழ்கள், வருமான சான்றிதழ்கள், முதியோர் ஓய்வூதியம் மற்றும் பல்வேறு வகையான சமூக பாதுகாப்பு உதவிகள் ஆகியவற்றை விரைந்து பெறும் வகையில், மின்னணு சேவையை அறிமுகப்படுத்த எனது தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது. இதற்கென 2015–16ஆம் நிதி ஆண்டில் 3890 கிராம ஊராட்சிகளில் சேவை மையங்கள் 661 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊரகப் பகுதிகளில் தற்போது பயன்பாட்டில் உள்ள தெரு விளக்குகளின் மின் கட்டண செலவு மற்றும் பராமரிப்பு செலவினம் அதிகமாக உள்ளதைக் கருத்தில் கொண்டும், பசுமைத் தொழில் நுட்பத்தினை ஊக்குவித்திடும் பொருட்டும் நடப்பாண்டில் ஊரகப்

பகுதிகளில் சுமார் 8 இலட்சம் தெரு விளக்குகள் எல்.இ.டி. விளக்குகளாக 300 கோடி ரூபாய் செலவில் மாற்றிட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், குக்கிராமங்களை வளர்ச்சி அலகாகக் கொண்டு ஒவ்வொரு குக்கிராமத்திலும் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் நோக்கோடு, தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டம் என்னும் 'தாய்' திட்டத்தினை எனது தலைமையிலான அரசு 2011–2012 முதல் செயல்படுத்தி வருகிறது. 'தாய்' மற்றும் இதர திட்டங்களின் கீழ் கிராமங்களில் உள்ள தெருக்கள் சிமெண்ட் பேவர் பிளாக் (Cement Paver Block) கொண்டு மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். சிமெண்ட் பேவர் பிளாக் (Cement Paver Block) கொண்டு அமைக்கப்படும் தெருக்கள், எழிலாக இருப்பதுடன், நிலத்தடி நீர் செறிவூட்டவும் பயன்படும்.

2015–2016 ஆம் ஆண்டில் 400 கி.மீ. நீளமுள்ள கிராமப்புற தெருக்கள் 120 கோடி ரூபாய் செலவில் சிமெண்ட் பேவர் பிளாக் (Cement Paver Block) கொண்ட தெருக்களாக மாற்றப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகரப் பகுதிகளின் அருகிலுள்ள கிராம ஊராட்சிகளில் உருவாகும் குப்பைகளை, மக்கும் மற்றும் மக்காத குப்பைகளாகப் பிரித்து, முறையாக அப்புறப்படுத்துதல் மிகப் பெரிய சவாலாக அமைந்துள்ளது. கிராமங்கள் தூய்மையாக பராமரிக்கப்பட வேண்டும் என்பதற்கு எனது அரசு தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து வருகிறது. கிராம ஊராட்சிகளில் கழிவுப் பொருட்களை சேகரித்தல், மக்கும் மற்றும் மக்காத குப்பை என பிரித்தெடுத்து பாதுகாப்பான முறையில் அகற்றுதல் ஆகியவற்றை மேற்கொள்ளும் வகையில் திடக் கழிவு மேலாண்மைத் திட்டம், மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டுடன் எனது அரசால் ஏற்கெனவே அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. முதற்கட்டமாக 2,000 கிராம ஊராட்சிகளில் 'தூய்மை

காவலர்களை' கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மாநகராட்சிகள், சிறப்பு நிலை நகராட்சிகள், மாவட்ட தலைநகரங்கள் ஆகியவற்றின் அருகிலுள்ள கிராம ஊராட்சிகள் மற்றும் அதிகமான மக்கள் தொகை கொண்ட கிராம ஊராட்சிகளுக்கு விரிவுபடுத்தப்படும் என்பதையும்; இதற்கென 300 கோடி ரூபாய் செலவிடப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

30,000 இளைஞர்களுக்கு புது வாழ்வு திட்ட கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மூலமாக 30 கோடி ரூபாய் செலவில் நடப்பாண்டில் திறன் வளர்ப்பு பயிற்சிகளின் வாயிலாக நிலையான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊரக பகுதிகளை பசுமை மயமாக்கும் வண்ணம் ஊராட்சி சாலைகள், ஊராட்சி ஒன்றிய சாலைகள், நெடுஞ்சாலைகள், பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தில் அமைக்கப்பட்ட சாலைகள் ஆகிய சாலைகளின் இரு மருங்கிலும் மரக் கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்படும். இதன் மூலம் 2,000 கி.மீ நீளமுள்ள சாலைகளின் இரு மருங்கிலும், 47 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் மரக் கன்றுகள் நடப்பட்டு ஊரகப் பகுதிகள் பசுமை மயமாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊரகப் பகுதியில் சுற்றுச் சூழல் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையிலும், தனி நபர் இல்லத்தில் பலன் தரும் பழக் கன்றுகள், மரக் கன்றுகள் வளர்த்திட வழிவகை செய்யும் நோக்கிலும், 2015–16 ஆம் ஆண்டில் 54,000 இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டப் பயனாளிகள் மற்றும் 60,000 பசுமை வீடுகள் திட்டப் பயனாளிகள் என மொத்தம் 1,14,000 பயனாளிகளின் இல்லங்களில், வீட்டுத் தோட்டம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும். இதற்கென ஒவ்வொரு பயனாளிக்கும் 4 பழக் கன்றுகள் அல்லது மரக் கன்றுகள் வழங்கப்படும். இந்த மரக் கன்றுகளை பயனாளிகளே தங்கள்

தேவைக்கேற்ப தெரிவு செய்ய வாய்ப்பு அளிக்கப்படும். இதற்கென மரக் கன்றுகள் பெறுவது, தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்கள் மூலம் 1,14,000 இல்லத் தோட்டங்களில் மரங்கள் நடும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் 12 மாநகராட்சிகள் மற்றும் 28 நகராட்சிகளில் மத்திய அரசின் 75 சதவீத பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எஞ்சியுள்ள 96 நகராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகளில் தமிழ்நாடு நகர்ப்புற, வாழ்வாதார இயக்கம் மாநில அரசின் நிதியிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் செயல்படுத்தப்படுகிறது. ஊரகப் பகுதிகளில் மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் வாயிலாக சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏழை மகளிரை குடும்பத் தலைவியாகக் கொண்ட குடும்பங்களுக்கான சிறப்பு வாழ்வாதாரத் திட்டத்தினை நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூலம் ஒருங்கிணைத்து செயல்படுத்திட நான் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளேன். இதன் தொடர்ச்சியாக நடப்பு ஆண்டு முதல் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சில கூறுகளான சமூக திரட்டு மற்றும் சமுதாய நிறுவன மேம்பாடு, திறன் வளர்ப்பு, இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புடன் கூடிய தொழிற் பயிற்சிகள் மற்றும் சுய வேலை வாய்ப்பு பயிற்சிகள் ஆகிய செயல்பாடுகள் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் 178 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுய உதவிக் குழுக்கள் தங்களது வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பெரும்பாலும் வங்கிக் கடனையே சார்ந்துள்ளன. மேலும், சுய உதவிக் குழுக்களுக்கு நுகர்வு அல்லது பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிதி

உதவி தேவைப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு எனது தலைமையிலான அரசு சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதார தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் 700 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் சிறு கடன்கள் வழங்குவதற்காக 58 கோடி ரூபாயினை அமுத சுரபி நிதியாக நடப்பாண்டில் தமிழ்நாடு புதுவாழ்வு திட்டத்தின் மூலம் வழங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு பகுதியில் ஒரே வகை உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் சுய உதவிக் குழு உறுப்பினர்களை ஒருங்கிணைத்து ஒத்த தொழில் குழு உருவாக்கப்படுகிறது. ஒவ்வொரு தொழில் குழுவிற்கும் பொதுவான உட்கட்டமைப்பு வசதிகள், அங்காடி வசதிகள் மற்றும் தனித் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்குவதற்காக ஊக்க நிதி வழங்கப்படுகிறது. இதன் அடிப்படையில் கிராமப்புறங்களில் ஒரே தொழிலை மேற்கொள்ளும் சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்து அவர்களுக்கு தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட குழுவிற்கு தலா 1 இலட்சம் ரூபாய் வீதம் 1500 ஒத்த தொழில் குழுக்களுக்கு 15 கோடி ரூபாய் நிதி உதவி தமிழ்நாடு புதுவாழ்வு திட்டத்தின் மூலம் வழங்கப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் உள்ள மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர் சிறு தொழில் செய்து வருவாய் ஈட்டி வாழ்வாதாரத்தை மேம்படுத்த அவர்களுக்கு வட்டியில்லா கடன் அளிக்கும் வகையில் 600 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாய் வீதம் 12 கோடி ரூபாய் புதுவாழ்வு திட்டத்தின் மூலம் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இது மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர் சிறிய தொழில்களை தொடங்கி வாழ்வாதாரம் பெற வழி வகுக்கும்.

மகளிருக்கு சமூக பொருளாதார அதிகாரம் வழங்கிடவும் அதன் மூலம் வறுமை ஒழிக்கும் நோக்கத்துடன் சுய உதவிக்

குழுக்களை, எனது தலைமையிலான அரசு 1991-ஆம் ஆண்டு உருவாக்கியது. ஆண்டு தோறும் புதிய சுய உதவிக்குழுக்கள் ஏற்படுத்தப்படுகின்றன. இதுவரை சுய உதவிக்குழுவில் உறுப்பினராக இல்லாத ஆதரவற்றோர், ஏழைகள் மற்றும் நலிவுற்றோர்களைக் கொண்டு 10,000 சுய உதவிக்குழுக்கள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் இந்த ஆண்டு அமைக்கப்படும். இந்த சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் அவர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்கு தேவையான அனைத்துநடவடிக்கைகளையும் அரசுமேற்கொள்ளும்.

சுய உதவிக் குழுக்களுக்கு போதுமான கடன் உதவியை உரிய நேரத்தில் குறைந்த வட்டி விகிதத்தில் வங்கிகள் மூலம் ஏற்படுத்தி தருவதன் வாயிலாக பெண்களை பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி கடன் சுமைகளிலிருந்து விடுபட வழிவகை செய்யப்படுகிறது. மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் பொருளாதார மேம்பாட்டினை உறுதி செய்யும் வகையில் கடந்த 4 ஆண்டுகளில் அவர்களுக்கு 20,270 கோடி ரூபாய் கடனாக வங்கிகள் மூலம் வழங்கப்பட்டுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் தொடர்ச்சியாக நடப்பாண்டிலும் சுய உதவிக் குழுக்களுக்கு 6,000 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள், கிராமங்கள் மேம்படவும், கிராம மக்கள் வளம் பெறவும், மகளிர் சுய உதவிக் குழுக்கள் பொருளாதார வளர்ச்சி அடையவும், கிராமப்புற இளைஞர்கள் வேலை வாய்ப்பினைப் பெறவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

முதுகுத் தண்டுவட நோயால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு சக்கர நாற்காலி!

14.09.2015

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாற்றுத் திறனாளிகளுக்கு உதவுவதும், அவர்களுக்கு நல்வாழ்வு அளிப்பதும் மாநில அரசின் கடமை என்பதை உணர்ந்துள்ள எனது தலைமையிலான அரசு, சமுதாயத்தில் ஓர் அங்கமாக மாற்றுத் திறனாளிகளை அங்கீகரித்து, சமுதாய வளர்ச்சியில் அவர்களை பங்கேற்கச் செய்து சம வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதற்கு தேவையான நடவடிக்கைகளை முனைப்புடன் எடுத்து வருகிறது.

மாற்றுத் திறனாளிகள் நம்பிக்கையோடு சமுதாயத்தில் வாழ வேண்டும் என்ற நோக்கத்தில், நடப்பாண்டில் பின் வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

மாநிலத்திலுள்ள அரசு சிறப்பு பள்ளிகளில் படிக்கும் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு சிறப்பு கல்வி அளிக்கப்படுகிறது. தமிழ் நாட்டில் மொத்தம் 23 அரசு சிறப்பு பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. புதுக்கோட்டையிலுள்ள காது கேளாதோருக்கான அரசு நடுநிலைப் பள்ளி 22 ஆண்டுகளாக வாடகை கட்டடத்தில் இயங்கி வருகிறது. இப்பள்ளியில் ஒன்று முதல் எட்டு வரையிலான வகுப்புகளில் 50 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இந்தப் பள்ளிக்கு விடுதி மற்றும் வகுப்பறைகளுடன் கூடிய சொந்தக் கட்டடம் 5,414 சதுர அடி பரப்பளவில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசு மாற்றுத் திறனாளிகள் நலத்துறை மூலம், மாற்றுத் திறனாளிகளுக்கு பல்வேறு திட்டங்களை

செயல்படுத்தி வருகிறது. 2013–14 ஆம் நிதியாண்டில் 4,900 ரூபாய் மதிப்புடைய மடக்கு சக்கர நாற்காலி மற்றும் மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 5,410 ரூபாய் மதிப்புடைய சிறப்பாக வடிவமைக்கப்பட்ட சக்கர நாற்காலி 47 லட்சத்து 18 ஆயிரம் ரூபாய் செலவில் 911 மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த சாதாரண மடக்கு சக்கர நாற்காலிகள் முதுகுத் தண்டு வடம் பாதிக்கப்பட்ட நபர்களின் சிறப்புத் தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்யும் வகையில் இல்லை. தற்பொழுது மாற்றுத் திறனாளிகளுக்கான உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் முதுகுத் தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு பிரத்யேகமாக வழங்கக் கூடிய உதவி உபகரணங்கள் ஏதுமில்லை. எனவே, முதுகுத் தண்டு வடம், நரம்பு உறை தேய்வு நோய் மற்றும் தண்டுவட குறைபாடு நோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு என 20,000 ரூபாய் மதிப்பீட்டில் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட சிறப்பு சக்கர நாற்காலி வழங்கப்படும். முதற் கட்டமாக, ஒரு மாவட்டத்திற்கு 30 எண்ணிக்கையில் மொத்தம் தமிழ்நாட்டில் 960 நபர்களுக்கு 1 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் இவை வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

☆ ரூ.3,000 கோடி செலவில் "தமிழ்நாடு ஃபைபர் நெட் கார்ப்பரேஷன்" அமைப்பு!

☆ குறைந்த செலவில் "இணைய வழி தொலைக்காட்சி" சேவை!

☆ ரூ.10 கோடி செலவில் கூடுதலாக 300 இ-சேவை மையங்கள்!

14.09.2015

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற புறநானூற்று பாடல் வரிகளை மெய்ப்பிக்கும் வகையிலும், உலகமே உள்ளங்கையில் என்னும் வகையிலும் விளங்கும் தகவல் தொழில்நுட்பவியல் துறையில் எனது தலைமையிலான அரசு பல்வேறு புதிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

இதனை மேலும் வலுப்படுத்தும் விதமாக, பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

அனைத்து மாநிலங்களிலும் உள்ள கிராம ஊராட்சிகளை Optical Fibre மூலமாக இணைத்து அரசின் சேவைகளை இணையம் மூலமாக பொதுமக்கள் பெற்று பயன்பெறும் வகையில் "பாரத்நெட்" என்ற திட்டத்தை மத்திய அரசு அறிவித்துள்ளது. இத்திட்டம் தமிழகத்தில் தமிழ்நாடு அரசின் மூலமாகத் தான் செயல்படுத்தப்பட வேண்டும் என நான் வலியுறுத்தியதன் அடிப்படையில், மத்திய அரசு இத்திட்டத்தினைத் தமிழகத்தில் தமிழ்நாடு அரசே செயல்படுத்திட ஒப்புதல் அளித்துள்ளது. இதன்படி, தமிழ்நாட்டிலுள்ள 12,524 கிராம ஊராட்சிகளும் Optical Fibre மூலம் இணைக்கப்பட்டு தமிழக அரசின் பல்வேறு

சேவைகளை பொதுமக்கள், தங்கள் கிராமங்களில் இருந்தே இணையம் மூலமாக பெற்று பயனடையும் வகையில் இத்திட்டம் நிறைவேற்றப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தினை 3,000 கோடி ரூபாய் செலவில் மத்திய அரசின் பங்களிப்புடன் தமிழக அரசே செயல்படுத்தும். இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கென "தமிழ்நாடு ஃபைபர்நெட் கார்ப்பரேஷன்" (Tamil Nadu FibreNet Corporation) என்ற ஒரு தனி அமைப்பு உருவாக்கப்படும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110இன் கீழ் 11.08.2014 அன்று "தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் மூலமாக அதிவேக அகண்ட அலைவரிசை சேவைகள் மற்றும் இதர இணைய தள சேவைகள் வழங்கப்படும்" என நான் வெளியிட்ட அறிக்கையின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் மத்திய தொலைத் தொடர்பு அமைச்சகத்திடமிருந்து, தமிழ்நாடு முழுவதும் அகண்ட அலைவரிசை சேவைகள் மற்றும் இதர இணைய தள சேவைகள் ஆகியவற்றை வழங்குவதற்கான உரிமத்தினை (ISP Licence) பெற்றுள்ளது. மேலும், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், தமிழ்நாடு முழுவதும் அதிவேக அகண்ட அலைவரிசை சேவைகள் மற்றும் இதர இணைய தள சேவைகள் ஆகியவற்றை வழங்குவதற்காக இந்திய ரெயில்டெல் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. முதற்கட்டமாக சுமார் 552 உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர்கள் பதிவு செய்யப்பட்டு, அவர்கள் மூலம் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இச்சேவைகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இதன் சேவைத் திறன் மற்றும் செயல்பாடு குறித்து அரசு கேபிள் டிவி நிறுவனம் மிக கவனமாக ஆய்வு செய்து வருகிறது. "பாரத்நெட்" மூலம் அனைத்து கிராம ஊராட்சிகளும் இணைக்கப்பட உள்ளதால், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் ஏற்கெனவே பெற்றுள்ள Internet Service Provider உரிமத்தினைப் பயன்படுத்தி, "இல்லந்தோறும் இணையம்" என்ற கொள்கையின் அடிப்படையில் அனைத்து இல்லங்களுக்கும் குறைந்த செலவில் தரமான

இணைய இணைப்புகளை வழங்கிடும். மேலும், அதிவேக அகண்ட அலைவரிசை சேவைகள் மற்றும் இதர இணைய தள சேவைகள் ஆகியவற்றுடன் சேர்த்து, புதிதாக "இணைய வழி தொலைக்காட்சி" சேவைகளும் (Internet Protocol Television – IPTV) வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது மக்களுக்கு வழங்க வேண்டிய அடிப்படைத் தேவைகளை நன்குணர்ந்த எனது தலைமையிலான அரசு, இ–சேவை மையங்கள் வழியாக அவர்களுக்குத் தேவையான சேவைகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. அதன்படி, மின் மாவட்ட சேவைகள் மற்றும் பொதுமக்களுக்குத் தேவையான அரசு சார்ந்த பிற சேவைகள் இம்மையங்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் 2014ஆம் ஆண்டு பிப்ரவரியில் விரிவாக்கம் செய்து நான் துவக்கி வைத்தேன். தற்போது, தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள், புதுவாழ்வு திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட கிராமப்புற ஏழ்மை குறைப்பு குழு, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், தமிழ்நாடு மின்னணு நிறுவனம் ஆகியவற்றின் மூலமாக அமைக்கப்பட்ட 10,034 இ–சேவை மையங்கள் இயங்கி வருகின்றன. வருவாய்த் துறையின் மூலம் வழங்கப்படும் சான்றுகள், ஓய்வூதியம் மற்றும் சமூகநலத் துறையின் சேவைகளான திருமண நிதியுதவித் திட்டம் மற்றும் கல்வி உதவி சார்ந்த சேவைகள் உள்ளிட்ட 36 சேவைகள் இம்மையங்களின் மூலம் வழங்கப்படுகின்றன. இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்ட பின், இதுவரை சுமார் 70 இலட்சம் பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியும் பேருவகையும் அடைகிறேன். 2015–2016ஆம் ஆண்டில் இ–சேவை மையங்கள் மூலம் தற்போது அரசுத் துறைகளால் வழங்கப்பட்டு வரும் சேவைகளுடன், கூடுதலாக மேலும் 300 சேவைகள் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இ–சேவை மையங்கள் மூலமாக இந்த கூடுதல்

சேவைகளை வழங்கிட அரசுக்கு 10 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

மேற்கூறிய திட்டங்கள் மூலம் தகவல் தொழில்நுட்பத்தின் பயன் பொதுமக்களை சென்றடைய வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

தமிழகத்தில் 8 மாவட்டங்களில் குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் பிரிவினருக்கு ரூ.674.96 கோடி செலவில் 2,800 குடியிருப்புகள்!

15.09.2015

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் முக்கியப் பங்கு வகிப்பதும், வளமான குடும்பம் மற்றும் சிறப்பான சமூக உறவுகள் அமைவதற்கு அடித்தளமாக விளங்குவதுமான உறைவிடத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டியது அரசின் தலையாய கடமை என்பதால், எனது தலைமையிலான அரசு கடந்த நான்கு ஆண்டுகளில் பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களை மக்களுக்கு அளித்துள்ளது. இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் பின் வரும் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையில் குறைந்த வருவாய் பிரிவு மக்கள் வாங்கக் கூடிய விலையிலான வீட்டு வசதியை மேம்படுத்தும் நோக்கத்துடன், சென்னை அம்பத்தூரில் அனைத்து வசதிகளுடன், இரு படுக்கை அறைகளுடன் கூடிய 2,300 குடியிருப்புகள் தோராயமாக 380 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும். ஒரு குடியிருப்பின் விலை 20 இலட்சம் ரூபாய்க்குக் குறைவாக நிர்ணயம் செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு அலுவலர்களுக்கு சொந்த வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 'சி' மற்றும் 'டி' பிரிவு அரசு அலுவலர்களுக்கு சென்னை பாடிகுப்பம் மற்றும் வில்லிவாக்கம் பகுதியில் 500 பன்னடுக்கு,

மாடி குடியிருப்புகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படும். ஒவ்வொரு குடியிருப்பும் கழிப்பறைகளுடன் கூடிய இரண்டு படுக்கை அறைகள், ஒரு சமையலறை மற்றும் ஒரு உட்காரும் மற்றும் உணவு அருந்தும் கூடம் உடையதாக கட்டப்படும். ஒரு குடியிருப்பின் பரப்பளவு ஏறக்குறைய 700 சதுர அடியாக இருக்கும். இத்திட்டத்தின் உத்தேச மதிப்பீடு 225 கோடி ரூபாயாகும். இக்குடியிருப்புகளுக்கான கட்டுமானம் இந்த நிதியாண்டில் தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்துத் தரப்பு மக்களின் வீட்டு வசதித் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு, சென்னை, காஞ்சிபுரம், வேலூர், கடலூர், கிருஷ்ணகிரி, சேலம், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில், 674 கோடியே 96 இலட்சம் ரூபாய் செலவில் பெருவாரியாக குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் பிரிவு மக்களுக்காக 2,800 குடியிருப்பு அலகுகள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னால் அறிவிக்கப்பட்ட தொலைநோக்குத் திட்டம் 2023இன் குடிசை பகுதிகள் அற்ற நகர திட்டத்தின் ஒரு பகுதியாக சென்னை மாநகராட்சி உள்ளிட்ட மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நடப்பு நிதியாண்டில் மாநில அரசின் நிதி உதவியுடன் மைய அரசின் 'அனைவருக்கும் வீட்டு வசதி' திட்டத்தின் கீழ், வழங்கப்படும் மானியத்தோடும் 12,500 பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கான குடியிருப்புகளை தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் கட்டும். இத்திட்டத்தின் உத்தேச மதிப்பீடு 457 கோடியே 50 இலட்சம் ரூபாயாகும்.

மாநில முழுமையிலும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் 1.55 இலட்சம் குடியிருப்புகளை கட்டியுள்ளது. இவற்றில் பல மிகவும் பழமையானவை. இயற்கை சீற்றங்களாலும், கால மாற்றங்களாலும் இவை பழுதுபட்டுள்ளன. இக்குடியிருப்புகளில் பழுது பார்ப்பு மற்றும்

பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு தமிழக அரசு, 10 கோடி ரூபாயை நிதி உதவியாக அளிக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரை நகருக்கு அருகில் தேசிய நெடுஞ்சாலை எண்.7க்கு அருகே தோப்பூர்–உச்சப்பட்டி பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் ஓர் துணை நகரம் அமைக்கப்படும் என அரசால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. அத்துணை நகரம் அமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டத்தில் மேம்படுத்தப்படும் பகுதிகளில் 10 சதவீதத்தை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 4,500 பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கான அலகுகளாக தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திடம் ஒப்படைக்கும். இவ்வாறு நன்கு மேம்படுத்தப்பட்ட அலகுகளை, தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரியம், "அனைவருக்கும் வீட்டு வசதி" திட்டத்தின் கீழ், நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் கண்டறியப்பட்ட மதுரை நகரத்தின் ஆட்சேபகரமான புறம்போக்குகளில் வசிக்கும் குடிசைப் பகுதியினருக்கு ஒதுக்கீடு செய்யும். அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களில் மைய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு மானியத்தை பயன்படுத்தி பயனாளிகள் தாமே வீடுகள் கட்டிக் கொள்வதற்கு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் உதவி செய்யும். இதன் மூலம், மதுரை நகரத்தை குடிசைப் பகுதிகள் அற்ற நகரமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மூன்று புறநகர் இரயில் பாதைகள், ஒரு பெருந்திரள் துரித இரயில் பாதை, தொலைதூர இரயில் பாதை மற்றும் தற்போது கட்டுமானத்தில் உள்ள சென்னை மெட்ரோ இரயில் கழகத்தின் பாதைகள் ஆகியவைகள் கூடும் இடமாக சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் திகழ்வதால், அப்பகுதி வர்த்தக செயல்பாட்டு மையமாகவும் மற்றும் அதிக எண்ணிக்கையிலான மக்கள் நகரத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்து செல்லும் மைய

இடமாகவும் உள்ளது. பெருவாரியான பயணிகள் இவ்விடத்தில் போக்குவரத்து முறையினை மாற்றுகின்றனர். அரசு பொது மருத்துவமனை, தென்னக இரயில்வே தலைமை அலுவலகம், சென்னை மாநகராட்சி மற்றும் செளகார்பேட்டை பகுதி ஆகியவை இந்தப் பகுதியில் அமைந்திருப்பதால், போக்குவரத்து நெருக்கடி மேலும் அதிகரிக்கின்றது. எனவே, தங்கு தடையற்ற போக்குவரத்து மாற்றத்தை அளிக்கத் தக்கவாறு பயணிகளுக்கான வசதிகள், கீழ் தள வாகன நிறுத்தும் வசதி, பாதசாரிகளுக்கான முறையான நடைபாதை மற்றும் தரை தள வாகன நிறுத்தும் வசதி முதலானவற்றைக் கொண்ட ஒருங்கிணைந்த பலதரப்பட்ட போக்குவரத்து முறையினை மேம்படுத்துவதற்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நிதி அளிக்கும். சென்னை மெட்ரோ இரயில் கழகம் மூலம் தோராயமாக 400 கோடி ரூபாய் செலவில், ரிப்பன் மாளிகை, விக்டோரியா பொதுமக்கள் கூடம், மத்திய புறநகர் இரயில் நிலையம், சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம்; சென்னை இரயில்வே தலைமை அலுவலகக் கட்டடம், சென்னை மருத்துவக் கல்லூரி, அரசு பொது மருத்துவமனை, பூங்கா நகர், சென்னை பெருந்திரள் திட்ட இரயில் நிலையம், பூங்கா ரயில் நிலையம் மற்றும் இராமசாமி முதலியார் சத்திரம் ஆகியவைகளுக்கு அருகே உள்ள பகுதிகள் உலகத் தரத்தில் ''மத்திய சதுக்கமாக'' மேம்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

துரித நகர வளர்ச்சி மற்றும் மக்களின் வாழ்க்கை முறை மாற்றத்தினால் தனி நபர் உபயோகப்படுத்தும் மின்சக்தி நுகர்வு அதிகமாகி வருகிறது. எனவே, இதனைக் கருத்திற்கொண்டு, மின்சக்தி பாதுகாப்பு மற்றும் வளர்ச்சித் தேவைகளில் எவ்வித சமரசமும் இல்லாமல் சுற்றுச்சூழல் மாசு, ஏற்படுத்தாத மின்சக்தியை ஊக்குவிக்கும் பொருட்டு, அனைத்து தொகுப்பு வளர்ச்சிகள் மற்றும் பல மாடிக் கட்டடங்களில் சூரிய மின் சக்தியினைப் பெறுவதற்கான அமைப்பினை ஏற்படுத்துவது சட்டப்படி அவசியமாக்க வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளில் உரிய திருத்தங்களை ஏற்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

எண்ணூர் துறைமுகத்தில் நுழைகிற மற்றும் வெளியேறுகிற சரக்குந்து வாகனங்களினால் ஏற்படும் போக்குவரத்து நெருக்கடியைக் குறைக்கும் வகையில், எர்ணாவூர் கிராமத்தில் எண்ணூர் துறைமுகத்திற்கு அருகில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு சொந்தமான 29 ஏக்கர் நிலப் பரப்பில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் கூட்டு முயற்சியில் தோராயமாக 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய சரக்குந்து வாகனம் நிறுத்தும் இடம் (Container Truck Parking Yard) கட்டப்படும். இத்திட்டத்தின் மூலம் ஒரே நேரத்தில் 900 சரக்குந்து வாகனங்களை Trucks-களை நிறுத்த வழிவகை ஏற்படும்.

மேற்காணும் அறிவிப்புகள், குறைந்த விலையில் தரமான வீடுகளை தமிழக மக்கள் வாங்கவும், நகர்ப்புற வளர்ச்சியினை மேம்படுத்தவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

ரூ.45.97 கோடி செலவில் புதிய தொழிற்பயிற்சி நிலையங்கள்!

15.09.2015

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"அரும்பும் வியர்வை உதிர்த்துப் புவிமேல் ஆயிரம் தொழில் செய்திடுவீரே" என்ற பாரதியின் பாடல் வரிகளுக்கு ஏற்ப, தமிழகம் வீறுபெற்று உலக அரங்கில் தனிச் சிறப்புடன் விளங்க வேண்டுமாயின், தொழிற் திறன் அவசியம் என்பதால், அதனை நிறைவேற்ற பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை கடந்த நான்கு ஆண்டுகளில் எனது தலைமையிலான அரசு எடுத்து இருக்கிறது.

தமிழகத்தில் பொருளாதாரத்தில் பின் தங்கிய ஏழை, எளிய குடும்பங்களைச் சார்ந்த மாணவ, மாணவியர்களின் நலனுக்காகவும், தொழிற் திறன் பெற்ற, மனித வளத்தை உருவாக்குவதற்காகவும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தொழிற்பயிற்சி நிலையங்கள் Industrial Training Institutes அரசால் தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. தமிழகத்தில் தற்போது 77 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்தொழிற் பயிற்சி நிலையங்கள் மூலம் 45 பொறியியல் மற்றும் 20 பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகளில் 28,259 மாணாக்கர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் 3,000 மாணவர்கள் தொழிற் பயிற்சி பெறும் வகையில் விடுதி வசதியுடன் கூடிய 15 புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்களைத் தொடங்கிட நான் உத்தரவிட்டேன். அதன்படி 15 தொழிற்பயிற்சி நிலையங்கள் துவங்கப்பட்டுள்ளன.

அண்மையில் வெளியான இந்திய தொழில் வர்த்தக கூட்டமைப்பால் அதாவது ASSOCHAM-ஆல் தொழில் வளர்ச்சி குறித்து மேற்கொள்ளப்பட்ட மாநிலங்களுக்கு இடையேயான ஒப்பு நோக்கு ஆய்வின்படி, தமிழ்நாடு முதல் இடத்தினைப் பெற்று, வளர்ச்சிப் பாதையில் உள்ளது. தொழிற்துறை உற்பத்தியிலும் மற்றும் வேலை வாய்ப்பு உருவாக்குவதிலும் சிறந்த மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. இதனால் திறன் பயிற்சி பெற்றவர்கள் அதிக அளவில் தேவைப்படுகின்றனர்.

தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்ந்து கல்வி பயில விழையும் மாணாக்கர்களின் ஆர்வத்தை நிறைவு செய்யவும், தமிழ்நாட்டில் திறன் மிகுந்த தொழிலாளர்களின் தேவையினை ஈடு செய்யவும், இத்தகைய பயிற்சி மையங்கள் அரசின் சார்பில் கூடுதலாக தொடங்கப்பட வேண்டியதன் அவசியத்தை, கருத்தில் கொண்டு, நடப்பாண்டில் தஞ்சாவூர் மாவட்டம் – ஒரத்தநாடு, புதுக்கோட்டை மாவட்டம் – விராலிமலை, விருதுநகர் மாவட்டம் – சாத்தூர், பெரம்பலூர் மாவட்டம் – ஆலத்தூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம் – திண்டிவனம் ஆகிய ஐந்து இடங்களில் 1,000 மாணவர்கள் தொழிற் பயிற்சி பெறும் வகையில் விடுதியுடன் கூடிய புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் 45 கோடியே 97 லட்சம் ரூபாய் செலவில் துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம் வருங்காலத்தில் தொழிற் திறன் வாய்ந்த மனித வளம் அதிகரிப்பதற்கு வழிவகை ஏற்படுவது மட்டுமல்லாமல் தொழில் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் வழிவகை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

அழியாத கல்விச் செல்வத்தை தமிழகக் குழந்தைகள் அனைவரும் பெற வேண்டும்!

23.09.2015

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பிறரால் கவர்ந்து கொள்ள இயலாததும், தமக்குக் கிடைத்ததை பிறருக்குக் கொடுப்பதால் அழியாததும், மேலான படை வலிமை உடையவராலும் பறித்துக் கொள்ள முடியாததுமான கல்விச் செல்வத்தை தமிழகத்தில் உள்ள அனைத்துக் குழந்தைகளும் பெற வேண்டும் என்பதை குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் எனது தலைமையிலான அரசு, கடந்த நான்கு ஆண்டுகளில் கல்விக்காக எண்ணற்ற திட்டங்களை தீட்டி நடைமுறைப்படுத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, நடப்புக் கல்வியாண்டில், பின் வரும் திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

கடந்த நான்காண்டுகளில் 107 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டதோடு, 182 புதிய தொடக்கப் பள்ளிகள் துவங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 5 அரசு தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும். தொடக்கப் பள்ளிகள் இல்லை என கண்டறியப்பட்டுள்ள 39 குடியிருப்பு பகுதிகளில் புதிய தொடக்கப் பள்ளிகள் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நடுநிலைப் பள்ளி ஒன்றுக்கு 3 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 15 பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் புதிய தொடக்கப் பள்ளிகளுக்கு ஒரு தலைமை ஆசிரியர் மற்றும் ஒரு இடைநிலை ஆசிரியர் என 78 ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள். இப்பள்ளிகளுக்கு

தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகளும் செய்து தரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் அரசுக்கு கூடுதலாக 11 கோடியே 67 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

கடந்த 4 ஆண்டுகளில் 2,798 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில் பள்ளிகளுக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஆண்டு உள்கட்டமைப்பு வசதிகள் தேவைப்படும் அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 770 கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், 287 பள்ளிகளின் வகுப்பறைகள் பழுது சரி பார்க்கப்படும். இதனால் அரசுக்கு 56 கோடியே 53 இலட்சம் ரூபாய் செலவினம் ஏற்படும்.

ஆசிரியர் கல்வி பயில விரும்பும் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டும், ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சிகளை அளிக்கும் பொருட்டும், பெரம்பலூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் தலா ஒரு புதிய மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் District Institute of Education and Training-DIETs தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். புதிதாக உருவாக்கப்படவுள்ள மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் ஒவ்வொன்றிற்கும் தலா 10 ஆசிரியர் சார்ந்த பணியிடங்களும் 5 ஆசிரியர் அல்லாத பணியிடங்களும் என மொத்தம் 30 பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும். மேலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அதிகம் உள்ள கடலூர், காஞ்சிபுரம், நாகப்பட்டினம், நீலகிரி, பெரம்பலூர், விழுப்புரம் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் உள்ளவர்கள் தொடக்கக் கல்வி பட்டயப் பயிற்சி பெற உதவும் வகையில் இந்த 7 மாவட்டங்களில் புதிய ஒன்றிய ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள், Block Institute for Teacher Education and Training – BITES, தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். புதிதாக

உருவாக்கப்படவுள்ள ஏழு ஒன்றிய ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் 49 ஆசிரியர் சார்ந்த பணியிடங்கள் 56 ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் என மொத்தம் 105 பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும். இதனால் அரசுக்கு 21 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவினம் ஏற்படும்.

மாற்றுத் திறனுடைய குழந்தைகளின் வாழ்வில் ஒளியேற்றி அவர்களின் வாழ்க்கையை சிறப்புற அமைத்துக் கொள்ள வழிவகை செய்து கொடுக்கும் பொருட்டு இந்தியாவிலேயே முன்னோடியாக, தமிழகத்தில் மாநில ஆதார வள மையம் எனது தலைமையிலான அரசினால் அமைக்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறன்கொண்டகுழந்தைகளுக்கான உள்ளடக்கிய கல்வி திட்டத்தின் கீழ் முதன் முறையாக அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 1 முதல் 8 ஆம் வகுப்பில் பயிலும் பார்வையற்ற மாணவர்களுக்கு ப்ரெயில் பாடப் புத்தகங்களும், பார்வை குறைபாடுள்ள மாணவர்களுக்கு உருப் பெருக்கப்பட்ட அச்சு பாடப் புத்தகங்களும் வழங்கப்படும்.

சமூக விழிப்புணர்வினை குழந்தைகளிடம் கொண்டு செல்லும் வகையில் எனது தலைமையிலான அரசு, கடந்த இரண்டு ஆண்டுகளாக பள்ளிகளில் போட்டிகள், விழிப்புணர்வு பேரணி, கிராம கல்வித் திருவிழா, ஊடகம் மற்றும் தொடர் குழு நடவடிக்கைகள் ஆகியவற்றை நடத்தி வருகின்றன. தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக நடப்புக் கல்வி ஆண்டிலும் சமூக திரட்டு திட்டம் செயல்படுத்தப்படும். கல்வியில் பின் தங்கிய ஒன்றியங்கள் மற்றும் சிறப்பு குவிமைய மாவட்டங்களில் தனி விழிப்புணர்வும், பாலின கூர் உணர்வு விழிப்புணர்வும் ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதனால் அரசுக்கு 9 கோடி ரூபாய் செலவினம் ஏற்படும்.

ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில் மாநிலத்தின் மையப் பகுதியான திருச்சியில் புதிதாக ஓர் ஆசிரியர் இல்லம் 3 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகிறது. சென்னை

சைதாப்பேட்டையில் செயல்பட்டு வரும், ஆசிரியர் இல்லம் 3 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. 2015–2016ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாவட்டங்களில் புதியதாக இரண்டு ஆசிரியர் இல்லங்கள் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் அரசுக்கு கூடுதலாக 6 கோடி ரூபாய் செலவினம் ஏற்படும்.

01.06.1981 முதல் ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் செயல்பட்டு வந்த தொடக்க, நடுநிலைப் பள்ளிகள் அரசுப் பள்ளிகளாக ஈர்த்துக் கொள்ளப்பட்டன. இதனைத் தொடர்ந்து தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் அரசுப் பணியில் இணைக்கப்பட்டனர். ஏற்கெனவே அரசுப் பணியில் இருந்து வரும் உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதி மாநில கணக்காயர் அலுவலகத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஆனால், அரசுப் பணியில் இணைக்கப்பட்ட தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதி மட்டும் அரசுத் தகவல் மையத்தின் கட்டுப்பாட்டிலேயே தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. இவ்வாசிரியர்கள் தங்களது வருங்கால வைப்பு நிதி கணக்கினை மாநில கணக்காயர் அலுவலகத்தில், பராமரிக்க வேண்டுமென்று அரசுக்கு நீண்ட நாட்களாக கோரிக்கை விடுத்து வந்தனர். இக்கோரிக்கையினை ஏற்று, தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 31.03.2003-க்கு முன்னர் பணி நியமனம் பெற்று பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகள் அரசு தகவல் தொகுப்பு மையத்திலிருந்து நடப்புக் கல்வி ஆண்டு முதல் மாநிலக் கணக்காயர் அவர்களின் பராமரிப்பில் கொண்டு வரப்படும். இதன் மூலம் சுமார் 1 இலட்சத்து 19 ஆயிரம் ஆசிரியர்கள் பயனடைவர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் விலையில்லா பொருட்கள் தரமானதாகவும், குறித்த காலத்திலும் வழங்கப்பட

வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு அனைத்துப் பொருள்களையும் கொள்முதல் செய்து விநியோகிக்கும் பணிக்கு தமிழ்நாடு பாடநூல் கழகம் கொள்முதல் ஒருங்கிணைப்பு மையமாக செயல்பட ஏதுவாக 2013 ஆம் ஆண்டு முதல் தமிழ் நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் விலையில்லா பொருட்கள் பாதுகாப்பாக வைக்கப்படும் பொருட்டு சென்னை, காஞ்சிபுரம், வேலூர், பர்கூர், தஞ்சாவூர் மற்றும் சிவகாசி ஆகிய இடங்களில் உள்ள தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் கிடங்குகள் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீனபடுத்தி கணினி மயமாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2010–2011 மற்றும் 2011–2012 ஆகிய இரண்டு ஆண்டுகளில் முறையே 344 மற்றும் 710 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன. அவ்வாறாக தரம் உயர்த்தப்பட்ட 1,054 பள்ளிகளில் 896 பள்ளிகளுக்கு மட்டும் கட்டடங்கள் கட்டுவதற்காக மத்திய அரசு மற்றும் மாநில அரசு 75 : 25 என்ற விகிதாசாரத்தில் 518 கோடியே 16 இலட்சம் ரூபாய் நிதி அளித்திருந்தது. ஆனால், மத்திய அரசால் ஒரு பள்ளி கட்டடம் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்ட தொகை, போதுமானதாக இல்லாதால் அப்பள்ளி கட்டடங்கள் இது நாள் வரை கட்டப்படாமலேயே உள்ளன. இப்பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியரின் எதிர்கால நலன் கருதி மத்திய அரசால் ஒப்பளிக்கப்பட்ட 896 பள்ளி கட்டடங்களை கட்டி முடிக்க மாநில அரசின் 25 சதவிகித பங்களிப்பான 129 கோடியே 54 இலட்சம் ரூபாயுடன் கூடுதலாக 996 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், மத்திய அரசால் பள்ளிக் கட்டடம் கட்ட நிதி உதவி வழங்கப்படாத 158 பள்ளிகள் 2011–12 ஆம் ஆண்டிலேயே தரம் உயர்த்தப்பட்டு, மாணவர்கள் சேர்க்கப்பட்டு, தொடர்ந்து நடைபெற்று வருவதாலும் அம்மாணவர்களின்

வருங்காலம் கருதியும் மாநில அரசின் நிதியிலிருந்து, விடுபட்ட 158 பள்ளிகளுக்கு கட்டடம் கட்டுவதற்கும், 267 கோடியே 53 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆக மொத்தம் 2010–2011 மற்றும் 2011–2012இல் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்ட 1,054 பள்ளிகளுக்கு கட்டடம் கட்ட 1,263 கோடியே 53 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அறிவிப்புகள் தமிழகம் பள்ளிக் கல்வியில் தேசிய அளவில் முன்னிலை வகிக்க வழி வகுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

1,004 திருக்கோயில்களின் திருப்பணிகளுக்காக ரூ.5.2 கோடி நிதியுதவி!

23.09.2015

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழக வரலாறு, கலை மற்றும் கலாச்சாரத்தை எடுத்துக் கூறும் கருவூலங்களாக திகழும் திருக்கோயில்களில் திருப்பணிகளை மேற்கொள்வதிலும், அன்றாட பூஜைகள் தங்கு தடையின்றி நடப்பதை உறுதி செய்வதிலும், ஆக்கிரமிப்பில் உள்ள திருக்கோயில்களின் சொத்துகளை மீட்டு அவற்றின் வருவாயைப் பெருக்குவதிலும் கடந்த நான்கு ஆண்டுகளாக எனது தலைமையிலான அரசு கண்ணும் கருத்துமாக செயல்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டிற்கான பின் வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாட்டில் சுமார் 39,000 பொது திருக்கோயில்கள் உள்ளன. ஆகம விதிகளின் படி 12 வருடங்களுக்கு ஒரு முறை திருக்கோயில்களில் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்வதன் மூலம் திருக்கோயில்களில் உள்ள மூலவருக்கு தனித்துவமான தெய்வ சக்தி உருவாகும் என்பது ஐதீகம். கடந்த 4 ஆண்டுகளில் 7,327 திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளது. இதே போன்று இவ்வாண்டும் ஆகம விதிப்படி 1,004 திருக்கோயில்களில் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சுமார் 39,000 திருக்கோயில்களில் 34,000

திருக்கோயில்களின் ஆண்டு வருமானம் 10,000 ரூபாய்க்கும் கீழ் உள்ளது. ஒவ்வொரு வருடமும் இத்துறைக் கட்டுப்பாட்டில் உள்ள நிதி வசதி இல்லாத கிராமப்புறத் திருக்கோயில்களை திருப்பணி செய்ய கொள்கை முடிவு எடுக்கப்பட்டு, அதன்படி பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து 2 கோடி ரூபாய் நிதி வைப்பு நிதியாக வைக்கப்பட்டு அதிலிருந்து வரப் பெறும் வட்டித் தொகையிலிருந்து ஒரு திருக்கோயிலுக்கு 25,000 ரூபாய் வீதம் திருப்பணி மற்றும் புனரமைக்கும் பணிகளுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியுதவி கடந்த 2012–2013 ஆம் ஆண்டு முதல் திருக்கோயில் ஒன்றுக்கு 50,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் 2,268 திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்ய 11 கோடியே 34 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதே போன்று இந்த நிதி ஆண்டிலும் 1,004 திருக்கோயில்களில் திருப்பணி மற்றும் புனரமைப்பு பணி செய்ய ஏதுவாக, திருக்கோயில் ஒன்றுக்கு 50,000 ரூபாய் வீதம் 5 கோடியே 2 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின் கீழ் இல்லாத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், வசிக்கும் பகுதிகளில் உள்ள திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு நிதி வழங்க அரசு முடிவு செய்து திருக்கோயில் ஒன்றுக்கு 25,000 ரூபாய் வீதம் முதற்கட்டமாக நிதியுதவி வழங்கி திருப்பணி மற்றும் புனரமைப்பு செய்யப்பட்டது. இந்த நிதியுதவி போதுமான அளவு இல்லாத காரணத்தால் கடந்த 2012–2013 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தின் கீழ் திருக்கோயில் ஒன்றுக்கு 50,000 ரூபாய் வீதம் நிதியுதவி உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், கடந்த 4 ஆண்டுகளில் 2,636 திருக்கோயில்களில் திருப்பணி செய்ய ஏதுவாக, 13 கோடியே 18 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதே போன்று இந்நிதி ஆண்டிலும் 1,004 திருக்கோயில்களில்

திருப்பணிகள் மேற்கொள்ள ஏதுவாக, திருக்கோயில் ஒன்றுக்கு 50,000 ரூபாய் வீதம், 5 கோடியே 2 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் மன்னர்களால் கட்டப்பட்ட பழமையான பல திருக்கோயில்கள் உள்ளன. அவற்றில் சிதிலமடைந்து தொன்மை வாய்ந்த கவனிப்பாரற்ற நிலையில் உள்ள தொல்லியல் ரீதியில் உயர்ந்த மதிப்புள்ள 23 திருக்கோயில்களில் அவற்றின் பழமை மாறாமலும், தொன்மை மாறாமலும் திருப்பணி மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாதசுவாமி திருக்கோயிலின் உப கோயிலான திருவெள்ளறை அருள்மிகு புண்டரிகாட்சப் பெருமாள் திருக்கோயில் 13-ஆம் நூற்றாண்டில் ஹோய்சாலா மன்னன் வீர பல்லாளாவால் கட்டப்பட்டு முழுமை பெறாமல், இரண்டு நிலைகள் வெளியில் தெரியும் செங்கல் கட்டுமானத்தோடு உள்ளது. இந்த ராஜகோபுர கட்டுமானம் தொன்மை மாறாது தொல்லியல் முறையில் 5 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்து பிரசித்தி பெற்ற ஆகம விதிப்படி அமைக்கப் பெற்ற திருக்கோயில்களிலும் அந்த திருக்கோயிலின் மூலவருடன் தொடர்புடைய தல விருட்சம் அமையப் பெற்றிருக்கும். காலப் போக்கில் சில தல விருட்சங்கள் பட்டுப்போய் உள்ளன. இவ்வாறு பட்டுப்போய் உள்ள தல விருட்சங்களை மரபணு அல்லது பிற தாவர இனப்பெருக்க முறைகள் மூலம் மிக அபூர்வமான ஸ்தல விருட்சங்களாக மீட்டு உருவாக்கப்படும்.

திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களின் வசதிக்கென, 8 கோடி ரூபாய் செலவில், 5 திருக்கோயில்களில் சேவார்த்திகள் தங்கும் மண்டபம் மற்றும் கழிவறைகள் கட்டவும்; திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களின்

உடைமைகளை பாதுகாக்கும் வகையில் 5 திருக்கோயில்களில் பொருட்கள் வைப்பறை கட்டவும்; பக்தர்களின் நலனை முன்னிட்டு 5 திருக்கோயில்களில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளவும்; திருக்கோயில்களின் நிலம் மற்றும் உடைமைகளை பாதுகாக்கும் வகையில் 14 திருக்கோயில்களுக்கு சுற்றுச்சுவர் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்காணும் அறிவிப்புகள், திருக்கோயில்கள் மேலும் சிறப்புறவும், பக்தர்களுக்கு கூடுதல் வசதிகள் கிடைக்கவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

கிராமப்புற பொருளாதாரம் மேம்பாடு அடையவும், பால் மற்றும் மீன்கள் உற்பத்தி பெருகவும் ரூ.306.55 கோடி மதிப்பிலான திட்டங்கள்!

23.09.2015

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேளாண்மைப் பிரிவின் ஓர் அங்கமாகவும், கிராமப்புற பொருளாதாரத்தை நிர்ணயிக்கும் ஒரு கருவியாகவும், பெண்களுக்கு சுய வேலைவாய்ப்பினை அளிக்கும் தொழிலாகவும் விளங்கிக் கொண்டிருக்கின்ற கால்நடை வளர்ப்புத் தொழிலை ஊக்குவிக்கும் வகையில், இரண்டாம் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தும் நோக்கோடு, கால்நடை பராமரிப்புத் துறைக்கும், பால் வளத் துறைக்கும்; புரதச் சத்துள்ள உணவைப் பெருக்குவதிலும், கணிசமான அந்நிய செலாவணியை ஈட்டுவதிலும் முக்கியப் பங்கு வகிக்கும் மீன் வளத் துறைக்கும் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு எனது அரசால் முக்கியத்துவம் தரப்பட்டு கடந்த நான்கு ஆண்டுகளில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கிராமப்புற பொருளாதாரத்தில் கால்நடை வளர்ப்பின் பங்களிப்பை உயர்த்தும் பொருட்டும், பால் உற்பத்தியை பெருக்கும் வகையிலும், மீன் வளத்தை பெருக்கும் வகையிலும், பின்வரும் வளர்ச்சித் திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமை அடைகிறேன்.

கடந்த நான்காண்டுகளில் 301 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் 1143 கால்நடை நிலையங்களுக்கு புதிய கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 42 கோடியே 23 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், 193 கால்நடை மருத்துவ நிலையங்களுக்கு புதிய கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

இதன் மூலம் 3.57 இலட்சம் கால்நடை வளர்ப்போர் பயன் பெறுவர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடை பராமரிப்புத் துறையின் மாவட்ட கால்நடைப் பண்ணைகளின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், உயர் மரபுத் திறன் கொண்ட கால்நடைகளை கொள்முதல் செய்யவும், 9 கோடியே 46 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் விவசாயிகள் குறைந்த விலையில் உயர் மரபணு கொண்ட கால்நடைகளைப் பெற்று கால்நடைத் தொழிலை இலாபகரமாக மேற்கொள்ள இயலும்.

ராணிப்பேட்டை கால்நடை தடுப்பு மருந்து உற்பத்தி நிலையத்தை "சிறந்த ஆய்வக நடைமுறைகள்" தரத்திற்கு மேம்படுத்த, புதிய கால்நடை நோய் தரக் கட்டுப்பாட்டுக் கூடம் 19 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் 8.50 கோடி தடுப்பூசி மருந்தினைத் தரக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைக்கு உட்படுத்தி தமிழகம் முழுவதும் தரமான தடுப்பூசிகள் விநியோகம் செய்யப்படும்.

சைதாப்பேட்டையில் 29 கோடியே 70 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், ஒரு புதிய ஐந்து மாடி பல்துறை அலுவலக வளாகம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போதுள்ள இட நெருக்கடியைப் போக்கும் விதமாக, இவ்வளாகத்தில், கால்நடை பராமரிப்புத் துறை, மீன்வளத் துறை, தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டு முகமை, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு மீனவர் கூட்டுறவு இணையம் மற்றும் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையம் ஆகிய அலுவலகங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு போதுமான இட வசதியுடன் அலுவலகங்கள் அமைக்கப்படும்.

தமிழக கால்நடைகளின் வளத்தையும், நலத்தையும் மேம்படுத்த, கால்நடைகளுக்கு தேவையான தடுப்பூசி மற்றும் நோய் கண்டறிய பயன்படும் ஆய்வகப் பெட்டிகளின் தரமறிய; கால்நடை உயிரியல் பாதுகாப்பு சோதனைச் சாலை மற்றும் சிறப்பு ஆராய்ச்சி மையம் என்ற உலகத் தரமிக்க சிறப்பு ஆராய்ச்சி மையம், 12 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை மாதவரத்தில் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக வளாகத்தில், இது அமைக்கப்படும். மேலும், இதுவரை பறவைக் காய்ச்சல் மற்றும் கோமாரி நோயினைக் கண்டறிவதற்கு வட மாநிலங்களில் உள்ள ஆய்வுச் சாலைகளையே பயன்படுத்த வேண்டிய நிலை இருந்தது. தற்போது இந்த மையம் நிறுவப்படுவதால், மேற்கண்ட நோய்களை இவ்வாய்வகத்திலேயே கண்டறிய வசதி ஏற்படும். இதன் மூலம், விவசாயிகள் மற்றும் கோழி வளர்ப்போர் மிகுந்த பயன் பெறுவர்.

அவசர, அவசிய மருத்துவ வசதிக்காக கால்நடைகளை அழைத்து வர இயலாத அளவுக்கு தொலைதூர கிராமப் பகுதிகளில் வசித்து வரும் விவசாயிகளின் கால்நடைகளுக்கு அவசர சிகிச்சை அளிக்கும் பொருட்டு, இந்தியாவிலேயே முதன்முறையாக 10 "நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகள் **(Animal Mobile Medical Ambulance)"** தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தால் 6 கோடியே 34 இலட்சம் ரூபாய் செலவில் வாங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தருமபுரி, காஞ்சிபுரம், திருவள்ளூர், நீலகிரி, புதுக்கோட்டை, விருதுநகர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, மதுரை, திருச்சி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் பால் பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 32 கோடியே 78 இலட்சத்து 87

ஆயிரம் ரூபாய் செலவில் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்டங்களிலிருந்து பால் கொண்டு வருவதற்கு தனியார் பால் டேங்கர்களை மட்டுமே நம்பியிருப்பதை தவிர்க்கும் பொருட்டு 61 பால் டேங்கர்கள் 15 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் வாங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈரோடு, விருதுநகர் மற்றும் தருமபுரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தை சார்ந்த கிராமப்புற பகுதிகளில் குளிரூட்டு வசதிகளை மேம்படுத்துவதற்காக, 16 கோடியே 37 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகர பால் பண்ணையில் உயர் வெப்ப நிலையில் பாலை பதப்படுத்தி பாக்கெட்டுகளில் அடைக்கும் இயந்திரங்கள் மற்றும் 5 லிட்டர் அளவு கொண்ட பால் பாக்கெட்டுகள் தயாரிக்க தேவையான இயந்திரங்கள் 19 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை பெருநகரில் ஆவின் பால் பொருட்கள் நுகர்வோர்களுக்கு எளிதில் கிடைக்கச் செய்யும் வகையில், ஆவின் நிறுவனத்தின் 16 மண்டலங்களில், ஒவ்வொரு மண்டலத்திலும், ஒரு அதி நவீன பாலகம் வீதம், 16 பாலகங்கள் 10 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.

சென்னை மாநகரத்தில் மாதவரம், அம்பத்தூர், சோழிங்கநல்லூர் ஆகிய மூன்று ஆவின் பால் பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் 27 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

படகுகள் பாதுகாப்பாக நிறுத்தப்படுவதற்கான மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்கள் அமைக்கவும், பிடித்து வரப்பட்ட கடல் உணவுகளை பதப்படுத்தும் வசதிகளை உருவாக்கவும் நடப்பு நிதியாண்டில், தமிழகத்தில் கடலூர் மாவட்டத்தில் பேட்டோடை, தூத்துக்குடி மாவட்டத்தில் சிங்கித்துறை மற்றும் பழைய காயல், நாகப்பட்டினம் மாவட்டத்தில் சாமந்தான்பேட்டை மற்றும் திருமுல்லை வாசல் ஆகிய 5 இடங்களில் மீன் இறங்கு தளங்கள் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் 465 மீன்பிடிப் படகுகள் பாதுகாப்பாக நிறுத்துவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு சுமார் 8,400 மீனவர்கள் பயனடைவர்.

தமிழ்நாட்டில் மீன் குஞ்சு உற்பத்தியை அதிகரித்திடும் பொருட்டு, நடப்பாண்டில் திருவள்ளூர் மாவட்டம் பூண்டி, கரூர் மாவட்டம் குளித்தலை மற்றும் திருக்காம் புலியூர், தருமபுரி மாவட்டம் சின்னாறு, கிருஷ்ணகிரி மாவட்டம் பாம்பாறு, தஞ்சாவூர் மாவட்டம் தட்டான்குளம், திருநெல்வேலி மாவட்டம் மணிமுத்தாறு, திண்டுக்கல் மாவட்டம் அணைப்பட்டி, சிவகங்கை மாவட்டம் பிரவலூர் மற்றும் மாணகிரி ஆகிய 10 இடங்களில் உட்கட்டமைப்பு பணிகள் 25 கோடி ரூபாய் செலவிலும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் ஆழியார், அமராவதி மற்றும் திருமூர்த்தியிலுள்ள மீன் குஞ்சு உற்பத்தி பண்ணைகள், 5 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவிலும் ஆக மொத்தம் 30 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் 13 இடங்களில் மீன் குஞ்சு உற்பத்தி மற்றும் வளர்ப்பு பண்ணைகள், நடப்பாண்டில் மேம்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் கூடுதலாக ஆண்டொன்றிற்கு 50 இலட்சம் மீன் குஞ்சு விரலிகள் உற்பத்தி செய்யப்பட்டு கூடுதலாக 1,500 டன் மீன்கள் உற்பத்தி செய்ய வழிவகை ஏற்படும்.

அலங்கார மீன்களில் அதி நவீன உற்பத்தி மற்றும் வளர்ப்புத் தொழில்நுட்பங்கள் மூலம் தமிழ்நாட்டில் அலங்கார மீன் வளர்ப்பு தொழில் முனைப்பு திறன் மேம்படுத்துதல் மற்றும் தொழில்நுட்ப பூங்கா அமைத்தல் என்ற திட்டமானது, தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத்தின் மூலம் மாதவரத்தில் 10 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் தமிழகத்தில் உள்ள அலங்கார மீன் வளர்ப்பவர்கள், தொழில் முனைவோர்கள் மற்றும் வெளிநாட்டு சந்தைப்படுத்துதலில் ஈடுபட்டுள்ளோர் பயனடைவர்.

மொத்தத்தில் 306 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பிலான மேற்கண்ட திட்டங்கள் கிராமப்புற பொருளாதாரம் மேம்பாடு அடையவும், பால் மற்றும் மீன்கள் உற்பத்தி பெருகவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

ரூ.1,855.36 கோடி மதிப்பீட்டில் சாலைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வழிவகை!

25.09.2015

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பாதுகாப்பான போக்குவரத்திற்கும், வேகமான பொருளாதார வளர்ச்சிக்கும், ஊரகமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் முக்கியக் காரணியாகவிளங்குவது சாலைக் கட்டமைப்பு என்பதால், சாலை மேம்பாட்டு திட்டங்களுக்கு எனது தலைமையிலான அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை மூலம் 18,056 கோடி ரூபாய் மதிப்பிலான சாலைகள் மற்றும் பாலங்கள் அமைக்கும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 10,490 கோடி ரூபாய்மதிப்பிலானபணிகள்நடைபெற்றுவருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் 1,855 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பிலானபின் வரும் சாலைகள் மற்றும் பாலங்கள் குறித்ததிட்டங்களை இந்தமாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

திருவண்ணாமலை நகரில் கோயிலைச் சுற்றி அமையப் பெற்றுள்ள கிரிவலப் பாதையில் செல்லும் பக்தர்களின் வசதிக்காக முதற்கட்டமாக, 7 மீட்டர் முதல் 10 மீட்டர்அகலமுள்ள நடைபாதை மற்றும் வடிகால் வசதி ஏற்படுத்தப்படும். மேலும், ஓய்வு அறை வசதிகள் செய்து தரப்படும். இவை 65 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

விரிவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சி பகுதியில் அமைந்துள்ள நெடுஞ்சாலைத் துறையின் சாலைகளில், விளிம்பு வரை அகலப்படுத்தும் பணிகளை உள்ளடக்கிய, நடைபாதை ஒருங்கிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் நிதிநிலைக் கூட்டத் தொடரின் போது அறிவித்தவாறு முதற்கட்டமாக 250 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் நடைபெற்று வருகின்றன. இதனை தொடர்ந்து, 2015–2016இல் இரண்டாம் கட்டமாக 150 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும்.

இரயில்வே கடவுகளுக்கு பதிலாக மேம்பாலங்கள் மற்றும் கீழ்பாலங்கள் அமைக்கும் திட்டத்தின் கீழ், நடப்பாண்டில், சேலம் மாவட்டத்தில் 5 பணிகள், வேலூர் மாவட்டத்தில் 2 பணிகள், கோயம்புத்தூர், கடலூர், மதுரை, கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் தலா ஒரு பணி என 7 மாவட்டங்களில் 12 பணிகள் 665 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு திட்டம், பொள்ளாச்சி, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம் கோட்டங்களில் செயல்படுத்தப்படுவதை தொடர்ந்து, நடப்பாண்டில் திருவள்ளூர் கோட்டத்தில் செயல்படுத்தப்படும். 485 கிலோ மீட்டர் நீள மாநில நெடுஞ்சாலைகளும், 278 கிலோ மீட்டர் நீள மாவட்ட முக்கிய சாலைகளும்; 680 கோடி ரூபாய் மதிப்பில் செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்புத் திட்டத்தில் 5 ஆண்டுகளுக்கு மேற்கொள்ளப்படும்.

ஓரகடம் தொழிற்பூங்கா பகுதியில் சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சிங்கபெருமாள் கோயில்–திருப்பெரும்புதூர் மாநில நெடுஞ்சாலையில், சிங்கபெருமாள் கோயில் முதல் ஓரகடம் வரை ஆறு வழிச் சாலையாக அகலப்படுத்தும் பணிகள் 120 கோடி ரூபாய் மதிப்பில்

மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டதின் படி இப்பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இதன் தொடர்ச்சியாக வண்டலூர் முதல் ஓரகடம் வரையிலான நான்கு வழிச் சாலை ஆறு வழிச் சாலையாக மேம்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பணியில் 3.8 கிலோ மீட்டர் நீள படப்பை புறவழிச் சாலை உள்ளிட்ட 20 கிலோ மீட்டர் நீளச் சாலை அமைக்கப்படும். இவை, 200 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரிய தெற்கத்தியச் சாலையில் கிலோ மீட்டர் 32/4இல் வண்டலூர் – மாம்பாக்கம் – கேளம்பாக்கம் சாலை சந்திப்பில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் விதமாக ஓர் உயர் மட்டப் பாலம் 60 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை பெருநகர பகுதிகளில், உள்வட்டசாலையில் கொளத்தூர் பகுதியில் இரட்டைஏரி அருகில், பெரம்பூர் – செங்குன்றம் சாலை சந்திப்பில் 52 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பில் இடது புற சாலையில் மேம்பாலப் பணி முதற்கட்டமாக நடைபெற்று வருகின்றது. இரண்டாம் கட்டமாக, வலதுபுறச் சாலையில் மேம்பாலப் பணிநடப்பாண்டில் 2015–2016இல் 35 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அறிவிப்புகள் சாலை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

தமிழ்நாட்டு இளைஞர்கள் சர்வதேச அளவில் போட்டியிட ஏதுவாக பல்வேறு திட்டங்கள்!

25.09.2015

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இளைய சமுதாயத்தினரின் அறிவு வளர்ச்சியை மட்டுமல்லாது அவர்களது உடல் வளர்ச்சி, மனவளர்ச்சி, உடல் நலம் ஆகியவற்றையும் பேணவேண்டியதன் அவசியத்தை கருத்தில்கொண்டு, கல்விக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை விளையாட்டிற்கும் எனது தலைமையிலான அரசு அளித்து வருகிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த இளைஞர்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவில் போட்டியிடும் வண்ணம் தங்கள் திறனை உயர்த்திக் கொள்ள ஏதுவாக பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில் நடப்பாண்டில், இளைஞர் நலனைக் கருத்திற் கொண்டு, விளையாட்டு மேம்பாட்டிற்காக பின்வரும் புதியதிட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தியாவிலேயே மலை மேலிடப் பயிற்சி முகாம் இமாச்சலபிரதேசத்தில் உள்ள ஷில்லாரு மற்றும் கேரளாவில் உள்ள மூணாறு ஆகிய இரண்டு இடங்களில் மட்டுமே உள்ளது. பெரும்பாலான சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் குளிர் பிரதேசங்களில் நடைபெறுவதால் நமது விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கும் அங்கு நிலவும் தட்ப வெப்ப நிலையை சமாளிக்கும் வகையில் பயிற்சி அளிக்கப்பட வேண்டியது அவசியம் ஆகும். எனவே, நமது விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளின் செயல்திறனை மேம்படுத்த ஏதுவாக,

உதகமண்டலத்தில் மலை மேலிடப் பயிற்சி மையம் ஒன்று 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த முப்பது ஆண்டுகளாக தமிழ்நாட்டிலுள்ள வேலூர் மாவட்டம் பளு தூக்கும் போட்டிகளில் பிரசித்திபெற்று விளங்கி வருகிறது. பளு தூக்கும் போட்டியில் தேசிய அளவில் பதக்கம் பெற்ற ஆயிரத்திற்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் மற்றும் காமன் வெல்த், ஆசிய, தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற விளையாட்டு வீரர்கள் வேலூர் மற்றும் அதன் சுற்றுப் புறத்திலிருந்து உருவானவர்கள் என்று கூறினால் அது மிகையாகாது. பளு தூக்கும் போட்டியில் சர்வதேச அளவில் பேசப்படும் இடமாக வேலூர் பகுதி அமைந்துள்ளது. வேலூர் மாவட்டம் சத்துவாச்சாரியில், 1992 ஆம் ஆண்டு எனது உத்தரவின் பேரில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் சிறப்பு நிலை பளு தூக்கும் பயிற்சி மையம் துவங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. சமீபத்தில் இப்பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்ற திரு. சதீஷ்குமார் சிவலிங்கம் என்பவர் 2014 ஆம் ஆண்டு கிளாஸ்கோவில் நடைபெற்ற காமன்வெல்த் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றுள்ளார். எனவே, மேலும் பல வீரர்கள் மற்றும் வீராங்கனைகள், பதக்கம் வெல்ல ஏதுவாக, இப்பயிற்சி மையம் 2 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் முதன்மை நிலை பயிற்சி மையமாக தரம் உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் சர்வதேச அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்க ஏதுவாக தங்களுடைய திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கு அறிவியல் ரீதியான உயர்நிலைப் பயிற்சி மிக அவசியமான ஒன்றாகும். அறிவியல் ரீதியான பயிற்சி விளையாட்டு வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும், நமது மாநிலத்தில் வழங்க இயலாத

காரணத்தினால் பெரும்பாலான விளையாட்டு வீரர்கள் உயரிய நிலையை அடைய இயலவில்லை. தேசிய மற்றும் சர்வதேச அளவில் நம் மாநிலத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் திறம்பட செயலாற்ற அவர்களுக்கு பயிற்சி அளிக்கும் பொருட்டு அறிவியல் உபகரணங்கள் மற்றும் விளையாட்டு மருத்துவ வசதியுடன் கூடிய அறிவியல் விளையாட்டு மையம் ஒன்று அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். விளையாட்டு மருத்துவம், விளையாட்டு உளவியல், விளையாட்டு உடற் கூறியல், உயிர் இயந்திரவியல் சத்துணவியல், மறு சீரமைப்பியல் மற்றும் ஊக்கமருந்து எதிர்ப்பு ஆகிய வசதிகளுடன் கூடிய விளையாட்டு அறிவியல் மையம் ஒன்று மதுரையில் 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேசிய மாணவர் படை, NCC மாணவர்கள் பல்வேறு திறன்கள் பெறுவது ஊக்குவிக்கப்பட வேண்டும். எனவே, அவர்கள் தங்கள் திறனை மேம்படுத்திக் கொள்ள ஏதுவாக ஒட்டுநர் பாவிப்பு, வானூர்தி பாவிப்பு மற்றும் ஆயுத பாவிப்பு ஆகிய பயிற்சிகள் அளிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் மூலம் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு சாலை பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு, வாகனம் ஓட்டும் திறமை, வானூர்தி பயிற்சி பெற்ற உணர்வு மற்றும் அசல் துப்பாக்கியால் சுடும் உணர்வுகளை பெறும் வாய்ப்பு கிட்டும். மதுரை இடையபட்டியில் அமைக்கப்பட்டு வரும் தேசிய மாணவர் படைபயிற்சி அகாடமியில் வாகன ஓட்டுதல் பாவிப்பு Driving Simulator வானூர்தி பாவிப்பு Flight Simulator மற்றும் ஆயுத பாவிப்பு Weapon Simulator ஆகிய நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்படும். இது போன்ற பயிற்சி இந்தியாவிலேயே முதன் முறையாக இங்கு தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்படும்

என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இளைஞர்கள் தங்களது வேலை வாய்ப்பினை அதிகரித்துக் கொள்ள, தகவல் தொடர்புத் திறனை மேம்படுத்திக் கொள்வது அவசியமானதாகும். எனவே, தேசிய மாணவர் படைப்பயிற்சி அகாடமியில் மொழி ஆய்வுக் கூடம் ஒன்றும் அமைக்கப்படும். இவை 1 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

இந்த அறிவிப்புகள் தமிழக விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் உலகளவில் பதக்கங்களை பெறவும், உடல் மற்றும் மன வலிமைகளைப் பெறவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

வேளாண், மீனவ மக்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெற ரூ.321.69 கோடி மதிப்பீட்டில் திட்டங்கள்!

25.09.2015

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உணவு உற்பத்தியில் தமிழகம் உன்னத நிலையை அடைய வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு, விலை மதிப்பற்ற இயற்கை வளமாகக் கருதப்படும் தண்ணீரை முறையாக பயன்படுத்த ஏதுவாக, பாசன அமைப்புகளுக்கான கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகளை எனது தலைமையிலான அரசு முனைப்புடன் கடந்த நான்கு ஆண்டுகளாக மேற்கொண்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, பொதுப்பணித் துறை மூலம் நடப்பாண்டில் எனது தலைமையிலான அரசு மேற்கொள்ள இருக்கும் பெரும் திட்டங்களை இந்த மாமன்றத்தில் நான் அறிவிப்பதில் பெருமை அடைகிறேன்.

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், பரம்பிகுளம் ஆழியாறு திட்டத்தின் ஆரம்பப் பகுதியான சர்கார்பதி மின் நிலையத்தின் இடது புறம் பிரியும் கால்வாய் ஆழியாறு ஊட்டுக் கால்வாய் ஆகும். இவ்வூட்டுக் கால்வாயின் நீளம் சுமார் 13.4 கிலோ மீட்டர் ஆகும். அதன் நீர் கடத்தும் திறன் விநாடிக்கு 280 கன அடி ஆகும். இக்கால்வாய் மூலம் சுமார் 3,900 மில்லியன் கன அடி நீர் ஆழியாறு அணைக்கும், குடிநீர் தேவைக்கும் எடுத்து செல்லப்படுகிறது. அடர்ந்த மலைப் பகுதியில் செல்லும் இக்கால்வாய் தற்போது சிதிலமடைந்து, நீர் கசிவு ஏற்பட்டு, நீர் கடத்தும் திறன் வெகுவாக குறைந்துள்ளதால் தேவையான நீர் ஆழியாறு அணைக்கு சென்றடைவதில்லை. எனவே, இவ்வூட்டு

கால்வாயின் ஆரம்ப பகுதியில் முதல் கட்டமாக 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும். இக்கால்வாயை புனரமைப்பதன் வாயிலாக நேரடியாக 4,666 ஏக்கர் நிலம், கால்வாயின் தலை மடையான சேத்துமடை கால்வாய் மூலம் 5,044 ஏக்கர் நிலம் என மொத்தம் 9,710 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். மேலும், குனியமுத்தூர் பேரூராட்சி, கிணத்துக்கடவு பேரூராட்சி, பொள்ளாச்சி நகராட்சி மற்றும் சுற்று வட்டார கிராமங்களுக்கான குடிநீர் வசதி உறுதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசின் விடா முயற்சியின் காரணமாக முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டம் 136 அடியிலிருந்து முதற்கட்டமாக 142 அடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் கூடுதலாக கிடைக்கக் கூடிய நீரினை உரிய வகையில் பயன்படுத்த பெரியாறு பிரதான கால்வாயின் கிளைக் கால்வாய்களை புனரமைப்பது என முடிவு செய்யப்பட்டு, முதற்கட்டமாக சென்ற ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110இன் கீழ் மதுரை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள 1 முதல் 4ஆவது பிரிவு வாய்க்கால், 12ஆவது பிரிவு வாய்க்கால் மற்றும் பெரியாறு நீட்டிப்பு கால்வாய் ஆகிய 6 பிரிவுவாய்க்கால்கள் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்படும் என இம்மாமன்றத்தில் அறிவித்தேன். இதன்படி, இத்திட்டப் பணிகள் தொடங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டத்தின் இரண்டாம் கட்டமாக, மதுரை மாவட்டம், வாடிப்பட்டி, மதுரை வடக்கு, மதுரை கிழக்கு மற்றும் மேலூர் வட்டங்களில் உள்ள பெரியாறு பிரதான கால்வாயின் 5, 6, 8, 9 மற்றும் 11ஆவது பிரிவு வாய்க்கால்களில் புனரமைப்பு பணிகள் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் மூலம், இப்பிரிவு வாய்க்கால்களின் கீழ் ஏற்கனவே உள்ள 33,828 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கப்படுவதுடன், அவற்றின் நீர் கடத்தும் திறன் அதிகரிக்கப்பட்டு கடை மடை பகுதி வரை பாசன வசதி உறுதி செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கரூர் மாவட்டம், கருப்பம் பாளையம், அப்பி பாளையம் மற்றும் ஆண்டான் கோயில் கிராமவாசிகள் மற்றும் விவசாயிகளின் நீண்ட கால கோரிக்கையை நிறைவேற்றிடும் வகையில், பெரியார் நகர் அருகே ஆண்டான் கோயில் கிராமத்தில், அமராவதி ஆற்றின் குறுக்கே 15 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தடுப்பணை அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தினை நிறைவேற்றுவதன் மூலம் செட்டிபாளையம், அப்பி பாளையம், கருப்பம் பாளையம், சொக்கலியூர், ஆண்டான் பாளையம் மற்றும் விஸ்வநாத புரி ஆகிய கிராமங்களில் உள்ள 220 கிணறுகளின் நிலத்தடி நீர் செறிவூட்டப்படும்.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ராமநதி நீர்த் தேக்கத்தின் உபரி நீரை ஜம்பு நதிக்கு திருப்பும் வகையில் திட்டத்தை செயல்படுத்துமாறு அப்பகுதி பொது மக்கள் நீண்ட காலமாக, கோரிக்கை வைத்து வருகின்றனர். அதனை ஏற்று, திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், ராமநதி அணையின் உபரி நீரை ஜம்பு நதி பாசன பகுதிகளுக்கு திருப்பும் திட்டம் 42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தினால், ஜம்பு நதி அமைப்பிலுள்ள தென்காசி வட்டம், மத்தாளப் பாறை, திப்பணம் பட்டி, ஆவுடையனூர், தெற்கு கடையம், கீழ கடையம் மற்றும் பொட்டல் புதூர் கிராமங்கள் மற்றும் ஆலங்குளம் வட்டம், வெங்கடாம் பட்டி மற்றும் மடதூர் கிராமங்களில் உள்ள 10 கண்மாய்களும்;நீட்டிப்பு கால்வாய் மூலம் 7 கூடுதல் கண்மாய்களும் பயன் பெறும். மேலும், இக்கால்வாய் செல்லும் நேர் பாட்டின் அருகே அமைந்துள்ள 729 கிணறுகள் மூலம் நிலத்தடி நீர் செறிவூட்டப் படுவதனால் 9 கிராமங்கள் பயன் பெறுவதோடு 4,050 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறும். இத்திட்டத்தை செயலாக்குவதற்கு 45.28 ஏக்கர் பட்டா நிலங்கள் கையகப்படுத்தப்பட வேண்டியுள்ளது. முதல் கட்டமாக, நிலம் கையகப்படுத்துதல் மற்றும் விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்வதற்காக 5 கோடியே 40 இலட்சம் ரூபாய்

ஒப்பளிப்பு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், சின்னமனூர் அணைகட்டு மற்றும் அதன் வழங்கு வாய்க்கால், மார்கயன் கோட்டை அணைகட்டு மற்றும் அதன் வழங்கு வாய்க்கால் ஆகியவை 12 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், தேனி மாவட்டம் மற்றும் வட்டம், சீலியம்பட்டி மற்றும் அதன் வழங்கு வாய்க்கால், வீரபாண்டி அணைகட்டு மற்றும் அதன் வழங்கு வாய்க்கால் ஆகியவை 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், தேனி மாவட்டம், போடி வட்டம், உப்புக்கோட்டை மற்றும் அதன் வழங்கு வாய்க்கால் ஆகியவை 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் புனரமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேட்டூர் கால்வாய் திட்டம் 1955ஆம் ஆண்டு முதல் சேலம், ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் 45,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மேட்டூர் கிழக்கு மற்றும் மேற்கு கரைக் கால்வாய் மண் கரைகளால் ஆனது. மேட்டூர் கிழக்கு கரை கால்வாயின் மொத்த நீளம் 64.40 கி.மீ மற்றும் அதன் நீர் கடத்தும் திறன் 600 கன அடி ஆகும். மேட்டூர் மேற்கு கரை கால்வாயின் மொத்த நீளம் 43.20 கிலோ மீட்டர் மற்றும் அதன் நீர் கடத்தும் திறன் 400 கன அடி ஆகும். இக்கால்வாய்கள் அமைக்கப்பட்டு 60 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்ட நிலையில், இரு பக்கமும் உள்ள கரை சரிவுகளில் தண்ணீர் கசிவு அதிகமாக உள்ளது. இதனால் கடைமடை பகுதிகளுக்கு உரிய அளவு தண்ணீர் கொண்டு செல்ல முடிவதில்லை. எனவே, எனது உத்தரவின் பேரில் 2014–2015ஆம் ஆண்டில், நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் மேற்கு கரை கால்வாயினை 30 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் 7.283 கிலோ மீட்டருக்கும் மற்றும் கிழக்கு கரை கால்வாயினை 19 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் 5.55 கிலோ மீட்டருக்கும் என மொத்தம் 12.82 கிலோ மீட்டர் தூரத்திற்கு கால்வாய் புனரமைப்புப்

பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக, தற்போது சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், மேட்டூர் கிழக்கு கரை கால்வாயில்,7.29 கிலோ மீட்டர் நீளத்திற்கும் மற்றும் நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டத்தில் கடைமடை பகுதியில் 6.33 கிலோ மீட்டர் நீளத்திற்கும் புனரமைக்கும் பணிகள் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள திருநெல்வேலி வாய்க்கால் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே உள்ள சுத்த மல்லி அணைக்கட்டிலிருந்து துவங்கி திருநெல்வேலி மற்றும் பாளையங்கோட்டை நகரங்கள் வழியாக சுமார் 28.42 கிலோ மீட்டர் நீளம் அமைந்துள்ளது. இக்கால்வாய் நகரப் பகுதிகளில் பழுது அடைந்துள்ளதாலும், குறைபாடுடன் இருப்பதாலும், நீர் கடத்தும் திறன் வெகுவாக குறைந்துள்ளது. இதனால், இக்கால்வாயின் மைய பகுதியில் உள்ள கண்மாய்களுக்கும், கடைமடை பகுதிகளுக்கும் நீர் வழங்க இயலவில்லை. எனவே, திருநெல்வேலி நகருக்குள் இக்கால்வாய் கடக்கும் இடங்களில் இரு புறமும் தடுப்புச்சுவர் அமைத்தல், படுகையை கற்காரை லைனிங் செய்தல், மதகுகளை சீரமைத்தல் மற்றும் குறுக்கு கட்டுமானங்களை புனரமைத்தல் ஆகிய பணிகள் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டத்தில் வராக நதி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள செவல புரை அணைக்கட்டிலிருந்து பிரியும் வழங்கு வாய்க்கால் சுமார் 15.92 கிலோ மீட்டர் நீளம் உள்ளது. இதன் மூலம் 15 ஏரிகள் வழியாக பாசன வசதி கிடைக்கப் பெறுகிறது. இவ்வழங்கு வாய்க்காலில் உள்ள குறுக்கு கட்டுமானங்கள் சிதிலமடைந்து உள்ளதால் ஏரிகளுக்கு போதுமான நீர் கிடைப்பதில்லை. எனவே, செவல புரை அணைக்கட்டு மற்றும் அதன் வழங்கு வாய்க்கால் ஆகியவை புனரமைக்கப்படும். இவ்வாய்க்காலுக்கு அருகிலுள்ள அவியூர் சித்தேரி, அவியூர்

பெரியேரி மற்றும் தாங்கல் ஆகிய ஏரிகளுக்கு நீர் வழங்க வழிவகை செய்யுமாறு இங்குள்ள பொதுமக்கள் விடுத்துள்ள கோரிக்கையை ஏற்று அவியூர் சித்தேரி, அவியூர் பெரியேரி மற்றும் தாங்கல் ஆகிய ஏரிகளுக்கு நீர் வழங்க புதிய வாய்க்கால் அமைக்கப்படும். இப்பணிகள் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் ஏற்கனவே உள்ள 15 ஏரிகள் மற்றும் புதிதாக 3 ஏரிகள் ஆகியவற்றின் கீழ் உள்ள சுமார் 2,200 ஏக்கர் நிலங்கள் பாசன உறுதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், கொட்டரை கிராமம் அருகே மருதையாற்றின் குறுக்கே நீர்த் தேக்கம் அமைக்கும் திட்டம் 108 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயலாக்கப்படும் என தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110இன் கீழ் என்னால் 04.04.2013 அன்று இம்மாமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. முதற் கட்டமாக, இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு தேவையான நிலங்களை கையகப்படுத்துதல் மற்றும், விரிவான ஆய்வுப் பணிகள் 23 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு அப்பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளதால், இத்திட்டத்திற்கான கட்டுமானங்களை செயல்படுத்தும் விதமாக 82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகளை துவங்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு தரப்பு மக்கள் தங்கள் பகுதியில் உள்ள ஏரிகளை தூர் வாரி புனரமைக்கக் கோரி வருகின்றனர். இதன் அடிப்படையில், வேலூர் மாவட்டத்தில் 53 ஏரிகள், சிவகங்கை மாவட்டத்தில் 19 ஏரிகள் மற்றும் ராமநாதபுரம் மாவட்டத்தில் 33 ஏரிகள் என மொத்தம் 105 ஏரிகள்,54 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்படும் என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன்

தெரிவித்துக் கொள்கிறேன். இப்பணிகளை மேற்கொள்வதன் மூலம் 21,750 ஏக்கர் நிலங்கள் பாசன பயன் பெறும்.

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், நெய்வேலி வடபாதி கிராமத்தின் அருகே அக்னியாற்றின் குறுக்கே நிலத்தடி நீரை செறிவூட்ட 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தடுப்பணை அமைக்கும் திட்டமும், தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், திருவையாறு கிராமத்தில், காவேரி ஆற்றில் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தள மட்டச் சுவர் கட்டும் திட்டமும் செயலாக்கப்படும். இத்திட்டத்தினால், திருவையாறு, கல்யாணபுரம் மற்றும் ஊமை வாய்கால்களுக்கு கீழுள்ள, 3,290 ஏக்கர் நிலங்கள் பாசன உறுதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாவட்டம், தண்டையார்பேட்டை வட்டம், ராதாகிருஷ்ணன் நகரில் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே, குடியிருப்பு பகுதிகளை இணைக்கும் விதமாக, 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு பாலம் அமைக்கப்படும்.

மொத்தத்தில் 321 கோடியே 69 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் என்னால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் மூலம் பாசன நிலங்கள் பயன் பெறுவதுடன், வேளாண் பெருங்குடி மக்களும், மீனவ பெருங்குடி மக்களும், பொது மக்களும் பயன்பெறுவர் என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

❋ ❋ ❋

நீதித்துறை செவ்வனே செயல்படுவதிலும், குடிமக்களுக்கு நீதி வழங்குவதிலும் முன்னோடியாக விளங்கும் அரசு!

25.09.2015

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாட்டு மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் எனது தலைமையிலான அரசு, வழக்கு தொடுப்போருக்கு நீதி விரைவாக கிடைக்கப் பெறவேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, புதிய நீதிமன்றங்களை உருவாக்குவதிலும், நீதிமன்றங்களுக்கு கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவதிலும் சிறப்புகவனம் செலுத்தி வருகிறது.

நீதித் துறை செவ்வனே செயல்படவும், நிலுவையிலுள்ள வழக்குகளுக்கு விரைவில் தீர்வு காணவும் புதிய நீதிமன்றங்களை உருவாக்கி குடிமக்களுக்கு விரைவான நீதி வழங்குவதில், தமிழக அரசு முன்னோடியாக விளங்கி வருகிறது. கடந்த நான்காண்டுகளில் 170 புதிய நீதிமன்றங்கள் 134 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

நடப்பாண்டில் ஏற்படுத்தப்படும் புதிய நீதிமன்றங்கள் பற்றிய அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

சார்நிலை நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு விரைவில் தீர்வு காணலால்குடி, கீரனூர், ஓமலூர், பரமத்தி மற்றும் ஆண்டிப்பட்டி ஆகிய இடங்களில் தலா ஒரு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மதுரையில் மூன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள், கோயம்புத்தூரில் இரண்டு கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள், மணப்பாறை, அருப்புக்கோட்டை மற்றும் திருமங்கலத்தில்

ஒரு கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் என மொத்தம் பதிமூன்று மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள்; வாடிப்பட்டி, ஆண்டிப்பட்டி, ஓமலூர், கீரனூர், கும்பகோணம், பெரம்பலூர், தாம்பரம், ஆலந்தூர் மற்றும் பத்மநாபபுரம் ஆகிய இடங்களில் தலா ஒரு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் வீதம் ஒன்பது குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் என மொத்தம் 22 நீதிமன்றங்கள் 9 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீதிமன்றங்களில் தற்போது நிலுவையில் உள்ள ஏராளமான வழக்குகளை துரிதமாக முடிப்பதற்கு விரைவு நீதிமன்றங்களை அமைப்பது அவசியமாகிறது. எனது தலைமையிலான அரசு, மாநிலத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்த வழக்குகளைப் பிரத்யேகமாக விசாரிக்க 22 மகளிர் விரைவு நீதிமன்றங்களை Fast Track Mahila Courts 16 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் அமைத்துள்ளது. மேலும், அனைத்து மாவட்டங்களிலும் தலா ஒரு மகளிர் நீதிமன்றம் அமைக்கப்பட்டு அவை சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. திருநெல்வேலி மாவட்டம், தென்காசியில் 32 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் செலவில் மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில், ஒரு விரைவு நீதிமன்றம் அமைக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. தற்போது தேனி மாவட்டம் தேனியிலும், ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியிலும், திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியிலும், கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோயிலிலும், விழுப்புரம் மாவட்டம் விழுப்புரத்திலும், திண்டுக்கல் மாவட்டம், பழனியிலும், சேலம் மாவட்டம் மேட்டூரிலும், தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்திலும், வேலூர் மாவட்டம் வேலூரிலும் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம் காஞ்சிபுரத்திலும் மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் 10 விரைவு நீதிமன்றங்கள் 5 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது மக்களின் வழக்குகளை விரைந்து முடிக்க இந்த அறிவிப்புகள் வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

பொதுமக்கள் போக்குவரத்து சேவைகளை எளிதில் பெறுவதற்கு வழிவகை!

25.09.2015

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சாலைப் பாதுகாப்பினை மேம்படுத்துவதிலும், வாகனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப சேவைகளை அதிகரிப்பதிலும், வாகனங்களினால் ஏற்படும் மாசினைக் கட்டுப்படுத்துவதிலும், அரசின் வருவாயைப் பெருக்குவதிலும் முக்கியப் பங்கினை வகிக்கும் போக்குவரத்துத் துறையினை மேம்படுத்தி அதன் மூலம் மக்களுக்கு சிறந்த சேவை அளிக்கும் நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு கடந்த நான்கு ஆண்டுகளாக எடுத்து வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் போக்குவரத்துத் துறையில் செயல்படுத்தவிருக்கும் திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகரங்களிலும் போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளது. பகுதி அலுவலக எல்லையில் உள்ள பொதுமக்கள் போக்குவரத்து வாகனத்திற்கான புதிய அனுமதிச் சீட்டு, அனுமதிச் சீட்டு புதுப்பித்தல், வரிமேற்குறிப்பு, வரிநிலுவையில்லாச் சான்று, மறு பதிவு கோப்புகளுக்கான அனுமதி, தடையில்லாச் சான்று மற்றும் பன்னாட்டு ஓட்டுநர் உரிமம் போன்ற பல்வேறு பணிகளுக்கு அப்பகுதியைச் சார்ந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு அதிகதூரம் பயணம் செய்யவேண்டிய நிலையைத் தவிர்க்கும் வகையில், போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை, மக்கள் தொகை ஆகியவற்றை கணக்கில் கொண்டு, காஞ்சிபுரம்

மாவட்டம் – ஸ்ரீபெரும்புதூர், சேலம் மாவட்டம் – மேட்டூர், திண்டுக்கல் மாவட்டம் – பழனி, விருதுநகர் மாவட்டம் – சிவகாசி மற்றும் தூத்துக்குடி மாவட்டம் –கோவில்பட்டி ஆகிய பகுதி அலுவலகங்கள் 3 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாக தரம் உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்ட தலைநகருக்கு இணையாக சில மாவட்டங்களின் இதர பகுதிகளிலும், மக்கள் தொகை, தொழில் வளர்ச்சி, போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை ஆகியன பெருமளவில் அதிகரித்துள்ளன. அப்பகுதி மக்கள், ஓட்டுநர் உரிமம், நடத்துநர் உரிமம், புதிய வாகனம் பதிவு செய்தல், போன்ற பணிகளுக்கு சுமார் 15 கிலோ மீட்டர் முதல் 40 கிலோ மீட்டர்வரை தூரம் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு செல்லவேண்டிய நிலை உள்ளது. இதனால் ஏற்படும் காலவிரயத்தை தவிர்த்து பொதுமக்களும், வாகன உரிமையாளர்களும் பல்வேறு சேவைகளை உடனுக்குடன் பெறும் வகையில் 2 கோடியே 12 இலட்சம் ரூபாய்செலவில்திண்டுக்கல்மாவட்டம்–நத்தம், புதுக்கோட்டை மாவட்டம்–ஆலங்குடி மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம்–திருக்கழுக்குன்றம் ஆகிய இடங்களில் புதியபகுதி அலுவலகங்கள் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்காணும் அறிவிப்புகள், பொதுமக்கள் போக்குவரத்துத் துறையின் சேவைகளை எளிதில் பெறுவதற்கு வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றலை வழங்கும் உயர்கல்வியைப் பெற நடவடிக்கைகள்!

25.09.2015

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாணவர்களின் எதிர்கால வளத்திற்கு வழிகாட்டியாக விளங்குவதும், இல்லை எனும் சொல்லை இல்லாததாக ஆக்கும் வலிமை பெற்றதும், சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றல் வழங்குவதுமான உயர்கல்வியை தமிழக மக்கள் அனைவரும் பெற வேண்டும் என்னும் நோக்கில், பல முனைப்பான நடவடிக்கைகளை கடந்த நான்கு ஆண்டுகளாக எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் பின் வரும் திட்டங்களை இந்த மாமன்றத்திற்கு அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

கடந்த நான்கு ஆண்டுகளில் 4 அரசு பொறியியல் கல்லூரிகள், 11 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், 24 பல்கலைக்கழக உறுப்புகல்லூரிகள் மற்றும் 14 அரசுகலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளன. மேலும், கடந்த நான்காண்டுகளில், அரசுகலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 959 புதிய பாடப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும், தரமான கல்வியை வழங்கும் நோக்கிலும், மேற்குறிப்பிட்ட தேவைகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட ஆசிரியர் பணியிடங்களை நிரப்பும் பொருட்டும், அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் 611 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் மற்றும் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் 533 விரிவுரையாளர் பணியிடங்கள், எனமொத்தம் 1,144 உதவிப்

பேராசிரியர் / விரிவுரையாளர் பணியிடங்கள் நேரடிநியமனம் மூலம் நிரப்பப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணா பல்கலைக் கழகம் தற்போது பல்கலைக் கழக துறைகளை உள்ளடக்கிய 4 வளாகங்களையும், 13 உறுப்புக் கல்லூரிகளையும் மற்றும் 4 மண்டல அலுவலகங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அறிவியல் மற்றும் பொறியியல் சார்ந்த துறைகள் மிகச் சிறப்பு வாய்ந்த வளர்ச்சி நிலைக்கு உயர்த்தப்படும். மேலும், விடுதிகள், போக்குவரத்து வசதிகள், மைய நூலகங்கள், கணினி மையங்கள், சூரிய ஒளியில் இருந்து ஆற்றல் உருவாக்கும் அமைப்புகள், ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். இந்தப் பணிகள் 252 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை பேரிடர் காலங்களில் மீட்புப் பணிகள் மற்றும் பாதுகாப்பு பணிகள் சிறப்புற மேற்கொள்ள ஆளில்லா வான்வெளி வாகனம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இவ்வாகனம் பாதிக்கப்பட்ட பகுதியை ஆய்வு செய்து மதிப்பு மிகுந்த தகவல்களை தரவல்லது. இவ்வாகனத்தின் திறன்களை பயன்படுத்தி அனுபவம் வாய்ந்த நிவாரண பணியாளர்கள் நிவாரணப் பணிகளை விரைந்து மேற்கொள்ள இயலும். அதேபோல் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் அபாயங்கள், ஆகியவற்றை கண்காணிப்பதற்கும் இது பயனுள்ளதாக அமையும். எனவே, ஆளில்லா வான்வெளி வாகனம் மூலம் தமிழக அரசின் பல்வேறு துறைகளுக்கு சிறப்பான சேவையை அளிக்கும் வகையில் அண்ணாபல்கலைக் கழகம் மூலம் ஆளில்லா வான்வெளி வாகனம் திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்படும். இத்திட்டத்திற்கென அண்ணா பல்கலைக்கழகத்திற்கு 20 கோடி ரூபாய் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்கலைக் கழகங்கள் சிறப்பாக செயல்பட தரமான உட்கட்டமைப்பு வசதிகள் இருத்தல் வேண்டும். எனவே, அன்னை

தெரசா மகளிர் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் மற்றும் பெரியார் பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், அரசு கல்வியியல் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் ஆகியவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேலும் மேம்படுத்தப்படும் வகையில், 62 கோடி ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். கல்வி மற்றும் நிர்வாக கட்டிடங்கள், வகுப்பறைகள், விடுதிகள், ஆய்வுக் கூடங்கள், கழிப்பறைகள் ஆகியவை கட்டப்படும். ஆய்வுக்கூட உபகரணங்கள் வாங்கவும் இந்த நிதி பயன்படுத்தப்படும்.

கடந்த 4 ஆண்டுகளில் 11 அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் துவங்கப்பட்டு, தமிழ்நாட்டில் உள்ள பின் தங்கிய மாவட்டங்களில் உள்ள கிராமப்புற மாணவர்கள் மற்றும் மாணவிகள் தொழில்நுட்பக் கல்விபெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இக்கல்லூரிகளுக்குத் தேவையான ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியிடங்கள், நிரப்பப்பட்டு வருகின்றன. மேலும், கணினிகள், அறைகலன்கள், நூல்கள் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் இல்லாத இடங்களில், இத்தகைய கல்லூரிகளைத் துவங்குவதன் மூலம் மாணவர்கள் மற்றும் மாணவிகள் நீண்டதூரம் பயணம் செய்து கல்வி பயிலும் நிலை தவிர்க்கப்பட்டு, அவர்கள் தொழில்நுட்பக் கல்வி பெற இயலும். பின் தங்கிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் மாணவிகள் தொழில்நுட்பக் கல்வி பெற்று

வேலைவாய்ப்பு பெற இது வழிவகுக்கும். எனவே, 5 புதிய அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் 7 அரசு கல்வியியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இக்கல்லூரிகளில் மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் குறைந்த கட்டணத்தில் கல்வி வழங்கப்படுகிறது. 1957ஆம் ஆண்டிற்குப் பிறகு தமிழ்நாட்டில் அரசு கல்வியியல் கல்லூரி ஏதும் துவக்கப்படவில்லை. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக் கழகம் மூலம் 5 உறுப்பு கல்வியியல் கல்லூரிகள் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்காணும் அறிவிப்புகள், உயர் கல்வி பயிலும் ஏழை எளிய மாணவ, மாணவியர் தரமான கல்வியை பெறவும், அதன் மூலம் அவர்களது வாழ்வாதாரம் மேம்படவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

கடந்த ஆண்டில் உணவு தானிய உற்பத்தியில் 127.95 இலட்சம் மெட்ரிக் டன் எய்தி சாதனை!

28.09.2015

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

முதனிலைத் தொழிலாக விளங்கும் வேளாண் தொழிலை வளர்ச்சி அடையச் செய்து உணவு தானிய உற்பத்தியை பெருக்குவதிலும், உணவு தந்துதவும் உழவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதிலும் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழகம் விளங்கும் வகையில், பல முனைப்பான நடவடிக்கைகளை கடந்த நான்கு ஆண்டுகளாக எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

எனது தலைமையிலான அரசு வேளாண்மைத் துறையில் அறிமுகப்படுத்திய பல்வேறு நவீன அணுகுமுறைகளால், கடந்த ஆண்டு உணவு தானிய உற்பத்தி 127.95 இலட்சம் மெட்ரிக் டன் என புதிய சாதனையை படைத்துள்ளது. முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் அதிகபட்ச உணவு தானிய உற்பத்தி அளவான 82.64 இலட்சம் மெட்ரிக் டன் என்ற அளவை விட இது 55 சதவீதம் கூடுதல் ஆகும்.

தமிழகம் வேளாண் உற்பத்தியில் தொடர்ந்து சாதனை புரிய ஏதுவாக, நடப்பாண்டில் பின் வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்தில் வேளாண் பணிகள் தங்கு தடையின்றி நடைபெறவும், வேளாண் தொழிலாளர்களின் பற்றாக் குறையினை குறைக்கும் வகையிலும், வேளாண் இயந்திரமயம் ஆக்கும் திட்டத்தினை எனது தலைமையிலான அரசு கடந்த 4 ஆண்டுகளாக தீவிரமாக செயல்படுத்தி வருகிறது. கடந்த நான்காண்டுகளில்,

245 கோடி ரூபாய் மானியத்தில் 1.72 லட்சத்திற்கும் மேலான வேளாண் இயந்திரங்கள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டிலும், காலத்தே வேளாண் பணிகள் மேற்கொள்ள ஏதுவாக பண்ணை இயந்திரங்கள் வாங்க மானியம் வழங்கப்படும். 761 நெல் நடவு இயந்திரங்கள், 938 பவர் டில்லர்கள், 201 டிராக்டர்கள், 370 சுழற் கலப்பைகள், 1,231 விசைக் களை எடுப்பான்கள், 335 பல்வகைப் பயிர் கதிர் அடிக்கும் இயந்திரங்கள், பயறு வகைகள், மணிலா போன்ற பயிர்களில் சரியான பயிர் எண்ணிக்கையை பராமரிப்பதற்கு 612 விதைப்புக் கருவிகள், 505 தட்டு வெட்டும் கருவிகள் Chaff cutters, 55 சிறப்பின தானியங்கி இயந்திரங்கள் Specialized Self propelled machinery, 101 தென்னை ஓலை துகளாக்கும் இயந்திரங்கள் Coconut frond choppers, 120 தெளிப்பான்கள், 15 நிலக் கடலை பறிக்கும் கருவிகள் Groundnut pod strippers, 67 புதர் அகற்றும் கருவிகள் Brush cutters, 372 மனிதத் தோழமைக் கருவிகள் Gender friendly equipment மற்றும் இதர கருவிகள் வாங்க 80 கோடி ரூபாய் மானியம் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உயர் விளைச்சல் பெறுவதற்கு, நவீன தொழில்நுட்பங்களை பின்பற்றுவது அவசியமாகும். இத்தகைய தொழில்நுட்பங்களைக் கண்டறிந்து செயல்படுத்தி வருவதால், தமிழகம் வேளாண் உற்பத்தியில் சாதனை படைத்து வருகிறது. 2015–2016 ஆம் ஆண்டிலும், வேளாண் பயிர்களில் நவீன தொழில் நுட்பங்களை விவசாயிகள் செயல்படுத்துவதற்காக, மாநிலம் முழுவதும் 3 இலட்சத்து 25 ஆயிரம் ஏக்கரில் செயல் விளக்கங்கள் அமைக்கப்படும். இதற்காக 65 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவிடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம், விவசாயிகள் இடு பொருட்களை உரிய காலத்தில் பெற்று, புதிய தொழில்நுட்பங்களை செயல்படுத்தி அவர்களின் விளைச்சலும் வருமானமும் உயர வழிவகை ஏற்படும்.

விவசாயிகளின் மகசூலை உயர்த்தி, வருமானத்தை அதிகரிக்கும் தரமான விதைகளை அதிக அளவில் விவசாயிகளுக்கு வழங்குவதைக் கருத்தில் கொண்டு, சென்ற ஆண்டு தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை உருவாக்கப்படும் என நான் சட்டப்பேரவையில் விதி 110இன் கீழ் அறிவித்திருந்தேன். அதன்படி, இம்முகமை தமிழகத்தில் உரிய பணியாளர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டு 30.4.2015 அன்று ஒரு சங்கமாக பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகிறது. இம்முகமையின் மூலம், தேவையான தரமான விதைகளை உற்பத்தி செய்து காலத்தே விநியோகம் செய்வதற்காக "ஒருங்கிணைந்த செயல் திட்டம்" ஒன்று உருவாக்கப்பட்டு, விதை கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இதற்காக, இம்முகமைக்கு 25 கோடி ரூபாய் சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், நடப்பாண்டில் 29 கோடியே 67 இலட்சம் ரூபாய் செலவில் நெல், சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் போன்ற பயிர்களுக்கு உற்பத்தி மானியம் மற்றும் விநியோக மானியம் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு தேவையான நெல், சிறு தானியங்கள், பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்களில் தரமான சான்று விதைகள் மற்றும் தரமான நடவுச் செடிகள் மாநிலத்தில் இயங்கும் 41 அரசு விதைப் பண்ணைகள் மற்றும் 56 அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு நியாயமான விலையில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இப்பண்ணைகளில் நீர் ஆதாரங்களை பெருக்கி, நவீன இயந்திரங்களை அதிக அளவில் பயன்படுத்தி, தேவையான அடிப்படை வசதிகளை உருவாக்கி, தரமான விதை, நடவுச் செடி உற்பத்தியினை மேலும் அதிகரிக்கவும், அந்தந்த பகுதிகளுக்கு ஏற்ற தொழில்நுட்பங்களை விளக்கவும், இத்தகைய அரசுப் பண்ணைகள் படிப்படியாக மாதிரிப் பண்ணைகளாக தரம் உயர்த்தப்படும். இதற்காக 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாவர புரதச் சத்து தேவையை ஈடுசெய்ய, நடவு முறை துவரை, ஊடு பயிர் மற்றும் புதர்ச் செடி முறையில் துவரை சாகுபடி உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. இதன் காரணமாக 2.5 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த பயறு வகை உற்பத்தி 2013–2014 ஆம் ஆண்டு 6.14 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்தது. எனவே நமக்கு கிரிஷி கர்மான் விருதை மத்திய அரசு வழங்கியது. 2014–2015 ஆம் ஆண்டில் பயறு வகை உற்பத்தி 7.23 இலட்சம் மெட்ரிக் டன் என கணக்கிடப்பட்டுள்ளது. இதனை மேலும் வலுப்படுத்தும் வகையில், நடப்பாண்டில், நடவு முறை துவரை, தரமான விதை உற்பத்தி, வரப்புப் பயிர் மற்றும் டி.ஏ.பி. இலை வழி உரம் தெளிப்பு உள்ளிட்ட பல்வேறு நவீன உத்திகளால் பயறு வகை உற்பத்தியை பெருக்க நடவடிக்கை எடுக்கப்படும். இவை 10 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் காய்கறிகள், பழங்கள் உள்ளிட்ட தோட்டக்கலைப் பயிர் சாகுபடியில் நவீன தோட்டக்கலை உத்திகளை ஊக்குவித்து ஊட்டச்சத்துப் பாதுகாப்பினை உறுதி செய்யவும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும் எனது தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பசுமைக் குடில் அமைத்தல், நிழல் வலைக் குடில்கள் அமைத்தல் போன்ற பாதுகாக்கப்பட்ட சூழலில் பயிர் சாகுபடி முறைகளில் பாசன நீரினை சிக்கனமாக பயன்படுத்தி, விளைச்சலை அதிகரிக்க முடியும் என்பதால், இத்தகைய நவீன பாதுகாக்கப்பட்ட சூழலில் தோட்டக்கலைப் பயிர் சாகுபடியினை மேற்கொள்ள 56 கோடியே 76 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாசன நீரை சிக்கனமாக பயன்படுத்த உதவும் நுண்ணீர்ப் பாசன முறை மூலம் பாசனப் பரப்பை உயர்த்தவும், நீர் வழி உரமிடல் முறை மூலம் உரத் தேவையைக் குறைக்கவும் களை பிரச்சினையை

குறைக்கவும் இயலும். மத்திய அரசு நுண்ணீர் பாசன திட்டத்திற்கு சிறு, குறு விவசாயிகளுக்கு 50 சதவீதமும் இதர விவசாயிகளுக்கு 40 சதவீதமும் மானியத்தை வழங்கி வந்தது. இருப்பினும், எனது தலைமையிலான அரசு சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீதமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீதமும் மானியம் வழங்கி வந்தது. நடப்பாண்டில் மத்திய அரசு, மத்திய அரசின் மானியத்தை 35 சதம் மற்றும் 25 சதம் என குறைத்துள்ளது. இருப்பினும், எனது தலைமையிலான அரசு தற்போது வழங்குவதைப் போன்றே சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீதமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீதமும் மானியம் தொடர்ந்து வழங்கும். நடப்பாண்டில் 1.29 இலட்சம் ஏக்கரில் நுண்ணீர்ப் பாசனத் திட்டம் செயல்படுத்தப்படும். இதற்கென 296 கோடியே 96 இலட்சம் ரூபாய் செலவிடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இஸ்ரேல் உள்ளிட்ட மேலை நாடுகளில் உயரிய அறிவியல் தொழில்நுட்பங்களைப் பின்பற்றி, பயிர் சாகுபடியில் அதிக மகசூல் பெற்று வருகிறார்கள். அதே போன்று, தமிழக விவசாயிகளும் பாசன நீரை சிக்கனமாக பயன்படுத்துவது, விளைபொருள் தரத்தினை உயர்த்துவது உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்பங்களை நன்கு அறிந்து செயல்படுத்தி லாபம் ஈட்ட வேண்டும் என்ற நோக்கத்தில், தமிழகத்தில் உள்ள 100 முன்னோடி விவசாயிகளுக்கு தோட்டக்கலைப் பயிர்களில் நன்கு முன்னேறியுள்ள வெளிநாடுகளுக்கு கல்விச் சுற்றுலா ஏற்பாடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இது மட்டுமல்லாது, நமது நாட்டில், பிற மாநிலங்களில் பின்பற்றி வரும் தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ளவும் உள்நாட்டு கல்விச் சுற்றுலாவுக்கு 10,000 விவசாயிகள் அழைத்துச் செல்லப்படுவர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகர்ப்புற மக்களின் காய்கறித் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. காய்கறிகள் வெகு

தூரத்திலிருந்து நகரங்களுக்கு நாள்தோறும் கொண்டு வரப்படுவதால், சாகுபடி மற்றும் காய்கறி வரத்துக்கேற்ப காய்கறிகளின் விலை மாறுபடுகிறது. நகர்ப்புற மக்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகளை களையும் வகையில் எனது தலைமையிலான அரசு, மாநகர மக்களுக்குத் தேவையான சத்தான காய்கறிகளை அவர்களே உற்பத்தி செய்து கொள்ளும் வகையில், காய்கறி சாகுபடிக்குத் தேவையான இடுபொருட்கள் அடங்கிய நீங்களே செய்து பாருங்கள் தளைகளை நகர்ப்புற மக்களுக்கு விநியோகிக்கும் திட்டத்தை சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாநகரங்களில் சென்ற ஆண்டு அறிமுகப்படுத்தி, வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கு நகர்ப்புற மக்களிடம் அதிக வரவேற்பு உள்ளதால், நடப்பாண்டில் திருச்சி மற்றும் மதுரை மாநகர மக்களும் பயன்பெறும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்திற்கான இடுபொருட்கள் மக்களுக்கு எளிதில் கிடைப்பதற்காக மாநகராட்சி அமைப்புடன் ஒருங்கிணைந்து இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதற்கான தொழில்நுட்ப உதவிகள் விவசாயத் துறை மூலம் வழங்கப்படும். 5 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

'மண்ணின் வளமே மகசூலுக்கு ஆதாரம்', 'நலமான வாழ்விற்கு நஞ்சற்ற உணவே ஆதாரம்' என்பதை வலியுறுத்தும் இயற்கைப் பண்ணைய முறையினை விவசாயிகளிடம் பிரபலப்படுத்த எனது தலைமையிலான அரசு அதிக முக்கியத்துவம் வழங்கி வருகிறது. மண் வள மேம்பாட்டிற்காக நடப்பாண்டில் பசுந்தாள் உர உபயோகம் விவசாயிகளிடையே பெருமளவில் பிரபலப்படுத்தப்படும். மேலும், பாரம்பரிய இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்க மானிய விலையில் மண்புழு உரம், அங்கக முறையில் உற்பத்தி செய்யப்படும் விதைகள் கொள்முதல், திரவ உயிர் உரங்கள், பாஸ்பேட் செறிவூட்டப்பட்ட இயற்கை உரங்கள், உயிரி பூச்சிக் கொல்லிகள் உள்ளிட்ட இயற்கை இடுபொருட்கள் பயன்பாட்டை அதிகப்படுத்தி தொகுப்பு அணுகு

முறையில் அங்ககக் கிராமங்கள் அமைக்கப்படும். மேலும், இத்தகைய விவசாய நிலங்களுக்கு அங்ககச் சான்றளிப்பை வழங்குவதற்கும் எனது அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும். இத்திட்டம் சுமார் 8 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவியருக்கான புதிய தங்கும் விடுதிகள் அனைத்து வசதிகளுடன் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென நடப்பாண்டில் 22 கோடியே 95 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

தமிழக வேளாண்மையில் மானாவாரி சாகுபடிப் பரப்பளவு ஏறக்குறைய 40 சதவீதமாகும். மானாவாரி விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு, அதிகரித்து வரும் வெப்ப நிலை, பருவம் தவறிய மழை, நீர் பற்றாக் குறையினால் பாதிப்பு ஆகிய இடர்பாடுகளிலிருந்து, விவசாயிகளை பாதுகாக்க இவ்வரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது. நடப்பாண்டில், மானாவாரி விவசாயிகளின் வருமானத்தை பெருக்கிடவும், பயிர்களின் உற்பத்தித் திறனை உயர்த்திடவும், கறவை மாடுகள் / ஆடுகள் வளர்ப்புடன் இணைந்த ஒருங்கிணைந்த பண்ணைய திட்டம் 48 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அறிவிப்புகள், விவசாயிகள் இடு பொருட்களை உரிய காலத்தில் பெற்று, புதிய தொழில்நுட்பங்களை செயல்படுத்தி அவர்களின் விளைச்சலும் வருமானமும் உயர வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்..

❋ ❋ ❋

ரூ.15 கோடி மதிப்பீட்டில் 20,000 சுய உதவிக்குழு பயிற்றுநர்களுக்கு "அம்மா கைபேசி"

28.09.2015

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மகளிருக்கு சமூக பொருளாதார அதிகாரம் வழங்கிடவும் அதன் மூலம் வறுமை ஒழிக்கும் நோக்கத்துடனும் சுய உதவிக் குழுக்களை எனது தலைமையிலான அரசு 1991ஆம் ஆண்டு உருவாக்கியது.

மேலும், ஏழை, எளிய, நலிவுற்ற மக்கள் மற்றும் மகளிர் மேம்பாட்டிற்காக 2005 ஆம் ஆண்டு எனது தலைமையிலான அரசு உலக வங்கி நிதி உதவியுடன் கூடிய தமிழ்நாடு புது வாழ்வுத் திட்டத்தையும் துவக்கி வைத்தது. அதன் பயனாக மகளிர் சுய உதவிக் குழுக்கள் தமிழ்நாட்டில் மாபெரும் சக்தியாய் உருவெடுத்து, இன்று 6.08 இலட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் 92 இலட்சம் உறுப்பினர்களை கொண்டு செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைக்க ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கூட்டமைப்பின் கீழ் 20 முதல் 25 சுய உதவிக் குழுக்கள் இயங்கி வருகின்றன. இந்த சுய உதவிக் குழுக்களை மேற்பார்வையிட சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்கள் உள்ளனர். சுய உதவிக் குழுவில் ஊக்குநராக செயல்பட்ட அனுபவமிக்க உறுப்பினர்களே சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்களாக தேர்வு செய்யப்படுகின்றனர். இவர்கள் புதிய சுய உதவிக் குழுக்களை அமைப்பதற்கும் பயிற்றுவிப்பதற்கும் துணை புரிந்து வருகின்றனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் தாங்கள் நடத்தும் கூட்டங்கள், சந்தா தொகை செலுத்துதல், சேமிப்பு, அவர்களுக்குள் கொடுத்து கொள்ளும் உட்கடன் விவரம், கடனை மீளச் செலுத்துதல் போன்ற நடைமுறைகளுக்கு பல்வேறு பதிவேடுகளைப் பராமரிக்க வேண்டியுள்ளது. விவரங்களை பதிவேடுகளில் பதிவு செய்யவும் அவர்களின் செயல்பாடுகளை மேற்பார்வையிடவும், தமிழ் மொழியில் சிறப்பு மென்பொருள் ஒன்று உருவாக்கி கணினி மயமாக்கப்பட்ட கைபேசிகள் வழங்கப்படும் அம்மா கைபேசி திட்டம் என்ற புதிய திட்டம் துவக்கப்படும்.

முதற்கட்டமாக, 20 ஆயிரம் சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்களுக்கு 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அம்மா கைபேசிகளை எனது தலைமையிலான அரசு வழங்கும் என்பதைப் பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றான குடிநீர் அனைத்து மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும்!

28.09.2015

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

இடையறாத வளர்ச்சியின் அம்சமாக விளங்கும் நகரங்களை தூய்மையான வைகளாகவும், குடிநீர், சுகாதாரம், திடக் கழிவு மேலாண்மை போன்றவற்றை உள்ளடக்கிய வசதிகள் கொண்டதாகவும் இருப்பதற்குத் தேவையான திட்டங்களை எனது தலைமையிலான அரசு ஒரு தொலைநோக்குப் பார்வையுடன் செயல்படுத்தி வருகிறது. தமிழகத்தில் வாழும் அனைத்து மக்களுக்கும் அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றான பாதுகாக்கப்பட்ட குடிநீர் தேவையான அளவு வழங்கப்பட வேண்டும் என்பதனைக் கருத்தில் கொண்டு பல்வேறு குடிநீர்த் திட்டங்களை எனது தலைமையிலான அரசு, நிறைவேற்றி வருகிறது. கடந்த நான்காண்டுகளில் 41 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மற்றும் இதர குடிநீர்த் திட்டங்கள் 7,324 கோடியே 34 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன. மேலும் 6,602 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 69 திட்டப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இதன் தொடர்ச்சியாக நடப்பாண்டில் செயல்படுத்தப்பட உள்ள குடிநீர் திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், பரங்கிப்பேட்டை, குமராட்சி மற்றும் கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 17 குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட, குடியிருப்புகள் மற்றும் 70 வழியோர ஊரகக் குடியிருப்புகளுக்கு 24 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மக்கள் பயன்பெறும் வகையில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம்; திருப்பூர் மாவட்டம், திருப்பூர் மற்றும் பல்லடம் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த

155 ஊரகக் குடியிருப்புகளுக்கு 42 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம்; ஈரோடு மாவட்டம், பெருந்துறை, கே.சி.பாளையம், பள்ள பாளையம், காஞ்சி கோயில், நள்ளம்பட்டி, பெத்தம் பாளையம், குன்னத்தூர், ஊத்துக்குளி பேரூராட்சிகள் மற்றும் சென்னிமலை, பெருந்துறை, ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 492 ஊரகக் குடியிருப்புகளுக்கு 123 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம்; மற்றும் தேனி மாவட்டம், கடமலைக்குண்டு–மயிலாடும்பாறை மற்றும் ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 16 ஊரகக் குடியிருப்புகளுக்கு 5 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் என மொத்தம் 195 கோடியே 94 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 4 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கூட்டுக் குடிநீர் திட்டங்களினால் 4 லட்சத்து 9 ஆயிரம் மக்கள் பயன் பெறுவர்.

சென்னை மாநகர மக்களின் குடிநீர் தேவையை நிறைவு செய்வதற்கு மழை நீர் சேகரிப்பு இயக்கம், புதிய வீராணம் திட்டம், கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள் போன்ற வரலாற்று சிறப்புமிக்க நடவடிக்கைகளை பல்வேறு கால கட்டங்களில் எனது தலைமையிலான அரசு எடுத்துள்ளது. இத்தகைய முன்னோடி முயற்சிகளினால் சென்னை பெருநகர் பகுதியில் நிலத்தடி நீராதாரம் மேம்படுத்தப்பட்டுள்ளதோடு, புதிய நீராதாரங்களும், குடிநீர் விநியோக கட்டமைப்பு வசதிகளும் உருவாக்கப்பட்டு உள்ளன. இவற்றின் விளைவாக, கடந்த சில வருடங்களாக இயற்கை ஒத்துழைக்காத நிலையிலும், சென்னை மாநகர மக்களுக்கு போதுமான அளவு குடிநீர் வழங்க முடிகிறது. சென்னை பெருநகர் பகுதியில் 280 நீர் நிலைகள் உள்ளன. இந்த நீர் நிலைகள் தொன்று தொட்டு சென்னை மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளின் குடிநீர் தேவையை நிறைவு செய்வதில் பெரும் பங்காற்றி வருகின்றன. வளர்ந்து வரும், நகரமயமாக்கல் உள்ளிட்ட

பல்வேறு காரணங்களால் காலப் போக்கில் இந்நீர் நிலைகள் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளன. சென்னை மாநகரின் எதிர்கால குடிநீர் தேவையை நிறைவு செய்வதற்கான நீராதாரங்களை உறுதி செய்யும் வகையில் இந்நீர் நிலைகளைப் பாதுகாத்து, அவற்றின் சுற்றுப்புறங்களை மேம்படுத்துவதற்கான உடனடி தேவை ஏற்பட்டுள்ளது. எனவே, குடிநீர் தேவைக்கென பருவ மழையை பெருமளவில் சார்ந்திருத்தல், பெருகிவரும் மக்கள் தொகை, வளர்ந்து வரும் நகரமயமாக்கல், குறைந்த எண்ணிக்கையிலான மேற்பரப்பு நீர்நிலைகள் ஆகிய சவால்களை எதிர்கொள்ளவும், சென்னை மாநகரின் வருங்கால குடிநீர் தேவை நிறைவு செய்யப்படுவதை உறுதி செய்வதற்காகவும், நீராதாரங்களை பாதுகாத்து, சீரமைப்பதற்காக, நீடித்த குடிநீர் ஆதார பாதுகாப்பு இயக்கம் தொடங்கப்படும் என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இயக்கத்தின் கீழ், பெரிய அளவிலான குடியிருப்பு வளாகங்கள், அரசு கட்டடங்கள், கல்லூரிகள், பள்ளிகள் போன்ற பெரும் வளாகங்களில் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை வடிவமைத்து நிர்மாணித்தல் மூலம் மேம்படுத்தப்பட்ட மழை நீர் சேகரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும். சென்னை மாநகரில் 15 பெரும் வளாகங்கள் தேர்வு செய்யப்பட்டு, அந்த வளாகங்களில் மாதிரி பணிகள் Pilot Projects மேற்கொள்ளப்படும். மழை நீர் வடிகால்களில் பெறப்படும் மழை நீர், சேகரிக்கப்பட்டு, நீரூற்று கிணறுகள் மூலம் நிலத்தடி நீராதாரத்தை மேம்படுத்த பயன்படுத்தப்படும். இதற்கான மாதிரி பணிகள், தெரிவு செய்யப்படும் 2 இடங்களில் செயல்படுத்தப்படும். மேலும், நீர் நிலைகளின் எல்லைகளை வரையறை செய்தல், அவற்றை மாசுப்படுத்தும் ஆதாரங்களை கண்டறிதல், கழிவு நீர், குப்பைகள் சேருவதை தடுத்தல், கரைகளை மேம்படுத்துதல், வேலி அமைத்தல், நீரூற்று கிணறுகள், நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைத்தல், மழை நீர் வடிகால்களை நீர் நிலைகளுடன் இணைத்தல் போன்ற பணிகளின் மூலம் நீராதாரங்களை சீரமைத்து, நீர் சேமித்தல் மேம்படுத்தப்படும். இதற்கான மாதிரி பணிகள் சென்னை

பெருநகர் பகுதியில் அமைந்துள்ள தெரிவு செய்யப்படும், 15 ஏரிகளில் மேற்கொள்ளப்படும். இது மட்டுமல்லாமல், மறு சுழற்சி மூலம் சுத்திகரிக்கப்பட்ட பயன்படுத்தப்பட்ட நீரைக் கொண்டு நீர் நிலைகளின் நீராதாரங்களை மேம்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படும். இந்த இயக்கத்தின் மேற்குறிப்பிடப்பட்ட மாதிரி பணிகள் Pilot Projects மொத்தம் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

நகர்ப்புறங்களில், தனி நபர்கள் பயன்படுத்தும் வாகனங்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருவதன் காரணமாக, போக்குவரத்து நெரிசல் ஏற்படுவது மட்டுமல்லாமல், பொது போக்குவரத்து வசதிகளின் பயன்பாடு, நடந்து செல்லுதல், மிதி வண்டிகளின் பயன்பாடு ஆகியவையும் குறைந்து வருகின்றன. நடந்து செல்லுதல் மற்றும் மிதிவண்டிகள் மிகவும் அடிப்படையான போக்குவரத்தாகும். இவை மிக குறைந்த பொருட் செலவிலானவை மட்டுமல்லாமல் குறைந்த தூரங்களைப் பொறுத்தளவில் மிகச் சிறந்த போக்குவரத்து வசதிகளாகும். தனி நபர் வாகனங்களை ஒப்பிடும் போது, நடந்து செல்லுதல் மற்றும் மிதிவண்டிகள் ஆகியன, சாலைகளில் அரிதாகி வரும் இட வசதியை சிறப்பாக பயன்படுத்த உதவுகின்றன. மிதிவண்டிகள் மற்றும் பாதசாரிகளின் பயன்பாடு, தனிநபர் வாகனங்கள் பயன்படுத்தும் சாலை இட வசதியில், முறையே மூன்றில் ஒரு பங்கும், ஆறில் ஒரு பங்கும் ஆகும். இந்த அடிப்படை போக்குவரத்து வசதிகள் இயற்கையோடு இயைந்தவையாகும். மேலும், எரிபொருள் சேமிப்பு, காற்று, ஒலி மாசுக் கட்டுப்பாடு, மேம்பட்ட சுற்றுச்சூழல், மக்கள் நல்வாழ்வு மேம்பாடு போன்ற அளவிட முடியாத நீண்ட கால பயன்களை ஏற்படுத்தவும் இவை உதவிடும். எனவே, நடந்து செல்லுதல் மற்றும் மிதிவண்டிகள் போன்ற மோட்டார் அல்லாத வாகன போக்குவரத்தை ஊக்குவிப்பதற்கான முயற்சிகளை, முதற் கட்டமாக திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் எனது தலைமையிலான அரசு மேற்கொள்ளும் என அறிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சி

அடைகிறேன். சாலைகளில் நடைபாதைகள் இல்லாமையால் ஏற்படும் விபத்துகளை தவிர்க்கவும், பாதசாரிகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும் பெரிய சாலைகளில், அகலமான, தொடர்ச்சியான நடைபாதைகள், மிதிவண்டிகளின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையில், மிதி வண்டிகளுக்கென தனிப் பாதைகள் மற்றும் பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள் போன்றவற்றிற்கு அருகில் பொது மிதிவண்டிகள் பயன்பாட்டு வசதி Bicycle Sharing Facility ஆகியவை ஏற்படுத்தப்படும். திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாநகராட்சிகள் ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான, மேற்குறிப்பிட்ட வசதிகளை உள்ளடக்கிய மோட்டார் அல்லாத வாகன போக்குவரத்திற்கான தனித் தனி திட்டங்கள் உருவாக்கப்பட்டு, பணிகள் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

நகர்ப்புறங்களை தூய்மையாகவும், பசுமையாகவும் பராமரிக்கவும், இதன் மூலம் நகர்ப்புர மக்களின் சுகாதாரத்தை பேணுவதற்கும் திடக் கழிவுகளை அறிவியல் சார் முறைகளில் ஒருங்கிணைந்த வகையில் மேலாண்மை செய்தல் இன்றியமையாததாகும். நிதி நிலைமை வலுவாக இல்லாத நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும், திடக் கழிவு மேலாண்மை பணிகள் தொய்வின்றி மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்யும் நோக்கில், சிறப்பு திடக்கழிவு மேலாண்மை நிதியை எனது தலைமையிலான அரசு உருவாக்கியுள்ளது. ஆண்டுதோறும் 100 கோடி ரூபாய் அளவிற்கு அரசு வழங்கி வரும் சிறப்பு திடக்கழிவு மேலாண்மை நிதியின் கீழ், திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கென நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசு மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிதியின் கீழ், முதற்கட்ட குப்பை சேகரிப்பு, இரண்டாம் நிலை குப்பைகளை எடுத்துச் செல்லுதல் பணிகளுக்கான பல்வேறு நவீன வகை தொட்டிகள், உபகரணங்கள், குப்பைகளை கையாளும் வாகனங்கள், திடக்கழிவு மேலாண்மை கட்டமைப்பு வசதிகள், திடக்கழிவில் இருந்து எரிவாயு, மின்சாரம் தயாரிக்கும் வசதிகள் ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு

பணிகளை மேற்கொள்ள நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. இதன் மூலம் நிதி நிலைமை வலுவாக இல்லாத நகர்ப்புர உள்ளாட்சிகள் உள்ளிட்ட அனைத்து நகர்ப்புரங்களிலும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, இந்த ஆண்டு, 10 நகராட்சிகள் மற்றும் 214 பேரூராட்சிகளில் ஒருங்கிணைந்த திடக்கழிவு, மேலாண்மை பணிகள் 69 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என அறிவிப்பதில் அளவில்லா மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தியாவின் பெருநகரங்களில் ஒன்றான சென்னை மாநகரம் மோட்டார் வாகனம், தகவல் தொழில் நுட்பம், கணினி தயாரிப்பு உள்ளிட்ட பல்வேறு தொழில்களின் வளர்ச்சி காரணமாக நாட்டின் சிறந்த தொழில் மையமாக உருவாகி உள்ளது.

தொழிற் வளர்ச்சியின் விளைவாக ஏற்பட்டுள்ள சரக்கு போக்குவரத்து மற்றும் மக்கள் தொகை பெருக்கம் சென்னை மாநகரின் வாகன போக்குவரத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளன. கடந்த 10 ஆண்டுகளில் சென்னை மாநகரின் வாகன எண்ணிக்கை பன்மடங்கு அதிகரித்துள்ளது.

சென்னை மாநகரின் போக்குவரத்து நெரிசல் மிகுந்த சந்திப்புகளில், எல்லா திசைகளிலும் எளிதான வாகன போக்குவரத்திற்கு ஏதுவாக, தற்போதுள்ள இரயில்வே சந்திக் கடவுகளுக்கு மாற்றாக மேம்பாலங்கள் மற்றும் போக்குவரத்து கட்டமைப்பு வசதிகளின் மேம்பாடு போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

போக்குவரத்து நெரிசல் மிகுந்த எண்ணூர் நெடுஞ்சாலை மற்றும் மணலி சாலையில் கொருக்குப்பேட்டை மற்றும் வியாசர்பாடி பகுதிகளுக்கிடையே இரயில்வே சந்திக் கடவுகள் முறையே 2A மற்றும் 2B ஆகியவை அமைந்துள்ளன.

இந்த இரண்டு சந்திக் கடவுகளிலும் நாளொன்றுக்கு மொத்தம் 14 முறை ரயில் போக்குவரத்திற்கு ஏதுவாக வாகன போக்குவரத்து நிறுத்தம் செய்யப்படுகிறது. இதனால் நிறுத்தப்படும் வேகமாக செல்லக் கூடிய வாகனங்களின் எண்ணிக்கை நாளொன்றுக்கு சுமார் 42,000 என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே, மாநிலத்தின் தொழிற் வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கிலும், பொது மக்களின் சிரமத்தை நீக்கும் வகையிலும், கால நேரம் மற்றும் எரிபொருள் சேமிப்பை கருத்திற் கொண்டும், மேற்படி சந்திக் கடவுகளுக்கு மாற்றாக எண்ணூர் நெடுஞ்சாலை மற்றும் மணலி சாலையில் ஒருங்கிணைந்த மேம்பாலம் 117 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

எண்ணூர் நெடுஞ்சாலையில், இந்திய எண்ணெய் நிறுவன கிடங்கின் வாயில் முதல் வைத்தியநாதன் மேம்பால சந்திப்பிற்கு முன்னர் வரை மேம்பாலம் அமையும். இதே போன்று, மணலி சாலையில், இந்திய எண்ணெய் நிறுவன கிடங்கு சந்திப்பின் மேம்பாலத்தில் தொடங்கி தற்போதுள்ள தரைப் பாலத்திற்கு முன்னர் முடியும் வகையில் மேம்பாலம் அமைக்கப்படும்.

இந்திய எண்ணெய் நிறுவன கிடங்கு சந்திப்பிற்கு மேலாக “T” வடிவில் அமையவுள்ள இந்த ஒருங்கிணைந்த மேம்பாலத்தில், LED விளக்குகள் பொருத்தப்படும். மேலும், இந்திய எண்ணெய் நிறுவன கிடங்கு சந்திப்பு மற்றும் வைத்தியநாதன் மேம்பால சந்திப்புகள் அகலப்படுத்தப்பட்டு நடை பாதைகள், மழை நீர் வடிகால்கள், சாலை குறியீடுகள், உயர் கோபுர மின் விளக்குகள் போன்ற வசதிகள் அமைக்கப்பட்டு இப்பகுதிகள் மேம்படுத்தப்படும். இந்த ஒருங்கிணைந்த மேம்பாலம், எண்ணூர் நெடுஞ்சாலை மற்றும் மணலி சாலையில் போக்குவரத்தை சீராக்க பெருமளவில் பயன்படும்.

சென்னை மாநகரத்தின் அருகில் அமைந்திருந்த 42 உள்ளாட்சி அமைப்புகள் சென்னை மாநகரத்துடன் இணைக்கப்பட்டதன் விளைவாக சென்னை மாநகரின் பரப்பளவு 174 சதுர கிலோ மீட்டரிலிருந்து 426 சதுர கிலோ மீட்டர் ஆக அதிகரித்துள்ளது. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி விரிவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சியின் மக்கள் தொகை 67.27 இலட்சமாகும்.

சென்னை மாநகரத்துடன் இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கான குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றும் வசதிகள், சென்னை மாநகரின் வசதிகளுக்கு இணையாக மேம்படுத்தப்பட வேண்டும் என்ற எனது தலைமையிலான அரசின் தொலைநோக்கின் அடிப்படையில், விரிவாக்கப்பட்ட பகுதிகளில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன

சென்னை மாநகரத்துடன் இணைக்கப்பட்டுள்ள 42 பகுதிகளில் 36 பகுதிகளுக்கு குடிநீர் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 8 பகுதிகளுக்கான பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 20 பகுதிகளுக்கு கழிவுநீர் அகற்றும் வசதி திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 4 பகுதிகளுக்கான பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. மற்ற பகுதிகளுக்கான குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றும் திட்டங்களை மேற்கொள்ள தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தநடவடிக்கைளின் ஒருபகுதியாக சென்னை மாநகரத்துடன் தெற்கு பகுதியில் இணைக்கப்பட்டுள்ள 11 பகுதிகளான பள்ளிக்கரணை, சோழிங்கநல்லூர், காரப்பாக்கம், ஜல்லடாம் பேட்டை, ஈஞ்சம்பாக்கம், ஒக்கியம்–துரைப்பாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, செம்மஞ்சேரி, உத்தண்டி மற்றும் கொட்டிவாக்கம் ஆகியவற்றில் உற்பத்தியாகும் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்வதற்கு சோழிங்கநல்லூரில் கூடுதலாக நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட மின் உற்பத்தி செய்யும்

அமைப்புகளுடன் கூடிய புதிய கழிவு நீர் சுத்திகரிக்கும் நிலையம் 65 கோடியே 97 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதை பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்

நவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையிலும், மின் உற்பத்தி செய்யும் அமைப்புகளுடன் கூடிய வகையிலான இந்த கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகளால் தென் சென்னை பகுதியில் வாழும் சுமார் ஒரு இலட்சம் மக்கள் பயனடைவார்கள்.

சென்னை மாநகரின் வீட்டுத் தேவைகளுக்காகவும், மாநகரை சுற்றி அமைந்துள்ள உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தொழிற்சாலைகளின் தேவைகளுக்காகவும் தற்போது நாளொன்றுக்கு சராசரியாக 530 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. குடிநீர் வழங்கல், 16 குடிநீர் விநியோக நிலையங்கள் மற்றும் 4,447 கிலோ மீட்டர் நீளமுள்ள குடிநீர் குழாய் கட்டமைப்பு மூலம் மேற்கொள்ளப்படுகிறது. சென்னை மாநகரின் பெருகி வரும் மக்கள் தொகை, அதிகரித்து வரும் நகரமயமாதல் மற்றும் எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது போன்ற காரணங்களால் மாநகரின் குடிநீர் தேவை மிகவும் அதிகரித்து வருகிறது.

எனவே, சென்னை மாநகரின் கொடுங்கையூர், எருக்கஞ்சேரி, மகாகவி பாரதியார் நகர், புதிய மற்றும் பழைய வண்ணாரப்பேட்டை, தண்டையார்பேட்டை, இராயபுரம், பெரம்பூர், வியாசர்பாடி, அம்பத்தூர், முகப்பேர், அண்ணா நகர், கீழ்பாக்கம், வில்லிவாக்கம், அயனாவரம், எழும்பூர், சேத்துப்பட்டு, ஆயிரம் விளக்கு, நுங்கம்பாக்கம், மைலாப்பூர், பட்டினப்பாக்கம், வடபழனி, தியாகராய நகர், அரும்பாக்கம் மற்றும் வேளச்சேரி பகுதிகளில் குடிநீர் விநியோகத்தை மேலும் மேம்படுத்துவதற்காக மொத்தம் 310 கிலோ மீட்டர் நீளத்திற்கு குடிநீர் கொண்டு செல்லும் புதிய குழாய்கள் மற்றும் விடுபட்ட தெருக்களுக்கு புதிய குழாய் பதிக்கும் பணிகள் 116 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட தண்டையார்பேட்டை மண்டலத்தில் 15 வார்டுகள் உள்ளன. இம்மண்டலத்தில் வசிக்கும் பெரும்பாலானவர்கள் ஏழை, எளிய மக்கள் ஆவர். இம்மண்டலத்திற்குட்பட்ட பல சாலைகளில் சேவை துறையினர் பல்வேறு பணிகளை மேற்கொண்டதால் சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளன. எனவே, பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் அவற்றினை சீரமைப்பது அவசியமாகிறது. மேலும், இப்பகுதியில் பூங்காக்கள், பொது கழிப்பிடங்கள், உடற்பயிற்சி கூடங்கள், சத்துணவு கூடங்கள் ஆகியவைகள் அமைக்கப்படுவதுடன் மாநகராட்சி பள்ளிகளும் சீரமைக்கப்பட வேண்டும். எனவே, சென்னை மாநகராட்சி தண்டையார் பேட்டை மண்டலத்தில் மேற்கூறிய அடிப்படை வசதிகள் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 9 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் 119 தார் சாலைகள் மேம்படுத்தப்படும். 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் சாலைகளின் பெயர் பலகைகள் நிறுவப்படும். 2 கோடியே 71 இலட்சம் ரூபாய் செலவில் 12 பூங்காக்கள் சீரமைக்கப்படும். 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் 20 பள்ளிக் கூடங்களில் அபிவிருத் பணிகள் மேற்கொள்ளப்படும். ஒரு கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் 31 பொது கழிப்பிடங்கள் நவீனப்படுத்தப்படும். 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் உடற்பயிற்சி கூடங்களில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்படும். 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் 18 சத்துணவு மையங்களில் அபிவிருத்தி பணிகள் செயல்படுத்தப்படும். 1 கோடி ரூபாய் செலவில் மயான பூமி மற்றும் இடுகாடு புனரமைக்கப்படும்.

மேலும், சலவைக் கூட கட்டடங்களில் அபிவிருத்தி பணிகள் 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், சுகாதார மையங்கள் அபிவிருத்தி பணிகள் 1 கோடியே 89 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் செயல்படுத்தப்படும். 6,000 எண்ணிக்கையிலான எல்.இ.டி மின் விளக்குகள் 15 கோடி ரூபாய் செலவில் பொருத்தப்படும்.

மொத்தத்தில் 40 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சிப் பகுதியில் 1,260 பேருந்து நிறுத்தங்கள் உள்ளன. கடந்த நான்கு ஆண்டுகளில் 750 பேருந்து நிறுத்தங்களில் நவீன பேருந்து நிழற் குடைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்நிதியாண்டில் எஞ்சியுள்ள 510 பேருந்து நிறுத்தங்களில் 51 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன பேருந்து நிழற் குடைகள் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். கட்டுதல், பராமரித்தல் மற்றும் ஒப்படைத்தல் BOT முறையில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பொது சுகாதார பிரிவில் பணி புரியும் துப்புரவு பணியாளர்களுக்கு அரைக்கால் சட்டை Half pant வழங்கப்பட்டு வருகிறது. அரைக்கால் சட்டைக்கு பதிலாக முழுக்கால் சட்டை Full Pant வழங்கிட வேண்டும் என துப்புரவு பணியாளர்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். துப்புரவு பணியாளர்களின் நீண்டநாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில் இந்த ஆண்டு முதல் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு அரைக்கால் சட்டைக்கு பதிலாக முழுக்கால் சட்டை வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அறிவிப்புகள், கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மூலம் மாவட்டங்களில் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்யவும், அதிகரித்து வரும் சென்னை மாநகரின் குடிநீர் தேவையை நிறைவு செய்யவும், மாசற்ற, சுற்றுச்சுழல் மேம்பட்ட, முன்னோடியான எதிர்கால தமிழகத்தை உருவாக்கவும், திடக் கழிவுகளை அறிவியல் சார் முறையில் அகற்றவும், மேலாண்மை செய்திடவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

தமிழ் மொழியை வளர்க்கவும், தமிழ்த் தொண்டர்களை ஊக்குவிக்கவும் வழிவகுத்தல்!

29.09.2015

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு" என்ற பாவேந்தரின் வரிகளுக்கேற்ப தமிழ் மொழிக்குப் பெருமை சேர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு எனது தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது. கடந்த நான்காண்டுகளில் தமிழ் வளர்க்கும் பணிகளுக்காகப் பல திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. அவ்வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தால் ஆஸ்திரேலியாவில் அடிலேய்டு நகரில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

கடந்த நான்கு ஆண்டுகளில், தமிழ் வளர்த்த சான்றோர்களுக்கு, கபிலர், உ.வே.சா, கம்பர், சொல்லின் செல்வர், உமறுப் புலவர், ஜி.யு.போப், இளங்கோவடிகள் ஆகியோர் பெயர்களில் புதிய விருதுகளும் மேலும் தமிழ்த் தாய் விருது, கணினித் தமிழ் விருது மற்றும் தமிழ்ச் செம்மல் விருது ஆகிய விருதுகளும் ஏற்படுத்தப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ் மொழிக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் பின் வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

'பெண்கள் அறிவை வளர்த்தால் – வையம்

பேதைமை யற்றிடும் காணீர்!' -- என்ற பாரதியாரின் அமுத மொழிக்கேற்ப, பெண் எழுத்தாளர்களைப் பெருமைப்படுத்தும்

வகையில், நடப்பாண்டு முதல் மகளிர் இலக்கியங்களைப் படைப்பதில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தித் தொண்டாற்றி வரும் பெண் படைப்பாளர் ஒருவருக்கு ஆண்டுதோறும் "அம்மா இலக்கிய விருது" என்ற புதிய விருது சித்திரைத் திங்கள் தமிழ்ப் புத்தாண்டு நாளில் வழங்கப்படும். "அம்மா இலக்கிய விருது" பெறுபவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் பண முடிப்பும், தகுதியுரையும் வழங்கப்படும்.

'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்' என்ற பாரதியின் கனவை நனவாக்கும் வகையில் தரமான பிறமொழி படைப்புகளைச் சிறந்த முறையில் தமிழாக்கம் செய்யும் 10 மொழி பெயர்ப்பாளர்களுக்கு ஆண்டுதோறும் சிறந்த மொழி பெயர்ப்பாளர் விருது வழங்கப்படும். இவ்விருது பெறுபவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் பண முடிப்பும் தகுதியுரையும் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் புகழைப் பரப்பிடும் வகையில் அவரின் 125ஆவது பிறந்த நாளையொட்டி 125 கவிஞர்களைக் கொண்டு, இரண்டு நாள் கவியரங்கம் ஐந்து இலட்சம் ரூபாய் செலவில் நடத்தப்படும். மேலும், இந்த ஆண்டு முதல் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள், 'தமிழ்க் கவிஞர் நாள்' என்ற பெயரில் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலக்கணம், இலக்கியம் மற்றும் மொழியியல் துறைகளில் சிறந்து விளங்கும் அயலகத் தமிழறிஞர்கள் மூன்று பேருக்கு ஆண்டுதோறும், சித்திரை தமிழ்ப் புத்தாண்டில் 'உலகத் தமிழ்ச் சங்க விருதுகள்' வழங்கப்படும். விருது பெறும் ஒவ்வொருவருக்கும் ஒரு இலட்சம் ரூபாய் பண முடிப்பும் தகுதியுரையும் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருக்குறள், பாரதியார், பாரதிதாசன் பாடல்கள், சீனம் மற்றும் அரபு மொழிகளில் மொழி பெயர்க்க என்னால் ஆணையிடப்பட்டு

மொழி பெயர்க்கப்பட்டு உள்ளன. தமிழ் மொழிக்கும், கொரிய மொழிக்கும் இடையே உள்ள தொடர்பின் அடிப்படையிலும், திருக்குறளை கொரிய மொழியில் மொழி பெயர்க்க வேண்டும் என்ற கொரிய மக்களின் நீண்ட நாள் கோரிக்கையின் அடிப்படையிலும், கொரியாவில் தமிழர்களும், தமிழகத்தில் கொரியர்களும், வாழ்ந்து வருவதைக் கருதியும் பார்போற்றும் உலகப் பொதுமறையாம் திருக்குறளை கொரிய மொழியில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கென, முப்பத்தாறு இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், ஓரடியில் உலக மக்களுக்கேற்ற எளிய அற நெறிக் கருத்துக்களைக் கொண்ட தமிழ் மொழியின் அற நெறிக் கருவூலமான ஆத்திசூடியை சீனம் மற்றும் அரபு மொழிகளில் மொழி பெயர்த்து வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கென, பதினைந்து இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அறிவிப்புகள், தமிழ் மொழியை வளர்க்கவும், தமிழுக்கு தொண்டாற்றுபவர்களை ஊக்குவிக்கவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

பத்திரிகையாளர்களின் ஓய்வூதியம் ரூ.8,000 ஆகவும், அவர்தம் குடும்ப ஓய்வூதியம் ரூ.4,750 ஆகவும் உயர்வு!

29.09.2015

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கத்தி முனையை விட பேனா முனை வலுவானது" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்கள். ஜனநாயகத்தின் நான்காவது தூணாக விளங்குபவர்கள் பத்திரிகையாளர்கள். காலம் நேரம் பாராமல் உழைக்கின்ற பத்திரிகையாளர்கள், தாங்கள் ஓய்வு பெறும் காலத்தில் மன நிறைவோடும், மன அமைதியோடும் வாழ்ந்திட வேண்டும் என்பதில் இந்த அரசு தனி அக்கறை கொண்டுள்ளது. அதன் அடிப்படையில் தான் கடந்த 2011–ஆம் ஆண்டில் இவ்வரசு பொறுப்பேற்ற பின்பு பத்திரிகையாளர்களின் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் ஆகியவை இரண்டு முறை உயர்த்தி வழங்கப்பட்டுள்ளன.

20 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்று நலிவுற்ற நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர ஓய்வூதியம், 14.09.2011 முதல் 5,000 ரூபாயிலிருந்து 6,000 ரூபாயாகவும், 7.10.2013 முதல் 6,000 ரூபாயிலிருந்து 7,500 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. அதே போல் மறைந்த பத்திரிகையாளர்களின் குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த, குடும்ப மாதாந்திர ஓய்வூதியம் 14.09.2011 முதல் 2,500 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாகவும், 07.10.2013 முதல் 3,000 ரூபாயிலிருந்து 4,500 ரூபாயாகவும் உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டு, அவ்வாறே வழங்கப்பட்டு வருகிறது.

எனினும் இன்றைய வாழ்க்கைச் சூழலைக் கருத்தில் கொண்டு, பத்திரிகையாளர் நலன் கருதி, அவர்களது ஓய்வு

காலம் குறித்து ஓர் நம்பிக்கையும், இன்றைய வாழ்வின் மீது ஒரு பிடிப்பும் ஏற்படும் வகையில் இந்த ஓய்வூதியங்களை மேலும் உயர்த்தி வழங்க நான் முடிவெடுத்துள்ளேன்.

இதன்படி, பத்திரிகையாளர்களின் ஓய்வூதியம் 7,500 ரூபாயிலிருந்து 8,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். அதைப் போல, மறைந்த பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் குடும்ப ஓய்வூதியம் 4,500 ரூபாயிலிருந்து 4,750 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

தொழில்கள் வளரவும்; புதிய வேலைவாய்ப்புகள் உருவாகவும் வழிவகை!

29.09.2015

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உற்பத்தியைப் பெருக்கி நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தச் செய்வதிலும், வேலை வாய்ப்பினை உருவாக்குவதிலும் சிறந்து விளங்கும் தொழில் வளத்தைப் பெருக்குவதில் பொறுப்புணர்வுடனும், தொலை நோக்குப் பார்வையுடனும், எனது தலைமையிலான அரசு செயல்பட்டு, அதில் மகத்தான வெற்றியும் கண்டு இருக்கிறது.

இந்தியாவில், தமிழகத்தை தொழில் துறையில் வலிமை மற்றும் எழுச்சி மிக்கதாக உருவாக்கவும், சிறந்த, விரும்பத் தக்க முதலீட்டுக்கு உகந்த தேர்விடமாக ஆக்குவதற்கும், எனது தலைமையிலான அரசு, ஆற்றல் மிகு ஆக்கபூர்வமான கொள்கைகளை வெளியிடுதல், திட்டமிடுதல் மற்றும் அவைகளை சீரிய முறையில் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதற்காக, தமிழ்நாடு தொழில் கொள்கை 2014, மோட்டார் வாகனங்கள் மற்றும் உதிரி பாகங்கள் கொள்கை 2014 மற்றும் உயிரி தொழில் நுட்பக் கொள்கை 2014 ஆகியவைகள் வெளியிடப்பட்டன.

தொழில் வளர்ச்சியினை மேலும் செம்மைப்படுத்தும் வகையிலும், அதிக தொழில் முதலீட்டினை ஈர்க்கும் வண்ணமும், மாநிலத்தின் தொலை நோக்குத் திட்டங்களான தொழில் மயமாக்குதல், வேலைவாய்ப்பை அதிகரித்தல், மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல், சீரான பகுதி வளர்ச்சி மற்றும் சுற்றுச் சூழலுடன் இணைந்த நிலைத்த நீண்ட கால வளர்ச்சி

ஆகியவைகளை அடைவதற்கான ஒருமுகப்படுத்தப்பட்ட முயற்சியாக எனது தலைமையிலான அரசு, மாநிலத்தில் முதல் முறையாக உலக முதலீட்டாளர்கள் சந்திப்பினை செப்டம்பர் திங்கள் 9 மற்றும் 10 ஆகிய தினங்களில் சென்னையில் நடத்தியது. இதில் 2,42,160 கோடி ரூபாய்க்கான முதலீடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

தொழில் வளர்ச்சிக்கு பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களின் சமூக பொருளாதார வளர்ச்சியில் ஆக்கபூர்வமான தாக்கத்தை ஏற்படுத்தவும், தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கவும் எனது அரசு மிகுந்த முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில், ராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டத்தில் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தால் சிப்காட்-ஆல் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா Integrated Textile Processing Park ஒன்று 150 கோடி ரூபாய் மதிப்பில் சுமார் 224 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பூங்காவில் நாளொன்றுக்கு ஒரு கோடி லிட்டர் திறனுள்ள, கடல் நீர் சுத்திகரிப்பு ஆலை ஒன்று நிறுவப்படும். இப்பூங்காவில் இடம் பெறும் 30 ஜவுளித் துறை தொழில் நிறுவனங்கள் சுமார் 450 கோடி ரூபாய் செலவில் அமையப் பெறும். இவற்றின் மூலம் 6,000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு உருவாகும். மத்திய அரசின் மானியமாக 70 கோடி ரூபாயும், சிறப்பு நோக்க முகமையின் பங்கு தொகையாக 40 கோடி ரூபாயும், மாநில அரசு மற்றும் சிப்காட் நிறுவனத்தின் 40 கோடி ரூபாயும் திட்ட நிதியாக இருக்கும்.

தமிழ்நாட்டில் தொழில் வளத்தை பெருக்கும் பொருட்டு, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் TIIC, முதல் தலைமுறை தொழில் முனைவோர்கள் மற்றும் குறு, சிறு மற்றும்

நடுத்தர தொழில் நிறுவனங்களை ஊக்குவித்து சிறப்பான முறையில் நிதியுதவி வழங்கி வருகிறது. தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தின் நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்காக எனது அரசு 100 கோடி ரூபாயை ஒரு முறை மூலதனமாக வழங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மூலதனத்திற்கு தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும் (TIDCO) தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனமும் (SIPCOT) தலா 50 கோடி ரூபாயினை வழங்கும்.

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் பகுதியில் தனியார் நிறுவனத்துடன் இணைந்து கூட்டாக காஸ்டிக் சோடா தொழிற்சாலையை, தமிழ்நாடு உப்பு நிறுவனம் துவக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தொழிற்சாலையில் ஆண்டொன்றுக்கு 36,000 மெட்ரிக் டன் காஸ்டிக் சோடா உற்பத்தி செய்யப்படும். இத்திட்டம், சுமார் 200 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயம்புத்தூரில் தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கத்துடன் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அமைந்துள்ள டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட் நிறுவனமானது, 32 கோடியே 61 இலட்சம் ரூபாய் முதலீட்டில் சிறிய மற்றும் நடுத்தர தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் உடனடியாக தொழில் தொடங்குவதற்குத் தேவையான, அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய அபிவிருத்தி மையம் ஒன்றினை ஏற்படுத்தும் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அபிவிருத்தி மையத்திற்கு தேவைப்படும் கட்டட மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த 22 கோடியே 61 இலட்சம் ரூபாயினை டைடல் பார்க் கோயம்புத்தூர் நிறுவனத்திடம் இருந்தும் 10 கோடி ரூபாய் மத்திய அரசின் ASIDE மானியமாகவும் பெறப்படும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 1,000 பேருக்கு நேர்முக மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு

ஏற்படுத்தப்பட்டு, இதன் மூலம் கோயம்புத்தூரின் பொருளாதார வளர்ச்சி மேலும் மேம்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநிலத்தில் உள்ள வானூர்தி உற்பத்தி சார்ந்த நிறுவனங்களின் வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில், காஞ்சிபுரம் மாவட்டம், திருபெரும்புதூர் வட்டம், வல்லம்–வடகால் கிராமங்களில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) சுமார் 350 கோடி ரூபாய் முதலீட்டில் சுமார் 2 இலட்சம் சதுர அடி பரப்பளவில் உயர் கணினி மற்றும் பொறியியல் வடிவமைப்பு மையம் ஒன்றினை அமைக்கும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மையம், தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் வானூர்தி உதிரி பாகங்களை வடிவமைக்கவும் மற்றும் மேம்படுத்தவும் ஏதுவாக அதி வேக கணினி மற்றும் வடிவமைப்பு வசதிகளை கொண்டதாக இருக்கும். இம்மையத்தில் 50க்கும் மேற்பட்ட வானூர்தி உதிரி பாகங்களை, வடிவமைக்கும் மற்றும் மேம்படுத்தும் நிறுவனங்கள் தங்களது மையங்களை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் (TIDCO) அமைக்கப்பட உள்ள சென்னை ஏரோஸ்பேஸ் பார்க் லிமிடெட் (Chennai Aerospace Park Limited) என்ற சிறப்பு நோக்கு நிறுவனம் மூலம், 350 கோடி ரூபாய் முதலீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மார்ச் 22, 2012 இல் என்னால் வெளியிடப்பட்ட தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்–2023 ஆவணத்தில் சென்னை – ராணிப்பேட்டை மற்றும் ராணிப்பேட்டை – ஓசூர் தொழில் வளாக வழித் திட்டங்கள் நட்சத்திர திட்டங்களாக அறிவிக்கப்பட்டன. தற்போது இவ்விரண்டு தொழில் வளாக வழித் திட்டங்கள் ஒன்றிணைக்கப்பட்டு சென்னை–பெங்களூரு தொழில் வளாக வழித் திட்டம் என செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்

கொள்கிறேன். மேற்கண்ட தொழில் வளாக திட்டப் பகுதியில் உள்ள பொன்னேரியில் சிறப்பு நோக்க நிறுவனம் SPV மூலம் பொன்னேரி தொழில் முனையம் (Ponneri Industrial Node) 20 ஆண்டுகளில் மூன்று கட்டங்களாக மேம்படுத்தப்படும். 13,314 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2016–19 காலக் கட்டத்தில் இத்திட்டத்தின் முதற்கட்டம் நிறைவேற்றப்படும் என்பதை பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டம், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தாலுகாவில் உள்ள 10 கிராமங்களை உள்ளடக்கிய சுமார் 21,996 ஏக்கர் பரப்பளவில் அமையும்.

என்னால் வெளியிடப்பட்ட உயிரி தொழில் நுட்ப கொள்கையில் குறிப்பிட்டுள்ளவாறு 50 கோடி ரூபாய் நிதியுடன் "உயிரி தொழில்நுட்ப மூலதன முதலீட்டு நிதி (Biotechnology Venture Capital Fund) ஒன்று உருவாக்கப்படும். இந்த நிதிக்காக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் TIDCO 10 கோடி ரூபாயும், டைடல் மற்றும் டைசல் நிறுவனங்கள் இணைந்து 10 கோடி ரூபாயும், மாநில அரசு 5 கோடி ரூபாயும் அளிக்கும். தனியார் பங்களிப்பு மூலம் 25 கோடி ரூபாய் நிதி பெறப்படும்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும் (TIDCO) இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனமும் (ITPO) இணைந்து கூட்டுத் துறையில் அமைத்த நிறுவனமான, தமிழ்நாடு வர்த்தக மேம்பாட்டு நிறுவனத்தால் (TNTPO) சென்னை நந்தம்பாக்கத்தில் சென்னை வர்த்தக மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மையம் கூடுதலாக 16,000 சதுர மீட்டர் கட்டடப் பரப்பளவு கொண்ட கண்காட்சி அரங்குகள் மற்றும் இதர வசதிகளான உணவு அரங்கம், பல அடுக்கு வாகனங்கள் நிறுத்துமிடம் (Multi-tier Car Park) ஊழியர்கள் தங்குமிடம், பயன்பாட்டு கட்டடம் போன்ற வசதிகளுடன் சுமார் 298 கோடி ரூபாய் மதிப்பீட்டில், விரிவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்திற்கான நிதி மத்திய அரசின் இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனத்திடம் இருந்தும், தமிழ்நாடு வர்த்தக மேம்பாடு நிறுவனத்திடம் இருந்தும் பெறப்படும். இந்த வசதி

தமிழ்நாட்டின் வர்த்தகம் மற்றும் தொழில்துறை வளர ஏதுவாக இருக்கும்.

டிரான்ஸ்போர்ட் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா (Transport Corporation of India) என்ற நிறுவனத்தின் துணை நிறுவனமான டிசிஐ DISTRIBUTION சென்டர்ஸ் லிமிடெட் என்ற நிறுவனம், சரக்காளுமை பூங்கா (Logistics Park) ஒன்றினை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (TIDCO) வழிகாட்டுதல் மூலம் 270 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், சுமார் 43 ஏக்கர் பரப்பளவில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள திருப்பெரும்புதூர் மற்றும் அதனை ஒட்டிய திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள, உளுந்தை கிராமம் ஆகிய பகுதிகளில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டம் 2 அல்லது 3 ஆண்டுகளில் பல்வேறு கட்டங்களில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 700 நபர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாகும்.

திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை 37 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் நவீனப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திடமிருந்து (National Co-operative Development Corporation) பெறப்படும் நிதி, மாநில அரசு நிதி மற்றும் சர்க்கரை ஆலையின் நிதி ஆகியவற்றின் உதவியோடு இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை 56 கோடி ரூபாய் செலவில் நவீனப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திடமிருந்து National Co-operative Development Corporation இடமிருந்து பெறப்படும் நிதி, மாநில அரசு நிதி மற்றும் சர்க்கரை ஆலையின் நிதி ஆகியவற்றின் உதவியோடு இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் செயல்திறனை மேம்படுத்தவும், உற்பத்தி செலவை குறைக்கவும் 25 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் நவீனப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திடமிருந்து (National Co-operative Development Corporation) பெறப்படும் நிதி மாநில அரசு நிதி மற்றும் சர்க்கரை ஆலையின் நிதி ஆகியவற்றின் உதவியோடு இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

மேற்காணும் அறிவிப்புகள், தொழில்கள் வளரவும், உற்பத்தி பெருகவும், தொழிலாளர்கள் வளமோடு வாழவும், புதிய வேலைவாய்ப்புகள் உருவாகவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

தமிழ்நாட்டில் 4 மாவட்டங்களுக்கு தலா ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி!

29.09.2015

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கல்வி வளர்ச்சியின் மூலமே மக்களின் பொருளாதார நிலை ஏற்றம் பெறும் என்பதாலும், சமூக பொருளாதார வேறுபாடுகள் களையப்படும் என்பதாலும், பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வி ஆகியவற்றிற்கு மிகுந்த முக்கியதுவத்தை எனது தலைமையிலான அரசு அளித்து வருகிறது.

கடந்த நான்கரை ஆண்டுகளில் 4 அரசு பொறியியல் கல்லூரிகள் உள்ளிட்ட 53 கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளன. மேலும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 959 புதிய பாடப்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. உயர்கல்வி துறைக்கு அளிக்கப்பட்டு வரும் முக்கியத்துவம் காரணமாக 2011இல் உயர்கல்வியில் 18 சதவீதம் என்ற அளவில் இருந்த மொத்த மாணவர் சேர்க்கை விகிதம் அதாவது Gross Enrollment Rate தற்போது 42.8 சதவீதத்தை எட்டி இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு உள்ளது.

கடந்த 25ஆம் தேதி உயர் கல்வித் துறை மூலம் செயல்படுத்த உள்ள பல அறிவிப்புகளை நான் இந்த மாமன்றத்தில் அறிவித்தேன். அப்போது 5 புதிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 5 உறுப்பு கல்வியியல் கல்லூரிகள் துவங்கப்படும் என அறிவித்தேன்.

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இல்லாத மாவட்டங்களில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்

துவங்கப்பட வேண்டும் என பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

தமிழ்நாட்டில், தேனி, ஈரோடு மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இல்லை. இம்மாவட்டங்களில் உள்ள மாணவர்கள் தரமான உயர் கல்வி பெறும் பொருட்டு, தேனி மாவட்டம், வீரபாண்டியிலும், ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலத்திலும், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலிலும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்கப்படும் என்பதை பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக அரசுக்கு ஒரு கல்லூரிக்கு 8 கோடியே 48 இலட்சம் ரூபாய் வீதம் மூன்று கல்லூரிகளுக்கு 25 கோடியே 44 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும். தமிழ்நாட்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இல்லாத மாவட்டமே இல்லை எனும் நிலை இதன் மூலம் உருவாகும் என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் அரசுக்கு 8 கோடியே 48 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

❋ ❋ ❋

ரூ.23.73 கோடி செலவில் 110 கூட்டுறவு வங்கிகளுக்கு சொந்தக் கட்டடங்கள்!

29.09.2015

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஏழை, எளிய மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு இன்றியமையாத அத்தியாவசியப் பொருட்களை காலத்தே வழங்கும் தலையாய பணியை செவ்வனே மேற்கொண்டு வரும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மற்றும் கூட்டுறவு அமைப்புகளின் மூலம் பொதுமக்களுக்கு சிறந்த சேவை வழங்கும் கூட்டுறவுத் துறை ஆகியவை பொதுமக்களுக்கு சிறந்த முறையில் சேவை வழங்குவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை கடந்த நான்கு ஆண்டுகளாக எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

இந்த இரண்டு துறைகளையும் மேலும் வலுப்படுத்தும் வகையில் பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

விவசாயப் பெருமக்களுக்கும், பொது மக்களுக்கும் பல்வேறு சேவைகளை வழங்கும் கூட்டுறவு அமைப்புகளுக்கு கிடங்குகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு புதிய அலுவலகக் கட்டடங்கள், கூட்டுறவு வங்கிகளுக்கு புதிய கட்டடங்கள் என பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை எனது தலைமையிலான அரசு ஏற்படுத்தி வருகின்றது. கடந்த நான்கு ஆண்டுகளில் 3,381 கூட்டுறவு அமைப்புகளுக்கு உட்கட்டமைப்பு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு உள்ளது.

இதன் தொடர்ச்சியாக, 110 கூட்டுறவு அமைப்புகளுக்கு பாதுகாப்பு கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை, பாதுகாப்பு பெட்டகம்

போன்ற பல வசதிகளை உள்ளடக்கிய சொந்தக் கட்டடம் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 100 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு தலா 20 இலட்சம் ரூபாய் செலவில் மொத்தம் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; இராமநாதபுரம் மற்றும் நாசரேத் நகர கூட்டுறவு வங்கிகளுக்கு முறையே, 40 இலட்சம் ரூபாய் மற்றும் 23 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; திருவண்ணாமலை மாவட்டம், போளூர் மற்றும் செங்கம்; காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு மற்றும் மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் ஆகிய தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; கடலூர் மத்திய கூட்டுறவு வங்கியின் குறிஞ்சிப்பாடி கிளை, புதுக்கோட்டை மத்திய கூட்டுறவு வங்கியின் கல்லூர் கிளை, சேலம் மத்திய கூட்டுறவு வங்கியின் எடப்பாடி மற்றும் பேளுக்குறிச்சி கிளைகள் ஆகியவற்றுக்கு 2 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் என மொத்தம் 23 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவில் 110 கட்டடங்கள் கட்டப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் செயல்படும் பல்வேறு கூட்டுறவு அமைப்புகளில், உறுப்பினர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்கள் அவர்களது அவசர கடன் தேவைக்காக, நகையீட்டுக் கடன் பெறுகின்றனர். அவ்வாறு பெறப்படும் நகைகளையும், மதிப்பு மிக்கபொருட்கள் மற்றும் ஆவணங்களையும்பத்திரமாகப் பாதுகாத்து வைத்திடவும் கூட்டுறவு நிறுவனங்களில் பாதுகாப்பு முறைகளை வலுப்படுத்த, பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, 39 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், 46 தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மற்றும் சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் 42 கிளைகள், 43 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் 16 கிளைகள் மற்றும் 5 விரிவாக்க மையங்கள் மற்றும் இதர 12 கூட்டுறவு நிறுவனங்கள் என மொத்தம்,

203 கூட்டுறவு நிறுவனங்களில் 8 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் பாதுகாப்பு அறைகள் மற்றும் பாதுகாப்பு கதவுகள் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2,672 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் கிளைகள், 106 பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் நாணய சங்கங்கள், 67 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் கிளைகள், 68 தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மற்றும் கிளைகள், மத்திய கூட்டுறவு வங்கிகளின் 10 கிளைகள், 11 மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் அதன் கிளைகள் மற்றும் இதர 32 கூட்டுறவு நிறுவனங்கள் என மொத்தம், 2,966 கூட்டுறவு நிறுவனங்களில் பாதுகாப்பிற்காக 16 கோடியே 2 இலட்சம் ரூபாய் செலவில் உட்சுற்று தொலைக்காட்சி கண்காணிப்பு கேமரா (CCTV) நிறுவப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெருகி வரும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப, வணிக வங்கிகளுக்கு இணையாக கூட்டுறவு அமைப்புகள் வளர்ச்சி அடையவும், வாடிக்கையாளர்களுக்கு விரைவான மற்றும் சிறப்பான சேவையை வழங்கிடும் பொருட்டும் கூட்டுறவு வங்கிகள் கணினிமயம் ஆக்கப்பட்டு உள்ளன. தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் 23 மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் அவற்றின் கிளைகள் கணினிமயம் ஆக்கப்பட்டு உள்ளன. மேலும், வெளிப்படைத் தன்மை, மற்றும் சிறப்பான சேவையை மக்களுக்கு வழங்கும் பொருட்டு, அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களும் கணினிமயம் ஆக்கப்பட்டு உள்ளன. இதன் தொடர்ச்சியாக, பணியாளர் கூட்டுறவு கடன் மற்றும் சிக்கன நாணய சங்கங்களும், கணினிமயம் ஆக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் மொத்தம் 1,758 பணியாளர் கூட்டுறவு

சிக்கன நாணய சங்கங்கள் அரசுத் துறை, தனியார் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு சேவை புரிந்து வருகின்றன. இச்சங்கங்களில் தற்போது 9,61,314 உறுப்பினர்கள் உள்ளனர். உறுப்பினர்களுக்கு தனி நபர் பிணைக் கடன், சம்பளக் கடன் மற்றும் கல்விக் கடன்களை வழங்கி, அவர்களது பொருளாதார மேம்பாட்டிற்காக இச்சங்கங்கள் அரும்பங்காற்றி வருகின்றன. இச்சங்கங்கள் 1,635 கோடியே 8 இலட்சம் ரூபாய் பங்கு மூலதனத்துடனும் 10,223 கோடியே 78 இலட்சம் ரூபாய் நடைமுறை மூலதனத்துடனும் செயல்பட்டு வருகின்றன. எனவே, இச்சங்கங்களின் செயல்பாடுகளை கணினிமயம் ஆக்குவதன் மூலம் நிர்வாகச் செலவுகள் குறைவதுடன், உறுப்பினர்களுக்கு சிறப்பான சேவைகளை விரைவாக வழங்கிட இயலும். எனவே, முதல் கட்டமாக, நடப்பாண்டில் 1,240 பணியாளர் கூட்டுறவு சிக்கன நாணய சங்கங்கள் 9 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கணினிமயம் ஆக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 8.27 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 219 சொந்த கிடங்குகள் செயல்பாட்டில் உள்ளன. பொது விநியோக திட்ட அத்தியாவசியப் பொருள்களை ஏற்றுதல், இறக்குதல், நகர்வு செய்தல் மற்றும் அட்டியிடுதல் ஆகிய பணிகள் தற்பொழுது, சுமை தூக்குவோரால் கையாளப்படுகின்றன. ஒவ்வொரு மாதமும் சுமார் 4.10 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருட்களான கோதுமை, சர்க்கரை, பருப்பு மற்றும் பாமாயில் போன்றவை இக்கிடங்குகளிலிருந்து பொது விநியோகத் திட்டத்தின் மூலம் பொதுமக்களுக்கு வழங்கிட நியாய விலைக் கடைகளுக்கு அனுப்பப்படுகிறது. மேலும், இச்சுமை தூக்குவோர், பொது விநியோக திட்டத்திற்காக, கொள்முதல் செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்களை கிடங்குகளில் இறக்குதல் மற்றும் இவற்றினை சமச்சீர் செய்து சிப்பம் இடுதல் போன்ற இதர பணிகளையும் மேற்கொள்கின்றனர்.

இவர்களின் பணிகளை எளிதாக்கும் வகையில் தேவையான இயந்திரங்கள் வாங்கி வழங்கப்படும்.

முதல் கட்டமாக, தற்பொழுது கட்டப்பட்டு வரும் அதிக கொள்ளளவு கொண்ட, நாகப்பட்டினம் மாவட்டம், கோவில்பத்து மற்றும் தஞ்சாவூர் மாவட்டம், சென்னம்பட்டி ஆகிய கிடங்குகளிலும், மேலும் புதிதாக கட்டப்பட உள்ள நாகப்பட்டினம் மாவட்டம் – எடமணல், மாணிக்க பங்கு கிடங்குகள், திருவாரூர் மாவட்டம் – குடவாசல் கிடங்கு ஆகிய கிடங்குகளில் தானியங்கி இழுவை இயந்திரங்கள் (Conveyors) சுமையினை ஏற்றி, இறக்கி அட்டியிடும் இயந்திரங்கள் (Stackers) மற்றும் மின்னாக்கிகள் (Generators) போன்றவை நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் சென்னை, காஞ்சிபுரம், கிணத்துக்கடவு, கருமத்தம்பட்டி, கடலாடி, தூத்துக்குடி, தேவகோட்டை, புனக்குளம் மற்றும் சாத்தான்குளம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள நடுத்தர கொள்ளளவு கொண்ட கிடங்குகள் மற்றும் திருவாரூர் மாவட்டம், கோவிலூரில் புதிதாகக் கட்டப்பட உள்ள கிடங்கு ஆகியவற்றில் தானியங்கி சுமைதூக்கி (Fork Lift) அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இயந்திரங்கள் 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

“நமது லட்சியம் உயர்வானது!
நமது பார்வை தெளிவானது!
நமது வெற்றி முடிவானது!”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா**

